# தாய்வீடு

216

ISSN 2369-3657

March | மார்ச் | 2025

www.thaiveedu.com



## தாய்வீட்டார் சந்திப்பு
## 2025

கிளிநொச்சி

ISSN 2369-3657


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666
srinada21@gmail.com


Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage *
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated


Tennyson Dilipkumar
Realtor
416-896-8989
tennysondilipkumar@gmail.com
HOMELIFE
HomeLife Galaxy


RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com


MORTGAGE ALLIANCE
Best Rates & Advice You Can Trust!
Lic# 10530
உங்கள் அனைத்து அடைமானக்கடன் தேவைகளுக்கும்
Purchase | Refinance | Renewal
Ram Krish
MORTGAGE AGENT
416-427-5555
795 Milner Ave D2, Scarborough, ON M1B 3C3


MORTGAGE ARCHITECTS
Brokerage No. 12728
Need Assistance for your
First and Second Mortgages?
Re-Financing?
Secured Line of Credit?
Commercial Mortgages?
Are you ...
Self Employed?
Temporary Resident?
New Immigrant?
Not to Worry!
Please Call
Theven Kankesu
(MCSC, MCP, AMP, CMBA)
416.939.8789
theven.kankesu@mtgarc.ca
thevenk1.tk@gmail.com


Raj Nadarajah
Sales Representative
Direct : 416-333-6115
Email : nanohomes@gmail.com
www.nanohomes.ca
RE/MAX
Excel Realty Ltd., Brokerage*
Tel: 905-475-4750 Fax: 905-475-4770


Vela Subramaniam
Sales Representative
416 786 0760
vela4homes@gmail.com
vela4homes
www.vela4homes.com
HOMELIFE
HomeLife/Future Realty Inc., Brokerage*

**Publisher & Editor**
P.J. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர்**
பி.ஜெ. டிலிப்குமார்

**நிறுவன வரைகலைஞர்**
கருணா

**ஆலோசகர் குழு**
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா, சி. ரமேஷ்,

**ஓவியங்கள்**
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா(இங்கிலாந்து),
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

**படங்கள்**
istock.com,

**தட்டச்சு**
சாம் டானியல்.

**ஒப்புநோக்கல்**
கௌரி,
கந்தசாமி கங்காதரன்.

**பொது உறவுத் தொடர்பு**
குமணன் தம்பிஜயா,
இராமநாதன் ரூபன்,

**ஒட்டாவா விநியோகம்:**
அலெக்ஸ் சிவசம்பு: +1 613 276 7253
**மலையகம், கொழும்பு:**
மல்லியப்புசந்தி திலகர்: +94 71 120 8061
**மட்டக்களப்பு:**
வி. மைக்கல் கொலின்: +94 77 433 8878
**கிளிநொச்சி:**
கிளி மக்கள் அமைப்பு:
**யாழ்ப்பாணம்:**
S. சத்தியதேவன்: +94 77 7294 287

**அஞ்சல் முகவரி**
**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**
**Canada**

**Tel : +1 416 857 6406**
**Fax : +1 416 849 0594**
**Web : www.thaiveedu.com**
**E-mail : info@thaiveedu.com**

## போராடிப் பெற்றதைத் தோற்போமோ!

பெண்களின் அடைவுகளைக் கொண்டாடவும் அவர்களின் உரிமைகளுக்காக அறைகூவல் விடுக்கவும் இன்றும் இருக்கும் அவசியத்தை வலியுறுத்தும் அனைத்துலகப் பெண்கள் நாள் எவ்வாண்டும் போலவே இவ்வாண்டும் வந்திருக்கிறது. ஒரு நூற்றாண்டுக்கும் மேலான வரலாற்றைக் கொண்ட இந்த நாள், பல்வேறு வகையான தடங்கல்களையும் சவால்களையும் வென்றுவந்திருக்கிறது. தொழில்சார் உரிமைக ளுக்கான போராட்டமாக 1909-இல் ஆரம்பித்தது முதல், அனைத்துலகப் பெண்கள் நாளாக ஐக்கிய நாடுகளின் அங்கீகாரத்தை 1975-இல் பெற்றதுவரை மட்டுமல்லாது, அதன் பின்னரான ஐம்பதாண்டு காலத்திலும் இந்த நாளும் அது உணர்த்தும் உண்மைகளும் முக்கியமானவையாகவே இருந்து வந்திருக் கின்றன. இந்தக் காலகட்டத்தில் உலகளாவிய அளவில் பெண்களுக்கான உரிமைகளில் முன்னேற் றங்கள் இடம்பெற்றுள்ளன என்பதோடு அவர்கள் தாம் விரும்பும் உச்சங்களை எட்டுவதற்கு உள்ள தடைகள் சற்றுத் தளர்ந்து வந்திருக்கின்றன என்பதும் உண்மையே.

இருந்தபோதும், உலக மானுடம் தற்போது முகங்கொடுத்துள்ள அரசியல் நிதர்சனங்கள், கடந்த காலத்தின் அடைவுகளைப் பின்னோக்கி நகர்த்துமோ என்ற அச்சத்தைத் தோற்றுவிப்பதாக உள்ளது. இவ்வாண்டின் பெண்கள் நாளுக்கான கருப்பொருளாக, 'அனைத்துப் பெண்களுக்கும் சிறுமிகளுக்கும்: உரிமைகள், சமத்துவம், வலுவூட்டல்' என்ற தலைப்பை ஐக்கிய நாடுகள் அறிவித்திருப்பதும் மறைமுகமாக இதையே சுட்டுவதுபோல் அமைந்துள்ளது. 2025-ஆம் ஆண்டிலும் பெண்களுக்கான சம உரிமைகளை வேண்டிநிற்கும் நிலை தொடர்வது வெட்கக்கேடானது.

2022-ஆம் ஆண்டிலே அமெரிக்காவின் உயர் நீதிமன்றம், பெண்களின் இனப்பெருக்க உரிமையை உறுதி செய்யும் சட்டத்தைச் செல்லாது எனத் தீர்ப்பளித்தபோதே அபாய எச்சரிக்கை ஒலித்து விட்டது. 1973 முதல், அமெரிக்கப் பெண்களின் இனப்பெருக்க உரிமை மட்டுமல்லாது, பெண்களின் உடல்மீது ஆதிக்கம் செலுத்தும் உரிமையும் அந்தந்தப் பெண்களுக்கு மட்டுமே உள்ளது என்பதையும் உணர்த்திநின்ற சட்டம் அது. அந்தச் சட்டத்தைச் செல்லாததாக்கி அமெரிக்கப் பெண்களின் உரிமைகளுக்கான போராட்டத்தை ஏறக்குறைய ஐம்பதாண்டு பின்னகர்த்திய அந்தத் தீர்வுக்கு டொனல்ட் டிரம்ப் 2017 முதல் 2021 வரையான தனது முதலாவது ஆட்சிக்காலத்தில் அமெரிக்க உயர் நீதிமன்றத்துக்கு நியமித்த நீதிபதிகளும் முக்கிய காரணர் ஆனார்கள்.

இப்போது தனது இரண்டாவது ஆட்டத்தை ஆரம்பித்துள்ள டிரம்ப், மனித குலத்தின் முன்னேற்றத்தைப் பின்னோக்கி நகர்த்தும் வகையிலான மேலும் பல நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார். ஒடுக்கப்பட்ட, நிரா கரிக்கப்பட்ட குழுமங்களை வலுப்படுத்தவென அமெரிக்க அரசால் முன்னெடுக்கப்பட்டுவந்த பல்வகைமை, சம உரிமை, உள்ளடக்கல் (diversity, equity and inclusion) சார்ந்த செயற்றிட்டங்களை, அவை பணவி ரயம் என்றும் தீவிரவாதப்போக்குடையவை என்றும் காரணங்காட்டி, தான் பதவிக்கு வந்த முதல் நாளே நிறுத்துமாறு ஆணையிட்டுள்ளார். இதற்காக அவர் சட்டத்தின் துணையை நாடாது அரசுத் தலைவர் என்ற தனது அதிகாரத்தை முழுவீச்சோடும் அவசர அவசரமாகவும் பயன்படுத்தியிருக்கிறார். காலங்கா லமாக ஒடுக்கப்பட்டும் நிராகரிக்கப்பட்டும் விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்டும் வந்த குழுமங்களான பெண்கள், தோற்றச் சிறுபான்மையினர், மதச் சிறுபான்மையினர் போன்றோரின் வலுப்படுத்தலை உறுதி செய்யவென உருவாக்கப்பட்ட திட்டங்களை ஒரு வெள்ளையின, அதிதீவிரக் கிறிஸ்தவ ஆண் தனது ஒற்றைக் கையெழுத்தோடு முடிவுக்குக் கொண்டுவந்திருக்கிறார்.

ஆண்களுக்குச் சமமான பணிவாய்ப்பும் ஊதியமும் இன்றுவரை எல்லாப் பெண்களுக்கும் வாய்ப்ப தில்லை என்பதே நடைமுறையாக நிலவும் நிலையில், டிரம்பின் இந்த ஆணையானது பணியிடத்தில் பெண்களுக்கான சம உரிமை நோக்கிய முன்னெடுப்புகளுக்குத் தடையேற்படுத்திப் பின்னகர்த்தும். அரசே அவற்றைப் பணவிரயம் என விமர்சிக்கும்போது, இலாபத்தை மட்டுமே நோக்காகக்கொண்ட தனியார் நிறுவனங்கள் இந்த முன்மாதிரியைப் பின்பற்ற அதிக காலம் எடுக்காது.

டிரம்ப் அத்தோடு நில்லாது, மாற்றுப் பாலினரைக் குறிவைத்துத் தனது அடுத்த அம்பை எய்திருக்கிறார். சமூகத்தில் மாற்றுப் பாலினர் மீதான காழ்ப்பைத் தூண்டும் வகையிலும் அவர்களின் பாதுகாப்பை அச்சு றுத்தும் வகையிலும் அமைந்துள்ள அவரின் ஆணை ஆபத்தானது.

பெண் சமத்துவத்துக்கான முன்னெடுப்புகளில் மேற்குலகே உலகமனைத்துக்கும் வழிகாட்டி வந்திருக் கிறது. இப்போது அமெரிக்காவில் மட்டுமன்றி, ஜேர்மனி, நெதர்லாந்து, பிரான்ஸ் உள்ளிட்ட பல்வேறு நாடு களிலும் தீவிர வலதுசாரி அடிப்படைவாதிகள் பலம்பெற்று வருவது மனித முன்னேற்றத்துக்குப் பாதக மானது. இந்நிலையிலே, ஒடுக்கப்படும், ஓரங்கட்டப்படும் அனைத்துக் குழுமங்களுக்காகவும் அனைவரும் ஒருமித்துக் குரல் கொடுப்பது அவசியம். அப்படிச் செய்யாதுபோனால், பலகாலம் போராடிப்பெற்ற உரிமைகளை ஒரு நொடியில் இழக்க நேரலாம்.

# இம்மாதத் தாய்வீட்டில்...


**போராடிப் பெற்றதைத் தோற்போமோ!** 3

**வடமராட்சிக் கிழக்கு: மீனவரின் வாழ்வியல் சவால்கள்** 5
- அ. மேரி றெசோதா

**பொன். இராமநாதன் இலங்கை சுதந்திரப் போராட்டத்தில் வகித்த பங்கும், அதன் பெறுபேறும்** 8
- கே.கே.எஸ். பெரெரா
தமிழில்: மணி வேலுப்பிள்ளை

**ஆபிரிக்காவின் இரண்டாவது சுதந்திரத்தை நோக்கி** 11
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

**புதிய அமெரிக்கத் தேசியமும் எலான் மஸ்க்கும்** 16
- ரதன்

**நெட்ஃபிளிக்ஸ்: பாலஸ்தீனத் திரைப்படங்கள் நீக்கம் பலஸ்தீனக் கதைகளை மௌனித்தல்:** 21
- ரூபன் சிவராஜா

**மகளிர்நலம் வெள்ளை படுதல் (LEUCORRHOEA)** 27
- போல் ஜோசேப்

**அனைத்துலகப் பெண்கள் நாள் - 2025** 30
- நவஜோதி ஜோகரட்னம்

**பெண்நிலைச் சிந்தனைகள்: இன்னும் முடிவடையாத உரையாடல்** 32
- மாதவி உமாசுதசர்மா

**கட்டுருவாக்கவாதமும் வகுப்பறையும்** 35
- அகமட் பிஸ்தாமி

**தொடர்ந்து தவறிழைக்கும் பிள்ளைகள்** 37
- த. சிவபாலு

**காலநிலை மாற்றமும் கட்டடக் காப்புறுதியும்** 41
- செந்தூரன் புனிதவேல்

**மேற்குலகை அதிரவைத்த டீப் சீக் செயலி** 42
- சுப்ரமணியம் ஜெயசீலன்

**விண்வெளியில் செயற்கை நுண்ணறிவு** 45
- குரு அரவிந்தன்

**பாவனையும் பராமரிப்பும்** 48
- வேலா சுப்பிரமணியம்

**கவிதை மொழியின் தளம்** 51
- சி. நற்குணலிங்கம்

**பெருமழையும் நத்தையும்** 53
- குமார் புனிதவேல்

**மாற்குவின் கலை அம்பலம் - காண்பியக்காட்சி** 55
- அருந்ததி இரட்ணராஜ்

**கதைசொல்லி** 58
- ஓவியர் ஜீவா

**பனையின் அடியில் புதைக்கப்பட்டுள்ள ராணி** 61
- ரதன்

**இன்விக்ரஸ் விளையாட்டுப் போட்டிகள்** 66
- குமணன் தம்பி

**தலைநகரில் பிறந்தாலும் மலையகத்தைப் போற்றி நின்ற 'அக்கினிப்பூக்கள்' அந்தனி ஜீவா** 68
- மல்லியப்புசந்தி திலகர்

**மூத்த ஊடகவியலாளர் பாரதி அண்ணாவின் அறிவாளுமையும் புலப்பாட்டுநெறியும்** 71
- சி. ரகுராம்

**இராஜநாயகம் பாரதி பத்திரிகை வானில் நின்றொளிர்ந்த துருவ நட்சத்திரம்** 72
- கருணாகரன்

**பன்முக ஆளுமை கொண்ட யோகா பாலச்சந்திரன்** 76
- வே. விவேகானந்தன்

**ஆனந்தி அக்கா எனும் ஆளுமை** 78
- கோபி இரத்தினம்

**தமயந்தியின் 'அந்தி வானில் ஆயிரம் வெள்ளி' - காதலின் துக்கச் சித்திரங்கள்** 80
- சு. வேணுகோபால்

**வாழ்நாள் போராளி தோழர் நல்லக்கண்ணு** 83
- நெல்லை ஜெயசிங்

**சீத்துவக்கேடு - துலைஞ்சு போன எங்கட வாழ்க்கை - கொண்டாடி மகிழும் ஒரு காலத்தின் பதிவு** 87
- தாமரைச்செல்வி

**ஒரு நூலின் உருவாக்கம்: ஆசிரிய-வெளியீட்டாளருக்கான கைந்நூல்** 90
- என். செல்வராஜா

**ஈழ இலக்கியவெளியில் எழுத்து - வாசிப்பு - பதிப்பு புதிய சாத்தியங்களை நோக்கி** 93
- ஜிஃப்ரி ஹாசன்

**யாழ்ப்பாணத்தின் வற்றாத நீரூற்றுகள்** 96
- இயல்வாணன்

**வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த கலையாக காமன் கூத்து** 98
- அருணாசலம் லெட்சுமணன்

**பெண்நிலைவாதக் கவிதைகளில் போரும் போரியல் வாழ்வும்** 101
– சி. ரமேஷ்

**மலேசியப் பெண்பாற் கவிஞர்கள்** 107
- கோட்டி திருமுருகானந்தம்

**பசுமை மறையும் கமரூன் தேசம்** 112
-சதீஸ் செல்வராஜ்

**திருச்சூகர வேட்டை** 115
- த. ஜீவராஜ்

**அடக்குமுறை உலகத்திலிருந்து தப்பிக்கும் அவசியத்தினால் பிறந்த எழுத்து** 118
- ச. சத்யதேவன்

**பெண்ணியவாதம்: அறிவாராய்ச்சியியலும் கோட்பாடும்** 121
ஆங்கில மூலம்: ஜயதேவ உயன்கொட
தழுவலாக்கம்: கந்தையா சண்முகலிங்கம்

**இனப்படுகொலையின் அரசியல் - அமெரிக்காவும் ஈழத்தமிழரும்: பெருங்குற்றவாளியிடம் நீதிகோரல்** 124
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

**வடமொழி நூல்களைத் தமிழ்ப்படுத்தற் பணியில் ஈழத்தவர் பங்களிப்பு: இரகுவம்சத்தின் அரசியல்** 130
- மைதிலி தயாநிதி

**முலையறுகாதை! (பெண் துயரப் பெருங்கதை)** 134
- மா. சித்திவினாயகம்

**ஈழத்தில் தமிழ் பௌத்தர்கள் -8** 136
-செல்வநாயகி ஸ்ரீதாஸ்

**குருவாகி உயர்ந்த சீடன்** 139
- கிருங்கை சேதுபதி

**கம்பனின் கருவூலம் திறந்து ...** 143
மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

**'இடிச்ச புளி'** 147
- உஷாதீபன்

**ஓடி ஒளிந்தாலும் நானே உன் காதலி** 152
- அ. கந்தசாமி

**வளர்ந்தவர்களிலும் பார்க்க சிறுமிகள் அறிவாளிகள்** 157
- லியோ ரோல்ஸ்ரோய்
தமிழில்: என்.கே. மகாலிங்கம்

**தாய்வீட்டார் சந்திப்பு -2025** 159
- நயனன்




யாழ். குடாநாட்டின் வடமுனையின் தென்கிழக்கே மணற்காடு, குடத்தனை, குடத்தனை வடக்கு, பொற்பதி, அம்பன், நாகர்கோவில் கிழக்கு, நாகர்கோவில் மேற்கு, நாகர்கோவில் தெற்கு, செம்பியன்பற்று வடக்கு, செம்பியன்பற்று தெற்கு, மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, போக்கறுப்பு மற்றும் சுண்டிக்குளம் ஆகிய பதினெட்டுக் கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியதாக வடமராட்சி கிழக்கு அமைந்துள்ளது. வடக்கில் இந்து சமுத்திரப் பெருங்கடலையும், தெற்கில் தொண்டைமானாறு கடல் நீரேரியையும், கிழக்கில் நன்னீர்த் தொடுவாயினையும் கொண்டுள்ளது.

வடமராட்சி கிழக்கில், 16752 மக்கள் தொகையினைக் கொண்ட 5517 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இதில் 1083 பெண் தலைமைத்துவக் குடும்பங்களும் உள்ளடக்கம். இப்பகுதி மக்களின் பிரதான வாழ்க்கை ஆதாரமாக மீன்பிடித் தொழில் விளங்குகிறது. இதில் 2859 குடும்பங்கள் கடற்றொழிலையும், ஏனையோர் விவசாயம், வியாபாரம், சிறுகைத் தொழில், சீவல் மற்றும் ஏனைய இதர தொழில்களையும் சீவனோபாயத் தொழிலாக மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த காலங்களில் நாட்டில் நிலவிய உள்நாட்டு யுத்தம் மற்றும் சுனாமி அனர்த்தம் போன்றன மக்களை வெகுவாகப் பாதிப்புக்குள்ளாகியது. உள்நாட்டு யுத்தத்தினால் ஒன்றுக்கு மேற்பட்ட தடவை உள்ளக இடப்பெயர்வுகளைச் சந்தித்திருந்ததுடன், 2004-ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் விளைவுகள் மக்களின் வாழ்க்கை நிலைகளை மிகவும் சீர்குலைத்திருந்தன. இதனால், பாரிய உயிரிழப்புகள் மட்டுமன்றி, சொத்திழப்பு மற்றும் உடமை இழப்புகளையும் சந்தித்துள்ளனர். இதன் எச்சங்களாக குடும்பக் கட்டமைப்புச் சிதைவு, நீண்ட கால உளவடு, பெண் தலைமைக் குடும்பங்கள் அதிகரிப்பு போன்றன மக்கள் மத்தியில் அதிகரித்து, வாழ்க்கைப் பதற்ற நிலையினை தோற்றுவித்துள்ளது.

உள்நாட்டு யுத்தம் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டு 2010-ம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்டபோதும், தொழிலின்மை, வருமானமின்மை மற்றும் அடிப்படை வசதிகள் எதுவுமின்றி வாழ்க்கையினைத் தொடர முடியாமல் அல்லற்பட்டனர். இதனால், கடலை நம்பி வாழும் இப்பகுதி மக்கள் போதிய வருமானத்தினைப் பெறமுடியாமல் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதில் பாரிய சிக்கல்களை எதிர்கொண்டனர். இதனால் மக்களின் பொருளாதார நிலை கேள்விக்குறியாக மாறியது. வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதில் திண்டாட்டத்தை ஏற்படுத்தியது. இதன் காரணமாக 2011-ஆம் ஆண்டு காலப்பகுதியில் சட்டரீதியற்ற கடல்வழி மார்க்கத்தின் ஊடாக பலர் அவுஸ்ரேலியா நாட்டிற்கு அகதியாகச் சென்றனர்.

அண்மைக் காலங்களில் வசதி படைத்தவர்கள் உட்பட மூளைசாலிகளின் வெளியேற்றம் அதிகளவில் இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக, தள்ளும்-இழுக்கும் காரணிகளால் புலம்பெயர்வுகள் தூண்டப்படுகின்றன. இப்பகுதியில் வாழும் மக்களின் புலம்பெயர்வு நோக்கிய பாதையில் அதிகளவில் தள்ளும் காரணிகளான வறுமை, வேலையின்மை, குறைந்த வருமானம், பொருட்களின் விலையேற்றம், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்றன முக்கிய தாக்கத்தினை செலுத்துகின்றன. இதன் விளைவாக, புலம்பெயர் நாடுகளையும், நாட்டின் ஏனைய நகரப் பகுதிளையும் (உள்ளக இடப்பெயர்வு) நாடிச் செல்கின்றனர். இவ்வாறு புலம்பெயர்வுகளின் எண்ணிக்கையானது அதிகரிக்கின்ற நிலையில் இப்பகுதியில் வாழும் மீனவர்களின் குடிப்பரம்பலானது வெகுவாக குறைந்து வருகின்றது. எங்குமே செல்ல முடியாத வறுமை நிலையில் உள்ள மக்கள் மட்டுமே கடலை நம்பி வாழும் நிலை காணப்படுகிறது. இவர்கள் தங்களது அன்றாடச் செலவுக்கே போதிய வருமானமின்றி அவதிப்படுகின்றனர்.

### மீனவர்களின் சமகால நிலை:

எமது நாட்டில் இருந்து அதிகளவிலான கடல் உணவுகள் ஏற்றுமதி செய்யப்படுவதினால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் அதிகரிப்பதில் நேர்க்கணியமான தாக்கத்தினைக் கடற்றொழில்துறை ஆற்றி வருகிறது. இதன் வழி நாட்டின் அன்னியச் செலவாணியை ஈட்டித்தருவதில் கடற்றொழில்துறை கணிசமான பங்கினைக் கொண்டுள்ளது. இதனுள் வடமராட்சி கிழக்குப் பகுதியில் வாழ்கின்ற மக்களின் பிரதான தொழிலான 'கடற்றொழில்' காணப்படுவது மட்டுமன்றி, நாட்டினுடைய அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்பவையாக விளங்குகிறது. ஐ.நா-வினால் அறிமுகப்படுத்தப்பட்ட 169 குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்ட 17 நிலை பேண்தகு இலக்குகளில் 'கடல்கள் மற்றும் கடல்சார் வளங்களைப் பாதுகாப்பது மற்றும் நிலைத்திருக்கும் வகையில் பயன்படுத்துதல்' உள்ளடக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய நிலையில் கடற்றொழிலை மேற்கொள்ளும் மக்களின் வாழ்க்

கைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன், வளங்களைப் பாதுகாப்பதும் அவசியமாகும்.

வடமராச்சி கிழக்கின் மீனவ குடும்பங்களில் முதலாளி அல்லாத கூலித்தொழில் செய்யும் மீனவக் குடும்பங்கள் அதிகளவில் வசிக்கின்றனர். மீள்குடியேற்றம் செய்யப்பட்டுப் பதினைந்து வருடங்கள் கழிந்தும், மக்கள் தங்களது அன்றாட வாழ்க்கைத் தேவைகளினைப் பூர்த்தி செய்வதில் மந்தமான நிலையே காணப்படுகிறது. இவர்களிடம் தமக்கெனச் சொந்தமாக படகு, இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் இல்லை. இவர்கள் அன்றாடம் உழைத்து தங்களது வாழ்க்கைச் செலவுகளை ஓட்டுபவர்கள். இதனால், நாளாந்த வாழ்க்கைச் செலவினைப் பூர்த்தி செய்யக்கூட போதிய வருமானமின்றி அவதியுறும் நிலைக்குள்ளேதான் வசிக்கின்றனர்.

நாட்டில் ஏற்பட்ட கோவிட்-19 பெருந்தொற்றுக்கு பின்னரான அதிகரித்த பொருளாதார நெருக்கீடுகள், அரசியல் ஸ்திரத்தன்மை, எரிபொருட்களின் விலையேற்றம் மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பானது வடமராட்சிக் கிழக்கு மீனவர்களை, மென்மேலும் வறுமை நிலைக்கு மக்களை இட்டுச் செல்வதற்குக் காரணியாக அமைகிறது. மீனவர்கள் போதியளவு எரிபொருட்களை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

இலங்கையின் வடக்குக் கடற்பரப்பில் நிகழ்கின்ற எல்லை தாண்டிய இந்திய மீனவர்களின் இழுவைப் படகின் தாக்கங்களும் உள்ளூர் மீனவர்கள் மத்தியில் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. இந்திய இழுவைப் படகுகளினால் மேற்கொள்ளப்படும் சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கைகளால், பல மீன் இனங்கள் அழிவடைந்து மீன் வளமும் குறைந்து கடல்வளம் பாதிப்புக்கு உள்ளாகிறது. இத்தகைய இழப்புகளை ஈடு செய்ய முடியாது.

எல்லை தாண்டிய மீன்பிடி நடவடிக்கைகளுக்கு எதிராக மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். தற்போதுவரை தீர்க்கப்பட முடியாத பிரச்சினையாகவே இது இருந்து வருகிறது. கடந்த காலங்களில் நிலவிய அழிவு நிலைகளில் இருந்து மீள்வளர்ச்சியை நோக்கி நகருகின்ற போது இத்தகைய சூழல்கள் மீண்டும் மீண்டும் இப்பகுதி மக்களைப் பாதிப்புறு நிலைக்குத் தள்ளுகிறது.

நாளாந்தம் ஏற்படுகின்ற பொருட்களின் விலையேற்றம் மக்களின் வாழும் நிலையை மாற்றுகிறது. போதிய வருமானம் இல்லாத நிலையில் குடும்பத் தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்வதில் நிச்சயமற்றதன்மை நிலவுகிறது. மீன்பிடித் தொழிலில் சந்திக்கின்ற பிரச்சினைகள் தீர்க்கப்படாத நிலையில் இருப்பதனால், மீன்பிடித் தொழிலை கைவிட்டு வேறு தொழில்களை நாடிச் செல்லும் போக்கு அதிகரிக்கிறது. தாளையடி, உடுத்துறை, வத்திராயன் மற்றும் ஆழியவளைப் பகுதிகளில் வாழுகின்ற கூலி மீனவர்கள் உட்பட வருமானமின்றி வாழும் மீனவர்கள் கடற்றொழிலைக் கைவிட்டு இயக்கச்சியில் அமைந்துள்ள 'றீச்சா' ஒருங்கிணைந்த பண்ணைக்குச் செல்வதாக சில மீனவர்கள் கவலை தெரிவித்தனர். இவை மக்களின் மீன்பிடித்தலை மிகவும் பின்நோக்கிக் கொண்டு செல்கிறது. இது இலங்கையின் மீன்பிடித்துறையில் ஏற்படுத்துகின்ற ஒரு வீழ்ச்சி நிலையாகும். இதன் தாக்கமானது மொத்த தேசிய உள்நாட்டு உற்பத்தி வருமானத்திலும் தாக்கத்தினை ஏற்படுத்தும் ஒன்றாக இருக்கிறது.

இவ்வாறு, தொழில் இழப்புகள் மத்தியில் அல்லல்படும் மீனவர்களினைக் குறிவைத்து சில கடன் வழங்கும் வணிக அமைப்புக்களும் இயங்குவதால் இலகுவில் கடன்பொறிக்குள் சிக்கிக்கொள்ளும் அபாய நிலைகளும் காணப்படுகிறது. மீனவக் குடும்பங்களின் நலன்களை மேம்படுத்துவதில் சமாசங்கள் மற்றும் சங்கங்கள் முனைப்புடன் செயலாற்றி வந்தாலும் இழப்புக்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் வினைத்திறனாகச் செயலாற்ற முடிவதில்லை. இதற்கான நிதிகள் போதியளவு இல்லாததனால் இவை மானியம் வழங்குதல் மற்றும் வட்டியற்ற கடன் போன்ற திட்டங்களைக் கொண்டிருப்பதில்லை. மேலும், எல்லை தாண்டிய இந்திய மீனவர்களினால் இழப்புகளை சந்திக்கும் குடும்பங்களுக்கு நட்ட ஈடு வழங்கும் முறையான பொறிமுறைகள் அரசாங்கத்திடம் இல்லாமையும் நுண்நிதிக் கடன் வழங்கும் வணிக நிறுவனங்களின் தலையீடுகளுக்குக் காரணமாகின்றன. மீனவர்கள் தங்களது தொழிலை மீண்டும் கட்டியெழுப்பும் நோக்கில் நுண்நிதிக கடன் வழங்கும் நிறுவனங்களையே நாடிச் செல்கின்றனர். பாதிப்புறு நிலையில் உள்ள குடும்பங்களையே இலக்காகக் கொண்டு இயங்கும் இத்தகைய நிறுவனங்களின் கடன் வலையில் இலகுவாகச் சிக்கி மீண்டெழ முடியாமல் கடனைச் செலுத்த மீண்டும் கடன்பெறும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இவர்களில் பெண்களும் அடங்குகின்றனர்.

மீனவக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களும் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். கடலுக்குச் சென்று மீன்பிடிப்பதனைத் தவிர கரையில் நின்று செய்யக்கூடிய வேலைகளைச் செய்வதில் பெண்கள் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக, வாழ்க்கைத் துணையை இழந்த பெண்கள் தங்களது குடும்பச் செலவினை ஈடு செய்வதற்காகக் கடற்கரைக்குச் சென்று வலை தெரித்தல், கரவலை இழுத்தல், மீன்களைக் கொள்வனவு செய்து கருவாட்டு உற்பத்திகளை மேற்கொள்ளுதல் போன்ற தொழில்களை மேற்கொண்டு வருகின்றனர். வாழ்க்கைத்துணை உள்ள குடும்பங்களில் உள்ள பெண்களினைவிட வாழ்க்கைத்துணையை இழந்த பெண்கள் இத்தகைய தொழில்களில் அதிகளவில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால், இவர்களுக்குப் போதியளவு வருமானம் கிடைப்பதில்லை. குறிப்பாக, வலை தெரித்தலை மேற்கொள்பவர்களுக்குக் கறிக்கு மீனும் குறைந்தளவு பணமும் வழங்கப்படுகிறது. இந்த வருவாயில் வாழ்கிற பெண்களின் குடும்பங்கள் எத்தகைய துன்பங்களை அனுபவிப்பார்கள் என்று எண்ணிப் பார்க்க முடியவில்லை. இவ்வாறான நிலைமைகள் பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தி விளிம்பு நிலைக்கு இட்டுச் செல்வதற்கும் வழிகோலாக மாறிவிடுகிறது.

மீனவ சமுதாயங்கள் எதிர்கொண்டு வருகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மீனவ சங்கங்கள், சமாசங்கள் மற்றும் அவற்றின் பிரதிநிதிகள் துடிப்புடன் செயலாற்ற வேண்டிய கட்டாயம் உள்ளது. இதற்கு முறையான கட்டமைப்புப் பொறிமுறைகளை அரசாங்கம் உருவாக்கி, மீனவர்களின் பிரச்சினைகளை இனங்கண்டு, அவற்றினைத் தீர்ப்பதன் வழியாகவே வருமானத்தினை அதிகரிக்க முடியும். மீனவர்களின் நலன்களைப் பேணுகின்ற உறுதியான சட்டப் பொறிமுறைகள் பெயரளவிலேயே அதிகம் இருக்கின்றன. குறிப்பாக, தீர்க்கப்பட வேண்டியதாகவும், தீர்க்க முடியாத பிரச்சினையாகவும் எல்லை தாண்டிய இந்திய மீனவர்களின் இழுவைப் படகின் தாக்கங்கள் அமைந்துள்ளன.

மீன்பிடித் தொழிலினை விருத்தியாக்குவதற்கு நாட்டிற்குப் பொருத்தமான கொள்கைகள் மாற்றங்களின் அவசியம் உணரப்படுகிறது. மீனவர்களின் பங்களிப்புகளுடன் இவைகள் மாற்றியமைக்கப்படும்போது பின்தள்ளிய கிராமங்களில் உள்ள மீனவர்களின் பிரச்சினைகளும் தீர்க்கப்படும் சாத்தியம் உருவாகலாம். மீன்களை உடனடி ஏற்றுமதி செய்வது மட்டுமின்றி அதிக வருமானம் வருவிக்கக்கூடிய தரம்மிக்க கடலுணவுகளின் உற்பத்திகளினை அதிகரிக்கும் வகையில் கிராமங்களில் கடற்றொழில் கூட்டு முயற்சிகளினை உருவாக்க வேண்டும். இதன் மூலம் சாதாரண மீனவர்களும் அதிக வருமானத்தினைப் பெறக்கூடிய சாத்தியப்பாடுகள் அதிகளவில் உள்ளன. முறையான சந்தைப் பொறிமுறைகளை உருவாக்கி மீனவர்களின் வருமானத்தினை இரட்டிப்பாக்குவதன் மூலம் நாட்டின் வருமானத்தினையும் அதிகரிக்க முடியும். நாட்டின் வரவு-செலவுத் திட்டங்களின் கூடுதல் நிதியினை மீனவ சமுதாயத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

நிலைபேண்தகு இலக்குகளினை எட்டுவதற்கான சாத்தியப்பாடுகளை உருவாக்குதல் அவசியம். 2030-ம் ஆண்டிற்கும் எய்தப்படும் என்ற இலக்குகளை எய்துவதற்கான கால அவகாசம் இன்னும் ஐந்து வருடங்களே மீதமுள்ளன. கடந்த காலங்களில் இத்தகைய இலக்குகளை எட்டுவதில் எத்தகைய வெற்றிகளை நாடு அடைந்துள்ளது என்றால் வெறும் கேள்விக்குறியாகவே உள்ளது. தற்போது புதிய ஆட்சியில் அமைந்திருக்கும் அரசாங்கம் மீனவக் குடும்பங்களின் மேம்பாட்டில் கூடுதல் அக்கறை கொள்வது அவசியமாகும். நாட்டின் அபிவிருத்தியில் கூடுதல் அன்னியச் செலாவணியை பெற்றுத்தரும் இத்தகைய மீன்பிடித் தொழிலை விருத்தி செய்வதன் மூலம் நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தி வருமானத்தினையும், தனிநபர் வருமானத்தினையும் அதிகரிக்க முடியும். பொருளாதார வளர்ச்சியின் குறிகாட்டிகளாக உள்ள மொத்த தேசிய உற்பத்தி வருமானம் மற்றும் தனிநபர் வருமானம் அதிகரிக்கின்றபோது நாட்டின் வறுமை நிலை குறைவதற்கான சாத்தியங்கள் உருவாகும்.

இலங்கையிலுள்ள ஏனைய வருவாய்த் துறைகளினைப் போல மீன்பிடித் துறையையும் விரிவுபடுத்தப்பட வேண்டிய தேவை எழுந்துள்ளது. அன்றாடம் மீனவர்கள் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகள் விரைவாகத் தீர்க்கப்பட வேண்டியவைகள். மானிய அடிப்படையிலும், சிறுதொழில் மீனவர்கள் மற்றும் நலிவுற்ற நிலையில் உள்ள மீனவர்களுக்கு நன்கொடை அடிப்படையிலும் கடல்தொழில்சார் உபகரணங்கள் வழங்கப்பட வேண்டும். மீனவர்களுக்குத் தேவையான எரிபொருளைக் குறைந்த விலையில் வழங்குவதற்கான நடவடிக்கைகளும் அவசியம். இத்தகைய ஏற்பாடுகள் மீனவக் குடும்பங்களுக்கான சமூகப் பாதுகாப்பாக அமையும்.



meryresotha.a@thaiveedu.com





# பொன். இராமநாதன்

## இலங்கை சுதந்திரப் போராட்டத்தில் வகித்த பங்கும், அதன் பெறுபேறும்

— கே.கே.எஸ். பெரேரா

தமிழில்: மணி வேலுப்பிள்ளை

### சுதந்திரத்துக்கான அறைகூவல்:

இலண்டனில் நீதிகேட்டு வாதாடி வெற்றிபெற்ற சீமான் பொன்னம்பலம் இராமநாதன், இலங்கை திரும்பியபொழுது, ஒரு வெற்றிவீரராக வரவேற்கப்பட்டார்.

பிரித்தானிய ஆட்சியாளரின் ஒடுக்குமுறைகளை அம்பலப்படுத்த, குறிப்பாக 1915-ம் ஆண்டுக் கலவரத்தை அடுத்து, தேசிய இயக்கத் தலைவர்களையும், மதுவிலக்கு இயக்கத் தலைவர்களையும் அநீதியான முறையில் கைதுசெய்து, அடைத்துவைத்து, துன்புறுத்தியதை அம்பலப்படுத்த, அயராது பாடுபட்ட இராமநாதனை மக்கள் நன்றியுணர்வோடு நயந்து கொண்டாடினார்கள்.

நீதியை நிலைநிறுத்துவதில் அவர் தலையாய பங்கு வகித்ததை ஏற்றிப்போற்றிய சிங்களத் தலைவர்களும் மக்களும், அதைக் குறித்து அவரை மாண்புறுத்தும் வண்ணம், ஒரு மாபெரும் வரவேற்பு விழாவை ஏற்பாடு செய்து, துறைமுகத்துக்குச் சென்று, அவரை மாண்புற வரவேற்று அழைத்து வந்தார்கள்.

அவர் ஏறிவந்த வண்டியை, நாடறிந்த சிங்களத் தலைவர்கள், தெருவழியே இழுத்துச் சென்றமை ஒரு கண்கொள்ளாக் காட்சியாய் அமைந்தது. வழமையை விஞ்சிய அந்த உணர்வெழுச்சி, அவரது பொதுநலப் பணியையும், இன-அரசியல் பேதங்களைக் கடந்து மக்களது நன்மதிப்பை அவர் ஈட்டிய சிறப்பையும் திட்பமுற மெச்சும் விதமாய் அமைந்தது.

வரவேற்பு விழாவைக் கண்டுகளிக்க, ஆயிரக் கணக்கானோர் திரண்டுவந்து, தெருமருங்கில் நின்று, ஆரவாரம் செய்து, மரியாதை செலுத்தினார்கள். அவரது மீள்வரவு தமிழ், சிங்கள சமூகங்கள் ஒன்றுபடும் தருணமாய் மாறியது. கட்டியாள்கைக்கும், அநீதிக்கும் எதிராக அவர்கள் ஒருங்கிணைந்து மேற்கொண்ட போராட்டத்தை வலியுறுத்துவதாய் அமைந்தது.

பிரித்தானியர் இலங்கைவாழ் சமூகங்களுக்கிடையே பதற்றங்களை ஏற்படுத்தி, நாட்டைப் பிரித்தாள முயன்றாலும் கூட, இராமநாதன் போன்ற தலைவர்கள் தேசிய நீதியை நிலைநாட்டும் போராட்டத்தில் இனத்துவ பேதங்களைத் தணிக்க வல்லவர்களாக விளங்கியதையும் அது எடுத்துக்காட்டியது.

அந்த மாபெரும் வரவேற்பு நாடுமுழுவதும் தேசியத் தீயை மூட்டியது. பிரித்தானியரின் ஒடுக்குமுறைக்கு எதிராக இலங்கையின் எல்லாப் பண்பாட்டு மக்களும் அணிதிரள வேண்டிய தேவையை வலியுறுத்தியது.

ஹென்றி பீதிரிஸ் போன்ற மற்றும் பிறர் புரிந்த தியாகங்களுடன் ஒருசேர இராமநாதன் மேற்கொண்ட முயற்சிகள், இலங்கையில் தன்னாட்சிக் கோரிக்கைகளைக் கட்ட வழிவகுத்தன. அடுத்தடுத்த தசாப்தங்களில் வலுப்பெற்ற சுதந்திரப் போராட்டத்துக்கு அவை அடிக்கல் நாட்டின.

### கலவரங்கள், வன்செயல்கள் பற்றி ஏ. இரத்நாயக்க முன்வைத்த விபரம்:

தனது 14 வயதிலேயே ஓர் அமைச்சராக விளங்கிய வாசல முதியன்சலாகே அபயரத்தின இரத்நாயக்க (1900-1977) இலங்கையில் மூண்ட பயங்கர சமூக வன்முறைக்கு ஒரு கண்கண்ட சாட்சி.

ஒரு விதிவசப்பட்ட மாலைவேளையில், நத்தார்ச் சிந்து ஒலிக்கும் ஒரு வண்டியின் அருகில், அவர் நின்றபொழுது, திடீரெனப் பதற்றம் மூண்டதைக் கண்டார். மக்கள்திரளுக்குள் இருந்து வீசப்பட்ட ஒரு புட்டி, நொருங்கி விழுந்த மறுகணம், ஒரு பள்ளிவாசலுக்கு அருகில் குழுமிநின்ற சிலர் தாக்கத் துவங்கவே, களேபரம் மூண்டது.

அந்த வன்முறை கையோடு வலுத்த பதிலடிக்கு உள்ளானது. வெகுண்டெழுந்த கும்பல்கள் தமது சீற்றத்தை அந்தப் பள்ளிவாசலின் மீது திருப்பின. கொஞ்ச நேரத்துள் பள்ளிவாசல் கட்டடம் தகர்க்கப்பட்டது. பேரழிவு தொடர்ந்து நிகழ்ந்தது.

இருண்ட வானம் ஒளிரும் வண்ணம் முஸ்லீங்களுக்குச் சொந்தமான கடைகள், வீடுகள், ஆதனங்கள் கொளுத்தப்பட்டன. எங்கேயோ நிகழ்ந்த மோதல் ஒரு சமூகக் கலவரமாய் ஓங்கிப் பரவி, அழிவை விளைவித்து, சமூக பேதங்களை ஆழமாக்கியது. அதன் எதிர்விளைவுகள் நெடுங்காலம் நீடித்தன.

## 1818, 1848 கிளர்ச்சிகள்:

20-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் இலங்கை சமூகப் பதற்றங்களை எதிர்கொண்டது. அதற்கு முன்னரே தம்மைக் கட்டியாண்ட பிரித்தானியருக்கு எதிராக இலங்கையர் மேற்கொண்ட போராட்டம், நெடுங்காலமாய் குருதியில் தோய்ந்து வரலாற்றில் படிந்தது.

1818-ல் ஒரு பெருங்கிளர்ச்சி மூண்டது. பிரித்தானியரை விரட்டி, இறைமையை மீட்க உறுதிபூண்ட உள்ளூர் மூப்பர்களின் தலைமையில், ஊவா-வெலசை குறிச்சியில், மூண்ட கிளர்ச்சி அது. எனினும், மேம்பட்ட படைக்கலங்களை ஏந்திய பிரித்தானியர், விரைந்து சென்று, கொடூரமான முறையில், அக்கிளர்ச்சியை அடக்கினர். ஆயிரக் கணக்கானோர் கொன்று குதறப்பட்டார்கள். ஊர்கள் துடைத்தெறியப்பட்டன. ஊர்வாசிகள் அனைவரும் பேரழிவுக்கு உள்ளாகினர்.

30 ஆண்டுகள் கழித்து, 1848-ல், இன்னும் பெரிய, பரந்த கிளர்ச்சி மூண்டது. பிரித்தானிய அரசு அதிர்ச்சி அடைந்தது. வரி உயர்வு, பொருளாதார இன்னல்கள், கட்டியாளப்படுவதற்கு எதிரான உள்ளக்கொதிப்பு எல்லாம் ஒன்றுசேர, தீவு முழுவதும் கிளர்ச்சித்தீ மூண்டு, விளாசிப் பரவியது. கண்டி முதல் மாத்தளை வரை மட்டுமல்லாது, கொழும்பு மாநகரப் புறங்களிலும் கிளர்ச்சித்தீ பற்றியெரிந்தது.

கட்டியாண்ட பிரித்தானியர் கிளர்ச்சியின் பருப்பம் கண்டு, தமது ஆதிக்கத்தை இழந்துவிடுவோம் என்று ஏக்கம் கொண்டு, பதிலடியில் இறங்கினார்கள். குறிப்பாக ஊவா, சப்பிரகமூவா, மத்திய, வடமேல் மாகாணங்களில் கொடூரமான அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டார்கள். மக்கள் திரள் திரளாகக் கொல்லப்பட்டார்கள். பொதுவெளிகளில் தூக்கிலிடப்பட்டார்கள். படைபலம் கொண்டு அடிதடி நடத்தினார்கள். பாரிய உயிரிழப்புகள் நேர்ந்தன.

ஈற்றில் கிளர்ச்சிகள் அடக்கப்பட்டாலும்கூட, தேசிய விடுதலை வித்துக்களை அவை ஊன்றவே செய்தன. கட்டியாளப்படுவதற்கு எதிராக ஓங்கிய உணர்வுத்தீக்கு அவை எண்ணெய் வார்க்கவே செய்தன.

அதன் பிறகு, குறிப்பாக 1870-களில் பாணந்துறை விவாதம் நிகழ்ந்த பிறகு, ஏற்பட்ட பௌத்த மறுமலர்ச்சி, இலங்கையின் சுதந்திரப் போராட்டத்தில் ஒரு தீர்க்கமான திருப்புமுனையாய் அமைந்தது.

## 1915–இல் வலுத்த கலவரங்கள்:

சமூகங்களைக் கட்டுப்படுத்தி, பிளவுபடுத்தும் கொள்கைகள் மூலம் அவற்றிடையே பதற்றத்தை ஓங்கச்செய்வதில், இலங்



**இலங்கையரின் பிரதிநிதியாக இலண்டன் சென்ற சீமான் (sir.) பொன். இராமநாதன் நாடுதிரும்பியபொழுது, டி.எஸ். சேனநாயக்க, எவ்.ஆர். சேனநாயக்க, ஏ.ஈ. குணசிங்க, ஈ.டபிள்யூ. பெரெரா உட்பட்ட சிங்களத் தலைவர்கள் அவரை ஒரு வண்டியில் ஏற்றி இழுத்துச் சென்றதை, உள்ளத்தில் பதித்து ஓர் ஓவியர் வரைந்த படம். (நன்றி: ஜே.ஆர். ஜெயவர்த்தனா நிலைய நூலகம்).**

**– கே.கே.எஸ். பெரெரா**

கையைக் கட்டியாண்ட பிரித்தானிய அரசு மும்முரமாய் ஈடுபட்டது.

கண்டி எசல பெரகரா ஊர்வலம், காசிள் ஹில் பள்ளிவாசலை அண்டிக் கடந்து செல்லத் தடை விதித்தபொழுது, நிலைமை ஆட்டம் கண்டது. தடைவிதித்த முடிபை, தமது பௌத்த மரபுகளுக்கு நேர்ந்த இழிவாகக் கருதி, சிங்கள மக்கள் வெகுண்டெழவே இன, மத பேதங்கள் தீவிரமடைந்தன. வதந்திகள் விரைந்து பரவிய அதேவேளை, தலதா மாளிகையில் உள்ள புத்த தந்தக் கோயிலை, முஸ்லீங்கள் தாக்கியதாகப் பொய்க் குற்றஞ்சாட்டுகள் எழுந்தன.

இவ்வாறு புனையப்பட்ட கூற்றுகளால் சமூகங்களுக்கிடையே ஐயுறவு மூண்டு, அச்சமும் பகைமையும் தலைகாட்டின. தவறான தகவல்களால் சமூகங்களுக்கிடையே அவநம்பிக்கை ஓங்கி, கலவரங்கள் மூளவே, நிலைமை கடுகதியில் கட்டுப்பாட்டை மீறியது.

கட்டியாண்ட பிரித்தானியர் காலந்தாழ்த்தி, அரைகுறை நடவடிக்கை எடுத்தார்கள். தடுப்பு நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, வன்முறை ஓங்க இடங்கொடுத்த பிறகு, படைச்சட்டத்தைப் பறைசாற்றினார்கள். படைத் தலையீட்டுக்கு உத்தரவிட

முன்னரே, பெருவாரியான உயிரிழப்புகளும், சொத்துச் சேதங்களும் விளைந்தன. பிரித்தானிய ஆட்சியாளர் மீது, மக்கள் கொண்ட சீற்றத்தை, அது மேலும் பெருக்கியதுடன், தன்னரசுக் கோரிக்கைக்கும் வலுவூட்டியது.

## கொடிய மரண தண்டனைக்கு உள்ளான ஹென்ரி பீதிரிஸ்:

அக்காலகட்ட அரசியலில் அறவே திட்பமான பங்குவகித்து, சோகமான முடிவுக்கு உள்ளானோருள் கொழும்பு நகர காவல் துறையைச் சேர்ந்த, மதிப்புவாய்ந்த, இளம் அதிகாரி எட்வேட் ஹென்ரி பீதிரிஸ் (1888-1915) அடங்குவார். 1915-ல் கலவரம் மூண்டபொழுது, அடாவடிக் கும்பல்களைக் கட்டுப்படுத்தி, முஸ்லீங்களின் கடைகளைப் பாதுகாக்கும் பணி அவருக்கு ஒதுக்கப்பட்டது. பதற்றத்தைத் தணிக்க அவர் முயற்சி எடுத்தும்கூட, முஸ்லீம் சமூகத்துக்கு எதிராக, வன்முறையைத் தூண்டியதாக, அவர்மீது பிரித்தானிய ஆட்சியாளர் பொய்க்குற்றம் சுமத்தினார்கள். அவசர அவசரமாக அவரைப் படைவிசாரணைக்கு உள்ளாக்கி, மரணதண்டனை விதித்து, நீதிபாலிப்பை ஒரு கேலிக் கூத்தாக்கினார்கள். கொடூரமான முறையில் அவருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

அவருக்கு நேர்ந்த கதியை உள்ளூர் மக்களிடம் சுட்டிக்காட்டி, அவர்களை அச்சுறுத்தி, அவர்களிடையே ஓங்கிய தேசிய உணர்வை ஒடுக்க, பிரித்தானிய ஆட்சியாளர் முயற்சி எடுத்தனர். சேனநாயக்க சகோதரர்கள் போன்ற மதுவிலக்கு இயக்கத் தலைவர்களை, அநீதியான முறையில் அடைத்து வைத்த சிறைக்கூடத்துள், பீதிரிசின் குருதிதோய்ந்த கதிரையை இட்டுவைத்தனர். பிரித்தானியரின் ஆட்சியை எதிர்க்கத் துணிந்தோர்க்கு விடுக்கப்பட்ட பயங்கர எச்சரிக்கை அது.

எனினும், பீதிரிசுக்கு நேர்ந்த கதியினால் போராட்டம் தணியவில்லை. மாறாக, அவரது தியாகம் விடுதலைக்கே அறைகூவல் விடுத்தது. தியாகம், எதிர்ப்பு, நாட்டுப்பற்று போன்ற சொற்களுக்கு அவரது பெயர் ஒத்த சொல்லாகி, நாடுமுழுவதும் நாட்டுப்பற்றாளர்களை எழுச்சியுற வைத்தது.

## சீமான் (sir.) பொன்னம்பலம் இராமநாதனின் வாதாட்டம்:

கலவரங்களைத் தொடர்ந்து, பிரித்தானியரின் அடக்குமுறை உச்சத்தை எட்டவே, பொன்னம்பலம் இராமநாதன் எழுந்து, களத்தில் குதித்து, நீதிக்கான போராட்டத்தில் ஓங்கிக் குரல் கொடுத்தார். அவர் ஒரு தமிழர்-தலைவராய் விளங்கியும் கூட, சிங்களவருடன் தோழமை பூண்டு, பிரித்தானியரின் கொடுமையையும் கொடுங்கோன்மையையும் சாடினார். கட்டியாளப்பட்டு, அடக்கி ஒடுக்கப்பட்டோரின் சத்தியக் கடதாசிகளையும், அவர்கள் பட்டறிந்த இன்னல்களின் பதிவுகளையும் தொகுத்து, பிரித்தானிய ஆட்சியாளரால் இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு மறுக்கமுடியாத சான்றுகளைத் திரட்டினார்.

நீதிநாட உறுதிபூண்டு, இராமநாதன் இங்கிலாந்து சென்றார். கட்டியாண்ட அரசின் பெரும்புள்ளிகள் உட்பட, பிரித்தானிய அதிகாரிகளையும், சட்டமன்ற உறுப்பினர்களையும் சந்தித்தார். இலங்கை ஆளுநர் சாமேர்சின் துர்ச்செயல்களை அம்பலப்படுத்தினார். மட்டுமீறிய பலவந்தம், சட்டத்தை மீறி அடைத்துவைப்பு, படைச்சட்டம் பிறப்பித்து சிங்கள மக்களை அடக்கி ஒடுக்கியமை பற்றி எல்லாம் விலாவாரியாக எடுத்துரைத்தார்.

தமது இலக்கினை எய்துவதில், அவர் கொண்ட தளராத உறுதியால் நெருக்குண்ட பிரித்தானிய அரசாங்கம், நடவடிக்கை எடுக்கத் தலைப்பட்டது. ஈற்றில் படைச்சட்டம் நீக்கப்பட்டது. ஆளுநர் சாமேர்ஸ் திருப்பி அழைக்கப்பட்டார்.

## சுதந்திரப் போராட்டத்தில் ஏற்பட்ட தாக்கம்:

1917 வாக்கில் 'இளம் இலங்கை இளையோர் கழகம்' (Young Lanka Youth League), 'இலங்கை தேசிய பேரவை' (Ceylon National Congress) போன்ற, நாட்டுப்பற்றுக் கொண்ட, குழுமங்கள் தோன்றி, பெருமளவு தன்னாட்சியையும், அரசியற் சீர்திருத்தங்களையும் கோரி வாதாடின. டி.எஸ். சேனநாயக்க, எவ்.ஆர். சேனநாயக்க போன்ற பெரும்புள்ளிகளும், தேசிய வேட்கை கொண்ட மற்றும் பிற தலைவர்களும் அரசியல்யாப்பில் மாற்றங்கள் கோரி நெருக்குதல் கொடுத்து, இலங்கையின் சுதந்திரப் பயணத்துக்கு வழிகோலினார்கள். கட்டியாண்டோரின் ஒடுக்குமுறையை எதிர்கொண்ட இலங்கை மக்களது மீள்திறன், ஒற்றுமை என்பவற்றின் வலிய சின்னங்களாய் பீதிரிசும் இராமநாதனும் விளங்கினர். அவர்கள் ஆற்றிய தொண்டு இலங்கை வரலாற்றில் ஒரு திட்பமான அத்தியாயமாய் அமைந்து, நாட்டின் சுதந்திரப் பயணத்துக்கு வழிகோலியது.

'இராமநாதன் இந்நாட்டின் வாழ்வுக்கு ஆற்றிய தொண்டின் ஊடாக, சிங்கள மக்களின் நெஞ்சத்துணர்வு, குறிப்பாக அவர்களது சமயம், மொழி, தன்னாட்சி உணர்வுகள் யாவும் புத்துயிர் கொள்ளத் துணை நின்றார். இலங்கையின் முதலாவது பிரதம மந்திரி அதிமாண்புமிகு டி.எஸ். சேனநாயக்க கூட, இதே உணர்வை வெளிப்படுத்தினார். 'என்றென்றும் மகத்தான இலங்கையர்களுள் இராமநாதன் ஒருவர்' என சேனநாயக்க மெச்சினார் என்று, 1991 நவம்பர் 30-ம் திகதி, சுவாமி விவேகானந்தர் நிலையத்தில், 'சீமான் பொன்னம்பலம் இராமநாதன் - சிங்கள மக்களின் வளர்ப்புத் தந்தை' எனும் தலைப்பில் உரையாற்றியபொழுது ஜே.ஆர். ஜெயவர்த்தனா குறிப்பிட்டிருந்தார்.

*(K.K.S. Perera, Sir Ponnampalam Ramanathan's Legacy in the Struggle for Ceylon's Freedom, Rallying Cry for Freedom, Daily News, 2025-02-04. Extract from the full speech, preserved in a booklet at the JRJ Centre Library, translated by Mani Velupillai, 2025-02-08).*



mani.velupillai@thaiveedu.com



# ஆபிரிக்காவின் இரண்டாவது சுதந்திரத்தை நோக்கி

– தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

## முகப்பு:

ஜனவரி மாதம் இறுதிவாரம் புர்கினா பாசோ, மாலி மற்றும் நைஜர் ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள், மேற்கு ஆபிரிக்க நாடுகளின் பொருளாதார சமூகத்திலிருந்து (ECO-WAS) தாங்கள் வெளியேறுவதாக அறிவித்தனர். சஹேல் நாடுகளின் கூட்டணி(AES-Alliance of Sahel States), உருவாக்கப்பட்ட சில மாதங்களில் இந்த மூன்று நாடுகளும் எக்கோவாஸை விட்டு வெளியேறுவதற்கான தங்கள் முடிவை முறையாக அறிவித்துள்ளனர். ஒரு வருடத்திற்கு முன்பு, ஜனவரி 28, 2024-அன்று, புர்கினா பாசோ, மாலி மற்றும் நைஜர் ஆகிய நாடுகளின் இராணுவத் தலைவர்கள் பிராந்திய பொருளாதார முகாமில் இருந்து விலகுவதற்கான தங்கள் நோக்கத்தை பகிரங்கமாக அறிவித்தனர். மூன்று நாடுகளும் இறையாண்மை, பிராந்திய பாதுகாப்பு மற்றும் பொருளாதார சுயாட்சி ஆகியவற்றுக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வரும் நிலையில், இந்த அறிவிப்பு சஹேலின் அரசியல் மாற்றத்தில் ஒரு வரலாற்றுப் புள்ளியாக இருக்கிறது. குறித்த நாடுகளின் விலகலை எக்கோவாஸ் உறுதிப்படுத்தியதோடு, இது ஜனவரி 29, 2025-அன்று நடைமுறைக்கு வருகிறது என்றும் தெரிவித்துள்ளது. குறித்த முடிவை இம் மூன்று நாடுகளிலும் உள்ள மக்கள் வரவேற்றுள்ளனர்.

சஹேல் என்பது சஹாரா பாலைவனத்தின் தெற்கே வறண்ட பெரும்புற்தரைப்பகுதி. இது மேற்கில் அட்லாண்டிக் பெருங்கடலில் இருந்து கிழக்கில் செங்கடல் வரை ஆப்பிரிக்கக் கண்டம் முழுவதும் நீண்டுள்ளது. சஹேல் நூறு முதல் ஆயிரம் கிலோமீட்டர் அகலம் கொண்ட ஒரு நீண்ட பகுதியை உருவாக்குகிறது. இப்பகுதி வடக்கில் சஹாரா மற்றும் தெற்கில் சூடான் ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்டது. 'சஹேல்' என்ற வார்த்தை அரபு 'சாஹில்' என்பதிலிருந்து வந்தது, அதாவது 'கடற்கரை' அல்லது 'கரை'. சஹேலின் அரசியல் வரையறை மாறுபடுகிறது. பெரும்பாலும் இந்த சொல் மேற்கில் செனகல் மற்றும் மொரிட்டானியா முதல் மத்திய ஆபிரிக்காவில் சாட் வரையிலான முன்னாள் பிரெஞ்சு காலனிகளைக் குறிக்கிறது. இந்த வரையறையில் வடக்கு கானா மற்றும் நைஜீரியாவும் அடங்கும். சிலர் இந்தச் சொல்லைப் பரந்த முறையில் பயன்படுத்துகின்றனர்.

எக்கோவாஸிலிருந்து விலகுவதற்கான முடிவு, புர்கினா பாசோ, மாலி மற்றும் நைஜரில் உள்ள பிரபலமான இராணுவத் தலைமையிலான அரசாங்கங்கள் பிராந்தியத்தில் பிரெஞ்சு மற்றும் மேற்கத்திய ஆதரவு நிறுவனங்களின் நீண்டகால மேலாதிக்கத்தை சவாலுக்குட்படுத்திய சஹேலின் பரந்த புவிசார் அரசியல் மாற்றத்தின் ஒரு பகுதியாகும். கடந்த சில ஆண்டுகளாக, இந்த அரசாங்கங்கள், மக்கள் எழுச்சிகளால் ஆதரிக்கப்பட்டு, பிரெஞ்சு இராணுவப் படைகளை வெளி




யேற்றி, தங்கள் பொருளாதாரங்களை பிரெஞ்சு செல்வாக்கிலிருந்து விடுவிக்க முயல்கின்றன. இந்நிலையில் பொருளாதார நெருக்கடிகளை ஆழப்படுத்தி, நைஜரை ஆக்கிரமிக்க அச்சுறுத்தும் பொருளாதாரத் தடைகளை விதித்த எக்கோ-வாஸ் மீது மிகுந்த அதிருப்தியுற்ற நைஜரும் அதன் அண்டை நாடுகளும் எக்கோவாஸ் தம்மைத் திட்டமிட்டுத் தனிமைப்படுத்துவதாக உணர்ந்தன. இதனால் மூன்று நாடுகளும் செப்ரெம்பர் 2023-ல் சஹேல் நாடுகளின் கூட்டணியை உருவாக்கின. இக்கூட்டணி அதன் உறுப்பினர்களிடையே பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்தியது மட்டுமல்லாமல் வெளிப்புற அச்சுறுத்தல்களுக்கு எதிரான ஒரு ஐக்கிய முன்னணியாகவும் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள முனைகிறது.

இம்மூன்று நாடுகளும் செப்ரெம்பர் 16, 2023-அன்று பிராந்

திய ஒருங்கிணைப்பு மற்றும் இராணுவ ஒத்துழைப்புக்கான முயற்சிகளை மையமாகக் கொண்டு ஒரு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன. அதிக இறையாண்மைக்கான அதன் உந்துதலின் ஒரு பகுதியாக, எக்கோவாஸிலிருந்து வெளியேறும் நாளான ஜனவரி 29, 2025-அன்று சஹேல் அளவிலான கடவுச்சீட்டை (பாஸ்போர்ட்) அறிமுகப்படுத்துவதாக அறிவித்துள்ளது. இந்தப் பாஸ்போர்ட்கள் புர்கினா பாசோ, மாலி மற்றும் நைஜர் குடிமக்களுக்கு வழங்கப்படும். இது மூன்று நாடுகளுக்கு இடையேயான பயணத்தை அவர்களின் குடிமக்களுக்கு எளிதாக்கும். பொதுவான கடவுச்சீட்டு என்பது பிராந்திய ஒருங்கிணைப்புக்கான குழுவின் உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாகும். மேலும் சஹேல் நாடுகளுக்கு ஒரு சுயாதீனமான அடையாளத்தை நிறுவுவதற்கான ஒரு படியாகும்.

இந்தக் கூட்டணி பிராந்திய பாதுகாப்பிற்கும் முன்னுரிமை அளித்துள்ளது, மேலும் பல ஆண்டுகளாக இப்பகுதியில் பாதிக்கப்பட்டுள்ள ஜிஹாத் கிளர்ச்சிகளை எதிர்த்து 5,000-வீரர்களை உள்ளடக்கிய பலமான கூட்டு இராணுவப் படையை உருவாக்கவும் உறுதிபூண்டுள்ளது. இது இந்நாடுகள் தமது பொதுவான சவால்களை எதிர்கொள்வதற்கான முயற்சியாகும். இதன்மூலம் இப்பகுதியில் நிலவிவந்த எக்கோவாஸின் ஏகபோகத்தை நீக்க இவை முயல்கின்றன. புர்கினா பாசோ-வின் ஜனாதிபதி இப்ராஹிம் ட்ரேரே, பிராந்தியத்தில் பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டம் வெறும் பாதுகாப்பு சவால் மட்டுமல்ல, பிராந்தியத்தில் சுயாதீனத்தை நிறுவுவதற்கான ‘காலனித்துவப் போர்’ என்று வலியுறுத்தியுள்ளார்.

பல ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளபடி, எக்கோவாஸிலிருந்து சஹேலின் விலகலானது, பிரெஞ்சு ஏகாதிபத்தியம் மற்றும் மேற்கத்திய நவதாராளவாத கட்டமைப்பின் பரந்த நிராகரிப்பின் அடையாளமாகும். எக்கோவாஸ் நீண்ட காலமாக பிராந்தியத்தின் பொருளாதார மற்றும் அரசியல் பாதையை ஆணையிடுவதாக இருந்தது. சஹேல் நாடுகளின் கூட்டணியை உருவாக்குவதன் மூலம், புர்கினா பாசோ, மாலி மற்றும் நைஜர் ஆகியவை தங்கள் சொந்தப் போக்கைக் கடைப்பிடிக்கத் தீர்க்கமான நடவடிக்கைகளை எடுத்துள்ளன.

எக்கோவாஸிலிருந்து புர்கினா பாசோ, மாலி மற்றும் நைஜர் வெளியேறுவது மேற்கு ஆபிரிக்காவின் அரசியல் மற்றும் பொருளாதார கூட்டத்திற்கு குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்தும். மூன்று நாடுகளும் சவால்களை எதிர்கொள்ளும் போது - தடைகள் மற்றும் தற்போதைய பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் உட்பட - இக்கூட்டணிக்குள் அவர்களின் ஒத்துழைப்பு இறையாண்மை மற்றும் பொதுவான நலன்களில் வேரூன்றிய பிராந்திய ஒருங்கிணைப்புக்கான பாதையை உருவாக்க முயல்கிறது. இப்பிராந்தியத்தில் எதிர்ப்பு மற்றும் சுயநிர்ணயத்திற்கான அபிலாஷை ஆகியவற்றின் மீது இக்கூட்டணி தொடர்ந்து நிற்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பிரெஞ்சு ஏகாதிபத்தியமும் ஆபிரிக்காவும்:

2020-முதல், ஆப்பிரிக்க கண்டம் ஒன்பது ‘வெற்றிகரமான’ இராணுவ சதிப்புரட்சிகளைக் கண்டுள்ளது, இது ஒற்றைக் கட்சி சகாப்தத்திற்கு முந்தைய வலிமிகுந்த நினைவுகளைப் புதுப்பிக்கிறது. பல ஆய்வாளர்கள் மற்றும் ஊடகங்களுக்கு, இந்த வளர்ச்சியானது ஆப்பிரிக்காவில் ஆட்சிக்கவிழ்ப்புகள் திரும்புவதை குறிக்கிறது மற்றும் ‘ஜனநாயகத்தில்’ இருந்து ‘பின்வாங்குவதை’ குறிக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்டோனியோ குத்திரெஸ், சமீபத்திய இராணுவ சதிப்புரட்சிகள் ஒரு வகையான புதிய தொற்றுநோயாகும் என்றும், இது நோய் எதிர்ப்பு சக்தி இல்லாத ஆப்பிரிக்க நாடுகளைக் கண்மூடித்தனமாகத் தாக்குகிறது என்றும் பேசினார். ‘இராணுவ அரசுகள் தீர்வு அல்ல. அவை பிரச்சினைகளை அதிகப்படுத்துகின்றன. அவர்களால் ஒரு நெருக்கடியையும் தீர்க்க முடியாது. அவர்களால் அதை மோசமாக்க மட்டுமே முடியும்’, என்று அவர் வாதிட்டார், ‘நம்பகமான ஜனநாயக நிறுவனங்களையும் சட்டத்தின் ஆட்சியையும் நிறுவ அனைத்து நாடுகளும் விரைவாக நகர வேண்டும்’ என்று அவர் வேண்டுகோள் விடுத்தார்.

ஆப்பிரிக்காவில் ‘சதிகள் திரும்புதல்’ மற்றும் ‘ஜனநாயகத்தின் பின்னடைவு’ பற்றிய இந்த விவரிப்பு, மேலோட்டமான மற்




றும் வரலாற்று சூழல்மயமாக்கல் இல்லாத தரவுகளின் அடிப்படையில் அமைந்திருப்பதால் அது குறைபாடுடையது. இது சில முற்கற்பிதங்களால் வழிநடத்தப்படுகிறது:

- இராணுவத் தாக்குதலுக்கான போக்கு அதிகரித்து வருகிறது.
- இந்த சதிகள் கண்டத்தின் பல்வேறு பகுதிகளை கண்மூடித்தனமாக பாதிக்கின்றன.
- அவை பெரும்பாலும் ஆப்பிரிக்க நாடுகளுக்கு உள்ளகக் காரணங்களால் ஏற்படுகின்றன.
- இந்த அரசியலமைப்பிற்கு முரணான மாற்றங்கள் அவை நிகழ்ந்த நாடுகளில் ‘ஜனநாயகத்திற்கு’ தடையாக இருக்கும்.

நைஜர் (ஜூலை 2023) மற்றும் காபோன் (ஓகஸ்ட் 2023) ஆட்சிக் கவிழ்ப்புகளுக்குப் பிறகு ஆய்வாளர்கள் ஒரு விடயத்தை உணர்ந்துள்ளனர். 2020-ம் ஆண்டு முதல் நடைபெறும் ஆட்சிமாற்றங்கள் அதன் பிரெஞ்சு மொழி பேசும் பகுதிகளைப் பற்றியது. அவற்றின் உடனடிக் காரணங்கள் வேறுபட்டிருந்தாலும், ஆட்சிக்கவிழ்ப்புகள் ஆப்பிரிக்காவில் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் நெருக்கடியை முதன்மையாகவும் முக்கியமாகவும் சமிக்ஞை செய்கின்றன. ‘மோசமான நிர்வாகம், அதிகாரப்

போக்கு', மோசமான பொருளாதாரச் செயல்பாடுகள் மற்றும் பலவற்றின் அடிப்படையில் மிகவும் பரந்த விளக்கங்கள் பரவலாக இருப்பதால், அரசியல் ரீதியாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்த வளர்ச்சி குறித்துப் பலரும் கவனம் குவிக்கத் தவறிவிட்டனர்.

1960-களின் தொடக்கத்தில் சுதந்திரம் பெற்றதில் இருந்து, பிரான்ஸ் தனக்குத்தானே ஓர் 'ஏகாதிபத்திய வாக்குரிமை' உண்டு என்று கூறிக்கொண்டது. ஆப்பிரிக்க மக்கள் என்ன விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், அதன் முன்னாள் காலனிகளின் உள் விவகாரங்களில் தலையிடும் உரிமை - அவர்களின் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பது உட்பட- தனக்குண்டு என இன்றளவும் பிரான்ஸ் நினைக்கிறது. சர்வஜன வாக்குரிமை தேர்தல் மூலம் வெளிப்படுத்த வேண்டும். இந்தக் காலகட்டம் முழுவதும், முன்னாள் காலனியம் தனக்கு விசுவாசமான அரச தலைவர்களை நிறுவவும் பாதுகாக்கவும் மற்றும் தன்னால் கட்டுப்படுத்த முடியாதவர்களைத் தூக்கி எறியவும் அல்லது சீர்குலைக்கவும் முயன்றது. சமீபத்திய ஆண்டுகளில், ஆப்பிரிக்க மக்களின் கிளர்ச்சியை எதிர்கொண்டுள்ள பிரான்ஸால் அதன் நவ-காலனித்துவ சாம்ராஜ்யத்திற்குள் ஒழுங்கைப் பராமரிக்க முடியவில்லை, இதன் விளைவானது சில நாடுகள், குறுகிய காலத்திற்குள், இராணுவத் தலைவர்களின் அதிகாரத்திற்கு வருவதைத் துரிதப்படுத்தியுள்ளது. பாரிஸின் பிடியில் இருந்து தங்களை விடுவித்துக் கொள்ள இந்நாடுகள் நீண்டகாலமாகப் போராடியுள்ளன. முன்னதாக, பிரெஞ்சு நவ-காலனித்துவம், பொதுவாக Françafrique என குறிப்பிடப்படுகிறது. இது தேசியவாத அல்லது பான்-ஆப்பிரிக்க தலைவர்களிடமிருந்து தனிமைப்படுத்தப்பட்ட சவால்களை எதிர்கொண்டாலும் பிரான்ஸால் அதன் கட்டுப்பாட்டைத் தக்கவைக்க இயலுமானது. வரலாற்று ரீதியாகப் பார்த்தால், பிரான்ஸ் ஒப்பீட்டளவில் வலுவான மக்கள் ஆதரவுடன் ஒருங்கிணைந்த ஆப்பிரிக்கத் தலைவர்களின் கூட்டு மற்றும் நீடித்த எதிர்ப்பால் எதிர்கொள்ளப்படுவது இதுவே முதல் முறை.

முன்னாள் பிரெஞ்சுக்காலனிகளில் சமீபத்திய ஆட்சிக்கவிழ்ப்பு முந்தைய தசாப்தங்களில் இருந்து வேறுபட்டது, அதே போல் அவை விடுதலை அபிலாஷைகளின் அடிப்படையில் ஒருவருக்கொருவர் வேறுபடுகின்றன. அரசியல் முட்டுக்கட்டைக்கு ஒரு தீர்வாகத் தோன்றியதால், அவர்கள் மிகவும் பிரபலமாகவும் இருந்தனர். ஜனநாயகப் பின்னடைவின் வெளிப்பாட்டிற்குப் பதிலாக, அவை மக்கள் கோரிக்கைகளுக்கும் ஆட்சியாளர்களின் பதில்களுக்கும் இடையே அதிகரித்து வரும் இடை வெளியின் அறிகுறியாகவோ அல்லது அதன் விளைவாகவோ பார்க்கப்பட வேண்டும். சில சதிகள் புதிய காலனித்துவ கட்டமைப்பிற்குள் புதிய வாழ்க்கையை சுவாசிக்க உதவியது, மற்றவை அதற்கு முற்றுப்புள்ளி வைப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தன.

பிரெஞ்சு மொழி பேசும் ஆப்பிரிக்க நாடுகள், 'வரலாற்று பிராங்க் மண்டலத்தை' சேர்ந்தவை, 16 ஆகும். 1945-ல் உருவாக்கப்பட்ட காலனித்துவ நாணயமான CFA பிராங்கை இன்னும் பயன்படுத்தும் அல்லது பயன்படுத்திய நாடுகள் இவை. இவை இன்னும் பிரெஞ்சு கருவூலத்தின் சட்டப்பூர்வ வழிகாட்டுதலின் கீழ் உள்ளன. மேற்கு ஆபிரிக்காவில் உள்ள ஒன்பது நாடுகளான பெனின், புர்கினா பாசோ, கோட் டி ஐவரி, கினியா, மாலி, மொரிட்டானியா, நைஜர், செனகல் மற்றும் டோகோ, மத்திய ஆப்பிரிக்காவிலுள்ள ஐந்து நாடுகளான கேமரூன், மத்திய ஆப்பிரிக்க குடியரசு, சாட், காபோன் மற்றும் காங்கோ குடியரசு மற்றும் இந்தியப் பெருங்கடலிலுள்ள மடகாஸ்கர், கொமோரோஸ் ஆகிய இரண்டும் உள்ளன. பிரெஞ்சு மொழி பேசும் ஆபிரிக்காவில் காலனித்துவ நீக்கம் செயல்முறையின் ஒருமையையும், சுதந்திரத்திற்குப் பிந்தைய காலத்தில் பிரான்ஸ் தனது ஏகாதிபத்திய வாக்குரிமையை நிரந்தரமாக வலியுறுத்துவதையும் நினைவுபடுத்துவது முக்கியம். ஆபிரிக்க மக்களின், குறிப்பாக இளைஞர்களின் கிளர்ச்சி, பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தை நெருக்கடியான காலகட்டத்திற்குள் தள்ளியது, குறிப்பாக Françafriqueக்கு விரோதமான தலைவர்களால் நிகழ்த்தப்பட்ட சதிகளால் வெளிப்படுத்தப்பட்டது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

1940-களின் நடுப்பகுதியிலிருந்து 1970-களின் இறுதி வரை ஆப்பிரிக்கா தொடர்பான பிரெஞ்சு-கோலிஸ்ட் கொள்கையைப் புரிந்து கொள்ள உதவும் கேள்வி என்னவென்றால், கிழக்கு-மேற்கு புவிசார் அரசியல் போட்டியால் கட்டமைக்கப்பட்ட உலகில், பிரான்ஸ் எவ்வாறு தன்னாட்சி சக்தியாக இருக்க முடியும் என்பதுதான். அதன் போட்டியாளர்களுடன் ஒப்பிடுகையில், பிரான்ஸுக்கு ஒரு குறிப்பிட்ட மேநிலை இல்லை. இது அமெரிக்கா அல்லது சோவியத் யூனியன் போன்ற இராணுவ சக்தியாகவோ அல்லது இங்கிலாந்து போன்ற உலகளாவிய நிதி சக்தியாகவோ இல்லை சோவியத் ஒன்றியம் அல்லது அமெரிக்காவுடன் தொழில்ரீதியாகப் போட்டியிட முடியவில்லை அல்லது விரைவான பொருளாதார மறுசீரமைப்புக்கு உட்பட்ட மேற்கு ஜெர்மனி மற்றும் ஜப்பான் போன்ற அதன் நட்பு நாடுகளுடன் போட்டியிட முடியவில்லை. ஜெனரல் டி கோலைப் பொறுத்தவரை, காலனித்துவப் பேரரசும் அதன் வளங்களும் பிரான்சின் மூலோபாய நெம்புகோலாகச் செயல்பட வேண்டும். இதையே இன்றுவரை பிரான்ஸ் பற்றியுள்ளது.

1960-களில் பிரெஞ்சுக் காலனிகள் விடுதலையடைந்த போதும் கூட 'பிராங்கோ-ஆப்பிரிக்க சமூகம்' என்ற அடையாளத்தை வழங்குவதன் மூலம் பண்பாட்டுரீதியான ஆதிக்கத்தை பிரான்ஸ் தக்கவைத்தது. அதுவேளை பிரான்ஸின் முன்னாள் காலனிகளின் வளங்கள், அவற்றின் பணவியல் மற்றும் நிதி அமைப்புகள் மற்றும் அவர்களின் இராஜதந்திரக் கொள்கைகள் ஆகியவற்றின் மீதான கட்டுப்பாடு ஜெனரல் டி கோலின் பிரமாண்டக் கொள்கையின் தூண்களில் ஒன்றாக இருந்தது.

இதற்கு வாய்ப்பாக சுதந்திரமடைந்த முன்னாள் காலனிகளுடனான 'ஒத்துழைப்பு ஒப்பந்தங்கள்' உருவாக்கப்பட்டன. இவை பிரான்ஸால் தெரியப்பட்ட ஆபிரிக்க அரசியல் தலைவர்களால் கையெழுத்திடப்பட்டன. சுதந்திரம் வழங்கப்பட்ட முன்னாள் காலனிகளில் தமக்கு வாய்ப்பானவர்களை ஆட்சியில் அமர்த்துவதை பிரான்ஸ் பலவழிகளில் உறுதி செய்தது. முற்போக்கான அரசியல் இயக்கங்கள், கம்யூனிஸ்ட் கட்சிகள் தடை செய்யப்பட்டன, அல்லது அவர்கள் மீது முறையான அடக்குமுறை ஏவப்பட்டது. உதாரணமாக: கேமரூனில் சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுத்த முற்போக்கான கட்சியானது, காலனித்துவ நிர்வாகத்தால் 1955-ல் கலைக்கப்பட்டது. அதன் முக்கிய தலைவர்கள் ஒவ்வொருவராகப் படுகொலை செய்யப்பட்டனர். கேமரூனில் உள்ள பிரெஞ்சு குடியரசின்

முன்னாள் உயர் ஸ்தானிகர், பியர் மெஸ்மர், ‘அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் மிகவும் உறுதிப்பாட்டையும் முழுமையான சுதந்திரத்தைக் கோருபவர்களை அகற்றிய பின்னர், குறைந்தபட்சம் கோருபவர்களுக்கு பிரான்ஸ் சுதந்திரத்தை வழங்கியது’ என்று ஒப்புக்கொண்டார்.

சுதந்திரத்தின் போது, கினியாவில் செகோ டூரே மற்றும் டோகோவில் சில்வானஸ் ஒலிம்பியோவைத் தவிர, சஹாராவுக்கு தெற்கே உள்ள பிரெஞ்சு பேரரசின் மற்ற அனைத்து பகுதிகளும் விசுவாசமான பிரெஞ்சு கூட்டாளிகளால் வழிநடத்தப்பட்டன. ஆபிரிக்காவில் 1960-ல் 30,000 ஆக இருந்த இராணுவத் துருப்புக்கள் 1980-களில் 15,000 ஆகக் குறைக்கப்பட்ட போதிலும், பிரான்ஸ் தனது ஏகாதிபத்திய வாக்குரிமையை இடைவிடாமல் பயன்படுத்தியது. அதன் முன்னாள் காலனித்துவப் பேரரசின் பிரதேசங்களில் யார் ஆட்சி செய்ய வேண்டும் என்பதைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை இன்றும் தான் கொண்டிருக்கிறது என்பதே பிரான்ஸின் நிலைப்பாடாகும். 1960 மற்றும் 1989-க்கு இடையில், மேற்கு நாடுகளின் செல்வாக்கு மண்டலமாக, 16 ஆபிரிக்க நாடுகளில் கிட்டத்தட்ட 40 சந்தர்ப்பங்களில் பிரான்ஸ் இராணுவ ரீதியாக தலையிட்டது, அதன் ஆதரவாளர்களை அதிகாரத்திற்கு மீட்டெடுக்கவும், விரும்பத்தகாத தலைவர்களை அகற்றவும், பொதுவாக, அதன் நலன்களைப் பாதுகாக்கவும் தொடர்ச்சியாகத் தலையிட்டது.

கெடுபிடிப்போரின் முடிவும் பலகட்சித் தேர்தல் முறையின் அறிமுகமும், ஆபிரிக்க விவகாரங்களில் பிரான்சின் தலையீட்டு நடைமுறைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கவில்லை. பல கட்சித் தேர்தல்களின் வழக்கமான அமைப்பு எந்த கணிசமான அர்த்தத்திலும் Françafrique ஒழுங்கை அசைக்கவில்லை. மாறாக, அவர்கள் நீண்ட ஆயுளுக்கு அல்லது தங்கள் மக்களின் நியாயமான எதிர்பார்ப்புகளைக் காட்டிலும் தங்கள் சொந்த நலன்கள் மற்றும் முன்னாள் காலனியாதிக்கவாதியின் நலன்களில் அதிக அக்கறை கொண்ட தலைவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு உதவினார்கள். இன்னொரு வகையில் சொல்வதானால், இந்தத் தலைவர்கள் எந்த சுயாட்சியும் இல்லாத கைப்பாவைகளாக இருந்தார்கள் அல்லது அவர்கள் பொம்மைகளாக இருந்தார்கள். புதிய காலனித்துவ நிலைமைக்கு இடையூறு ஏற்படுவதை அவர்கள் சாதாரணமாகத் தவிர்த்தனர், ஏனெனில் இது அவர்களின் சொந்த ஆட்சிக்கு இடையூறு விளைவிக்கும். அவர்கள் தங்கள் பொருளாதார மற்றும் இராஜதந்திர கூட்டாண்மைகளை பன்முகப்படுத்தினாலும், அவர்கள் இன்னும் பிரெஞ்சு நலன்களைப் பூர்த்தி செய்பவர்களாகவே இருந்தனர்.

## பிரெஞ்சு காலனியாதிக்கதிற்கெதிரான புதிய எழுச்சி:

2020-முதல் வரலாற்று பிராங்க் மண்டலத்தில் நடந்த ஆட்சிக் கவிழ்ப்புகள் அனைத்தும் ஒரே தர்க்கத்தைப் பின்பற்றவில்லை. இதனால்தான் அவை ‘சர்வதேச சமூகம்’ எனப்படும் ஆப்பிரிக்க ஒன்றியம், எக்கோவாஸ் போன்றவற்றிலிருந்து மாறுபட்ட பதில்களை எதிர்கொண்டன. ‘சர்வதேச சமூகம்’, இதுவரை சாட் மற்றும் காபோனில் நடைபெற்ற ஆட்சிக்கவிழ்ப்பைக் கடுமையாக கண்டிக்கவில்லை. புதிய ஆட்சியாளர்களோ, அவர்களது பரிவாரங்களோ சர்வதேச சமூகத்திற்கு எதிராக இல்லை. இதனால் இந்நாடுகளுக்கு எதிராக அவர்கள் சாதகமற்ற ஊடகப் பிரச்சாரத்தையோ அல்லது பொருளாதார மற்றும் நிதித் தடைகளையோ நாடவில்லை. மாறாக, இந்த இரு நாடுகளிலும் அரசியலில் சட்டப்பூர்வ அங்கீகாரத்தை வழங்குவதன் மூலம் அரசியலமைப்பிற்கு முரணான மாற்றங்களை இயல்பாக்குவது அவர்களின் அணுகுமுறையாக இருந்தது.

இதற்கு நேர்மாறாக, நைஜரின் ஜனாதிபதி மொஹமட் பாஸூம் தூக்கியெறியப்பட்டபோது, அவரை மீண்டும் நிறுவ பிரெஞ்சு ஜனாதிபதி மக்ரோன் கடுமையாக முயன்றார். அவர் நைஜீரிய போலா டினுபுவின் தலைமையின் கீழ் எக்கோவாஸின் ஆதரவை நாடினார். நிலத்தால் சூழப்பட்ட நைஜர் மற்றும் அதன் புதிய ஆட்சியாளர்களுக்கு எதிராக எக்கோ



வாஸ் கடுமையான பொருளாதார மற்றும் நிதித் தடைகளை விதித்தது. அதே நேரத்தில், வெளிநாட்டு இராணுவத் தலையீட்டின் அச்சுறுத்தலின் கீழ், பாஸூமை விடுவித்து அவரை மீண்டும் பணியில் அமர்த்துவதற்கான இறுதி எச்சரிக்கையை இராணுவத் தலைவர்களுக்கு வழங்கியது. செனகல், கோட் டி ஐவரி மற்றும் பெனின் ஜனாதிபதிகள் நைஜருக்கு படைகளை அனுப்பத் தயாராக இருப்பதாக அறிவித்தனர். இதற்குப் பதிலடியாக, மாலி, புர்கினா பாசோ மற்றும் கினியாவில் உள்ள இராணுவ ஆட்சிகள் நைஜருக்கு எதிரான எந்தவொரு இராணுவத் தலையீடும் தங்கள் கூட்டுப் பதிலடியை விளைவிக்கும் என்று அறிவித்து, நைஜருடன் தங்கள் ஒற்றுமையை வெளிப்படுத்தின. இது பிரான்ஸ் விரும்பிய தலையீட்டைச் சாத்தியமற்றதாக்கியது. பிரான்ஸின் இந்த முயற்சியை அல்ஜீரியாவைப் போலவே ஆப்பிரிக்க மக்களும் பெருமளவில் எதிர்த்தனர். நைஜீரிய செனட்டும் அதன் ஜனாதிபதியின் போர் நோக்கங்களை எதிர்த்தது. அமெரிக்காவும் பிரான்சின் போர்வெறித் தர்க்கத்தைப் பின்பற்றவில்லை, இராஜதந்திர வழி முறைகள் மூலம் நைஜரில் தனது இராணுவ இருப்பையும் முதலீடுகளையும் பாதுகாக்க முடியும் என்று அது கணக்கிட்டது.

பிரான்ஸ் மற்றும் அதன் ஆபிரிக்க நட்பு நாடுகளின் தோல்வி, மாலி, புர்கினா பாசோ மற்றும் நைஜர் தலைவர்களுக்கு அவர்களின் எதிர்காலம் இப்போது இணைக்கப்பட்டுள்ளது என்பதைக் காட்டியது. பொருளாதாரத் தடைகள், ஜிகாதிசம் மற்றும் பிரிவினைவாதக் குழுக்களுக்கு எதிரான போராட்டத்தை

ஆதரிப்பதை விட நைஜரில் ராணுவரீதியில் தலையீடு செய்வதில் அதிக ஆர்வம் காட்டிய பல அண்டை நாடுகளின் விரோதப் போக்கு, மேற்குலகின் ஆயுதங்களை விற்கத் தயக்கம் போன்றவற்றால், மூன்று நாடுகளும் ரஷ்யாவை நெருங்கிவிட்டன. இது அவர்களுக்கு ஆயுதங்கள், உபகரணங்கள் மற்றும் இராணுவ பயிற்றுநர்களை வழங்குகிறது. இந்தப் பின்புலத்திலேயே எக்கோவாஸிலிருந்து மூன்று நாடுகளும் விலகுவதாக அறிவித்ததை நோக்க வேண்டும். இந்த முடிவு அவர்கள் தாங்கிய பொருளாதாரத் தடைகளுக்கு எதிரான ஒரு எதிர்வினையாகும், ஆனால் வழக்கமான தேர்தல்களை நடத்துவதற்கும், குடிமக்கள் ஆட்சிக்கு மாறுவதற்கு வசதியாக பிராந்திய அமைப்பிடமிருந்து வரும் எந்த அழுத்தத்திற்கும் எதிராகத் தங்களைக் காத்துக் கொள்ளும் ஒரு வழியாகும்.

பிரெஞ்சு துருப்புகளைத் தங்கள் பிராந்தியங்களில் இருந்து வெளியேற்றி, பிரெஞ்சு நிறுவனங்களுக்கான உரிமங்களை நிறுத்தி, மூன்று நாடுகளும் ஒரு பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தம், பொருளாதார மற்றும் பண ஒருங்கிணைப்பு கட்டமைப்பை உருவாக்கியுள்ளன. இந்த நாடுகள் தங்கள் சுரங்க ஒப்பந்தங்களை மறுபரிசீலனை செய்துள்ளன. சில பிரெஞ்சு நிறுவனங்களின் இயக்க உரிமங்களை நிறுத்தியுள்ளன. 50 ஆண்டுகளுக்கும் மேலாக நைஜரின் யுரேனியத்தை சுரண்டிய பிரெஞ்சு அரசினது பெரும்பான்மையான கட்டுப்பாட்டில் உள்ள பிரெஞ்சு நிறுவனத்திற்கும் இதுவே நடந்துள்ளது. நைஜரின் புதிய ஆட்சியாளர்கள் இன்னும் எதிர்பாராத விதமாக, அமெரிக்க துருப்புக்களைத் தங்கள் நாட்டை விட்டு வெளியேறச் சொன்னார்கள்.

சஹேல் நாடுகளின் கூட்டணியின் வருகை, தேசபக்தி, ஃபான்-ஆப்பிரிக்கச் சிந்தனை ஆகியவற்றைக் கொண்ட இராணுவத் தலைவர்களின் உறுதியின் விளைவாக, வரலாற்று பிராங்க் மண்டலத்திற்கும் சந்தேகத்திற்கு இடமின்றி கண்டத்தின் மற்ற பகுதிகளுக்கும் முன்னோடியான மாற்றங்களைக் குறிக்கிறது. நீண்ட கால நவ-காலனித்துவ ஆதிக்கத்தில் இருந்து சஹேல் மக்களை வெளியேற்றவும், அவர்களின் கூட்டு இறையாண்மையை வலுப்படுத்தவும், பான்-ஆப்பிரிக்க ஒருங்கிணைப்பு மற்றும் ஒற்றுமைக்கு புதிய வாழ்க்கையை சுவாசிக்கவும் இது ஆற்றலைக் கொண்டுள்ளது. ஆனால் இந்தத் தேசிய விடுதலைத் திட்டத்திற்கு சவால்களும் முரண்பாடுகளும் இல்லாமல் இல்லை.

ஏகாதிபத்திய நாடுகள் மற்றும் அவற்றின் உள்ளூர் நட்பு நாடுகளின் நிரந்தர அழுத்தம் மற்றும் ஸ்திரமின்மை நடவடிக்கைகளை எதிர்கொண்டு ஏகாதிபத்திய எதிர்ப்பு அல்லது சோசலிச அபிலாஷைகளைக் கொண்ட ஆட்சிகள் அதிக சர்வாதிகாரமாக மாற முனைகின்றன என்பது அடிக்கடி கவனிக்கப்படுகிறது. அதேவேளை ஏகாதிபத்திய நாடுகள், இந்த நாடுகளில் இருந்து தங்கள் அவமானகரமான விலகலை மறுபரிசீலனை செய்து, அதைத் தூக்கி எறிய கடுமையாக முயற்சிக்கும்.

## முடிப்பு:

ஆபிரிக்க சுதந்திரத்திற்கான இரண்டாவது போராட்டம் சஹேலில் தொடங்கியுள்ளது என்பதை பல ஆபிரிக்கத் தலைவர்கள் தெரிவிக்கிறார்கள். ‘வெள்ளை மக்கள் வருவதற்கு முன்பு, ஆப்பிரிக்காவில் எங்களுக்கு எல்லைகள் இல்லை. அவை காலனித்துவவாதிகளால் வரையப்பட்டவை. இந்த எல்லைகளை நாம் அழித்துவிட்டு, நமது சுதந்திரத்தை மீட்டெடுக்க வேண்டும்’ என்று மேற்கு ஆப்பிரிக்க மக்கள் அமைப்பின் நைஜீரியத் தலைவர் அபூபக்கர் அலாசானே, சஹேல் மக்களுடன் ஒற்றுமைக்கான மாநாட்டில் உரையாற்றும்போது குறிப்பிட்டார். அவர், அமெரிக்காவில் 50 மாநிலங்கள் ஒன்றுபட்டுள்ளன. ஏன் ஆப்பிரிக்காவால் முடியாது’ என்று கேட்டார். ‘பான்-ஆப்பிரிக்கத் தலைவரும் சுதந்திர கானாவின் முதல் ஜனாதிபதியுமான குவாமே நக்ருமா, ஆப்பிரிக்கா ஒன்றுபட வேண்டும் அல்லது அழிந்து போக வேண்டும் என்று எச்சரித்திருந்தார். பிரிந்திருந்த ஆப்பிரிக்கா, அதன் விளைவாகக் கொல்லப்பட்டது’ என்று தெரிவித்தார்.

இன்று, மாலி, புர்கினா பாசோ மற்றும் நைஜர் ஆகிய நாடுகள், ஒரு புதிய வாழ்க்கையை மற்றும் ஒற்றுமைக்கான நம்பிக்கையை கண்டத்திற்கு வழங்கியுள்ளது, இது அதன் முன்னாள் காலனித்துவ பிரான்ஸை தங்கள் நாடுகளில் இருந்து தனது படைகளை திரும்பப் பெற கட்டாயப்படுத்தியதும், பின்னர் கூட்டணியை உருவாக்கியதும் நம்பிக்கை தருவதாகவுள்ளது. ‘1960-களில் நாங்கள் பிரெஞ்சு காலனித்துவத்திலிருந்து சுதந்திரம் அடைந்தோம் என்று கூறப்பட்டபோது நாங்கள் ஏமாற்றப்பட்டோம். அதன் காலனித்துவ உடன்படிக்கையின் மூலம், பிரான்ஸ் தனது முறையான சுதந்திரத்திற்குப் பிறகும், அதன் ஆப்பிரிக்க காலனிகளின் இயற்கை வளங்களைத் தொடர்ந்து கட்டுப்பாட்டில் வைத்திருந்தது, உள்கட்டமைப்பு, கல்வி மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான திறனைக் கொண்டிருக்கவில்லை. இன்று இம்மூன்று நாடுகளுக்கிடையேயான 2000 கிலோமீட்டருக்கும் அதிகமான எல்லைகள் அழிக்கப்பட்டுள்ளன. பாஸ்போர்ட் அல்லது விசா தேவையில்லாமல் நாம் இப்போது இந்த நாடுகளுக்கு இடையே சுதந்திரமாக செல்ல முடியும். இது புதியது. இந்தப் புதிய கூட்டணியானது, ஆப்பிரிக்காவின் சுதந்திரத்திற்கான இரண்டாவது போராட்டத்தைத் தொடங்கிவைத்துள்ளது. இப்போது நாம் போராடுவது ‘இரண்டாவது உண்மையான சுதந்திரத்திற்காகவே’ என்று ஐவரி கோஸ்ட் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரான அகி எக்கிசாய் இம்மாநாட்டில் தெரிவித்தார்.

இம்மூன்று சஹேல் நாடுகளும் இணைந்து தொடங்கியிருப்பது புதியதொரு முயற்சி. இதற்கு நீண்டகால மக்கள் ஒத்துழைப்பு அவசியம். ஆட்சிக்கவிழ்ப்புகளில் இருந்து தற்காத்துக் கொள்ளவும், ஆட்சியை முன்னகர்த்தவும் அவை அவசியமாகின்றன. பிரெஞ்சுக் நவ-காலனித்துவம் மக்கள் இயக்கங்களையும் முற்போக்கு சக்திகளையும் திட்டமிட்டு அழித்தமையால் மக்கள் எதிர்ப்பு இப்போது இராணுவ ஆட்சிக்கவிழ்ப்பின் வழி வெளியாகிறது. ஆனால் தனித்த இராணுவத்தால் ஆட்சியைத் தக்க வைக்க இயலாது. எனவே மக்கள் ஆதரவும் மக்கள் அமைப்புகளைக் கட்டுவதும் அவசியம். ஆபிரிக்கா தனது இரண்டாவது சுதந்திரத்தைப் பெறுகிறதா என்ற வினாவுக்குக் காலம்
பதில் சொல்லும்.



meenilankco@thaiveedu.com




அமெரிக்கா நவ தாரளவாதத்திலிருந்து நவதாராளவாத தேசியத்தை நோக்கி நகர்ந்து செல்கிறது. நவ தாராளவாத தேசியம் அமெரிக்காவிற்குச் சாத்தியமானதா அல்லது டொனால்ட் ட்ரம்பின் அரசினால் சாத்தியப்படுத்தக் கூடியதா ? என்ற கேள்வி பலராலும் எழுப்பப்படுகிறது. அமெரிக்காவின் புதிய தேசியத்தை உருவாக்குவதற்கு டொனால்ட் ட்ரம்ப் பல விதத்தில் முயற்சிக்கிறார். அவரது தேர்தல் பிரசாரத்தில் முன்வைக்கப்பட்ட 'Make America Great Again'



(MAGA), மற்றும் 'அமெரிக்காவிற்கே முன்னுரிமை', 'அமெரிக்கா முதன்மையானது' போன்றவற்றைச் சாத்தியப்படுத்தப் பதவியேற்ற நாட்களிலிருந்து பல வழிகளில் செயல்படுத்த முயற்சிக்கிறார்.

முதலாவதாக இவர் உள்ளூரில் மாற்றங்களை ஏற்படுத்த முயற்சிக்கிறார். இரண்டாவதாக, சர்வதேசரீதியில் தனக்குச் சாதகமாகக் காய்களை நகர்த்தும் முயற்சிகளை முன்னெடுக்கிறார்.

பைடனின் ஆட்சிக் காலத்தில் இரண்டு போர்கள் ஆரம்பமாகின. இவ்விரண்டும் டொனால்ட் ட்ரம்ப் ஆட்சிக்கு வந்த போது முடிவடையும் தறுவாயை எட்டிவிடும் நிலையிலிருந்தன. இது டொனால்ட் ட்ரம்பிற்குச் சாதகமாகவே அமைந்தது. இவ்விரண்டு போர்களிலும் அமெரிக்கா நேரடியாகப் பங்குபற்றாவிட்டாலும் இராணுவ உதவிகளைச் செய்துள்ளது. ஹமாஸ்-இஸ்ரேல் யுத்தத்தில் அமெரிக்க இராணுவக் கப்பல்கள் மத்திய தரைக் கடல் பிரதேசத்தில் தங்கியிருந்தன. இஸ்ரேலுக்குப் பல வழிகளிலும் அமெரிக்கா உதவியிருந்தது. காசா தரைமட்டமாக்கப்பட்டுவிட்டது. அங்கிருந்த பல்கலைக்கழகங்கள் அழிக்கப்பட்டன. வைத்தயசாலைகள் குண்டு வீசப்பட்டுச் சேதப்படுத்தப்பட்டுள்ளன. எஞ்சியிருப்பவை கற்களும் உடல்களுமாகும். இப்பொழுது அமெரிக்கா அப்பிரதேசத்துக்கு மீண்டும் சென்று வாழமுற்படும் பாலஸ்தீனியர்களுக்கு, காசா வாசிகளுக்கு ஓர் அதிர்ச்சியான செய்தியை வெளியிட்டுள்ளது. காசா வாசிகளுக்கு மட்டுமல்ல முழு உலகத்துக்குமே ஓர் அதிர்ச்சியான செய்தியாக அது அமைந்துள்ளது. காசாவிலிருந்து பாலஸ்தீனியர்களை வெளியேறுமாறும், அங்கு ஒரு புதிய காசாவை அமெரிக்கா அமைக்க விரும்புவதாகவும் டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார். இங்கு 'விரும்புதல்' என்பது ஒரு மென்மையான செய்தியல்ல. அது ஓர் ஆக்கிரமிப்புக்கான முதல் கூவலாகும். பாலஸ்தீனியர்களின் விருப்புக்கு இங்கு இடமில்லை. பாலஸ்தீன எல்லை நாடுகளாகவுள்ள ஜோர்டான், எகிப்து, லெபனான் போன்ற நாடுகளின் விருப்பமும் கேட்கப்படவில்லை. பாலஸ்தீனியப் பிரச்சினையில் நேரடியாகவும், மறைமுகமாகவும் பங்குபற்றிய மத்திய கிழக்கு நாடுகளின் கருத்துகள் கூடக் கேட்கப்படவில்லை. வெளியேற்றப்படும் காசா வாசிகள் அருகில் உள்ள நாடுகளான ஜோர்டான், எகிப்து போன்ற நாடுகளில் தற்காலிகமாகக் குடியேற்றப்படுவார்கள் என்று அமெரிக்கா தனது விருப்பத்தைத் தெரிவித்துள்ளது. ஜோர்டான், எகிப்து ஆகிய இரண்டு நாடுகளும் தங்களது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன. ஆனால் ஜோர்டான், அரசரால் ஆட்சி செய்யப்படும் நாடு. அதனால் அச்சப்படாமல் ஜோர்டான் அரசர் இரண்டாம் அப்துல்லா அமெரிக்காவுக்கு எதிராகக் கருத்துக் கூறலாம். ஆனால், எகிப்தின் நிலை அப்படியல்ல. அமெரிக்காவை எதிர்த்தால் ஆட்சி மாற்றம் செய்துவிடுவார்கள் என்ற அச்சம் எகிப்து ஜனாதிபதிக்கு உள்ளது. அதனை விடவும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பவற்றில் எகிப்து தங்கி

யிருக்கும் நிலையுமுள்ளது. இவ்விரு நிறுவனங்களும் அமெரிக்காவின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருக்கின்றன என்பது எகிப்துக்கு கூடுதல் அச்சம்.

காசாவிலிருந்து பாலஸ்தீனியர்களை வெளியேற்றுவது போல் மிக மோசமான, மிலேச்சத்தனமான செயல் வேறெதுவுமில்லை. உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி டொனால்ட் ட்ரம்ப் இதனை செயற்படுத்த முயற்சிப்பார். இஸ்ரேல் பிரதமர் அமெரிக்காவுக்கு எதிராகக் கருத்துக்கூறும் இடத்தில் இல்லை. அவர் ஏற்கனவே ஊழல் வழக்குகளில் சிக்கியுள்ள நிலைமை, அமெரிக்கா அவரை இலகுவாகக் கையாளும் நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. அமெரிக்காவை எதிர்த்தால் தங்களது இருப்பு கேள்விக்குறியாகிவிடும் என்பது அவருக்கு தெரிந்திருக்கும் நிலையில், ஹமாஸ் அழிந்தாலும் ஒரு புதிய தலையிடி அமெரிக்க வடிவத்தில் உட் புகுந்துள்ளது என்பதையும் அவர் புரிந்து கொள்ளாமல் இல்லை.

உக்ரேன்-ரஷ்யப் போர் ஒரு புதிய வடிவத்தை எடுத்துள்ள நிலையில் பைடன் அரசு உக்ரேனுக்கு இராணுவ உதவியாக சுமார் 350 பில்லியன் டொலர்களை தொடர்ச்சியாக வழங்கியதோடு, வேறு பல வழிகளிலும் உக்ரேனுக்கு உதவி செய்துள்ளது. அப்படியிருந்தபோதும் உக்ரேனால் ரஷ்யாவை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை. ரஷ்யாவினுள் நுளைந்த உக்ரேன் சில பகுதிகளைப் போரின் இறுதியிலேயே கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்திருந்தது. இந்நிலையில் டெனால்ட் ட்ரம்ப் இந்தப் போரை முடிவிற்கு கொண்டுவர விரும்புகிறார். இதனை டொனால்ட் ட்ரம்ப் தனது தேர்தல் பிரச்சாரத்தின் போதும் தெரிவித்திருந்தார். அமெரிக்காவில் அரசாங்கம் மாறிய பின்னர் உக்ரேன் மீதான அவர்களது பார்வையும் மாறிவிட்டது. ஜெலன்ஸ்கி இப்பொழுது சர்வாதிகாரியாக அமெரிக்காவின் கண்களில் தெரிகிறார். அமெரிக்காவின் பாதுகாப்பு அமைச்சர் பீற் ஹெய்க்செத் (Pete Hegseth) ரஷ்ய ஆக்கிரமிப்புக்கு முன்பான உக்ரேன் கொண்டிருந்த பகுதிகள் மீள உக்ரேனுக்குக் கிடைக்காது. ரஷ்யாவினால் பிடிக்கப்பட்ட அல்லது ஆக்கிரமிக்கப்பட்ட இப்பகுதிகள் ரஷ்யாவின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே இருக்கும் எனத் தெளிவாகத் தெரிவித்துள்ளார். அது மட்டுமல்ல உக்ரேன் ஒரு பொழுதும் நேட்டோவில் சேரமுடியாது என்றும் தெரிவித்திருந்தார். இது உக்ரேனுக்குச் சாதகமானதல்ல. மாறாக ரஷ்யாவிற்குச் சாதகமானது. இதில் மூன்று விடயங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஒன்று, அண்மையில் சவூதி அரேபியாவில் நடந்து முடிந்த ரஷ்ய அமெரிக்க அதிகாரிகளின் சந்திப்பு ரஷ்யாவிற்குச் சாதகமாகவே முடிந்துள்ளது. புட்டின் எதிர்பார்த்த விடயங்கள் தானாகவே நடைபெறுகின்றன. ரஷ்யா ஆக்கிரமித்த பகுதிகள், கிறீமியா உற்பட ரஷ்யாவிற்கேயுரியதாகிறது. இரண்டாவது, நேட்டோவில் உக்ரேனுக்கு இடமில்லை. இவற்றைவிட மூன்றாவது விடயம் ஒன்றையும் ரஷ்யா எதிர்பார்க்கிறது. அது பொருளாதாரத் தடை நீக்கம். அண்மையில் ஊடகம் ஒன்று சுமார் 21,000 பொருட்களுக்கான தடைகள் ரஷ்யா மீது உலக நாடுகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவித்தது. இதில் ஏழாயிரம் பொருட்களுக்கான தடை அமெரிக்காவினால் ஏற்படுத்தப்பட்டது. இப்பொருளாதாரத் தடைகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது தானவே நீக்கப்படும். ஏனெனில் அமெரிக்கா முன்வைத்த கோரிக்கைகள் எவற்றையுமே ரஷ்யா எதிர்க்கவில்லை. அவை ரஷ்யாவிற்கே சாதகமானவை. ஐரோப்பிய நாடுகளில் பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற நாடுகளே உக்ரேனுக்குச் சாதகமாகக் குரலெழுப்பியுள்ளன. இங்கிலாந்து, தான் உக்ரேனுக்குப் படைகளை அனுப்புவேன் என வெளிப்படையாகவே கூறியுள்ளது. இது சாத்தியமற்ற விடயம் என்பது சகலருக்கும் தெரியும். உக்ரேன் விடயத்தில் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் அமெரிக்காவிற்குமிடையில் முரண் நிலை தோன்றியுள்ளது.



அதனையே அமெரிக்காவும் விரும்புகிறது. ஏற்கனவே ஜேர்மனியின் வலது சாரிக்கட்சியான ஏ.எப்.டி தாங்கள் இப்பொழுது நடைபெறும் தேர்தலில் வெற்றி பெற்றால் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து ஜேர்மனி வெளியேறும் எனக் கூறியே தேர்தலில் நின்றது. அது இரண்டாவது பெரும்பான்மையைப் பெற்றுள்ளது. ஐரோப்பிய ஒன்றியத்தைப் பலவீனப்படுத்தவும், தேவையேற்படின் அதனை உடைப்பதற்குமே டொனால்ட் ட்ரம்பின் அரசு விரும்புகிறது.

உக்ரேன்-ரஷ்யப் போரினை ரஷ்யாவிற்குச் சாதகமாக்குவதனால் அமெரிக்காவிற்கு என்ன இலாபம்? ஏற்கனவே டொனால்ட் ட்ரம்பையும் கே.ஜி.பி-யையும் தொடர்புபடுத்தி சில ஊடகங்கள் கருத்து வெளியிட்டுள்ளன. ஆனால், டொனால்ட் ட்ரம்பின் கணக்கு அதுவல்ல. பிறிக்ஸ் அமைப்பில் ரஷ்யா பிரதான பங்கு வகிக்கிறது. ரஷ்ய-சீனக் கூட்டினை அமெரிக்கா விரும்பவில்லை. பிறிக்ஸ் அமைப்பில் உள்ள நாடுகள் அமெரிக்க டொலருக்கு மாற்றீடான ஒன்றை உருவாக்க முற்பட்டுவருகின்றன. பொதுவாகவே வணிகத்தில் ஒன்றைக் கொடுத்து ஒன்றை வாங்குவார்கள். டொனால்ட் ட்ரம்ப் ஒரு மிகச் சிறந்த வணிகர். அவருக்குத் தேவையானது பலவீனமான பிறிக்ஸ். இதற்கு அவர் புட்டினூடாக அடித்த

ளம் போட முயற்சிக்கிறார். உக்ரேன் போரினைத் தனக்குச் சாதகமாக அமைகின்ற போதும், புதிய அமெரிக்க தேசியமும் அதன் சர்வாதிகாரி டொனால்ட் ட்ரம்ப்மும் தனக்குப் புதிய சவால்களை உருவாக்க முனைவார்கள் என்பது புடினுக்குத் தெளிவாகவே தெரியும். ஆனால், புட்டின் ஒரு மிகச் சிறந்த சர்வாதிகாரி மட்டுமல்ல தனக்குத் தேவையானவற்றை எப்படியும் சாத்தியப்படுத்தக் கூடியவர். பிறிக்ஸ் அமைப்பை பலவீனப்படுத்தி சீனாவின் நட்பை உடைத்து உக்ரேன் வெற்றியைப் புட்டின் பெறுவாரா என்றால் இல்லை. ஆனால், புடின் தனது தனித்திறமையினால் பிறிக்ஸையும் டொனால்ட் ட்ரம்ப்பையும் கையாள்வார் என்று நம்பப்படுகிறது.

இவ்வாறு சர்வதேச விவகாரங்கள் டொனால்ட் ட்ரம்ப்னால் ஒரு புறம் சூடு பிடிக்கத் தொடங்க, மறுபுறம் அமெரிக்க உள்நாட்டு விவகாரம் சூடு பிடிக்கத் தொடங்குகிறது.

அமெரிக்க செனட்டால் அங்கீகரிக்கப்படாத தென் ஆபிரிக்காவில் பிறந்த ‘எலான் மஸ்க்’ என்ற மிகப் பெரிய செல்வந்தர் அமெரிக்கா உள்நாட்டு அரசாங்கத்தை ஆட்சி செய்கிறார். அவர் வைத்ததே சட்டம் என்றாகிவிட்டது.

எலான் மாஸக் என்னும் உலகின் மிகப் பெரும் செல்வந்தரை ஒரு அரசினை நடத்துவதற்கு டொனால்ட் ரம்ப் அனுமதியளித்துள்ளார். உலகிலேயே ஒரு மிகப் பெரிய வணிக நிறுவனம் ஒரு வல்லரசை நடத்துவது அமெரிக்காவிலேயே நடைபெறுகின்றது.

## யார் இந்த எலான் மாஸ்க்..?

இப்போது இவர் ரெஸ்லா கார் நிறுவனம், ஸ்பேஸ் எக்ஸ், எக்ஸ்(ருவிட்டர்) போன்ற நிறுவனங்களின் தலைவர். ஜனாதிபதித் தேர்தலின் போது சுமார் 277 மில்லியன் நிதியை டொனால்ட் ட்ரம்பிற்கு வழங்கியுள்ளார். டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்காவின் அதிகாரத்தைப் பெறுவதற்கும் புதிய அமெரிக்காவை உருவாக்கவதற்கும் பல வழிகளிலும் அவர் உதவி செய்து வருகிறார். எலான் மஸ்க் ஒரு கனடியப் பிரசை. இவரது தாயார் அயர்லாந் ஸ்கட்சுவானில் பிறந்து பின்னர் தென் ஆபிரிக்காவில் வளர்ந்தவர். இவரது தந்தை எரல் மஸ்க் தென் ஆபிரிக்கர், பிரிட்டிஸ் வம்சாவளி. ஒரு இலத்திரனியல் பொறியியலாளர். எரல் மஸ்க் சிம்பாவேயில் உள்ள மரகதக் கல் சுரங்கத்தின் பங்குதாரர்களுள் ஒருவராகவுமிருந்தார்.

தென் ஆபிரிக்காவில் பிறந்து வளர்ந்த எலான் மஸ்க், 1989-இல் கனடா வந்தார். ஸஸ்கட்சுவான் மாகாணத்தில் தோட்டங்களில் பகுதி நேர வேலை செய்துள்ளார். பின்னர் கிங்கஸ்ரனில் உள்ள குயின்ஸ் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுத் தொடர்ந்து அமெரிக்காவில் உள்ள பென்சலவேனியா பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றார். அவர் அமெரிக்காவிலிருந்த போது H1-B விசாவுடனேயே தங்கியிருந்தார். 2002-இல் எலான் மஸ்க் அமெரிக்கப் பிரசையானார். இவருக்குப் பதின்மூன்று பிள்ளைகள் உள்ளனர். இரு மனைவிகள். ஆனால் இருவரையும் விவாகரத்துச் செய்துவிட்டார். நீண்ட காலமாக ஜனநாயகக் கட்சி ஆதரவாளராகவிருந்த எலான் மஸ்க், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் குடியரசு வேட்பாளர் டொனால்ட் ட்ரம்பை ஆதரித்து நிதியும் வழங்கியிருந்தார்.

எலான் மாஸ்க், டொனால்ட் ட்ரம்பிற்கு அளித்த நிதியுதவிக்குப் பிரதியுபகாரமாக, டொனால்ட் ட்ரம்ப் ஒரு புதிய அமைச்சரவையை எலான் மஸ்க்கிடம் கையளித்தார். இதனை அமைச்சு என்று கூறுவதில்லை. முதலில் விவேக் இராமசுவாமியுடன் இணைந்தே எலான் மஸ்க் இயங்கினார். பின்னர் விவேக் இராமசுவாமி விலகிவிட்டார். இப்போது இந்தப் புதிய Department of Government Efficiency (DOGE) இலாகாவின் தனிக்காட்டு இராசாவாகியிருக்கிறார் எலான் மஸ்க்.

எலான் மஸ்க் உள்நாட்டுச் சீர்திருத்தங்களுக்கு அதிபதியாக டொனால்ட் ட்ரம்பினால் நியமிக்கப்பட்டாலும், இவர் சர்வதேச



நாடுகளுடன் நெருங்கிய உறவுடையவர். பல நாடுகளைப் பற்றிய அரசியல் கருத்துகளையும் விமர்சனங்களையும் வெளியிட்டுள்ளார். 2024 மார்ச் மாதத்திலிருந்து கனடிய அரசின் எதிர்க்கட்சியான கொன்சவேற்றிவ் கட்சியையும் அதன் தலைவரையும் ஆதரித்துப் பல கருத்துக்களைத் தனது எக்ஸ்(ருவிட்டர்) தளத்தில் வெளியிட்டுள்ளார். அதே சமயம் 2022-லிருந்து லிபரல் அரசையும் ஜஸ்ரின் ரூடோவையும் விமர்சித்து வருகிறார். அதே போல், ஜேர்மனியின் எதிர்க்கட்சியும் தீவிர வலது சாரிக் கட்சியுமான ஏ.எப்.டி-யை ஆதரித்து தனது இணையத் தளத்தில் பிரசாரம் செய்தார். அத்துடன் நின்றுவிடாமல் பிரேசிலின் முன்னால் அதிபர் Jair Bolsonaro உடன் நெருக்கமான உறவைப் பேணிவருகிறார். அங்கு நடைபெற்ற வலதுசாரி ஆர்ப்பாட்டங்களை ஆதரித்துக் கருத்துகளைத் தனது தளத்தில் எழுதியுள்ளார்.

வெனிசூலா எதிர்க்கட்சித் தலைவர் MarÍa Corina Machado, இங்கிலாந்தின் தீவிர வலதுசாரி தலைவர் Nigel Farage (Reform UK party), Georgiana Teodorescu-ருமேனிய வலது சாரித் தலைவர், நியுசிலாந்தின் கொன்சவேற்றிவ் கட்சித் தலைவர்Christopher Luxon, Dutch politician Geert Wilders, Hungarian Prime Minister Viktor Orban, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இத்தாலிய பிரதமர் Giorgia Meloni, ஆகியோரை ஆதரித்துக் கருத்துகளைத் தனது தளத்தில் வெளியிட்டுள்ளார். தொடர்ச்சியாக இவர்களது கொள்கைகளைத் தனது இணையத் தளத்தினூடாகப் பிரசாரப்படுத்தியும், ஆய்வு செய்தும் அவர்களுக்கு ஆதரவு வழங்கியுள்ளார். எல் சல்வடோர் ஜனாதிபதி Nayib Bukele உடன் நெருக்கமான உறவைப் பேணிவருகிறார். ஒக்ரோபர்-7 நிகழ்வின் பின்னரான இஸ்ரேலின் நடவடிக்கைகளை வெளிப்படையாகவே ஆதரித்து வருகிறார். பாலஸ்தீன மக்களுக்கு எதிரான கருத்துகள் இவரது இணையத் தளத்தில் தொடர்ச்சியாக வெளிவருகின்றன. துருக்கியத் தேர்தலில் இவர் உள்நுழைந்ததாக இவர் மீது குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. அயர்லாந்தும் இவர் மீது குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளது.

Grooming gangs 1990-2000 ஆண்டு காலப்பகுதியில் வட இங்கிலாந்துப் பகுதியில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபட்ட அமைப்பாகும். இதன் அங்கத்தவர்களில் பெரும்பாலானவர்கள் பிரிட்டிஸ் பிரசைகள். இக்காலப்பகுதியில் director of public prosecutions ஆகவிருந்தவர் தற்போதைய பிரித்தானிய பிரதமர் Keir Starmer. எலான் மஸ்க் இச்சம்பவத்தை மீள எக்ஸ் தளத்தில் பிரசாரப்படுத்தி வருகிறார். இவருடன் மற்றொரு மிகப் பெரிய அமெரிக்க தொழிலதிபர் Bill Ackman இணைந்து பிரித்தானியாவிற்கு எதிராகப் பொருளாதாரத் தடைகளை மேற்கொள்ள வேண்டும் எனப் பிரச்சாரப்படுத்திவருகின்றனர். பிரித்தானியாவை எலான் மஸ்க் (tyrannical police state) கொடுங்கோன்மை பொலிஸ் நாடு என விமர்சித்துள்ளார். ஸ்கொட்லான்ட் முன்னால் பிரதமரை மிக மோசமாக விமர்சித்துள்ளதோடு (Humza Yousaf). super-super racist, Scotland gave him everything and yet he loathes white people எனும் வார்த்தைகளால் தாக்கியுமுள்ளார். இவரது இத்தகைய நடவடிக்கைகள் உலக நாட்டு விவகாரங்களில் இவர் கொண்டுள்ள தலையீட்டினை விளக்குவதற்க சில உதாரணங்களாகும்.

தனது பிறந்த நாடான தென் ஆபிரிக்காவில் வெள்ளையர்கள் இனப்படுகொலை செய்யப்படுகிறார்கள் என எலான் மஸ்க் குற்றஞ்சாட்டியுள்ளார். இதனைத் தனது எக்ஸ் இணையத்தில் தொடர் பிரசாரமாக மேற்கொண்டுவருகிறார். தென் ஆபிரிக்கா பிறிக்ஸ் அமைப்பின் முக்கியமான நாடு. இது அமெரிக்காவிற்கும் இஸ்ரேலுக்கும் எதிராகத் தொடர்ச்சியாகக் கருத்துகளையும் கண்டனங்களையும் தெரிவித்து வருகிறது. தீவிர வலதுசாரி அமைப்புகளை ஆய்வு செய்து வரும் புளோரன்ஸ் பல்கலைக்கழக இணைப் பேராசிரியர் Manuela Caiani, எலான் மஸ்கின்அரசியல் நடவடிக்கைகள் பற்றிப் பின்வருமாறு கருத்துத் தெரிவித்துள்ளார். 'It is very dangerous that a non -political actor now speaks with a sort of political legitimacy. He's changing the paradigm of politics'. எலான் மஸ்க் தனது செல்வந்த செல்வாக்கு மூலமும், ஊடக, இணைய பலம் ஊடாகவும், வணிக முயற்சிகளினூடாகவும் பல நாடுகளின் அரசியல் மீதான விமர்சனங்களை முன்வைத்து, புதிய வலதுசாரிக் கருத்தியலை பிரசாரப்படுத்தி வருகிறார் என்று பேராசிரியர் மேலும் தெரிவித்துள்ளார்.

எலான் மஸ்க் அமெரிக்கத் தேசியம், ஜேர்மன் தேசியம், டச்சுத் தேசியம், பிரிட்டிஸ் தேசியம், இத்தாலிய தேசியம் எனப் பிரசாரப்படுத்துகிறார். இந்தத் தேசியங்கள் குடிவரவாளர்களுக்கு எதிரானவை. ஜேர்மனின் ஏ.எப்.டி தாங்கள் வெற்றி பெற்றால் அனைத்துக் குடிவரவாளர்களையும் வெளியேற்றுவோம் எனப் பிரசாரப்படுத்தியது. இந்தப் புதிய தேசியங்கள் வலது சாரி, இன மற்றும் நிறவாத தேசியங்களாகும். ஒரு வகையில் ஹிட்லரின் நாசிக் கொள்கைகளைக் கொண்டவை. 'Great Replacement theory' ஏற்றுக் கொண்டு குடிவரவாளர்களை வெளியேற்றி அவர்களுக்குப் பதிலாக வெள்ளையினத்தவரை மாற்றீடு செய்ய விரும்பும் எண்ணங்களே இத்தகை தேசியவாதக்கருத்துக்குள் உள்ளடங்கியிருக்கிறது.

எலான் மாஸ்க் வெளிநாட்டுக் கொள்கைகளும் டொனால்ட் ரம்ப்-பின் வெளிநாட்டுக் கொள்கைகளும் ஒத்த கருத்தைக் கொண்டுள்ளன. அதனால்த்தான் எலான் மாஸ்க்-ஐ கொண்டு தனது விருப்பங்களை ரம்ப் செயல்படுத்துகின்றார்.

இதன் ஒரு வடிவமாகத்தான் டொனாலட் ட்ரம்பின் அமெரிக்க தேசியமானது அமெரிக்கர்களுக்கு வேலை வாய்ப்பை அதிகப்படுத்தும் என பிரசாரப்படுத்துகிறது. உரிய பத்திரங்களின்றிக் குடிவந்தவர்களைக் கட்டாயப்படுத்தி வெளியேற்றும் நடவடிக்கை இதன் உச்ச நிலைதான். ஆனாலும் தொழின்முறைத் தொழிலாளர்கள் தேவை என்பதனை எலான் மஸ்க் போன்ற மிகப் பெரிய செல்வந்தர்கள் உணர்ந்துள்ளார்கள். குறைந்த வேதனத்தில் புதிய தொழிலாளர்களைப் பெறுவது எப்படி ? என்பது இவர்களது இப்போதைய கேள்வியாக உள்ளது. எலான் மஸ்க் போன்ற செல்வந்தர்கள் தமது நிறுவனங்களில் வேலை செய்வதற்குத் தொழின்முறைத் தொழிலாளர்களை வரவழைக்க விரும்புகிறார்கள்.

இவ்வாறு நிறுவனங்கள் ஏதேச்சாதிகாரத்தோடு நடந்து கொள்வதற்குக் காரணம். அவர்களின் நிதியில் அரச தலைவர்கள் பதவிக்கு வருவதுதான் என்பது தெளிவாகிறது. கடந்த அமெரிக்கத் தேர்தலின் போதும்கூட பல மில்லியன் நிதியினை நிறுவனங்கள் கட்சிகளுக்கு வழங்கியிருந்தமை தெரியவருகிறது. ஆனாலும், அரசாங்கம் அந்நிறுவனங்களுக்கு வழங்கும் நிதியின் சிறுதுளியையே அந்நிறுவனங்கள் மீள இவ்வாறு கட்சிகளுக்கு வழங்குகின்றன. பொதுவாக ஆராய்ச்சிச் செயற்பாடுகளுக்காக அரசாங்கம் இத்தகைய நிறுவனங்களுக்கு வழங்குகின்ற நிதி பல மில்லியன் என்பது வெளிப்படை. ஆனால், ஆராய்ச்சியின் மூலம் கண்டுபிடிக்கப்படும் பொருட்களை அரசாங்கம் அதிகளவு பணம் கொடுத்தே மீண்டும் பெற்றுக் கொள்ளும் நிலையும் உள்ளது. இந்நிலையில் அரசாங்கம் நிறுவனங்களுக்குக் கொடுக்கும் பணம் நிறுவனங்களின் சேமிப்பில் சென்று சேர்கிறது. அதில் ஒரு பகுதியைத்தான் மீள தேர்தல் செயற்பாடுகளுக்காக கொடுத்து, தமது அதிகாரத்தினை நாட்டில் நிலைநிறுத்த இந்நிறுவனங்கள் முனைப்புக் கொள்கின்றன.

இதை இங்கு கூறுவதற்கான காரணம் எலான் மஸ்க், டொனால்ட் ட்ரம்பிற்குக் கொடுத்த 277 மில்லியன் நிதி, அமெரிக்க அரசு எலான் மஸ்கின் நிறுவனங்களுக்கு வழங்கிய நிதியின் ஒரு துளியாகும். 2024-ல் எலான் மஸ்க் நிறுவனங்கள்

பெற்ற நிதி 3.8 பில்லியனாகும். கடந்த ஐந்து ஆண்டுகளில் எலான் மஸ்க்சின் நிறுவனங்கள் அமெரிக்க அரசிடமிருந்து பெற்ற நிதி 13 பில்லியனாகும். வழங்கப்பட்ட நிதிகள் முறையாகப் பயன்படுத்தப்பட்டதா எனப் பரிசோதிக்கும் 17 அதிகாரிகள் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். எலான் மஸ்க் வெளிநாட்டு அரசுகளுடன் ஏற்படுத்திய தொடர்புகள் பற்றி அரச அதிகாரிகளின் விசாரணை நடைபெற்று வரும் வேளையில், இந்த வேலை நீக்கம் நிகழ்த்தப்பட்டுள்ளது. இது விசாரணையை நிரந்தரமாக மூடிவைத்துள்ளது.

எலான் மஸ்க்சின் நிறுவனங்களுக்கு எதிராக இன்னமும் 24 வழக்குகள் நிலுவையில் உள்ளன. டொனால்ட் ட்ரம்பின் காலத்தில் இவ்வழக்குகள் தள்ளுபடியாகிவிடும். அதே போல் Consumer Financial Protection Bureau-இல் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட குற்றச்சாட்டுகள் ரெஸ்லா நிறுவனத்தின் கடன் வழங்கும் பிரிவின் மீது முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால் இதனையும் முடிவுக்குக் கொண்டுவரும் முகமாக Consumer Financial Protection Bureau மிக விரைவில் டொனால்ட் ட்ரம்ப்னால் மூடப்படவுள்ளது.

கடந்த வருடம் மட்டும் எலான் மஸ்கின் நிறுவனங்கள் மீது பதினொரு அரச நிறுவனங்கள் 32 வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளன. இதில் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் முறையான அனுமதி பெறாது புளோரிடாவில் இயங்கியதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றசாட்டும், ருவிற்றர் பங்குகளை எலான் மஸ்க் வாங்கிய போது முறைகேடுகள் நடைபெற்றுள்ளன என்ற குற்றச்சாட்டும் உள்ளடங்குகிறது. இவ்வாறு பல வழிகளிலும் குற்றஞ்சாட்டப்படும் தனி மனிதரும், நவதாராளவாத முகவருமான எலான் மஸ்க்சை டொனால்ட் ட்ரம்ப் தனது கனவுகளை நிறைவேற்றும் அதிகாரியாக நியமித்துள்ளார்.

டொனால்ட் ட்ரம்ப் விரும்பும் குறைந்த இறக்குமதி, குறைந்த குடிவரவாளர்கள், குறைவான தொழிலாளர் தொகை கொண்ட மத்திய அரசு, அதிகளவு தனியார் முதலீடுகள் என்பதாகும். எலான் மஸ்கின் குறிக்கோள் அரச அதிகாரிகளைக் குறைப்பதாகும். இது வரை 77,000 பேர் தாமாகவே முன்வந்து வேலையிலிருந்து விலகியிருக்கிறார்கள். இன்னும் கல்வி அமைச்சு. சுகாதாரம் மற்றும் மனித வள அமைச்சு, உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சு, முன்னால் இராணுவ வீரர்கள் அமைச்சு, உள்நாட்டு நிதி மற்றும் வரிகள் அமைச்சு, விவசாய அமைச்சு, சிறு வணிக அமைச்சு, சக்திவள அமைச்சுப் போன்ற அமைச்சுகளில் வேலை பார்த்து வரும் தொழிலாளர்களில் பெரும்பாலானவர்கள் வேலை நீக்க பட்டியலில் உள்ளார்கள். சுமார் இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்படவுள்ளார்கள் என்பது கிடைக்கப்பெற்ற தகவலாகும்.

எலான் மாஸ்க் 19-24 வயதுக்குட்பட்ட இளைஞர்களைக் கொண்டு Office of Personnel Management and the General Services Administration-ஐ தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தார். அது மட்டுமல்லாமல் திறைசேரி அமைச்சின் பணம் செலுத்தும் விபரங்களையும் கட்டுப்படுத்தினார். USAID-ஐ உடனடியாக நிறுத்தினார்கள். இந்த நிறுவனமே தென் ஆபிரிக்காவில் கறுப்பின இளைஞர்கள் வெள்ளை இனவாத அரசுக்கு எதிராகப் போராடியபோது, கறுப்பின இளைஞர்களுக்கு உதவி செய்தது என்ற குற்றச்சாட்டு எலான் மஸ்க்கினால் முன்னரே முன்வைக்கப்பட்டிருந்தது.

எலான் மஸ்கின் ரெஸ்லா நிறுவனத்துக்குப் போட்டியாக அமெரிக்காவினுள்ளும் பல நிறுவனங்கள் தோன்றியுள்ளன. ரெஸ்லா காரை விட பல வழிகளிலும் சிறந்த கார் BYD சீன நிறுவனத்தால் சந்தைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இதன் விற்பனையும் தற்போது அதிகரித்து வருகிறது என்பது சந்தை நிலவரம்.

எலான் மஸ்க், தனது புதிய அரசசார்பு முகம், தனது போட்டியாளர்களைக் கட்டுப்படுத்த, அவர்களது விற்பனையை அமெரிக்காவில் தடை செய்வதற்காக டொனால்ட் ட்ரம்பின் ஊடாக அதிக சுங்க வரி விதிக்கப் பெரிதும் பயன்படும் என்று நம்புவதோடு, மறுபக்கத்தில் குடிவரவாளர்களை வெளியேற்றுதல், வேலை நீக்கம் செய்தல், தனது நிறுவனங்களுக்கு எதிரான வழக்குகளிலிருந்து தப்பித்தல், குற்றத்தை விசாரணை செய்யும் அதிகாரிகளை வேலை நீக்கம் செய்தல், அரசினால் வழங்கப்படும் பல கோடி நிதிகளைப் பெற்றுக்கொள்ளுதல் போன்றவற்றிற்கும் உதவும் என்று நம்புகிறார்.

எலான் மஸ்க் தனது தேவைகளுக்கு டொனால்ட் ட்ரம்பைப் பாவிக்கிறார். அதே சமயம் டொனால்ட் ட்ரம்பிற்கும் எலான் - மஸ்கின் முகமூடி தேவைப்படுகிறது. தற்போது மத்திய அரசின் தொழிலாளர் வேலை நீக்கத்துக்கு எதிராக ஊடகங்களாலும், மக்களாலும் குற்றஞ்சாட்டப்படுபவர் எலான் மஸ்க். எலான் மஸ்க், டொனால்ட் ட்ரம்ப் ஆகிய இருவருக்கும் பல ஒற்றுமைகள் உள்ளன. இருவரும் இன வாதிகள், நிறவாதிகள். மிகப் பெரிய செல்வந்தர்கள். இருவருக்கும் பொதுமக்கள் நலனில் அக்கறையில்லை. தங்களது திறைசேரியை நிறைத்துக் கொள்வதையே கவனமாக் கொண்டுள்ளனர். ஆனால், இவர்கள் உருவாக்க முற்படும் அல்லது உருவாக்குவதாக வெளிக்காட்டும் அமெரிக்கத் தேசியமானது பல புதிய எதிரிகளை உலகரங்கில் இவர்களுக்கும் அமெரிக்காவிற்கும் எதிராக உருவாக்குகிறது. ஐரோப்பிய ஒன்றியம், பிரித்தானியா போன்றன புதிய எதிரிகளாக உருவாகிவருகின்றன. எல்லை நாடுகளான மெக்சிக்கோவும் கனடாவும் இப்போது புதிய எதிரிகள். இவ்வாறு உலகெங்கும் இவர்கள் எதிரிகளை உருவாக்குகிறார்கள். அண்மைக் காலங்களில் டொனால்ட் ட்ரம்பினுடைய பேச்சில் எதிரொலிப்பது 'நான் உலக அரசன், நான்தான் உலக சட்டம், என்னை எவராலும் மீறமுடியாது, நான் அனைத்தையும் ஆக்குவேன் அழிப்பேன்' என்ற வகையான கோசமே. இத்தகைய அதிகாரக் கோசங்களே அமெரிக்காவை நாசமாக்கும். இரு நவதாராளவாத முதலைகள் உலகை விழுங்க முனைப்புக் கொள்கின்றன. ஆனால், இம்முதலைகளது செயற்பாடு உலகம் அமெரிக்காவை விழுங்கிவிடும் ஆபத்தை ஏற்படுத்தவும் கூடும். முழு உலகமும் விழித்தெழாவிடின் அழிவு அமெரிக்கா உட்பட ஒட்டுமொத்த உலக மக்களுக்கானதே.

**உசாத்துணை:**


- https://www.npr.org/2025/02/12/g-s1-48392/how-did-elon-musk-become-so-powerful-in-the-trump-administration
- https://www.nytimes.com/2025/02/06/business/tesla-elon-musk-dei-discrimination.html




rathan@thaiveedu.com




**சமூக ஊடகங்கள் உட்பட Netflix போன்ற OTT தளங்களின் இந்தப் போக்கு ஊடக, படைப்புச் சுதந்திரத்தினைக் கேள்விக்கு உள்ளாக்குவதோடு, வரலாற்று உண்மைகளை மூடி மறைக்கும் முனைப்புக் கொண்டதாகும். வன்முறை, பயங்கரவாதத்துக்கு எதிரான கரிசனை என்ற போர்வையில் இந்தத் தணிக்கை முன்னெடுக்கப்படுவது வேடிக்கையானதாகும். இங்குதான் இவற்றின் அரசியற் போக்கு வெளிப்படுகின்றது. இவை அதிகார நலன்களைச் சார்ந்து இயங்குகின்றன என்பதற்கு வேறு ஆதாரங்கள் தேவைப்படாது.**

என்னதான் கருத்துச் சுதந்திரம், ஊடகச் சுதந்திரம், படைப்புச் சுதந்திரம் ஜனநாயகம், மனித உரிமைகள் என்று மேற்குலகமும் அது உருவாக்கிப் பேணும் அமைப்புகளும் நிறுவனங்களும் தகவல் தொழில்நுட்பத் தளங்களும் முழங்கினாலும் முற்றிலும் வேறான யதார்த்தம் ஒன்று நிலவுகின்றது. அந்த உலக ஒழுங்குக்குள்ளேதான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

அரசியல், பொருளாதார அதிகாரத்தைக் கைவசம் வைத்துள்ள உயரடுக்குகளே அனைத்தையும் தீர்மானிக்கின்றன. தங்கு தடையின்றி அனைவரும் கருத்துகளை வெளிப்படுத்துவதற்குரியனவாகச் சமூக ஊடகத் தளங்கள் சுதந்திரத்தினை உறுதிப்படுத்துகின்றன என்று சொல்லிவிடமுடியாது. பெரும் தணிக்கை அரசியல் பேஸ்புக், யூரியூப் உள்ளிட்ட பல்வேறு சமூக ஊடக நிறுவனங்களால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

விடுதலைப் போராட்ட அமைப்புகள் பற்றிய தகவல்கள், வரலாறுகள், நிகழ்வுகள், அதன் தலைவர்களின் பெயர்கள் உட்பட்ட விடயங்களை முகநூல் அனுமதிப்பதில்லை, நீக்குகின்றது. குறிப்பாக தமிழீழம், பலஸ்தீனம், குர்திஸ்தான் உட்பட்ட போராட்ட வரலாறுகளை, தகவல்களை Facebook, YouTube நீக்குவது கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்கின்றது.

### அதிகார சக்திகளின் தணிக்கை அரசியல்:

இந்த வரிசையில் Netflix தளமும் இணைந்துள்ளது. அத்தளம் பலஸ்தீனப் படங்கள் அனைத்தையும் கடந்த ஆண்டு (2024) நவம்பரில் நீக்கியுள்ளது. 2021-ம் ஆண்டு Netflix 'பலஸ்தீனக் கதைகள்' என்ற பிரிவின் கீழ் 32 வரையான பலஸ்தீனத் திரைப்படங்களை வெளியிட்டது. மூன்று ஆண்டுகளுக்குப் பின் பல படங்களுக்கான உரிமக்காலம் முடிவடைந்துவிட்டதாகச் சொல்லி நீக்கியுள்ளது. இப்போது அமெரிக்காவில் இந்தப் பிரிவின் கீழ் ஒரேயொரு படம் மட்டுமே உள்ளது.

நோர்வே உட்படப் பல நாடுகளில் Netflix-இல் பலஸ்தீனப் படங்கள் எதுவுமே இல்லை. உரிமம் முடிவடைந்தால் அதனைப் புதுப்பிப்பதுதான் வழமையான நடைமுறை. அதைவிடுத்து குறித்த நாட்டுப் படங்களை முற்றாக நீக்குவதல்ல. இதற்குப் பின்னால் இஸ்ரேலின் தொடர் அழுத்தம் இருப்பதாக உறுதியாக நம்பப்படுகின்றது. முன்னரும் பல தடவை பேஸ்புக், யூரியூப் நிர்வாகங்களுக்கும் இஸ்ரேல் கடுமையான அழுத்தங்களைக் கொடுத்து வந்துள்ளது. பலஸ்தீன ஆதரவு, இஸ்ரேல் எதிர்ப்பு பதிவுகள், காணொளிகளை அனுமதிக்கக் கூடாது என்ற அழுத்தம் அதுவாகும்.

இஸ்ரேல் திரைப்படங்கள் மற்றும் திரைத்தொடர்களைத் தமது சர்வதேசத் திரைப்பட வகைமைகளின் தொகுப்புகளிற் கொண்டுள்ளது நெற்பிளிக்ஸ். அதேவேளை பலஸ்தீனப் படங்கள் மிக அரிதாகவே அத்தளத்தில் இருக்கின்றன என்ற விமர்சனம் நீண்ட காலமாகவே நிலவி வந்தது. இந்தத் தொடர் விமர்சனங்களாற் சுதாரித்துக் கொண்ட நெற்பிளிக்ஸ் 2021-ம் ஆண்டு 'பலஸ்தீனக் கதைகள்' எனும் வகைமைக்குக் கீழ் 32 திரைப்படங்களை உள்ளடக்கியிருந்தது.

நீக்கப்பட்ட படங்களில் முக்கியமானவை 2008-ல் வெளிவந்த 'Salt of the sea'. மற்றையது 2021-ல் வெளிவந்த பார்ஹா (Farha). அந்த இரண்டு திரைப்படங்கள் பற்றிய ஒரு சுருக்கமான அறிமுகத்தினை இங்கு பதிவுசெய்வது பொருத்தம். அத்தோடு நெற்பிளிக்சும் அமெரிக்காவும் நிராகரித்த ஒரு பலஸ்தீன - நோர்வே கூட்டு உருவாக்கத்தில் 2024-ல் வெளிவந்த 'No other land' ஆவணத் திரைப்படம் மற்றும் இஸ்ரேல் இராணுவத்தினரையும் பலஸ்தீனம் மீதான அவர்களின் அநீதிகளையும் மகிமைப்படுத்தும் 'Fauda' திரைத்தொடரினை நெற்பிளிக்ஸ் உள்ளடக்கியிருப்பதன் பின்னணியில் இத்தொடரின் பேசுபொருளையும் இக்கட்டுரை சுருக்கமாக நோக்குகின்றது. Farha என்ற 1948-ன் Nabka பற்றிய பலஸ்தீனத் திரைப்படத்தினை நீக்குவதற்குரிய அழுத்தம் 2023-லேயே பிரயோகிக்கப்பட்டுள்ளது.

## ‘Salt of this sea’ – கடலின் உப்பு:

இந்தத் திரைப்படம் பலஸ்தீன-அமெரிக்கப் பெண் ஒருவர் தன் பெற்றோரின் பூர்வீக நிலமான பஸ்தீனத்திற்குத் திரும்பு கின்ற ஒரு கதையைச் சித்தரிக்கின்ற திரைப்படமாகும்.

இந்தப் படத்தின் நாயகி சோராயா (Soraya) அமெரிக்காவின் புரோக்லின் (Brooklyn) நகரில் பலஸ்தீனத்தலிருந்து புலம் பெயர்ந்த தொழிலாளர் வர்க்கத்திற் பிறந்தவர். 1948-ல் (நாக்பா) புலம்பெயர்ந்தபோது அவரது தாத்தாவின் சேமிப் புப்பணம் ஜப்பா வங்கியில் உறைந்துவிட்டதைக் கண்டடைகி றார். (Jaffa: இஸ்ரேலின் ஒரு நகர்ப்புற பகுதி, Tel Aviv தெற் கில் கடற்கரையை அண்டி அமைந்துள்ளது. 1950-வரை தனி




நகரமாக இருந்தது, பின்னர் அது தெல்அவிவுடன் இணைக் கப்பட்டது.) மிகுந்த பிடிவாதம், ஆர்வமிகுதி, தனக்கு உரித் தானதை மீளப்பெறுதலின் உத்வேகம் எனவான உணர்வுகளு டன் தனது வாழ்நாள் கனவான ‘பலஸ்தீனத்திற்குத் திரும்பும்’ பயணத்தினை மேற்கொள்கின்றார். அங்கு சென்றவுடன் அவ ளைச் சூழ்ந்துள்ள யதார்த்தம் அவளை அந்நியப்படுத்துவ தோடு, தன் கோபத்தோடு முரண்பட நிர்ப்பந்திக்கப்படுகி றாள்.

அவள் அங்கு இமாட்(Emad) என்ற பலஸ்தீன இளைஞனைச் சந்திக்க நேர்கிறது. அவன் அவளுக்கு நேரெதிர்மாறாக அந் நிலத்திலிருந்து நிரந்தரமாக வெளியேறும் எண்ணம் கொண்டி ருக்கின்றான். தம் வாழ்வைச் சுற்றியுள்ள நிர்ப்பந்தங்கள், கட் டுப்பாடுகளாற் சோர்வுறும் அவர்கள் சட்டவிரோதமாக இருந் தாலும் தமது சுதந்திரத்தினைப் பெற்றுக்கொள்ள விடயங்க ளைத் தம் சொந்தக் கைகளில் எடுத்துக்கொள்ள வேண்டு மென்பதை உணர்ந்து கொள்கின்றனர். அவர்களின் சுதந்தி ரத் தேடலில், பலஸ்தீனத்தின் சிதைவுகளை ஊடறுத்து நிகழ் கிறது அவர்களின் பயணம்.

பல விருதுகளை வென்ற இந்தத் திரைப்படம் அறிமுக இயக் குநரான Annemarie Jacir உருவாக்கியதாகும். இது கான்ஸ் (Cannes) திரைப்பட விழாவில் விமர்சன ரீதியான பாராட்டுக ளைப் பெற்றது. பலஸ்தீனக் கவிஞர் சுஹீர் ஹம்மாத் (Suheir Hammad) மற்றும் சலே பக்ரி (Saleh Bakri) ஆகியோர் முன் னணிப் பாத்திரங்களில் நடித்துள்ளனர். பன்னிரண்டு சர்வ தேச விருதுகளை வென்றதோடு ஐரோப்பா, அமெரிக்கா மற் றும் ஆசியாவில் திரையரங்குகளிலும் வெளியிடப்பட்டது.

*

## Farha:

பார்ஹா (Farha) 1948-ல் பாலஸ்தீனில் ஒரு சிறிய கிராமத்தில் வசிக்கும் 14 வயது சிறுமி. அவளுடைய வயதுப் பெண்கள் திருமணம் செய்து கொள்வது அல்லது நிச்சயித்து வைப்பது என்பது அப்போதைய அங்கிருந்த பாரம்பரிய நடைமுறை. ஆனால் பார்ஹா பாரம்பரியங்களையும், தனது கிராமத்தில் ஆண்களுக்கான பள்ளிக்கூடத்தின் கட்டுப்பாடுகளையும் மீறித் தனது கல்வியைத் தொடர விரும்புகிறாள். நகரத்தில் வசிக்கின்ற ஆனால் வார இறுதி நாட்களைக் கிராமத்திற் செலவிடும் தனது நெருங்கிய சிநேகிதி ‘பரிடா’ (Farida) கல்வி பயிலும் நகரத்துப் பாடசாலையிற் சேரக் கனவு காண் கிறாள். கிராமத்தில் வாழ்க்கை அச்சுறுத்தலாகவும் தீவிரமாக வும் ஆகுகின்றது. இறுதியாக பார்ஹாவின் தந்தை சம்மதிக்கி றார். அவளின் கனவு இறுதியாக நனவாகும் தருணம் நெருங் கும் அதேவேளை, அச்சூழல் அவர்களின் கிராமத்திற்கு நெருக்கமாக வருகிறது. வன்முறை தீவிரமடையும்போது பார்ஹா சிநேகிதியிடமிருந்து கொடூரமாகப் பிரிக்கப்படுகி றாள்.

தனது மகளின் பாதுகாப்பிற்காக பயந்து, பார்ஹவின் தந்தை அவளை வீட்டின் அருகிலுள்ள ஒரு மறைக்கப்பட்ட, சிறிய உணவுக் களஞ்சியப் பகுதியில் வைத்துப் பூட்டுகிறார். தான் திரும்பி வருவேன் என வாக்குறுதி அளித்துச் செல்கின்றார். ஆனால் அவர் திரும்பி வரவில்லை. அடுத்த சில நாட்களில், பார்ஹா குறுக்கமான இருண்ட இடத்தில் பூட்டப்பட்டு வாழ்க் கையைப் புரட்டிப்போட்ட சூழலுக்குட் தள்ளப்படுகின்றாள். வெளி உலகுடன் அவளுக்கிருந்த ஒரே தொடர்பு சுவரில் ஒரு சிறிய துளை மற்றும் மரக்கதவின் சில பிளவுகள் மட்டுமே. பார்ஹா அறைக்கு உள்ளேயும் வெளியேயும் பற்பல நிகழ்வு களைக் காண்கிறாள், அவளுடைய அந்தப் பயணம் (தேக் கம்), அவள் தனது குழந்தைத்தனத்தை விட்டு வளர வேண் டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துகிறது. இதனை இயக்கியவர் டாரின் ஜே. சலாம் (Darin J. Sallam).

*

## நெற்பிளிக்சும் அமெரிக்காவும் நிராகரித்த, சர்வதேச விருதுகள் பல வென்ற ஆவணப்படம்:

Bård Kjøge Rønning மற்றும் Fabien Greenberg ஆகிய இரு நோர்வேஜியர்கள் சுயாதீன ஆவணத் திரைப்பட தயாரிப் பா ளர்கள். இவர்களிருவரும் இணைந்து ‘No Other Land’ எனும் ஆவணத் திரைப்படத்தினைத் தயாரித்துள்ளனர். மேற்குக்

கரை மீதான இஸ்ரேலின் ஆக்கிரமிப்பினைப் பேசும் இவ்வா வணத்திரைப்படம் 2023-ல் வெளிவந்துள்ளது. இதனை Basel Adra, Hamdan Ballal, Yuval Abraham, Rachel Szor ஆகியோர் நெறியாள்கை செய்துள்ளனர்.

ஏன் உரிமப் புதுப்பித்தலைச் செய்ய நெற்பிளிக்சினால் முடிய வில்லை என்பதைத் தம்மாற் புரிந்துகொள்ளமுடியவில்லை என்று கூறியுள்ளார் Rønning. இதற்குப் பின்னால் அரசியல் மற்றும் ஜனரஞ்சகக் காரணிகள் இருக்குமென அவர் கருது கின்றார். பொழுதுபோக்கு, மகிழ்வூட்டல் உட்பட்ட ஜனரஞ்சக நோக்கங்களைக் கொண்டுள்ள நெற்பிளிக்ஸ், அரசியல் உள்ளடக்கத்தினைத் தவிர்க்க முனைப்புக் காட்டுவதாகவும் இதனைப் புரிந்துகொள்ளலாம் என்கிறார் அவர்.

'No Other Land' ஆவணத் திரைப்படம் 2023-இல் வெளிவந்து பல்வேறு சர்வதேச திரைப்பட விழாக்களிற் காண்பிக்கப்பட்டது. பல்வேறு பெரியதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான திரைப்பட விழாக்களில் அவ்வாவணத் திரைப்படம் காண்பிக் கப்பட்டதோடு, பல்வேறு நாடுகளிலும் அது விநியோகஸ்தர்க ளால் வாங்கப்பட்டு திரையரங்குளிற் காண்பிக்கப்படுகின் றது. அந்தப் படத்தினை நெற்பிளிக்ஸ் கொள்வனவு செய்ய மறுத்துவிட்டது. மட்டுமல்லாமல் இந்த ஆவணத் திரைப்படத் தினை அமெரிக்காவில் விநியோகம் செய்ய முடியவில்லை. அதாவது அங்கு திரையரங்குகளிற் காண்பிக்க முடிய வில்லை.

## No Other Land:

பாசெல் ஆட்ரா (Basel Adra) எனும் ஒரு பலஸ்தீன அரசியற் செயற்பாட்டாளர் ஒரு இஸ்ரேல் புலனாய்வுச் செய்தியாளரு டன் தொடர்பை அமைக்கிறார். இஸ்ரேலின் திட்டமிட்ட யூதக் குடியேற்றக் கொள்கைக்கு எதிராக அவர்கள் இணைந்து போராடு கிறார்கள். யூதக் குடியேற்றம் என்பது, மேற்குக் கரையில் பலஸ்தீனர்களை நாளாந்தம் அவர்களது சொந்த நிலங்களிலிருந்து வெளியேற்றுகிறது, அவர்களை வீடற்றவர் களாக ஆக்குகின்றது.

குழந்தைப் பருவத்திலிருந்தே பாசெல் ஒரு செயற்பாட்டாளர், மேற்குக் கரையில் உள்ள மசாஃபர் யாட்டா (Masafer Yatta) நகரின் மக்களைக் கட்டாயமாக வெளியேற்றியமைக்கு எதிரா கப் போராடி வருகிறார். இஸ்ரேல் ஆக்கிரமிப்புப் படைகள் படிப்படியாக வீடுகளை அழிக்கின்றன, குடியிருப்பாளர்களை அந்தப் பகுதியை விட்டு வெளியேறக் கட்டாயப்படுத்துகின் றன. இஸ்ரேல் இராணுவத்துடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ள யூதக் குடியேற்றவாசிகள் அவர்களின் வீடுகள், நிலங்களைத் தமதாக்கிக் கொள்கின்றனர். இஸ்ரேலியப் புல னாய்வுச் செய்தியாளர் யுவல் (Yuval) என்பவருடன் பாசெல் தொடர்பை ஏற்படுத்தி வளர்த்துக் கொள்கின்றார். பலஸ்தீனர் கள் எதிர்கொள்ளும் அநீதிகளை அவர்கள் இணைந்து ஆவ ணப்படுத்துகிறார்கள். பலஸ்தீனர்கள் எதிர்கொள்ளும் இருத லைக்கொல்லி நிலையை, அதாவது ஒன்றில் அங்கேயே இருந்து, மோசமான சூழல்களுக்குள் வாழ்வது, அல்லது தமது வீடுகளை விட்டு வெளியேறுவது என்பதைப் பதிவு செய்கின்றது அந்த ஆவணத் திரைப்படம்.

No Other Land திரைப்படம் பலஸ்தீனச் செயற்பாட்டியக் கத்தை வலுவாகச் சித்திரிக்கின்றது. அத்தோடு பாசெலின் வாழ்க்கை மூலம் பலஸ்தீன உரிமைக்கான செயற்பாட்டியக் கம் எவ்வாறு தலைமுறை தலைமுறையாகப் பரிமாறப்படுகி றது என்பதையும் சித்திரிக்கின்றது. இரண்டு பாலஸ்தீன மற் றும் இரண்டு இஸ்ரேல் திரைப்படைப்பாளிகளைக் கொண்ட ஒரு இஸ்ரேல்-பலஸ்தீன கூட்டுத் திரைப்படக் குழு, மேற்குக் கரையில் பலஸ்தீனர்கள் நாளாந்தம் எதிர்கொள்ளும் அநீதி களை ஆவணப்படுத்தி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆவணத் திரைப்படத்தின் நெறியாளர்கள் நால்வர். இருவர் பலஸ்தீனர்கள், இருவர் யூதர்கள் (Basel Adra, Yuval Abraham, Rachel Szor, Hamdan Balal) இத்திரைப்படத்தின் தயாரிப்பாளர்கள் இரண்டு நோர்வேஜியர்கள்: Fabien Greenberg, Bård Kjøge Rønning

*

## இஸ்ரேல் திரைத் தொடர் 'Fauda':

இஸ்ரேல் தொலைக்காட்சி தொடரான Fauda. முன்னாள் இஸ் ரேல் படைவீரர்கள் (The Israel Defense Forces (IDF) Lior Raz மற்றும் Avi Issacharoff தயாரித்ததாகும். அத்தொடர் நெற்பிளிக்ஸ் தளத்தில் தற்பொழுதும் உள்ளது. Fauda தொடரானது மேற்குக்கரையிற் செயற்படும் ஒரு இரகசிய இஸ்ரேல் இராணுவ அலகைச் சித்தரிக்கிறது. இத்தொடர் இனவெறிக் கருத்தியலை நிலைநிறுத்துவது, இஸ்ரேல் இரா ணுவ நடவடிக்கைகளை மகிமைப்படுத்துகின்றது மற்றும்




பலஸ்தீனியர்கள் மீதான ஆக்கிரமிப்பின் மீது வெள்ளையடிக் கின்றது போன்ற விமர்சனங்களைச் சந்தித்துள்ளது. இத்த கைய ஊடகப் போக்குகள் பலஸ்தீனியர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகளைச் சட்டபூர்வமாக்கவும், சாதாரணமாக்கவும் உதவுகிறது. 'பவுடா'வின் அனைத்து தொடர்களையும் நெட்ப்ளிக்ஸ் தளத்தில் தொடர்ந்து ஒளிப ரப்புகிறது. இந்த தொடர் பலஸ்தீனியர்களை இனவெறியின ராகச் சித்தரிக்கின்றது. பலஸ்தீனிய பொதுமக்களைக் கொன்று, வீடுகளை சோதித்து, பலஸ்தீனியப் பெண்களுடன் தொடர்பு கொண்டு, காசாவைத் தாக்கும் இஸ்ரேலிய சிறப்பு

படையணியின் செயற்பாடுகளை மையமாகக் கொண்டு, அவற்றை நியாயப்படுத்துகின்றது.

இந்த தொடர் இஸ்ரேலிய இனவெறியை மகிமைப்படுத்தி, ஆக்கிரமிப்பாளர்களை ஒரே நேரத்தில் நாயகர்களாகவும், பாதிக்கப்பட்டவர்களாகவும் சித்தரிக்கின்றது, காசாவில் இனப்படுகொலை நடத்தப்படும் சூழலிலும் இந்தத் தொடர் ஒளிபரப்பாகி வருகிறது. இந்தத் தொடரின் 4 சீசன்கள் தற் பொழுது நெற்பிளிக்சில் பார்க்கலாம். அடுத்த பாகம், அதா வது 5-வது Season 2026 தொடக்கத்தில் வெளியிடப்படும் என இத்தொடரின் இணை இயக்குநரும் நடிகருமான லியோர் ராஸ் தெரிவித்துள்ளார். பலஸ்தீனியர்களுக்கு எதிராகக் கொலைகள், ஆக்கிரமிப்புகள், சித்திரவதைகள் மற்றும் இன



வெறி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இஸ்ரேலியப் படை களை நாயகர்களாகச் சித்தரிக்கும் தொடரினைத் தளத்தில் தொடர்ந்து ஒளிபரப்பும் நெற்பிளிக்ஸ் இனப்படுகொலைக்கு எதிராக நிலைப்பாடு எடுக்கவில்லை என்பதற்கான செய்தி யாகும்.

*

## பலஸ்தீனக் கதைகளை மௌனித்தல் – கட்டமைக்கப்பட்ட அழிப்பு:

நெற்பிளிக்ஸ் போன்ற உலகின் மிகப்பெரிய இணையத் திரைப்படத் தளம் (Over-the-top media service - OTT/ Streaming platform) உலகம் தழுவியதாக பலஸ்தீன வாழ்வு குறித்த கதைகளைக் கொண்டுசெல்லக்கூடியது. ஆனால் அதற்கு நேரெதிர் மாறாக பலஸ்தீனக் கதைகளை அத்தளம் முடக்கியுள்ளது.

பலஸ்தீனக் கலைஞரும் திரைப்படைப்பாளியுமான அய்மன் அல்ஸ்ராக் (Ayman Alzraq) நோர்வேஜிய 'Klassekampen' நாளிதழுக்குக் (06.11.2024) கருத்துக் கூறும்போது, திரைப்ப டங்கள் நீக்கப்பட்ட காரணமும் காலமும் தற்செயல் நிகழ் வாக எடுத்துக்கொள்ளக்கூடியதல்ல என்கிறார். 'பலஸ்தீன மக்கள் தமது உணர்வுகள், கருத்துகளை வெளிப்படுத்துவ தில் சவால்கள் அதிகரித்துள்ள சூழலில் நெற்பிளிக்சின் இச் செயல் பலஸ்தீன மக்களின் கருத்துரிமையைப் பெரும் கவ லைக்கிடமாக்குகின்றது' என்றும் தெரிவித்துள்ளார்.

திரைக்கலை ஊடாகப் பலஸ்தீனக் கலாசாரத்தை, வாழ்வை, கலையை உலகிற்கு வெளிப்படுத்துவதற்கு உலகின் முதன்மை இணையத் திரைத்தளமான நெற்பிளிக்ஸ் ஒரு தனித்துவமான வாய்ப்பு. அப்படியிருக்க பலஸ்தீனத் திரைப் படங்களை முற்றாக நீக்கிய நெற்பிளிக்சின் இச்செயல் பொறுப்பற்றது, முற்றுமுழுதான நிராகரிப்புச் சார்ந்ததோடு, அரசியல் நோக்கம் கொண்டது. இன்னுமொருபடி மேலே போய் இஸ்ரேலின் இன அழிப்பிற்குத் துணைபோகின்ற செய லும்கூட எனலாம். பலஸ்தீன மக்கள் அரசியல், வாழ்வுரிமைக் காக மட்டும் போராடவில்லை. அவர்களுடைய வரலாறு, கலை, பண்பாடு என்பன மீதும் கட்டமைக்கப்பட்ட அழிப்பு (Structural destruction) மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## காட்சியகங்கள், பல்கலைக்கழகங்கள், நூலகங்கள், ஆவணக்காப்பகங்கள் அழிப்பு:

கடந்த ஒக்ரோபர் 2023-லிருந்து காசாவில் இஸ்ரேல் கட்ட விழ்த்துவிட்டுள்ள போர் இயந்திரம் அங்குள்ள காட்சியகங் கள், பல்கலைக்கழகங்கள், நூலகங்கள், ஆவணக் காப்பகங் கள் அனைத்தையும் அழித்துள்ளது. இதனை இன அழிப்பின் மூலோபாயங்களில் ஒன்றாக இஸ்ரேல் முன்னெடுத்து வரு கின்றது. இஸ்ரேல் மட்டுமல்ல பொதுவாக இன அழிப்பு, பேரி னவாத, பாசிச, ஒடுக்குமுறைச் சக்திகள் இத்தகைய மூலோ பாயங்களுடனேயே இயங்குவன. ஸ்ரீலங்கா பேரினவாத அரசு களும் இதே மூலோபாயங்களையே கையாண்டன. தமிழர் பிர தேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், சிங்களம் மட்டும், பௌத்தத்திற்கு முதன்மையிடம், யாழ். நூலக எரிப்பு, வழிபாட்டுத் தலங்கள் அழிப்பு எனவாகச் ஸ்ரீலங்கா அரசின் கலை, மொழி, கல்வி, கலாசார அழிப்புகளைப் பட்டியலிட லாம்.

உரிமக்காலம் முடிவடைந்துவிட்டதாக ஒரு தட்டிக்கழிப்புப் பதிலையே நெற்பிளிக்ஸ் நிர்வாகம் முன்வைக்கின்றது என்ப தைப் புரிந்துகொள்வது கடினமல்ல. உரிமக்காலத்தைப் புதுப்பிப்பதோ அல்லது அதற்கான மாற்றுவழிகள், உடன்பா டுகளைக் கண்டடைவதோ அத்தனை கடினமான செயற் பாடோ பொறிமுறையோ அல்லவே.

நோர்வேயில் பலஸ்தீன ஆதரவுக் குழு உள்ளது. அது நோர் வேஜியர்களை உள்ளடக்கியது. அதன் பொறுப்பாளர் லீன கதீப் (Line Khateeb) இது இஸ்ரேல் ஆதரவு சக்திகள் நெற்பி ளிக்சிற்கு அழுத்தம் பிரயோகித்து இம்முடிவுக்குத் தள்ளியுள் ளன எனச் சந்தேகிக்கின்றார். பலஸ்தீனப் படங்களை நெற்பி ளிக்ஸ் மீள் பதிவேற்றம் செய்யவேண்டுமென்ற கோரிக்கை கள் பல்வேறு மட்டங்களில் எழுப்பப்பட்டுள்ளன. கலிபோர்னி யாவிலுள்ள நெற்பிளிக்ஸ் அலுவலகத்தின் முன் அரசியல்-சமூக-கலை-இலக்கியச் செயற்பாட்டாளர்கள் கண்டன ஒன்று கூடல் நிகழ்த்தியுள்ளனர். கையெழுத்துப் போராட்டமும் முன் னெடுக்கப்பட்டுள்ளது.

காட்சிபூர்வப் படைப்புகள், கலை, இலக்கியம், கலாசாரம், ஆவணச் சேகரிப்புகள், நூல்களை இலக்குவைத்து திட்ட மிட்ட கலாசார அழிப்பினை இஸ்ரேல் மேற்கொண்டு வந்துள்

ளது. இதன் மூலம் பலஸ்தீனர்களுக்கும் அவர்களின் நிலம், அதனோடான அவர்களின் வரலாற்றுக்கும் அதன் பாரம்பரியத் தொடர்ச்சிக்குமிடையிலான தொடர்பை அழிக்கின்ற மூலோபாய நோக்கம் கொண்டது.

சர்வதேச நீதிமன்றம் (IJC), சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ICC) ஆகிய இரண்டு சர்வதேச நீதி அமைப்புகள், ஐ.நா. நிபுணர்கள், கல்வியாளர்கள், சர்வதேச மன்னிப்புச் சபை, சர்வதேச அரசியல், சமூக, மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் மற்றும் அமைப்புகள் பலஸ்தீனர்கள் மீது இஸ்ரேல் இன அழிப்பினை மேற்கொண்டு வருகின்றது என்பதை ஆதாரங்களுடன் வெளிப்படுத்தியுள்ளனர். இந்நிலையில் நெற்பிளிக்சின் இச்செயல் பலஸ்தீன மக்களின் குரல்களையும் அவர்களின் கதைகளையும் மௌனிக்கச் செய்யும் பாலானது. பலஸ்தீனக் கலாசார நிறுவனங்கள், நூலகங்கள், ஆவணக் காப்பகங்கள் மீதான இத்தகைய சூறையாடல்கள் விலைமதிப்பற்ற ஆவணங்களை இழக்கச் செய்துள்ளன.

## நிலத்துடனான வரலாற்று, பண்பாட்டுத் தொடர்புகளை அழித்தல்:

மூன்றாம் உலகில் பண்பாட்டு உற்பத்தியை அடக்குவதற்கான முதன்மை உத்திகளில் ஒன்றாகத் தணிக்கை அரசியல் மாறியது. கொலனித்துவ மற்றும் ஏகாதிபத்திய சக்திகள், மற்றும் அரசுகள் கூட்டாகத் தணிக்கையைக் கையாண்டு வந்துள்ளன. கொலனியாதிக்க, ஏகாதிபத்திய மற்றும் ஒடுக்குமுறைகளுக்கு எதிரான உணர்வுகளை வெளிப்படுத்திய திரைப்படங்கள், புத்தகங்கள், இதழ்கள், செய்தித்தாள்கள் மற்றும் கலைப்படைப்புகளைத் தடை செய்தன. அவர்களின் திரைப்படங்கள் மற்றும் பண்பாட்டு படைப்புகளுக்கான மேற்கு மற்றும் உள்ளூர் சந்தைகளில் விநியோக வாய்ப்புகளும் மறுக்கப்பட்டன.

இஸ்ரேல் போன்ற குடியேற்ற மற்றும் காலனியாதிக்க அரசுகள், தாம் ஒடுக்குகின்ற மக்களுக்கு அவர்களின் சொந்த நிலத்துடன் இருக்கக்கூடிய வரலாற்று மற்றும் பண்பாட்டுத் தொடர்புகளை அழிப்பதற்கு காலனியாதிக்கக் கதையாடல்களையும் அழிக்கவேண்டியிருக்கின்றது. இதன் மூலம், பேரினவாத இஸ்ரேல் பலஸ்தீன மக்களின் இறையாண்மை மற்றும் சுயநிர்ணயக் கோரிக்கைகளைத் தகர்த்தழிக்க முயல்கின்றன.

எழுத்தாளர்கள், கவிஞர்கள் மற்றும் திரைப்படைப்பாளிகள் உட்பட பல பலஸ்தீன பண்பாட்டுச் செயற்பாட்டாளர்கள் துன்புறுத்தப்பட்டனர், சிறையில் அடைக்கப்பட்டனர், நாடு கடத்தப்பட்டனர், கொலை செய்யப்பட்டனர்.

1982-ல் லெபனான் மீதான இஸ்ரேலின் படையெடுப்பு மற்றும் சப்ரா மற்றும் ஷடிலா படுகொலைகள் (Sabra and Shatila massacres,) பற்றிய கட்டுரையில், மறைந்த பலஸ்தீன அமெரிக்க இலக்கியப் பேராசிரியர் எட்வர்ட் சயிட் (Edward Said), மேற்கத்தேய நாடுகள் பலஸ்தீனர்களுக்குத் தங்கள் சொந்த கதைகளை சொல்லும் உரிமையைத் திட்டமிட்ட முறையில் மறுக்கின்றன என்பதை விளக்கியுள்ளார் என்கிறார். மேற்கத்தேய நாடுகளின் பாரபட்சமான செய்தியிடல், மற்றும் பலஸ்தீனக் கதையாடல்களை ஒடுக்குதல் அணுகுமுறைகள், பிராந்தியத்தின் வரலாற்றைச் சிதைப்பதோடு, இஸ்ரேலின் ஒடுக்குமுறைகளை நியாயப்படுத்துகிறது என்றும் எழுதியுள்ளார். வரலாற்றின் உண்மையான புரிதலுக்காக, பலஸ்தீனர்களுக்கு 'கதை சொல்லும் உரிமை' இன்றியமையாதது என்றும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

## அழிப்பின் முக்கால் நூற்றாண்டு வரலாறு:

இத்தகைய அழிப்பு என்பது நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. 1948-ம் ஆண்டின் 'நாக்பா'வுடன் (Nakba/the catastrophe/ பேரழிவு) தொடங்குகின்றது. யூத சயோனிஸ்ட் படைகள் பலஸ்தீனியர்கள் மீது திட்டமிட்ட முறையில் இன அழிப்பினைத் தொடங்கிய பேரழிவு நிகழ்வு அது. நூற்றுக்கணக்கான நகரங்கள், கிராமங்களிலிருந்து பலஸ்தீனப் பூர்வீக மக்களை வெளியேற்றினர். அவர்களின் நகரங்கள், கிராமங்களை அழித்து, பலஸ்தீனிய கலாசாரத்தையும் இலக்கு வைக்கத் தொடங்கினர். 1948-ம் ஆண்டின் அரபு-இஸ்ரேல் போரின்போது பலஸ்தீனியர்களின் பெருமளவு இடம்பெயர்வு மற்றும் சொத்துப் பறிப்பை குறிப்பதே 'நாக்பா'. முன்-நக்பா காலத்திற் பலஸ்தீனம் பல்லினங்களும் பல பண்பாடுகளும் கொண்ட சமுதாயமாக இருந்தது. 1930-களில் யூதக் குடியேற்றங்கள் அதிகரித்ததன் விளைவாக அரேபியர்களுக்கும் யூதர்களுக்கும் இடையிலான முரண்பாடு தீவிரமடைந்தது. இதற்கும் ஐரோப்பாவில் யூதர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளுக்குமிடையிற் தொடர்பு இருப்பதோடு, அக்கொடுமைகளாற் தூண்டப்பட்டதுமாகும். பலஸ்தீனத்தில் யூத அரசை நிறுவுவதற்கான சயோனிஸ்ட் இயக்கத்தால் யூதக் குடியேற்றங்களும், அரேபியர்களுக்கு எதிரான போரும், நாக்பாவும் இயக்கப்பட்டன.

1947-ம் ஆண்டு நவம்பரில், ஐ.நா. பொதுச் சபை பலஸ்தீனத்தை இரண்டு தேசங்களாகப் பிரிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றியது. ஒன்று யூதர்களுக்கானது, மற்றையது அரேபியர்களுக்கான தேசமாகவும் ஜெருசலேமை ஐ.நா நிர்வாக மேலாண்மைக்குள்ளும் பேணுவதாக தீர்மானம் அதுவாகும். அரபு உலகம் அந்தத் திட்டத்தை நிராகரித்தது. இது நியாயமற்ற தீர்மானம் என்பதோடு ஐ.நா சாசனத்தை மீறுவதாகவும் கூறியது. யூதப் இராணுவம் பலஸ்தீனக் கிராமங்களைத் தாக்கி, பல்லாயிரக்கணக்கான மக்களை வெளியேற்றியது. பிரித்தானிய ஆணையத்தின் முடிவு, படைகளின் வெளியேற்றம், இஸ்ரேல் தனியரசுப் பிரகடனம், அயலக அரேபியப் படைகளின் தலையீடு என்பனவற்றின் கூட்டுக் காரணிகள் 1948-ல் முழுமையான பெரும் போராக வெடித்தது. புதிதாக நிறுவப்பட்ட இஸ்ரேல் படைகள் பாரிய தாக்குதலைத் தொடங்கின. போரின் விளைவாக பலஸ்தீன மக்கள் தொகையின் அரைவாசிக்கு மேற்பட்டோர் நிரந்தரமாக இடம்பெயர நிர்ப்பந்திக்கப்பட்டனர். 750,000 வரையான மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

## பண்பாட்டு அழிப்பும் காண்பியல் சேகரிப்புகள், புத்தகங்கள் சூறையாடலும்:

பலஸ்தீனிய காண்பியல் சேகரிப்புகள் (Visual archives) மற்றும் புத்தகங்கள் கொள்ளையடிக்கப்பட்டு, இஸ்ரேலின் கட்டுப்பாட்டிலுள்ள அரச காப்பகங்களில் மறைக்கப்பட்டு, வகைப்படுத்தப்பட்டு அணுகுவற்குக் கடினமான கட்டுப்பாட்

டுக்குள் வைக்கப்பட்டுமுள்ளன. பண்பாட்டின் காட்சிபூர்வ ஆவணங்களை இலக்கு வைப்பது தற்செயல் நிகழ்வு அல்ல, கலாசார அழிப்பு நடவடிக்கையாகும்.

பண்பாட்டு அழிப்பின் மற்றொரு குறிப்பிடத்தக்க நிகழ்வு பலஸ்தீன விடுதலை அமைப்பின் (PLO) காண்பியற் சேகரிப்புகள் மற்றும் திரைப்படம் சார் உபகரணங்கள் மீதான சூறையாடலாகும். 1982-ல், லெபனான் மீதான இஸ்ரேலின் படையெடுப்பின் போது பலஸ்தீன விடுதலை அமைப்பின் கலை-கலாசாரப் பிரிவு, ஆராய்ச்சி மையம் மற்றும் பிற PLO அலுவலகங்கள் கொள்ளையடிக்கப்பட்டன. பலஸ்தீன திரைப்பட நிறுவனங்களின் திரைப்பட காப்பகங்கள் படையெடுப்பின் போது காணாமற் போயின. 2000-களின் தொடக்கத்தில் இரண்டாவது இன்திஃபாதா (Intifada இன்திஃபாதா என்பது 1987-1993 (முதல் இன்திஃபாதா) இல் மேற்குக்கரை மற்றும் காசாவில் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இஸ்ரேலிய இராணுவத்திற்கு எதிரான பலஸ்தீனிய மக்களின் கிளர்ச்சிக்கு முதன்முதலில் பயன்படுத்தப்பட்ட பெயர்) மற்றும் காசாவில் பல்வேறு காலகட்டங்களிற் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட இராணுவ ஆக்கிரமிப்பு, குண்டுவீச்சுகளின் போதும் இத்தகைய பண்பாட்டு ஆவண அழிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

2001-ம் ஆண்டு டிசம்பரில் இஸ்ரேலிய படையினர் மேற்குக்கரையில் (ராமல்லா) இயங்கிய பாலஸ்தீன தன்னாட்சி நிர்வாகத்தின் வானொலி நிலையத்தைத் தகர்த்தனர். இஸ்ரேல் தேச உருவாக்கம் தொடர்பான சியோனிச காலனியாதிக்கப் பெருங்கதையாடல்களை (Maintain Zionist colonial mythologies) பேணிப் பாதுகாக்கும் இலக்கிற்காக இஸ்ரேல் அரசு திட்டமிட்ட மூலோபாயத்துடன், பலஸ்தீனத் திரைப்படங்கள், காண்பியற் சேகரிப்புகள், கலை பண்பாட்டு வரலாற்று ஆவணங்களைக் கைப்பற்றியும் அழித்தும் வருகின்றது. அதன் தொடர்ச்சியே கடந்த 2023 ஒக்ரோபர் 7-ல் தொடங்கி நீடித்து வரும் காசா மீதான ஆக்கிரமிப்பில் ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனப் பிரதேசங்கள் மற்றும் லெபனானில் 137 ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஊடகவியலாளர் பாதுகாப்புக் குழுவின் (Committee to Protect Journalists) தகவலின்படி, இஸ்ரேலின் இன அழிப்பை ஆவணப்படுத்த வடக்கு காசாவில் தொழில்முறைப் பத்திரிகையாளர்கள் எவரும் இல்லை. கல்வியாளர்கள், மாணவர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் கலாசாரப் பணியாளர்களை இலக்கு வைத்து, கைது செய்து, சித்திரவதை செய்து, பாலியல் பலாத்காரம் செய்து, கொன்றுள்ளது இஸ்ரேல் இராணுவம். டிஜிட்டல் தணிக்கை ஊடக அடித்தளத்தை அழித்தல் ஆகியவற்றின் மூலம் பலஸ்தீன கதையாடல்களைத் தணித்து மௌனிக்கச் செய்துவருகின்றது இஸ்ரேல்.

பலஸ்தீன கதைகள் தொகுப்பை அகற்றிய நெற்பிளிக்சின் முடிவும் திரைப்படங்களின் உரிமங்களைப் புதுப்பிக்காத அணுகுமுறையும் பலஸ்தீன கலாசார அழிப்பில் நெற்பிளிக்சின் பங்கினை உறுதிப்படுத்துகின்றது.

### பலஸ்தீன விடுதலைச் சினிமா:

இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து பலஸ்தீனச் சினிமா, மூன்றாம் உலகத்துவச் சினிமாவின் முக்கிய கூறாக உருவெடுத்தது. அது காலனித்துவத்திற்கு எதிரான கூட்டுணர்வு, விடுதலை ஆகியவற்றின் கோட்பாடு மற்றும் தத்துவ உருவாக்கத்திற்கும் பங்களித்தது. ஆசிய, ஆபிரிக்க மற்றும் இலத்தீன் அமெரிக்க புரட்சிகரத் திரைப்படைப்பாளிகள், கலைஞர்கள், திரை உருவாக்கக் குழுக்களுடன் இணைந்து தமது வரலாறு, கலாசாரம், அடையாளத்தைக் கண்டறிந்து - மீள்பிரகடனப்படுத்தி ஏகாதிபத்திய மேலாதிக்கத்தினை எதிர்கொண்டது.

1960, 1970-களின் பலஸ்தீன புரட்சிகரத் திரைப்படங்கள் தேசிய விடுதலைப் போராட்டம் மற்றும் பலஸ்தீனப் புரட்சியை ஆவணப்படுத்தும் உந்துதலால் இயக்கப்பட்டன. காலனியாதிக்கம் மற்றும் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான பரந்த பரப்புரையின் ஒரு பகுதியாகவும் உருவாக்கப்பட்டன. அத்தோடு இணைந்ததாக PLO வின் திரைப் படைப்பாளிகள் ஆபிரிக்க-ஆசிய, இலத்தீன் அமெரிக்க சோசலிச பண்பாட்டு வலையமைப்புகளின் ஊடாகப் பலஸ்தீனப் போராட்டத்துக்குச் சர்வதேச ஆதரவைத் திரட்ட முயன்றனர்.

இஸ்ரேலின் இத்தனை அழித்தொழிப்புகளுக்கு மத்தியிலும் பலஸ்தீனத் திரைப்பட மரபை எதிர்ப்பின் ஒரு வடிவமாக வளர்த்தெடுப்பதில் பலஸ்தீனத் திரைப்படைப்பாளிகள் பலர் பங்களித்து வந்துள்ளனர். பலஸ்தீன திரைப்பட இயக்குநர்கள், காலனியாதிக்கம், ஆக்கிரமிப்பு, இனவெறி மற்றும் புலம்பெயர்வு வாழ்வை ஆவணப்படுத்தும் ஒரு திரைப்பட மரபை உருவாக்கப் பங்களித்துள்ளனர், உதவியுள்ளனர். பலஸ்தீனப் போராட்டம், விடுதலைக் கனவுகள் மற்றும் நம்பிக்கைகளைக் கலையுருவாக்கம் செய்வதன் மூலம் மனிதத்தை மனங்களில் விதைக்க அவர்கள் பங்களித்துள்ளனர். பேரழிவுகளுக்கு மத்தியிற்கூட கதை சொல்லும் உரிமைக்கு ஊடாக பலஸ்தீன விடுதலைக்கான அடிப்படை உரிமையையும் தமது வாழும் உரிமையையும் வலியுறுத்துகின்றனர்.

சமூக ஊடகங்கள் உட்பட்ட Netflix போன்ற OTT தளங்களின் இந்தப் போக்கு ஊடக, படைப்புச் சுதந்திரத்தினைக் கேள்விக்கு உள்ளாக்குவதோடு, வரலாற்று உண்மைகளை மூடிமறைக்கும் முனைப்புக் கொண்டதாகும். வன்முறை, பயங்கரவாதத்திற்கு எதிரான கரிசனை என்ற போர்வையில் இந்தத் தணிக்கை முன்னெடுக்கப்படுவது வேடிக்கையானதாகும். இங்குதான் இவற்றின் அரசியற் போக்கு வெளிப்படுகின்றது. இவை அதிகார நலன்களைச் சார்ந்து இயங்குகின்றன என்பதற்கு வேறு ஆதாரங்கள் தேவைப்படாது.


**உசாத்துணை:**

- Netflix fjerner palestinere | Netflix removes Palestinians | Klassekampen | Mylena Kifle | 06.11.2024
- Reel resistance: Netflix's removal of Palestinian films adds to the erasure of Palestine | The conversation | Lucía Caballero | 15.12.2024
- Unanswered Question – Why Did Netflix Suddenly Remove 'Palestinian Stories' Movies? | Palestine Chronicle | Robert Inlakesh | 30.10.2024
- https://www.philistinefilms.com/ | Salt of this Sea




rooban.s@thaiveedu.com

## மகளிர் நலம்

# வெள்ளைப் படுதல்
# Leucorrhoea

– போல் ஜோசேப்

கடந்த ஜனவரி மாதம் வெளியான ‘பெண்மையின் மென்மையை மாற்றும் இறுதி மாதவிடாய்’ எனும் கட்டுரை. இதுவரை காலமும் வெளிப்படையாக பேசப்படாத, சமூகத்தில் பேசச்சங்கடப்படுகின்ற விடயங்களைப் பேசிச்செல்கிறது. பெண்களுக்கான உடல்நலப் பிரச்சினைகளை சமூகத்துக்கு வெளிப்படுத்தும் நோக்கில் எழுதப்பட்ட இக்கட்டுரை பெண்களுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் மகளிர் நலம் தொடர்பான விடயங்களையும் ஆராய்கிறது. மேற்குறிப்பிட்ட கட்டுரையின் தொடர்ச்சியாகவே இக்கட்டுரையையும் அமைகிறது.

மகளிர்நலம் தொடர்பாக மருத்துவத்தில் பல முன்னேற்றங்களும் ஆய்வுகளும் தொடர்வதால் கடந்த சில தசாப்தங்களாகவே மகளிர் மற்றும் தாய்மையின் இறப்பு விகிதம் குறைந்து தாய், சேய் நலம் பேணப்படுவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். ஆனால் மருத்துவர்களிடம் பெண்கள் வெளிப்படைத் தன்மையோடு பேசாமல் விடுதல், மகளிர் நலம்சார் மருத்துவர்களாகப் பெரும்பாலும் ஆண் மருத்துவர்கள் இருத்தல், மேலும் பொதுவான பெண்களுக்கே உரிய கூச்ச சுபாவம் போன்ற பல காரணிகளால் பெண்கள் தங்களின் இனப்பெருக்க மண்டலம் தொடர்பான குறைபாடுகளை அல்லது அதில் உண்டாகும் பிரச்சினைகளைக் கணவனிடமோ அல்லது மற்றைய நெருக்கமான குடும்ப உறவுகளிடமோ வெளிப்படையாகப் பேசுவதில் தயக்கம் காட்டுகிறார்கள். அது மட்டுமல்ல, கூட இருக்கும் ஆண் மற்றும் குடும்ப உறவுகள், பெண்களின் நிலை உணர்ந்து அவர்களுக்கு ஆதரவாக, அனுசரணையாக இருக்கத் தயக்கம் காட்டுவது அவர்களின் விழிப்புணர்வு இன்மை மற்றும் புரிந்துணர்வு இன்மையினையே வெளிப்படுத்துகிறது.

இது போன்ற கட்டுரைகள் பல விடயங்களை வெளிப்படையாகப் பேசுவதால், இருசாராரும் புரிந்துணர்வு கொண்டு குடும்ப உறவுரீதியாக ஆரோக்கியமான முன்னெடுப்புகளை மேற்கொள்ள வழிகோலும் என்பது என் எதிர்பார்ப்பு. ‘மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா’ என்பது நம் மூத்தோர் வாக்கு. ஒரு உயிரைப் படைக்கும் ஆற்றலும் அதைப் பேணி வளர்க்கும் திறனும்தான் தாய்மையின் அறம். இதன் பின்புலத்தில் ஹோமோன்கள், கருவறை, மார்பகம் போன்றவை கருவிகளாக உள்ளன.

***கருவறை மனித உயிர்களை உருவாக்க***
***இயற்கை தந்த ஆய்வு கூடம்,***
***இரண்டு விஞ்ஞானிகள்***
***இணைந்து செய்கிற இணையில்லா***
***இன்ப அதிசய ஆராய்ச்சி.***

***விஞ்ஞானிகளே தங்களைப் பிரதியெடுக்கும்***
***தசைகளான எந்திர மந்திர அறை.***

***மங்கையின் பூப்புனிதம்***
***கருவறையில் பெண்மையின்***
***முதல் தாய்மை உணர்வுக்கான***
***முதல் படிக்கல்.***

***சிலவருடங்கள் சிந்திய குருதி***
***சில மாதங்கள் தாங்கிய சுமை***
***சில நாட்கள் எடுத்த வாந்தி***
***சில மணிகள் தாங்காத வலி***
***சிந்திய கண்ணீர்***
***நீயும் நானும்***
***இன்று பிறப்புச் சான்றிதழ்களோடு.***

***கருவறை சொல்கிறது***
***வெறும் கலங்களாய் வந்த உன்னை***
***உயிர் கொடுத்து உருவாக்கி***
***போஷிக்கும் கற்பகதரு நான்***
***போதி மரமும் நான்.***

***கருவறையே தாயெனும் ஆலயத்தில்***
***உயிரைப் படைக்கும் ஆற்றல்***
***உனக்குள் அதனால்தான் ஆலயங்களில்***
***ஆண்டவனின் இருப்பிடம்***
***கருவறை எனப்படுகிறதோ.***

## வெள்ளைபடுதல் நன்மையையும் தீமையும்:

பெண்களுக்கு வயது வேறுபாடு இன்றி வரும் ஒரு விடயம் வெள்ளை படுதல் (LEUCORRHOEA) ஆகும். இது பிறப்புறுப் பில் தோன்றும் ஒரு திரவத்தன்மையான வெளியேற்றமாகும். இதில் இரண்டு விதமான வெள்ளைப்பாடு உண்டு, ஒன்று இயற்கையாக உண்டாவது மற்றது பல நோய்களின் காரண மாக ஏற்படுவது. எப்போதும் பெண் உறுப்பானது ஒரு ஈரத் தன்மையோடு இருப்பது இயற்கை மட்டுமல்ல பாதுகாப்பான துமாகும். இதில் உள்ள இயற்கையான எதிர்ப்புகள் நோய்க் கிருமிகளை உள்ளே சென்று தாக்காதவாறு ஒரு பாதுகாப் புக் கவசமாகச் செயற்படுகிறது. அது மட்டுமல்ல பெண்ணு றுப்பானது வறண்டு போகாமல் புண்களோ, வெடிப்புகளோ மற்றும் காயங்களோ உண்டாகாமல் தடுப்பதற்கு உதவுகி றது. மேலும் சினைப்பையில் இருந்து OVULATION என்ற கரு முட்டை வெளிப்படும்போதும், மாதவிலக்கிற்கு முன்பாகவும் அல்லது பின்பாகவும் கர்ப்ப காலத்திலும் வெள்ளைபடுதல் ஏற்படுவது வழமையானதாகும். இது ஈஸ்ற்ரோஜென் போன்ற ஹோமோன்களின் மாற்றத்தாலும் உண்டாகிறது. தாம்பத்திய உறவின் போது சற்று அதிகமாகத் தோன்றும் திரவ வெளிப் பாடு மிகவும் பயனுள்ளது மட்டுமல்ல விந்தின் இலகுவான பயணத்திற்கும் வலி இல்லாத தாம்பத்திய உறவுக்கும் பயன் அளிக்கிறது. சிறுமிகளுக்கு வெள்ளைபடுதல் ஏற்படும்போது 'இன்னும் வயசுக்கு வரல இவளுக்கு இப்படி வெள்ளைபடுதே' என்று பல பெற்றோர்கள் கவலைப்படுவதுண்டு.

கண்ணீர் சுரக்கும் போதும், உமிழ்நீர் சுரக்கும் போதும், மூக் கில் தும்மல் ஏற்பட்டு சிறிது சளி வெளியேறும் போதும் கவ லைப்படுகிறோமா? அதேபோல்தான் வெள்ளை படுதலும் பிறப்புறுப்பில் கிருமித்தொற்றுகள் ஏற்படாமல் தடுக்கும் இயற்கையான இயல்பான ஒரு பாதுகாப்பு வழிமுறைதான். இப்படி வெளியேறும் சாதாரண வெள்ளைப்பாடு பெண்ணின் முதன்மையான இனப்பெருக்க உறுப்புகளான கருப்பை, பலோப்பியன் கருக்குழாய், கருப்பை வாய்ப்பகுதி, சினைப்பை மற்றும் பிறப்புறுப்பில் உள்ள பாத்தோலோனின் மற்றும் ஸ்கீன் சுரப்பிகள் போன்றவைதான் நிறமற்ற ஜெலி போன்ற திரவத்தைச் சுரக்கின்றன. பெண்களின் முதன்மை ஹோமோன்களான ஈஸ்ட்ரோஜன், புரொஜெஸ்ட்ரோனின் தூண்டுதல் காரணமாக பாத்தோலோனின், ஸ்கீன் சுரப்பிகள் தூண்டப்படுகின்றன. அவைதான் சற்று அமிலத்தன்மை கொண்ட வழுவழுப்பான திரவத்தைச் சுரக்கின்றன. முன்பு குறிப்பிட்டதுபோல இந்த இயற்கையான வெள்ளைபடு தல் இனப்பெருக்கப் பாதையைத் தொற்று நோய்களிலிருந்து பாதுகாக்கிறது. அதன் வறட்சியையும் போக்கி ஈரலிப்பாக வைத்திருக்கிறது.

## மைக்ரோபயோம் நல்ல நுண்ணுயிர்கள்:

நாம் பிறந்தது முதல் பல நன்மை பயக்கும் நுண்கிருமிகள் நமது உடலின் பல பகுதிகளிலும் ட்ரில்லியன் கணக்காக நம் மோடு வாழ்கின்றன. இவற்றை மைக்ரோபயோட்டா அல்லது மைக்ரோபயோம் என்று அழைக்கிறோம். இவை உயிர்ப் போடு இருப்பதால்தான் நாம் உயிரோடு வாழ்கிறோம் என் பது இன்னொரு அதிசயம். உடலுக்கு உள்ளும் வெளியிலும் வாழும் இவை பெரும்பாலும் நமது நோய் எதிர்ப்பாற்றலிலும் வேறு பல பணிகளிலும் உதவி செய்கின்றன. அதேபோல் தான் பிறப்புறுப்புப் பாதையில் லாக்ட்ரோபசில்லஸ் போன்ற பல நுண்ணுயிர்கள் பலவிதமான இரசாயனங்களைச் சுரந்து நோய் உண்டாக்கும் ஆபத்தான கிருமிகளை அழிப்பதில் நமக்கு உதவி செய்கின்றன. முக்கியமாக இரசாயனங்களான லாக்டிக் அமிலம், ஹைட்ரஜன் பெராக்ஸைற் போன்றவற் றைக் குறிப்பிடலாம்.

இயல்பான இந்த வெள்ளைபடுதல் நோய்களின் அறிகுறி யாக மாறும்போதுதான் பிரச்சினை வலுப்பெறுகிறது. அது பற்றித்தான் நாம் இனி விரிவாகப் பார்க்கப்போகிறோம். LEUCO என்ற கிரேக்கச் சொல்லின் பொருள் வெள்ளை, RHOIA என்றால் வெளியேறுதல் என்பதாகும். நோயின் அறி குறிகளாக வெள்ளை படுதலின் போது கட்டியான திரவம் அளவுக்கதிகமாக வெளிப்படும். இது மஞ்சள் நிறமாகவும் சில வேலைகளில் துர்நாற்றத்துடன் கூடியதாகவும் காணப்பட லாம். அது மட்டுமல்ல இதன் காரணமாக, பிறப்புறுப்புப் பகு தியில் எரிச்சலும் அரிப்புத்தன்மையும் ஏற்படலாம். இவ்வா றான சூழ்நிலையில் மருத்துவரின் ஆலோசனை அவசியமான தாகும். ஏனென்றால் பெண்ணின் இனப்பெருக்க உறுப்புக ளில் ஏற்படக்கூடிய பல நோய்களின் அறிகுறியாகவும் அசா தாரண வெள்ளைபடுதல் இருக்கலாம். இத்தகைய வெள்ளை படுதலில் நீங்கள் அவதானிக்க வேண்டிய விடயங்கள் குறிப் பாக நிறம், வாசனை, அளவு, கால அளவு, உடலின் குணம் குறிகள், உங்களுக்கு உள்ள இணை நோய்கள் போன்றவற் றையும் கருத்தில் கொள்ளுதல் அவசியமானதாகும்.

## வெள்ளைபடுதலின்போது அவதானிக்க வேண்டிய விடயங்கள்:

**நிறம்:**
பிறப்புறுப்பில் இருந்து வெளியேறும் திரவம் தெளிவானதாக வும் நிறமற்றதாகவும் இருந்தால் ஆரோக்கியமானதாகக் கரு தலாம், ஆனால் மஞ்சள் நிறமாகவோ, பச்சை நிறமாகவோ, சாம்பல் நிறமாகவோ, தயிர் போல திரிந்த அல்லது இரத்தம் கலந்த மண்ணிறக் கலவையாகவோ காணப்படுமாயின் கருப் பையிலும் கருப்பைவாய்ப் பகுதியிலும் அல்லது பிறப்புறுப்பி லும் தீவிர தொற்று உள்ளது எனக் கூறலாம். சற்றுக் கட்டி யாக அரிப்புடன் கூடியதாய் இருந்தால் ஈஸ்ற் என்ற பங்கஸ் தொற்றாகக்கூட அது இருக்கலாம்.

**வாசனை:**
ஆரோக்கியமான வெள்ளைபடுதல் எந்தவித வாசனையை யும் கொண்டிராது, ஆனால் துர்நாற்றம் வீசினால் அல்லது மீன்வாடை இருந்தால் இனப்பெருக்க உள்ளுறுப்புகளில் பக் டீரியாத் தொற்று தீவிரமாக இருப்பதை அல்லது புண்கள் இருப்பதை உறுதி செய்து கொள்ளலாம்.

**அளவு மற்றும் கால அளவு:**
வழக்கமானதை விட எப்போதும் வழிந்து கொண்டிருக்கும் தன்மையைக் கொண்டு இருந்தாலும் நீண்டகாலமாக வெள் ளைபடுதல் ஏற்பட்டாலும் மருத்துவரை அணுகிப் பரிசோத னைகளைச் செய்தல் அவசியமானது.

## வெள்ளைப்படுதலும் அழற்ச்சியும்:

பல வகையான பக்டீரியா கிருமிகளின் தொற்றுகள் கென்டிடியாசிஸ் என்ற ஈஸ்ற் நோய்த்தொற்று, கொனோரியா மற்றும் சிபிலிஸ் போன்ற பால்வினை நோய்க் கிருமிகளினால் உண்டாகும். தீவிரத் தொற்றுநோய்கள் பிறப்புறுப்பு முதல் கருவறைச் சினைப்பை வரை அழற்ச்சியை உண்டாக்குவது மட்டுமல்ல வேறுபல உடல் உபாதைகளையும் தோற்றுவிக்கிறது. மேலும் பாலியல் தொற்றுகளான ஹியூமன் பாப்பிலோமா வைரஸ், ஒட்டுண்ணிக்கிருமி, மற்றும் கிளாமீடியா கிருமிகளினாலும் இனப்பெருக்க உறுப்பு அழற்சிகள் ஏற்படும். குறிப்பிட்ட பால்வினைத் தொற்றுகள், இந்த நோய்க்கிருமித் தொற்றுள்ளவர்களுடன் உடலுறவு கொள்வதாலும் பலருடன் தாம்பத்திய உறவுகள் வைத்துக் கொள்வோருடன் உறவு வைத்துக் கொள்வதாலும் ஒருவரிடம் இருந்து இன்னொருவருக்கு இலகுவில் பரவிவிடுகிறது. மேற்குறிப்பிட்ட எல்லா வகையான நோய்த்தொற்றுக்களும் பிறப்புறுப்பு வழியாகப் பரவிப் பெண்களின் உள் உறுப்புகளான கருப்பை, கருக்குழாய், சினைப்பை போன்றவற்றையும் பாதித்து அவற்றிலும் ஒவ்வாமை உண்டாக்கி PELVIC INFLAMMATORY DISEASES என்ற தீவிர அல்லது நாள்பட்ட நோயை ஏற்படுத்துகிறது. அதன் அருகில் உள்ள மற்ற உறுப்புகளையும் குறிப்பாகச் சிறுநீரகம் போன்றவற்றையும் பாதிக்கலாம்.

அசாதாரணமான வெள்ளைபடுதல் என்பது கிருமிகளால் மட்டுமல்ல கருத்தடைச் சாதனங்களை நீண்ட காலம் பயன்படுத்துவதால் ஏற்படும் ஒவ்வாமையாலும் வரலாம். மாதவிடாய் காலங்களில் பெண்கள் பயன்படுத்தும் சிந்தற்றிக் நப்கின்ஸ், மாதவிலக்கிற்குப் பிரத்தியேகமாகப் பயன்படுத்தப்படும் கப்ஸ், பிறப்புறுப்பில் பயன்படுத்தப்படும் வாசனைத் திரவியங்கள் போன்றவை ஒவ்வாமையை உண்டாக்குவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மெனோபாஸ் என்ற இறுதி மாதவிடாய்க் காலத்தில் ஈஸ்ட்ரோஜன் போன்ற ஹோமோன்கள் குறைவடைவதால் பெண்களில் அனேகமானவர்களுக்கு இனப்பெருக்கப் பாதைகளில் வறட்சி உண்டாகிக் கிருமித் தொற்றுகள் ஏற்பட்டு வெள்ளை படுதல் ஏற்படலாம். கட்டுரையின் முன் பகுதியில் குறிப்பிட்டது போல பிறப்புறுப்பில் இயற்கையாக இருக்கும் லாக்ட்ரோபசில்லஸ் போன்ற நன்மை தரக்கூடிய நுண்ணுயிர்கள் ஆன்ட்டிபயாட்டிக் மற்றும் ஸ்டீராய்ட் மருந்துகளின் பாவனை, பெண்களுக்கு ஏற்படக் கூடிய இதர பல நோய்களின் தாக்கம் போன்றவற்றின் காரணமாக அழிந்து போகின்றன. இதனால் தீவிர நோய்களை உண்டாக்கும் கிருமிகள் இலகுவாகப் பிறப்புறுப்பின் வழியே நுளைந்து பாதிப்புக்களை ஏற்படுத்துவதால் வெள்ளைபடுதல் தீவிரமாகிறது.

வெள்ளைபடுதல் நோயானது ஏன்?, எப்படி?, எதனால்?, யாருக்கு ஏற்படுகிறது என்பதற்கான காரணங்களை அறிந்தால் அதற்கான தீர்வுகளை மிக இலகுவாக எட்ட முடியும். எதனையும் வருமுன் காப்பதுமே மிக அவசியமானது. நோயின் தன்மை, நோயின் காரணிகள், அதன் அறிகுறிகள், நோயாளியின் வரலாறு போன்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஹோமியோபதி மருத்துவமுறையினூடாக தீர்வுகளை எட்ட முடியும்.



paul.joseph@thaiveedu.com






அனைத்துலகப் பெண்கள் நாளுக்காக துணிவுடன் போராடி, அளப்பரிய தியாகங்களை மேற்கொண்ட அனைத்துப் பெண்களையும் இவ்வேளை நினைவுகூர்ந்து தலைசாய்த்து வணங்குகின்றேன். இந்த 2025-ம் ஆண்டிற்கான சர்வதேச பெண்கள் நாளின் கருப்பொருள் 'Accelerate Action' என்பது பாலின சமத்துவத்திற்காகச் சேர்ந்து துரிதமாகச் செயற்படலாம் என்பதை உணர்த்துகிறது. ஒருவர் சாதனையாளராக இருப்பதற்கு - அதாவது ஒரு பெண்ணின் வெற்றிக்கு யாரோ ஒருவரின் உதவிக் குரல் அவருக்குப் பக்கபலமாக ஒலித்துக் கொண்டுதான் இருந்திருக்கிறது. அத்தகைய சந்தர்ப்பம் வீட்டில் இருந்துதான் உருவாகியிருக்கிறது. குடும்பத்திலுள்ள தாயாக இருக்கலாம், தந்தையாக இருக்கலாம், சகோதரியாக இருக்கலாம், சகோதரனாக இருக்கலாம், துணைவருடைய உதவியோ அல்லது மகனுடைய உந்துதலோ அதற்குப் பின்னால் நிட்சயமாக இருந்திருக்கலாம்.

அந்தவகையில் ஆண் - பெண் சமத்துவத்தை உணர்ந்து, நாம் செயற்பட்டு இந்நாளை முன்னெடுப்பது பொருத்தமானது என நம்புகின்றேன். பெண்களுக்கு ஏற்படும் வன்மங்கள், அநீதிகளுக்கு எதிராகக் கண்டனத்தை நாம் வழங்கவேண்டும். அது பெண்ணாக மட்டுமன்றி யாராக இருந்தாலும் பரவாயில்லை. அதற்குக் குரல் கொடுக்கவேண்டும். பெண்கள் தினத்தைக் கொண்டாடும் இத்தினதில் நாம் பெண்களாகப் பிறந்ததை எண்ணிப் பெருமிதத்தோடு இருக்கின்றோம்.

*'மங்கையராயப் பிறப்பதற்கே நல்ல மாதவம்
செய்திடல் வேண்டுமம்மா'*

என்ற கூற்றுக்கு இணங்க நாம் எல்லோரும் பெருமிதமடைய வேண்டும். பெண் என்பவள் பொறுமையின் சிகரம் என்று கூறுவார்கள். ஒரு தாய் எவ்வளவு பொறுமையைக் கடைப்பிடிக்கிறாள் என்பதை நாம் குறிப்பாக அவதானிக்க முடிகின்றது. ஒவ்வொரு பெண்ணும் அந்தத்தாய்மை நிலையை அடையும் போது அது தானாகவே உருவாகி விடுகின்றது. எனவே இளையவர்களுக்கு பொறுமையில்லை என்று கூறுவதைவிட, அவர்கள் அந்த நிலைக்கு வரும்போது அவர்களிடம் இவை இயல்பாகவே வந்துவிடும். இந்தவேளையில் ஒவ்வொரு பெண்ணுக்கும் மகளிர்தின வாழ்த்துகளைக் கூற விரும்புகின்றேன்.

அமெரிக்காவில் சோசலிஸ் கட்சிதான் பெண்கள் தினத்தை முன்னெடுத்தது. அங்கு செயற்பட்ட தொழிலாளர் இயக்கத்திலிருந்துதான் முதன்முதலில் தேசிய மகளிர் தினம் அறிவிக்கப்பட்டது. குறுகிய கால சேவை நேரம், பெண்களின் வேலைக்கேற்ப சிறந்த ஊதியம், வாக்களிக்கும் உரிமை கேட்டு நியூயோர்க்கில் 1908-ம் ஆண்டில் அணிதிரண்டு ஆரம்பித்த பெண்கள் போராட்டம் இன்று சர்வதேச பெண்கள் தினத்தைக் கொண்டாடுவதற்கு வழிவகுத்தது. அந்தப் பெண்கள் போராட்டத்தில் பதினையாயிரம் பெண்கள்வரை பங்குபற்றியிருந்தார்கள் என்று அறிய முடிகின்றது.

மகளிர் தினத்தைச் சர்வதேச மயமாக்கவேண்டும் என்ற சிந்தனை கம்யூனிஸ ஆர்வலரும் பெண்கள் உரிமைக்காகக் குரல் கொடுப்பவருமான கிளாரா ஜெட்கின் (Clara Zetkin) இடமிருந்து உதயமானது. அவ்வேளையில் ஹோபன் ஹோலில் நடந்த 'உழைக்கும் பெண்களுக்கான சர்வதேச மகாநாட்டில்' இதனை அவர் முன்வைத்துப் பேசியவேளை அதனை ஏற்றுக்கொண்டு முன்னெடுத்தார்கள். அங்கு பதினேழு நாடுகளைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் அம்மாநாட்டுக்குச் சமூகமளித்திருந்தனர் என அறியமுடிகின்றது. இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டது மட்டுமல்ல 1911-ம் ஆண்டில் ஒஸ்ரியா, ஜேர்மனி, டென்மார்க், சுவிற்ஸ்லாந்து போன்ற நாடுகளில் எல்லாம் இதனைக் கொண்டாடினார்கள் என அறிகிறோம். இதனை நினைவிருத்தி தொழில்நுட்ப அளவில் 2011-ஆண்டில் 111-வது சர்வதேச பெண்கள் நாள் கொண்டாடப்பட்டதையும் குறிப்பிட்டுக் கூறலாம்.

1975-ம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபை இந்த நாளைக் கொண்டாட வேண்டுமென ஆரம்பித்தபோது, அதிகாரபூர்வமாக இதனை மாற்றினார்கள். இதனை ஐக்கிய நாடுகள் சபை 1996-ல் பெண்கள் தினமாக ஆரம்பித்தவேளை அதன் முதற் கருப்பொருளாக 'கடந்த காலத்தைக் கொண்டாடுதல், எதிர் காலத்திற்கான திட்டமிடல்' என்பதனை மையமாகக் கொண்டு இதனை முன்னெடுத்தனர்.

1917-ம் ஆண்டில் ரஷ்யப் பெண்கள் 'உணவும் அமைதியும்' என்ற பெயரில் புரட்சிப் போராட்டத்தைத் தொடங்கும்வரை இந்தத்திகதி அதாவது மார்ச் மாதம் எட்டாம் திகதியென்பது நடைமுறைப்படுத்தப்படவில்லை. அவர்களின் அந்த நான்கு நாட்கள் இடம்பெற்ற போராட்டத்தில்தான் கிறகோரியன் நாட்

காட்டியில் காட்டப்பட்ட மார்ச் மாதம் எட்டாம் திகதியை பெண்கள் நாளாக உறுதிப்படுத்திக் கொண்டார்கள் என்பதனைப் பார்க்க முடிகின்றது.

மகளிர் தினத்தில் ஊதாநிறத்தைத்தான் பயன்படுத்துவார்கள். ஊதாநிறம் நீதி மற்றும் கண்ணியத்தைக் குறிப்பதனால் சர்வதேச பெண்கள் தினத்தில் ஊதா நிற ஆடைகளையே அவர்கள் முக்கிய நிறமாகப் பயன்படுத்துவதை அவதானிக்க முடிகின்றது.

மகளிர் தினத்தைக் கொண்டாடும் இந்த வேளையில் பெண்களாகிய நாம் சுயமரியாதையாக இருப்பதை நாம் வெளிப்படுத்த வேண்டும். எந்த இடத்திலும் யாரும் உயர்ந்தவர்கள்




இல்லை என்பதை நினைவிருத்தவேண்டும். அதுதான் பெண்கள் குறித்த சுயமரியாதை என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும் எங்கே சுயமரியாதை கிடைக்கின்றதோ அங்கே அவள் மகிழ்ச்சியாக இருக்கின்றாள். எல்லோரும் சமம் என்பதை சமூகத்தினால் போற்றப்படவேண்டும். பெண் என்ற அடையாளத்தைச் சமூகம் சுமத்திக்கொண்டிருப்பதை விடுவிக்கும்போதுதான் அங்கே சுயமரியாதை ஒரு பெண்ணுக்குக் கிடைக்கின்றது.

பெண்கள் முன்பைவிட பல்வேறு தளங்களில் முன்னேறிக் கொண்டு வருகிறார்கள். ஒவ்வொரு பெண்ணும் தத்தமது திறமைகளை அற்புதமாக வெளிப்படுத்தி வருகின்றமை போற்றுதற்குரியது. அவர்களின் பெருமைகள் குறித்து பல சந்தர்ப்பங்களில் உரையாடியும் வந்திருக்கின்றோம். ஆனால் புதிய அலையாக இடம்பெற்றுக்கொண்டிருக்கும் தற்போதைய இளம் சமுதாயத்தினரின் சிக்கல்கள் எமக்குப் புரிவதேயில்லை. இளையவர்கள் சிறப்பாகத்தான் வளர்ந்து வருகின்றார்கள். படிப்படியாக அவர்கள் மிகவும் முன்னேறிக்கொண்டுதான் இருக்கின்றார்கள்.

கனடாவில் இருபத்தியெட்டு வயதுக்குக் குறைந்த 63 இளையவர்களின் (இலங்கை, இந்தியா) தற்கொலைகள் ஒரு வருடத்தில் இடம்பெற்றிருக்கின்றன. அதிலும் கூடுதலாகப் பெண்பிள்ளைகளின் தற்கொலைகள் இடம்பெற்றிருந்தமை தெரியவந்துள்ளது. பெண் பிள்ளைகளின் உடல்களை பிரேதப் பரிசோதனை செய்தவேளை சினைமுட்டைகள் காணப்பட்டதாகவும், அவை அவர்களின் மாதவிடாய்க் காலத்தில் அதிகயமாக இடம்பெற்றிருக்கின்றன. இத்தகைய வைத்தியர்களின் அறிக்கை மூலம் தெரிவிக்கப்பட்ட தகவல்கள் எம்மால் கவனிக்கப்பட வேண்டிய தொன்றாகும். மாதவிடாய் வருவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பும், மாதவிடாயின் போதுள்ள மூன்று நாட்களும், அதற்கு பின்னர் மூன்று நாட்களும் அதாவது ஒன்பது நாட்களும் மிகவும் உக்கிரமான காலகட்டம் எனவும், அவ்வேளைகளில் பெண்களுக்குக் கவனிப்பு அவசியமெனவும் அறியமுடிகிறது.

வாழ்க்கையில் வெற்றி என்பது தானாக வந்து வெற்றிவாகை சூடுவதில்லை. யாரிடமிருந்து அந்தச் சந்தர்ப்பம் கிடைக்கின்றதோ அதனைப் பயன்படுத்திக் கொள்ளும்போது வெற்றி கிடைக்கின்றது. நாளை உலகம் உனக்காத்தான் எனச் சூழலைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் தாங்கள் விரும்புவதைச் செய்து கொண்டிருப்பதுதான் மிகப் பெரும் நிறைவைத் தரும் எனக் கொள்ள வேண்டும்.

பெண்களுக்கெதிரான குற்றங்கள் எங்கே நடக்கின்றனவோ அங்கே பெண் உரிமைக்காகப் போராடுவதும், போராட்டத்தின் நியாயங்களை சமூகத்திற்கு எடுத்துக் கூறுவதும்தான் உண்மையான பெண்கள் நாளாக நாம் கொள்ளலாம். ஆனால் இவை எதனையும் கருத்தில் கொள்ளாமல் காதலர் தினத்தைப்போலவே சர்வதேச பெண்கள் தினமும் கொண்டாட்டமாகச் செய்யப்பட்டு வருகின்றது. பெண்கள் தினம் என்பது இன்று அதன் முக்கியத்துவத்தை இழந்து எல்லோரினதும் மன மகிழ்ச்சிக்கும், கொண்டாத்துக்கு மட்டுமே என்று மாறி இருப்பதை கண்கூடாகப் பார்க்க முடிகின்றது.

இன்று மிக மகிழ்ச்சியோடு கொண்டாடப்படும் பெண்கள் தினமானது ஒரு நூற்றாண்டுக் காலப் பெண்களுடைய போராட்டங்களின் மீது கட்டமைக்கப்பட்டது. அவர்கள் நடத்திய பேரணி, ஆர்ப்பாட்டங்கள்தான் இன்றைய எமது ஆர்ப்பரிப்புகளுக்குக் காரணமாக இருக்கின்றது என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். பெண்களின் உரிமைகளுக்காக அன்று அவர்கள் குரல்கள் கொடுக்காவிட்டால் இன்றும் நம்முடைய குரல்கள் நசுக்கப்பட்டேயிருந்திருக்கும்.

வாக்குரிமைகளுக்காகப் போராடி அதைப் பெற்றுத்தராவிட்டால் இன்றும் நாம் வாக்களிக்கும் உரிமையற்று வெறும் அலங்காரப் பதுமையாகவே இருந்துகொண்டிருப்போம். இன்று பெண்களாகிய நாம் அனுபவித்துக்கொண்டிருக்கும் உரிமைகளையெல்லாம் போராடிப் பெற்றுத்தரக் காரணமாக இருந்த முன்னோடிப் பெண்கள் அனைவரையும் இவ்வேளை நாம் போற்ற வேண்டும்.



navajothy@thaiveedu.com




# பெண்நிலைச் சிந்தனைகள் : இன்னும் முடிவடையாத உரையாடல்

- மாதவி உமாசுதசர்மா

பேராசிரியர் சித்திரலேகா மௌனகுரு இலங்கைத் தமிழ் பெண்ணிய எழுத்தாளர்களில் முக்கியமானவர். 1980-களிலிருந்து, பெண்களின் உரிமைகள், பால் சமத்துவம், போர், இடப்பெயர்வு, குடும்ப அமைப்புகள் ஆகியவை குறித்து



அவர் எழுதிய கட்டுரைகள், பெண்கள் குறித்த பாரம்பரிய கருத்துகளையும் சமூக அமைப்புகளையும் கேள்விக்குட்படுத்தி, ஒரு மாற்றத்திற்கான சிந்தனையை உருவாக்க முயன்றன. பெண்ணிய செயற்பாட்டாளராக இருந்து காத்திரமான பங்களிப்பை வழங்கிய சித்திரலேகா அவர்கள் பெண்களின் உரிமைப் போராட்டங்கள், பெண்களுக்கு எதிரான வன்முறை, பாலியல் துன்புறுத்தல், குடும்ப வன்முறை போன்றவற்றைத் தன் எழுத்துக்களின் வாயிலாக ஆவணப்படுத்தி வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தார்.

1991-ம் ஆண்டு இவரால் கால்கோளிடப்பட்ட சூர்யா பெண்கள் அபிவிருத்தி நிலையம் (Surya Women's Development Centre) இலங்கையின் கிழக்குப் பகுதிகளில் பெண்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு செயற்படும் அமைப்புகளில் முக்கியமானதாகும். இந்த அமைப்பு, குறிப்பாகப் போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள், விதவைகள், பாலியல் வன்முறைக்கு உள்ளானவர்கள் மற்றும் வாழ்வாதாரத்தை இழந்தவர்கள் போன்றோருக்கு ஆதரவு அளிக்கிறது.

சித்திரலேகா மௌனகுருவின் எழுத்துக்களும் சமூகச் செயற்பாடுகளும் இலங்கைப் பெண்களின் வாழ்க்கையை ஒரு அகலமான பார்வையில் புரிந்துகொள்ளும் முக்கிய ஆவணங்களாக இருக்கின்றன. 1980 தொடக்கம் 1991-ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சித்திரலேகா மௌனகுருவால் எழுதப்பட்ட 9 கட்டுரைகளைத் தொகுத்து 1993-ம் ஆண்டு பெண்கள் கல்வி ஆராய்ச்சி நிலையம் 'பெண்நிலைச் சிந்தனைகள்' என்ற நூலை வெளிக்கொண்டு வந்தது. இந்நூலானது, முப்பது வருடங்கள் கழித்து, மீள் பதிப்பாக 2023-ம் ஆண்டு தாயதி வெளியீடாக வெளிவந்துள்ளது.

கடந்த மாதம் தேசிய கலை இலக்கியப் பேரவையின் புத்தக அரங்க விழாவில் இந்த நூல் குறித்து யாழினி வினோத்குமார் அவர்கள் ஆற்றிய உரை இந்நூலை உடனடியாக வாசிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்தியது. மீள் பதிப்பாகப் பல நூல்கள் வெளிவந்து இருக்கின்றன. பெரும்பாலும் தொகுப்பு அல்லது ஆவணப்படுத்தலாக அவை அமையும் அவற்றில் எழுதப்பட்டுள்ள விடயங்கள் பல காலவோட்டத்துடன் மாறி இருக்கும்.

இருப்பினும், 'பெண்நிலைச் சிந்தனைகள்' நூல் பேசும் விடயங்களில் பெருமளவானவை எமது நாட்டில் இன்றுவரை மாற்றமடையாமல் அப்படியேதான் இருக்கின்றன. இவ்வாறு மாற்றமடையாமல் இருப்பதுதான் எதிர்காலம் குறித்த கேள்விக்குறியை என்னுள் உருவாக்கி, மேலதிக உரையாடலுக்குத் தூண்டியுள்ளது.

ஆண், பெண் இருவரிடையான வேறுபாடென்பது விஞ்ஞானத்

தைப் பொறுத்த வரையில் X, Y குரோமோசோம்களின் வேறு பாடே தவிர பெரிதாக வேறொன்றுமில்லை. உயிரியலில் அடுத்த தலைமுறை மனித உயிர்களை உருவாக்குவதற் கான உடலளவிலான சில வேறுபாடுகள் உள்ளன. அவ்வ ளவே!

நிற்க, அவ்வளவு மட்டுமா ?

இயற்கை நிர்ணயித்த மாற்றங்கள் இவ்வளவே, ஆனால் ஆண்டாண்டு காலமாக வெவ்வேறு காலப்பகுதிகளிலும் ஒரு மனித இனம் இன்னொரு மனித இனத்திற்கு அடிமைப்பட்டே வாழ்ந்து வந்துள்ளது. அதன் அளவும், வடிவங்களுமே மாறு பட்டுள்ளன. அடிப்படையான விடயங்கள் பெருமளவு மாற்றம டையவில்லை. மாற்றம் என்ற ஒன்று எப்போது எல்லோருக் கும் சமநிலையான விடயமாக அமையப்போகிறது என்ற பெரிய கேள்விக்குறி தொக்கி நிற்கின்றது, எப்போதுமே!

இந்தச் சமநிலையற்ற தன்மைகள் குறித்தும், எவ்வாறு ஒருசா ராரைப் பாதிக்கின்றது என்பது குறித்தும் ‘பெண்நிலைச் சிந்த னைகள் நூல்’ உலகளாவிய தரவுகளோடும், பரந்துபட்ட பார் வையோடும் பேசுகிறது. கல்வி கற்றல், வேலை பார்த்தல் முத லியவை சமூகத்தில் நிலவும் ஆண் மேலாதிக்கக் கருத்தி யலை எவ்விதத்திலும் மாற்றியமைக்கவில்லை என்ற பெரும் உண்மையை ‘பெண்ணிலை வாதம் வெற்றுக்கோசமா ?’ என்ற கட்டுரை வலியுறுத்தி நிற்கிறது. அதில் நூலாசிரியர் இவ்வாறு குறிப்பிடுகிறார். ‘மத்தியதர உயர் வர்க்கத்தவர் மட்டத்தில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கல்வி, வேலை வாய்ப்பு, சட்டரீதியான அந்தஸ்து என்பவற்றில் முன்னேற்றக ரமான மாற்றங்கள் ஏற்பட்டன. எனினும் பெண்கள் பற்றிய சமூ கத்தின் அபிப்பிராயத்தில் பெருமளவு மாற்றம் ஏற்பட வில்லை. (பக்கம் 37,38).

‘அதாவது குறிப்பிட்ட சில தொழில்கள் பெண்ணுக்குரியவை எனவும் ஆணுக்குரியவை எனவும் வகுக்கப்பட்டு இருக்கின் றன. குழந்தை பெறுதல், பராமரித்து வளர்த்தல், வீட்டுடன் தொடர்புடைய வேலைகள் போன்ற வேலைகள் பெண்ணுக்கு ரியனவாகும், வீட்டுக்கு வெளியிலான வேலைகளும், வரு வாயை ஈட்டுகின்ற வேறு தொழில்களும் ஆணுக்குரியனவாக வும் கருதப்படுகின்றன. இத்தகைய பாகுபாடு சமமான அந் தஸ்துடைய சமூக அங்கத்தவர்களிடையே அமைந்திருப் பின், அது பிரச்சினைக்குரியதாகாது. ஆனால் இத்தகைய பாகுபாடு ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையிலான சமத்து வம் இல்லாத உறவுடனும், பெண்களது தாழ்த்தப்பட்ட நிலை யுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது.’

பெண்களின் வீடு சார்ந்த தொழில்கள், உழைப்புகள் போன்ற வற்றை அவர்களின் கடமைகள் அல்லது அன்றாட நடவடிக் கைகள் என்றே பலரும் கருதுகின்றனர். இது பெண்களுக் கென்று பல தொழில்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள நிலை மையினை வெளிப்படுத்துகிறது. இதன் அடிப்படைக் கார ணம் ஆண், பெண் சமத்துவம் இன்மையாகும். பெண்கள் மீதான ஆணின் ஆதிக்கம், சுரண்டல் ஆகியவை இருக்கும் வரை ஆண், பெண் சார்ந்த பாகுபாடுகளும் காணப்படும்.

‘ஆணின் உழைப்பு அல்லது தொழில், உணர்வுபூர்வமான, பகுத்தறிவு சார்ந்த, திட்டமிட்ட, உற்பத்தித் தன்மை வாய்ந் தது. இதுவே மனித உழைப்பாகும். பெண்ணினது உழைப்பு அவளது உடல் இயற்கையுடன் தொடர்புடையது. ஆகவே அது இயற்கையான நடவடிக்கை என்பதும் அதில் எத்தகைய உற்பத்தித் தன்மையும் இல்லை என்பதும் இக்கருத்தாக்கத் தின் மூலம் பெறப்படுபவை ஆகும்.’

இன்றைய காலத்துப் பெண், வீட்டுச் சுமை, வேலைச் சுமை ஆகிய இரண்டு சுமைகளையும் சமநிலையுடன் சுமந்து தன் னுடைய வாழ்நாள் முழுவதும் மதங்கள் அளிக்கும் குறை




வான அந்தஸ்து, கலாசார அடையாளங்களை காப்பாற்றுதல் (ஆண் மீறினாலும் பெரிதாக கவனிப்பதில்லை) முதலிய அனைத்து சமநிலை அல்லாத தன்மைகளையும் பொறுத்துப் போக வேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்படுகின்ற நிலைமை குறித்து இந்த கட்டுரை பேசுகிறது.

பால் அடிப்படையில் அமைந்த பாகுபாட்டில் குறிப்பிடத்தக்க சில தொழில்கள் பெண்ணுக்குரியவை, வருவாயை ஈட்டு கின்ற வெளியான வேலைகள் ஆணுக்குரியவை என்பது அழுத்தமாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது இங்கு கவனிக்கத்

தக்க விடயமாகும்.

மேலும் மனித உழைப்பின் ஆதி நிலை, பெண்களும் உற்பத்தியும், ஆண்களும் உற்பத்தியும், ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான அசமத்துவ உறவின் தோற்றம், மாற்றுத் திட்டங்கள் என்ன என்பது பற்றியும் விரிவாக இந்த கட்டுரை பேசுகிறது.

***‘எனது மனைவி***
***வேலைக்குச் செல்வதில்லை***

***அப்படியாயின்***
***உலகம் ஓயாமல் சுழல்வதற்காய்***
***உழைப்பவர் யார்?***

***சமையல் செய்வதும் துப்பரவாக்கலும்***
***துணிகளைத் துவைப்பதும் யார்?***

***தண்ணீர் சுமப்பதும் யார்?***

***குழந்தை பராமரிப்பும்---***
***நோயாளர் கவனிப்பும்***
***எவரது வேலை ?***

***எவர் வேலை செய்வதனால்***
***ஆண் தனது நண்பர்களுடன்***
***மது அருந்தவும் புகை பிடிக்கவும்***
***சீட்டாடவும் முடிகிறது ?***

***ஆண் ஒருவன்***
***வேலை செய்யவும்***
***ஊதியம் பெறவும்***
***அதனால் பிள்ளைகள்***
***கல்வி கற்கவும் உதவும் சக்தியை அளிப்பது***
***எவரது வேலை ?***

***எவரது உழைப்பு கண்ணில் படாதது?***

***எவரது உழைப்பு காதில் விழாதது?***

***சம்பளம் குறைந்ததும்***
***சம்பளம் அற்றதும் எவரது உழைப்பு***

***எவரது உழைப்பு கணிக்கப்படாதது ?***

- அம்ரிதா பிரீதம் (1919-2005)

வீட்டு வேலையும் பெண்களும் என்ற கட்டுரையின் ஊடாக, வீடு சார்ந்த வேலைகள் பெண்ணுக்கு இயற்கையாகவே உரியவை என்ற காரணத்தினாலேயே பெண் வீட்டுக்கு வெளியே வேலைக்கு செல்வது பொருத்தமா? பொருத்தமற்றதா? என்று விவாதங்கள் இன்றும் நம்மத்தியில் நடைபெறுகின்றன என்ற பெரும் உண்மையை தரவுகளூடாகவும், எதார்த்த வாழ்வியல் உதாரணங்களூடாகவும் அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் வீட்டுக்கு வெளியே வேலை செய்யும் பெண்ணுக்கு இரட்டைச்சுமை, வீட்டில் வேலை செய்யும் பெண்ணுக்கோ விடு முறை நாட்கள் கிடையாது, ஓயாமல் எச்சரிக்கும் வீட்டு வேலைகள் என்று இந்த கட்டுரை தொடர்ந்து செல்கிறது. இந்த கட்டுரையினை வாசிக்கும் போதே நமது வீட்டின் அடுக்களையில் ஓயாமல் சமைத்துக் கொண்டிருக்கும், தேநீர் தயாரித்துக் கொண்டிருக்கும் ஒரு பெண் சாயலை நீங்கள் உணர முடியும்.

பெண்களுக்கு எதிரான வன்முறை பலாத்காரம், இலங்கையில் இனத்துவமும் பெண்களும், தொடர்பியல் ஆய்வுகளும் பெண்ணிலைவாதமும், அபிவிருத்தியும் பெண்களும் ஒரு மீள் பார்வை, மீனாட்சியம்மாள் நடேசய்யர்- மலையகத் தொழிலாளர்களின் உரிமைக்காகக் குரல் கொடுத்த முதல் பெண், மொழியும் அதிகாரமும், பெண்ணிலை நோக்கிலான சில குறிப்புகள் ஆகியவை இந்தத் தொகுதியில் இடம்பெற்றுள்ள ஏனைய கட்டுரைகள்.

பொருளாதாரக் கல்வி, வேலை வாய்ப்பு, வாழ்வியல்ச் சிக்கல்கள், பெண்நிலைச் சிந்தனை, அபிவிருத்தி, நாட்டின் முன்னேற்றம் ஆகியவையே இக் கட்டுரைத் தொகுதியின் அடிப்படைச் சாராம்சங்களாக உள்ளன. இவை யாவும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட ஒரு வட்டமாகவே சமுதாயத்தில் இருக்கின்றன. இருப்பினும் இந்த நூலானது வெளிவந்து 30 வருடங்கள் கடந்த நிலையில், 2025-ம் ஆண்டிலும் இந்நூல் பேசுகின்ற விடயங்களில் மாற்றம் நிகழாமல், அப்படியே இருப்பது வேதனை தருகிறது.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் உணவு விவசாய பிரிவு (FAO) 1985-ல் ‘பெண்களும் விவசாயமும் என்ற தலைப்பில் வெளியிட்ட அறிக்கையில், உலகின் மொத்த உழைப்பு நேரத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெண்களுடையது ஆகும். கிராமப் பகுதிகளைச் சார்ந்த பெண்கள் உலகின் மொத்த உணவில் சுமார் 50% உற்பத்தி செய்கின்றனர்’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இருப்பினும் உலகப் பணக்காரர்களின் வரிசையில் பெண்களின் வீதம் எத்தனை ?



mathavi.u@thaiveedu.com

***தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.***
***விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.***

***E-mail: info@thaiveedu.com*** ***Fax: +1-416-849-0594*** ***Tel: +1-416-857-6406***

# கட்டுருவாக்கவாதமும் வகுப்பறையும்
# Constructivism and Classroom

– அகமட் பிஸ்தாமி

21-ஆம் நூற்றாண்டின் கால்வாசியை நிறைவு செய்ய உள்ளோம். இதற்கு முன்னர் கண்டிராத உருவாகாத தலைமுறை, கண்டிராத வாழ்வு ஒழுங்கு அனுபவப்பட்டிராத தொழில்நுட்ப பெரும் பாய்ச்சல் விசித்திரமும் வினோதமும் சாகசமும் கலந்து வடிவமைக்கப்பட்ட சிந்தனை மேம்பாடு புத்தாக்கம் இவையெல்லாம் ஒன்றிணைந்தாற் போலத்தான் இன்றைய தலைமுறையின் வகுப்பறைகளும் சிந்தனைக் கட்டமைப்பும் தீர்மானங்களும் அமைந்திருக்கின்றன.

இவற்றை மிகச் சரியாகப் புரிந்து கொள்ளாத வகுப்பறை முகாமையாளர்களான ஆசிரியர்களும் இவர்களைப் பயிற்றுவிக்கின்ற பெற்றோர்களும் இவர்களுக்கான கலைத்திட்டத்தை, பாடவிதானங்களைப், பரீட்சை முறைகளை உருவாக்கக்கூடிய பின்புலத்தில் செயற்படக்கூடிய கல்வியியலாளர்களும் தோற்றுப் போனவர்களாகவே கருதப்பட வேண்டியவர்கள்.

இன்றைய தலைமுறையின் மாற்றத்திற்கு தலைமுறைக் கோட்பாடுகள் theory of Generation ஒரு புறம் காரணம் போலவே அவர்கள் வாழ்கின்ற சூழலும் சூழலில் தொடர்ச்சியாக நிகழ்ந்து வருகின்ற மாற்றங்களும் புதுமைகளும் காரணமாக அமைந்து விடுகின்றன.

கடந்த காலங்களில் பெற்றுக்கொண்ட அனுபவங்களை மாத்திரம் வைத்துக்கொண்டு இன்றைய தலைமுறையை வழிநடத்தவோ, புரிந்து கொள்ளவோ அவர்களுடைய சிக்கல் நிறைந்த சவால்களுக்கும் தேவைப்பாடுகளுக்கும் உரிய தீர்வுகளை வழங்கவோ முடியாது.

டிஜிட்டல் தலைமுறைதான் எல்லாத் தளங்களிலும் இன்று உலகையே ஆட்டிப் படைக்கின்றது. அவர்களைக் கட்டுப்படுத்தக்கூடிய தொழில்நுட்ப அறிவுப் பின்புலம் எமக்கு இல்லாத பட்சத்தில் அவர்கள் எம்மைத் தோற்கடித்துவிடுவார்கள். இதனை அன்றாடம் வகுப்பறைகளில் வகுப்பாசிரியர்கள் கண்டுகொள்வார்கள், வீட்டுச் சூழலில் பெற்றோர்கள் கண்டுகொள்வார்கள்.

இவர்களை மிகச்சரியாகக் கையாளும் கலையோ உத்திகளோ தெரியாவிட்டால் நிலைமை பாரதூரமாக மாறிவிடும்.

இந்தச் சுருக்கமான பின்புலங்களைக் கண்முன்னே கொண்டு வருவதனூடாக கல்வி மேம்பாட்டுக்குப் பௌதீக நிதி வழங்கல் மாத்திரம் போதாது, மிகச் சிறந்த பரிபூரண பன்முக ஆளுமைமிக்க மனித வளங்களும் தேவைப்படுவதை அறிந்துகொள்ள முடியும். புத்தாக்கம் மிக்க படைப்பாற்றல் உள்ள முகாமைத்துவத் திறன்மிக்க நெகிழ்வுத் தன்மையுடன் நடந்து கொள்ளக் கூடிய ஆளுமைகளாக அடிமட்டம் முதல் மேல் மட்டம் வரை உள்ள கல்வியியலாளர்கள் பரந்துபட்ட அளவில் அவசியப்படுகின்றனர்.

ஆய்வை மையப்படுத்திய இன்றைய உலகில் வாய்ச் சொல்லில் வீரர்களாக இருந்துவிட்டுச் செல்ல முடியாது. இன்றைய மாணவத் தலைமுறையினர் அனைத்தையும் ஆய்வு செய்து உறுதி செய்து கையாண்டு பார்த்தே நம்பக் கூடியவர்களாக, பின்பற்றக் கூடியவர்களாக உடன்படக்கூடியவர்களாக உள்ளனர்.

வெற்றுப் பாத்திரங்களாக மாணவர்களைக் கருதி தம்மை நிறைகுடங்களாக நினைத்து தகவல்களை மாத்திரம் கொட்டித் தீர்த்து இன்பம் கண்ட யுகம் நிறைவடைந்துள்ளது.

செயற்பாடுகள் நிகழும் வகுப்பறைகளில் ஆதாரபூர்வமாக செயற்பாட்டுரீதியாக சகல பாடப் பரப்புகளையும் முன்வைப்பதோடு அவற்றைப் பிரயோகித்துப் பார்க்கவும் சொந்த வாழ்வில் நடைமுறைப்படுத்தவும் கூடிய சாத்தியப்பாடுகளை வழங்க வேண்டும். இவை அனைத்தையும் கடந்து ஒளிமயமான வெற்றிகரமான வாழ்வுக்கு துணை நிற்கக்கூடிய ஆதாரமாக நிற்கக்கூடிய செயற்பாடு சார்ந்த கல்வியையே இன்றைய தலைமுறையினர் விரும்பி எதிர்பார்க்கின்றனர். அவர்களுடைய ஆசையும் அவாவும் எதிர்பார்ப்பும் அப்படி இருந்தால் மாத்திரமே ஆசிரியர்களைக் கௌரவிக்கக் கூடிய விசுவாசம் மிக்கவர்களாக கருதக்கூடிய நிலைமை உருவாகிவிடும்.

மறுதலையாகக் கடந்த நூற்றாண்டுகளில் ஆசிரியர்கள் செயற்பட்டதைபோல இந்த நூற்றாண்டு மாணவத் தலைமுறையினரோடும் ஆசிரியர்கள் கல்வித்துறை சார்ந்தவர்கள் செயற்படுவது அவ்வளவு பொருத்தமானதல்ல.

மாணவர்களுக்கான கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை முன்வைப்பதாக இருக்கட்டும், அவர்களுடைய பெற்றோர்கள்

விடயத்தில் பிள்ளைகளின் கல்வி சார்ந்த வகையில் தொடர்புகளை மேற்கொள்வதாக இருக்கட்டும், பிள்ளைகள் தவறிழைக்கும் பொழுது அவர்களுக்கு வழங்கக்கூடிய தண்டனைகளாக இருக்கட்டும் அனைத்தும் வித்தியாசமாக வேறுபட்டதாக அமைந்திருக்கின்றன. பாரம்பரிய சடங்கு, சம்பிரதாயங்கள் முறைமைகள் இப்பொழுது பெரும்பாலும் சட்ட வரையறைகளோடு தொடர்பு பட்டதாக மாறியுள்ளன. இந்த விடயங்களிலும் ஆசிரியர்கள் கல்வியியல், உளவியல் சட்டம், நிதியியல், சமூகவியல், சமயம் போன்ற விடயப் பரப்புக்களிலும் வகுப்பறை முகாமைத்துவத் தெளிவு உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

ஒரு நாட்டின் தலைவிதி வகுப்பறைகளில் தீர்மானிக்கப்படுகிறது. வகுப்பறையை முகாமை செய்யக்கூடிய வகுப்பாசிரியர்கள் பாட ஆசிரியர்கள் மிகத் தரமான ஆளுமைகளாக விடயப் பரப்புகளில் தேர்ச்சியும் நிபுணத்துவமும் மிக்கவர்களாக இருந்தால் மாத்திரமே இன்றைய தலைமுறையினரின் தேவையைத் திருப்திகரமானதாக நிறைவேற்ற முடியும்.

வகுப்பறை முகாமைத்துவத்தில் மிக அடிப்படை விடயமாகப் புதிய விடயங்களில் ஆர்வம் கொண்டவர்களாக ஆசிரியர்கள் இருக்க வேண்டும். அன்றாடம் அவசியமான அனைத்து விடயப் பரப்பு தொடர்பிலும் அதனோடு தொடர்பான விடயங்களிலும் தம்மைத் தாமே இற்றைப்படுத்திக் கொண்டவர்களாக கட்டாயம் இருந்தே ஆக வேண்டும்.

வகுப்பறையின் செயற்பாட்டில் மிக முக்கியமானது கல்வித் தர மேம்பாடாக உள்ளது. கல்வித்தர மேம்பாட்டுக்கு கற்றல், கற்பித்தல் தர மேம்பாடு அவசியம். இவை இரண்டையும் சாத்தியப்படுத்த ஆசிரியரின் ஆளுமையும் படைப்பாக்கம், புத்தாக்கம் போன்றனவும் இன்றியமையாதவை. இந்த வகையில் தான் வகுப்பறை செயற்பாடுகளோடு கட்டுருவாக்கச் செயற்பாடுகளை கவனத்தில் கொள்ள வேண்டிய கட்டாயத் தேவைப்பாடு ஆசிரியர்கள் மீது சுமத்தப்படுகிறது.

கல்விசார் தத்துவக்கோட்பாட்டின் பின்புலத்தில் கட்டுருவாக்கம் என்பது பண்டைய காலம் முதல் ஏதோ ஓர் அமைப்பில் தொடர்ச்சியாக நீடித்து வரக்கூடிய ஒன்று. வழமையாக பாரம்பரிய முறையில் செய்து வரக்கூடிய ஒன்றை வித்தியாசமாகச் செய்து முடிக்க எடுக்கப்படுகின்ற பிரயத்தனமே கட்டுருவாக்கவாதம் என மிகச் சுருக்கமாக, பொதுவாக அனைவரும் விளங்கும் வகையில் சொல்லலாம். அதாவது வகுப்பறையில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் வழியாகக் கற்றுக்கொள்ளக்கூடியவர் புத்தம் புதிய விடயங்களில் தொடர்பான எண்ணக் கருக்களைத் தமது சுய விளக்கத்தின் அடிப்படையில் கட்டி எழுப்புவதை இது குறிக்கிறது.

Constructivism is individuals building their own understanding.

சமகால கல்வியியல் உளவியல் சார்ந்த எண்ணக்கருக்களை concepts கோட்பாடுகளாக theories விருத்திசெய்த மிகப் பிரபலமான கல்வியியல் சிந்தனையாளர்களான ஜீன் பியாஜே ஹவாட் காட்னர் போன்றோர் இது குறித்து விரிவாகப் பேசியுள்ளனர்; எழுதியுள்ளனர்; ஆய்வு செய்துள்ளனர்.

இந்தப் பின்புலத்தில் நோக்கும்போதே கட்டுருவாக்கக் கற்றல், கற்பித்தல் செயற்பாடு எனப்படுவது தகவல்கள் மனதில் பதிய வைத்துக்கொள்ள எடுக்கப்படுகின்ற பகீரதப் பிரயத்தனம் அல்ல, இதற்கு மாற்றமாக அறிவைக் கட்டுமை செய்யக்கூடிய செயலூக்கம் மிக்க நடவடிக்கையாகவே இது உள்ளது.

இது இயல்பாக மாணவரிடத்திலே சுய ஊக்கத்தை, தேடலை, ஆர்வத்தை தன்னளவில் ஏற்படுத்தி முன்னோக்கி உந்தித் தள்ளக்கூடிய தன்மையைக் கொண்டதாகும்.

எப்பொழுதும் கற்பவனுக்குப் பின்னால் இருந்து அவனை முன்னோக்கித் தள்ளுவதற்கு எத்தனங்களைப் பிரயோகிக்க வேண்டிய தேவைப்பாடு இருக்காது. அவன் தன்பாட்டில் சுய முனைப்புடன் முன்னோக்கி நகர்கையில் சிக்கல்களை எதிர்கொள்கின்ற கட்டங்களில் மாத்திரம் அவனுக்கான மிகப் பொருத்தமான வழிகாட்டல்களைக் கொடுப்பதற்கு ஆசிரியர்கள் தயாராக இருக்க வேண்டும். அவ்வளவுதான்.

ஒரு மாணவன் தன்னுடைய சுய சிந்தனையின் அடிப்படையில் எண்ணக் கருக்களை விளங்கிக் கொண்டு சுற்றுச்சூழலையும் அவதானித்துக் கொண்டு எத்தகைய முறைமைகள் வழியாக கற்கின்றான் என்பது பற்றிய நடைமுறை சார்ந்த கோட்பாடுதான் கட்டுருவாக்கவாதம்.

அந்த வகையில் கட்டுருவாக்கவாதம் அல்லது கட்டுமானவாதம் என்பது கல்வித்துறையில் அறிகை உளவியல் சிந்தனை கூடத்துடன் வேர்கொண்டு மெய்யியல் சார்ந்த வகையில் வளர்ச்சி கண்ட ஒரு சிறப்புத்துறை என அறுதியிட்டு கூறலாம்.

கல்விசார் உளவியல் நோக்கில் ஒருவர் பெற்றுக்கொண்ட கல்வியை அவர் தனது சுய சிந்தனை சுய அவதானம் சுய ஆய்வின் அடிப்படையில் கட்டங்கட்டமாக கட்டுமானம் செய்து வளர்ச்சிகொள்ள வழி அமைப்பதே கட்டுருவாக்க சிந்தனை ஆகும். இந்த செயற்பாட்டின் வழியாக கற்பவரின் கல்வி வளர்ச்சி உத்வேகம் அடைந்து, இயங்கியல் தன்மை அடைந்து, உச்சம் தொடுவதே கட்டுருவாக்க கற்றல் செயல் முறையில் விளைவாக வரும்.

கல்வி ஒருவரது உயிர்ப் பாரம்பரிய Genetic சொத்தாக மாத்திரம் கருதப்பட முடியாத ஒன்று. ஒருவரது வாழும் சூழல், கிடைக்கும் அனுபவங்கள், ஆய்வுகள், அவதானம் என்பவற்றிற்கு அமைய உருவாகி விருத்தியாகின்ற ஒரு தொடர் செயற்பாடு. இந்த வகையில் கட்டுருவாக்க மாணவப் பரம்பரையைத் தூண்டக்கூடிய உருவாக்கி விடக்கூடிய ஊக்குவிக்கக் கூடிய பண்புத்தரம் கொண்டதாக வகுப்பறைகளும் வகுப்பறையை முகாமை செய்யக்கூடிய ஆசிரியர்களும் கல்விச் சூழலும் இருக்கும் பட்சத்தில் ஒரு மாணவனின் உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிக்கொண்டுவந்து தேசத்திற்கும் அகிலத்திற்கும் பயன்மிக்கதாக அமைக்கக்கூடிய நிலையை உருவாக்கலாம். பயன்மிக்க விளைவுகளை தரக்கூடியதாக வகுப்பறைகள் மாற வேண்டும்.



bisthamy.ahamed@thaiveedu.com



# தொடர்ந்து தவறிழைக்கும் பிள்ளைகள்

– த. சிவபாலு –

தவறிழைத்தல் அல்லது பிழைவிடுதல் என்பது பிள்ளைகளிடம் மட்டுமல்ல பெரியவர்களிடமும் காணப்படும் ஒரு நடத்தைக் கோலமாகும். தவறுகளைத் தொடர்ந்து செய்யாது தடுப்பதற்கான வழிமுறைகள் என்ன என்பதைப் பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் மட்டுமல்ல பிள்ளைகளோடு தொடர்புடைய அனைவரும் தெரிந்து வைத்திருப்பதோடு அவர்களைத் தவறு செய்யாமல் தடுக்கவும் முயற்சிகள் எடுக்க வேண்டும். மனித வாழ்வில் தவறு விடாமல் யாருமே சரியான நடத்தைகளை முழுமையாகக் கைக்கொண்டிருக்க முடியாது. அது மனித நடத்தையின் பாற்பட்டதாக அமையவும் மாட்டாது. பொய் சொல்லுவது சிலவேளைகளில் தவிர்க்க முடியாததாகவும் இருக்கலாம். பெரும் நன்மையைத் தருவதாகவும் பெரும் தொல்லைகளை அல்லது போரைத் தவிர்ப்பதாகவும் இருக்கலாம். அதனால் தான் வள்ளுவரும்,

***பொய்ம்மையும் வாய்மை யிடத்துப் புரைதீர்ந்த<br>நன்மை பயக்கும் எனின்***

என்பதை முன்வைத்துள்ளார். பொய் சொல்லக்கூடாது என்று அடித்துக்கூறும் வள்ளுவர் ஏன் விதிவிலக்காக இதனை முன்வைத்தார் என்பது முரண்பாடான கருத்தாகக் காணப்பட்டாலும் அதிலும் நன்மையே உண்டு என்பதை உணரமுடிகிறது.

எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே என்ற புலமைப்பித்தன் கூற்று எவ்வளவு பெரிய விஞ்ஞான பூர்வமான உண்மையை உணர்த்தி நிற்கிறது. ஆனால் அவர்களின் செயல்களில் பெற்றோரின் உயிரணுக்களின் செயற்பாட்டுத் தாக்கங்கள் அவர்கள் வளர்ந்து வரும்போது வெளிப்படுகின்றன என்பதையும் கருத்திற்கொள்ளவேண்டும்.

தவறிழைக்கும் பிள்ளைகள் பெற்றோருக்குத் தடுமாற்றத்தை ஏற்படுத்துகின்றனர். சிலவேளை அவர்களைப் பார்த்து ஆத்திரம், கோபம், பொறுமையிழத்தல் போன்ற நிலைக்குத் தங்களை ஆக்கிக் கொள்கின்றார்கள். பெற்றோர் ஏன் அந்தப் பிள்ளை தவறான நடத்தையை அல்லது பிழையைச் செய்கிறது என்பதற்கான காரணத்தைக் கண்டறிய முன்வருவதில்லை. தாங்களும் குழந்தைகளாக இருந்து வளர்ந்து வந்தவர்கள் என்பதை பெரியவர்கள் மறந்தே விடுகிறார்கள். தங்களைப் போலவே பிள்ளைகளும் நடந்துகொள்ளவேண்டும் என எதிர்பார்க்கிறார்கள். குழந்தையைக் குழந்தையாகப் பார்க்காமல் அறிவு முதிர்ச்சியடைந்த ஒருவராகப் பார்ப்பது பெற்றோர் சிலரின் இயல்பாக உள்ளது. இது குழந்தையைத் தவறான வழிக்கு இட்டுச்செல்கிறது. பெற்றோரே இதற்குக் காரணமாகிறார்கள். தொடர்ந்து பிழைவிடும் அல்லது தவறிழைக்கும் பிள்ளைகள் தவறிழைக்காமல் பார்ப்பதற்கு அவர்கள் ஏன் பிழைவிடுகிறார்கள்? அல்லது தொடர்ந்தும் ஏன் அந்தத் தவறைச் செய்கிறார்கள் என்னும் கேள்வியை நீங்களே உங்களைக் கேட்டு அதற்கான விடையைக் கண்டறிய முயற்சித்துப் பாருங்கள். அப்போது அந்தப் பிள்ளையிடம் உள்ள குறைபாடு என்ன என்பதை அறிந்துகொள்ள முடியும்.

எங்கள் பெற்றோர் எம்மை நித்திரைக்குச் செல்லுமாறு கட்டாயப்படுத்தியதில்லை. இருள் சூழ்ந்தால் வெளியே செல்லப் பயம். பெரியவர்களுக்கு அண்மையில் இருப்பதும், அவர்களின் கதைகளைக் கேட்பதுமே நித்திரைக்குச் செல்லும் வரை நாம் செய்வது. அது அன்றைக்கு பெற்றோருக்கு ஒரு பிரச்சினையாக இருந்ததில்லை. அவர்கள் தூக்கத்திற்கு செல்லும் போது குழந்தைகளும் தூக்கத்திற்குத் தயாராகிவிடுவார்கள். பெற்றோர் பிள்ளைகளை, முதலில் போய்த் தூங்குங்கள் எனக் கட்டளையிடும்போது பிள்ளைகள் அதற்கு உடன்படாமல் அல்லது விரும்பாது இருப்பதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கலாம். சிறிய குழந்தைகள் தனிமையை ஒரு போதும் விரும்பமாட்டார்கள். தனிமையில் பிள்ளைகளுக்கு ஏற்படும் விபரீதம் குறித்து யாராவது பயமுறுத்தியிருக்கலாம். அல்லது பெற்றோர் அல்லது பெரியவர்கள் கதைப்பதைக் கேட்டிருக்கலாம். அல்லது அவர்கள் பார்த்த செயல்களாகக் கூட இருக்கலாம். அல்லது படங்களில் ஏதாவது பயங்கரமான காட்சிகளைப் பார்த்திருக்கலாம். முக்கியமாக விருந்தினரை வீட்டிற்கு அழைத்து அவர்களோடு உரையாடிக் கொண்டிருக்கும்போது நேரத்தைப் பார்த்துவிட்டு சரி உங்களுடைய படுக்கைக்கான நேரம் எனக்கூறி அவர்களை அனுப்பிவைத்தால் அதனை அவர்கள் நிச்சயம் விரும்பமாட்டார்கள். அங்கு உள்ளவர்களோடு தானும் இருக்கவேண்டும் என விரும்புவார்கள். இத்தகைய வேளைகளில் பிள்ளைகளைப் பெற்றோர் சிலர் வற்புறுத்தி 'இப்பொழுது உங்களின் தூங்குவதற்கான நேரம் படுக்கைக்குச் செல்லுங்கள்' எனப் பலவந்தமாக அனுப்பிவைப்பார்கள். பிள்ளைகள் தூக்கத்திற்குச் செல்லும் நேரத்தில் பெற்றோர் தாமும் சென்றால் பிள்ளைகள் மகிழ்ச்சியடைவார்கள். அவர்களும் எந்தவித மறுப்புமின்றி செல்வார்கள். பெற்றோர் தூக்கநேரக் கதைகளைச் சொல்லும் நேரத்தைத் தவிர்த்துவிடுவதால் பிள்ளைகளின் மனதில் குழப்பமும்,

எதிர்பார்ப்பை நிறைவேற்றாத நிலையும் காணப்படும். அவர்களைப் படுக்கையில், தனிமையில் நான்கு சுவர்களுக்கு மத்தியில் இருட்டில் படுத்திருக்க வைப்பது எவ்வளவு பாதிப்பைக் குழந்தைகளின் உள்ளத்தில் ஏற்படுத்தும் என்பதைப் பெற்றோர்கள் உணர்ந்துகொள்வதில்லை. தங்கள் நடத்தைக்கான தவறை உணராது பிள்ளைகளின் நடத்தையைச் சரியாகச் செய்வதற்குத் தூண்டுவது எந்த வகையில் நியாயமாக அமையமுடியும்? நீங்கள் விருந்தினரோடு அமர்ந்து மகிழ்ச்சியாக உரையாடும்போது பிள்ளைகளை மட்டும் உனது அறைக்குப் போ, தூங்கு என விரட்டிவிடுவது அந்தப் பிள்ளையின் பிஞ்சு உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்துவதை உணர்ந்துகொள்ளாத பெற்றோர்கள், பிள்ளைகளின் மனதில் வெறுப்புணர்வை வளர்த்துவிடுகிறார்கள். இதனால் அவர்கள் தவறுகள் இழைக்கப் பெற்றோரே காரணகர்த்தாக்களாக ஆகின்றார்கள். இவ்விதமான நேரங்களில் பிள்ளைகள் தங்கள் விருப்பின்மையைக் காட்டச் சிணுங்குவார்கள் அல்லது திரும்பக் கதைப்பார்கள். 'இப்பொழுது எனக்குத் தூக்கம் வரவில்லை' என கத்துவார்கள். இவ்வித நிகழ்வுகள் பிள்ளைகளைத் தவறிழைக்கத் தூண்டும் செயற்பாடுகளாக அமையும் என்பதைப் பெற்றோர் உணர்ந்து கொள்வதில்லை.

நான் ஒருமுறை எனது உறவினர் வீட்டிற்கு இரவு விருந்தொன்றிற்குச் சென்றிருந்தேன். பிள்ளைகளின் வழமையான தூக்கத்திற்குச் செல்லும் நேரம் வந்ததும் பிள்ளைகளின் தாயார் அவர்களைத் தூங்கச் செல்லும் வண்ணம் விரட்டியதைப் பார்த்தேன். நாம் எல்லோரும் இருந்து கதைத்துச் சிரித்துக் கொண்டிக்க 4 அல்லது 5 வயதான தனது பிள்ளையைத் தூங்கச் செல்லுமாறு அனுப்பி வைப்பதன் தவறை எப்படி எடுத்துரைப்பது என்று செயலற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேன். மேலே சென்ற குழந்தை சற்று நேரத்தில் மேலே நின்று எட்டி எட்டிப் பார்ப்பதைக் கண்டேன். தாயோ கீழே வரக்கூடாது எனக் கண்டிப்பாகக் கூறிவிட்டார். நித்திரை வராத குழந்தை என்ன செய்யும்? என்பதை யோசித்துப்பார்க்கக் கூட அந்தத் தாயால் முடியவில்லை, மாறாகத் தான் சரியானதைத்தான் செய்கிறேன், அது பிள்ளைகளின் நன்மைக்கான செயல் என அவர் கருதிக்கொண்டார்போலும். பிள்ளைகளிடத்தில் இவ்வித ஒழுக்கக் கட்டுப்பாட்டை விதிக்கும் பெற்றோர் ஏன் இரவில் விருந்தினர்களை அழைக்கவேண்டும்? அப்படியானவற்றைத் தவிர்த்திருக்கலாம் என்பது எனது எண்ணம். ஆனால் அவர்கள் எங்களையும் தர்மசங்கடத்தில் ஆழ்த்திவிட்டார்கள் என்பதாகப்பட்டது. இவ்வித நேரங்களில் பெற்றோரிடம் மனத்தடுமாற்றம் ஏற்படுவதும் தவிர்க்கமுடியாததாகிவிடுகிறது.

பிள்ளைகள் தொடர்ந்து தவறுசெய்யும் போது அவற்றை நிவர்த்திப்பதற்கான முதற்படி அவர்களின் பேச்சை மிக அமைதியாகக் கேட்பதாகும். என்ன சொல்ல வருகிறார்கள்? என்பதைப் பெற்றோர் மிகவும் பொறுமையுடன் கேட்டு விளங்கிக்கொள்வதன் மூலம் குழந்தைகள் தவறுகள் செய்வதைத் தடுக்கலாம். ஒரு குழந்தை சிணுங்குகிறது, கத்துகிறது, வைத்திருக்கும் பொருளை கோபமாக எறிகிறது அல்லது எங்கள் பிடியில் இருந்து விலகி ஓடுகிறது என்றால் என்ன செய்ய வேண்டும் என்பதனை நிதானமாகச் சிந்தித்துச் செயற்பட வேண்டும். குழந்தை ஏன்?, எதற்கு? அப்படிச் செய்கிறது என்பதனை அமைதியாகக் கேட்டுப் புரிந்துகொண்டபின் அதற்கான பரிகாரத்தைத் தேட முற்படவேண்டும்.

## குழந்தை ஏன் தவறிழைக்கிறது அல்லது பிழைவிடுகிறது?

குழந்தைகள் குழந்தைகள்தான், ஆதலால் அவர்கள் தவறு விடுவது இயல்பு, அது தவிர்க்க முடியாததும் கூட. நாம் அனைவருமே தவறு விடுகிறோம். கற்றுக்கொண்டு எவ்விதம் முன்னேற்றம் அடைந்தோம் என்பதைப் பெரியவர்கள் சிந்திக்கவேண்டும். பெற்றோர் தம்மை மிக நிதானமாகவும் அமைதியாகவும் வைத்துக்கொண்டு அவர்களை அணுகவேண்டும். மாறாக அவர்களைத் தண்டிக்க முற்பட்டால் விளைவு பின்னாளில் பாரதூரமானதாக அமைந்துவிடும். 'இளமையில் கல்வி சிலையில் எழுத்து' என்பார்கள். குழந்தைகளின் மனதில் விதைக்கப்படும் நல்லவையோ தீயவையோ அவர்கள் மனங்களில் பதிந்துவிடுகின்றன. அவர்கள் வளர்ந்துவரும் போது அவையும் வெளியே வருகின்றன. இதற்கு யார் காரணம்? குழந்தைகளா அல்லது வளர்ந்தவர்களான பெற்றோர்களா? சிந்திக்க வேண்டியது குழந்தைகள் அல்ல குழந்தைகளைப் பெற்றெடுத்தவர்களும் ஆசிரியர்களுமே தான் என்பதை உணர்ந்து செயற்படுதல் அவசியமாகிறது. எனவே குழந்தைகளின் பொறுப்புக்களைத் தட்டிக் கழியாது பொறுப்புடன் செயற்படவேண்டும். புதியனவற்றை குழந்தைகள் செய்வதற்கும் முயற்சிப்பதற்கும் அனுமதிக்கவேண்டும். அவர்கள் செய்யும் புதிய முயற்சிகள் தோல்வியில் முடியலாம் அல்லது சரியாகச் செய்ய முடியாது போகலாம். அச்சமயத்தில் குழந்தைகள் எடுக்கும் முயற்சிகளில் தோல்விகள் எப்படி ஏற்பட்டன என்பதைக் கண்டறிந்து நிதானமாகப் பெற்றோர் முடிவுகளை எடுக்கவேண்டும். மீண்டும் அவற்றைச் சவாலாகக் குழந்தைகள் எடுத்துக்கொண்டு தங்கள் முயற்சிகளில் வெற்றிபெறுவதற்கு பெற்றோர் உதவ வேண்டும்.

பிள்ளைகளை மோசமானவர்கள் என்று பெற்றோர் முத்திரை குத்திவிடுவதைத் தவிர்க்கவேண்டும். இது உண்மைக்குப் புறம்பானது அப்படிச் சுட்டிக்காட்டவும் கூடாது. இளமைப் பராயம் துடிப்பு மிக்கது. 'இளங்கன்று பயமறியாது'. குழந்தைகள் பயம் என்றால் என்ன என்பது தெரியாதவர்களாக வளர்கிறார்கள் விளைவுகளை அறியாது செயற்படுவார்கள். அவர்களுக்கு நெருப்புச் சுடும், ஆழமான நீரில் அமிழ்ந்தால் மூச்சுத் திணறும், குளிரில் வெளியே போனால் உடல் உறைந்துவிடும் என்பதை எப்படி உணர வைப்பது?. இவ்வித நடத்தைகளால் குழந்தைகள் பலர் உயிராபத்தில் சிக்கியுள்ளனர் என்பதைச் செய்திகள் எடுத்துக்காட்டுகின்றன. நெருப்புச் சுடும் என்பதைத் தொட்டா பார்க்கமுடியும். இவ்வித உணர்வினை அவர்களிடம் படிப்படியாக ஆறுதலாகச் சொல்லிக்கொடுத்து தெளிவுபடுத்த முடியும். இவ்விதமான செயற்பாடுகளைப் புரிந்து கொண்டு அவர்கள் நடப்பதனால் தவறுவிடுவதைத் தவிர்த்துக் கொள்ளமுடியும். அவர்களோடு அளவளாவி அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிவதன் மூலம் அவர்களின் உள்ளுணர்வை நாம் வெளியே கொண்டுவரமுடியும். அவ்விதம் கொண்டு வருவதனால் தவறுவிடுவதற்கான உண்மையான மூலவேரை அகழ்ந்து வெளிக் கொண்டுவர முடியும். அவர்களிடம் உள்ள விரக்தி, உணர்வுகள், எண்ணங்கள் பற்றி அவர்களிடம் கேட்பதன் மூலம் தவறாக நடந்துகொள்ளவதற்கான காரணத்தை அறிந்து செயற்படலாம். தவறுகளின் விளைவுகளைச் சுட்டிக்காட்டி, அதனால் விளையும் விபரீதங்களை எடுத்துக்காட்டி அவர்களின் நடத்தைவாத முறைகளை மாற்ற முடியும். அவ்விதம் செய்வதன் மூலம் அவர்



களை மோசமான குழந்தைகள் என்ற நிலையில் இருந்து மீட்டு நல்ல குழந்தைகள் என்ற நிலைக்கு மீளுருவாக்கம் செய்யமுடியும். இது பெற்றோரால் செய்யப்படவேண்டியதும் செய்யக்கூடியதுமான செயலாகும்.

பிள்ளை தவறு செய்துவிட்டால் அதனை அமைதியாகக் கேட் பதென்பது குழந்தையை மன்னிப்பதாகாது. ஆனால் குழந்தை ஏன் தவறு செய்கிறது என்பதை அறிய உதவும். அவ்விதம் கேட்கும்போது குழந்தைகள் தாம் செய்தது தவறு தான் என்பதைப் புரிந்துகொள்ள வைப்பதாக அமையும். அப் படிப் புரியவைப்பதன் மூலம் அவர் தொடர்ந்து அந்தத் தவ றைச் செய்யாது தடுக்கமுடியும். அவர்கள் தவறு செய்துவிட் டார்கள் என்பதைச் சுட்டிக்காட்டத் தேவையில்லை. அவர்கள் தாம் விட்ட தவறைப் பெற்றோர் அறிந்துள்ளார்கள் என்பதை உணர்ந்து கொள்ளவைத்தால் போதும். அவர்களின் நடத் தையில் மாற்றத்தை ஏற்படுத்திவிடலாம்.

முதலில் குழந்தைகள் யார் என்பதை அறிந்துகொள்ளுதல் அவசியம். அவர்கள் பெரியவர்கள் அல்ல. தாங்கள் விடும் தவறுகளை அறியாதவர்களாக இருப்பார்கள். பெரியவர்க ளைப்போன்று குழந்தைகளின் தவறுகளைத் திருத்த முனை யக்கூடாது. அடுத்து தவறுசெய்த பிள்ளை, தான் செய்த தவறை ஏற்றுக்கொண்டு, தவறான எண்ணங்களைக் கைவிட்டு, தன் இலக்குக்களை நோக்கி நகர்வதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும்.

தவறு செய்தால் அவர்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய தண்ட னையை வழங்கலாம். மற்றும் அவர்கள் நல்லது கெட்டதை தெரிந்துகொள்ளவேண்டும். தவறான நடத்தைகள் எவை என் பதை முதலில் அவர்கள் அறிந்து கொள்ளும்படியாக விளக் கமளிக்கவேண்டும். தவறு எது, சரி எது ? என்பதை அவர்கள் அறிந்தால் தவறான நடத்தைகளைத் தொடரமாட்டார்கள். தவறான நடத்தைகள் எவை ? என்பதை அவர்கள் அறியாத வரை தவறைச் செய்வார்கள்.

குழந்தைக்குத் தேவையான மிக முக்கியமானது பாதுகாப்பு. அவர்களுக்குரிய பாதுகாப்பினைப் பெற்றோர் வழங்குதல் வேண்டும். அவர்களுக்குத் தண்டனை தருவது பயத்தைத் தருவதோடு அச்சுறுத்துவதாகவும் அமையும். ஆதலால் தண் டனைகளை ஒருபோதும் பிள்ளைகள் நல்லதாக உணரமாட் டார்கள். அது தவறான நடத்தைக்கு அடியெடுத்துக்கொடுப்ப தாக அமையும். தண்டனை தருவதைப் பொதுவாக நல்ல பெற்றோர்கள் விரும்பமாட்டார்கள். அவர்கள் குழந்தைகளுக் குத் தீங்கிழைப்பதாகவும் வாழ்நாள் முழுமையையும் அதனை நினைத்து குழந்தைகள் வருந்துவார்கள் என்பதை உணர்ந்தவர்களாகவும் இருப்பர். ஆதலால் தண்டனை ஒரு போதும் தீர்வாகமாட்டாது.

உளவிருத்தி, உடல் விருத்தி இரண்டும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையன. அவர்களின் வளர்ச்சிக்கேற்ப உளவிருத்தி அடைந்துள்ளனரா ? என்பதை அவர்களின் நடத்தைகளோடு தொடர்புபடுத்தி அறிந்துகொள்ளமுடியும்.

சிலவேளைகளில் பிள்ளைகள் எதிர்த்துக் கதைப்பது, சொல் வதைக் கேட்க மறுப்பது, அடங்கமறுப்பது, மற்றவர்களிடம் மேலாண்மை செலுத்துவது என தவறான செயல்களில் ஈடுப டுகின்றனர். முன்கூட்டியே இப்படிச் செய்யக்கூடாது அல்லது பேசக்கூடாது எனச் சொல்லப்பட்டிருந்தாலும் அவர்கள் அத் தவறைச் செய்து விடுகிறார்கள். இத்தகைய தவறிழைக்கும் பிள்ளைகள் பெற்றோரைத் தமக்குத் தேவையானவற்றைச் செய்ய வைப்பதற்காக அல்லது தாங்கள் சொல்லுவதைக் கேட்க வைப்பதற்காகக் கவனத்தை ஈர்க்க இத்தகைய முயற் சிகளைச் செய்வார்கள்.

பிள்ளைகளின் தவறான இலக்குக்கள் மற்றும் நம்பிக்கை களை நான்கு விசேட கட்டமைப்புகளுள் அடக்கலாம்.

## அவசியமற்ற விடயங்களில் கனம் செலுத்துதல்:

ஒரு குழந்தை தேவையற்ற அல்லது அவசியமற்ற விடயங்க ளில் கவனம் செலுத்தும் நடத்தைகளை எப்படித் தவிர்க்க லாம் ? என்பது பெற்றோர்கள் முன் எழும் கேள்வியாகும். அனைத்துப் பிள்ளைகளும் எமது கவனத்தைப் பெற்றுக் கொள்ளுவதற்குத் தகைமையுடையவர்கள். சிற்சில வேளைக ளில் சத்தம்போடுதல், தேவையற்றவிதத்தில் பேசுதல் எனத் தவறு செய்கிறார்கள். இத்தகைய தவறிழைக்கும் பிள்ளை கள் பெற்றோரைத் தமக்குத் தேவையானவற்றைச் செய்ய வைப்பதற்காக அல்லது தாங்கள் சொல்லுவதைக் கேட்பதற்

காகக் கவனத்தை ஈர்க்க இத்தகைய முயற்சிகளைச் செய்வார்கள்.

## கூடியளவு அதிகாரத்தைப் பெறுதல்:

பிள்ளைகள் அதிகளவு அதிகாரத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள் என்பதை எப்படி அறிந்துகொள்ளலாம்? என்பது பொதுவாகப் பெற்றோரிடம் எழும் கேள்வியாகும். இதற்குக் குழந்தைகள் தாங்கள் எதற்கும் முதன்மையானவர்கள்; மேலானவர்கள்; மற்றவர்களை அடக்கி ஆளும் மனப்பான்மை உடையவர்கள் என்னும் மனப்பான்மை உள்ளவர்களாகக் காணப்படுவர். இதற்காகப் பல்வேறு நடத்தைகளை அவர்கள் மேற்கொள்வார்கள். இது உண்மையிலேயே அதிகாரத்துவப் பிரச்சினையாகும். அடிக்கடி அதிகாரத்தைத் தங்கள் கைகளில் எடுத்துக்கொள்வதற்கான போராட்டமாகவும் மாறிவிடுவதை அவதானிக்க முடியும்.

ஏன் இத்தகைய அதிகாரத்தைக் குழந்தைகள் பெற்றுக்கொள்ள விளைகிறார்கள்? என்பதும் புரிந்துகொள்ளப்பட்டிருக்கவேண்டிய ஒன்று. பல்வேறு காரணங்களுக்காக அதிகாரத்தைத் தங்கள் கைகளில் வைத்திருக்க விரும்புகிறார்கள். தங்கள் வாழ்க்கை மற்றும் எண்ணங்களில் தங்களுக்குப் போதிய அதிகாரம் இல்லை என எண்ணுவதும் மற்றவர்கள் தங்களைக் கட்டுப்படுத்துகிறார்கள் என எண்ணுவதும் காரணங்களாக அமைகின்றன. தங்களது உடமைகள் மீது தங்கள் கட்டுப்பாடுகளை செலுத்த வேண்டும் என எண்ணுவதும் அதிகாரத்தை அடைவதற்கு விரும்பும் இன்னொரு காரணமாகக் கொள்ளலாம்.

## பழிவாங்கும் எண்ணம்:

பிள்ளைகளிடம் பழிவாங்கும் எண்ணம் இருப்பதை எப்படி அறியலாம்? என்பது கேள்விக்குறியாக உள்ளது. பழிவாங்கும் உணர்ச்சி உள்ள பிள்ளைகள் அதிகாரம் உள்ளவர்களாகவும் மற்றவர்களை உணர்வுகளாலோ அன்றி உடலாலோ துன்புறுத்துபவர்களாகவும் காணப்படுவர். இத்தகைய பிள்ளைகள் பொருட்களை அழிப்பவர்களாகவோ, உடைப்பவர்களாகவோ அன்றி மிக மனவருத்தம் தரத்தக்க வார்த்தைகளைப் பிரயோகிப்பவர்களாகவோ இருப்பர். இவர்கள் தங்கள் பொருட்களை யாராவது எடுக்க முனைந்தால் எதிர்ப்பவர்களாவும் காணப்படுவர்.

இவர்கள் ஏன் பழிவாங்கும் எண்ணம் உடையவர்களாகக் காணப்படுகிறார்கள்? என்றால் இவர்கள் பிறரால் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர். பிறரால் தாம் மதிக்கப்படவில்லை என்ற எண்ணமும் பிறரால் தாம் வஞ்சிக்கப்பட்டவர்கள் என்ற மனநிலையும் இவர்களைத் தவறான நடத்தைகளை மேற்கொள்வதற்கு உந்திச் செல்கிறது.

## போதாது எனக் கற்பனை செய்தல்:

போதாது அல்லது போதியளவு கிடைப்பதில்லை என உணரும் குழந்தைகள் இத்தகைய தவறான நடத்தைகளை மேற்கொள்கிறார்கள். அத்தோடு தமக்குத் தேவையானவற்றிற்கான முயற்சிகளைக் கைவிட்டுவிடுகிறார்கள். இவர்களிடம் மிகக்குறைந்தளவான உற்சாகமே காணப்படும். அவர்கள் தேவையானவற்றைச் செய்வதற்கான திறமைகள் உடையவர்களாக இருந்தபோதிலும் மற்றவர்கள் தங்களைக் குறைவாக நினைக்கிறார்கள் என்ற எண்ணம் உடையவர்களாகக் காணப்படுவர். எதனையும் சரிவரச் செய்யமுடியாதவர்கள் எனப் பெரியவர்கள் நினைப்பதாக உணர்வர். ஆனால் அவர்களை உற்சாகமூட்டி செயற்பட வைக்கமுடியும்.

இத்தகைய பிள்ளைகளின் நடத்தைகள் தீய நடத்தைகளாக இல்லாமல் இருக்கலாம். அவர்களுக்குத் தொடர்ந்து உற்சாகமூட்டுவதோடு தகுந்த ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் வழங்கப்படவேண்டும். அவர்களுக்குத் தன்னாளுமை, தன்னுரிமை, தன்பெறுமதி, தன்மதிப்பு, தன்னார்வம், தன்னூக்கம் என்பன பற்றிய தெளிவைத் தருவது முக்கியமானது. அதற்கான ஆலோசனைகள் வழங்கப்படல் வேண்டும். நம்பிக்கையயூட்டுவதன் வாயிலாக சமூகப் பொறுப்புமிக்க குழந்தைகளை உருவாக்கலாம்.

## முடிவுரை:

பெற்றோர்கள் குழந்தைகளின் தவறான நடத்தைகளுக்காகத் தண்டனை விதிப்பது பொருத்தமானது அல்ல. மாறாக அது தவறான நம்பிக்கைகளுக்கும் நடத்தைகளுக்கும் கால்கோளாக அமையும். பொதுவாகக் குழந்தைகள் தண்டனையை விரும்பமாட்டார்கள். தண்டனைகள் குழந்தைகளின் தவறான நடத்தைக்கான மூலவேரை அகற்றிவிடாது அது வேகம் கொண்ட ஆக்கிரோசமான நடத்தையாக மாற வழிவகுக்கும். எனவே பிள்ளைகளின் நம்பிக்கைகள் தவறானவையாக இருந்தால் அவற்றை உணரவைப்பது முக்கியமானது. பாராமுகமாக இருந்தால் அது இரட்டிப்பாக விருத்தியடைய வழிவகுக்கும். குழந்தைகளிடம் உள்ள பய உணர்வையும், தவறான சிந்தனையையும் கிள்ளி எறிவதன் மூலம் தொடர்ந்து தவறிழைக்கும் குழந்தைகளின் நடத்தைகளை மாற்றிவிட முடியும். இது பெற்றோர் பொறுமையுடன் செயற்படுவதனால் மட்டுமே செயற்படுத்தப்படக்கூடியதும் சாத்தியமானதுமாகும்.

தவறு செய்த குழந்தையைத் தண்டிப்பதை விடுத்து தவறைக் குழந்தைக்குப் புரிய வைக்க வேண்டும். கோபம் மற்றும் விரக்தியால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை மோசமானவர்கள் என்று கழித்துவைக்க முடியாது. குழந்தையின் பிரச்சினையின் உண்மையான வேரை இனங்கண்டு தீர்வு காண்பதே பொருத்தமானது.

பிள்ளைகள் பெரும்பாலும் செய்த தவறை உணர்ந்து செயற்படுபவர்கள். தான் செய்தது தவறு என்பதைத் தெரிந்து கொண்ட பிள்ளை அதனை மீண்டும் செய்வதில்லை. அத்தவறினை நாம் அவர்களுக்கு மீண்டும் சொல்லத் தேவையில்லை. குழந்தைகளின் இயல்பு நிலையையும் உணர்ச்சிவசப்படும் நிலைமைகளையும் கண்டறிந்து பெற்றோர் செயற்படுவது அவசியமாகும். நாளாந்தம் ஊடாடும் குழந்தைகளின் நடத்தைகளை நல்வழிப்படுத்த முயற்சிகளை எடுப்பது அத்தியாவசியமானது என்பதை உணர்ந்து பெற்றோர் செயற்படுதல் வேண்டும்.



sivapalu@thaiveedu.com




காலநிலை மாற்றமும் கட்டடக் காப்புறுதியும் பற்றி ஆண்டின் தொடக்கத்தில் ஏன் எழுதுவான் எனத் தவிர்த்துக் கொண்டேன். காலநிலை மாற்றம் என்பது ஒரு நாட்டிற்கோ அல்லது ஒரு கண்டத்திற்கோ அடங்கியதல்ல என்பதை அனைவரும் அறிவோம். இதற்கு கனடாவும் விதிவிலக்கு எனக் கொள்ள முடியாது.

2024-ம் ஆண்டு காப்புறுதி அமைப்புகள் தீயினாலும் வெள்ளத்தினாலும் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு பெரும் பொருட் செலவைக் கொடுக்க வேண்டியிருந்தது. இழப்புகளை ஈடு செய்வதுதான் காப்புறுதி அமைப்புகளின் கடமையாகும். கனடியக் காப்புறுதி அமைப்புகள் 2024-ம் ஆண்டில் கொடுப்பனவாக 855 கோடி டொலர்களைச் செலவிட்டு உள்ளது. இந்தப் பணம் நாம் மாதாந்தம் கொடுக்கும் கட்டணத் தொகையில் இருந்துதான் பெறப்படுகிறது என்பது மறைக்க முடியாத உண்மையாகும். ஆனால் இத்தொகை 2016-ம் ஆண்டில் செலவிட்ட தொகையிலும் 200 கோடி டொலர்கள் அதிகரித்துள்ளது என்பதைக் கவனத்தில் கொள்வது அவசியமாகும்.

இந்த அதிகரிப்பு ரொறன்ரோ பெரும்பாகப் பகுதியில் 2024-ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெரும் வெள்ளத்தையும், அட்லான்டாவில் ஏற்பட்ட பெரும் காட்டுத் தீயையும் மறந்திருக்க மாட்டீர்கள் என நம்புகிறேன். பிரிட்டிஷ் கொலம்பியாவில் தீக்கிரையாக்கப்பட்ட பிரதேசத்தின் வருடாந்த விளைவுகளை வரைப்படுத்தினால்,

2023-ஆம் ஆண்டில் 28,900 சதுர கிலோ மீட்டர்
2018-ஆம் ஆண்டில் 13,540 சதுர கிலோ மீட்டர்
2017-ஆம் ஆண்டில் 12,160 சதுர கிலோ மீட்டர்
2024-ஆம் ஆண்டில் 10,800 சதுர கிலோ மீட்டர்
2021-ஆம் ஆண்டில் 8,700 சதுர கிலோ மீட்டர்
ஆகும்.

இத்தகைய பெரும் பிரதேசத்தில் இடம்பெறும் நஷ்டத்தை எங்கள் கட்டுப்பணம்தான் ஈடுசெய்கிறது என்பதை மறந்துவிடலாகாது.

இக்கட்டுரையில் இணைத்துள்ள டொன்வெலி வீதியில் ஏற்பட்ட வெள்ளத்தின் விளைவுப் படம் உங்களுக்கு பல வேதனையான நினைவுகளை மீள் கொண்டு வரும்.

இந்தச் சுற்றாடல் இழப்புகளைக் குறைத்தால்த்தான் கட்டண அதிகரிப்பைத் தவிர்க்கலாம். ஆனால் இது காப்புறுதி அமைப்பின் கைகளில் இல்லை. மக்கள் மனதில் விழிப்புணர்ச்சி ஏற்பட்டு அரசியல்வாதிகளுக்கு சுற்றாடல் மாசுபடுவதை தவிர்க்க முயற்சியும் முதலீடும் செய்தால்த்தான் பணம் நஷ்ட ஈடாக விரயமாவதைத் தவிர்க்கலாம். இழப்பு ஏற்பட்டபின் ஈடு செய்வதிலும் இழப்பு ஏற்படாது தவிர்ப்பது அறிவுடைமையகும்.

முன்பே குறிப்பிட்ட வண்ணம் இது ஒரு பிரதேசத்தை குறித்து ஏற்படும் இழப்பு அல்ல. உலகலாவிய ரீதியில் விளிப்புணர்ச்சி ஏற்படுவது அவசியமாகும். கனடாவில் மட்டும் மாற்றம் ஏற்படுத்துவதால் பெரும் மாற்றம் ஏற்படாது. அயல் நாடாகிய அமெரிக்கா மட்டுமல்ல அனைத்துலகமும் விழிப்படைய வேண்டும்.

2015-ம் ஆண்டிலிருந்து 660 கோடி டொலர்களை சுற்றாடல் மாற்றத்திற்காகக் கனடா செலவிட்டுள்ளது. ஆனால் ஒரு காப்புறுதி அமைப்பானது எல்லோரிடமும் கட்டணத்தை அறவிட்டு, யார் யாருக்கு இழப்பு வருகிறதோ அவருடைய இழப்பை ஈடுசெய்வதையே நோக்கமாக கொண்டுள்ளது. எனவே இழப்பை ஈடுசெய்யும் பொருட்டு கட்டுப்பணத்தை அதிகரிப்பதற்கு காப்புறுதி அமைப்புகள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன.

எனவே, எல்லோரும் விளிப்படைய வேண்டும், எனக் கேட்டு விடைபெறுகிறேன்.



senthuran.p@thaiveedu.com




# மேற்குலகை அதிரவைத்த டீப் சீக் செயலி

– சுப்ரமணியம் ஜெயசீலன்

பூமிப் பந்தின் எண்ணிலடங்கா ஆச்சரியங்களை சொற்களுக்குள் சுருக்கித் தந்திட முடியாது என்பது எத்துணை நிதர்சனமோ அதை விடவும் மனிதரின் அறிவியல் வளர்ச்சிப் படிகளும் அத்துணை விந்தையானது. விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியின் ஓர் அசுர பாய்ச்சலான செயற்கை நுண்ணறிவின் பரிமாணங்கள் மிரளச்செய்கின்றன என்றால் பிழையாகாது. அந்த வகையில் மனித மூளைக்கே சவால் விடுக்கும் செயற்கை நுண்ணறிவு செயலிகளில் அண்மையில் அதிகம் பேசப்பட்டுவரும் சீனாவின் டீப் சீக் (Deep Seek) என்ற செயலியைப் பற்றிய சிறு ஊடாடலாக இந்த பத்தி அமைகிறது.

Apple App Store இல், டீப் சீக் (DeepSeek) எனும் சீனாவின் செயற்கை நுண்ணறிவு (AI) செயலி, அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் சீனா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பயனர்களால் அதிகம் தரவிறக்கப்பட்டு, ChatGPT உள்ளிட்ட போட்டியாளர்களை பின்தள்ளி, சிறந்த தரமதிப்பீடு பெற்ற இலவசச் செயலியாக இன்று தொழில்நுட்ப உலகில் பரிணமித்துள்ளது.

டீப் சீக் செயலி பிரபல்யத்தின் அதிகரிப்பு அமெரிக்காவை மையமாகக் கொண்டு இயங்கி வரும் செயற்கை நுண்ணறிவு குறித்த நிறுவனங்களின் பங்குகள் குறைந்த விலைக்கு விற்பனை செய்ய நேரிட்டது. கடந்த ஜனவரி மாதம் 27-ம் திகதி திங்கட்கிழமை காலை என்விடியா (Nvidia), மைக்ரோசாப்ட் (Microsoft) மற்றும் மெட்டா (Metta) ஆகிய நிறுவனங்களின் பங்குகளும் ஐரோப்பியப் பங்குகளும் வீழ்ச்சியடைந்தன.

செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தில் அமெரிக்கா முன்னணியில் உள்ளது என்ற பரவலான நம்பிக்கையை சவாலுக்கு உட்படுத்தி, செயற்கை நுண்ணறிவுத்துறையில் அமெரிக்க நிறுவனங்கள் செய்யும் முதலீட்டின் அளவு குறித்த கேள்விகளை எழுப்பும் வகையில், சீனாவினுடைய இந்தச் செயலி பிரபல்யம் அடைந்துள்ளது. டீப் சீக் செயலி அறிமுகம் செய்யப்பட்டது தொடக்கம் இந்தப் பிரபல்யத்தை அவதானிக்க முடிகிறது.

சாட் ஜிபிடி போன்ற செயற்கை நுண்ணறிவுச் செயலிகளுக்காக செலவிடப்பட்ட பல பில்லியன் டொலர் முதலீடுகளுடன் ஒப்பீடு செய்யும் போது ஓப்பன் சோர்ஸ் மாடலான டீப்சீக்-வி3 செயலியை உருவாக்குவதற்கு $6 மில்லியன் டொலருக்கும் குறைவான தொகையே செலவிடப்பட்டுள்ளது என அதன் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும் இந்தச் செலவு குறித்த கூற்றினை ஏனைய செயற்கை நுண்ணறிவு சார் தரப்பினர் விவாதத்திற்கு உட்படுத்தி வருகின்றனர்.

செயற்கை நுண்ணறிவிற்குத் தேவையான உயர் தொழில்நுட்ப சிப் (Chip) வகைகளை சீனாவிற்கு விற்பனை செய்வதை அமெரிக்கா கட்டுப்படுத்தும் பின்னணியில் சீனாவின் Deep Seek செயலியின் அசுர வளர்ச்சி பற்றிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

உயர்-தொழில்நுட்ப சிப்களை இறக்குமதி செய்வதில் நிலவும் பல்வேறு சவால்களைக் களையும் வகையில் புதிய தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கும் புதிய வழிகளைப் பரிசோதிப்பதற்கும் சீன ஆய்வாளர்கள் தீவிர முனைப்புக் காட்டி வருகின்றனர்.
இதன் விளைவாக, செயற்கை நுண்ணறிவு (AI) மொடல்களுக்கு, முன்பு நினைத்ததை விடக் குறைவான கணினி சக்தி தேவைப்படுகிறது என்பதுடன் எதிர்பார்த்ததை விட மிகக்குறைந்த செலவில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடிந்துள்ளது. சீனாவின் இந்தத் தொழில்நுட்ப வளர்ச்சி ஒட்டுமொத்த செயற்கை நுண்ணறிவுத் தொழிற்துறையையும் தலைகீழாக மாற்றக்கூடிய சாத்தியங்களை மறுப்பதற்கில்லை.

கடந்த ஜனவரி மாத ஆரம்பத்தில் டீப்சீக்கை (Deep Seek-R1) அறிமுகப்படுத்தியதன் பின்னர், Chat GPT தயாரிப்பாளர்களான Open AI-இன் சமீபத்திய மொடலை விடவும் தமது மொடல் சிறப்பாகச் செயற்பட்டதாக டீப் சீக் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. குறிப்பாக கணிதம், பாகுபடுத்துதல் மற்றும் மொழி தர்க்கவியல் போன்ற பணிகளில் டீப் சீக் செயலி முன்னணி வகிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

சிலிக்கான் வெலி முதலீட்டாளரும் அமெரிக்க ஜனாதிபதி

டொனால்ட் டிரம்பின் ஆலோசகருமான மார்க் ஆன்டர்சன், டீப் சீக்-ஆர்1-ஐ 'செயற்கை நுண்ணறிவின் ஸ்புட்னிக் தருணம்' என்று விபரித்துள்ளார். 1957-ம் ஆண்டில் சோவியத் யூனியன் அரசாங்கம் ஸ்புட்னிக் செயற்கைக் கோளை ஏவியது, இது விண்வெளிப் போட்டியில் ஒரு முக்கிய திருப்புமுனையை வரலாற்றில் பதிவு செய்திருந்தது.

போட்டியாளரின் தொழில்நுட்ப வளர்ச்சியினால் பாதிப்புகளை எதிர்நோக்க நேரிடலாம் என அந்த நேரத்தில் அமெரிக்கா கருதியது.

Deep Seek-இன் புகழ் சந்தையில் பெரும் அதிர்வலைகளை உருவாக்கியுள்ளது. டச்சு சிப் உற்பத்தி நிறுவனமான ASML-இன் பங்குகள் 10 வீதத்திற்கும் அதிகளவில் சரிந்த, அதே நேரத்தில் செயற்கை நுண்ணறிவு வன்பொருளை உருவாக்கும் சீமென்ஸ் எனர்ஜியின் பங்குகளும் 21 வீதம் சரிந்தன.

குறைந்த செலவிலான சீன செயலி குறித்த இந்த எண்ணக்கரு சந்தையை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது எனவும் இவ்வாறான ஒரு விடயம் எதிர்பார்க்கப்படவில்லை எனவும் பிரித்தானியாவின் முன்னணி வர்த்தக நிறுவனங்களில் ஒன்றான சிட்டி இன்டெக்ஸின் சிரேஸ்ட சந்தை ஆய்வாளர் ஃபியோனா சின்கோட்டா குறிப்பிடுகிறார்.

'குறைந்த செலவிலான செயற்றை நுண்ணறிவு மாதிரிகள் கொள்வனவு செய்யப்பட்டால், அது போட்டியாளர்களின் இலாபம் தொடர்பிலான கவலையை ஏற்படுத்தும். குறிப்பாக அவர்கள் ஏற்கனவே அதிக பொருட் செலவில் செயற்கை நுண்ணறிவு செயலிகளை உருவாக்கியுள்ள காரணத்தினால் இந்த நிலை உருவாகும்' எனத் தெரிவிக்கிறார்.

செயற்கை நுண்ணறிவு செயலியான டீப் சீக்கின் அறிமுகமானது ஒட்டுமொத்த செயற்கை நுண்ணறிவு விநியோகச் சங்கிலியின் முதலீட்டு வாய்ப்புகளையும் பாதிக்கக் கூடும் என சிங்கப்பூரைத் தளமாகக் கொண்ட தொழில்நுட்ப ஆலோசகரான வெய் லிங் (Wei Ling) குறிப்பிடுகிறார்.

எனினும், ஓபன் ஏஐ போன்ற முன்னணி அமெரிக்க நிறுவனங்களுக்கு சவால் விடக்கூடிய வகையில் டீப் சீக் காணப்பட்டாலும், சீன நிறுவனங்கள் எதிர்கொள்ளும் சில சிக்கல்களால் அவற்றின் வளர்ச்சியைத் தடுக்கக்கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன.

மேம்படுத்தப்பட்ட அதி நவீன சிப்களுக்கான அமெரிக்க நிறுவனங்களுக்குக் கிடைக்கப் பெறும் அணுகல், தவிர்க்க முடியாத அளவுக்குக் கட்டுப்பாடான சூழலைக் கொண்ட சீன நிறுவனங்களுக்குக் கிடைக்கப் பெறுவதில்லை.

அண்மையில், அமெரிக்க தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் குழு தி ஸ்டார்கேட் (The Stargate) திட்டத்தை அறிவித்தது. டெக்சாஸை மையமாகக் கொண்டு இயங்கி வரும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப நிறுவனத்தின் உட்கட்டமைப்பிற்காக இந்தத் திட்டத்தின் ஊடாக 500 பில்லியன் டொலர் முதலீட்டு செய்வதாக அறிவிக்கப்பட்டது.

## டீப்சீக்கை நிறுவியவர் யார்?

இந்நிறுவனம் 2023-ம் ஆண்டில் தென்கிழக்கு சீனாவின் ஹாங்சோவில் (Hangzhou) லியாங் வென்ஃபெங் (Liang Wenfeng) என்பவரால் நிறுவப்பட்டது.

வென்ஃபெங் தகவல் மற்றும் மின்னணு பொறியியலில் பட்டம் பெற்ற 40 வயதானவர் என்பதுடன், Deep Seek நிறுவனத்தை மேம்படுத்தும் நோக்கில் ஒரு ஹெட்ஜ் நிதியையும் நிறுவினார்.

தற்போது சீனாவிற்கு ஏற்றுமதி செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ள Nvidia A100 சிப்களை, அவர் பதுக்கி வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது. சுமார் 50,000 சிப்கள் வரை களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாக நிபுணர்கள் நம்புகின்றனர். இந்த சிப்களை இன்னும் இறக்குமதி செய்யக்கூடிய மலிவான சிப்களுடன் இணைப்பது அவருக்கு டீப்சீக்கைத் தொடங்க உதவியிருக்கலாம் என்று அவர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

லியாங் வென்ஃபெங் சமீபத்தில் தொழில் வல்லுநர்கள் மற்றும் சீனப் பிரதமர் லீ கெகியாங் கலந்துகொண்ட கூட்டத்தில் பங்கேற்றிருந்தார்.

தனது செயற்கை நுண்ணறிவு மாதிரியின் முந்தைய பதிப்புடன் ஒப்பீடு செய்து பெற்றுக்கொண்ட பதிலைக் கண்டு ஆச்சரியமடைந்ததாக அவர் கூறினார்.

'விலை நிர்ணயம் இவ்வளவு முக்கியமான பிரச்சினையாக இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை,' என்று அவர் கூறினார்.

'நாங்கள் எங்கள் சொந்த வேகத்தில் செல்கிறோம், செலவுகளைக் கணக்கிட்டு அதற்கேற்ப விலை நிர்ணயம் செய்கிறோம்.' என லியாங் தெரிவித்துள்ளார்.

## DeepSeek பயன்படுத்துவது பாதுகாப்பானதா?

சீன சாட்போட் தொழிநுட்ப மாதிரியான Deep Seek செயலியானது, சந்தையிலும் தொழில்நுட்பத் துறையிலும் தனியுரிமைக் கரிசனைகளை உருவாக்கி இடையூறு ஏற்படுத்தும் என விமர்சனம் செய்யப்பட்டது.

இந்தச் செயலியின் பாதுகாப்புக் குறித்து கேள்வி எழுப்பி விமர்சனம் செய்த முதல் மேற்கத்தேய நாடாக அவுஸ்திரேலியா காணப்படுகிறது.

டீப் சீக் செயலியில் 'தரவு மேலாண்மை மற்றும் தனியுரிமை சிக்கல்கள்' உட்பட பல பதிலளிக்கப்படாத கேள்விகள் இருப்பதாக அவுஸ்திரேலிய விஞ்ஞானத்துறை அமைச்சர் எடி ஹூசிக் தெரிவித்துள்ளார்.

'இதனால் தாம் மிகவும் எச்சரிக்கையாக இருப்பதாகவும், இந்த வகையான கேள்விகள் எடை போடப்பட வேண்டும்,' எனவும் குறிப்பிட்டுள்ளார்.

Huawei முதல் TikTok வரையிலான சீனத் தொழில்நுட்ப நிறு

வனங்கள் சீன அரசாங்கத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாக மீண்டும் மீண்டும் குற்றம் சாட்டப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சீனத் தொழில்நுட்பங்கள் உளவுத்துறை நோக்கங்களுக்காக மக்களின் தரவுகளைச் சேகரிக்க வழிவகுக்கும் என்ற அச்சமும் எழுப்பப்பட்டுள்ளன.

டீப் சீக் அமெரிக்காவிற்கு ஒரு 'கண் திறக்கும் சமிக்ஞை' என்று டொனால்ட் டிரம்ப் கூறினார், ஆனால் அது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகத் தெரியவில்லை என்றும் தெரிவித்திருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் Deep Seek நிறுவனம் இதுவரையில் எவ்வித பதில்களையும் வழங்கவில்லை.

ஆனால், பிரித்தானியா மற்றும் அமெரிக்காவில் உள்ள பயனர்கள் டீப் சீக் குறித்து இது போன்ற கருத்துகளை இதுவரை தெரிவிக்கவில்லை. Deep Seek இரு நாடுகளிலும் உள்ள ஆப் ஸ்டோர்களில் முதலிடம் பிடித்துள்ளது.

மேலும் டீப் சீக் செயலி அறிமுகம் செய்யப்பட்டதிலிருந்து இதுவரையில் 3 மில்லியன் பதிவிறக்கங்களைப் பெற்றுள்ளதாக சந்தைப் பகுப்பாய்வு நிறுவனமான சென்சார் டவர் தெரிவித்துள்ளது.

இவற்றில் 80 வீதமான பதிவிறக்கங்கள் கடந்த ஜனவரி மாத இறுதி வாரங்களில் நடந்துள்ளன.

இது Perplexity போன்ற போட்டிப் பயன்பாடுகளின் பதிவிறக்க வீதத்தைவிட மூன்று மடங்கு அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

## Deep Seek
## எவ்வாறான தரவுகளைத் திரட்டுகிறது?

Deep Seek-இன் தனியுரிமைக் கொள்கையின்படி, இது பயனர்களிடமிருந்து அதிக அளவு தனிப்பட்ட தகவல்களைச் சேகரித்து, சீனாவில் உள்ள 'பாதுகாப்பான சேவர்களில்' சேமித்து வைக்கிறது.

கணக்கை உருவாக்கும் போது நீங்கள் உள்ளிடும் உங்கள் மின்னஞ்சல் முகவரி, தொலைபேசி இலக்கம், பிறந்த திகதி மற்றும் பயனர்கள் உள்ளிடும் உரை, ஆடியோ மற்றும் சாட் வரலாறுகள் போன்றன சேமித்து வைக்கப்படக்கூடிய சாத்தியங்கள் உண்டு.

மேலும், தொழில்நுட்பத் தகவல்கள் எனக் கருதப்படும் ஃபோன் மொடல் மற்றும் ஒப்பரேட்டிங் சிஸ்டம் தொடக்கம் ஐபி முகவரி மற்றும் பயனர்களின் 'கீஸ்ட்ரோக் பேட்டர்ன்கள்' வரையிலான விபரங்களையும் சேகரிக்கிறது.

செயலியின் பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்துவதன் மூலம் Deep Seek-ஐ மேம்படுத்த இந்தத் தகவலைப் பயன்படுத்துவதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அது இந்தத் தகவலை 'தேவைப்படும் வரை' வைத்து, சேவை வழங்குநர்கள், விளம்பரக் கூட்டாளர்கள் மற்றும் அதன் நிறுவனக் குழு போன்ற மூன்றாம் தரப்புகளுடன் பகிர்ந்து கொள்கிறது.

'DeepSeek-ன் தொழில்நுட்பத் திறன்கள் தொடர்பில் மெய்யான கரிசனைகள் உண்டு எனவும் குறிப்பாக அதன் தனியுரிமைக் கொள்கையின் விதிமுறைகள் கரிசனை கொள்ளச் செய்வதாகவும் முன்னணி இணையப் பாதுகாப்பு நிறுவனங்களில் ஒன்றான எக்ஸ்பிரஸ் வீபிஎன் (ExpressVPN) நிறுவனத்தின் டிஜிட்டல் தனியுரிமை ஆலோசகர் லாரன் ஹென்ட்ரி (loren henry) தெரிவிக்கிறார்.

எனினும் டீப் சீக் செயலி அதிக அளவிலான தரவைச் சேகரிக்கும் அதேவேளை, Chat GPT மற்றும் Gemini போன்ற போட்டிச் சேவைகள் அல்லது சமூக ஊடக தளங்களுக்குப் பயனர்கள் ஏற்கனவே ஒப்புக்கொண்ட தனியுரிமைக் கொள்கைகளுக்கு மிகவும் ஒத்ததாகக் காணப்படுகிறது என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

## இது பாதுகாப்பானதா?

'டீப் சீக் மட்டும் அல்ல, இணையத்திலோ அல்லது செயலியிலோ பயன்படுத்தப்படும் எந்தச் செயற்கை நுண்ணறிவு மொடலும், தொடுக்கும் கேள்விகள் மற்றும் உரையாடல்களை அந்த மொடலின் தயாரிப்பாளர்களுக்குக் கிடைக்கும் வகையிலானவை என ஒக்ஸ்போர்ட் இன்போமேஷன் லாப்ஸ் (Oxford Information Labs) நிறுவனத்தின் தலைமை நிர்வாகி எமிலி டெய்லர் கூறினார். 'எனவே இரகசிய அல்லது தேசிய பாதுகாப்புத் துறைகளில் பணிபுரியும் எவரும் அந்த அபாயங்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்,' என்று அவர் தெரிவிக்கிறார்.

புதிய, மிகவும் பிரபலமான செயலிகளைப் பயன்படுத்தும் போது பயனர்கள் எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டும் என நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர்.

செயற்கை நுண்ணறிவு (AI) மாதிரிகளைப் பயிற்றுவிப்பதற்காகத் தங்கள் தரவைப் பயன்படுத்துவதில் உள்ள உரிமைகள் குறித்துப் பயனர்கள் விழிப்புடனும் போதியளவு புரிதலுடனும் இருக்க வேண்டுமென இங்கிலாந்தின் தரவுக் கட்டுப்பாட்டாளரான தகவல் ஆணையர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சீனத் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் அவை சார் உற்பத்திகள் தொடர்பில் மேற்குலக நாடுகள் எப்போது ஒரு சந்தேகக் கண் கொண்ட பார்வையை வெளிப்படுத்துவது முதல் தடவையல்ல என்பது வெளிப்படையான உண்மையாகும்.

அவுஸ்திரேலியா, இத்தாலி, தென்கொரியா உள்ளிட்ட சில நாடுகளில் டீப் சீக் செயலியைப் பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும் செயலிகளைப் பயன்படுத்தும் போது தனியுரிமை விதி மீறல்களுக்கு இலக்காகிவிடக்கூடாது என்பதில் பயனர்கள் விழிப்புடன் இருப்பது காலத்தின் கட்டாயமாகும்.



jeyaseelan.s@thaiveedu.com




எத்தனையோ ஆண்டு காலமாக விண்வெளி சார்ந்த தேடல்கள் எங்களிடம் இருந்தாலும், அது சார்ந்த சிந்தனைகள் வளர்ந்தாலும், ஜதார்த்த பூர்வமாக எங்களால் தொடர்ந்தும் இத்துறையில் முன்னேற முடியாமல் இருந்தது. தொழில்நுட்ப வளர்ச்சியின் பலனாகக் கணினி யுகம் ஆரம்பித்ததனைத் தொடர்ந்து 'ஏஐ' என்று சொல்லப்படுகின்ற செயற்கை நுண்ணறிவின் செயற்பாடுகளால் விரைவான மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. விண்வெளிக்குச் செல்லலாம் என்ற நம்பிக்கையை, முதன் முதல் 'ரஷ்யா' (சோவியத் ஒன்றியம்) என்ற ஆசிய நாடு செயல் முறையில் செய்து காட்டிய போது, உலகமே அதிசயித்தது. மனித மனங்களில் கற்பனையாக இருந்த இடங்கள், நிஜமாகவே கண்முன்னால் இன்று காட்சிப்படுத்தப்படுவதற்கு இந்த முதல் முயற்சியே காரணமாக அமைந்தது. இது எப்படிச் சாத்தியமாயிற்று என்று பார்ப்போம்.

விண்வெளி சார்ந்த பல பரீட்சார்த்த முயற்சிகள் தோல்வியில் முடிந்தாலும், முடியும் என்ற நம்பிக்கைதான் இன்று எங்களை இவ்வளவு தூரம், அதாவது செவ்வாய் கிரகத்தில் விரைவில் கால்பதிக்கும் முயற்சி வரை கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது.

விண்வெளி என்றால் என்ன? என்பதனைப் பற்றிக் குறிப்பிடுவதற்கு முன்னர், செயற்கை நுண்ணறிவு என்றால் என்ன? என்பது தொடர்பாகவும் இங்கே சுருக்கமாகக் குறிப்பிட்டுவிடுகிறேன். செயற்கை நுண்ணறிவை ஆங்கிலத்தில் 'Artificial intelligence' (AI) என்று அழைக்கிறார்கள். இந்தத் தொழில்நுட்பம் இன்று அதிவேகமாக வளர்ந்து வருவதால், எங்கள் நவீன வாழ்க்கையின் பல அம்சங்களை இது மாற்றி வருகிறது. கையடக்கத் தொலைபேசி முதற்கொண்டு வீடுகளில் பணியாற்றும் 'ரோபோக்கள்', விண்வெளிக்குச் செல்லும் 'ரோபோக்கள்' வரை இந்தச் செயற்கை நுண்ணறிவு பயன்படுத்தப்படுகிறது. உதாரணமாக 'டெஸ்லா' என்ற நிறுவனம் சாலைகளில் தங்கள் கார்களில் 'சுய ஓட்டுநர்' (Self Driving Car) அம்சங்களை இயக்குவதற்காகக் கணினியின் துணையைப் பயன்படுத்துகிறது. ஓர் ஓவியத்தை வரைய ஒரு ஓவியருக்கு மூன்று மணிநேரம் எடுக்குமானால் 'ஏஐ' தொழில் நுட்பத்தின் உதவியுடன் மூன்று வினாடிகளில் வரைந்துவிட முடிகிறது. 'அலெக்ஸா' போன்று கேள்விகளுக்கு விரைவாகப் பதிலளிக்க முடிகிறது. ஓர் இடத்திற்குச் செல்ல வேண்டுமானால் 'ஏஐ' தொழில் நுட்பம் கூகுள் வழிகாட்டி மூலம் உங்களுக்கு இலகுவான பாதையைக் காட்டுகிறது. இதே போலதான் விண்வெளியில் பறப்பது, வேகமாக மோதவரும் விண்கற்களில் இருந்து எப்படித் தப்பிப்பது, தெரியாத ஒரு மாற்றுக் கிரகத்தில் தரை இறங்குவதற்கு வழியமைப்பது, மாற்றுக் கிரகத்தில் எந்த இடத்தில் இறங்குவது போன்ற பல நிகழ்வுகளுக்கு 'ஏஐ' தொழில் நுட்பம் அதிவிரைவாக முடிவெடுப்பதால், பெரிதும் உதவியாக இருக்கிறது. ஆனால் தவறான தகவலை அதற்குக் கொடுத்தால், அதன் செய்கைகள் எல்லாமே தவறாகிவிடும் என்ற ஆபத்தும் இதில் அடங்கி இருக்கிறது.

## விண்வெளி என்றால் என்ன?

இனி விண்வெளி என்றால் என்ன? என்பதை முதலில் சுருக்கமாகக் குறிப்பிடுகிறேன். விண்வெளி பற்றிய தேடல் உள்ளவர்களுக்கான ஆரம்பத் தகவல் அடங்கிய கட்டுரை இது என்பதால், அவர்களுக்கு இலகுவாகப் புரியும்படியாக ஆரம்ப விடயங்களை மட்டுமே எனது இந்தக் கட்டுரையில் குறிப்பிடுகிறேன். விண்வெளி என்பது பூமியின் வளிமண்டலத்திற்கு அப்பால் இருக்கும் பரந்து விரிந்த பகுதியாகும். அதாவது பூமியின் கடல் மட்டத்தில் இருந்து 100 கிலோ மீட்டர் உயரத்தில் இருந்து தொடங்குகிறது. இந்தச் செயற்கைக் கோட்டை 'கார்மன் கோடு' (Karman) என்று அழைக்கிறார்கள். இந்த விண்வெளியானது 'மின்காந்தக் கதிர்வீச்சு, காஸ்மிக் கதிர்கள், நியூட்ரினோக்கள், காந்தப்புலங்கள், ஹைட்ரஜன், ஹீலியம், தூசி' போன்று பலவற்றைத் தன்னகத்தே கொண்ட வெற்றிடமாகப் பிரபஞ்சத்தின் பெரும்பகுதியைக் கொண்டிருக்கிறது.

## பிரபஞ்சம் என்றால் என்ன?

இப்போது உங்களுக்குப் பிரபஞ்சம் என்றால் என்ன? என்ற கேள்வி எழலாம். பிரபஞ்சத்தின் தொலைதூரத்தில்தான் எண்ணிக்கையற்ற, சூரியனைவிடப் பல மடங்கு பெரிதான கோடிக்கணக்கான நட்சத்திரங்களும், விண்மீன் கூட்டங்களும் இருக்கின்றன. இப்படியான நட்சத்திரக் கூட்டங்களில் ஒன்றாகத்தான் எங்கள் சூரியக் குடும்பமும் இருக்கிறது. உயிரினங்கள் இயற்கைச் சூழலில் வாழ்வதற்கு ஏற்ற இடமாகச் சூரியக்



குடும்பத்தில் இதுவரை கிடைத்த ஆதாரங்களின்படி எங்கள் பூமி மட்டுமே இருப்பதாகத் தெரிகிறது. நாங்கள் பூமியில் இருப்பதால் அதைத்தாண்டி வெளியே என்ன நடக்கிறது என்பது எங்களுக்குத் தெரியாமலே இருந்தது. சுருங்கச் சொன்னால் இந்தப் பிரபஞ்சத்தின் பெரும்பகுதி இன்னும் மனிதர்களால் அறியப்படாமலே இருக்கிறது. ஏன், சூரியக் குடும்பத்தையே இன்னும் நாங்கள் தெளிவாக அறிந்து கொள்ளவில்லை என்றே சொல்ல வேண்டும். விண்வெளியில் உள்ள கதிர்வீச்சின் ஆபத்துக் காரணமாக இது சார்ந்த ஆய்வுகளை மேற்கொள்வது எமக்குப் பெரும் சவாலாக இருக்கிறது. இந்தத் தடைகளை எல்லாம் கடந்துதான் இன்று விண்வெளி சார்ந்த மனிதரின் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இப்படியான ஒரு சூழ்நிலையில்தான், எதைச் செய்தாலும் மேலை நாடுகளால்தான் முடியும் என்ற நம்பிக்கையை சேவியத் ஒன்றியம் உடைத்துத் தானே விண்வெளிக்குச் செல்லலாம் என்று செய்து காட்டியபோது பலரின் பேசுபொருளாக விண்வெளித்துறை மாறத்தொடங்கியது. அமெரிக்காவின் ‘ரைட் சகோதரர்களி’ன் உதவியால் மனிதர் பறப்பதற்கு முதலில் விமானம் கிடைத்தமை நவீன உலகிற்கு ஒரு வரப்பிரசாதமாகும். அதையும் கடந்து செல்வதற்கு எமக்கு ரொக்கெட்டுகள் கிடைத்தன. இந்த ரொக்கெட்டுகள்தான் இன்று விண்வெளியில் பல அதிசயங்கள் நடப்பதற்குக் காரணமாக இருக்கின்றன. ‘செயற்கை நுண்ணறிவின்’ வளர்ச்சி காரணமாக ஆய்வாளர்கள் மட்டுமல்ல, பொதுமக்களும் பயணிக்கக்கூடியதாக வெகுவிரைவில் விண்கலங்கள் பாவனைக்கு வரலாம் என்பதில் சந்தேகமில்லை.

விண்வெளிப் பயணங்களைப் பற்றி இயற்பியல் சார்ந்து குறிப்பிடும் போது, புவியீர்ப்பு சக்தி முக்கியமாகக் கவனத்தில் கொள்ளப்படுகிறது. எங்கள் புவியைச் சுற்றியும் இந்த ‘ஈர்ப்புப் புலம்’ (gravitational field) இருக்கிறது. இதன் காரணமாகப் புவியை நோக்கி அருகே வரும் பிற பொருட்களைத் தன்னை நோக்கிப் புவி ஈர்க்கிறது. இதுவே ‘புவியீர்ப்பு’ எனப்படுகிறது. இவ்வீர்ப்பின்போது புவி அது ஈர்க்கும் பொருள்மீது செயற்படுத்தும் விசையைப் ‘புவியீர்ப்பு விசை’ என்று விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றார்கள். இவ்விசையின் அளவு புவியின் திணிவிலும், புவியிலிருந்து விசை தொழிற்படும் இடத்தின் தூரத்தையும் பொறுத்து அளவிடப்படுகிறது.

பொருட்கள் புவியின் மீது விழும்போது, அவை புவியினை நோக்கி முடுக்கமடைவதை(Acceleration)காண்கிறோம். இத்தாலிய மேதையான கலிலியோதான் முதன்முதலில் புவியை நோக்கிப் பொருட்கள் விழுவதனை எவ்வாறு அளவிடுவது என்று கண்டுபிடித்தார். நியூட்டன் இரண்டாம் விதிப்படி புற விசை செயற்பட்டால் மட்டுமே ஒரு பொருள் முடுக்கமடையும் என்பதை ஏற்கனவே நாம் அறிந்திருக்கிறோம். புவியின் அருகே இவ்விசை அனைத்துப் பொருட்கள் மீதும் ஒரேமாதிரியான முடுக்கத்தை ஏற்படுத்துகிறது. புவிப்பரப்புக்கு அருகே உள்ள பொருளுக்கு புவியின் ஈர்ப்புப் புலத்தால் ஏற்படும் முடுக்கமானது, ‘ஈர்ப்பு முடுக்கம்’ எனப்படுகிறது. இதை ‘g’ என்ற ஆங்கில எழுத்தால் குறியிடுகிறார்கள். புவியின் பூமத்திய ரேகைப் பகுதியில் அதன் ஈர்ப்பின் முடுக்கம் g = 9.8 ms-2 என ஆய்வாளர்கள் கண்டறிந்திருக்கிறார்கள். இதைப் பற்றிய மேலதிக விபரங்களைப் பின்பு பார்ப்போம்.

புவியீர்ப்பு விசை என்பது பொருளொன்றினைப் புவியை நோக்கி இழுக்கும் விசையாகும். இந்த விசை இருப்பதனால் தான் எங்களால் புவியில் தங்கியிருக்க முடிகிறது, இல்லாவிட்டால் நாங்களும் விண்வெளியில் மிதக்க வேண்டியவர்களாயிருப்போம். இந்த விசையை உடைத்துக் கொண்டு சென்றால் தான் மேலே விண்வெளிக்குச் செல்ல முடியும். இதற்கு ரொக்கெட்டின் உந்து சக்தியை உருவாக்க வெப்ப வாயுக்களைப் பாவிக்க வேண்டும். உந்து சக்தி போதாவிட்டால் மீண்டும் புவியீர்ப்புக்குள் அகப்பட்டு ரொக்கெட்டுகள் கீழே விழுந்து விடும். இந்த ஈர்ப்பு விசைக்குள் அகப்படாமல் இருப்பதற்காகத்தான், ரொக்கெட்டைக் குறைந்தபட்சம் 40,000 கிலோ மீட்டர் வேகத்தில் ஏவுகின்றார்கள். இதைத்தான் தப்பிக்கும் வேகம் (Escape Velocity) என்று குறிப்பிடுகின்றார்கள். இதனால்தான் ரொக்கெட் புவியீர்ப்பு விசைக்கு எதிராகச் செயற்பட்டு, புவியீர்ப்பில் இருந்து தப்பி வெளியே செல்கிறது. விண்வெளித்துறையில் இவற்றையெல்லாம் சரியாகக் கணிப்ப

தற்கு செயற்கை நுண்ணறிவு மிகவும் உதவியாக இருக்கிறது.

மனிதரால் செய்யப்பட்ட முதலாவது செயற்கைக் கோளான ‘ஸ்புட்னிக்-1’ என்ற விண்கலத்தை சேவியத் ஒன்றியம் 1957-ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 4-ம் திகதி ரொக்கெட்டின் உந்து விசை உதவியுடன் விண்வெளிக்கு அனுப்பியது. இதுவே விண்வெளி நிகழ்வுகளின் முதலாவது அத்திவாரமாகும். இதைத் தொடர்ந்து இரண்டாவது செயற்கைக் கோளான ‘ஸ்புட்னிக்-2’ ‘லைக்கா’ என்ற நாயுடன் 1957-ம் ஆண்டு நவம்பர் மாதம் 3-ம் திகதி விண்வெளியில் பறந்தது. ஆனால் அந்த நாய் மரணமடைந்தது. அதன் மரணம் பற்றிய தெளிவான விபரங்கள் தரப்படவில்லை. 1960-ம் ஆண்டு ஒகஸ்ட் 19-ம் திகதி சோவியத் ஒன்றியத்தால் ‘ஸ்புட்னிக்-5’ என்ற விண்கலத்தில் ‘ஸ்ட்ரெல்கா’ மற்றும் ‘பெல்கா’ என்ற நாய்கள் அனுப்பப்பட்டன. விண்வெளியில் பயணம் செய்து உயிருடன் திரும்பிய முதல் உயிரினங்கள் என்ற வரலாற்றுப் பெருமையை அவை பெற்றுக் கொண்டன.

நாடுகளுக்கிடையே போட்டிகள் உருவானதால், 1958-ம் ஆண்டு பெப்ரவரி 1-ம் திகதி அமெரிக்காவின் முதலாவது செயற்கைக் கோளான ‘எக்ஸ்புளோரர்-1’ விண்வெளியில் பறந்தது. இதைத் தொடர்ந்து எதிர் காலமே விண்வெளியில் தங்கியிருப்பதால், விண்வெளிக்குச் செல்வதில் ஆர்வமுள்ள சில நாடுகளும் இத்துறையில் ஈடுபாடு காட்டத் தொடங்கின. இதன் பின்னர் பரீட்சார்த்தமாகப் பல செயற்கைக் கோள்கள் பறக்கவிடப்பட்டன. இன்று மனிதர்கள் விண்வெளிக்குச் சென்று உயிரோடு திரும்பி வருவதற்கு முதலில் எலி, ஆமை, குரங்கு, நாய் போன்ற உயிரினங்கள் பரீட்சார்த்த பறப்பில் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்திருந்ததையும் இச்சந்தர்ப்பத்தில் நாங்கள் நினைவு கூரவேண்டும்.

1961-ம் ஆண்டு ‘யூரி காகரின்’ என்ற மனிதரைச் சோவியத் ஒன்றியம் விண்வெளியில் 327 கி.மீட்டர் உயரத்திற்கு அனுப்பி ஒரு சாதனையைப் படைத்தது. இதுவே விண்வெளிக்குச் சென்ற முதலாவது மனிதர் சாதனையாகும். இதே வருடம் மே மாதம் 5-ம் திகதி விண்வெளி வீரர் ‘ஆலன் செப்பர்ட்’ விண்வெளிக்குச் சென்ற முதல் அமெரிக்கரானார். 1963ம் ஆண்டு யூன் மாதம் 16-ம் திகதி சோவியத் ஒன்றியம் ‘வோஸ்ரொக்-6’ என்ற விண்கலத்தை ஏவியது. இதில் ‘வாலண்டினா தெரேஸ்கோவா’ என்ற பெண்மணி விண்வெளிக்கு அனுப்பப்பட்டார். விண்வெளியை மற்றும் பூமியைச் சுற்றி வந்த முதல் பெண் இவரே ஆவார். அவர் கிட்டத்தட்ட மூன்று நாட்கள் விண்வெளியில் இருந்தது மட்டுமல்ல, பூமியை 48 முறை சுற்றியும் வந்தார்.

1966-ம் ஆண்டு சோவியத் ஒன்றியத்தின் ‘லூனா-9’ என்ற ஆளில்லாத விண்கலம் பெப்ரவரி மாதம் 3-ம் திகதி நிலவில் வெற்றிகரமாகத் தரை இறங்கியது. இதே வருடம் ஜூன் 2-ம் திகதி முதல் அமெரிக்க விண்கலமான ‘சர்வேயர்-1’ நிலவில் தரை இறங்கியது. இதன் மூலம் நிலவில் தரையிறங்கியதில் முதலாவது இடத்தை ரஷ்யாவும், இரண்டாவது இடத்தை அமெரிக்காவும் பெற்றுக் கொண்டன. 1968-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 14-ம் திகதி சோவியத் விண்கலமான ‘Zond-5’ ஏவப்பட்டது. சந்திரனைச் சுற்றியபின் பூமிக்குத் திரும்பிய முதல் விண்கலம் இதுவாகும். இதில் இரண்டு ஆமைகளும் பயணம் செய்தன. 1968-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ம் திகதி அமெரிக்காவின் ‘அப்பல்லோ-8’ என்ற விண்கலம், விண்வெளி வீரர்களுடன் சந்திரனின் சுற்றுப்பாதையை அடைந்து அதைச் சுற்றி மீளவும் புவிக்குத் திரும்பியது. இதில் ‘ஃபிராங்க் போர்மன்’, ‘ஜேம்ஸ் லவல்’ மற்றும் ‘வில்லியம் ஆண்டர்ஸ்’ ஆகியோர் பயணித்தனர். ஆனால் இவர்கள் நிலவில் தரை இறங்கவில்லை.

1969-ம் ஆண்டு யூலை மாதம் 20-ம் திகதி அமெரிக்காவின் ‘அப்பல்லோ-11’ என்ற விண்கலத்தில் சென்ற ‘நீல் ஆம்ஸ்ரோங்’ மற்றும் ‘பஸ் ஆட்ரின்’ ஆகியோர் சந்திரனில் முதன்முதலில் தரையிறங்கினார்கள். 1971-ம் ஆண்டு ஜூலை மாதம் 30-ம் திகதி; முதன்முறையாக ‘மூன் ரோவர்’ என்ற வாகனம் நிலவில் செலுத்தப்பட்டது. பூமிக்கு வெளியே வேற்று நிலத்தில் ஓடிய முதலாவது வாகனமாக ‘மூன் ரோவரி’ன் பெயர் இடம் பெற்றது. 1972-ம் ஆண்டு டிசம்பர் மாதம் ‘அப்பலோ-17’ விண்வெளி வீரர்களுடன் தரை இறங்கித் திரும்பவும் பூமிக்கு வந்தது. இதுவே அமெரிக்காவின் ஆறாவது குழு விண்வெளி வீரர்களின் நிலவுக்கான கடைசிப் பயணமாக இருந்தது. இதுவரை நிலவில் விண்கலங்களின் தரை இறக்கத்தை அமெரிக்கா, ரஷ்யா, இந்தியா, யப்பான், சீனா ஆகிய ஐந்து நாடுகள் மேற்கொண்டிருக்கின்றன. ஆனாலும் இதுவரை அமெரிக்கா மட்டுமே விண்வெளி வீரர்களை நிலவில் தரை இறக்கி இருக்கிறது. 1969-ம் ஆண்டிற்கும் 1972-ம் ஆண்டிற்கும் இடையே 12 விண்வெளி வீரர்கள் நிலவில் தரை இறங்கிச் சாதனை படைத்த போது கடைசியாக ‘யூஜின் செர்னான்’ என்பவர்தான் தரை இறங்கியிருந்தார். இதுவரை அதாவது 2025-ம் ஆண்டு வரை பெண்களுக்கு நிலவில் தரை இறங்கச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இனிவரும் ‘ஆர்ட்டெமிஸ்-2’ திட்டத்தின்படி பெண்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கலாம். இதன்படி ‘கிறிஸ்டினா கோச்’ என்பவரின் பெயர் பட்டியலில் இருந்தாலும், நடைமுறையில் ஏற்பட்ட தாமதம் காரணமாக அவருக்குச் சந்தர்ப்பம் கிடைக்குமா, தெரியவில்லை?. இதே சமயம் செவ்வாய்க் கிரகத்தில் முதன் முதலாக ஏப்பிரல் 19, 2021 அன்று நாசா நிறுவனம் ‘இன்ஜெனுட்டி’ என்ற ஹெலி ஒன்றைப் பறக்க விட்டுச் சாதனை படைத்திருக்கிறது.

இது ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்க விண்வெளி நிலையம் ஒன்றை அமைத்து அதில் சில ஆய்வுகளை மேற்கொள்ளச் சில நாடுகள் முன் வந்தன. இதன் அடிப்படையில் முதல் விண்வெளி நிலையமான ‘சல்யூட்-1’ என்ற விண்வெளி நிலையத்தை 1971-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19-ம் திகதி சோவியத் ஒன்றியம் உருவாக்கியிருந்தது. விண்வெளி சார்ந்த வரலாற்றை எடுத்துப் பார்த்தால், முக்கியமான முதல் 4 ஆரம்ப சாதனைகளையும் சோவியத் ஒன்றியமே படைத்திருந்தது. ஆனால் பொருளாதார நெருக்கடி காரணமாகவும், சோவியத் ஒன்றியத்தில் இருந்து சில மாகாணங்கள் பிரிந்து சென்றதாலும் இத்துறையில் சோவித் ஒன்றியம் பின்னடைவைச் சந்தித்ததால், தற்காலிகமாக விண்வெளித் திட்டங்களை ரஷ்யா நிறுத்தி வைத்திருக்கிறது.

**உசாத்துணை:**

- https://spacegeneration.org/the-future-of-ai-in-space-navigating-challenges-and-opportunities



kuruaravindan@thaiveedu.com




ஒரு வீட்டில் இருக்கக் கூடிய இயந்திர சாதனங்களினதும் மற்றும் பிற கூறுகளின் பாவனை பற்றியும் அவற்றின் பராமரிப்பு பற்றியும் அறிந்து கொள்ளவேண்டியது மிக அவசியமானது. பொதுவாக நோக்கினால் விஞ்ஞான தொழில்நுட்ப ரீதியில் சகல துறைகளிலும் தினமும் புதிய கண்டுபிடிப்புகளையும் மாற்றங்களையும் கண்டு கொண்டே இருக்கின்றோம். அந்த வகையில் வீடுகள் சார்ந்த அமைப்பிலும் பாவிக்கப்படும் பொருட்கள், இயந்திர உபகரணங்கள் மற்றும் மூலப் பொருட்கள் எனப் பலவற்றிலும் மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணமே இருக்கின்றன.

நுகர்வோரின் சிந்தனைகளுக்கு ஏற்ப விருப்பங்களும் தேவைகளும் அதிகரித்த வண்ணமே இருக்கின்றன. அதற்கேற்ப அவற்றை ஈடுசெய்யும் விதத்தில் தொழில்நுட்ப வளர்ச்சியும் எல்லை கடந்து வளர்ந்து கொண்டே இருக்கின்றது.

அந்த வகையில் மனிதர்களின் தேவையில் அத்தியாவசியமாக இருக்கும் உறைவிடமாகிய வீடு சார்ந்த அமைப்பிலும் பாவனைப் பொருட்களிலும் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் மாற்றங்கள் பற்றி அறிந்து கொள்ள வேண்டியது மிக அவசியமானது.

'மாற்றம் ஒன்றே மாறாதது' என்பது நியதியாகியவிட்ட சூழ்நிலையில் நாங்களும் எங்களை மாற்றிக் கொள்ள வேண்டியது தவிர்க்க முடியாத ஒன்று. விரும்பியோ விரும்பாமலோ புதிய, புதிய மாற்றங்களைச் சந்திக்கின்றபோது புதிய பிரச்சினைகளையும் எதிர்கொள்ள வேண்டிய தேவை உருவாகின்றது. எனவே காலத்தின் தேவை கருதி உச்ச நிலை நோக்கி வேகமாக நகர்ந்து கொண்டிருக்கும் விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ற விதத்தில் இருக்கக் கூடிய பாவனைப் பொருட்கள் பற்றியும், அவற்றின் பாவனை பற்றியும் அறிந்து கொள்ள வேண்டிய தேவை அதிகரித்த வண்ணமே இருக்கின்றது. அப்போது தான் தேவையற்ற இடர்பாடுகளைத் தவிர்த்துக் கொள்வதோடு அவற்றின் உச்சப் பயன்பாட்டையும் அடைய முடியும்.

ஒரு வீட்டில் முக்கிய கூறாக இருப்பதும் எல்லோராலும் பெருமளவு பாவிக்கப்படுவதும் சமையல் அறை. அந்த வகையில் சமையல் அறையில் இருக்கக் கூடிய இயந்திர சாதனங்கள் பற்றியும் இதர கூறுகள் பற்றியும் முதலில் நோக்குவது சாலவும் பொருந்தும்.

## அடுப்பு:

எமது நினைவுகளை சற்று பின் நோக்கி நகர்த்தினால் மண் அடுப்பு, கல் அடுப்பு, விறகு என்பன நினைவுக்கு வரும். தற்போது கூட இயற்கையோடு இணைந்து வாழும் கிராமப்புற வாழ்வில் இவை வழக்கொழிந்து போகவில்லை. தனி வீடாகவோ, கொட்டிலாகவோ இருக்கும் அடுக்களைகள் இயற்கையாகவே தற்போதய பராமரிப்பு அல்லது சுகாதார பாதுகாப்பு முறைகளுக்கு அப்பாற்பட்ட தன்மை கொண்டவை என்பது கவனிக்கத்தக்கது.



வளர்ச்சியடைந்த மேற்கத்தேய நாடுகளில் பொதுவாக மின்சாரத்தில் இயங்கும் அடுப்புகளும் இயற்கை வாயுவில் இயங்கும் அடுப்புகளும் பாவனையில் உள்ளன. பாதுகாப்புக் காரணங்களைக் கருத்திற்கொண்டு மின்சார அடுப்புகள் அதிகம் பாவனையில் உள்ளன. ஆரம்பத்தில் Coil வடிவத்தில் இருந்த அடுப்புகள் தற்போது பல சிறப்பம்சங்களைக் கொண்ட கண்ணாடி மேல் அடுப்புகளாகக் (Glass Top Store) காணப்படுகின்றன. LG, Samsung, GE, Kitchen Aid, Whirlpool, Jenair போன்ற பல்வேறு உற்பத்தியாளர்கள் உலகளாவிய ரீதியில் இத்தகைய அடுப்புகளை உற்பத்தி செய்கின்றார்கள். 2025-ல் இவற்றின் உற்பத்தி 17.41 Billion Us டொலர்களை எட்டும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

## Glass Top Stove:

மிகவும் பளபளப்பாக வடிவமைக்கப்பட்டிருக்கும் கண்ணாடி மேல் அடுப்புகள் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும்.

பாத்திரங்களை வைக்காவிட்டால் ON ஆகா விதத்தில் பாது



காப்பாகவும் இயங்குகின்றன. அத்துடன் குறிப்பிட்ட வெப்பத்தின் எல்லையைத் தாண்டாத விதத்திலும் செயற்படுகின்றன.

## பராமரிப்பு:

இத்தகைய அடுப்புகளை சுத்தம் செய்வதில் அதிக கவனம் தேவை. இதற்கென அறிவுறுத்தப்படும் சுத்தமாக்கும் திரவப் பொருட்களைப் பாவிக்காதுவிட்டால் பாரிய சேதங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை வரலாம். முறையற்ற பாவனையால் கண்ணாடி வெடித்துப் போவதும் அதனைப் பிரதீயீடு செய்ய அதிக செலவை எதிர்கொள்ள வேண்டிய நிலை வருவதும் சாதாரணமாகக் காணப்படுகின்றது.

ஒவ்வொரு பாவனைக்குப் பின்னரும் கண்ணாடியின் மேற்பகுதியை Micro Fiber துணி அல்லது spunch-ஐ பாவித்து துடைத்து விடுவதே சிறந்த வழி. சமைக்கும் போது வழிந்துவிடும் உணவுக் கூறுகள் சுத்தம் செய்யப்படாது காலப்போக்கில் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து கல்லுப்படிமானம் போல மாறிவிடும். அதன் பின்னர் சுத்தம் செய்வது மிகக் கடினம்.

- சூடாக இருக்கும் கண்ணாடியின் மேற்பகுதியின் வெப்பம் தணியும் வரை பொறுத்திருங்கள்
- Spray Bottle-இன் உதவியுடன் White Vinegar-ஐ Spray செய்து விட்டு சில நிமிடம் பொறுத்திருந்து பின்னர் Micro Fiber துணியால் துடைத்துவிடுவது சிறந்த வழி.
- Burner ன் மேற்பகுதியில் மேலதிக அடைவுகள் காணப்பட்டால் Spray செய்யப்பட்டிருக்கும் Vinegar க்கு மேல் சிறிது Baking Soda-ஐ தூவிவிட்டால் சுத்தம் செய்யும் பணி மிக இலகுவாக அமையும்.
- இதன் பின்னரும் மேலதிக அடுக்குகள் (Layer) காணப்பட்டால் சவரம் செய்யும் Blade-க்கு இணையான Blade மூலம் அதனை வழித்துவிட முடியும்.
- Glass Top-இற்கென பரிந்துரைக்கப்படும் சுத்தமாக்கும் திரவங்களை மட்டுமே பாவித்தல் வேண்டும். அமோனியா கலந்த திரவங்கள் கண்ணாடியை பெருமளவு பாதிக்கும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

Material Needed: White Vinegar, Spray Bottle, Baking Soda, Micro Fiber Cloth, single Edge Razor Blade.

## Gas Stove:

வேகமாக சுவையாக சமைப்பதில் ஆர்வம் உள்ள பலரும் இயற்கை வாயுவில் இயங்கும் அடுப்புகளையே பாவிக்கிறார்கள். இதன் பாவனையும் கணிசமான அளவு முன்னணியில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## பராமரிப்பு:

- சுருங்கக் கூறுவதானால் தினமும் துடைத்தல் கிழமைக்கொருமுறை அழுத்தி தேய்த்தல் (Scrubbing) மாதமொரு முறை ஆழமாகச் சுத்தம் செய்தல் என்ற நடைமுறையே சிபாரிசு செய்யப்படுகிறது.
- சாதாரண Soap திரவத்துடன் vinegar கலந்து சுத்தம் செய்யலாம்.
- Burner பகுதி எப்போதும் சுத்தமாக இருக்க வேண்டும். தவறினால் நீல நிற சுவாலையைப் பெறுவதும் ஆரோக்கியமான சமையலைச் செய்வதும் கடினமாக இருக்கும்.
- தண்ணீரை ஊற்றி கழுவுவது தவிர்க்கப்பட வேண்டும்.
- உலோக தட்டுகளை (Grates) வெளியில் எடுத்து Soap தண்ணீர் நிரப்பிய தொட்டியில் ஊறவிட்டு மாதமொரு முறையாவது கழுவுதல் சிறந்தது.

## Oven

பொதுவாக எல்லா வீடுகளிலும் அடுப்புகள் Oven உடன் சேர்ந்ததாகவே இருக்கும். பலர் இதனை அடிக்கடி பாவிப்பது அரிது. பெரிய பாத்திரங்களின் களஞ்சியமாகப் பாவிப்பது



வழக்கமாக இருக்கிறது. அனால் இளைஞர்கள் மத்தியில் Oven கவர்ச்சிக ரமான ஒன்றாகக் காணப்படுகின்றது.

எது எப்படி இருப்பினும் கிரமமான முறையில் சுத்தம் செய்ய வேண்டியது அவசியம் யாருக்கும் Oven சுத்தம் செய்வது என்பது விருப்பத்திற்குரிய செயலாக இல்லாவிட்டாலும் காலம் கடந்து செய்ய முயன்றால் பல சவால்களைச் சந்திக்க வேண்டியதாக இருக்கும் என்பதையும் கவனத்திற் கொள்ளவும்.

- பொதுவாக Self Cleaning அம்சம் அநேக Oven களில் உள்ளடக்கப்பட்டிருக்கும் பெரிய அளவிலான உணவு எச்சங்களை அகற்றிவிட்டு Self Cleaning ஐ பாவிப்பது நல்லது. இந்த நடைமுறையில் உச்ச அளவிலான வெப்பத்

தின் மூலம் இருக்கக்கூடிய அழுக்குகள் யாவும் பல மணி நேர வெப்பமாக்கலால் எரிக்கப்பட்டுச் சாம்பலாக்கப்படுகிறது. முடிவில் சாம்பலை ஒரு துணியின் மூலம் சுத்தம் செய்தால் போதுமானது. பல மணி நேரம் உச்ச அளவில் மின்சாரத்தைப் பாவிப்பது அதிகம் செலவானது என்பதையும் நினைவில் வைத்திருக்கவும்.

- கிரமமான முறையில் சுத்தம் செய்பவர்கள் சாதாரண Soap உடன் Baking Soda ஐயும் கலந்த தண்ணீரைப் பாவித்து தட்டுகள், சுவர்கள், கதவு என்பவற்றை சுத்தம் செய்ய முடியும். இது ஒரு சாதாரண நடைமுறை.
- ஆழமான சுத்திகரிப்பு: (Deep Cleaning) Oven சுத்தம் செய்வதற்கென இருக்கும் Oven Cleaner, அல்லது இரசாயன திரவங்கள், Spray என்பவற்றைப் பயன்படுத்தலாம்.

எங்களது தோல் பகுதியைப் பாதிக்கக் கூடிய இத்தகைய திரவங்களை பாவிக்கும் போது அதிக கவனம் எடுக்க வேண்டியதும், கையுறைகளைப் பாவிக்க வேண்டியதும் அவசியமானது. குறிப்பாக இத்தகைய இரசாயானத் திரவங்களைப் பாவிக்கும் போது சமையலறையில் போதியளவு காற்றோட்டம் இருக்க வேண்டும் என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

## Rangehood Fan:

தற்போது மேற்கத்மேய நாடுகளில் உள்ள சமையலறைகளில் மிக முக்கிய இடத்தை வகிப்பது Rangehood Fan ஆகும். சமையல் மணம், சமையல் புகை, மேலதிக ஈரலிப்பு என்பவற்றை அகற்றி வீட்டில் இருக்க வேண்டி காற்று மண்டலத்தின் தரத்தை உயர்த்த இதன் தொழிற்பாடு மிக அவசியமானது.



கிராமப் புறங்களிலும் இலங்கை போன்ற நாடுகளிலும் சமையற் கூடம் தனியாகவோ, அல்லது காற்றோட்டமுள்ள வெளிப்புறத்திலும் அமைந்திருப்பதால் இத்தகைய விசிறிகளின் தேவை முக்கியத்துவம் பெறவில்லை. எப்போதும் பெரிய சமையல்கள் வீட்டிற்கு வெளியே உள்ள இடங்களில் மேற்கொள்ளப்படுவது நினைவுக்கு வருகிறது. எமது தாயகப் பகுதிகளில் பிரதான வீட்டிற்குள் அமைந்த சமையல்கூடம் புகைக் கூண்டுடன் சேர்த்துக் கட்டப்பட்டிருப்பதால் இதன் தேவை வேறு விதமாகப் பூர்த்தி செய்யப்படுவதையும் அவதானிக்கலாம்.

சமையல் தொடங்குவதற்கு குறைந்தது 5 நிமிடங்களுக்கு முன்னர் இதனை இயங்க வைக்க ஆரம்பிக்க வேண்டும் என்பதோடு சமையல் முடிந்து சுமார் 15 நிமிடங்களுக்காவது இயங்கவிட்டு பின்னர் நிறுத்த வேண்டும் என்பது சிபாரிசு செய்யப்படுகின்றது. தற்போது இவை தானாக நிறுத்தப்படும் விதத்தில் Timer உடன் உற்பத்தி செய்யப்படுகின்றன என்பதையும் கவனத்திற்கொள்ளவும்.

மிகக் குறைந்த விலையில் இருந்து அதாவது 75 டொலரிருந்து $3000 டொலர் வரை பல வித தரங்களில் இவை சந்தைப்படுத்தப்படுகின்றன. ஆசிய சனத்தொகையின் சமையல் முறையைக் கருத்திற் கொண்டு பார்த்தால் சக்தி மிக்க Overhood Fan அவசியமானது என்பது புலனாகும், குறிப்பாக



எம்மவரது பாவனைக்கு குறைந்தது 400 – 700 CFM சக்தி கொண்ட விசிறிகள் சிபாரிசு செய்யப்படக் கூடியவை.

வெளிநாடுகளில் கூட சுமார் 75 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட வீடுகளில் இத்தகைய விசிறிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. பழைய வீடுகளிலும் தொடர்மாடிக் கட்டடங்களிலும் இத்தகைய வசதிகள் அரிதாகவே காணப்படுகின்றன. ஆனால் தற்போது கட்டப்படும் வீடுகளில் இதன் அவசியம் கட்டட நியமங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. தற்போதய புதிய வீடுகளில் 8’-10’ விட்டத்தினைக் கொண்ட Duct Vents பொருத்தப்பட்டிருப்பதை சமையல் அறைகளில் காணலாம்.

## பராமரிப்பு:

தற்போதைய விசிறிகளில் காணப்படும் வடிகட்டிகள் (Filters) பாத்திரங்களைக் கழுவும் இயந்திரங்களின் மூலம் (Dishwasher Free) கழுவக் கூடியதாக அமைந்திருப்பது ஒரு வரப்பிரசாதம். சமையலைப் பொறுத்து கிழமைக்கொருமுறை அல்லது மாதமொரு முறை இவற்றைக் கழுவி விடுவது மிகச் சிறந்தது.

சில ஆண்டுகளுக்கு முன்னர் பிரபல்யமாகவிருந்த வட்ட வடிவில் அமைந்த விசிறிகளின் வடிகட்டிகளை அல்லது சதுர வடிவில் அமைந்த வடிகட்டிகளை மாதமொருமுறையாவது கழற்றி கழுவி விடுதல் அவசியமானது அல்லது அவற்றை மாற்றீடு செய்வது நல்லது. அத்துடன் சேகரிக்கப்பட்டிருக்கும் கழிவு எண்ணையை சுத்தம் செய்வதையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

(தொடரும்...)



velasubramaniam@thaiveedu.com



# கவிதை மொழியின் தளம்

**– சி. நற்குணலிங்கம் –**

ஒரு மொழியின் வளர்ச்சி கவிதையில்தான் உள்ளது என்பதை என்றைக்குமே மக்கள் மறந்துவிடக் கூடாது. கவிதை என்பது அழகியல் உணர்ச்சி உடைய, ஓசை சந்தத்துடன் கூடிய அல்லது ஒத்திசை பண்புச் சொற்களால் சேர்க்கப்பட்ட ஓர் இலக்கிய வடிவமாகும். மேலும், மொழியில் உள்ள ஒலியின் அழகியலையும், ஒலிக் குறியீடுகளையும் மற்றும் இயல்பான பொருள் ஆகியவற்றையும் வெளிப்படையாகக் காட்டுவதாக கவிதை உள்ளது.

கவிதையின் நடை என்பது மொழி அமைப்பின் ஒரு கூறு அல்லது ஒரு பகுதி சம்பந்தப்பட்டது மட்டும் அல்ல; தொடர்புபட்ட பல கூறுகளின் ஒன்றிணைந்த செயற்பாடு. அது சிறப்பான சில தேவைகளையும் சூழல்களையும் ஒட்டிச் சில சமயங்களில் வெவ்வேறு கூறுகளில் அது தன்னைப் பிரத்தியேகமாக அடையாளம் காட்டிக்கொள்கிறது. ஆனால் பொதுவாக கவிதை மொழியின் தளம் ஒரு ஒட்டுமொத்தமான நிலையில் அமைவதாகும். கவிதையை ஒருவகையான கலையாகத் தூக்கி நிறுத்தலாம்.

உணர்ச்சி, கற்பனைக் கருத்துக்களை வெளிப்படுத்தவும், தூண்டவும் கவிதைகள் உதவுகின்றன. இது மக்களை அவர்களின் ஆழ்ந்த மனித உணர்வுகள் மற்றும் உணர்ச்சிகளுடன் இணைக்கிறது. கவிதைகள் நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் இருந்ததைப் பார்க்கலாம். வாய்மொழிக் கவிதை வாசிக்கும் மரபுகள் புத்துயிர் பெறுகின்றன. கவிதைக்கல்வி ஊக்குவிக்கப்படுகிறது, கவிதை மற்றும் நாடகம், நடனம், இசை போன்ற பிற படைப்பு வடிவங்களை ஒன்றிணைத்து கவிதைகள் அதிகமாக வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு நாகரிகம் மற்றும் பிராந்தியம் முழுவதும் பழங்காலத்தில் நமது பகிரப்பட்ட மனிதநேயம் மற்றும் இலட்சியங்களுடன் தொடர்புகொள்வதற்காக கவிதைகள் நடைமுறையில் உள்ளன. மிக அடிப்படையான கவிதைகள் கூட உரையாடல் மற்றும் நல்லிணக்கத்திற்கான பயனுள்ள ஊக்கியாக மாறுகிறது. இச்சிறப்புகள் வாய்ந்த கவிதைக்கு உலக அங்கீகாரம் அவசியம்தான்.

கவிதையின் தோற்றம் இன்று நேற்றல்ல, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றியது எனலாம். கவிதைகளுக்கான தோற்றத்தை சீனஷிஜிங் நாட்டுப்புற பாடல்களில் இருந்தும் சமஸ்கிருத வேதங்களில் இருந்தும் கிரேக்க காவியங்களான இலியட் மற்றும் ஒடிசி ஆகியனவற்றில் இருந்தும் அறிந்து கொள்ளலாம். வாய்மொழித் தொன்மங்களைத் தொடர்ந்து தக்கவைக்கவேண்டிய அவசியம் இருந்தன. அரிஸ்டோட்டிலின் கவிதையியல் போன்று கவிதையை வரையறுக்க சொல்லாட்சிக்கலை நாடகம், பாடல் மற்றும் நகைச்சுவை ஆகியவற்றில் பேச்சுக்களைப் பயன்படுத்தும் வழக்கம் இருந்துவந்தது. மேலும், இருபதாம் நூற்றாண்டின் மத்தியில் இருந்து கவிதையானது இசைக் கோர்ப்பிற்கேற்ப கற்பனைச் செய்திகள், எழுத்துரு வடிவங்கள் ஆகியவற்றைக்கொண்டு விளங்க ஆரம்பித்தது.

'காட்டுவாசி ஒருவன் கொட்டிய பறையில் கவிதை தோன்றியிருக்கவேண்டும்' என்கிறார் எமர்சன். கவிதை மந்திர மொழிகளிலும், சடங்குச் சொற்களிலும் வாய்மொழிப் பாடல்களாகத் தோற்றம் பெற்றிருக்கவேண்டும் என்கிறது வாழ்வியல் களஞ்சியம். கவிதை முதலில் இசைப்பாடல்களாகத் தோன்றியிருக்க வேண்டும் என்ற கருத்திற்கு வலிமை சேர்க்கும் விதமாக சங்க இலக்கியத்தில் பாணன், பாடினி, விறலி போன்றோர்களின் குறிப்புகள் கிடைக்கப்பெற்றன. கவிதையின் தோற்றம் முதலில் பொருளற்ற இசைக் குறிப்புகளிலிருந்து இசைப்பாடல்கள் தோன்றியிருக்கவேண்டும். கல்வி மக்களின் உடமைப் பொருளாகும்போது உரைநடை இலக்கியம் மற்றும் உரைநடை சார்ந்த புதுக்கவிதை பிறந்தது எனலாம். காலத்திற்குக் காலம் மொழித்தன்மை புதுப்பித்துக்கொள்வதுபோல் கவிதையியலும் தன்னை வளர்த்துக்கொள்கிறது.

ஆங்கில இலக்கிய உலகில் 16-ம் நூற்றாண்டை (பொ.ஆ.பி. 1558-1625) எலிசபெத்தன்-ஜாக்கோபன் காலம் என்பர். ஆங்கில நாடக முன்னோடி வில்லியம் ஷேக்ஸ்பியர் (பொ.ஆ.பி. 1564-1616) இக்காலகட்டத்தை சார்ந்தவராவார். அகச் செய்யுட்கள் (LYRICS) அதிகம் எழுதப்பட்ட காலம். இத்தாலியில் புகழ்பெற்ற விடா (VIDA,1489-1566) இலத்தீன் மொழியில் கவிதைகள் பல எழுதியுள்ளார். தமிழ்நாட்டில் வாழ்ந்த கவி

ஞர்களில் சுப்பிரமணிய பாரதி (1882-1921) மிக முக்கியமான வராவார். இவர் தேசிய போராட்ட காலத்தில் பல தேசிய உணர்வுள்ள கவிதைகளைப் படைத்ததனால் தேசியக்கவி என்றும் அழைக்கப்பட்டார். பாரதிதாசன் (1891-1964) என்பவர் இன்னுமொரு தமிழ் கவிஞராவார். இவர் புரட்சிக்கவி மற்றும் பாவேந்தர் எனவும் அழைக்கப்பட்டார். பல நாடுகளில் பேச்சு நாகரிகம்கூட சரியாக இல்லாத காலத்தில் சங்கம் வளர்த்து கவிதை பாடிய மொழி தமிழ்மொழி. அறம் பற்றியும்




புறம் பற்றியும் கவிதை வடிவில் பல வரலாற்று உண்மைகளைக் கவிதை வழியாக அக்கால கவிஞர்கள் எழுதியிருந்தனர்.

உலகம் விரும்புவது, உலகம் காத்திருப்பது நவீன கவிதையோ, செம்மொழிக் கவிதையோ, நவகிளாசிக்கல் கவிதையோ அல்ல, நல்ல கவிதை. 'ஒரு கவிஞன் நல்ல கவிதை எழுதும்வரை எந்தக் காலகட்டத்திலும் எந்தப் பாணியில் எழுதத் தேர்ந்தெடுத்தான் என்பது உண்மையில் முக்கியமா? என்ற சந்தேகம் எழுகிறது' என்கிறார் ஜி.கே. செஸ்டர்ரன். 'ஒரு கலைஞன் தான் என்ன செய்கிறான் என்பதை தேர்ந்தெடுக்க சுதந்திரமாக இருக்கவேண்டும். ஆனால் அவன் தேர்ந்தெடுக்கும் காரியத்தை செய்ய அவன் ஒருபோதும் பயப்படக்கூடாது' என்கிறார் லாங்ஸ்டன்ஹியூஸ். நீண்ட வரலாற்றைக் கொண்ட கவிதையைக் கொண்டாட சர்வதேச நாள் ஒன்று தேவையில்லையா?

1999-ம் ஆண்டில் பாரிஸ் நகரில் நடைபெற்ற யுனெஸ்கோ அமைப்பின் 30-வது பொதுக் கருத்தரங்கின்போது மார்ச் 21-ஆம் திகதி உலகக் கவிதைகள் தினமாக முதன்முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு உலக கவிதைகள் நாள் (WORLD POETRY DAY) ஆண்டுதோறும் மார்ச் 21-இல் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இது உலகம் முழுவதும் கவிதை வாசிக்கவும், எழுதவும், வெளியிடவும் மற்றும் போதனை செய்யவும், ஊக்கிவிக்கும்பொருட்டும் யுனெஸ்கோ நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டது. மனித உள்ளத்தின் படைப்பாக்க உணர்வை உள்ளீர்க்கும் கவிதையின் தனித்துவமான ஒரு திறனை அங்கீகரிப்பதற்காக இத்தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. உலகம் முழுவதும் உள்ள கவிஞர்கள் 'உலக கவிதைகள் தினத்தை' நினைவுகூருகிறார்கள். இந்நாளில் கவிஞர்கள் கௌரவிக்கப்படுவதும் உண்டு.

உண்மையான அன்பை ஆழமாகச் சொல்லும் ஒவ்வொரு வார்த்தைகளும் அழகான கவிதைகள்தான். அம்மா அன்பின் கவிதை! நட்பு நம்பிக்கையின் கவிதை! உறவு உண்மையின் கவிதை! கவிதையின் தனித்துவமான திறனை அங்கீகரிப்பதற்காக அனுஷ்டிக்கப்படுகிறது. ஐ.நா. சபை கவிஞர்கள் மொழியியல் வகைகளை விரிவுபடுத்துவதன் முக்கியத்துவத்தை முன்னிலைப்படுத்தவும் உள்நாட்டு மொழிகள் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இந்த நாளை நிறுவினர். உலக கவிதைகள் தினத்தின் குறிக்கோளில் ஒன்று பழைய மொழிகளைப் பாதுகாப்பதிலும் பொதுவாக மனித வளர்ச்சியிலும் உலகம்சார் விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் கவிதையின் முக்கியத்துவம் கவனத்தில் கொள்ளவேண்டும். சமகால சமூகத்தின் வளர்ச்சியில் கடந்த காலக் கவிஞர்கள் முக்கிய பங்காற்றியுள்ளனர் என்று உலக மக்களில் பெரும்பாலானோர் நம்புகின்றனர். அவர்கள் பல்வேறு வழிகளில் மொழியைப் பயன்படுத்தினர். இது அறிவார்ந்த புரிதல் மற்றும் அறிவின் செழுமையையும் அழகையும் விளைவித்தது.

இக் கவிதைகளை யார்தான் எழுதியிருந்தாலும் மன்னிப்புடன், சற்று இரசித்துத்தான் பார்ப்போமே. 'மரணம் என்று ஒன்று இல்லையாயின் மனிதரின் நிலைதான் என்ன?', 'அன்பு ஒன்றே எல்லோருக்கும் புரியும் மொழி', 'வீடெங்கும் பசியின் வாசனை கையில் காசு இல்லாமல் காற்று வாங்குகிறது கடைத்தெரு', 'இதுவரை பார்த்ததில்லை இத்தனை அழகாய் ஒரு திருட்டை அவள் கண்களாலே என்னை களவு செய்து விட்டாள்', 'தூக்கத்தில் எழுதிய கவிதை கனவு', 'மழை நேரத்து சாரல் வெளிச்சத்தை விழுங்கி வாய் கொப்பளித்துக் கொண்டிருந்தது'. கவிதைகள் அழகுதான். கவிதைக்கு மெய் அழகுதான்.

'உலக கவிதைகள் தினம்' 2024-ம் ஆண்டின் கருப்பொருள் 'இராட்சதர்களின் தோள்களில் நிற்பது'. (2024 THEME IS 'STANDING ON THE SHOULDERS OF GIANTS') பண்பாடுகள் முழுவதும் கவிதையின் தடத்தை விரிவுபடுத்திய கடந்த காலத்தின் புகழ்பெற்ற எழுத்தாளர்களுக்கு இக் கருப்பொருள் தலை தூக்குகிறது. இன்று அந்த அடித்தளத்தில் புதிதாக கட்டமைக்கப்படும் இளம் கவிஞர்களை இது ஒரேநேரத்தில் வெளிச்சம்போட்டுக் காட்டுகிறது. எதிர்வரும் உலக கவிதைகள் தினம் உலக கவிஞர்களின் முக்கியத்துவத்தை உலகிற்கு வெளிச்சம் போட்டுக்காட்டிக்
கொண்டாடட்டும்.



natkunalingam@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com*** ***Fax: +1-416-849-0594*** ***Tel: +1-416-857-6406***




இலங்கையில் 2024-ம் ஆண்டில் பல பகுதிகளில் பெரு மழை பொழிந்ததை யாவரும் அறிவோம். அதனைத் தொடர்ந்து பரவலாகப் பல பகுதிகளிலும், குறிப்பாக இலங் கையின் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் நத்தைகள் பெரும ளவு பெருகியுள்ளதை அவதானித்துள்ளார்கள்.

இந்நத்தைகள் இந்நாட்டிற்கு புதியதல்ல. முதலில் எனக்கும் நத்தைகளுக்கும் உள்ள தொடர்பு ஆறு தசாப்தங்களுக்கும் மேலாகும். அக்காலகட்டத்தில் நான் கொழும்பில் வசித்து வந்தேன். அப்போ, பொழுதுபோக்கிற்காக பூந்தோட்டமும் காய்கறி தோட்டமும் செய்தோம். அவை அனைத்தையும் இந்த நத்தைகள் அழித்து விடும். அதனால் அவற்றை ஒரு வெற்றுப் பாத்திரத்தில் சேர்த்து உப்பு நீரால் நிரப்பினால் இறந்துவிடும். இப்படியாகக் கட்டுப்பாட்டில் வைத்திருந் தோம்.

இந்நத்தைகளை ஆபிரிக்க நத்தை எனக் குறிப்பிடுவதும் உண்டு. இந்நத்தை விடயமாக 1961-ல் அல்பட் R. மீட் என்ப வர் ஒரு நெடிய ஆய்வொன்றைச் செய்துள்ளார். அதில் அவர் குறிப்பிட்டுள்ள கண்டுபிடிப்புகளை முதலில் பகிர்ந்து, பின் ஏன் நத்தைகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதனைப் பார்ப்போம்.

இந்த நத்தைகள் 1800-ம் ஆண்டிற்கு முன்பாகவே மடகஸ் கார் தீவில் காணப்பட்டன. அங்கிருந்து மொரீசியஸ் மற்றும் ஈயூனியன் பிரதேசத்திற்கு 1821-ம் ஆண்டு காலகட்டத்தில் பர வியுள்ளதை அவதானித்துள்ளார். இக்காலகட்டத்தில், இப்பி ரதேசத்தில் உள்ள கரும்புத் தோட்டங்களில் பாண்டிச்சேரி போன்ற பிரதேசங்களிலிருந்து பெருமளவு தமிழ் மக்கள் ஒப் பந்தக் கூலியாட்களாக வந்துள்ளமையை நினைவிற் கொள் ளவும்.

திரு. அல்பட் R. மீட் செய்த ஆய்வின்படி 1847-ல் இந்தியா விற்கும், பின் 1900-ம் ஆண்டளவில் இலங்கைக்கும் பரவியுள் ளமையைக் குறிப்பிட்டுள்ளார். 2011-ம் ஆண்டில் பேருவிலும் ஆர்ஜென்டீனாவிலும் இது பரவியமை குறிப்பிடப்பட்டுள்ளது. அண்டை நாடான அமெரிக்காவில் புலோரிடா மாகாணத்து மியாமி நகரத்தில் 1975 மற்றும் 2021-ம் ஆண்டுகளில் புலோ-ரிடா மாகாண அனுசரணையுடன் அதனை அழிப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. அதன் தாக்கம் இற்றைவரை தொடர்கிறது.

நத்தைகள் அவ்வளவு சக்தி வாய்ந்ததா ?

ஆண், பெண் உறுப்புகள் ஒவ்வொரு நத்தைகளுக்கும் உண்டு. எனவே அவை உடல் உறவு கொள்கையில் இரு நத் தைகளுமே முட்டைகளை உருவாக்கும். மேலும் ஒவ்வொரு முறையும் இரண்டு நத்தைகளும் ஆளுக்கு இருநூறு முட்டை கள் இடும். சராசரியாக 5 தொடங்கி 6 ஆண்டுகள் வரை வாழுகின்ற ஒரு நத்தை தன் ஆயுளில் 1000-இற்கும் அதிக மான முட்டைகளை இடுகின்றன. இப்படிப் பெருமளவில் இடப்பட்ட முட்டைகள் 8 முதல் 21 நாட்களுக்குள் பொரித்து விடும். எவ்வளவு இவை இனப்பெருக்கம் செய்கின்றன என்று நோக்கினால் அதனால் ஏற்படும் தாக்கம் புரியும்.

ஒரு நாட்டின் நிலத்தைச் சேராத உயிரினம், அந்நாட்டில் குடி யேறி, அந்நாட்டு வளத்தை தானே உட்கொள்ளுமானால், அதனை ஆக்கிரமிப்பு உயிரினம் என்றுதானே குறிப்பிட வேண்டும். கிழக்கு ஆபிரிக்க பிரதேசத்தை சோர்ந்த இந்த நத்தைகளும் இந்தியாவின் வளத்தை ஆக்கிரமித்ததை வெகு அழகாக 2021-ம் ஆண்டு யூலை மாதத்தில் வெளியா கிய விகடன் சஞ்சிகையில் தந்து உள்ளார்கள். அவற்றை இங்கு உங்களுடன் பகிர்ந்து கொள்வேன்.

கேரளா மாநிலத்தில் 2005-ம் ஆண்டு நடத்தப்பட்ட ஓர் ஆய் வில் பாலக்காடு, ஏர்ணாகுளம் மற்றும் பத்தனம் திட்டா ஆகிய மாவட்டங்களில் மட்டுமே இந்த ஆபிரிக்க நத்தைகள் காணப்பட்டன. ஆனால் 2020-ம் ஆண்டு நடத்தப்பட்ட மற்று மோர் ஆய்வில் இடுக்கி மாவட்டத்தைத் தவிர கேரளாவின் அனைத்து மாவட்டங்களிலும் இந்த ஆபிரிக்க நத்தை பரவி இருந்தது தெரியவந்துள்ளது.

2020-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் மதுரை மாவட்டத்தி லுள்ள பரவை என்ற ஊரில் வாழைத் தோட்டங்களில் பரவிய ஆபிரிக்க நத்தைகளால், பெருமளவிலான வாழை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

19-ம் நூற்றாண்டில், வில்லியம் ஹென்றி பென்சன் (William Henry Benson) என்ற ஆங்கிலேயர் இந்தியாவிற்கு மொரீஷியசிலிருந்து செல்லப் பிராணியாக இரண்டு நத்தைகளைக் கொண்டு வந்துள்ளார். அவர் இந்தியாவை விட்டுச் செல்லும்



வேளையில் நண்பர் ஒருவருக்கு அந்த செல்லப் பிராணியைக் கொடுத்துச் சென்றார். அவரோ அவற்றை கல்கத்தாவிலுள்ள தனது தோட்டத்தில் திறந்து விட்டார். வருடத்திற்கு ஆயிரம் முட்டையிடும் நத்தைகளை 1858-ல் இந்தியாவிற்கு திரும்பிய பென்சன் (Benson) அது கல்கத்தாவில் பெருகி இருந்ததாகத் தனது குறிப்பில் தெரிவித்து உள்ளார்.

பென்சனால் கல்கத்தாவில் நுழைந்த நத்தைகள் எண்ணிக்கையில் பெருகி இருந்ததன. அக்காலத்தில் அங்கிருந்து வடக்கே பீகாரில் தனது ஊருக்குத் திரும்பிய கொல்லர் எடுத்துச் சென்றார். அவை அங்கும் பெருகி அண்டை மாநிலங்களுக்கும் பரவியது. ஓடிசாவில் வாழ்ந்த ஒரு விவசாயி அங்கிருந்து இந்த நத்தைகளை பிடித்து, ஆந்திரப் பிரதேசத்தில் அவருக்குச் சொந்தமான தோட்டத்தில் 1966-ல் கொண்டு வந்துவிட்டார்.

இப்படியாக ஆபிரிக்க நத்தைகள் இந்தியாவின் பல பகுதிகளிலும் பரவி அச்சுறுத்தக் கூடிய அளவு ஆக்கிரமிப்பும், விவசாயத்தில் அழிவும் செய்யும் உயிரினமாகப் பெருகியுள்ளது.

ஒரு தாவரத்தின் நல்ல சதைப்பற்றுள்ள, ஆரோக்கியமான பகுதிகளையே குறிவைத்து இவை உண்கின்றன. மேலும் அவை குறைந்தபட்சம் 20 நத்தைகளாவது கூட்டமாக சென்று உண்பதனாலும் பயிரை முற்றாக அழித்து விடுகிறது.

இலங்கையில் சென்ற வருடம் பெய்த பெருமழையின் பின் நத்தைகள் பெருகிக் காண்பதாகச் செய்தியை அறிந்தபோது அதிர்ச்சியாக இருந்தது. நத்தைகள் தமிழ் பிரதேசத்தில் மட்டுமல்ல முழு நாட்டிலும் தாக்கம் செலுத்தவல்லன. ஒரு நாட்டை அழிப்பதற்கு வெடிகுண்டு தேவையில்லை. அந்த நத்தைகளைப் பெருக விட்டாலே போதுமானது.

எனவே அனைத்து சமூகங்களும் இணைந்து செயற்பட வேண்டும். அவற்றை உணவாக உண்டு அழிக்கக்கூடிய பறவைகளை நாம் உணவாக உண்டு அழித்து விட்டோம். எனவே அனைவரும் இணைந்து
செயற்படுவோம்.



kumar.punithavel@thaiveedu.com

**Art Ambalam of A.Mark**

An Exhibition of artworks of A.Mark (1933-2000)

He introduced modern art among the Tamils of Sri Lanka, tirelessly created art within the brutalities of war, never get limited by the embargo and created learning space for people of all ages and backgrounds.

His works from 5 decades and in different styles will be displayed in Mannar



*In the words of Artist Asai Rasiah, " Mark marks the turning point of modern art in Jaffna. He was responsible for weaning away a generation rooted in the romantic tradition of Ravi Varma".*

He brought 'art' from out of its conventional cocoons; studios, galleries and materials. He convinced the communities to create and experience the colours and lines from any available materials in times of war and embargo.

**Dates: 13th to the 16th of March 2025.**
**Venue: No.77, Field Street, Sinnakadai, Mannar**

For more information, contact thru whats app: +94759092998




எல்லைகளுக்குள் மட்டுப்படாத காண்பியக்கலை வெளிப்பாடுகளான ஓவியர் அ. மாற்குவின் நூற்றுக்கணக்கான கலைப் படைப்புகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஓவியங்களின் காட்சி, மார்ச் 13–இல் இருந்து மார்ச் 16 வரை மன்னாரில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனை அவரது மாணவர்களும் குடும்பத்தவரும் ஆர்வலர்களும் இணைந்து நடத்த வுள்ளனர்.

ஓவியர் மாற்குவினது வெவ்வேறு காலகட்டங்களுக்குரிய வெவ்வேறு பாணிகளிலான ஓவியங்களிலிருந்து தெரிவுசெய் யப்பட்ட ஓவியங்களையும் சிற்பங்களையும் இங்கு காணலாம். இந்தக் கலைப் படைப்புகள், குறித்த காலங்களின் வர லாற்று சாட்சியங்களாகவும் நிற்பவை.

- கமலா வாசுகி

1933-ஆம் ஆண்டு அ. மார்க் குருநகரில் பிறந்தார். சிறு வயதிலேயே ஓவியம் வரைவதிலும் சிற்பங்கள் செய்வ திலும் விருப்பம் கொண்டிருந்தார். இவரின் ஆரம்ப ஓவியப் பயிற்சியை ஓவியர் எஸ். பெனடிக்ற் அவர்கள் நடத்திய மாலை நேர வகுப்புக்களில் பெற்றுக் கொண்டார். இவர் தனது கல்வியை புனித சம்பத்திரி சியார் கல்லூரியில் பெற்றார்.



1953-ல் கொழும்பு நுண்க-லைக் கல்லூரியில் இணைந்து ஐந்து வருடங்கள் பயின்று பட்டம் பெற்றார். அங்கு பயின்ற காலத்தில் அவரின் விரிவுரையாளராக இருந்த டேவிற் பெயின்ரர் இவரின் ஓவியங்களைப் பாராட்டியும் ஊக்கப்படுத்தியும் வந்தார். நுண்கலைக் கல்லூரியில் பயின்ற காலத்தில் இவரது ஓவியங்கள் கண்காட்சிகளுக் குத் தெரிவு செய்யப்பட்டு காட் சிப் படுத்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இவர் 1958-1967 வரையான காலப் பகுதியில் யாழ்ப்பாணத் தில் ஓவியர் எம்.எஸ். கந்தையாவினால் உருவாக்கப்பட்ட ‘விடு முறைக்கால ஓவியக் கழகத்தில்’ (Holiday Painters Group) இணைந்து இளையவர்களுக்கு ஓவியத்தைக் கற்றுக் கொடுத்துள்ளார். இக்குழு யாழ்ப்பாண மாநகரசபை மண்ட பத்தில் இரு பெரும் கண்காட்சிகளை நடத்தியுள்ளது.

இவரின் ஓவியப்பாணி நவீனமானது எனப் பொதுவாகக் கூறி னாலும் இவர் ஒவ்வொரு காலகட்டத்திலும் தனது ஓவியப் பாணியில் மாற்றங்களையும் புதுமைகளையும் ஏற்படுத்தியி ருப்பதை அவதானிக்க முடிகின்றது. இவரின் ஆரம்பகால ஓவியங்கள் கிறிஸ்தவ மதம்சார் விடயங்களாகப் பெரும்பா லும் இருந்ததுடன் அவற்றை நீர்வர்ணத்தைப் பிரதானமாகப் பயன்படுத்தி, கழுவுதல் முறையை கையாண்ட படைப்புக ளாக இருக்கின்றன. அடுத்து வரும் காலங்களில் குறிப்பிட்ட சில நிறங்களின் ஆதிக்கம் அவரின் படைப்புக்களில் வெளிப் படுவதைக் காணலாம். குறிப்பாக வெள்ளை நிறம் பிரதானம் பெறும் ஓவியங்களாகவும், நீல நிறம் ஓவியங்களில் முதன்மை பெற்றிருந்ததையும் அடுத்தடுத்து வரும் காலங்க ளில் இவர் படைத்த ஓவியங்களில் காணலாம். வெள்ளைக்கா லம், நீலக்காலம் என்றே இவர் தனது படைப்புகளைப் பிரித் துக் காட்டுகின்றார்.

மனித உருக்களைக் கொண்டு உணர்வுகளை வெளிப்படுத்து வதில் ஆர்வம் கொண்டிருந்தவர். தன் படைப்புகளைத் தத் ரூபமாக படைப்பதைத் தவிர்த்து சிதைவுகளாகவும், விகாரங் களாகவும் உருவகிப்பதில் திருப்தி அடைந்திருக்கின்றார். இவை எல்லாவற்றையும் விட மாற்குவின் ஓவியங்களில் இரே கைகள் பிரதானம் பெறத் தொடங்கிய பின்னரே அவரின் ஓவி யங்கள் முன்னரை விட காத்திரமாகவும் தனித்துவமாகவும் ஓவியத்துறையில் பிரபல்யம் அடையத் தொடங்குகின்றன. 1970-களிலி ருந்து 1980-கள் வரையில் இவரின் கோட்டோவி யங்களில் கேத்திர கணித வரைவுகளின் ஒத்த சாயலும் புலப் படுவதை அவதானிக்கலாம். 1980-களில் யாழ்ப்பாணத்தின் போர்ச் சூழலுக்கு ஏற்ப இவரின் ஓவியப் போக்கிலும் மாற்றம் ஏற்படுகின்றது. பெரும்பாலும் கறுப்பு, வெள்ளை ஓவியங்க ளாக இவை இருப்பதுடன் சமகால நிகழ்வுகளைப் பதிவு செய் யும் போக்கில் இவரது ஓவியத்தின் கருப்பொருள் அமைந்தி ருக்கின்றது.



1960-களின் இறுதியில் இயங்காது போன 'விடுமுறை கால ஓவியக் கழகம்' 1980-களின் மத்தியில் மாற்குவின் வீட்டில் அவர் உருவாக்கி இருந்த ஓவியக் கூடத்தில் மீண்டும் இயங்கத் தொடங்குகின்றது. இளம் தலைமுறைகளுக்கு மாலை நேரங்களிலும் வார இறுதி விடுமுறை நாட்களிலும் ஓவிய வகுப்புகளை நடத்தியதுடன் வெளிப்புறக் காட்சிகளை வரைவதற்கு மாணவர்களைக் கூட்டிச்சென்று இயற்கையோடு இணைந்து ஓவியத்தைக் கற்றுக்கொடுப்பதில் இவரின் கற்பித்தல் பாணி சிறந்து விளங்கியது.

மாற்கு சிறந்த ஓவியராக மட்டுமன்றி சிறந்த ஓவிய ஆசிரியராகவும் விளங்கினார். ஆரம்பத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் பின்னர் கொக்குவில் இந்து கல்லூரியிலும் ஓவிய ஆசிரியராகப் பணியாற்றியதுடன், ஓவியத்தில் ஈடுபாடும் விருப்பமும் கொண்ட பல மாணவர்களை உருவாக்கியுள்ளார்.

1980-களில் ஓவியத்தின் தேவை யாழ்ப்பாண சமூக அரசியல் சூழலுக்கு அவசியமானதாக இருந்தமையால் தொடர்ச்சியான ஓவியக் கண்காட்சிகள் இடம்பெறத் தொடங்குகின்றன. அவற்றில் மாற்கு மாஸ்டரின் ஓவியங்களும் பிரபல்யம் அடையத் தொடங்கின. குறிப்பாக 1986-ல் யாழ். சம்பத்திரியார் கல்லூரியில் இடம்பெற்ற 'மக்களின் எதிர்காலத்தை நோக்கி' என்ற ஓவியக் கண்காட்சியில் மாற்குவின் இராகங்களைச் சித்திரிக்கும் ஓவியங்களும் சமகால நிகழ்வுகளைச் சித்திரிக்கும் ஓவியங்களும் பலராலும் பேசப்பட்ட ஓவியங்களாக இருந்தன. இதனைத் தொடர்ந்து பருத்தித்துறையில் இடம்பெற்ற கண்காட்சியிலும் சமகால நிகழ்வுகளை வெளிப்படுத்திய ஓவியங்கள் முக்கியமாகக் காட்சிப்படுத்தப்பட்டன.

1987-ல் ஓவியர் மாற்குவைப் பிரதானப்படுத்தி 'தேடலும் படைப்புலகமும்' என்ற நூல் வெளிவந்தது. இந்நூல் ஓவியர் மாற்குவை இன்னும் பலர் அறிவதற்கு வழிவகுத்தது. அதுமட்டுமன்றி, அக்காலத்தில் வெளிவந்த அலை சஞ்சிகையில் இவரது ஓவியங்கள் அதிகளவில் இடம்பெற்றமையும் ஓவியர் மாற்குவை தமிழ் இலக்கிய உலகிற்கும் அறிமுகப்படுத்தி வைத்த தெனலாம்.

1989-ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் யாழ். இந்துக் கல்லூரியில் யாழ். றோட்டரிக் கழக ஆதரவில் நடத்தப்பட்ட கண்காட்சியில் மாற்கு மாஸ்டரின் ஓவியங்களுடன், அவரின் பல மாணவர்களின் ஓவியங்களும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இக்கண்காட்சிக்கு முன்னர் இவரது மாணவர்களின் தனிப்பட்ட ஓவியக் கண்காட்சிகள் இடம்பெற்று இருந்தாலும் இக்கண்காட்சி ஓவியர் மாற்கு தனக்கென ஓர் ஓவியப் பரம்பரையை உருவாக்கி இருப்பதற்கு சான்றாக விளங்கியது.

இதனைத் தொடர்ந்து 1990-ம் ஆண்டு மார்ச் மாதம் 'இன்னொரு முகம்' என்னும் தலைப்பில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க, யாழ். பிரிவின் ஆதரவில் மார்குவின் ஓவிய, சிற்பக் கண்காட்சி யாழ். இந்துக் கல்லூரியில் இடம் பெற்றது. அடுத்து 'மாற்குவின் வண்ணங்கள்' என்னும் தலைப்பில் மணிவிழா ஓவியக் கண்காட்சி யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் அவரின் அறுபதாவது பிறந்தநாளின் போது 1994-ம் ஆண்டு ஜூன் 25-ம், 26-ம் திகதிகளில் இடம் பெற்றது.

காலத்துக்குக் காலம் தனது ஓவியப் பாணியில் பரிசோதனை முயற்சிகளைக் கையாள்வதில் ஆர்வம் கொண்டவரான ஓவியர் மாற்கு 1990-களின் பிற்பட்ட காலங்களில் ஓவியங்களை சஞ்சிகைகளிலும் வர்ணத் தாள்களிலும் வரைந்துள்ளார். ஏற்கனவே அமைந்துள்ள வர்ணத்திற்குள் தன் கோடுகளையும் தேவைக்கேற்ற நிறங்களையும் சேர்த்து ஒரு புதிய படைப்பை உருவாக்கியுள்ளார்.

1995-ல் யாழ்ப்பாணத்தின் உச்சம்பெற்ற போர் சூழலின் காரணமாக மாற்குவின் குடும்பத்தினரும் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயத்துக்கு உட்பட்டனர். முதலில் மாங்குளத்திற்கு குடிபெயர்ந்தவர் அங்கும் தன் கலைப் பணியைத் தொடர்ந்து கொண்டே இருந்தார். அகதிகளாக இடம்பெயர்ந்திருந்த சிறுவர்களுக்கு ஓவியம் கற்பிப்பதாகவும் கையில் கிடைத்த பொருட்களைக் கொண்டு சிற்பங்கள் செய்வதாகவும் தன் இயல்பு மாறாமலே இடம் பெயர்ந்தும் ஒரு கலைஞனாகவே வாழ்வைத் தொடர்ந்தார். இக்காலப்பகுதிகளில் காடுகளில் கிடைக்கும் தடிகளைக் கொண்டு விதம் விதமான ஊன்றுகோல்களைத் தயாரித்திருந்தார்.

மாங்குளத்தில் அவர் குடியிருந்த வீடு பண்டைய கால வீட்டமைப்பில் சாணம், மணல் கொண்டு அமைக்கப்பட்டதாக இருந்தது. அதன் மணல் சுவரில் ஓர் ஓவியம் வரைந்து, அந்தப் போர்ச் சூழலிலும் அழகியல் மறக்கப்படாததாகவும் ஓவியர் மாற்குவை அடையாளப்படுத்துவதாகவும் பறைசாற்றிக்



கொண்டிருந்தது.

1995-க்கும் 1998-க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 'இடம் பெயர்வு', 'அகதிகள்', 'ஏக்கம்' போன்ற தலைப்புகளைப் பிரதி பலிப்பதாக இவரின் ஓவியங்கள் இருந்தன. கொடூரமான போர்ச் சூழலில் இவ்வாறான விடயங்களைத் தவிர்த்து வேறு எதுவும் ஓவியத்தில் கொண்டு வரக்கூடியதாகவும் இருந்திருக் காது. இருந்தாலும் இக்காலப்பகுதியில் ஓர் தனிக் கம்பியை வளைத்து சிலுவையில் உள்ள இயேசுவை உருவமாக்கியி ருந்தார் என்பதும் குறிப்பிடவேண்டும். கம்பிகளை வளைத்து உருவங்கள் செய்வதில் ஓவியர் மார்க்குவிற்கு மிகுந்த பழக் கம் இருந்தது என்பதை அவரின் ஆரம்ப காலச் சிற்பங்கள் ஊடாக அறியலாம். பின்னர் அந்த வடிவமைப்புகளை நவீன பாணி ஓவியங்களாகவும் படைத்திருக்கின்றார். இதன் தொடர்ச்சி, போர்ச் சூழலில் எந்த வசதிகளும் இல்லாத வாழ்க்கையிலும் அவர் அதைக் கைவிடாது இருந்தார்.

1998-ல் மன்னாருக்கு குடும்பத்துடன் இடம்பெயர்கின்றார். உடல்நலக் குறைபாடு ஏற்பட்டதன் காரணமாக கை கால்க ளில் செயலிழப்பு ஏற்பட்டிருந்தது. கைகளுக்கு கொடுக்கப் பட்ட பயிற்சிகளின் மூலம் மீண்டும் கைகள் பலம் பெற ஓவி யர் மார்க் மீண்டும் ஓவியங்கள் படைக்க தொடங்குகின்றார். எப்போதும் போல் பத்திரிகைத் தாள்கள், சஞ்சிகைகள், பொருட்கள் வரும் மட்டைகள் என்பவற்றில் எண்ணெய்ச்சுண் ணம் (pastels) பாவித்து ஓவியங்களை படைத்துக் கொண்டே இருந்தார். உடல்நலம் சீராக இல்லாத போதும் மிகவும் மகிழ்ச்சியாகவும் எப்போதும் போல தன்னைச் சுற்றி மாணவர் களை வைத்துக் கொண்டும் தன் ஓவிய வாழ்வில் எந்த மாற் றமும் இல்லாமலே கொண்டு சென்றார்.

இக்காலப் பகுதியில் மன்னாரில் கிறிஸ்தவ அமைப்பின் ஊடாக இவரின் ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டமை குறிப் பிடத்தக்கது. கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சினால் 1998-ல் திருகோணமலையில் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வில் ஓவியர் மாற்குவிற்கு 'ஆளுநர் விருது' வழங்கப்பட்டதென்பது பெருமையுடன் நினைவுகூரத் தக்கது. இந்நிகழ்வில் அவரது ஓவியங்களும் காட்சிப்படுத் தப்பட்டன.

1999-களில் மீண்டும் இவரின் உடல்நிலை சீரற்று போயிருந்த நிலையிலும் ஓவியர் மாற்குவை எப்போதும் யாரோ ஓர் ஓவிய மாணவர் தேடி வந்துகொண்டே இருந்தார். இது ஓவியத்துட னான நெருக்கத்திலிருந்து சிறிதளவும் அவர் விலகிச் செல் லாமையை எடுத்துக் காட்டுகின்றது. ஓவியத்துடனும் தனக் கான ஓர் மாணவர் பரம்பரையுடனும் தொடர்ந்து பயணித்தவ ராகவே ஓவியர் மாற்கு இருந்திருக்கின்றார்.

ஓவியர் மாற்கு ஓவியப் படைப்பாக்கத்தில் இருந்து விலகியி ருந்த நாட்கள் மிக மிகக் குறுகிய நாட்களே. நடக்க முடியா மல் போயிருந்த போதும் தன் கைகளின் வல்லமையை என் றும் இழந்து விடவில்லை. அவருக்கே உரிய எதையும் இலகு வாகவே எடுத்துச் சந்தோசத்தைத் தானாகத் தேடிக் கொள் ளும் மனப்போக்கினால் தன் இறுதிக் காலம் வரையில் அதே காத்திரமான கோடுகளினால் கதை சொல்லும் ஓவியங்க ளைப் படைத்துக் கொண்டிருந்தார். அவரின் ஆரம்பகால ஓவியங்களில் முதன்மை பெற்றிருந்த கிறிஸ்தவ கதைகளும், பாலன் பிறப்பும் கூட மீண்டும் ஓவியங்களாக வரத் தொடங்கி யிருந்தன.

வெறும் 67 வயதில் 2000-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26-ம் திகதி ஓவியர் மாற்கு இப் பூவுலகில் தன் ஓவியப் பயணத்தை முடித்துக் கொண்டார்.



arunthathi.r@thaiveedu.com




கதைசொல்லி என்ற வார்த்தை தமிழ் இலக்கியப் பரப்பில் இப்போதெல்லாம் ஒரு புகழ் பெற்ற சொல்லாகத் திகழ்கிறது. பிரசித்தி பெற்ற ஓர் எழுத்தாளரின் கதையைப் பார்வையாளர்களுக்குத் திரும்ப அவரவர் பாணியில் சொல்வதுதான் இது. இவர்கள் அந்த நூலை நேரடியாக வாங்கிப் படிக்கலாமே என்று கேட்பவர்களுக்கு, தற்கால வேகமான உலகில் அதற்கெல்லாம் நேரம் இல்லை, ஒரு நிகழ்வுக்குச் சென்று கதை கேள் அல்லது ஆடியோ பதிவாக காதில் இயர் போனை மாட்டிக் கொண்டு வேலையைச் செய்துகொண்டே கதை




கேள் என்ற நிலைமை இப்போது நிகழ்கிறது! இதனால் கதை எழுதிய எழுத் தாளருக்கு இலாபம் ஏதேனும் உண்டா என்று கேட்டால் உண்மையிலேயே அதற்குப் பதில் இல்லை.

சத்யஜித் ராய் ஒரு புகழ்மிக்க இயக்குநர் என்று அனைவருக்கும் தெரியும் ஆனால் அவரே ஒரு சிறந்த நாவலாசிரியர், சிறந்த கதாசிரியர் என்பது அவருடைய இன்னொரு பக்கம். இந்த பல்திறனுக்கு என்ன காரணம் என்று பார்த்தால் அவருடைய தாத்தா உபேந்திர கிஷோர் ராய் பெரும் புகழ்பெற்ற எழுத்தாளர், பத்திரிகையாளர். அவருடைய தந்தை சுகுமார் ராய் அதே போல புகழ்பெற்றவர். ஓவியர், பத்திரிகையாளர், குழந்தைகளுக்கான இலக்கியத்தில் பெரும் நாட்டம் கொண்டவர். மேலும் ரவீந்திரநாத் தாகூருக்கு உறவுக்காரர்கள். இப்படி ஒரு பாரம்பரியமிக்க குடும்பத்தில் வந்ததினாலோ என்னவோ சத்யஜித் ராய்க்கும் எழுத்திலும் ஓர் ஈடுபாடு ஏற்பட்டிருக்கிறது. ஏராளமான சிறுகதைகள் எழுதி இருக்கிறார். அவருடைய படைப்புகளில் பெலுதா என்ற ஒரு துப்பறியும் நிபுணரும் பேராசிரியர் ஷங்கு என்ற ஒரு விஞ்ஞானியும் புகழ்பெற்ற இரண்டு கதாபாத்திரங்கள். இந்த இரண்டு கதாபாத்திரங்களை வைத்து ஏராளமான நாவல்களும் கதைகளும் எழுதியிருக்கிறார் ராய். இவற்றில் பல அவராலும் வேறு இயக்குநர்களாலும் திரைப்படமாக வெளி வந்திருக்கின்றன. இதுபோக வேறு வகையான சிறுகதைகள், குழந்தைகளுக்கான கதைகள் என்று ஏராளமாக எழுதியிருக்கிறார். இந்த கதைகளுக்கான ஓவியங்கள், போஸ்டர்கள் போன்றவற்றையும் அவர ஓர் ஓவியர் என்ற முறையில் வரைந்திருக்கிறார்.

ராய் எழுதிய ‘கோல்போ போலியே தாரிணி குரோ’ என்ற சிறுகதையிலிருந்து இந்த ‘தி ஸ்டோரிடெல்லர்’ திரைப்படம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அனந்த் நாராயணன் மகாதேவன் இதன் இயக்குநர். இந்தச் சிறுகதை வங்காளம் மற்றும் குஜ-ராத் என்று இரண்டு வெவ்வேறு கலாசாரப் பின்னணிகள் கொண்ட பகுதிகளில் நடைபெறும் சம்பவங்களைக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கிறது. கல்கத்தாவில் தாரிணி வந்தோபாத்யாய், ஒரு நூல் வெளியீட்டாளர் அலுவலகப் பணியிலிருந்து ஓய்வு பெறுகிறார். எந்த வேலையிலும் நிரந்தரமாகப் பணி புரியாத அவருக்கு இது 73-வது வேலை. நினைவுப் பரிசாக ஒரு கடிகாரத்தை வாங்கிக்கொண்டு வீடு வந்து சேர்கிறார். மனைவி உயிருடன் இல்லை. மகன் குடும்பத்துடன் அமெரிக்காவில் வசிக்கிறான். அவரை விடுமுறைக்கு அமெரிக்கா வரச் சொல்லி அடிக்கடி அழைக்கிறான். வங்காளிகளுக்கே உரிய கம்யூனிஸ்ட் ஆதரவும், முதலாளித்துவ எதிர்ப்பும், மீன் கறி மீது உள்ள பற்றும் தாரிணிக்கு அதிகமாகவே இருக்கிறது. ஆகவே முதலாளித்துவ நாடான அமெரிக்காவிற்குச் செல்ல அவருக்கு மனமேயில்லை. ஓய்வு காலத்தை எப்படிக் கழிக்கலாம் என்று பல ஆலோசனைகளைப் பக்கத்து வீட்டுக்காரர்கள் இவருக்கு வழங்குகின்றனர். பணிப்பெண் கூட இவரது பிடிவாத நடவடிக்கைகளால் இவரைச் சரியாக மதிப்பதில்லை.

பக்கத்து வீட்டுக்காரரும் இவருடைய அன்றாட செயல்களை அமெரிக்காவில் இருக்கும் மகனுக்கு அடிக்கடி போட்டுக் கொடுத்து விடுவதால் எங்கே தப்புவது என்ற யோசனையில் இருக்கும் தாரிணிக்கு ஒரு செய்தித்தாள் விளம்பரத்தைக்



காணும் வாய்ப்பு வருகிறது. அதை அவர் பார்வைக்கு கொண்டு வருவதும் பக்கத்து வீட்டுக்காரர்களே. அந்த விளம்பரத்தில் குஜராத் மாநிலத்தில் உள்ள ஒரு முகவரியில் கதை சொல்லி ஒருவர் தேவை என்று இருக்கிறது. தாரிணி சிறு வயது முதல் அவருடைய வட்டாரத்தில் கதை சொல்லி என்று ஏற்கனவே பெயர் பெற்றவர். இந்த சந்தர்ப்பத்தை ஏன் பயன்படுத்தக்கூடாது என்று முடிவு செய்து அகமதாபாத் கிளம்புகிறார்.

அகமதாபாத்தில் இவர் சந்திக்க வேண்டியவர் ஒரு பெரும் மாளிகையில் வசிக்கிறார். வெளியில் 'நாய்கள் ஜாக்கிரதை' என்று அறிவிப்பு இருக்கிறது. தயங்கி உள்ளே நுழைந்தால் அங்கு கண்ணில் படுவது சிறு பூனைக்குட்டி ஒன்றுதான். அங்கு பணி புரியும் மாணிக் இவரைத் துச்சமாக மதிக்கிறார். நாய் எங்கே இருக்கிறது என்று கேட்டவுடன், நாயெல்லாம் இல்லை. உன்னைப்போன்ற ஆட்கள் உள்ளே வருவதைத் தடுக்கத்தான் அப்படி எழுதி வைத்திருக்கிறோம் என்கிறான். முதலாளியைப் பார்க்க அப்பாயின்ட்மென்ட் வாங்கி இருக்கிறாயா? இல்லையென்றால் வெளியேபோ என்று சொல்கிறான். இவர் எதற்கும் அலட்டிக்கொள்ளாமல் தோட்டத்து ஊஞ்சலில் அமர்ந்து ஏகாந்தியாகப் பாடத் தொடங்குகிறார்.

மாடியிலிருந்து முதலாளி இவரைப் பார்க்கிறார். உள்ளே வரச் சொல்கிறார். உரையாடலில் தெரிய வருவது என்னவென்றால் இவர் கதை சொல்லப்போவது பள்ளிக் குழந்தைகளுக்கு அல்ல; அந்தப் பணக்கார குஜராத்திக்குதான் கதை சொல்ல வேண்டும். ரத்தன் கரோடியா பெரிய பரம்பரை பஞ்சு வியாபாரி. அவருக்கு இரவில் தூக்கம் வருவதில்லையாம். சிறு வயதில் பாட்டி கதை சொல்வதைக் கேட்டுத் தூங்கியதால் இப்போதும் இதைப் பரீட்சித்துப் பார்க்கலாம் என்று ஒரு எண்ணம். தாரிணிக்கு சிறு தயக்கம் இருந்தாலும் ஒத்துக்கொள்கிறார். வருமானம், வாழ்க்கையில் சிறு மாற்றம் போன்ற விஷயங்கள் அவரை ஒப்புக்கொள்ளச் செய்கின்றன. அவருக்கும் பழகிய ஒன்றுதானே கதை சொல்லுதல்.

குஜராத்திகள் பெரும்பாலும் சைவ உணவுப்பழக்கம் மிக்கவர்கள். கரோடியாவும் அதே கொள்கையைப் பின்பற்றுபவர். தாரிணிக்கு குஜராத்தி சைவ உணவான டோக்லா பரிமாறப்படுகிறது. தங்குவதற்கு வீட்டிலேயே ஓர் அறையும் ஒதுக்கப்படுகிறது! அன்று இரவு கரோடியா கதை கேட்கத் தயாராகிறார். அதற்குள் அவருக்குச் சில சந்தேகங்கள். சொல்லப்போகும் கதைகள் அனைத்தும் தாரிணியின் கற்பனையில் உதித்தவையா இல்லை எங்கிருந்தாவது உருவப்பட்டதா என்று. நீங்கள் தாராளமாகப் பரிசோதித்துக்கொள்ளலாம். இப்போது எந்தப் பொருளைக் காட்டினாலும் அது குறித்த ஒரு கதையை உடனடியாகச் சொல்லி என் திறமையை நிரூபிக்கிறேன் என்கிறார். இந்த வேலை பிடிக்கவில்லை என்றால் எப்போது வேண்டுமானாலும் விலகிக்கொள்ளலாம், ஆனால் வெளியே சென்று யாரிடமும் நடந்ததைச் சொல்லக்கூடாது என்று ஒரு நிபந்தனையையும் விதிக்கிறார். கதை சொல்வதற்கு முன் ஒரு சிகரெட்டைப் புகைத்துக்கொள்ளலாமா என்று அனுமதி கேட்கிறார். கதை சொல்ல புகைப்பது ஒரு நல்ல தூண்டுதல் என்று ஒரு சாக்கும் தயாராக இருக்கிறது. வேறு வழியில்லாமல் ஒப்புக்கொள்கிறார். அறையில் இருக்கும் ஒரு நாற்காலியைக் காட்டி, அதைச் சுற்றி ஒரு கதையைப் புனையச் சொல்லி ஆணை பிறக்கிறது. புகை பரவ, கதையும் சொல்லப்படுகிறது!

கரோடியா ஒரு தனியர். திருமணம் செய்து கொள்ளாதவர். இளம் வயதில் ஒரு ஸ்நேகிதி மீது கொண்ட காதல் நிறைவேறாமல் போனதாக அறிந்து கொள்கிறோம். எப்போதும் பரபரப்பாக இருக்கும் சிரித்த முகத்தோன். தாரிணியுடன் ஸ்னேகமாகத்தான் நடந்துகொள்கிறார். தாரிணிக்கு வேலை நேரம் இரவுகள் என்பதால், பகலில் வெளியே கிளம்பிவிடுகிறார். அவருடைய முக்கிய உலாவிடங்கள் மீன் சந்தையும், வாசகசாலையும். மீன் சந்தையில் பராக்குப் பார்ப்பது, விலை விசாரிப்பது, வியாபாரிகளுடன் அளவளாவுவது என்று அலைபவருக்கு அறிவுப் பசியைத் தணிக்க உதவுகிறது அங்குள்ள ஒரு நூலகம். நூலகர் ஒரு பெண்மணி. மத்திய வயதுடையவர். கலகலப்பானவர் சூசி. இருவருடைய உரையாடல்களும் இலக்கியம், நகைச்சுவை கலந்து பயணிக்கத் தொடங்கி ஒரு நல்ல நட்பில் முடிகிறது. தாகூர் அந்த நூலகத்தில் தாரிணிக்குக் கிடைக்கிறார்.

கரோடியா முதலாளித்துவத்தின் பிரதிநிதி என்பதோடு நிற்காமல் ஒரு வெஜிடேரியன் என்பதே ஒரு ஒவ்வாமையாகப்படுகிறது. மீன் குழம்பிற்கு அலையும் தாரிணி, சந்தையிலிருந்து மீன் வாங்கி வந்து மாணிக்கிடம் தந்து சமைக்கச் சொல்கிறார். மறுத்தாலும் அவன் சமைத்துத் தருகிறான். தாரிணிக்கும் பூனைக் குட்டிக்கும் மீன் விருந்து நித்திய சுகம் ஆகிறது. ஒரு நாள் சூசியை அழைத்து வந்து தானே மீன் சமைத்துப்

பரிமாறுகிறார் தாரிணி.

சிறிது நாட்களில் கரோடியா பரபரப்பாக இயங்குகிறார். பலர் அவரைச் சந்திக்க வந்து விவாதிக்கிறார்கள். அவர் கார்க்கி என்ற புனைப்பெயரில் ஒரு சிறுகதைத் தொகுதியை வெளியிடுகிறார். கார்க்கி என்ற பெயரையே அவர் சமீபத்தில்தான் தாரிணி மூலம் அறிந்திருக்கிறார். அத்தனையும் தாரிணி சொன்ன கதைகள். இதன் மூலம் ஒரு இலக்கிய அந்தஸ்தையும் அடைகிறார். கூடவே இன்னொரு நோக்கமும் இருக்கிறது. தனது இளமைப்பருவத் தோழி சரஸ்வதியை இப்போது ஒரு இலக்கிய தேஜசோடு கவருவதும் அதில் ஒரு திட்டம். சரஸ்வதியை தாரிணி சந்திக்கும்போது, அவரை யாரென்று கரோடியா அறிமுகப்படுத்த யோசிக்கும்போது, தாரிணியே தன்னை அறிமுகப்படுத்திக்கொள்கிறார். அதில் மிளிரும் நகைச்சுவையும் சிலேடையும் அற்புதமானது. 'அவர் பஞ்சு விற்கிறார். நான் நூல் நூற்கிறேன்'! கரோடியாவின் துரோகம் தெரியவரும்போது தாரிணி பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. எப்போதும் போல இருவரும் சகஜமாகப் பழகிக் கொண்டு இருக்கின்றனர்.

கரோடியாவின் இலக்கியப் பணியைப் பாராட்டி ஒரு விழா நடைபெறுகிறது. விழா நடைபெறும்போதே ஒருவர் எழுந்து,' இந்தக் கதை எல்லாம் நீங்களே எழுதியதா ?' என்று வினவுகிறார். விழா முடிந்ததும் அவருடைய குழு இவரைச் சந்திக்கிறது. அவர்கள் அனைவரும் ரவீந்திரநாத் தாகூர் அறக்கட்டளையிலிருந்து வருவதாகவும், தாகூர் கதைகளைத் தன்னுடைய கதைகளாக கரோடியா வெளியிட்டிருப்பதால் அவர் மீது வழக்குத் தொடரப்போவதாகவும், 10 இலட்சம் ரூபாய் அபராதம் கட்டினால் அதோடு விட்டு விடுவதாகவும் அறிவிக்கிறார்கள். இப்போது தனக்கு இலக்கிய அறிவு சுத்தமாக இல்லாததால் தாரிணி எப்படித் தன்னை ஏமாற்றியிருக்கிறார் என்று கரோடியா உணர்கிறார்.

படம் முடியும்போது தாரிணி கரோடியாவுடன் தன் அனுபவத்தை, தன் மனைவி எப்போதோ கதை எழுத பரிசளித்த பேனா கொண்டு எழுதுகிறார். கரோடியாவும் தாரிணி பற்றி எழுதத் தொடங்குகிறார். ஆக இருவருமே முதன் முறையாக இப்போது தான் எழுதுகிறார்கள்!

தாரிணியாக பரேஷ் ராவல், கரோடியாவாக ஆதில் ஹுசைன், சரஸ்வதியாக தமிழ் நடிகை ரேவதி, சூசியாக தனிஷ்டா சாட்டர்ஜி பிரமாதமாக நடித்திருக்கிறார்கள். இயக்கம் அனந்த் நாராயண் மகாதேவன், நடிகராகவும் புகழ் பெற்றவர். ஒளிப்பதிவு தமிழ் நாட்டை சேர்ந்த அல்போன்ஸ் ராய். மிக நேர்த்தியாக இயக்கப்பட்ட திரைப்படம் இது. அழகான வசனங்கள், கதாபாத்திரங்களின் தெளிவான உணர்ச்சிகளைப் படம் பிடித்தல், சிறந்த நடிகர்கள் என்று பாராட்டுதற்குரிய நிறைய அம்சங்கள் நிறைந்திருக்கும் திரைப்படம். மாபெரும் இயக்குநர் சத்யஜித் ராய்க்கு அருமையான சமர்ப்பணம் என்று சொல்லலாம். 2022-ல் வெளியான இந்தத் திரைப்படம் ஹாட் ஸ்டார் தளத்தில் காணக்கிடைக்கிறது!



jeeva@thaiveedu.com



# பனையின் அடியில் புதைக்கப்பட்டுள்ள ராணி

– ரதன்



றிச்சட் டி சொய்சா கொழும்பு நகரின் செல்வந்தர்கள் வாழும் பகுதியில் பிறந்தார். இவரது தந்தையார் லுசியன் எட்வேர்ட் டி சொய்சா இலங்கை துடுப்பாட்ட அணியில் ஒரு சுழற்பந்து வீச்சாளராகத் திகழ்ந்தார். 1950-51-ம் ஆண்டு காலப்பகுதியில் கொமென்வெல் அணிக்கும் இந்திய-இலங்கை-பாகிஸ்தான் அணிகள் இணைந்த அணிக்கும் நடைபெற்ற போட்டிகளில் இந்திய-இலங்கை-பாகிஸ்தான் அணியில் அங்கம் வகித்த இரண்டு இலங்கைத் துடுப்பாட்ட வீரர்களுள் ஒருவராவார். லுசியன் எட்வேர்ட் டி சொய்சா ஒரு நாடகருமாவார். பல நாடகங்களை இயக்கியுள்ளார். பல நாடகங்களில் நடித்துமுள்ளார். இவர் பங்காற்றிய நாடகம் ஒன்றில் இவருடன் இணைந்து நடித்த வைத்தியரான மனோராணி சரவணமுத்துவைத் திருமணம் செய்தார். இவர் ஏற்கனவே ஜீன் றொக் என்பவரை விவாகரத்து செய்திருந்தார். பின்னர் இவர் மனோராணியையும் விவாகரத்துச் செய்துவிட்டார். இவர் இறக்கும் பொழுது தனது மூன்றாவது மனைவியுடன் வாழ்ந்து வந்திருந்தார். இவருக்கும் மனோராணிக்கும் பிறந்தவரே றிச்சட் டி சொய்சா ஆவார்.

மனோராணியின் தந்தையார் மாணிக்கசோதி சரவணமுத்து. பாக்கியசோதியின் தந்தையார் வைத்தியர் சரவணமுத்து, இலங்கையின் பிரதமராகவிருந்த எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் குடும்பவைத்தியராவார். மாணிக்கசோதியின் சகோதரர் வைத்தியர் இரட்ணசோதி சரவணமுத்து கொழும்பு நகரின் முதலாவது மேயராவார். மற்றொரு சகோதரரின் பெயரில் இலங்கையின் ‘ஓவல்’ எனக் அழைக்கப்படும் மைதானத்துக்கு பாக்கிசோதி சரவணமுத்து மைதானம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. மாணிக்கசோதி இலங்கைக்கான மலேசிய, சிங்கப்பூர் தூதுவராகக் கடமைபுரிந்துள்ளார். இவர் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்திலும் கல்வி கற்றுள்ளார். The Sara Saga - Manicasothy Saravanamuttu இது இவர் எழுதிய நூலின் பெயர்.

மனோராணியை றிச்சர்ட்க்கு பதினொரு வயதிருக்கும் பொழுது லுசியன் விவாகரத்துச் செய்துவிட்டார். மனோராணி தனித்து றிச்சட்டை வளர்த்துவந்தார். இது ஊடகங்களிலிருந்து பெறப்பட்ட மனோராணி சரவணமுத்து மற்றும் றிச்சட் டி சொய்சா பற்றிய தகவல்கள்.

படுகொலை செய்யப்பட்ட றிச்சட் டி சொய்சாவின் வாழ்க்கையை விட அவரது தாயாரான மனோராணி சரவணமுத்துவின் வாழ்க்கை ஏன் திரைப்படக் கலைஞர்களைக் கவர்ந்தது என்ற கேள்வி எழாமல் இல்லை. றிச்சட்டின் வாழக்கையில்



அரசியல் இரண்டறக் கலந்துள்ளது. அது சர்ச்சைகளை ஏற்படுத்தும். நடுநிலைமையுடன் அவரது வாழ்வைப் படமாக்குவது சவால் நிறைந்தது. மனோராணி றிச்சட் இறந்த பின்னரே அதிகளவு வெளிச்சத்துக்கு வருகிறார். அவரால் உருவாக்கப்பட்ட அன்னையர் முண்ணனி பல தாய்மார்களின் கதையை வெளிக்கொணர்ந்தது. உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது. எனவே தான் றிச்சட்டை மனோராணியினூடாக வெளிக்கொணர்கின்றனர்.

‘மனோராணி சரவணமுத்துவின் வாழ்க்கையைத் திரைப்பட மாக்க பிரபல சிங்கள நடிகை சுவர்ணா மல்லிவராச்சி விரும் பினார். இதில் மனோராணியாக நடிப்பது சுவர்ணாவின் விருப் பங்களுள் ஒன்றாகவிருந்தது. பல தயாரிப்பாளர்களிடம் அணுகப்பட்டபோதும் இறுதியாக ‘லைக்கா’ நிறுவனம் இப்ப டத்தைத் தயாரிக்க உடன்பட்டது. இதன் இயக்குனராக சுவர்ணா மல்லிவராச்சி அசோக ஹந்தகமவை அணுகினார்.’ என ஆதவன் தொலைக்காட்சிக்குப் பேட்டியளித்த கிங் ரட்-ணம் தெரிவித்தார். கிங் ரட்ணம் அசோக ஹந்தகமவை தனது குருநாதர் என விழிப்பவர். அசோக ஹந்தகமவின் பல படங்க ளில் நடித்துள்ளார். இங்கு ஒரு முரண் நிலை உள்ளது. தமிழ ரான கிங் ரட்ணம், றிச்சட் டி சொய்சா கொல்லப்படுவதற்குப் பிரதான காரணியாகவிருந்த றொனி குணத்திலகாவாக ‘ராணி’ படத்தில் நடித்துள்ளார். சிங்களவரான சுவர்ணா தமிழ ரான மனோராணியாக நடித்துள்ளார்.

மனோராணி சரவணமுத்துவின் வாழ்வை மையப்படுத்தி ஏற் கனவே Nilendra Deshapriya, ‘They Dance Alone’ திரைப் படத்தை எடுத்துள்ளார். இது இலங்கையில் தடைசெய்யப்பட் டது. 2014-ல் சங்காய் திரைப்படவிழாவில் இத்திரைப்படம் திரையிடப்பட்டதாக அறியமுடிகிறது. எனினும் உறுதிப்ப டுத்த முடியவில்லை. அவர் எவ்வாறு மனோராணியை வெளிப்படுத்தியுள்ளார் என்பது தெரியாது. தற்போதைய ஜே.வி.பி-யின் ஆட்சியில் ‘They Dance Alone’ திரைப் படத் துக்குரிய தடை விலகி அப்படம் வெளிவரவேண்டும். வெளிவ ரும் என நம்புகிறேன்.

‘Three Women Speak Out’ என்பது நிமால் மெண்டிஸின் விவ ரணத் திரைப்படம். இதில் சுனிலா அபயசேகராவுடன் மனோ- ராணி சரவணமுத்துவைப் பற்றியும் பதிவு செய் துள்ளார். இப் படம் மனோராணி பற்றி வெளிவந்த ஒரு குறிப் பிடத்தக்க படம் என ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

‘ராணி’ படத்தை இயக்கிய அசோக ஹந்தகம, ‘Ground views’ இணையத்துக்கு அளித்த செவ்வியில் பின்வருமாறு குறிப்பி டுகின்றார்.

‘How did you balance historical accuracy with story telling?’

‘All the facts were checked for historical accuracy from media reports. Those media reports from different sources were cross checked for accuracy. Remember after all this is not a documentary but fiction. I have the freedom to imagine events the way I wanted.’

பதிலின் இறுதிவரி முக்கியமானது ‘எனக்குத் தேவையான முறையில் மாற்றம் செய்ய எனக்கு சுதந்திரமுள்ளது. ஏனெ னில், இது புனைவு.’

அசோக ஹந்தகம ‘ராணி’ படத்தின் திரைக்கதையாசிரியர்க ளுள் ஒருவர். உண்மைச் சம்பவங்களை மையப்படுத்தி இவர் உருவகப்படுத்தியுள்ள ராணி, மனோராணி சரவணமுத்துவின் வாழ்க்கையை நேர்மையாகப் பதிவு செய்துள்ளதா? அசோக ஹந்தகம முன்வைக்கும் கருத்துகள் என்ன?

றிச்சட் டி சொய்சா ஒரு ஜே.வி.பி அபிமானி. அதன் அரசியல் கருத்துகளுடன் உடன்பட்டவர், அல்லது பெரும்பான்மைக் கருத்துக்களுடன் உடன்பட்டவர். பிரேமதாச ஆட்சி செய்த காலத்தில் அவர் கொல்லப்பட்டார். பிரேமதாசவின் ஆட்சி யின் போது அத்துலத்முதலிக்கும் பிரேமதாசவிற்குமிடையில் உட்கட்சி மோதல்கள் அதிகரித்திருந்தன. படம் வெளிவரும் காலம் றிச்சட் டி சொய்சாவின் கனவாகவிருந்த ஜே.வி.பி-யின் ஆட்சி அமைத்திருக்கும் காலம்.

ஏற்கனவே அசோக ஹந்தகமவின் படங்களில், அவரது அர சியல் சர்ச்சைக்குரியதாகவேயிருந்துள்ளது. அவரது ‘இனி அவன்’ திரைப்படம் பற்றி தாய்வீட்டில் விமர்சனம் வெளிவந் துள்ளது. ‘இனி அவன்’ ரொறன்ரோ சர்வதேச திரைப்படவிழா வில் திரையிடப்பட்டது. பப்லோ நெருடாவின் வாழ்க்கையை மையப்படுத்திய படம் Alborada. பப்லோ நெருடா இலங்கை யில் வாழ்ந்த 1929-1931 காலப்பகுதியை மையப்படுத்தியது இப்படம், நெருடா ‘தமிழ் தலித் பெண்ணை’ அவரது விருப்பத் துக்கு மாறாக பாலியல் வல்லுறவு செய்தமையை பதிவு செய் துள்ளது. நெருடாவின் வாழ்க்கைக் குறிப்புகளில் நெருடாவே இதனைப் பதிவு செய்ததாகக் கூறப்படுகிறது. படத்தின் இறு திக் காட்சியில் நெருடா அப்பெண்ணை அறையொன்றினுள் ஓடஓட விரட்டிப் பாலியல் வல்லுறவு செய்ததாகக் காட்டப்பட் டுள்ளது. அவர் தனது வாழ்க்கைக் குறிப்பில் ஓடஓட விரட்டிப் பாலியல் வல்லுறுவு செய்ததாகப் பதிவு செய்துள்ளாரா? அல்லது அசோக ஹந்தகமவின் கற்பனையா? எது எப்படியி ருப்பினும் நெருடாவின் செயல் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல. கடுமையான கண்டனத்துக்குரியது. அதே சமயம் அசோக ஹந்தகமவின் கற்பனையும் விமர்னத்துக்குரியதே?

மனோராணி சரவணமுத்து வைத்தியராக இருந்தபோதிலும் தனது முன்னாள் கணவருடன் இணைந்து Ophelia, Lady Macbeth, Desdemona ஆகிய நாடகங்களில் நடித்துள்ள தோடு, தனது மகன் றிச்சட் டி சொய்சாவுடன் இணைந்து The Libation Bearers எனும் நாடகத்திலும் நடித்துள்ளார். அவரது வாழ்க்கை நாடகத்துடன் இரண்டறக் கலந்திருந்தபோதும் அவரை மையப்படுத்திய திரைப்படத்தில் அது தொடர்பான எந்தப் பதிவும் காணப்படவில்லை.

‘ராணி’ திரைப்படம் பார்த்த பின்னர், றிச்சட் டி சொய்சாவின் நண்பரான சன்றி பிரீஸ் இணையத்தில் எழுதியிருந்த குறிப்பி லிருந்து சிறு பகுதியை இங்கு பதிவு செய்வது அவசியம் எனக் கருதுகிறேன். ‘மனோராணி ஒரு தொடராகப் புகைப்பவ ரல்ல (Chain Smoker). எப்போதாவாது புகைப்பவர். அதே போல் எப்போதாவது மதுவருந்துவார். அவர் பருத்தி சேலை களை அணியமாட்டார். வண்ண நைலக்ஸ் சேலையே அணி வார். தனது மகனை ‘சொய்சா’ என்றே அழைப்பார். அதே போல் றிச்சட்டும் தாயை அம்மா என்று அழைப்பதில்லை. ‘சொய்சா’ என்றே அழைப்பார். மனோராணி ஒரு பொழுதும் ‘F’ வார்த்தைகளைச் சொல்வதில்லை. படத்தில் காட்டப்படுவது போல் மனோராணியும் றிச்சட்டும் பெரிய பங்களாவில் வாழ வில்லை. அதாவது றிச்சட் கடத்தப்பட்டபோது தொடர்மாடிக் கட்டடத்தில் உள்ள சிறிய வீட்டொன்றிலேயே வாழ்ந்தார்கள்.’ எனப் பதிவிட்டுள்ளார். சன்றியும் றிச்சட்டும் நாடகங்களில் ஒன்றாக நடித்தவர்கள். பொதுவாக ஆங்கில நாடகங்கள் கொழும்பில் ‘லயனல் வெண்ட்’ அரங்கிலேயே மேடையேற்றப் படுவது வழமை. அங்கு மேடையேற்றப்பட்ட நாடகங்களில் பங்குபற்றிய ஏழு நாடகர்கள் கடத்தப்பட்டுள்ளனர். அவர்கள் பற்றியும் அசோக ஹந்தகம அமைதிகாத்துள்ளார்.

சன்றி பிரீஸின் குறிப்புகளிலிருந்து ஒன்றை மட்டும் விளங்கிக் கொள்ளமுடியும். அது அசோக ஹந்தகம, மனோராணியை எதிர்மறைப் பாத்திரமாகவே பிம்படுத்தியுள்ளார். 'I am one of the more fortunate mothers - I got my son's body back' எனக் கூறி அறிமுகமாகும் மனோராணி ஒரு தமிழ் மேல் தட்டு வர்க்கப் பெண்மணி. இவர் மதுவும் கையுமாக நடமாடுபவர். கைகளில் எப்பொழுதும் சிகரெட் புகைந்தபடியிருக்கும். றிச்சட் தனது நண்பனுக்கு (கஜன்) முத்தம் கொடுப்பதைப் பார்த்துவிட்டும், அதனை இயல்பாக ஏற்றுக்கொள்ளும் தாயாக மனோராணியை அசோக ஹந்தகம பிம்பப்படுத்தியுள்ளார். கீழைத்தேய கலாசாரத்தில் தாய் வணக்கத்துக்குரியவர், புனிதராகக் கருதப்படுபவர். ஆனால் அத்தகைய தகுதிக்குரியவர் மனோராணி அல்ல என்பதை வெளிப்படுத்தவதே இயக்குனரின் நோக்கமாக இருந்திருக்கிறது. றிச்சட்டையும் மனோராணியையும் சாதாரண மக்களின் பிரதிநிதிகள் அல்ல என்பதனை வெளிப்படுத்தி, றிச்சட்டின் கொலையை அந்நியப்படுத்தியுள்ளார் அசோக ஹந்தகம. பப்லோ நெருடாவினை உடைப்பதன் மூலம் புரட்சியாளர்கள் பாலியல் வன்முறையாளர்கள் என உருவகப்படுத்தியது போல் இங்கும் றிச்சட்-மனோராணி வாழ்க்கையையும் பதிவு செய்துள்ளார்.

றிச்சட்டின் நண்பன் கஜனை அரச படைகள் கைதுசெய்யும் பொழுது, மனோராணியும் றிச்சட்டும் காரில் அவ்விடத்தைக் கடந்து செல்கின்றனர். றிச்சட் கார்செலுத்திக் கொண்டிருந்தார். மனோராணி அரச படைகளின் நடவடிக்கைகளைக் கண்டும் அதனை றிச்சட்டிடம் கூறவில்லை. சன்றி பிரீஸின் குறிப்பில் றிச்சட் அதிகமாக கார் செலுத்துவதில்லை. அசோக ஹந்தகம ஏன் றிச்சட்டை சாரதியாகக் காட்டியுள்ளார்? எனக் கேள்வி எழுப்பியுள்ளார். இக்காட்சியும் மனோராணியை ஒரு தமிழ் மேல் தட்டு வர்க்க பிரதிநிதியாகவே காட்ட வேண்டும் என்பதற்காக வலிந்து திணிக்கப்பட்ட காட்சியாகவேயுள்ளது.

அன்னையர் முண்ணனியை ஆரம்பித்தமைக்கு ஒரு அரசியல் காரணம் உள்ளது என்பதனை மிகத் தெளிவாக அசோக ஹந்தகம பதிவு செய்துள்ளார். தனயன்களை இழந்த தாய்மார்களின் கண்ணீர்க் கதைகளையும் அரசை நோக்கி எழுப்பிய கேள்விகளையும் இழிவுபடுத்தும் முயற்சியே இது. படத்தில் மகிந்த ராஜபக்சவும், மங்கல சமரவீரவும் மனோராணியைச் சந்தித்த பின்னரே அன்னையர் முண்ணனி உருவானது எனப் பதிவு செய்துள்ளார். பின்னர் மங்கலவை ஒரு தற்பாலியலாளராகவும் கூறியுள்ளார். மனோராணி ஒரு நாடகர் எனப் பதிவு செய்ய மறுத்த அசோக ஹந்தகம, றிச்சட் டி சொய்சா ஒரு தற்பாலியலாளர் என பதிவு செய்யவும் தயங்கவில்லை.

மனோராணி சரவணமுத்துவுக்கும், லலித்துக்கும் உள்ள அரசியல் ரீதியான நெருக்கத்தை இயக்குனர் காட்சிகளாக்கியுள்ளார். றிச்சட் கடத்தப்பட்ட இரவு, மனோராணி லலித்துக்குத் தொலைபேசி மூலம் தெரிவித்ததாகப் படத்தில் காட்டப்பட்டுள்ளது. சில ஊடகக் குறிப்புகள் காமினி திசநாயக்கவிற்கே கூறியதாகவும், அவர் முதலில் றிச்சட் கைது செய்யப்பட்டுள்ளார். காலையில் வீடு வந்துவிடுவார் என்று தெரிவித்ததாகவும் தெரிவிக்கின்றன. பிரேமதாசா அரசில் லலித் அத்துலத்முதலி, காமினி திசநாயக்க போன்றவர்கள் மேற்தட்டு வர்க்கப் பிரதிநிதிகள். இவர்கள் முறையே ஹவாட், கேம்பிரிடஜ் பல்கலைக்கழகங்களில் கல்விகற்றவர்கள். இந்த நெருக்கத்தைப் பதிவு செய்வதனால் இவர்களின் பிரதிநிதித்துவத்தையும் கேள்விக்குள்ளாக்கியதன் நோக்கம் என்ன?

லலித் அத்துலத்முதலி தேசிய பாதுகாப்பு அமைச்சராகவிருந்த போது, றிச்சட் டி சொய்சா அரசுடன் இணைந்து இலங்கை இராணுவத்திற்காக Psychological operations (PSYOP) பிரச்சாரத்திலும் புலிகளுக்கு எதிராக ஈடுபட்டவர் என்பது மறுப்பதற்கில்லை. ஆனால், இதனை அசோக ஹந்தகம வெளிப்படுத்தவில்லை. இவர்களைத் தமிழர்களின் பிரதிநிதிகளாகப் பிம்பப்படுத்துவதற்கே முனைந்துள்ளார்.

Inter Press Service, ரோமை மையப்படுத்திய மூன்றாம் உலக நாடுகளின் சர்வதேச மனித உரிமை மீறல்களை வெளிப்படுத்தும் ஒரு ஊடக நிறுவனம். இதற்காக இலங்கைப் பிரதிநிதியாக றிச்சட் செயற்பட்டுவந்தார். இலங்கை மனித உரிமை மீறல் செய்திகள் இந்நிறுவன பிரசுரங்களில் வெளியாகின. இது இலங்கை அரசுக்கு ஒரு சிக்கலாகவிருந்தது. பிரேமதாச 1989-1993 (கொலை செய்யப்படும் வரை) ஜனாதிபதியாகவிருந்தார். இவரது காலத்தில் ஜே.வி.பி-யினர் மற்றும் அவர்களது ஆதரவாளர்கள் சுமார் முப்பதினாயிரத்துக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். பிரேமதாச 1978-1989 வரை பிரதமராகப் பதவிவகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. றிச்சட்டுக்கான வெளி உலகத் தொடர்புகள் பிரேமதாசவிற்கு சிக்கலாகவிருந்தது. அதே சமயம் அவரது அமைச்சரவை மற்றும் கட்சியின் முக்கிய உறுப்பினர்களுடனான மனோராணியின் நெருக்கமான நட்பையும் பிரேமதாச உணர்ந்திருந்தார்.

மனோராணியின் வீட்டில் ஒரு சிங்களவர் வேலை பார்த்துவருகிறார். அவர் எப்பொழுதும் புலிகளைப் பயங்கரவாதிகள் என்றே விழிப்பார். பிரேமதாச கொல்லப்பட்ட பின்னர் (மே முதலாம் திகதி, 1993) தமிழ் மக்கள் ஆடிப்பாடுவதாகக் காட்சியமைக்கப்பட்டுள்ளது. போர் முடிவுக்கு வந்து பதினைந்து வருடங்களின் பின்னர் ஆட்சி அமைக்கும் ஜே.வி.பி இனப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவரும் என்ற நம்பிக்கையுடன் இருக்கும் பொழுது; வெளிவரும் படத்தில் காட்டப்படும் இக்காட்சிகளின் நோக்கம் என்ன? குறிப்பாகப் பிரேமதாசாவின் கொலையின் பின்னர் காட்சியமைக்கப்பட்டுள்ள கொலைக்களக் காட்சிகள் ஒரு சாதாரண சிங்களவரையும், தமிழரை நோக்கித் திசை திருப்பும். மூன்று சமூகங்களும் நல்லுணர்வுடன் வாழவேண்டிய சூழலில், வாழ முயற்சிக்கும் சூழலில் இக்காட்சிகள் இயக்குனரின் இனவாதத்தையே வெளிப்படுத்துகிறது.

இப்படம் உருவகப்படுத்தும் காலம் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலம். ஊடகவியலாளர்கள் உட்பட பலர் காணமல் போயுள்ளனர். நாடெங்கும் வன்முறை தாண்டவமாடிக் கொண்டிருந்தது. எனினும் படம் ஐக்கிய தேசிய கட்சிக்குள் உள்ள உட்கட்சி பிரச்சினையிலேயே கவனம் செலுத்தியது. அதற்குக் கொடுத்த முக்கியத்துவம், மனோராணி தொடக்கிவைத்த அன்னையர் முண்ணனிப் போராட்டங்களுக்கு கொடுக்கப்படவில்லை. பிரேமதாச, லலித் அத்துலத்முதலி இருவரையும் அரச வன்முறைகளிலிருந்து இப்படம் காப்பாற்றுகின்றது.

ஒரு இருட்டான கால கட்டத்தில் பல ஊடகவியலாளர்கள் காணாமல் போயுள்ளனர். பலர் கொல்லப்பட்டுள்ளனர். லலித் அத்துலத் முதலியின் நெருக்கமான சகாவான லக்ஸ்மன் பெரேரா, பிரேமதாசவிற்கு எதிராக Me kawda? Monawada karane? (Who is this? What is he doing?) நாடகத்தைத் தயாரித்தார். நாடக மேடையேற்றத்துக்கு முதல் காணாமல்

போய்விட்டார். இந்த நாடகத்தை றிச்சட் இயக்கியிருந்தார்.

அரச படைகள், அரசின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கவில்லை என நியாயப்படுத்த இயக்குனர் முயற்சிக்கிறாரா? ஒரு குறிப்பிட்ட காலத்தில் நடைபெற்ற சம்பவங்களை மையப்படுத்திய தாக வெளிவந்துள்ள இப்படம் அக்காலகட்ட அரச கொடூர சூழலை, போர் மேகங்கள் சூழந்த நாட்டை வெளிப்படுத்தத் தவறிவிட்டது. பிரதான கொலையாளியான பொலிஸ் அதிகாரி, ஜனாதிபதி பிரேமதாசவிற்கு அருகில் நிற்கும் காட்சியை மனோராணி தொலைக்காட்சியில் பார்த்துவிட்டு, பொலிசுக்கு தெரிவிக்கிறார். பின்னர் மனோராணிக்குக் கொலை மிரட்டல்கள் வந்த போது; 'இங்கிருந்தால் கொன்று விடுவார்கள். கனடிய தூதரகத்துடன் தொடர்பு கொண்டு கனடாவிற்கு விசா எடுத்துத் தருகின்றேன் வெளிநாடு செல்லவும்' என லலித் அத்துலத் முதலியே மனோராணிக்குக் கூறுகிறார். மனோராணி சில காலம் வெளிநாட்டில் வாழ்கிறார். இங்கு கனடாவின் அவசியம் என்ன? புலம் பெயர் நாடுகளில் கனடாவிலேயே தமிழர்கள் அதிகம் வாழ்கின்றனர். மாகாண மற்றும் மத்திய அரசில் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும், அமைச்சர்களாகவும் உள்ளனர். இப்படத்தின் காலகட்டத்திலும் தமிழர்களுக்குக் கனடிய அரசியல் கட்சிகளில் செல்வாக்கு இருந்தது என்பது மறுப்பதற்கில்லை. இதற்கு எதிரான ஒரு கருத்தியலை வெளிப்படுத்தும் நோக்கம் இதுவாகும். இப்படம் ஒரு அரசியல் சார்ந்த படம் என்பதனால் படத்தில் வரும் வசனங்கள், சொற்கள் என்பனவற்றின் அக, புறக் காரணிகள் முறையாக விமர்சிக்கப்படவேண்டும்.

ராணி படத்தில் மனோராணியாக சுவர்ண மல்லிவராச்சி சிறப்பாக நடித்துள்ளார். தெற்காசிய திரை உலகில் சுவர்ண குறிப்பிடத்தக்க சிறந்த நடிகை என்பதற்கு இப்படம் ஓர் உதாரணம். றிச்சட்டாக நடித்த றோகண அமரதுங்கவிற்கு இது ஒரு சவால்கள் நிறைந்த பாத்திரம். றிச்சட் டி சொய்சா, லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸ் படத்தில் நடித்த ஒரு நடிகருமாவார். அவரது உடல் மொழியை ஆளுமையை வெளிப்படுத்த றோகணவால் முடியாமலேயிருந்தது. சனத் குணத்திலக உட்பட பல பிரபல சிங்கள நடிகர்கள் இப்படத்தில் நடித்துள்ளனர். ஒளிப்பதிவாளர் சனத் தேசப்பிரிய அசோக ஹந்தகமவின் அரசியல் கருத்துகளுக்கு ஒளிவடிவம் கொடுத்துள்ளார் என்பது மறுப்பதற்கில்லை. பொதுவாக ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தைப் பதிவு செய்யும் படங்களில் கலை இயக்குனரின் பங்கு முக்கியம். இப்படத்தின் கலை இயக்குனர் பாராட்டுக்குரியவர்.

அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவி வகித்த போது கென்னடி கொல்லப்பட்டார். இவர் கொல்லப்பட்டமைக்கான காரணங்கள் இன்றும் விவாதிக்கப்படுகின்றன. கொலைசெய்தவர்கள் யார்? என்ற கேள்வியும் உள்ளது. இதனை மையப்படுத்தி ஒலிவர் ஸ்ரோன் ஜே.எப்.கே என்ற படத்தை எடுத்தார். ஒரு வருடத்துக்கு மேலாக கொலை நடைபெற்ற இடத்தில் வெளிவந்த பத்திரிகைகளிலிருந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக நியுயோர்க் யேல் பல்கலைக்கழக பட்டதாரி ஒருவர் நியமிக்கப்பட்டார். அவரால் எடுக்கப்பட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்கக் குறிப்புக்களிலிருந்தே திரைக் கதை அமைக்கப்பட்டது.

றிச்சட் டி சொய்சாவைக் கொன்றது யார்? மிகவும் இலகுவாக இறுதிக் காட்சியில் குடிபோதையில் பாதுகாப்பு அதிகாரிகளே இதனைச் செய்ததாகவும், இதற்கும் பிரேமதாசாவிற்கும் எந்தச் சம்பந்தமுமில்லை என இயக்குனர் கூறிக் கடந்து செல்கிறார். இவர்களுக்கிடையிலான உரையாடல்கள் றிச்சட்டை ஒரு துரோகியாக, இலங்கையைப் பற்றி மேற்கு நாடுகளுக்கு செய்திகளை விற்பனை செய்யும் ஒரு வியாபாரியாக வெளிப்படுத்துகின்றன. இது பார்வையாளர்களுக்கு றிச்சட்டின் கொலையை நியாயப்படுத்துகிறது.

இனப் பிரச்சினை ஓய்ந்து போயிருக்கும் சமூகங்கள் வாழும் நாட்டில் இருண்ட காலத்தைப் பற்றி படம் எடுக்கும் பொழுது இயக்குனர் மிகவும் அவதானத்துடன் பல ஆய்வுகளை மேற்கொண்டிருக்க வேண்டும். றிச்சட்டுடன் நெருக்கமானவர்கள், மனோராணியின் நண்பர்கள், உறவினர்கள் இப்பொழுதும் வாழந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களின் கருத்துகளை கவனத்திலெடுத்திருக்க வேண்டும். திரைக்கதையமைக்க முன்னர் இவர்களுடன் உரையாடியிருக்க வேண்டும்.

அசோக ஹந்தகம ஒரு வரலாற்றைப் பதிவு செய்துள்ளார். இவரது முன்னைய படங்களில் தமிழர்களையும் அவர்களது போராட்டங்களையும் வெளிப்படுத்திய விதம் அவர் ஒரு நேர்மையற்ற பெரும்பான்மை சமூக தேசியவாதி என்பதனைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது. ஒரு பெண் போராளியைப் பற்றிய படத்தில் அப்பெண்ணை அறமற்ற முறையில் பார்வையாளர்களுக்கு எதிர்க்கருத்தியலை உருவாக்கும் நோக்கில் அப்பாத்திரத்தை படைத்துள்ளார். போரினால் பாதிக்கப்பட்ட தாய் பிரதான பாத்திரமாக விசாகேச சந்திரசேகரத்தின் படங்களில் (மணல், பான்சு) வருகின்றார்கள். விசாகேசவின் அரசியல் அபத்தமாகவிருந்தாலும், தாய்ப் பாத்திரங்களை சமூக அக்கறையுடனேயே படைத்துள்ளார். இதில் 'பான்சு' படத்தில் காணமல் போன தனது மகனைத் தேடும் தாயே பிரதான பாத்திரம். இப்படத்தின் கால கட்டமும், 'ராணி' படத்தின் கால கட்டமும் ஒன்றேயாகும்.

சமூகம், சமூக நிலை மாற்றங்கள் பற்றிய தெளிவான அறிவு இருத்தல் அவசியம். இரண்டாம் உலகமகா யுத்தத்தின் பின்னர் வெளிவந்த நவயதார்த்தவாதப் படங்களிலிருந்த சமூக அக்கறை, சமூகத்தை மீளக் கட்டமைக்கவேண்டும் என்ற கடமைப்பாடு போன்றவை சிங்கள படைப்பாளிகள் சிலரிடம் இல்லை. போருக்குப் பின்னராக நாட்டைக் கட்டியெழுப்பவும், மூன்று சமூகங்களுக்கிடையிலும் புரிந்துணர்வை, சகோதரத்துவத்தை ஏற்படுத்த வேண்டிய அவசியமுள்ள இக்காலகட்டத்தில், அசோக ஹந்தகமவின் இப்படம் இனவாதத்தைப் பிரச்சாரப்படுத்தும் முயற்சியாகவேயுள்ளது. அண்மைக் காலங்களில் பிரசன்ன விதானகே மட்டுமே ஒரு நேர்மையான சமூக மற்றும் இன அக்கறை கொண்ட சகோதர படைப்பாளியாக வெளிப்படுகிறார்.

அசோக ஹந்தகம இப்படத்தினூடாக மீண்டும் ஒரு தடவை றிச்சட் டி சொய்சாவைக் கொன்றுள்ளார்.

(நெருடா பற்றிய அசோக ஹந்தகமவின் படம் இணையத்தில் உள்ளது. 'ராணி' படம் மீண்டும் ரொறன்ரோவில் ஏப்ரல் மாதம் திரையிடப்படவுள்ளது)



rathan@thaiveedu.com

# கேள்வி

– சேரன்

நிலவு கிழிந்து தூங்குகிறது
வெளியில்
நள் யாமம்;
உதிர்ந்து கொண்டிருக்கும் இலைகளின் மேல்
நடந்து திரிகின்றனர்
உயிர் திருகும் எமதூதர்.

அடிவளவின் கிணற்றுக்குள்
காலம் காலமாய்ப் புதையுண்டு கிடந்த
பூதங்களும்
இப்போது சிலிர்த்துக்கொண்டு
கிளம்புகின்றன.

துயிலில் தொலையாது
துயரில் கரையும் இன்றைய இரவில்
இதயத்தைப் பிடுங்கி
மேசைமீது வைத்துவிடுகிறேன்
குருதி சொட்டச் சொட்டப்
பெருகும் அதன் ஒலிக் குமுறலில்
கொஞ்ச நேரம் நடுங்குகிறது மேசை.

வெளியுலகின் காற்று வாங்கிக்
குளிர்ந்து போய்விடுகிறது இதயம்

அப்போது
விட்ட இடத்திலிருந்து என்னுடைய
கவிதையைத் தொடங்குகிறேன்

இன்றையைப் போல
என்றைக்கும் ஒரு கவிதைக்காக
நான் உழன்றது கிடையாது
வெளியில்
நெடுநாளாய் அலைந்தது இக் கவிதை

அதனுடைய ஆரம்பமே
ஒரு கேள்விதான்
கொல்லப்பட்ட நண்பர்களைப் பற்றி
காணாமல் போன நண்பர்களைப் பற்றிய
ஒரு பெரிய கேள்வி அது

கேள்வியில் பிறப்பெடுத்த
இந்தக் கவிதை
திடீரென்று என்னைவிட்டுப் பிரிந்துசெல்கிறது
செய்யப்படாத வார்த்தைகளுடன்
அறிவால் நெறிப்படுத்தப் படாத
மிகையுணர்ச்சியும் சேர்ந்து
பிரவாகம் எடுக்க
இந்தக் கவிதை பிரிந்து செல்கிறது

பௌர்ணமி நிலவிலும்
ஒளி தோயாமல் இருளில் கிடக்கிற
அந்த மாடி வீட்டைச் சுற்றி வருகிறது
இறுகப் பூட்டப்பட்டிருக்கும்
அதனுடைய பழங்காலக் கதவின்மீது
மூர்க்கமாக மோதுகிறது
இறுகிய யன்னல்களுக்கு அருகே சென்று
உன்னிப்பாகக் கேட்கிறது

வெளிச் சுவரில் தெறித்திருக்கும்
குருதிச் சுவட்டருகில் நின்று உருகிறது
வீட்டின் வெளிப்புறம்
ஓங்கிய மரங்களில்
இன்னும் ஒட்டிக்கொண்டிருக்கும்
அவலக் குரல்களில் தேடுகிறது
இரவுகளில்
கடற்கரையில் காலடிச் சுவடுகளைப்
பின்தொடர்ந்து செல்கிறது
தாழம் புதர்களுள் ஒளிந்திருந்து
குருதியில் நனைகிறது

அலைகளுக்கு மேல் அலைகிறது
அவை புரட்டிவிடும் உடல்களைத்
திருப்பித் திருப்பித் தேடுகிறது
கண்கள் இல்லா உடல்களுக்குக்
கண்களையும்
முகம் சிதைந்த உடல்களுக்கு
முகங்களையும் தேடிச் சிலக்கிறது

தெருவில் வீசப்பட்டுள்ள
ஒற்றைச் செருப்பின்மீது
வீட்டுப் படிகளில் வீசியெறியப்பட்ட
மூக்குக் கண்ணாடிமீது
தெரு முனையில் புரட்டி விடப்பட்ட
மோட்டார் சைக்கிளின்மீது
தயங்கித் தயங்கி நிற்கிறது

தகப்பன் தொலைந்த பிறகு
பிறந்த குழந்தைகளின்
பளிங்கு போன்ற விழிகளில்
எதிரொலிப்பது என்ன என்று தெரியாமல்
குழம்புகிறது
தாய்மாரின் கண்ணீர்த் துளிகளை
ஏந்திக்கொண்டு செல்கையில்
தலை குப்புற வீழ்கிறது

தூக்கு மரங்களின் கீழ்
புதைகுழிகளின் மேல்
முகாம்களின் கோடிப்புறங்களில்
மேசைமீது இப்போதும்
அப்போது போலவே கிடக்கும்
மூடப்படாத பேனையருகில்
முற்றுப் பெறாத கடித வரிகளில்

சுவரில் தூங்கும் படங்களில்
அறையில் சிந்தியிருக்கும் ஆடைகளில்
பூவாத பூவரசுகளில்
ஈரப் பனையில்
ஓரக் கூந்தலின் ஒற்றை மலரில்

நின்று பம்பரம் போலச் சுழல்கிறது

காற்றிலும் வெளியிலும்
மூடப்பட்ட எல்லா இரும்புக் கதவுகளிலும்
புகை கசியும் எல்லாத் துப்பாக்கிகளிலும்
அறைந்து கேட்கிறது
எங்கள் குழந்தைகளுக்கு என்ன நடந்தது?

*றிச்சட் டி சொய்சா கொல்லப்பட்ட பின்னர், அவரது நண்பரும் கவிஞருமான சேரன் எழுதிய கவிதை இது*

# இன்விக்ரஸ் விளையாட்டுப் போட்டிகள்

- குமணன் தம்பி

இராணுவத்தில் கடமையாற்றி காயமடைந்து உடல் அவையங்கள் பாதிக்கப்பட்டு இருக்கும், சர்வதேச நாடுகளைச் சேர்ந்த முன்னாள் இராணுவ வீரர்கள் கலந்து கொள்ளும் இன்விக்ரஸ் (INVICTUS) விளையாட்டுப் போட்டிகள் கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் பெப்ரவரி 8-ம் திகதி முதல் 16-ம் திகதி வரை நடைபெற்றது.

போட்டிகள் வன்கூவர் மற்றும் விஸ்லர் நகரங்களில் 23 நாடுகளைச் சேர்ந்த 500-ற்கும் மேற்பட்ட போட்டியாளர்களை ஒன்றிணைத்து நடத்தப்பட்டது.

இம்முறை நடைபெற்ற போட்டியானது உடல் அவையங்கள் பாதிக்கப்பட்ட இராணுவ வீரர்களுக்கான, 7-வது முறை நடைபெறும் போட்டியாகும். இப்போட்டியானது வழமைபோல் இல்லாமல் முதன்முறை குளிர்கால நிகழ்வாக நடத்தப்பட்டமை குறிப்பிடக்கூடிய சிறப்பம்சமாகும்.

இதில் குளிர்கால விளையாட்டுக்களான அல்பைன் ஸ்கீயிங் (Alpine skiing), ஸ்னோ போர்டிங் (Snowboarding), நோர்டிக்




ஸ்கீயிங் (Nordic skiing), பயத்லான் (Biathlon), ஸ்கேலட்டன் (Skeleton), சக்கரநாற்காலி கார்லிங் (Wheelchair Carling) போன்றவை புதிதாகச் சேர்க்கப்பட்டிருந்தன. இவற்றோடு வழமையாக நடைபெறும் வில்வித்தை, உள் அரங்க ஓட்டம், பாரம் தூக்குதல், நீச்சல், சக்கரநாற்காலி டென்னிஸ், சக்கர




நாற்காலி ரக்பி, சக்கர நாற்காலி ஐஸ் கொக்கி, சக்கரநாற்காலிக் கூடைப்பந்து ஆகிய விளையாட்டுகளும் இடம்பெற்றன.

இன்விக்ரஸ் விளையாட்டு அறக்கட்டளை, முதன் முதலில் இங்கிலாந்து இளவரசர் ஹரி அவர்களினால் 2014-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இளவரசர் ஹரியே இந்த அமைப்பின் தலைவராகவும் இருக்கிறார். முதலாவது இன்விக்ரஸ் போட்டிகளில் 13 நாடுகளிலிருந்து சுமார் 300 போட்டியாளர்கள் பங்கேற்றனர். ‘இலண்டன் குயின் எலிசபெத் ஒலிம்பிக் திடல்’ உள்ளிட்ட ‘காப்பர் பெட்டி’ மற்றும் ‘லீ பள்ளத்தாக்கு தடகள மையம்’ ஆகியவற்றிலும் போட்டிகள் நடைபெற்றன.

பி.பி.சி மூலமாக அனைத்து விளையாட்டுகளும் தொலைக் காட்சிகளில் ஒளிபரப்பப்பட்டன. தொடக்க விழாவில் இளவரசர் ஹரி, பிரதம மந்திரி டேவிட் கேமரூன், இளவரசர் சார்லஸ், இளவரசி கமிலா, கார்ன்வால், இளவரசர் வில்லியம், மற்றும் டென்மார்க் இளவரசர் பிரடெரிக் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் கூடுதலாக முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் மனைவி மிஷேல் ஒபாமாவின் பதிவு செய்யப்பட்ட வாழ்த்துச் செய்தியும் உள்ளடங்கியிருந்தது.

‘காயமடைந்த வீரர்கள் மறக்கப்படுவதில்லை. இந்த வீரர்களை உறுதிப்படுத்தவும் சமூகத்தில் அவர்களை இனம் காட்




டவும் இந்தப் போட்டிகள் உதவும்’ என இளவரசர் ஹரி முதலாவது இன்விக்ரஸ் போட்டியில் உரையாற்றும் போது தெரிவித்திருந்தார்.

இன்விக்ரஸ் என்பது ‘இலத்தீன்’ சொல் ஆகும். 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆங்கில எழுத்தாளர் வில்லியம் ஏர்னஸ்ட் ஹென்றியின் பிரபல கவிதையில் வரும் இச்சொல் ‘அசாதாரணமானது’ அல்லது ‘தோல்வியற்றது’ என்று பொருள்படும்.

இப்போட்டிகளுக்காக ஒரு மில்லியன் பவுண்ட் நிதியினை இளவரசர் ஹரியே வழங்கி, போட்டியை ஆரம்பித்து வைத்தார். இவரோடு சேர்ந்து ஜகுவார் (Jaguar), லான்ட்ரோவர்




(Landrover) கார் நிறுவனமும் நிதி உதவியினை அளித்து வருகிறது.

இன்விக்ரஸ் விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகி இது வரை முறையே இலண்டன் - பிரித்தனியா-2014, ஒர்லாண்டோ -அமெரிக்கா-2016, ரொறன்ரோ - கனடா-2017, சிட்னி - அவுஸ்திரேலியா-2018, ஹேக் - நெதர்லாந்து-2022, டுசெல்டார்ஃப் - ஜேர்மனி-2023, பிரிட்டிஷ் கொலம்பியா - கனடா-2025 என நடைபெற்றன. 2020-இல் நெதர்லாந்தில் நடைபெறுவதாகத் திட்டமிட்டிருந்த போட்டியானது, கோவிட்-19 காரணமாக 2021-ற்குப் பிற்போடப்பட்டு பின்னர் 2022-ல் நடைபெற்றது.

எட்டாவது இன்விக்ரஸ் போட்டிகள் பிரித்தானியாவின் பர்மிங்காம் நகரில் 2027-ம் ஆண்டு நடைபெறும் எனத் தெரிகிறது.



இவ்வாறு மாற்றுவலுவுள்ள முன்னாள் இராணுவ வீரர்களுக்காக வருடம் தோறும் நடத்தப்பட்டு வரும் இப்போட்டியானது, உடல் அவையங்கள் பாதிக்கப்பட்ட, காயமடைந்த இராணுவ வீரர்களை, அவர்களது குடும்பங்களை நினைவு கூருவதற்கும் அவர்களின் கௌரவத்தினை நிலைநாட்டுவதற்குமான தனித்துவமான வாய்ப்பினை வழங்கக் கூடிய தன்மை கொண்டதாகக் காணப்படுகின்றமை கூடுதல்
சிறப்பாகும்.



kumanan.t@thaiveedu.com

# தலைநகரில் பிறந்தாலும் மலையகத்தைப் போற்றி நின்ற ‘அக்கினிப்பூக்கள்’ அந்தனி ஜீவா

– மல்லியப்புசந்தி திலகர்



அந்தனிஜீவா எனும் பெயரை இலங்கை, தமிழ்நாடு, புலம் பெயர் தமிழ் இலக்கிய சூழலிலும் இலங்கையின் சிங்கள கலை இலக்கிய சூழலிலும் அறியாதோர் இருக்க வாய்ப் பில்லை. செபஸ்டியன் அந்தோனி எனும் இயற்பெயர் கொண்ட இவர் தனது 81-வது வயதில் அண்மையில் கொழும் பில் காலமானார்.

இந்திய இராணுவத்தில் பணியாற்றியபோது பர்மா நாட்டிற் குச் சென்ற செபஸ்டியன் எனும் இந்திய இராணுவ வீரர் ஒரு வர் இடைத்தங்கலாகக் கொழும்பில் சில காலம் தங்கியி ருந்த நாட்களில், அங்கு வாழ்ந்த இலட்சுமி அம்மாள் எனும் பெண்ணுடன் காதல் வயப்பட்டு, மணமுடித்து கொழும்பி லேயே வாழலானார். அந்தத் இணையருக்கு மே 05, 1944-ல் பிறந்த இரண்டாவது குழந்தையே அந்தோனி. டொமினிக் ஜீவா போன்றே இந்திய இடதுசாரித் தலைவர் ஜீவானந்தன் மீதான பற்றுதலால் தனது பெயரான அந்தோனியுடன் ஜீவாவை இணைத்துக் கொண்டதனால் அந்தனிஜீவா ஆனார்.

கொழும்பு-05, கிருலப்பனை பிரதேசத்தையே பூர்விகமாகக் கொண்ட இவர் கிருலப்பனை சுவர்ண பாடசாலையிலும் பம்ப லப்பிட்டி சென். மேரிஸ் பாடசாலையிலும் கல்வி கற்றவர். இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் ஊடகத்துறை சார்ந்த கற்கை நெறி ஒன்றையும் பூர்த்தி செய்துள்ளார்.

பாடசாலைக் காலம் முதலே தனது படைப்புகளைப் பத்திரி கைகளுக்கு எழுதுவதில் ஆர்வம் காட்டி வந்துள்ள அந்தனி-ஜீவா, நீர்கொழும்பில் இருந்து வெளிவந்த ‘மாணவர் குரல்’ சஞ்சிகையில் தனது எழுத்துப் பயணத்தை ஆரம்பித்தார். அதேவேளை பாடசாலை நண்பர்களுடன் இணைந்து ‘கரும்பு’ எனும் கையெழுத்துப் பிரதியையும் நடத்தி வந்துள் ளார். இலங்கைப் பத்திரிகைகளின் பிரபல ஓவியரான சாமி, இலங்கை மெல்லிசைப் பாடகர் வி. முத்தழகு போன்றவர்கள் இவரது பாடசாலை நண்பர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. தனது பாடசாலை ஆசிரியர்களான திரு. சந்தானம், திரு மதி.எம். பேர்னாண்டோ ஆகிய இரு ஆசிரியர்களையும் மற வாமல் நினைவு கூர்ந்துவந்த அவர், தனது பாடசாலையின் மூத்த மாணவர்களான கலைஞர் ஜே.பி. ரொபர்ட், கலைஞர் ராஜபாண்டியன் ஆகியோரையும் தனது ஆரம்பகாலக் கலை வழிகாட்டிகளாகக் கொண்டிருந்தார்; ‘வீரகேசரி’, ‘தினகரன்’ போன்ற முன்னணிப் பத்திரிகைகள், இதழ்களில் எழுதிவந்த வர். ‘தினபதி’, ‘சிந்தாமணி’ ஆகிய பத்திரிகைகளோடு நெருக் கமாகப் பணியாற்றிய காலத்தில் அதன் ஆசிரியராகவிருந்த பத்திரிகை ஜாம்பவான் எஸ்.டி. சிவநாயகம் தன்னைப் புடம் போட்டார் என நன்றியோடு பதிவு செய்துள்ளார். பின்னாளில் ‘குன்றின் குரல்’, ‘கொழுந்து’ போன்ற சஞ்சிகைகளின் பொறுப் பாசிரியராக அந்தனிஜீவா செயற்பட்டுள்ளார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

தனது வாழ்நாள் முழுவதும் கலை, இலக்கியத் தளத்தில் சதா சுறுசுறுப்பாக இயங்கிக்கொண்டு இருந்த அந்தனிஜீவா ஒரு நடமாடும் கலைக்களஞ்சியம் போன்றவர். எப்போதும் கலை, இலக்கியத் தகவல்களை விரல் நுனியில் வைத்திருப் பார். தொடர்பாடலில் வல்லவர். இலங்கைக்குள் எந்தத் திசை இலக்கியம் என்றால் என்ன? எந்த மொழி இலக்கியம் என் றால் என்ன? தமிழ் நாட்டில் எந்த அணி இலக்கியம் என்றால் என்ன? இவரது தொடர்பு நிச்சயமாக அவர்களுடன் இருக் கும். இவரது தோளில் தொங்கும் ‘சோல்னா’பை இவருக்கான அடையாளமாக இருந்தது. இலக்கிய ஆர்வலர்களைக் கண்ட தும் அந்தப் பையில் இருந்து ஒரு நூலை உருவி எடுத்து அவர்களுக்குக் கொடுப்பதில் ஆனந்தம் அடைவார். அதற் குச் சன்மானம் கொடுத்தால் வாங்கிக்கொள்வாரேயன்றி அவ ரது நோக்கம் அறிவைப் பரப்புவதாகவே இருந்தது. அவரது 56, மகிந்த பிளேஸ், கிருலப்பனை எனும் வீட்டு முகவரி இலக் கிய உலகில் மிகப் பிரசித்தமானது. அந்த வீட்டில் அமைந்த அவரது நூலகமும் நூல் சேகரிப்புகளும் அவரது வாசிப்புக் கும் தொடர்பாடலுக்கும் சாட்சி பகர்வன.

இளம் வயது முதலே சிவப்பு நிறத்தில் தான் கொண்டிருந்த ஆர்வம், இடதுசாரி அரசியல் அணி சார்ந்து தான் செயற்பட்ட விதம் குறித்தும் தனது ‘அனுபவப் பகிர்வு’ நூலில் பதிவு செய் துள்ளார். ஆரம்ப நாட்களில் இருந்தே ‘லங்கா சமசமாஜ’ கட் சியில் தன்னை இணைத்துக்கொண்டவர், அதன் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைமைக் காரியாலயத் தில் பணியாற்றியுமுள்ளார். இதன்போது கொல்வின் ஆர்.டி. சில்வா, என்.எம். பெரேரா, வாசுதேவ நாணயக்கார போன்ற மூத்த அரசியல் தலைவர்களுடன் பழகும் வாய்ப்பையும் பெற் றுள்ளார். இந்த அரசியல் பயணத்தின் நீட்சியாக 2015-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணி யின் தேசிய பட்டியல் பாராளுமன்ற வேட்பாளராகவும் அந்

தனிஜீவா பெயரிடப்பட்டு இருந்தார். தொடர்ந்து மக்கள் விடு தலை முன்னணியின் 'தேசம்' பத்திரிகையின் ஆசிரியர் பீடத் திலும் அதன் ஆலோசகராகவும் பணிபுரிந்து வந்தார்.

தலைநகர் கொழும்பில் பிறந்து வளர்ந்தவராயினும் எப்போ தும் மலையகத்தையும் அங்கு வாழ்ந்த மக்களையும் அவர்க ளுக்கு வழிகாட்டியாக இருந்த தலைவர்களையும் நேசித்தவர் அந்தனிஜீவா. மலையக கலை இலக்கியத்தை எப்போதும் போற்றி நின்ற பெருமகன். அவர் அது பற்றி கூறுகையில்,



'மலையகம் எனது பிறப்பிடமல்ல. ஆனாலும் மலையக மண் ணில் பிறந்தவர்களைவிட அந்த மண்ணின் மீது நேசம் கொண்டவன். எனக்கு அந்த மலையக மண்ணின் மீது பாசத் தையும் நேசத்தையும் ஊட்டியவர்கள் இருவர். ஒருவர் இலங் கைத் திராவிடக் கழகப் பொதுச் செயலாளர் நாவலர் ஏ. இளஞ்செழியன், மற்றவர் மக்கள் கவிமணி சி.வி. வேலுப் பிள்ளை. சி.வி. வேலுப்பிள்ளையுடனான தொடர்பு காரண மாக கிழமைக்கு இரண்டு தடவைகளாவது அவரைச் சந் தித்து உரையாடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். மலையக இலக்கியத்தின் முதல்வரும் முன்னோடியுமான தேசபக்தன் கோ. நடேசய்யரின் பணிகள் குறித்த பல தகவல் களைச் சி.வி எனக்குச் சொல்லுவார்' எனத் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார் அந்தனிஜீவா.

உண்மையில் மலையக தேசபிதா கோ. நடேசய்யர் அவர்க ளைப் பற்றி அந்தனிஜீவா அளவுக்கு எடுத்துக்கூறி நின்றவர் கள் வேறு யாருமில்லை. அவரது பணிகளை பல தளங்களில் பேசியவராக அந்தனிஜீவாவை அடையாளம் காட்ட முடியும். எந்த இலக்கிய மேடையில் பேசக் கிடைத்தாலும் அதில் கோ. நடேசய்யரை நினைவு கூராது அவரது உரையை நிறைவு செய்யமாட்டார். மகாத்மா காந்தி நினைவு நாளையொட்டிய தாகக் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு கூட்டத் தில் உரையாற்றிய அந்தனிஜீவா, மகாத்மா காந்தியின் இலங்கைப் பயணத்தின்போது பலரும் அவரைச் சந்தித்துப் பேசப் பல பிரயத்தனங்களை எடுத்த நிலையில் கோ. நடே சய்யர் மகாத்மா காந்தியைச் சந்திப்பதை மறுத்திருந்தார் என்பதைச் சுட்டிக்காட்டித் தனது உரையில் தொடர்புபடுத்தி இருந்தமை சுவாரஷ்யமானது.

'தேசபக்தன் கோ. நடேசய்யர்', 'பத்திரிகையாளர் நடேசய்ய யர்' ஆகிய நூல்களை எழுதிய மலையக ஆய்வு எழுத்தாளர் சாரல்நாடன், 'அந்தனிஜீவாவின் உந்துதலும் பங்களிப்பும் இல்லாமல் கோ. நடேசய்யர் குறித்தான தனது ஆய்வு முயற்சி கள் சாத்தியமான ஒன்று அல்ல' என்று பதிவு செய்துள்ளார். கோ. நடேசய்யர் எழுதி, 'இலங்கை, இந்தியத் தோட்டத் தொழிலாளர்களின் அந்தரப்பிழைப்பு' எனும் நாடகப் பிரதி யைச் சென்னை 'ரோஜா முத்தையா' நூலகத்தில் காணக் கி டைத்ததும் அதனைப் பிரதி எடுத்துத் தானே பதிப்பாசிரிய ராக இருந்து குமரன் பதிப்பகத்தின் ஊடாக அந்தனிஜீவா மறுபதிப்பு (2017) செய்துள்ளார் என்பதுவும் சுட்டிக்காட்டத் தக்கது. அந்த நூலை திண்டுக்கல் காந்திகிராம கிராமிய பல் கலைக்கழகம் நடத்திய மலையக இலக்கிய ஆய்வு மாநாட்டி லும், கொழும்புத் தமிழ்ச்சங்கத்திலும் வெளியிட்டு வைத்தார்.

மலையகத்துடனான இவரது ஈடுபாட்டினை அறிவதற்கு மேலும் ஒரு சான்றாக சாரல்நாடன், சு. முரளிதரன் போன்றவர் களுடன் இணைந்து 'மலையக கலை இலக்கிய பேரவை'யின் செயலாளராக இவர் ஆற்றிய கலை, இலக்கிய பணிகளைக் குறிப்பிடலாம். 1996-ம் ஆண்டு மத்திய மாகாண கல்வி அமைச்சராக வி. புத்திரசிகாமணி செயற்பட்ட காலத்தில் இடம்பெற்ற 'மலையகத் தமிழ் ஆராய்ச்சி' மாநாட்டுக்கான ஒழுங்கமைப்புக் குழுவின் தலைவராக தி.வே. மாரிமுத்து செயற்பட, அதன் செயலாளராக அந்தனிஜீவாவே செயற்பட் டார். இந்த மாநாட்டின் முக்கிய பங்கேற்பாளராகப் பேராசிரி யர் கா. சிவத்தம்பி அவர்கள் கலந்துகொண்டு உரை வழங்கி இருந்தார். பின்னாளில் மலையகத் தமிழாராய்ச்சிச் செயல கம் மாநாட்டு ஆய்வுக் கட்டுரைகளை தொகுத்து நூலாக்கிய திலும் அந்தனிஜீவாவின் பங்களிப்பு பெரும் போற்றுதற்குரியது.

அந்தனி ஜீவாவின் நாடகப்பிரதிகள், பயணக்கட்டுரைகள், அனுபவப்பகிர்வு தவிர்ந்த ஏனைய நூல்கள், அளவில் மிகச் சிறியது. அவை ஆழமான விடயங்களைச் சுமந்து வராத போ தும், அந்த விடயதானங்கள் சமூகத்தளத்தில் பேசப்படவேண் டியதன் அவசியத்தை வலியுறுத்துவன, அதற்காக அடியெ டுத்துக் கொடுப்பனவாக இருந்துள்ளது. மலையகப் பெண் கவிஞர்களுடைய கவிதைகளின் தொகுப்பாக அவர் தொகுத்த 'குறிஞ்சிக் குயில்கள்', பெண் சிறுகதையாளர்க ளின் கதைகளைத் தொகுத்து தனது அம்மாவின் நினைவாக வெளியிட்ட 'அம்மா' எனும் தலைப்பிலான சிறுகதைத் தொகுப்பு முதலானவையும் இத்தகைய முயற்சிகளே.

'ஈழத்தில் தமிழ் நாடகங்கள்' (1981), 'அன்னை இந்திரா' (1985), 'காந்தி நடேசய்யர்' (1990), 'சுவாமி விபுலானந்தர்' (1992), 'The Hill Country in Sri Lanka Tamil Literature' (1995), 'மலையகமும் இலக்கியமும்' (1995), 'மலையக மாணிக்கங்கள்' (1999), 'அக்கினிப்பூக்கள்' (1999), 'சி.வி.யும் நானும்' (2001), 'மலையகத் தமிழ் இலக்கியத்துக்கு முஸ்லிம் எழுத்தாளர்களின் பங்களிப்பு' (2002), 'மலையகக் கவிதை

வளர்ச்சி' (2003), 'திருந்திய அசோகன்-சிறுவர் நாவல்' (2003), 'நெஞ்சில் பதிந்த ஐரோப்பிய பயணம்' (2004), 'மலையகத் தொழிற்சங்க வரலாறு' (2005), 'சிறகு விரிந்த காலம்' (2007), 'அ.ந.க ஒரு சகாப்தம்' (2009), 'பார்வையின் பதிவுகள்' (2010), 'தலைநகரில் தமிழ் நாடக அரங்கு' (2013), 'ஒரு வானம் பாடி யின் கதை' (2014) போன்ற நூல்களுடன், சி.வி. வாழும்போதே 'சி.வி. சில நினைவுகள்' எனும் நூலை எழுதியவர். சி.வி நூற் றாண்டு நினைவையொட்டி 'சி.வியும் நானும்' என 2002-ல் வெளியிட்ட நூலைத் திருத்திய மறுபதிப்பாக 2014-ம் ஆண்டு வெளியிட்டது மாத்திரமன்றி கொழும்புத் தமிழச்சங்கத்திலும் தமிழ் நாட்டிலும் கூட சி.வி நூற்றாண்டு விழாவினை நடத்திய வர். தனது நூல் பதிப்பு, நூல் வெளியீட்டு முயற்சிகளுக்காக 'மலையகம்' வெளியீட்டகம், 'கொழுந்து' பதிப்பகம் என மலை யகம் சார்ந்த பெயர்களைக் கொண்டிருந்தமை அவரது மலையக நேசத்துக்கான சிறந்த சான்றாகிறது.

இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் பரவலாக இலக்கியவாதி கள், கலைஞர்கள், பதிப்பாளர்களுடன் தொடர்புகளைப் பேணியதில் அந்தனிஜீவாவுக்குத் தனியிடமுண்டு. மிகவும் குறிப்பாகக் கடிதம் எழுதுவதன் மூலம் நட்பை, உறவை, தோழமையைத் தொடர்பில் வைத்திருக்கும் உயர்வான பண்பு அந்தனிஜீவாவுக்கே உரியது எனலாம். புதிய எழுத்தா ளர்கள், இளம் கலைஞர்களை அடையாளம் கண்டு அவர்க ளுக்குக் களம் அமைத்துக் கொடுப்பது, அவர்களுக்குக் கடி தங்கள் எழுதி ஊக்குவிப்பது எனும் வழக்கத்தைத் தனதாக் கிக் கொண்டிருந்தவர். மலையகத்தில் பிறந்து தாயகம் திரும் பியவர்களாகத் தமிழ்நாட்டுக்குச் சென்றுவிட்ட எழுத்தாளர் களை மீளவும் இலங்கை மலையகத் தளத்தில் அறிமுகப்ப டுத்திய பெரும்பணி அந்தனிஜீவாவுக்குரியது. மலையகப் புதுக்கவிதைப் பிதாமகன் அரு. சிவானந்தன், சி. பன்னீர் செல்வம், சிக்கன் ராஜு முதலானவர்களின் எழுத்துக்களை மீளவும் இலங்கைத் தளத்தில் பிரசுரிப்பதில் அந்தனிஜீவா அரும்பணியாற்றினார். அந்தனி ஜீவாவின் முயற்சி இல்லாத போது இலங்கைத் தளத்தில் இத்தகைய எழுத்தாளர்கள் மீள வும் பேசுபொருளாகியிருக்க வாய்ப்பில்லை. கவிஞர் சக்தீ பால அய்யா மறைவினை அடுத்து அவரது புகழுடலைத் தேசிய கலாபவனத்தில் அஞ்சலிக்காக வைப்பதற்கு அரும் பாடுபட்டார். அவ்வாறு கௌரவம் அளிக்கப்பட்ட இரண்டாம வர் சக்தீ பால அய்யா. முதலாமவர் கவிஞர் மலைத்தம்பி.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினராக இருந்த அந்தனிஜீவா சங்கத்தின் ஆட்சிக் குழு உறுப்பினரா கச் செயற்பட்டு தொடர்ந்து கலை, இலக்கிய பணியில் தன்னை இணைத்துக்கொண்டிருந்தார். இளம் இலக்கிய செயற்பாட்டாளர்களை கொழும்புத் தமிழ்ச் சங்க உறுப்பு ரிமை பெறச் செய்வதில் மிகுந்த ஈடுபாடு காட்டினார். இவரது இந்தப் போக்கினை 'இலக்கியத்துறையில் மட்டுமல்லாது ஒடுக்கப்பட்டோர் அரங்கு, பிரயோக அரங்கு, பங்குபற்றல் அரங்கு, முதலான துறைகளோடு ஊடாட்டம் கொண்டு பங்க ளிப்புச் செய்துள்ள அந்தனி ஜீவா ஒரு 'வினையி' (Activist) எனும் வகிபாகம் கொண்டவர்' எனக் குறிக்கிறார் பேராசிரியர் சபா. ஜெயராஜா.

'தலைநகரில் தமிழ் நாடக அரங்கு' எனும் இவரது நூலுக்கு, 'தினமணி' ஆசிரியர் கே. வைத்தியநாதன் எழுதியிருக்கும் குறிப்பு இவ்வாறு அமைகிறது:

'இலங்கை நாடக மேடையின் வளர்ச்சிக்குப் பங்களித்த அத் தனை பேரையும் ஒருவர் விடாமல் நினைவு கூர்ந்து பதிவு செய்திருக்கும் அந்தனிஜீவாவே ஓர் அற்புதமான கலைஞர். சுமார் 16 மேடை நாடகங்களை மேடை ஏற்றியவர். வீதி நாட கங்களையும் நடத்தியவர். அந்தனிஜீவா போன்ற அயல்நாட் டுத் தமிழ் எழுத்தாளர்கள், கலைஞர்கள் போன்றோரைத் தமி ழக அரசு ஆண்டுதோறும் வழங்கும் 'கலைமாமணி' போன்ற விருதுகளுக்கும் பாராட்டுகளுக்கும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். மனிதரின் அடையாளம் கடவுச்சீட்டாக இருக்க முடியாது. மொழியாகத்தான் இருக்க முடியும்' இவ் வாறு தமிழ்நாட்டிலும் தனக்கான ஓர் அங்கீகாரத்தைக் கொண்டிருந்தவர் அந்தனி ஜீவா.

இவர் பல நாடகங்களை எழுதியவர், இயக்கியவர், தயாரித்த வர் மேடையேற்றியவர் என்றபோதிலும் இவரது 'அக்கினிப் பூக்கள்' எனும் நாடகம் மிக மிகப் பிரபலமானது. அந்த நாட கம் அரங்கேற்றப்பட்ட காலத்தில் 'அக்கினிப்பூக்கள் அந்தனி ஜீவா' என்றும் கூட அவர் விளிக்கப்பட்டிருக்கிறார். பின்னா ளில் அந்த நாடகப்பிரதி நூலாக வெளிவந்தபோது 1999-ம் ஆண்டு சிறந்த நாடகப்பிரதிக்கான இலங்கை அரச சாகித் திய விருதினை வென்றமையும் குறிப்பிடத்தக்கது.

அந்தனிஜீவா நிற்கும் சூழல் எப்போதும் கலகலப்பாக இருக் கும். சதா ஏதாவது ஒரு விடயத்தைப் பேசிக்கொண்டு இருப்ப வராக, செறிவான இலக்கியத் தகவல்களைக் கொண்ட களஞ்சியமாகத் தன்னை தகவமைத்துக்கொண்டவர். தனது அரை நூற்றாண்டுகாலப் பொது வாழ்க்கை அனுபவங்களை 'ஜீவநதி' இதழில் தொடர் கட்டுரையாக எழுதி வந்தவர், அதற்கு அவர் இட்ட தலைப்பு 'ஒரு வானம்பாடியின் கதை'. அதனை 'ஜீவநதி' பதிப்பகம் நூலாகவும் வெளியிட்டு அவருக் குக் கௌரவம் செய்துள்ளது.

அக்கினிப்பூக்கள் தந்த அந்தனிஜீவா எனும் வானம்பாடி, கலை இலக்கிய வானில் பல ஆண்டுகள் கானம் பாடிக் கடந்த 2025 ஜனவரி 10-ம் திகதி இவ்வுலகிலிருந்து அமைதி கொண்டது. இவரது மறைவையடுத்து 'தாயகம் திரும்பிய மலையகத்தவர்கள்' சார்பில் திருச்சி தமிழகன், செவ்வந்தி ஆகியோர் ஏற்பாட்டில் சென்னையிலும், காந்தி கிராம கிரா மிய பல்கலைக்கழக பேராசிரியர் பா. ஆனந்தகுமார் தலை மையில் மதுரையிலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்ற தோடு, இலங்கையில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் அதன் தலைவர் திருமதி. சுகந்தி ராஜகுலேந்திரா தலைமையிலும், இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகத்தின் ஏற்பாட்டில் பேராசி ரியர் சபா. ஜெயராசா தலைமையிலும் நினைவேந்தல் நிகழ்வு கள் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் கலாசார அமைச்சர் சுனில் செனவி ஹினிதும உள்ளிட்ட சிங்களக் கலைஞர்கள், எழுத்தாளர்கள் கலந்துகொண்டு அஞ்சலி உரையாற்றினர். தலைநகரில் பிறந்தவரானாலும் மலையகத்தைப் போற்றி நின்ற அந்தனிஜீவா என்ற பெருமகனாருக்கு மலையகக் கலை, இலக்கிய உலகு பெரிதும் கடமைப்பட்டுள்ளது.



thilagar@thaiveedu.com



# மூத்த ஊடகவியலாளர் பாரதி அண்ணாவின் அறிவாளுமையும் புலப்பாட்டுநெறியும்

– சி. ரகுராம்

'பாரதி அண்ணா' என அனைவராலும் அன்புடன் அழைக் கப்பட்ட மறைந்த மூத்த ஊடகவியலாளர் இராஜநாயகம் பாரதி அவர்களை ஓர் மானுட நேயமிக்கவராக, ஊடகத்துறை ஆளுமையாகத்தான் பெரும்பாலும் அனைவருக்குமான அறி முகம் அமைந்திருக்கும். ஆனால், தனது ஊடகத்துறை அனு பவங்களையும் அறிவாற்றலையும் இளஞ்சந்ததி ஊடக மாண வர்களோடு எப்போதும் பகிர்ந்துகொள்வதில் ஆர்வமும் விருப்பும் உள்ளவராக அவரை அறிந்திருப்பவர்கள் மிகக்கு றைவே. அவ்வாறான அறிவு, அனுபவப் பகிர்வை உள்வாங் கும் பேறு பெற்றவர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக்கற்கைகள் மாணவர்கள் அமைந்திருந்தனர்.

ஊடகக்கற்கைகள் மாணவர்களுடன் செய்தி அறிக்கையிடல் கள், செம்மையாக்கம், கட்டுரைகளை வரைதல், நேர்காணல் கள் மேற்கொள்ளல் எனப் பல எண்ணக்கருக்களிலும் பாரதி அண்ணாவை உரையாட அழைத்தபோதெல்லாம் அந்தச் சந் தர்ப்பங்களை மிக விருப்புடன் ஏற்றுக்கொண்டவர் அவர். மாணவர்களுக்கு விடயங்களை அறிமுகப்படுத்தும் விதமும், தனது அனுபவங்களின் ஊடாக உதாரணங்களுடன் அவற்றை இன்னமும் ஆழமாக அவர் எடுத்துச் சொல்லும் பாங்கும் இன்றும் கண்களில் நிழலாடுகின்றன.

யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் வெவ்வேறு காலப்பகுதிக ளில், வெவ்வேறு பணிச்சூழல்களில், வேறுபட்ட ஊடகக்களங் களில் பாரதி அண்ணா தனது ஊடகப்பணியை ஆற்றியிருந் தது, அவரைத் தனியொரு ஆளுமை மிக்கவராக உருவாக்கி யிருந்தது என்றால் மிகையில்லை என்றே கூறலாம். ஊடகக்க ளத்தில் நெருக்கடிகளையும் சவால்களையும் எதிர்கொண்ட போதெல்லாம், அவருக்கேயுரித்தான நிதானமும் பொறுமை யும் பக்குவமும் கொண்டு அவற்றையெல்லாம் அணுகியவர் அவர்.

அவ்வாறான முதிர்ச்சியான ஊடகப்பணியே இன்றும் எதிர் பார்க்கப்படுகின்றது என்பதை அவர் ஊடகக்கற்கைகள் மாணவர்களுக்கு அளித்த விரிவுரைகளும் கலந்துரையாடல் களும் எப்போதும் வலியுறுத்தியிருந்தன. அவருடனான பகிர் வுகளில் பங்குபற்றும் மாணவர்களிடத்தும் அவர் ஊடகங் களை நோக்கி வைத்திருக்கும் எதிர்பார்ப்பின் தாக்கம் ஊடு ருவி இருப்பதை அவதானிக்க முடிந்தது. குறிப்பாக, கட்டுரை கள் எழுதுவதிலும் நேர்காணல்களை மேற்கொள்வதிலுமான அவரது வழிகாட்டல்கள் பல்கலைக்கழக மாணவர் சஞ்சிகை யான 'கனலி'யில் பிரதிபலித்தன. மாணவர்களது ஆக்கங்க ளில் இவை எதிரொலிப்பதைக் காணும்போது, தொழில்வாண் மையும் சமூகப்பார்வையும் மிக்க இளம் பாரதி அண்ணாக் களை மாணவர்களிடம் அடையாளங்காண முடிந்தது.

அச்சு ஊடகத்துறைக்கும் மேலதிகமாக, ஆவணப்படங்களி லும் குறும்படங்களிலும் பாரதி அண்ணா காட்டிய ஆர்வம் சிலாகிக்கப்பட வேண்டியது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை யால் முன்னெடுக்கப்படும் அனைத்துத் திரைப்பட விழாக்க ளிலும் பாரதி அண்ணாவின் பிரசன்னம் இருக்கும். தனது ஊடக நண்பரான கணபதி சர்வானந்தா அவர்களுடன் வருகை தரும் அவர், மாணவர்களின் ஆவணப்படங்களும் குறும்படங்களும் திரையிடப்படும்போது இறுதிவரை இருந்து அவர்களை ஊக்கப்படுத்துவதும், திரையிடல்களுக்குப் பின் னரும் தொடரும் கலந்துரையாடல்களில் ஆசுவாசமாக மாண வர்களுடன் உரையாடி அவர்களின் அடுத்தடுத்த படைப்புக ளுக்கான ஆலோசனைகளை வழங்குவதும் அவருக்கேயுரித் தான நேர்முக அணுகுமுறையாக இருந்துவந்திருக்கின்றது.

பாரதி அண்ணாவை நினைவுமீட்டல் என்பதன் பல்பரிமாண அர்த்தங்களில், ஊடகம் பயிலும் மாணவர்களுக்கான அவ ரது வழிகாட்டல் என்பதன் முக்கியத்துவம் அடுத்த சந்ததியி னருக்கான அறிவும் அனுபவத்தினதுமான செழுமையின் கையளிப்பு என்பதை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை என்றென்றும் நன்றியுடன் நினைவுகூர்ந்து கொண்டிருக்கும்.



raguram.s@thaiveedu.com

# இராஜநாயகம் பாரதி

## பத்திரிகை வானில் நின்றொளிர்ந்த துருவ நட்சத்திரம்

-கருணாகரன்



தமிழ்ப் பரப்பில் சற்று மாறுதலான ஊடகவியலாளராக அறியப்பட்ட இராஜநாயகம் பாரதி (09.02.2025) மறைந்துள்ளார். பாரதிக்கு வயது 62. மரணம் ஒருவரை எடுத்துச் செல்வதற்கு வயதில்லை. ஆனாலும் பாரதியின் மரணம் எதிர்பாராதது. அவருடைய அண்ணன் பரதனின் மரணமும் அப்படித்தான் நடந்தது. பரதன் இறக்கும்போது அவருக்கு வயது, 61. பரதன், 1980-களின் முற்பகுதியிலிருந்து 1990-களின் நடுப்பகுதி வரையில் புலிகளோடு இணைந்து செயற்பட்டவர். இலங்கை - இந்திய இராணுவங்கள் மற்றும் முரணியக்கங்களின் எதிர்ப்பு நிறைந்த சூழலில் தப்பிப் பிழைத்து, லண்டனுக்குச் சென்று வாழ்ந்த பரதன், ஒரு நாள் தன் துணைவியோடு வீதியில் நடந்து சென்று கொண்டிருக்கும்போது மரணத்தை சந்தித்தார். பாரதிக்கு நேர்ந்ததைப்போல அதுவும் ஒரு நெஞ்சடைப்புத்தான்.

1985-களின் நடுப்பகுதியில் புலிகளுடைய தொலைக்காட்சியான 'நிதர்சனம்', வானொலியான 'புலிகளின் குரல்' மற்றும் 'புகைப்படப்பிரிவு' ஆகியவற்றை உருவாக்கிவர் பரதன். 1990-களின் முற்பகுதிவரை அவற்றை நிர்வகிக்கும் பொறுப்பாளராகவும் இருந்தார். அதோடு குறும்படங்களையும் இயக்கினார். பரதனுடைய நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட 'இனி', 'நேற்று' போன்ற குறும்படங்கள் அழகியல் ரீதியிலும் வெற்றியடைந்தவை. தொடர்ந்து முழு நீளப்படங்களை ஞானரதனின் உதவியோடு உருவாக்கினார். 'காற்றுவெளி' திரைப்படம் ஞானரதன் - பரதன் கூட்டுழைப்பின் வெற்றியாகும்.

பாரதி, பரமேஸ்வராக் கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் படிப்பை முடித்த கையோடு ஊடகத்துறைக்குள் நுழைந்து விட்டார். 1980-களின் முற்பகுதியில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்த 'ஈழமுரசு' பத்திரிகையில் இணைந்து ஆசிரியர் பீடத்தில் பணியாற்றினார். அது போராட்டம் உச்சமான வளர்ச்சியை அடைந்து கொண்டிருந்த காலகட்டம். பல இயக்கங்களும் தலையிலும் மனதிலும் முரண் அரசியலைச் சுமந்து கொண்டு குறுக்கும் மறுக்கும் திரிந்து கொண்டிருந்தன. வேறுபாடின்றி இயக்கங்களை வேட்டையாடிக் கொண்டிருந்தது இலங்கை இராணுவம். இரண்டுக்குமிடையில் ஊடகவியலாளராகச் செயற்படுவதும் வாழ்வதும் சவாலாகியிருந்த நாட்கள் அது.

அப்படியான நாளொன்றில், குண்டு வெடிப்புப் பற்றிய செய்தி ஒன்றுக்காக யாழ்ப்பாணக் கச்சேரிக்குச் சென்றிருந்தபோது படையினரால் கைது செய்யப்பட்டார் பாரதி. விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டுச் சில காலம் ஈழமுரசு பத்திரிகையில் பணியாற்றினாலும் அங்கே தொடர்ந்து இருக்க முடியவில்லை; நிர்வாக முரண்கள். அதற்குப் பிறகு அப்பொழுது யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகிய 'குளோபல்' சிவராஜாவின் 'முரசொலி' பத்திரிகையில் இணைந்தார். ஆரம்பகால ஊடகத்துறையில் பாரதிக்கு வழிகாட்டிகளாகவும் ஊக்கிகளாகவும் எஸ். திருச்செல்வம், சிறி நடராஜா, கிறிஸ்ரி ரஞ்சன், சுப்பிரமணியம் போன்றோர் இருந்தனர். முரசொலியில் பணியாற்றிக் கொண்டிருந்தபோதுதான் பாரதி ஒரு விபத்தில் சிக்கித் தன்னுடைய கைகளில் ஒன்றை இழந்தார்.

கிழக்கின் மெய்யான நிலவரத்தை அறிந்து எழுதுவதற்காக வடக்கிலிருந்து ஊடகவியலாளர்களை இந்திய அமைதிப்படை (IPKF) கூட்டிச் சென்றபோது ஏற்பட்ட வாகன விபத்து அது. அதனால், இந்திய இராணுவம் யாழ்ப்பாணத்துக்கு பாரதியைக் கொண்டுவந்து, மேலதிக சிகிச்சைக்காகத் தமிழ்நாட்டுக்கு விமானத்தில் எடுத்துச் சென்றிருந்தது. அங்கே சிகிச்சை முடித்து இலங்கைக்குத் திரும்பிய பாரதி, தொடர்ந்து சில காலம் முரசொலியில் பணியாற்றினார். 1990-ல் முரசொலியும் நெருக்கடிகளைச் சந்தித்தபோது, பாரதி அங்கிருந்து கொழும்புக்குச் சென்றார்.

கொழும்பில் வீரகேசரி, தினக்குரல் ஆகியவற்றின் ஆசிரிய பீடத்தில் ஏறக்குறைய 30-ஆண்டுகள் பணியாற்றியிருக்கிறார் பாரதி. இந்தக் காலகட்டத்தில் பாரதியின் செயற்பாடுகள் கொழும்பு மையம் என்பதற்கு அப்பால், தமிழ்ச் சமூகம் என்றே இருந்திருக்கிறது. குறிப்பாக வடக்குக் கிழக்குத்

தமிழ்ச் சமூகத்தின் வளர்ச்சி, அடையாளம், அதனுடைய பாதுகாப்பு போன்றவற்றைக் கவனத்திற் கொண்டிருந்தார். இதற்கான அடிப்படைகளான அரசியல், இலக்கியம், வரலாறு, பொருளாதாரம், பண்பாடு போன்றவற்றைத் தன்னுடைய ஊடகச் செயற்பாட்டிலும் தான் செயற்பட்ட ஊடகங்களின் தளவாக்கத்திலும் முன்னிலைப் பேசுபொருளாக்கினார்.

தினக்குரல் பத்திரிகையின் வாரப் பதிப்புக்கான ஆசிரியராக இருந்தபோது 'புதிய பண்பாடு' என்ற தலைப்பில் பாரதி உருவாக்கியிருந்த சிறப்புப் பகுதி பாரதியின் ஆளுமை, ஆற்றல், கரிசனை, அவருடைய விரிந்த தொடர்பாடற் பரப்பின் அடையாளமாகும். இதற்காகத் தினக்குரலில் பலரையும் எழுத வைத்தார். பலரையும் என்பதன் பொருள், பல்வேறு தரப்பினரையும், பல்வேறு சிந்தனைப்போக்குடையோரையுமாகும். சிவசேகரம் (கோகர்ணன்) யதீந்திரா, அக்கரையூரான், காலகண்டன் (சி.கா. செந்தில்வேல்), பெரிய ஐங்கரன், கா. சிவத்தம்பி எனப் பலரும் எழுதினார்கள்.

பாரதியின் அரசியல் நிலைப்பாடு, தமிழின விடுதலை சார்ந்ததாக இருந்தது. ஆனால், பலரையும்போல, சில தரப்புகளை விலக்கி ஒதுக்காமல் அனைத்துக் கருத்தாளர்களுக்கும் இடமளித்தே வந்திருக்கிறார். அந்த இடம் ஏதோ ஓரத்தில், சம்பிரதாயத்துக்காக வழங்கப்பட்டதல்ல. பாரதியின் விரிந்த சிந்தனை, பரந்த மனம், ஆகியவற்றின் அடிப்படையிலானது. ஜனநாயக அடிப்படையில் அனைவருக்குமான இடத்தை அளிப்பதே அரசியல், ஊடக, சமூக வெளிக்குரியது என்ற தெளிவும் உறுதிப்பாடும் பாரதிக்கு இருந்தது மட்டுமல்ல, அதை நடைமுறையில் பிரயோகிக்கக் கூடிய துணிச்சலும் அவரிடம் காணப்பட்டது. அறிவென்பது சரியானவற்றைத் துணிவாகச் செயலாக்கும்போதுதான், அதற்கான பெறுமதியை அடைகிறது என்ற புரிதல் பாரதிக்கு இருந்தது. இதற்குக் காரணம், அவருடைய தந்தையார் சு. இராஜநாயகனின் அரசியலும் அவர் உருவாக்கிய பாரம்பரியமுமாகும்.

இராஜநாயகன் கணித ஆசிரியராக இருந்தாலும் இடதுசாரியச் சிந்தனையாளராகவும் எழுத்தாளராகவும் இருந்தவர். 1950-களில் ஈழத்திலிருந்து உருவாகிய புதிய இலக்கிய அடையாளமான 'மறுமலர்ச்சி' இதழ்க் குழுவில் இருந்தவர். அதில் சிறுகதைகளை எழுதியவர். பின்னர் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டவர். இராஜநாயகனின் இந்த அம்சங்களும் அரசியல், சமூக, இலக்கிய ஊடாட்ட உணர்வும் பிள்ளைகள் மூவரிலும் தொடர்ந்தன, பிரதிபலித்தன.

மூத்த மகனான பரதன், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஊடகப் பிரிவை உருவாக்கித் திரைப்பட இயக்குநராக, இலக்கிய இயக்கத்தைக் கட்டியெழுப்பும் ஆர்வமுள்ளவராக, ஒளிப்படக் கலைஞராகப் பல தளங்களில் மிளிர்ந்தார் என்றால், பாரதி அச்சு மற்றும் இணைய ஊடகத்தில் தன்னை வெளிப்படுத்தி நிலைப்படுத்தினார். தான் பணியாற்றிய ஊடகங்களின் எழுத்தாளர்கள், கலைஞர்களையெல்லாம் பாரதி மதித்தார். அவர்களுக்குரிய இடத்தை அளித்தார். பெரும்பாலான ஊடகவியலாளர்களைப் போலன்றி, இலக்கிய நிகழ்வுகள், உரையாடல்கள், கலைஞர் சந்திப்புகள், திரைப்பட விழாக்கள், அரசியற் சந்திப்புகள் போன்றவற்றிலும் பாரதியைக் காணலாம். அறிதல், தேடலில் ஆர்வம்



கொண்டிருந்த பாரதி பன்முக வாசிப்பாளராகவும் இருந்ததே இதற்கெல்லாம் அடிப்படை எனலாம். என்பதால்தான், எத்த கைய அரங்கிலும் எந்தத் தயக்கமும் இல்லாமல் எங்கும் அவரால் பங்கேற்க முடிந்தது. தினக்குரலில் அவர் வெளி யிட்ட பல ஆளுமைகளுடனான நேர்காணல்கள் அவருடைய வாசிப்பின் வழியாக உருவான மதிப்பீட்டின் அடிப்படையில் அமைந்தவையே. அதில் இடம்பெற்ற அரசியல், இலக்கியம், பண்பாடு, வரலாறு, சமூகவியல் போன்ற ஏனைய பக்கங்க ளும் பாரதியின் பன்முக அறிதலின் விளைவுகளால் உருவா னவையே.

பாரதியைப்போல, அவருடைய சமகாலத்தில் இன்னொரு பன்முக வாசிப்பாளரும் பல தரப்புத் தொடர்பாளருமாக இருந்தவர் 'தராகி' சிவராம். சிவராமுக்கு அடுத்ததாக அத்த கையதொரு இலக்கியப் பரிச்சயம், மொழிப் பரிச்சியம் உள் ளவரென்றால், அது பாரதியே. இதனால் இலங்கைக்குள் மட் டுமன்றி, புலம்பெயர் நாடுகளிலுள்ளோரும் தமிழ்நாடு, மலே-சியா போன்ற நாடுகளில் உள்ளோரும் பாரதியுடன் உறவைக் கொண்டிருந்தனர்.

பாரதியின் பன்முகத் தன்மையினாலும் பன்முகப் பார்வையி னாலும் சிவசேகரம், செந்தில்வேல், கா. சிவத்தம்பி, யதீந்திரா போன்றோர் தொடர்ந்து எழுதி வந்தனர். அதிலும் மாற்றுக் கருத்தாளராகக் கடுந்தொனியில் எழுதும் சிவசேகரம் (கோ கர்ணன்), ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலா கத் தினக்குரலில் எழுதி வருகிறார் என்றால் அது பாரதி உரு வாக்கிய ஜனநாயக வெளியின் வெளிப்பாடே ஆகும். வீ. தன பாலசிங்கம், வி. தேவராஜா, இ. பாரதி, பூபாலரட்ணம் சீவகன், தேவகௌரி, குணராஜா போன்ற மிகச் சிலரே பன்மைத் தன் மையுடன் தமிழ் ஊடகப் பரப்பில் இயங்கியோர், இயங்கி வரு வோர். இவர்கள் ஒவ்வொருவருக்குமான அரசியற் பார்வைக ளும் நிலைப்பாடுகளும் வெவ்வேறாக இருந்தாலும் அதற்கப் பால், ஊடக அடிப்படை, ஊடக நெறிமுறை, ஊடக தர்மம் போன்றவற்றின் அடிப்படையில் ஜனநாயக விழுமியத்தோடு செயற்படுகின்றவர்கள். தினக்குரலில் 'புதிய பண்பாடு' பக் கங்கள் ஏறக்குறைய 'சரிநிகர்' போன்றதொரு தோற்றத்தை உருவாக்கியது. சரிநிகரின் அடிப்படையும் நோக்கும் வேறாக இருந்தாலும் ஆழமான வாசிப்புக்குரிய வெளியையும் உள் ளீட்டையும் கொண்டிருந்தது. அதற்கு நிகராக இன்னொரு தளத்தில் தினக்குரலின் புதிய பண்பாடு இருந்தது.

பாரதி, தேவராஜ், தனபாலசிங்கம், சீவகன் போல, தமிழ் ஊட கப் பரப்பில் செயற்படும் பெரும்பாலானவர்கள் இருப்ப தில்லை. அவர்கள் தமது அரசியல் விருப்பு வெறுப்புகளை ஊடகங்களில் அப்படியே வெளிப்படுத்துபவர்கள், பிரதிப லிப்பவர்கள் என்பதால்தான் அவர்கள் பணியாற்றுகின்ற ஊட கங்கள் உட்சுருங்கியவையாக - சற்றே பெரிய துண்டுப் பிரசு ரங்களாக மாறியுள்ளன. பாதி உண்மையை மறைத்து விழுங் குகின்றவையாக நீடிக்கின்றன. தாம் விரும்புகின்ற கருத்துக ளுக்கு அலங்காரச் சரிகையைத் தொடுக்கின்றனர். இது அந்த ஊடகங்களைப் பலவீனப்படுத்துவதோடு, அவற்றின் நுகர்வாளராகிய மக்களையும் பலவீனப்படுத்துகிறது. பாரதி போன்றவர்கள் இந்தப் போக்குக்கு மாறாக வெளிவிரிவை நோக்காகவும் விருப்பாகவும் கொண்ட ஊடகவியலாளர்கள்.

ஆட்களுக்குத் தக்கமாதிரித் தன்னை நெகிழ்த்திக் கொள் ளும் வேலையைத் - தந்திரோபாயத்தைப் பாரதி ஒருபோதும் செய்யவில்லை. தன்னுடைய நிலைப்பாடு, தன் குடும்பத்தின் அரசியற் பாரம்பரியம் அல்லது அரசியற் பின்னணி எல்லாவற் றுக்கும் அப்பால் தன்னை ஒரு ஊடகவியலாளராகவே பாரதி நிறுத்தினார். அதானால்தான் அவர் பலரோடு பழகவும் பல ரும் பாரதியோடு நெருங்கித் தோழமை கொள்ளவும் முடிந் தது. அரசியல், ஊடக, இலக்கியப் பரப்புகளில் பாரதியுடனி ருந்த உறவு சம்பிரதாயமான தொழில்முறை உறவு மட்டு மல்ல, அதற்கப்பால், உண்மையினாலும் புரிந்துணர்வினா லும் விரிந்து சிந்திக்கக் கூடிய மன அமைப்பினாலும் உருவா கியது என்பதால்தான் அனைவரிடத்திலும் பாரதிக்கு உயர் வான மதிப்பிருந்தது.

பாரதியும் தனபாலசிங்கமும் இணைந்த கலவையின் வெளிப் பாடாக அவர்களுடைய காலத்தில் வெளிவந்த தினக்குர லைப் பார்த்தால் இந்தக் குறிப்பு எதைச் சுட்ட விளைகிறது என்று புரிந்து கொள்ள முடியும். சமகாலத்தில் வெளியாகிய ஏனைய தமிழ்ப் பத்திரிகைகளை விட, தினக்குரலைத் தனித் துவமாக்கிக் காட்டினர் இருவரும்.

ஊடகம், கலை, இலக்கியம் ஆகிய பரப்புக்கு அப்பால், பார திக்கு அரசியற் தரப்பிலும் பலரோடு ஆழமான நட்பும் உற வும் இருந்திருக்கிறது. அவர் விடுதலைப் புலிகளுக்கு ஆதர வான பின்னணியைக் கொண்டவர் என்று தெரிந்தாலும் அதைக் கடந்து தமிழரசுக் கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ரெலோ, ஈ.பி.டி.பி, சமத்துவக்கட்சி, தமிழர் சமூக ஜனநாயக் கட்சி, மலையக மக்கள் முன்னணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழர் மகா சபை, புதிய ஜனநாயக மாக்ஸிஸக்கட்சி, தமிழ் முற்போக்குக் கூட்டணி, இலங்கை மக்கள் காங்கிரஸ், சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இ.தொ.க, மலையக அரசியல் அரங்கம் எனச் சகல கட்சிகளோடும் நேர்மையான உறவைக் கொண்டிருந் தார். இதனால், இந்தக் கட்சிகளின் தலைவர்களெல்லோரோ டும் பாரதிக்கு நெருக்கமான உறவிருந்தது.

இப்படியெல்லாம் இருந்தாலும் பாரதி எவரோடும் உரத்த குர லில் விவாதங்களை நடத்தியதில்லை. ஆனால், தாராளமாக உரையாடுவார். பல விடயங்களைப் பற்றியும் பாரதிடம் பேச லாம். சக ஊடகவியலாளர்களுக்கு மட்டுமின்றி, இளைய தலைமுறையினருக்கு பாரதி பல விடயங்களைப் பற்றியும் பேசி அறியச் செய்யக் கூடியவராக இருந்தார். தன்னை முன் னிலைப்படுத்துவதோ, மேலாதிக்க நிலையில் வைத்துக் கொள்வதோ பாரதியின் இயல்பல்ல. அதனால் யாரோடும் முரண்பட்டதுமில்லை. என்றாலும் தன்னுடைய நிலைப்பாட் டில் அவர் உறுதியாகவே நின்றார். இதற்கு இரண்டு உதார ணங்களைச் சுட்ட முடியும். ஒன்று, ஈழமுரசு பத்திரிகையிலி ருந்து விலகிச் சென்று முரசொலியில் அவர் சேர்ந்தது. அதைப்போல வீரகேசரியிலிருந்து விலகிச் சென்று தினக்குர லில் இணைந்தது. இவையெல்லாம் நிர்வாக - அதிகார முரண்களுக்கு எதிராக பாரதி நின்றதைத் தெளிவாகச் சொல்

லும். அப்படித்தான் தனக்குப் பிடிக்காத, உடன்பாடற்ற விடயங்களில் பாரதி சமரசம் செய்வதில்லை. தன்னுடைய இயல்பின்படி அங்கிருந்து வெளியேறி விடுவார்.

எப்போதும் தன்னைப் பிரகடனம் செய்வதோ, தன்னை முன்னிலைப்படுத்துவதோ பாரதியின் குணமல்ல என்பதால், பாரதிக்கு ஏராளம் நண்பர்கள். மிகப் பெரிய நட்பு வட்டம் பாரதியினுடையது. தன்னுடைய ஆழமான மௌனத்தினால் எல்லோரையும் வசீகரித்திருந்தார். எந்தச் சூழலிலும் சற்றுத் தள்ளி நிற்பவராக, உடனடியாக அவசரப்பட்டு எதையும் சொல்லாமல், சற்று விலகி நின்று அவதானித்துக் கொண்டிருப்பவராகவே பாரதியைக் காண முடியும். அங்கே தன்னுடைய நிதானத்தை மேலும் பாரதி வலுப்படுத்திக் கொள்வதுண்டு என எண்ணுகிறேன். அவருடைய சுபாவமே அப்படியானதுதான். பாரதியின் குரல் கூட அவரைப்போல மிக மென்மையானது. பேசும் பாங்கும் அப்படியே. நிதானமாகக் கூர்ந்து கவனித்தாற்தான் பாரதி சொல்வதைக் கேட்க முடியும். வெளியே அதிகமாகச் சத்தமிட்டுப் பேசுவதில்லை. மிகப் பவ்வியமாக, தணிந்த நிலையில்தான் பேசுவார். பெரும்பாலும் மற்றவர்கள் சொல்வதைக் கூர்ந்து கவனிப்பதே பாரதியின் இயல்பாகும். பாரதியினுடைய அபிப்பிராயம் என்று அபூர்வமாகத்தான் அவருடைய வாயிலிருந்து வரும். மற்றும்படி எல்லோரையும் எல்லாவற்றையும் கூர்ந்து அவதானித்துத் தனக்குள் ஒரு சித்திரத்தைப் உருவாக்கிக் கொள்வது பாரதியின் இயல்பாகும்.

இந்தப் பண்புகளிற் பலவும் பாரதியின் தந்தை சு. இராஜநாயகனிடம் இருந்த குணமாகும். யாழ்ப்பாணத்தில் அறிவுச் சூழலைக் கொண்டிருந்த குடும்பங்களில் ஒன்று இராஜநாயகனுடையது. இராஜநாயகனின் சகோதரி, சாவித்திரி அத்துவிதானந்தனும் எழுத்தாளர், நல்ல வாசிப்பாளர். பாரதி, பரதன், சகோதரி சுரபி எல்லோரும் வாசிப்பைக் கொண்டவர்கள். மட்டுமல்ல, திரைப்படம், ஓவியம் போன்ற பிற கலைகளிலும் ஈடுபாடும் நல்ல இரசனையும் கொண்டவர்கள்.

பாரதியின் ஊடகப் பங்களிப்பை மதிப்பிடுவதானால், அவர் ஒரு தூக்கலோ, துருத்தலோ அற்ற தமிழின விடுதலை விரும்பியாக இருந்திருக்கிறார் எனலாம். அதேவேளை தன்னுடைய அரசியலுக்கு அப்பால் உள்ளோருக்கும் ஜனநாயக அடிப்படையில் தாராளமாக இடமளித்திருக்கிறார். இதனால் அவர் ஒற்றைப் படைத்தன்மையான உறவாளராக இல்லாமல் பல தரப்புடனான உறவாடலையும் செய்யக் கூடியவராக இருந்திருக்கிறார். ஜனநாயக விழுமியத்தைப் பேணியதோடு, ஊடகத்தின் பன்மைத்துவமான அரசியல், சமூகம், பொருளாதாரம், இலக்கியம், கலை, தத்துவம், அறிவியல் என அனைத்தையும் சமனிலையோடு நோக்கி, அவற்றைக் கையாண்டிருக்கிறார். ஊடகப் பரிமாணத்தை உருவாக்கியிருக்கிறார். தமிழ் ஊடகப் பரப்பில் பாரதியின் செயற்பாட்டு அடையாளம் வலுவானது. முன்னுதாரணமானது. ஊடகத்துறையில் பயில்வோருக்கும் பணியாற்றுவோருக்கும் அது தக்கதோர் அடிப்படையாகும்.

ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல், ஊடகவியலாளர்கள் கொல்லப்படுதல் போன்றவற்றுக்கு எதிராக நின்று போராடியவர்களில் முக்கியமானவர் பாரதி. தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் முதன்மைச் செயற்பாட்டாளர்களில் ஒருவராக 20 ஆண்டுகளுக்கும் மேலாகச் செயற்பட்டிருக்கிறார். அதைப் போலவே இளைய தலைமுறையை ஊடகத்துறையில் வளர்த்தெடுக்கும் செயற்பாடுகளிலும் பாரதியின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. ஊடகக் கற்கைப் பிரிவுகளில் யாழ்ப்பாணம், கொழும்பு, வன்னி எனப் பல இடங்களிலும் பல நூறுபேரைப் பயிற்றுவித்திருக்கிறார்.

2020-க்குப் பிறகு பாரதியின் இயங்குதளம் கொழும்பை விட்டு யாழ்ப்பாணத்துக்கு மாறியது. யாழ்ப்பாணத்திற்கு வந்து ஈழநாடு, பொருண்மியம் என்ற பத்திரிகைகளில் எல்லாம் வேலை செய்து, களைத்து, இறுதியில் வீரகேசரியின் பிராந்தியப் பணிமனையில் பணியாற்றியிருக்கிறார். வீரகேசரியை விட்டு நீங்கியவர் வீரகேசரியில் மீள இணைந்ததைப் போலவே, 1960-களிலிருந்து 1990-கள் வரையும் அவர் பிறந்து வளர்ந்த திருநெல்வேலிச் சூழலுக்கு மீண்டும் வந்திருந்தார். அவருடைய இறுதி நாட்கள் திருநெல்வேலியிலேயே கழிந்தன. மரணமும் அங்கேயே நடந்தது. அதுவும் அவர் இருந்த வீட்டிலிருந்து ஒரு 300 மீற்றர் சுட்டு வட்டத்துக்குள். ஆனால், பிறந்த வளர்ந்த வீட்டில் அல்ல. அந்த வீடு வேறு கைகளுக்கு மாறியதால் அவர் வாடகை வீட்டிலேயே வாழ நேர்ந்திருக்கிறது.

ஈழப்போராட்டத்தோடு எழுச்சியடைந்த ஒரு ஊடகவியலாளராகப் பாரதியைப் பார்க்கலாம். அது உருவாக்கிய நெருக்கடிகள், வீழ்ச்சிகள், துயரங்கள் பாரதியையும் பாதித்தது. பாரதியை மட்டுமல்ல, அவருடைய குடும்பத்தையும்தான். அவர்கள் இழந்தது அதிகம். பெற்றது மிகக் குறைவு. அதற்குள்ளும் பாரதியும் பாரதியின் குடும்பத்தினரும் இந்தச் சமூகத்துக்கு அளித்தது ஏராளம். அதுவே மேன்மைக்குரியது. அவர்கள் அனைவரிடத்திலும் கூடுதலாக இருந்தது அமைதியும் மௌனமும்தான். அந்த மௌனத்தின் மூலமாக ஒவ்வொருவரிடத்திலும் கூட்டாகச் சமூக வெளியிலும் அவர்கள் உருவாக்கிய நினைவுகளும் சொற்களும் பல கோடி. அது ஒரு சிறப்பான அடையாளமே.



karunagaran@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com*** ***Fax: +1-416-849-0594*** ***Tel: +1-416-857-6406***



### பன்முக ஆளுமை கொண்ட
# யோகா பாலச்சந்திரன்

– வே. விவேகானந்தன்

இலங்கையின் வடக்கே யாழ்ப்பாணக் குடாநாட்டில், முத்தமிழும் செழித்தோங்கிய வடமராட்சியில், கரவெட்டியைச் சேர்ந்த முருகேசு வல்லிபுரம் செல்லம்மா இணையருக்கு மூத்தமகளாக, 1938-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஏழாம் திகதி யோகாம்பிகை பிறந்தார்.

இவரது தந்தையார் காவல்துறை அதிகாரியாகப் பணியாற்றியதனால், அவ்வப்போது இடமாற்றம் பெற்று, இலங்கையின் பல பாகங்களிலும், குடும்பத்தோடு வாழும் நிலை காணப்பட்டது. அவ்வாறு இவர் மாத்தளையில் பணியாற்றிக் கொண்டிருந்த வேளை, யோகா தனது ஆரம்பக் கல்வியை, மாத்தளை பாக்கிய வித்தியாசாலையில் (தற்போதைய பாக்கியம் தேசிய பாடசாலை) கற்றார். பின்னர் நீர்கொழும்பு நியூஸ்டெட் மெதடிஸ் கல்லூரி, கொழும்பு சென்ற் மத்தியூஸ் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்று இறுதியாக, யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் தொடர்ந்து கற்று, லண்டன் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்தார்.

இவர் இளமைக் காலத்தில் இலங்கையின் பல்வேறு பாகங்களில் வாழ்ந்தும், பல்வேறு பாடசாலைகளில் படித்தும் வந்ததனால் பல்லின மக்களுடனும் பழகும் வாய்ப்பினைப் பெற்றிருந்தார். அத்துடன் ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளிலும் தன்னை வளப்படுத்திக் கொண்டார். தாய் தந்தையரின் ஊக்கமும், அவர்களது நண்பர்கள் கொடுத்த வாய்ப்புகளும், எழுத்துத் துறையில் இவர் ஆர்வம் கொள்ளக் காரணமாய் அமைந்தன. இளம் வயதிலேயே வாசிப்பில் ஆர்வம் கொண்ட இவர், தமிழகத்திலிருந்து வெளிவரும் ஆனந்தவிகடன், கல்கி, குமுதம், போன்ற சஞ்சிகைகளையும், மற்றும் பத்திரிகைகளையும், பவளக் கொடி, குசேலர் சரிதம், போன்ற நூல்களையும் வாசிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தார். மேலும் பத்திரிகைகளில் வெளிவரும் பெண்கள் தொடர்பான செய்திகளை வெட்டி ஒட்டி புத்தகம் போல் கட்டி, 'வனிதா மண்டலம்' எனப் பெயரிட்டு வைத்திருந்தார். இவர் எழுதிய கட்டுரைகளை இவரது தந்தையாரின் நண்பரும், ஈழநாடு பத்திரிகையின் ஆசிரியருமான கே.பி. ஹரன் பத்திரிகையில் பிரசுரித்து ஊக்கப்படுத்தினார். இவர் எழுதிய முதலாவது சிறுகதையான 'கண்கள் உறங்காவோ' 1962-ம் ஆண்டளவில் வீரகேசரிப் பத்திரிகையில் வெளிவந்தது. அதே வருடம் மே மாதம் வீரகேசரியில் பத்திரிகைப் பணியிலும் சேர்ந்து கொண்டார். தொடர்ந்தும் சிறுகதை, கவிதை என எழுதிக் கொண்டே இருந்தார். பத்திரிகை ஆசிரியர் எஸ்.டி. சிவநாயகம், கே.வி.எஸ். வாஸ், மற்றும் வீரகேசரி வார இதழ் ஆசிரியர், எஸ். லோகநாதன் ஆகியோரிடம் பத்திரிகைத் துறையின் நுட்பங்களைக் கற்றுக் கொண்ட யோகா, 1964-ம் ஆண்டு எஸ்.டி. சிவநாயகம் அவர்களை ஆசிரியராகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட தினபதி, சிந்தாமணி பத்திரிகைகளில் உதவி ஆசிரியராக இணைந்து கொண்டார். இங்கு பணியாற்றும்போது செய்திகள் சேகரித்தல், கட்டுரைகளை எழுதுதல், மகளிர் பக்கம் தயாரித்தல், போன்ற பணிகளை ஆர்வத்துடன் மேற்கொண்டார்.

1966-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29-ம் திகதி டைம்ஸ் பத்திரிகை நிறுவனத்தில் பணி புரிந்தவரும், கலை, இலக்கியம், நாடகம், சினிமாத் துறைகளில் ஆர்வம் கொண்டவரும், கொழும்பு கலைச் சங்கச் செயலாளருமான கே. பாலச்சந்திரன் அவர்களைக் காதல் திருமணம் செய்து கொண்டார். 1969-ம் ஆண்டு பத்திரிகைத் துறையிலிருந்து விலகி, இலங்கை குடும்பத்திட்டச் சங்கத்தில் உதவித் தகவல் உத்தியோகத்தராகப் பதவி ஏற்றார். அவரது அயராத உழைப்பினால் பிரதிப் பணிப்பாளராகவும் பதவி உயர்வு பெற்றார்.

ஏறக்குறைய முப்பது ஆண்டுகள் குடும்பத்திட்டச் சங்கத்தில் பணியாற்றிய அதேவேளை, கலை இலக்கியப் பயணத்தையும் தொடர்ந்து மேற்கொண்டார். குடும்பத் திட்டத் சங்கத்தில் பணியாற்றியபோது பெற்ற அனுபவங்களைக் கதைகளாகவும், கட்டுரைகளாகவும் எழுத்தில் வடித்தார். பணி நிமித்தம் இலங்கையின் பலபாகங்களுக்கும் பயணம் செய்து பெண்களின் நல மேம்பாட்டுக்காகக் கருத்தரங்குகளையும், களச் செயற்றிட்டங்களையும் மேற்கொண்டார். இப்பணிகளை மேலும் சிறப்பாகச் செய்வதற்காக, குடும்பத் திட்டச் சங்கத்தின் புலமைப் பரிசில் பெற்றுப் பிற நாடுகளுக்கும் சென்றார்.

1975-ம் ஆண்டு கென்யாவில், ஐ.நா. சர்வதேச மகாநாட்டில் கலந்து கொண்டார். அமெரிக்காவிலே ஹவாய் பல்கலைக்கழகத்தில் வெகுசன தொடர்புத் துறையில், குறுகிய காலப் பயிற்சியினையும், சீனாவில் தைப்பே நகரில் கள ஆய்வினையும் மேற்கொண்டுள்ளார். 1977-ம் ஆண்டு நேபாளத்திற்குப் பயணம் செய்துள்ளார். இந்தியாவிலே அஹமதாபாத்தில் முகாமைத்துவக் கல்வி நிலையத்திலே 'மக்கட்தொகையும் குடும்பத்திட்ட முகாமைத்துவமும்', பற்றிய பயிற்சியையும் பெற்றார். சோவியத் நாட்டில், மொஸ்கோவில் நடந்த உலக இளைஞர் மாணவர் விழாவிலும் கலந்து கொண்டார். இத்தகைய வெளிநாட்டுப் பயணங்கள் மூலமும், உள்நாட்டில் பல இடங்களுக்கும் சென்று, மக்களுடன் கலந்துரையாடிப் பெற்ற அனுபவங்களை ஆதாரமாகக் கொண்டும், வீரகேசரி, மித்திரன் வாரமலர் பத்திரிகைகளில் 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்ற கேள்வி பதில் தொடரை எழுதி வந்தார். இத்தொடர்

வாசகர்களின் பெரும் வரவேற்பைப் பெற்றது. மேலும் 'சபர்மதிக் கரையில்', 'நைரோபி தொடங்கி நாச்சியார்தீவு வரை' எனப் பயணக் கட்டுரைகளையும், பல பொதுக் கட்டுரைகளையும், குடும்ப ஆலோசனைக் கட்டுரைகளையும், பத்திரிகைகளில் எழுதித் தனது அறிவையும் அனுபவத்தையும் வாசகர்களுடன் பகிர்ந்து கொண்டார்.

சிந்தாமணிப் பத்திரிகையில், 'செண்பகராமன் என்ற ஒரு தமிழன்' என்னும் தலைப்பில் இவர் எழுதிய தொடர் கட்டுரை 1970-ம் ஆண்டு 'செம்பகராமன்' என்ற கட்டுரை நூலாக வெளிவந்தது. இந்நூலுக்கு மட்டக்களப்பு முன்னாள் நகரபிதாவும், பாராளுமன்ற உறுப்பினரும், பின்னாளில் அமைச்சருமான செ. இராசதுரை அவர்கள் பாராட்டுரை வழங்கியிருந்தார். 1983-ம் ஆண்டு 'யுகமலர்' என்னும் சிறுகதைத் தொகுதியும் இவரால் வெளியிடப்பட்டது. கொழும்புக் கோட்டை தப்ரபேன் ஹோட்டலில், அப்போதைய தினகரன் பத்திரிகை ஆசிரியரான ஆர். சிவகுருநாதன் தலைமையில் நடைபெற்ற வெளியீட்டு விழாவில், வீரகேசரி பிரதம ஆசிரியர் கே. சிவப்பிரகாசம் உதவி ஆசிரியர்கள் எஸ்.எம் கார்மேகம், அன்னலட்சுமி இராஜதுரை ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பன்னிரண்டு சிறுகதைகளைக் கொண்ட இச்சிறுகதைத் தொகுப்புக்கு, ஈழத்தின் மூத்த முற்போக்கு எழுத்தாளரான செ. கணேசலிங்கன் சிறப்புரை எழுதியுள்ளார். இந்நூல் 1984-ஆம் ஆண்டு தமிழகத்தில் அறிமுகம் செய்யப்பட்டபோது சாண்டில்யன் மற்றும் அமுதசுரபி விக்ரமன் ஆகியோரது பாராட்டையும் பெற்றது. 1998-ம் ஆண்டு இலங்கை கலைக்கழகம் வெளியிட்ட 'இலங்கைத் தமிழ்ச் சிறுகதைகள்' என்னும் நூலில் யோகா எழுதிய 'கனவுக் குழந்தை' என்னும் சிறுகதை பிரசுரமாகி இருந்தது. செ. யோகநாதன் தொகுத்திருந்த 'வெள்ளிப்பாதரசம்' என்னும் தொகுப்பிலும் யோகா எழுதிய ஒரு சிறுகதை இடம் பெற்றுள்ளது. இவர் எழுதிய ஆங்கில நாடகங்களான 'Never mind Silva', 'bye bye Raju', 'Broken Promise' என்பன தப்ரபேன் ஹோட்டலில் மேடையேற்றப்பட்டன. இவை மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றவையாகும்.

இலங்கை வானொலியிலும் யோகா அவர்களின் பங்களிப்பு நாற்பது வருடங்களுக்கு மேற்பட்டதாகும். பொன்மணி குலசிங்கம் அவர்கள் இலங்கை வானொலியில் மகளிர் நிகழ்ச்சியை நடத்தியபோது, அதில் பங்குபற்றி சிறப்பித்தார். அத்துடன் கிராமிய நிகழ்ச்சி மற்றும் 'பூங்கோதை', 'வனிதா மண்டலம்', 'பூவையர் பூங்கா' போன்ற நிகழ்ச்சிகளின் தயாரிப்பாளராகவும், கல்வி தொடர்பாக 'கல்வி அரங்கம்' என்னும் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் செயற்பட்டுள்ளார். மக்களை அறிவியல் ரீதியாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், இலங்கை வானொலி ஆரம்பித்த 'நவசக்தி' என்னும் நிகழ்ச்சியைத் தயாரித்து வழங்கிய பெருமை இவரைச் சாரும். 'முன்னேற்றப் பாதையிலே' என்னும் தலைப்பில் வானொலிக் கலந்துரையாடலிலும் பங்குபற்றி சிறப்பித்துள்ளார். இலங்கை ரூபவாஹினியில் 'கலைஞர் அறிமுகம், நலமாக வாழ்வோம், சுகநலக் கல்வி' மற்றும் சமூக மேம்பாடு தொடர்பான நிகழ்ச்சிகளையும் நடத்தியுள்ளார்.

இலங்கை திரைப்படத் துறையில் யோகா அவர்களின் பங்களிப்பையும் இங்கு குறிப்பிட்டேயாகவேண்டும். 1970-ம் ஆண்டின் நடுப்பகுதியில், காமினி பொன்சேகாவின் 'சருங்கலே' (பட்டம்) என்ற சிங்கள-தமிழ்ப் படத்தில் தமிழ் வசனம், பாடல்கள் என்பவற்றை யோகா எழுதியிருந்தார். அதன் ஒரு காட்சியை யாழ்ப்பாணத்தில் எடுக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டபோது, தனது சொந்தக் கிராமமான கரவெட்டியில் படப்பிடிப்பை எடுக்கப் பேருதவி புரிந்தார். அக்காட்சியில் இடம்பெற்ற யாழ்ப்பாணத்துப் பேச்சுவழக்கும், கிடுகு வேலிக் கலாசாரமும், திரைப்பட இரசிகர்களின் அமோக வரவேற்பைப் பெற்றன. இந்தத் திரைப்படம் சிறந்தவொரு படமாகக் கணிக்கப்பட்டு, அப்போதைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா அவர்களால் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. மேலும் 'ஹிதக பிபுனு மல்' (நெஞ்சில் பூத்த மலர்) என்ற சிங்களத் திரைப்படத்துக்கும், ஒரு பாடலை எழுதியுள்ளார். இப்பாடல் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் படத்தில் பாடப்பட்டது. தமிழ் சிங்கள மொழிகளில் சுஜாத்தா அத்தநாயக்க பாடியிருந்தார்.

யோகா அவர்களின் கலை இலக்கிய முயற்சிகளைப் பாராட்டி 1987-ம் ஆண்டு பிரதேச அபிவிருத்தி அமைச்சராக இருந்த செ. இராசதுரை அவர்கள் 'எழுத்துச் செம்மல்' என்னும் பட்டத்தை வழங்கி கௌரவித்தார். 1992-ம் ஆண்டு இந்துக் கலாசார இராஜாங்க அமைச்சர் பி.பி. தேவராஜ் 'தமிழ்மணி' என்னும் பட்டத்தை வழங்கி சிறப்பித்தார்.

யோகா அவர்களின் கலை இலக்கிய முயற்சிகளுக்கு, அவரது கணவர் கே. பாலச்சந்திரன் அவர்கள் பக்க பலமாகச் செயற்பட்டது போலவே, பாலச்சந்திரனின் கலை இலக்கிய முயற்சிகளுக்கும் யோகா பக்கத்துணையாக இருந்து பெரும் பங்காற்றினார். யோகாம்பிகை எனப் பெயர் கொண்ட இவர் 'யோகா', 'யோகா அக்கா' என்ற பெயர்களில் கலை இலக்கிய உலகில் வலம் வந்தார். அதுபோலவே அவரது கணவர் பாலச்சந்திரன் 'டைம்ஸ் பாலா' என்னும் பெயரில் கலை இலக்கிய உலகில் பெயரும் புகழும் பெற்றிருந்தார். அவர் பற்றிய விபரமான கட்டுரை ஒன்று, தெளிவத்தை ஜோசப் அவர்களால் எழுதப்பட்டு, 2012-ஆண்டு நவம்பர் மாத தாய் வீடு பத்திரிகையில் 114-ம் பக்கம் பிரசுரிக்கப் பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

கலை இலக்கிய உலகின் ஆதர்சன தம்பதிகளாக வலம் வந்த வேளையில் 2000-ம் ஆண்டு கே. பாலச்சந்திரன் அவர்கள் இலங்கையில் அமரத்துவம் அடைந்தார். அதனையடுத்து யோகா பாலச்சந்திரன் அவர்கள், கனடாவுக்குப் புலம் பெயர்ந்து, தனது மகனுடன் சிலகாலம் மொன்றியல் நகரிலும், பின்னர் கல்காரி (Galgary) நகரிலும் வாழ்ந்து வந்தார். தமிழர்கள் குறைவாக வாழும் அந்நகரத்தில் வாழ்ந்தமையால் கலை இலக்கிய வாதிகளுடன் நெருங்கிய தொடர்பைப் பேண முடியவில்லை. அவரது கலை இலக்கிய முயற்சிகளும் சோர்வடைந்தன.

எழுத்தாளர், பேச்சாளர், பத்திரிகை ஆசிரியர், ஒலிபரப்பாளர், பெண்ணிய ஆய்வாளர் சமூக செயற்பாட்டாளர் எனப் பன்முக ஆளுமை கொண்ட யோகா பாலச்சந்திரன் அவர்கள் 2023-ம் ஆண்டு மே மாதம் 18-ம் திகதி, கல்காரி நகரில் இவ்வுலக வாழ்வை விட்டு நீத்தார். அவர் எழுதிய பல கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், நாடகங்கள் போன்றவை, சேகரிக்கப்பட்டுப் பாதுகாக்கப்படாமையால், அவை நூலுருவில் வெளிவரவில்லை. அவற்றைத் தேடிப் பெற்று வெளிக்கொணர வேண்டியது கலை இலக்கிய ஆர்வலர்களின் கடமையாகும்.



vivekananthan.v@thaiveedu.com

# ஆனந்தி அக்கா எனும் ஆளுமை

– கோபி இரத்தினம்



பிரித்தானியாவிலிருந்து சிற்றலை வாயிலாக ஒலிபரப்பாகி வந்த பிபிசி தமிழோசை வானொலியில் பணியாற்றி ஓய்வு பெற்ற, திருமதி ஆனந்தேஸ்வரி சூரியப்பிரகாசம் அவர்கள் பெப்பிரவரி 21-ஆம் நாள், இலண்டனிலுள்ள மருத்துவமனை யொன்றில் காலமானார். தமிழ் மக்களால், ‘ஆனந்தி அக்கா’ என அன்பாக அழைக்கப்பட்ட அவரது மறைவுக்கு நாடுகள் கடந்த நிலையில் தமிழ்மக்கள் இரங்கலையும் இறுதிவணக் கத்தினையும் செலுத்தி வருகிறார்கள்.

## யார் இந்த ஆனந்தி அக்கா?

இக்கேள்விக்குப் பலரும் வேறுபட்ட பதில்களை வைத்தி ருப்பர். இலண்டனிலிருந்து இயங்கும் ‘சர்வதேச தமிழ்ச் செய் தியாளர் ஒன்றியம்’ என்ற அமைப்பில் கடந்த இருபது ஆண் டுகளாக அவருடன் இணைந்து பணியாற்றியவன் என்ற வகை யில் எனது புரிதலை இங்கு பகிர்ந்துகொள்கிறேன்.

எண்பதுகளின் தொடக்கத்தில் தாயகத்தில் விடுதலைப்போ ராட்டம் வீரியம்பெற்ற காலத்தில், சிறிலங்கா அரசபடைகளின் பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்துச் சென்றன. இவற்றுக்கு மத்தியில் செய்தித்தணிக்கை நடைமுறைப்படுத் தப்பட்டது. அரசாங்கம் வெளியிடும் செய்திகளே மக்களைச் சென்றடையும் வகையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தா பனமும், ரூபவாகினி கூட்டுத்தாபனமும் பார்த்துக்கொண்டன. ‘லங்கா புவத்’ (இலங்கைச் செய்தி) என்ற அரசாங்கத்தின் செய்திச்சேவை தணிக்கையுடன் நின்றுவிடாது புனையப்பட்ட செய்திகளை வெளியிட்டு மக்களைக் குழப்பியும் வந்தது. இக்கால கட்டத்தில் தமிழ் மக்கள் செய்திகளை அறிந்து கொள்ள இலண்டனிலிருந்து சிற்றலையில் ஒலிபரப்பாகிய பிபிசி தமிழோசை, பிலிப்பைன்சிலிருந்து ஒலிபரப்பாகிய வெரித்தாஸ் தமிழ் ஒலிபரப்பு, இந்திய ஆகாசவாணியின் மாநிலச் செய்திகள் ஆகியவற்றையே நம்பியிருந்தனர். யாழ். குடாநாட்டின் ஒரு பகுதியில் நடந்த சம்பவம் பற்றி இன்னொரு பகுதியில் உள்ளவர்கள் அறிந்துகொள்வதற்குக்கூட வெளி நாடுகளிலிருந்து ஒலிபரப்பாகும் இவ்வானொலிகளில் மக்கள் தங்கியிருந்த காலமது.

மேற்குறித்த வெளிநாட்டு வானொலிகளில் பிபிசி தமிழோசையே தமிழ் மக்களை அதிகம் கவர்ந்திருந்தது. பழமைவாய்ந்த பிபிசி என்ற பாரிய ஊடகநிறுவனத்திலிருந்து ஒலித்தது என்பது ஒரு புறமிருக்க, வாரத்தில் குறித்த சில நாள்கள் மட்டும் அரை மணி நேரமே ஒலிபரப்பாகியிருந்தபோதிலும், அதனைத் தொகுத்து வழங்கிய நேர்த்தியும், அதில் தெளிவான உச்ச ரிப்பில் ஒலித்த அழகான தமிழும் மக்களை எதிர்பார்த்துக் காத்திருக்க வைத்தது. அந்நிகழ்ச்சிகளில் ஆனந்தி அக்கா வாக குரல்வழியாக மக்களுக்கு அறிமுகமானவர்தான் திருமதி. ஆனந்தி சூரியப்பிரகாசம். குரல் வழியாக மாத்திரம் அறிந் தவரை தங்கள் குடும்பத்தில் ஒருவராக தமிழ் மக்கள் கருதினர்.

பிரித்தானிய வெளியுறவு அமைச்சின், பொதுநலவாய நாடுக ளுக்கான பணியகத்தின் நிதியில் இயங்கும் பிபிசியின் உலக சேவையின் ஓர் அங்கமாகவே தமிழோசை வானொலி இயங்கி வருகிறது. அந்த வகையில் பிரித்தானிய அரசின் நலனை முன்னிறுத்தியே அது செயற்படும் என்பது யதார்த்தம். இருப் பினும், தமக்குக் கிடைத்த வெளியினை நன்கு பயன்படுத்தித் தமிழ் மொழியின் மேம்பாட்டுக்கும் தமிழ் மக்களின் நலன் நோக்கிலும் நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கினார் தமிழோ சையின் அப்போதைய பணிப்பாளர் சங்கர் அண்ணா என அறியப்பட்ட, காலஞ்சென்ற சங்கரமூர்த்தி. இப்பணியில் தோள்கொடுத்து உதவியவர் ஆனந்தி அக்கா. தன்னுடை தமிழறிவையும் உச்சரிப்பையும் மேம்படுத்தித் தன்னை ஒரு புலமைவாய்ந்த ஒலிபரப்பாளராக மாற்றுவதில் சங்கர் அண் ணாவின் பங்களிப்பிருந்ததாக பலதடவைகள் ஆனந்தி அக்கா குறிப்பிட்டிருக்கிறார்.

தொண்ணூறுகளில் போக்குவரத்துத் துண்டிக்கப்பட்ட நிலை யில் யாழ். குடாநாடு தனிமைப்படுத்தப்பட்டிருந்தது. சிறிலங்கா அரசாங்கத்தின் பொருண்மியத் தடைகளாலும், படையினரின் எறிகணைத் தாக்குதல்கள், விமானத் தாக்குதல்கள் என மக்கள் பாரிய நெருக்கடிகளைச் சந்தித்தனர். அங்குள்ள நிலைமையை வெளிப்படுத்துவதில் சர்வதேச ஊடகங்கள் அக்கறை காட்டாத நிலையில், ஆபத்தான கிளாலிப் பாதை வழியாக யாழ்ப்பாணம் சென்று அங்குள்ள நிலையை வெளி யுலகின் கவனத்துக்குக் கொண்டுவருவதில் ஆனந்தி அக்கா வின் பங்கு முதன்மையானது. சமகாலத்தில் தேசியத்தலைவர் பிரபாகரன் அவர்களை இரண்டு தடவைகள் செவ்வி கண்டு விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டினை வெளியுலகுக்குத் தெரியப்படுத்தினார். தேசியத்தலைவரைச் செவ்வி கண்டமை தனக்கு மகிழ்வையும் நிறைவையும் ஏற்படுத்திய, தன் வாழ் நாளில் மறக்க முடியாத சம்பவம் என அவர் பல தடவை குறிப்பிட்டிருக்கிறார்.

ஆனந்தி அக்கா தமிழை அறுத்துறுத்து அதன் ஒலிவடிவங்க ளுக்கு ஏற்ப உச்சரிப்பார். தமிழில் கலந்திருக்கும் வடமொழிச்

சொற்களை உச்சரிக்கும்போது வடமொழி ஒலிவடிவத்தில் உச்சரிப்பார். அவரது உச்சரிப்பிலிருந்து இச்சொற்கள் வட மொழிச்சொற்கள்தாம் என இலகுவில் உணர்ந்துகொள்ள முடியும்.

தமிழோசையில் அவர் தயாரித்து வழங்கிய, 'பாலியல் விவேகப் பக்குவம் கொள்க' என்ற தொடர் தமிழ்நாட்டு மக்களிடையே பிரபலமாகவிருந்தது. பாலியல் தொடர்பான தவறான கற்பி தங்களைக் களைந்து இவ்விடயத்தில் போதிய அறிவினை ஏற்படுத்தும் விதத்தில் வாசகர்களின் கேள்விகளுக்கு பதில ளிப்பதாக முப்பத்திரண்டு வாரங்கள் இந்நிகழ்ச்சியை நடத்தி யிருந்தார். இதுபோன்று தமிழ்நாட்டுக்குச் சென்று பாலியல் தொழிலாளர்களைச் செவ்வி கண்டு அவர்களது வாழ்க்கை பற்றி ஒரு நிகழ்ச்சித் தொடரைத் தயாரித்து வழங்கினார்.

ஒரு சிறுமியாக இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகிய சிறு வர் மலர் நிகழ்சிகளில் பங்குபற்றியதுடன் ஆரம்பித்த அவரது ஒலிபரப்புப் பயணம், இளவயதில் வானொலி நாடகங்களில் நடிகையாகவும் பின்னர் இலங்கை வானொலியில் பகுதிநேர அறிவிப்பாளராகவும் தொடர்ந்தது. எழுபதுகளில் புலம்பெ யர்ந்து இலண்டனுக்கு வந்த அவர், பிபிசி தமிழோசையில் பகுதிநேர அறிவிப்பாளராக இணைந்து கொண்டார். 2005-இல் மூத்த நிகழ்ச்சித் தயாரிப்பாளராக இளைப்பாறும்வரை அங்கு ஏறத்தாழ முப்பதாண்டுகள் பணியாற்றியிருக்கிறார்.

இலண்டனில் வாழ்ந்தபோதிலும் பிபிசி பணியகத்துக்கும் சரி வேறெங்கு சென்றாலும் சரி, சேலை அணிந்து பொட்டு வைத்தபடி ஒரு சாதாரணத் தமிழ்ப் பெண்ணின் அடையாளத் துடன் அவர் தோற்றமளித்திருந்தாலும், அவற்றை வைத்து இலகுவில் கணித்துவிட முடியாத ஒரு தனித்துவமான பெண்ணா கவே வாழ்ந்தார்.

பொதுவில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டுடன் ஆனந்தி அக்கா இருந்தாலும், தமிழ்த் தேசியத்திற்கு எதிரான செயற்பாடுகளை மேற்கொள்பவர்களுடனும் அவர் தொடர்புகளைப் பேணினார். அவர் விடுதலைப்புலிகளின் தீவிர ஆதரவாளரவாகவே மக்க ளால் பார்க்கப்பட்டார். தேசியத்தலைவர் பிரபாகரனை வாஞ் சையாகத் தம்பி என்று அழைத்து, அவர் ஓர் அதிசயப்பிறவி என்று கூறியிருக்கிறார். அதே சமயத்தில் டக்ளஸ் தேவானந் தாவுடனும், சித்தார்த்தனுடனும் அவர் நல்லுறவைப் பேணினார்.

பிரித்தானிய அரசியல் என்று வந்தால் அவர் வலதுசாரியான கொன்சவேர்ட்வ் கட்சிக்கு வாக்களிப்பதாகக் கூறுவார். ஆனால் தீவிரமான இடதுசாரிக் கருத்துடையவர்களுடனும் நட்புறவில் இருப்பார். அவரது நட்பு வட்டத்தில் தமிழ்நாட்டில் திராவிட இயக்கத்தைச் சேர்ந்த அருள்மொழி, பொதுவு டைமைக் கட்சியைச் சேர்ந்த மகேந்திரன் போன்றவர்களும் இருப்பார்கள்; இந்துத்துவவாதிகளும் இருப்பார்கள். நாம்த மிழர் கட்சியின் தலைம ஒருங்கிணைப்பாளர் சீமானுடனும் தொடர்புகளைப் பேணுவார்.

ஆனந்தி அக்கா தன்னை ஒரு முருகபக்தர் என்று அடிக்கடி கூறுவார். லண்டனிலுள்ள High gates Hill முருகன் கோவிலில் ஒரு திருவிழா உபயகாரராகவும் இருந்தார். ஆனால் அவரை யொத்த வயதுடைய தமிழ்ப்பெண்கள் போன்று, அமாவாசை, பூரணை, விரதநாள், திதி, நடசத்திரம் என்று எதுவும் பேச மாட்டார். அவர் உண்மையில் கடவுள் நம்பிக்கை உடைய வராக இருந்தாரா இல்லையா என்பதும் அவருக்கு மட்டுமே தெரியும். ஒரு தடவை ஆன்மீகம் சம்பந்தப்பட்ட நூல் வெளியீட்டு விழாவில் அவரை உரையாற்ற அழைத்தார்கள். 'ஆனந்திக்கும் பேரின்பத்துக்கும் என்ன சம்பந்தம்?' என்று கூறி மறுத்துவிட்டார்.

அதுபோன்று அவர் தன்னை ஒரு பெண்ணியவாதியாக அடை யாளப்படுத்தியதில்லை. தங்களைப் பெண்ணியவாதிகள் என்று



கூறுபவர்களை ஏளனஞ்செய்வார். ஆனால், எனக்குத் தெரிந்து தன் வீட்டிலும், வெளியிலும் தன்னுடைய உரிமைகளை அவர் என்றுமே சமரசம் செய்ததில்லை.

கொரோனா தொற்றுக்காலத்தில் வீட்டில் தனிமைப்பட்டிருந்த அவரைத் தொலைபேசியில் தொடர்புகொண்டபோது, 'எப் படிப் பொழுது போகிறது?' என்று கேட்டேன். இரண்டாம் உல கப்போர் பற்றிய சில ஆவணப்படங்களைப் பார்க்கிறேன். அம்பேத்காரை விமர்சித்து அருண் சோரி எழுதிய 'Worshiping False Gods' என்ற நூலைப் படித்துக்கொண்டிருக்கிறேன் என்றார். 'இது வலதுசாரி இந்துத்துவா நூல் எல்லோ!' என நான் வினவினேன். 'அதனால் என்ன, ஓர் ஊடகவியலாளர் எல்லாப் பக்கத்துக் கருத்துகளையும் தெரிந்துகொள்ள வேண்டும்' என்று அறிவுரை வழங்கினார்.

ஆனந்தி அக்கா வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெளியிட்ட கருத்துகளை வைத்துப் பலரும் அவரைத் தமது புரிதலுக் கேற்ப அடையாளப்படுத்தி வந்தாலும், அவர் ஒரு தனித்து வமான பெண் ஊடகவியலாளர் என்று நான் அடித்துக் கூறு-வேன்.

இறுதியாக கடந்த டிசம்பர் மாத இறுதியில், நோயுற்ற நிலை யிலிருந்தபோது அவரைச் சந்தித்து உரையாடியதிலிருந்தும் அதனை நான் உறுதிசெய்து கொண்டேன்.

இறுதி வணக்கம் அக்கா!



gopi.ratnam@thaiveedu.com

# தமயந்தியின் 'அந்தி வானில் ஆயிரம் வெள்ளி'- காதலின் துக்கச் சித்திரங்கள்

– சு. வேணுகோபால்

தமிழ்ச் சிறுகதையின் வளமான சீரிய மரபுக் கண்ணியாகத் தன்னை ஒப்புக்கொடுத்திருப்பவர் தமயந்தி. கு.பா. ராஜகோபாலனின் நேர்வாரிசாகத் தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார். ஆர். சூடாமணி, அம்பை இவர்கள் ஆக்கங்களில் காணப்படாத உலகம் வெளிச்சத்திற்கு வந்துகொண்டே இருக்கிறது. பெண்களுக்கு நேரும் சீரழிவுகளை அம்பை காட்டியிருக்கிறார். அவற்றில் ஆண்கள் வில்லன்களாக மட்டுமே வருகிறார்கள். உயிரோட்டம் உள்ள வில்லன்கள் அதில் இல்லை. ஆர். சூடாமணியைப்போல ஆண், பெண் என்ற எல்லைகளை வகுத்துக்கொள்ளாமல் வாழ்க்கைச் சுழலில் அவர்களின் வெளிப்பாடுகள் என்னவாக இருக்கின்றன என்பதை வெளிச்சத்திற்குக் கொண்டுவருகிறார். கு.ப. ரா. அக்காலத்துப் பெண்களின் துயரக்குரலாக ஒலித்தவர். கு.ப. ரா., ஆர். சூடாமணி, அம்பை காட்டாத வாழ்வின் சிடுக்குகளை இவர் கலாபூர்வமாகக் காட்டுகிறார். குரல் உயர்த்தாமல் சொல்லப்படாது இருக்கும் பெண்களின் வலிமிக்க துன்ப துயரங்களைக் கதையாடல்களில் காட்டுகிறார். பெண்கள் ஒருபோதும் ஆண்களுடன் சந்தேகக்கண்கொண்டு ஒட்டி உறவாடுவதில்லை. விரும்பி ஏற்ற உறவுகள், சொந்தக் குடும்ப உறவுகள் காலகதியில் வெளிப்படுத்திக்கொள்ளும் வக்கிரங்களை, பாலியல் வன்முறைகளை, ஏமாற்றுத் தனங்களை, பாவனைகளை வாழ்தலில் இருந்து வெளிப்படுத்துகிறார். குற்றம் சுமத்தவேண்டும் என்ற திட்டமான நோக்கம் அழுத்தம் கொள்ளாமல் இயல்பான போக்கில் வெளிப்படுத்தும் திறன் இவருக்கு வாய்த்திருக்கிறது.

தமயந்தியின் கதைகளில் பரிவுணர்வுடன் பழகும் ஆண்களும் தோழமைமிக்க ஆண்களும் வருகிறார்கள். பரிவுணர்வுள்ளவன் போல பாவனை செய்யும் ஆண்களும் வருகிறார்கள். ஒரு சிறு நதி மற்றொரு சிறு நதியில் கலந்து நகர்வது போல ஆண்களும் பெண்களும் குடும்ப உறவுகளில் இணைந்து பயணிக்கிறார்கள். கலந்த நதிக்குள்ளிருந்து எழும்பும் கழி சடைபோல வாழ்வு பல சமயம் இருக்கிறது. ஒரு சாக்கடை ஒரு நதியில் கலப்பதாக, கருப்பு வெள்ளைச் சித்திரங்களாக இல்லை. பெண்கள் மிகுந்த நம்பிக்கையுடனேயே ஆண்களுடன் உறவுகளைப் பற்றுகிறார்கள், காதலன், கணவன், நண்பன், அலுவலகத் தோழன் என்று இணையும் மனிதர்களில் குறைந்தபட்சமானோர் நல்லுணர்வு கொண்டவர்களாகவும், அதிகபட்சமானோர் போக்கிரித்தனங்களும் குரோதங்களும் நிரம்பியவர்களாகவும் வெளிப்படுகிறார்கள். ஒரு வகையில் பெண் உடல் என்பது ஆண்களின் காமத்தீனியாக மட்டுமே இவர்களிடம் வெளிப்படுகின்றது. வெகுசிலபேர் பெண்களின் தத்தளிப்பைக் காருண்யத்துடன் அணுகுகின்றனர்.

'அந்திவானின் ஆயிரம் வெள்ளி' என்ற இந்தச் சிறுகதைத் தொகுப்பில் எட்டு கதைகள் இருக்கின்றன. பாதிக் கதைகளில், துன்புறுத்தல்கள் தாளாமல் கணவன்மார்களிடமிருந்து பிரிந்துவந்த பெண்கள் வேறு ஆடவர்களிடம் இணைந்துகொண்டோ, இணைத்துக்கொள்ள விரும்பியோ வந்துவிட்டப்பின் ஏற்படும் ஒருவித நெருக்கடி நிலை மிகவும் துயரம்தருவதாக இருக்கின்றது. நம்பிக்கையிழப்பு என்ற கைவிடப்படும் நிலை வாழ்வின் திகைப்பாக முன்நிற்கின்றது. ஏன் இது ஒரு சுயமரியாதை மிக்கதாகப் பார்க்கப்படுவதில்லை. கேலிக்கும் கிண்டலுக்கும் அவமரியாதைக்கும் உரியதாகப் பார்க்கப்படுகிறது. நிலைகொள்ள முடியாது வெளியேறி ஒரு பிடிப்பை நோக்கி கரம் நீட்டுவதாகப் பார்க்கப்படுவதில்லை என்ற துக்கத்தை முன்வைப்பதாக இருக்கின்றன.

அந்திவானின் நட்சத்திரங்கள் பளீரென ஒளி விடுவதில்லை. மங்கித் தெரிகின்றன. ஜீவன் இல்லாமல் வெள்ளைப் புள்ளிகளாகத் தெரிகின்றன. ஜொலிப்பதில்லை இந்த வாழ்வு. பெண்களுக்கு அப்படித்தான் இருக்கின்றன. தமயந்தியின் 'அனல்மின் மனங்கள், மழையும் தொலைவும், திசை' என தொடக்க கால கதைகள் குறித்து எழுத ஆசை இருந்தது, அதற்கான நேரம் வாய்க்கவில்லை. ஆனால் அந்தக் கண்களில் இருந்து இன்று வெகுதூரம் பயணப்பட்டு வந்திருக்கிறார். பொது தளத்திலிருந்து நுண்தளத்துக்குள் நுழைந்துச் செல்லும் தடம் வலுவாகத் தெரிகிறது. மொழியில் கூர்மையும் பார்வையின் தீவிரமும் கச்சிதத் தன்மையும் இன்றைய கதைகளில் சிறப்பாகக் கூடிவந்திருக்கின்றன. பெண்களைப் புனிதப்படுத்தாமல் கைப்பில் கணவனை விஷம் வைத்துக்கொல்லவும் தூங்கும்போது கல்லை தூக்கிப்போட்டுக்கொல்லவும் நினைக்கிற, சிதைந்து ரணமாக்கிய தன் அங்கங்களைச் சொல்லவும், காரியம் முடிந்ததும் கைவிட்ட எத்துவாளிகளைப் பகிரவும் செய்கிற பெண்களைக் கதைகளிலே தீட்டிக் காட்டுகிறார். ஒவ்வொரு கதையும் ஓர் இடத்திலும் எழுதப்படாத புதியப் பகுதிகளைக் காட்டப்படுகிறது. அந்தரங்கத்தை அந்தரங்கம் இல்லாமல் சொல்லத்தெரிந்த எழுத்து இவருடையது.



நாசூக்குக் கருதி மொழியின் வீச்சை தமயந்தி குறுக்குவதில்லை. மனிதர்களிடம் வெளிப்படும் குசும்பான மொழி, கோப தாபங்கள், கேலி கிண்டல்கள் சூட்சுமமான பரிபாசைகள் என இயல்புடன் எழுந்துவருவதைத் தடுப்பதில்லை. அதேபோல உடல் உபாதைகள் ஆலய வழிபாட்டிலும் சரி, வரவேற்பு அறைகளிலும் சரி பேச்சினூடே கிளம்புவதைத் தடுக்காமல் எழுதுகிறார். இதை ஒரு பின்நவீனத்துவ எழுத்துவகை என்ற மோஸ்தரில் மிதமிஞ்சி எழுத ஆசைப்படாமல் தேவையின் பொருட்டு எழுதும் பக்குவம் இந்தக் கதைகளில் அழகாக வெளிப்பட்டிருக்கின்றன. சொற்களில் சுருக்க அழைப்பில் வெளிப்படும் அன்பைச் சொல்லத் தெரிந்தவராக இருக்கிறார்.

கதை நிகழும் காலத்தில் வரும் மழை, இலையுதிர்தல், குளிர், அனல் எனப் புற நிகழ்வுகள் கதைக்குள் மாந்தர்களின் உணர்வோட்டத்துடன் இயைந்து புதிய அனுபவத்தை வெளிப்படுத்திக்கொள்கின்றன. தமயந்திக்கு ஜானகிராமன், வண்ண தாசன்போல இம்மனோலயம் நன்றாக வாய்த்திருக்கிறது. கவித்துவமாக மாறும்போது கதைக்கு கூடுதல் பரிமாணத்தைத் தருகிறது. புறஉலகை, மாந்தர்களின் செயல்களை

ஓரிரு வரிகளில் சித்திரமாக்கிவிடுகிறார். ‘மீச’ கதையில் நினைப்பிற்கு இசைவான நிறமோ சுவையோ ஒரு உருத் தோற்றத்தில் வந்துவிடும் மாயத்தை கதைநெடுக அழகாகப் பின்னியெடுத்திருக்கிறார். அது பெருகிவரும் ஊற்றுப்போல அமைந்திருக்கிறது. நெருக்கடியான தருணங்களில் வெளிப்ப டும் உள்ளத் தத்தளிப்புகள் மனிதர்களைப் புரிந்துகொள்வ தற்கான அரிய முகாந்திரங்களாக ஆகின்றன. தனிமைத் தரு ணங்கள் கற்பனையில் எழும் விசித்திர எண்ணங்கள் கதைக்கு அழுத்தம் தருகின்றன.

இந்த வகையில் இந்தத் தொகுப்பில் இருக்கும் ‘கக்கா’ கதை ஒரு உச்சமென்றே சொல்லலாம். அதேசமயம் அக்கதை முடி வுசார்ந்து வேறொரு பாய்ச்சலைத் தொடாமல் முடித்துவிட் டது என்பதையும் குறிப்பிடவேண்டும். மலேசியப் பெண் எழுத்தாளர் எஸ்.பி. பாமா அவர்களின் ‘புதிதாக ஒன்று’ என்ற கதையை சமீபத்தில் படித்தேன். தாய்க்கு மார்புப் புற்றுநோய் இருப்பதாகக் கண்ட நாள்முதல் மார்பழகு குறித்த எண்ணங் கள் விரிகின்றன. தாயும் மகளும் கொள்ளும் பரிதவிப்பை, மனப்பதற்றத்துடன் கொண்டுவந்து காட்டியிருக்கிறார். தாய் அச்சூழலில் வெளிப்படுத்திக்கொள்ளும் ஆசை புதிதானது. ‘கக்கா’ கதை நோய்ம்மையில் கிடக்கும் தந்தையின் மலஜல பிரச்சினையை எதிர்கொண்டவர்களின் ஆதங்கங்களை, எரிச் சல்களைக் காட்டியதோடு சின்ன மலர் மொக்குபோல ஒரு அன்பைத் தரவும் நோய்ம்மையில் இருப்பவர் வெளிப்படுத் தும் கசப்பின் எச்சிலையும் இயைந்தே சொல்ல முடிகிறது.

மாதவிடாய் என்ற ரத்தப்போக்கு இளம்பெண்கள் உலகை என்ன விதமாக பாதிக்கிறது, மனச்சிதைவை உண்டாக்குகி றது என்பதை நுட்பமாகச் சொல்லும் ‘அந்திவானின் ஆயிரம் வெள்ளி’ போன்ற கதையை தமயந்தியால்தான் எழுதமுடியும். முகம் சுளிக்கும் பிரச்சினைகள் வாசகனின் அகத்தில் ஒரு ஈரக்கசிவைக் கிளர்த்தும் சக்திபடைத்தனவாக மாற்றியிருக் கின்றன. குறைவானப் பக்கங்களில் செறிவான கதைகளைத் தருவது ஒரு தனித்துவ ஆற்றல் என்றால் ஒரு கதைக்குள் வேறு கிளைக்கதைகளை மிகச் சன்னமாகக் கிளையவிட்டு படர்ந்திருப்பதையும் அதன் நோவை மெனக்கெடாமல் போகிற போக்கில் காட்டும் திறம் தமயந்திக்குக் கைக்கூடிவ ரும் ஒரு செயல். ‘மீச’ கதையில் வரும் மேபல் கணவனிடம் சீர ழிந்து ஆறுதல்தேடி மேனேஜரிடம் சிக்கிக்கொள்வதைச் சொல்லப்படாத விதத்தில் சொல்லியிருக்கிறார். அம்பையின் பிற்காலக் கதைகளில் இரண்டு கதைகளை ஒரு கதைக்குள் பின்னிப்பார்த்திருக்கிறார். அவை சிறுகதைக்குரிய ஒருமை கூடாமல் தனித்தனியே நின்று விடுவதைப் பார்க்கலாம். பிரிக்க முடியாத பின்னலில் இயைந்திருப்பதை இங்குக் காணலாம்.

கதைக்களங்களை தமயந்தி தேர்வு செய்திருப்பதும் தன் அனுபவத்திலிருந்து பிற மனிதர்களை, பெண்களை நெருக்க மாகக் கவனித்து உருவாக்கியிருப்பதும் வாசகனுக்கு நம்ப கத்தன்மையைத் தருகின்றன. ஒரு கதைக்குள் உண்மையின் தோற்றத்தை ஏற்றுவதில்தான் வெற்றி இருக்கிறது. சில நிறுவ னங்களில் மீசை வைத்துக்கொள்வதை அதிகாரிகள் விரும்பு வதில்லை என்ற ஒரு பின்னணி, புத்தி சுவாதீனம் இல்லாத அக்காளுக்கு நேரும் பாலியல் அத்துமீறல், சிதைவுற்ற உறுப் புகளைச் சொன்னதும் விலகிச்செல்லும் மனம், கணவனை விட்டுத் தனித்துவாழும் பெண் பாடகியை ஏமாற்றிவிட்டு பதி விரதையைத் தேடும் பாடகன், போராட்டத்தில் உயிரிழந்த தந்தையின் மகள்களைப் பணத்தைக்காட்டி மோசடிக்குள் இழுக்கும் அரசியல்வாதி என்று சிக்கல்களைக் கதைக்குரிய களங்களாகத் தேர்கிறார். அதில் வெளிப்படுத்திக்கொள்ளும் மனிதர்களின் வேடங்களை மெல்ல வெளிச்சத்தின் முன் நிறுத்துகிறார். ஆண் பெண்களிடையே காமம் ஒரு பகிர்வாக, மகிழ்வாக அமையாமல் ஒரு சுரண்டலாக, வன் முறையாக அமைவது குறித்துத்தான் இக்கதைகள் பேசுகின்றன.

அதேசமயம் ‘மீச, இப்படிக்கு வாழ்க்கை’ கதைகளில் பெண்க ளின் இக்கட்டுகள்மீது ஆண்கள் கொண்டிருக்கும் பரிவையும் சொல்கின்றன. ‘குவாரண்டைன்’ கதையில் வரும் ராஜனும் பரி வுமிக்கவன்தான். ஒரு எல்லைக்கு மேல் தமிழ்ச் செல்விக்கு ஒரு பாதுகாப்பைத் தரக்கூடாது என்பதில் கவனம் கொள்கி றான். ஒரு கீப்பாக வைத்துக்கொள்ள விரும்புகிறான். அதற்கு இசைவு கிட்டாதபோது விலகுகிறான். உடலைக் குத்திக்கீறி ர ணமாக்கிய தழும்புகளுடன் விடுதலையைத் தேடி அலையும் தமிழ்ச்செல்வியின் வாழ்க்கை இது.

எல்லா கதைகளிலும நெருக்கடியின் தீவிரம் இருந்தாலும் ‘கக்கா, பாட்டுக் கச்சேரி, ஒளியின் வெளிச்சக் கிளைகள்’ மூன்று கதைகளும் நிறுத்தி நிதானமாக எழுதப்பட்ட சிறப் பான கதைகள். உள்ளமும் சூழலும் அபிலாசைகளும் நிராக ரிப்பும் ரத்தமும் சதையுமாக உருவாகி வந்திருக்கின்றன. ‘பாட்டுக் கச்சேரி’யில் வரும் சங்கரி எவ்வளவோ கவனமாக இருந்தும் தன்னை இழக்கிறாள். ஏமாற்றப்படுகிறாள். அவ ளுக்கு ஏன் இவ்விதமான வீழ்ச்சி நேருகிறது. நம்பிக்கைத் துரோகம் செய்யப்படுகிறது. அதை மீறியும் அவள் வாழ நேர் கிறதே அதுதான் மனதைக் கவ்விப் பிடிக்கிறது. இந்த நிதா னம் ‘மீச, குவாரண்டைன், இப்படிக்கு வாழ்க்கை’ கதைகளி லும் இயைந்திருக்கின்றன. என்னவாக இருந்தாலும் வண்ண நிலவனுக்குள் உண்டாக்கிய (அந்திக் கருக்கலில் – கதை) பேரன்பை ‘ஒளியின் வெளிச்சக் கிளைகள்’ கதையிலும் கூடி வந்திருக்கிறது. பைபிளின் சாராம்சம் தந்த சொத்து இந்த அன்பு. வரவேற்கத்தக்க ஒரு இளந்தலைமுறையின் விசால மானத்தின் வருகையாகவும் இக்கதை மிளிர்கிறது. வேறு வகையாக சொல்லலாம். தேவையில்லை. ‘அந்திவானின் ஆயிரம் வெள்ளி, மரணமென்பது ஒரு சொட்டு அமிலத்துளி’ கதைகளில் நிதானம் கூடிவந்திருந்தால் இன்னும் சிறப்பான பரிமாணத்தைப் பெற்றிருக்கும்.

தமயந்தி கடந்த 35 ஆண்டுகளாக பல நல்ல கதைகளைத் தமிழுக்குத் தந்திருக்கிறார். இந்த தொகுப்பின் மூலம் பெண் களின் இன்னொரு உலகை சாதகபாதகத்தோடு நம்மிடம் உறவாடத் தந்திருக்கிறார். நாம் இதுகுறித்துப் பேசவும் மன தில் விரிந்த இடத்தை ஏற்படுத்துவதுமான காரியத்தை இக்க தைகள் செய்கின்றன. தமயந்தி பெண்களின் அறியப்படாத பக்கங்களைப் பேசுவது நன்றாகவே இருக்கின்றது. தன்னைப் பெண் எழுத்தாளர் என்று வெளிப்படுத்திக்கொள்ளாத நல்ல எழுத்தாளர். முன்னே போல இன்னும் பிற விஷயங்களில் கவ னம்கொள்ள வேண்டும். எழுதவேண்டும்.



venugopal@thaiveedu.com



# வாழ்நாள் போராளி தோழர் நல்லகண்ணு

– நெல்லை ஜெயசிங்

அதிகார வேட்கை, பணத் தேவை, புகழ் போதை என எந்த விதமான எதிர்பார்ப்பும் இல்லாமல், எளிமையின் சிகரமாக, ஒரு நூற்றாண்டு கடந்து, தமிழ் மண்ணில் வாழ்ந்து கொண்டிருப்பவர் தோழர் நல்லகண்ணு. வாழ்நாள் முழுவதும் எளிமையாக வாழ்வது என்பது நினைத்துப் பார்க்க முடியாத அதிசயம். அதனை இயல்பாக்கி வாழ்ந்து வருபவர் தோழர் நல்லகண்ணு. சிந்தாமல் சிதறாமல் அவரது எளிய பயணம், இன்று வரையும் தொடர்கிறது. சிவப்புச் சிந்தனையோடு, வீதி வீதியாக வலம் வந்த போராளி. 1925 டிசம்பர் 26-ம் நாளில், ஒன்றுபட்ட திருநெல்வேலி மாவட்டம் சிறிவைகுண்டம், பெரும்பத்து கிராமத்தில் சாதாரண ஒரு விவசாயக் குடும்பத்தில், இராமசாமி - கருப்பாயி இணையரின் மூன்றாவது குழந்தையாகப் பிறந்தார். இவர் பிறந்த அதே காலத்தில் 1925 டிசம்பர் 26- அன்று கான்பூரில், இந்திய பொதுவுடமைக் கட்சியும் உதயமானது என்பது சிறப்பு அம்சமாகும்.

தான் பிறந்து வளர்ந்த சிறிவைகுண்டம் கிராமத்தில், ஆரம்பக் கல்வியை கார்னேஷன் பள்ளியில் ஆரம்பித்த தோழர் நல்லகண்ணு, பின்னர் இளங்கலை படிக்க நெல்லை இந் துக் கல்லூரியில் இணைந்தார். ஓடி ஆடி விளையாடும் மாண வப் பருவம் அது. பட்டாம்பூச்சி மனதில் பறக்க, வண்ண வண்ண கனவுகள் நிறைந்த காலம் அது. ஆனால் தோழர் நல்லகண்ணு அவர்கள், தனது பள்ளிப் பருவத்திலேயே விடுதலைப் போராட்ட உணர்வுகளை உள்வாங்கலானார். சினிமாச் செய்திகளை மறைத்து வைத்துப் படிக்கும் மாணவர்கள் மத்தியில், இவர் பாரதியார், வி.க, விவேகானந்தர் போன்ற ஆளுமைகளின் படைப்புகளை தேடித் தேடி படிக்கத் தொடங்கினார். அவை அவருக்கு தேச விடுதலை உணர்வை ஊட்டத் தொடங்கின. பொதுவுடைமை இயக்கத் தலைவர் ஜீவானந்தம் போன்றவர்களின் மார்க்ஸிய கருத்துகளால் ஈர்க்கப்பட்டு, பதினெட்டாவது வயதிலேயே பொதுவுடமைக் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார். அவரது இளங்கலை பட்டப்படிப்பு பாதியில் நின்றுவிட, கட்சிப் பணி வேகம் பெறத் தொடங்கியது. 1939-களில் தேச விடுதலைக்காக ‘வெள்ளையனே வெளியேறு’ போராட்ட இயக்கம் நாடெங்கும் பரவியபோது, இவரும், இளம் மாணவனாக தன்னை அதில் இணைத்துக் கொண்டார். அன்றுஇளமையில் தொடங்கிய தொழிலாளர் வர்க்கப் போராட்டம், இன்று முதுமையிலும் ஓய்வின்றித் தொடர்கிறது.

தோழர் நல்லகண்ணு அவர்களின் சிறு வயது முதல் இன்றைய நாள் வரையிலான பணி மக்கள் சார்ந்ததாகவே இருந்து வந்துள்ளது. ஓடியாடி விளையாட வேண்டிய பருவத்தில், தனது 12-வது வயதில், ஆலைப் போராட்டத்தின்போது, அவர்களின் பசிப்பிணி போக்க ‘அரிசி வசூல்’ இயக்கத்தில் பங்கு கொண்டது முதல், இன்று கட்சியை வழி நடத்திச் செல்லும் ஒவ்வொரு கட்டத்திலும் அவரின் அரசியல் அர்ப்பணிப்பு, மிக ஆழமாக வேரூன்றி இருப்பதைக் காணலாம்.

மக்கள் நலன் சார்ந்த போராட்டக் களத்தில், தன்னை தீவிரமாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில், கல்லூரிக் கல்வியை பாதியில் கைவிட்டு, பொதுவுடைமைக் கட்சியில் தொண்டனாகத் தன்னை இணைத்துக் கொண்டார். 22-வது வயதில் விவசாய சங்கத்தில் இணைந்து, கட்சியின் முழுநேரப் பணியாளராக தன்னை மாற்றிக் கொண்டார். இந்தியாவின் ஆன்மா, ஆணிவேர், விவசாயம் என்பதை ஆழமாகப் புரிந்து கொண்ட தோழர், இளம் வயதிலேயே, மிகுந்த ஆர்வத்துடன் நாங்குநேரி பகுதியில் கிராமம் கிராமமாகச் சென்று விவசாய சங்கங்களை, அமைப்புகளை கட்டமைக்கலானார். விவசாயிகள் தொடர்பான அவரது ஈடுபாடு, எதிர்காலத்தில் 25 வருடங்கள் விவசாய சங்கத்தில், அவர் தலைவராக இருக்க காரணமாகியது இன்று விவசாய சங்கங்கள் தலைநிமிர்ந்து நிற்பதற்கு இவரின் ஆரம்பகால அர்ப்பணிப்பு சேவைகள் காரணமாக அமைகிறது.

நிலவுடைமை பண்ணையாளர்களின் மேலாதிக்கம் மேலோங்கி இருந்த அன்றைய காலகட்டத்தில், விவசாயிகள், பொதுவுடைமை அமைப்பின் கீழ் அணிதிரள்வதை, முதலாளித்துவ சக்திகளால் சகித்துக்கொள்ள முடியவில்லை. இதன் விளைவாக 1947-ம் ஆண்டு மே தின கூட்டம் நடந்து முடிய, விவசாய சங்கத்திற்கு, புத்துணர்ச்சி புகுத்தி வந்த இளம் விவசாய போராளி தோழர் நல்லகண்ணு, அப்போது அடையாளம் தெரியாதவர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டார். ஆனால் அது அவரை பலப்படுத்தியதேயன்றி பலவீனப்படுத்தவில்லை. இதன் பின்னர் வீறுகொண்டு விவசாயிகளை ஒன்று திரட்டுவதில் வேகம்காட்டத் தொடங்கினார்.

### ஆட்சியாளர்களுக்கு எதிரான போராட்டம்:

1947-ல் இந்தியா சுதந்திரம் பெற, காங்கிரஸ் கட்சி ஆட்சி அதிகாரத்திற்கு வந்தது. வெள்ளையர் ஆட்சிக்கு எதிராக இணைந்துப் போராடிய பொதுவுடைமைக் கட்சி, பின்னர் முதலாளித்துவ மனநிலைக் கொண்ட காங்கிரஸ் கட்சிக்கு எதி

ராக, அறைகூவல் விடுத்து போராட்டக் களத்தில் குதித்த போது, தோழர் நல்லகண்ணு அவர்களும் முழு மனதுடன் செயல்படத் தொடங்கினார். 'நேருவின் ஆட்சி அகற்றப்பட வேண்டும்' என்ற முழக்கத்தை முன்வைத்து, பொதுவுடமைக் கட்சி போராடிய போது, ஆட்சியாளர்களின் அடக்கு முறைக்கு பல தோழர்கள் ஆளாகினர். பொதுவுடைமைக் கட்சியும் தடை செய்யப்பட்டது. காவல்துறையின் அடக்குமுறை



கட்டவிழ்த்து விடப்பட்டது. பொதுவுடைமைக் கட்சி தோழர்கள், தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர்.

'நெல்லை சதி' என்ற பெயரில் தோழர் நல்லகண்ணு உட்பட பல முக்கியமான தலைவர்கள் தேடப்பட்டபோது, அவர்கள் காடுகளிலும், அடையாளம் காண முடியாத இடங்களிலும் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்தனர். அப்போது வரை சைவ உணவுக்கு மட்டுமே பழக்கப்பட்டிருந்த தோழர் நல்ல கண்ணு, மக்கள் மனமுவந்து அளித்த அனைத்து வகையான உணவுகளையும் சாப்பிட்ட போது, முகம் சுளிக்காது, அசைவ உணவுகளையும் சாப்பிட்டதாக கூறப்படுகிறது. தலைமறைவு வாழ்க்கையின் போது, பலநூறு மைல் தூரம் அடர்ந்த காடுகளில் உண்ணாமலும் உறங்காமலும் நடந்திருக்கிறார். கடைசியில் தலைமறைவு வாழ்க்கையின் போது கைது செய்யப்பட்டு கடுமையான சித்திரவதைக்கும் உள்ளானார். ஏனைய தலைவர்களின் இருப்பிடத்தை கூறும் படி தோழர் நல்லகண்ணுவை அடித்து உதைத்து தலைகீழாக தொங்க விட்டு, மீசையின் முடிகளை பலவந்தமாக பிடுங்கிய போதும், சக தோழர்களை காட்டிக் கொடுக்க முன்வரவில்லை என்ற வகையில், கட்சியின் மீது தீவிர பற்றுடன் வாழ்ந்தவர் தோழர் நல்லகண்ணு என்பது புலனாகிறது.

தேடுதல் முடிவில் பல தலைவர்களும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். 1956-ல் தீர்ப்பு வழங்கப்பட்டது. தோழர் நல்லகண்ணு, தோழர் பாலதண்டாயுதம் உட் பட பலருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. இவர்க ளின் தண்டனைக்கு எதிராக தமிழகம் எங்கும் கிளர்ச்சிகள் பெரிய அளவில் நடைபெற, அரசு அதற்கு பணிந்து அவர் களை விடுதலை செய்தது. தோழர் நல்லகண்ணு அவர்கள், ஏற்கனவே வெடிகுண்டு வைத்திருந்ததாக விதிக்கப்பட்ட கடுங்காவல் தண்டனையும் முடிந்து, 1956-ல் விடுதலையானார். தோழர் நல்லகண்ணு மக்கள் நலனுக்காக நடத்திய பல்வேறு, அரசாங்க எதிர்ப்பு நடவடிக்கைகள் காரணமாக 7 வருடங்கள் சிறை வாசத்தில் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சிறை என்ற இருட்டறை அவரை மேலும் வலிமை கொண்டவராக்கியது.

## போராளியின் இல்வாழ்க்கை:

முழுநேர கட்சி ஊழியரை, சிறையிலிருந்து விடுதலையான ஒருவரை, போராட்டம் போராட்டம் என, வீதி வீதியாக செங்கொடியுடன் அலையும் ஒருவரை, மனமுவந்து மணமுடிக்க, ரஞ்சிதம் என்ற பெண்மணி முன்வந்தமை ஆச்சரியம் அளிக்கும் ஒன்றல்ல. தோழரின் எளிமை, கொள்கை பிடிப்பு, துடிப்பான செயல்பாடு என அனைத்தையும் புரிந்து கொண்ட, மருதன்வாழ்வு கிராமத்தைச் சேர்ந்த சாதி ஒழிப்பு போராளி அன்னாசாமி - சந்தோஷி அம்மாள் இணையர், தங்கள் மகள் ரஞ்சிதத்திற்கு ஏற்ற கணவராக தோழர் நல்லகண்ணுவை தேர்ந்தெடுக்க, 1958-ல் தோழர்களின் புரட்சிகர வாழ்த்துக்களோடு, நெல்லை சிந்துபூந்துறையில் திருமணம் நடந்தது.

தோழர் நல்லகண்ணு அவர்களின் திருமணம், கலப்புத் திருமணம் ஆகும். வேற்றுமைகள் பல பார்க்கும் மனிதர்கள் மத்தியில், இந்து மதத்தவரான நல்லகண்ணு அவர்கள், மதம் கடந்து, கிறித்தவ பெண்ணான ரஞ்சிதம் அவர்களை மண முடித்து, தோழர்களுக்கு முன்னுதாரணமாக திகழ்ந்தார். தோழரின் இலட்சிய போராட்டத்திற்கு எந்தவித இடையூறும் இல்லாமல், இல்வாழ்க்கையும் இனிதே நடந்தது. தோழரின் போராட்ட வாழ்க்கையை சரிவர புரிந்து கொண்டவராக துணைவியார் ரஞ்சிதம் உற்ற தோழனாக இருந்தார். அறிவு பூர்வமான இலட்சிய இணையராக இல்வாழ்க்கையை தொடர்ந்தனர். ரஞ்சிதம் அவர்கள் ஆசிரியர் பணியினை மேற்கொண்டு இருந்தமையால், வீட்டின் அனைத்து பொருளாதாரத் தேவைகளையும் அவரே கவனித்துக்கொண்டார்.

இரு பெண் குழந்தைகளுக்கு தந்தையான தோழர் நல்ல கண்ணு அவர்கள், தனது மனைவி 1986-இல் காலமான போது, அவரின் பிரிவை மிகுந்த வேதனையுடன் எதிர் கொண்டதாக கூறுகிறார். தனது துணைவியாரின் அன்பைப் பற்றி கூறும்போது, தான் எங்கிருந்தாலும் 'சாப்பிட்டீங்களா' என்று தன் மனைவி, கேட்கத் தவறியதில்லை என மன நெகிழ்வோடு

இன்றும் நினைவு கூறுவதைக் காணலாம். துணைவியார் இல்லை என்ற மனக் குறை இருந்த போதும், தனது போராட்ட பயணத்தைத் தொய்வின்றி மேற்கொண்டு வந்திருக்கிறார்.

## பொதுவுடைமைக் கட்சியின் மாநிலச் செயலாளராக:

பொதுவுடைமைக் கட்சியின் மாநிலச் செயலாளர் என்பது, கட்சியின் உயரிய பதவியாகும். இடதுசாரிக் கட்சிகளைத் தவிர்த்து, ஏனைய அரசியல் கட்சிகள், கட்சியின் மாநிலத் தலைவர் என அழைப்பதை, பொதுவுடைமைக் கட்சிகள் மாநிலச் செயலாளர் என அடையாளப்படுத்திக் கொள்கின் றன. தோழர் நல்லகண்ணுவின் அளப்பரிய பணி, தியாகம் காரணமாக நீண்ட கால அனுபவத்தின் அடிப்படையில் 1992-ஆம் ஆண்டு மாநிலச் செயலாளர் ஆக, கட்சி தோழர்களின் பேராதரவுடன் தெரிவு செய்யப்பட்டார். உழைப்பதற்கென்றே பிறந்து, மக்களுக்காகவே உழைத்து வந்தமையால் தோழர் நல்லகண்ணு அவர்கள் தொடர்ந்து 13 வருடங்கள் மாநிலச் செயலாளராக பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்க தாகும்.

மாநிலச் செயலாளர் பதவிக்கு அவர் திடீர் என்று வரவில்லை. கட்சியில் தொண்டனாக இணைந்து, கட்சி உறுப்பினராக சேர்ந்து, கிளைச் செயலாளர், வட்டச் செயலாளர், ஒன்றியச் செயலாளர், மாவட்டச் செயலாளர் என 50 வருடங்களுக்கு மேலாக பெரும் பணியாற்றிய தியாகத்தின் அடிப்படையில், மாநிலச் செயலாளர் பதவி அவரைத் தேடி வந்த ஒன்று. மாநி லச் செயலாளராக ஆவதற்கு முன்பும் பின்பும் எந்தவிதமான பாகுபாடும் பாரபட்சமும் பாராது கட்சிப் பணியாற்றி வந்துள் ளமையைக் காணலாம். பொதுவுடைமை வாழ்வில் நம் பிக்கை நட்சத்திரமாக, கலங்கரை விளக்காக திகழ்ந்தவர் மாநிலச் செயலாளர் தோழர் நல்லகண்ணு என தேசியத் தலைமை, பல முறை இவரைப் பாராட்டியுள்ளது.

விவசாய வர்க்கத்துக்காக, விவசாய கூலி தொழிலாளர்க ளுக்கு மட்டுமல்லாமல், ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட, விளிம்பு நிலை மக்களின் விடுதலைக்காக அயராது உழைத்து, எண் ணற்ற தியாகத்தழும்புகளை சுமந்து வாழ்பவர். சாதிக் கலவ ரத்திற்குப் பெயர் பெற்ற நெல்லை மாவட்டத்தில், நடைபெற்ற சாதிய வன்முறையின் போது, ஒடுக்கப்பட்ட சாதிய சமூகத் தால் தனது துணைவியாரின் தந்தை, மருதன்வாழ்வு கிராமத் தில் வெட்டிக் கொல்லப்பட்டபோது, ஆத்திரம் கொள்ளாது அதனை அமைதியாக அணுகியதுடன், அப்போது நிவாரண மாக தமிழக அரசால் வழங்கப்பட்ட நிதியின் பெரும் பகு தியை ஒடுக்கப்பட்ட சமூக மாணவர்களின் கல்விக்காக செல விட்டதன் மூலம், சாதி கடந்த போராளியாக அங்கீகரிக்கப்ப டுகிறார். இன்று வரையும் பட்டியலின மக்களின் விடுதலைக் காக குரல் கொடுத்து வருகிறார். தலித் மக்களின் ஆலய பிர வேச போராட்டங்களை முன் நின்று நடத்தியுள்ளார். தடுக்கப் பட்ட வீதிகளில், ஒடுக்கப்பட்டோர், செருப்பு அணிந்து செல்ல ஊக்குவித்துள்ளார். வீடுகளுக்கு நிலை வைத்துக் கொள்ளும் போராட்டத்தை முன்னின்று நடத்தினார். சாதி உணர்வை அறுத்தெறிந்த சமத்துவப் போராளியாக நூறாண்டு கடந்து இன்றும் ஒளி வீசிக்கொண்டு இருக்கிறார்.

தோழர் நல்லகண்ணு அவர்களின் ஒவ்வொரு மணித்துளி வாழ்க்கையும் வரலாற்றுப் பாடங்களாகும். மேடைகளில் ஆவேசமாக முழங்கமாட்டார். ஆனால் கூறவேண்டிய கருத்து களை ஆணித்தரமாக பதிவிடுவார். அவரது எழுத்து, வாசிப்பு பிரமிப்புடன் பார்க்கப்படுகிறது. பள்ளிச் சிறுவனாக இருந்த போது பகத்சிங் பற்றி கட்டுரை எழுதி ஆசிரியரை மிர ளச் செய்திருக்கிறார். தனது ஏழ வருடகால சிறை வாழ்க்கை யின்போது ‘சிறை நூலகராக’ பணி செய்து கொண்டு ஏராள மான நூல்களை படித்து, அதன் தொடர்ச்சியாக ஏராளமான கட்டுரைகளை, புத்தகங்களை, கவிதைகளை எழுதலானார்.

பொதுவுடைமைக் கட்சிப் பத்திரிகையான ஜனசக்தியில் தொடர்ந்து பல்வேறு கட்டுரைகளை எழுதி வந்துள்ளதுடன் புத்தகங்கள் பலவற்றையும் எழுதியுள்ளார். ‘தியாகத் திருவுரு வம் பி. சீனிவாசராவ்’, ‘விடுதலைப் போரில் விடிவெள்ளிகள்’, ‘இந்திய விவசாயிகளின் பேரெழுச்சி’, ‘கங்கை காவிரி இணைப்பு’, ‘இரு உலகங்கள்’ என ஏராளமான நூல்களையும் கட்டுரைகளையும் சமூக கண்ணோட்டத்துடன் எழுதியுள் ளமை குறிப்பிடத் தக்கதாகும்.

## தேடி வந்த விருதுகள்:

அன்பளிப்புகளை விருதுகளை ஆவலுடன் தேடிக் கொண்டு இருக்கும் இன்றைய அரசியல்வாதிகளின் மத்தியில், தோழர் நல்லகண்ணுவின் செயல்பாடு வித்தியாசமானது. தனது சேவையை அங்கீகரித்து அளிக்கப்படும் அன்பான அன்ப ளிப்புக்களை, அன்போடு அடுத்தவர்களின் நலன் மேம்பட வழங்கி விடும் மாமனிதர். ஏராளமான விருதுகளின் மத்தியில், சகயோகி புரஸ்கார் விருது, அம்பேத்கர் விருது, காந்தியன் விருது, ஜீவா விருது, தகைசால் தமிழர் விருது, விகடன் விருது என்பன குறிப்பிடத்தக்க சிலவாகும். விருதுகளோடு இணைப்பாக தரப்பட்ட பண முடிப்புகளை, புன்முறுவலுடன் வாங்கி, எந்த விதமான தயக்கமும் இன்றி, மன நெகிழ்வோடு மக்கள் நலன் சார்ந்த அமைப்புகளுக்கு வழங்குவதை வாடிக் கையாகக் கொண்டிருந்தார், மனிதருள் மாணிக்கமான தோழர் நல்லகண்ணு.

கௌரவம் மிக்க அம்பேத்கர் விருதுடன் ஒரு இலட்சம் நிதியை வழங்கியபோது, புன்னகையுடன் பெற்றுக் கொண்ட தோழர் நல்லகண்ணு, அதனை விவசாய மக்களுக்கும், நலிவுற்ற மக்களுக்கும் பகிர்ந்தளித்தார். இதேபோன்று 2022-ஆம் ஆண்டு தமிழக அரசின் உயரிய மதிப்பு மிக்க ‘தமிழக தகை சால்’ விருதுடன் பத்து இலட்சம் பணமுடிப்பையும் தமி ழக முதல்வர் வழங்கிய போது, எந்த விதமான சலனமும் இன்றி, புன்னகையுடன் பெற்றுக்கொண்டு, மறு நிமிடம் தன் னுடைய பங்களிப்பாக ஐந்தாயிரம் ரூபாவையும் அதனுடன் சேர்த்து, பத்து இலட்சத்து ஐந்தாயிரம் ரூபாவை முதல்வரின் நிவாரண நிதிக்கு, அதே மேடையில் புன்னகையுடன் வழங் கிய மா மனிதர் தோழர் நல்லகண்ணு. இவரின் இச்செயல் இந்திய அரசியல்வாதிகளை திரும்பிப்பார்க்க வைத்துள்ளது.

பொதுவுடைமைக் கட்சியின் தோழர்கள், தொண்டர்கள் இவ ரின் தன்னலமற்ற சேவைகள் மீது கொண்ட ஈர்ப்பின் காரண மாக, அவரது 80-வது வயதின் போது, தோழமைகளிடம் சிறுக சிறுக சேர்த்து ஒரு கோடி ரூபாய் பணத்தை திரட்டி, இவரிடம் விழாவில் வழங்கினர். எந்தவிதமான ஆசைக்கும் அடிபணி யாத தோழர் அதனை அப்படியே மன நிறைவோடு, தனது பொதுவுடைமைக் கட்சிக்கு வழங்கியவர், ஒரு செப்புக் காசுக் கும் ஆசைப்படாத தோழர் நல்லகண்ணு. இதேபோன்று

இவரின் பயண வசதிக்காக மகிழுந்து (car) ஒன்றையும் தோழர்கள் கொடுத்தபோது, அதனையும் கட்சியின் பயன் பாட்டிற்கு திருப்பிக் கொடுத்தவர் தோழர் நல்லகண்ணு. இவ்வாறு இனாமாக வந்த எந்த செல்வத்தையும் ஏற்காது பொதுநலனுக்கு வாரி வழங்கியதில் இவர் வல்லவராக இருந் தார்.

இவர் வாழ்ந்து வரும் ஒவ்வொரு மணித்துளியும், காண் போரை பிரமிக்க வைக்கும். இவரது எளிமை, இல்லாமையால் வந்தது அல்ல. அது இலட்சியத்தால் இணைந்த எளிமை. இவரது வாழ்க்கை ஒரு காவியம். அதன் ஒவ்வொரு பக்கமும் கவனத்தை ஈர்ப்பதாக இருக்கும். அவற்றில் சிலவற்றை கவ னிக்கலாம்.

ஒரு தேசியக் கட்சியின் மாநிலத் தலைவராக இருந்த போதும், ஏற்கத்தக்க வாடகையில், வீட்டு வசதி வாரியக் குடி யிருப்பில் வாழ்பவர் தோழர் நல்லகண்ணு. தன்னைப் போன்றே மிக எளிமையாக வாழ்ந்து மறைந்த கக்கன் அவர்க ளின் வாரிசுகள், வீடற்று இருந்தபோது, தனக்கு வீடில்லா விட்டாலும் பரவாயில்லை. கக்கனின் வாரிசுகளுக்கு முதலில், வீட்டு வசதி வாரியத்தில் வீடு வழங்குங்கள், என தமிழக அர சுக்கு வேண்டுகோள் விடுத்தவர், பிறர் நலன் பேணும் தோழர் நல்லகண்ணு. இன்றைய ஆரவாரம் மிக்க இந்திய அரசிய லில், சாதாரண நகர மன்ற உறுப்பினர்கள் கூட, கோடிகளில் புரண்டு, மாளிகை வீடுகளில் வாழும் போது, தோழர் நல்ல கண்ணு, சாதாரண வீட்டு வசதி வாரிய குடியிருப்பு வீட்டில் வாடகைக்கு வாழ்ந்து வருகிறார்.

தமிழகத்தில் இவரது கால் படியாத கிராமங்களே இல்லை என்று கூறும் அளவிற்கு, பட்டி தொட்டியெல்லாம் சென்று மக் கள் பணியாற்றியுள்ளார் தோழர். இதற்காக அவர் பெரும்பா லும் பொதுப் போக்குவரத்து வாகனங்களையே பயன்படுத்தி வந்துள்ளார். வசதி வாய்ப்பு இல்லாத இடங்களில் அவரது பயணத்திற்கு உதவிகரமாக முச்சக்கர வண்டிகள் இருந்தன. கால் நடையாகவும் நீண்ட பயணத்தை மேற்கொள்வார். ஒரு முறை காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவ ரான திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், வாகனத்தில் அதி காலை நேர பயணத்தை மேற்கொண்டு இருந்தபோது, பேருந்து நிறுத்தம் ஒன்றில், தன்னிடமிருந்த துணிப் பையை, தலையணையாகக் கொண்டு உறங்கிக் கொண்டு இருந்த ஒருவரை பார்க்கிறார். கூர்ந்து கவனிக்கும் போது, உறங்குப வர் தனக்கு அறிமுகமானவர் என்ற உணர்வு ஏற்பட, வாக னத்தை விட்டு உடனடியாக இறங்கி அந்த முதியவர் அரு கில் சென்றவர், திகைத்துப் போய் நின்று விட்டார். அவர் வேறு யாருமல்ல, அவர் தோழர் நல்லகண்ணு என்பதை அறிந்து, பீட்டர் அவர்கள், போக வேண்டிய இடத்திற்கு தனது வாகனத்தில் அழைத்துச் செல்வதாக கூறுகிறார். அதற்கு தோழர் தான் காலையில் ஒரு கிராமத்திற்கு செல்ல வேண்டி இருப்பதாகவும், அதுவரை தான் பேருந்து நிழற் குடையின் கீழ் இருந்து விட்டுச் செல்வதாகவும் புன்னகையுடன் பதில் கூறியிருக்கிறார். இதுதான் தோழரது எளிமையின் வலிமை. இது போன்ற ஏராளமான நிகழ்வுகள் அவர் வாழ்வில் மிகவும் சாதாரண விடயம்.

வெளியூர் செல்லும் போது இரவு தங்குவதற்கு நட்சத்திர விடு திகளை அவர் நாடிச் செல்வது இல்லை. கட்சி அலுவலகத் தில் தோழர்களுடன் தங்கிக் கொள்வார். கட்சி அலுவலகம் இல்லாத இடங்களில் தோழர்களின் வீடுகளில் இரவைக் கழிப்பார். எந்த வித ஆடம்பரத்தையும் விரும்பாத எளிமை யின் சிகரமாக வாழ்ந்து வருகிறார் தோழர் நல்லகண்ணு.

தனக்கு நன்கு அறியப்பட்ட தென்காசி பகுதியில் பாயும் கட னாநதியில் அணை கட்டினால் மக்களின் விவசாயம் மேலோங்கும் என உணர்ந்தார். அதனால் அணை கட்டும் கோரிக்கையை முன்வைத்து உண்ணாவிரதத்தை மேற் கொண்டார். வெற்றியும் பெற்றார். அவரின் அயராத முயற்சி யினால் இன்று அப்பகுதி விவசாயிகள் அதன் பயனை அனு பவித்து வருகின்றனர். பொதுமக்களின் குடிநீர்த் தேவையும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. ஆழ்வார் குறிச்சி மற்றும் கீழ ஆம்பூர் பகுதிகளில் அணை நீர் விவசாயத்திற்கு பயன்படுத் தப்பட்டு வருகிறது. நதிகளை பாதுகாக்க வேண்டும் என்ப தில் உறுதியாக இருந்தார். தென்தமிழகத்தில் வற்றாத ஜீவ நதியான தாமிரபரணி ஆற்றின், மணற் கொள்ளையை தடுப்ப தற்கு கடுமையாகப் போராடினார். தனி ஒருவராக நீதிமன்றம் வரை சென்று வாதாடியும் உள்ளார்.

பொதுவுடைமை நாடுகளின் அழைப்பின் பேரில் சீனா, ரஷ்யா, கிழக்கு ஜெர்மனி போன்ற நாடுகளில் பயணம் மேற் கொண்ட அனுபவமும் அவருக்கு உண்டு. அதிகார வேட்கை, பணத்தாசை, புகழ் என அலையும் அரசியல்வாதிகள் மத்தி யில், அப்பழுக்கற்ற நேர்மையான அரசியல் வாதியாக வலம் வந்து கொண்டிருக்கும் தோழர் நல்லகண்ணு அவர்கள், 1967, 1977, 1999 ஆண்டுகளில் தேர்தல் களத்தில் நின்ற போது, மக்கள் அவரை தேர்ந்தெடுக்கத் தவறிவிட்டனர். சாதி, மதம், பணம், பொய், போட்டி, பொறாமை தலைவிரித் தாடும் தேர்தல் களத்தில், நேர்மையின் நிஜமாக வாழ்ந்து வரும் தோழர் வெற்றி பெறாதது ஆச்சரியமான விடயம் அல்ல.

நேர்மையும் எளிமையும் பொதுவுடமைக் கொள்கையின் அடையாளம். அதனை அச்சுப் பிசகாது கடைப் பிடித்து வாழ்ந்து வருபவர் தோழர் நல்லகண்ணு. அவரைப் போற் றாத அரசியல் வாதிகளே இல்லை என்று கூறலாம். தியாகத் தால் தோழர் நல்லகண்ணு, தனக்கு அண்ணன் எனக் கூறி னார் கலைஞர் கருணாநிதி. பேராசிரியர் அன்பழகன், தோழர் சங்கரய்யா, வைகோ, பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி, நெல்லைக் கண்ணன், தவத்திரு பொன்னம்பல அடிகளார், இன்றைய தமிழக முதல்வர் ஸ்டாலின் என நூற்றுக்கணக் கான ஆளுமைகள், தோழர் நல்லகண்ணுவை வாழ்த்தி வரு கின்றனர்.

எட்ட முடியாத உயரத்தில் இருக்கும் தோழர் நல்லகண்ணு, காந்திய சகாப்தத்தின் கடைசிக் கருணை என்கிறார் தமிழ ருவி மணியன். காந்தி, காமராஜர் இருவரின் கலவையாக பார்க்கப்படும் தோழர், ஒரு அபூர்வ ஜோதி.

தமிழகத்தின் பெருமை! நூறாண்டு கடந்து வாழும் தோழர் நல்லகண்ணு! இன்னும் பல்லாண்டு நலமோடு வாழ வாழ்த்துவோம்.



jeyasingh@thaiveedu.com




பிறந்தமண்ணின் நினைவுகள் என்பது ஒவ்வொருவருடைய மனங்களிலும் ஆழமாகப் பதிந்து போயிருக்கும் பொக்கிஷங்கள். கால், கைகளால் அளைந்து விளையாடி வளர்ந்த பொழுதுகளை அந்நினைவுகள் எப்போதும் மனதுக்குள் பத்திரமாகப் பொதிந்து வைத்திருக்கும்.

அநேகமான கிராமங்கள் காலநகர்வில் நகரமயமாக்கலுக்கு உட்பட்டு வருகையில் எமது முந்தைய தலைமுறையினரிடம்



இருந்து வந்த பாரம்பரியப் பண்புகளிலும், வாழ்க்கை முறைகளிலும் மாற்றம் ஏற்பட்டு வருவதை எம்மால் பார்க்க முடிகிறது. இளைய தலைமுறையினரின் உலகம் விரிவு பெற்று வருகையில் அவர்களிடையே ஏற்படுகின்ற வாழ்வியல் மாற்றம் முன்னைய பாரம்பரிய வழக்கங்களைத் தம்மோடு எடுத்துக் கொண்டு வர முடியாத சூழலைத் தந்துவிடுகிறது. விலகி வந்து கொண்டிருக்கும் எமது பாரம்பரிய வாழ்வை, அதன் அழகை, பேச்சுவழக்கை மறுபடி நினைவுக்குக் கொண்டு வரும் விதமாகக் காரைக்கவி கந்தையா பத்மானந்தன் அவர்களின் சீத்துவக்கேடு நூல் அமைந்திருக்கிறது.

எங்கள் அப்புமார் ஆச்சிமார் வாழ்ந்த காலம் எத்தனை அழகானது. சூதுவாது தெரியாத, கள்ளங்கபடமற்ற, ஒருவருக்கொருவர் உதவி செய்யும் அறம் சார்ந்த வாழ்வை வாழ்ந்தார்கள். அதை இன்றைய தலைமுறையினரும் அறிந்து கொள்ள வேண்டும் என்ற பேரவா கொண்டு எழுதப்பட்ட நூலாக இதைப் பார்க்க முடிகிறது. ஒரு காலத்தின் அருமை பெருமைகளை, பண்பாட்டு வாழ்வியலை இன்றுள்ள சந்ததியினர் மட்டுமன்றி எதிர்காலச் சந்ததியினரும் அறிந்து கொள்ளும் வகையில் இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது.

ஒரு படைப்பாளியாகத் தான் சொல்ல விரும்பும் விடயத்தை எந்த விதமாகச் சொல்லவேண்டும் என்ற தீர்மானத்தை முதலில் எடுத்துக் கொண்டே இதை எழுதத் தொடங்கியிருப்பார் என்று நினைக்கிறேன். மற்றைய படைப்பாளிகளிடமிருந்து விலகி நிற்கும் தனித்தன்மையை இந்நூல் மூலம் நிரூபித்துக் காட்டியிருக்கிறார். இந்நூலின் முன்னூற்றி எண்பத்தி இரண்டு பக்கங்களிலும், ஒரு பிரதேசத்தின் வாழ்வியலை, அவர்களின் பேச்சுவழக்கிலேயே எழுதியிருப்பது அவரது ஆளுமையின் வெளிப்பாடாகவே கொள்ள முடிகிறது. இந்த உரையாடல் மொழி எமது மனதுக்கு நெருக்கமான தன்மையைத் தருவதோடு மட்டுமன்றி நேரடியான உரையாடல் தளத்தைத் திறந்து வைத்ததுமான உணர்வையும் தருகிறது.

காரைக்கவி கந்தையா பத்மானந்தன் அவர்கள் தான் பிறந்து வளர்ந்த ஊரை, தனது உறவுகளை, நட்புகளை, சுற்றத்தவரை எல்லாம் மனதார நேசித்துக் கொண்டாடுபவர். அந்தக் கொண்டாட்ட மனநிலையில் பிறந்த எழுத்துக்களே இங்கு பக்கத்துக்குப் பக்கம் பரவிக்கிடக்கின்றன. 'சீத்துவக்கேடு' என்ற தலைப்பை இவர் ஏன் வைத்தார் என்ற யோசனை எடுத்தவுடன் தோன்றக்கூடும். அதற்கு அவர் தனது 'என்ர உரை' பகுதியில் அழகான விளக்கம் ஒன்று தந்திருக்கிறார்.

'சீத்துவம் எண்டால் வளம், செல்வம், சுத்தம், திறன், சத்து எண்டு அகராதியில கிடக்கெண்டிற அப்பு ஊர்ப்பாசையில

சீத்துவத்தை வக்கு எண்டலாம். அத்தோட இவையெல்லாம் ஒரு மனிசன் உயிர் வாழத் தேவையான முக்கியமான விசயங்கள் கண்டியோ எண்டுவார்' என்று குறிப்பிட்டதோடு பழைய தமிழ் இலக்கியங்களில் சீத்துவம் பற்றி முன்னோர்கள் கூறியதையும் எழுதி விட்டு ஆனால் 'உப்பிடிக்கொத்த வளங்கள்




ஒண்டும் இல்லாத வாழ்க்கையை, வக்கத்த வாழ்க்கையை சீத்துவக்கேடான வாழ்க்கை எண்டலாம் எண்டுவார் அப்பு' என்று குறிப்பிட்ட நூலாசிரியர் 'முந்தி அந்தக் காலத்திலை எங்கட ஊர்வழி எவ்வளவு வளமான, சுகமான ஒரு வாழ்க்கையை, சீத்துவமான வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறம். இண்டைக்கு அப்படிக்கொத்த வாழ்க்கையைத் துலைச்சுப் போட்டு நிற்கிறமே எண்ட அர்த்தத்திலதான் சீத்துவக்கேடு எண்டு எழுத வெளிக்கிட்டனான்.' என்று வாக்குமூலம் தருகிறார். 'சீத்துவக்கேடு, துலைஞ்சு போன எங்கட வாழ்க்கை' என்ற தலைப்பை வைத்ததற்கான காரணத்தையும் சொல்கிறார்.

சீத்துவக்கேடு என்னும் சொல்லே எமது அப்புமார், ஆச்சிமார் அன்றைய வாழ்வில் இயல்பாய் பாவிக்கும் ஒரு சொல். இந்தத் தலைப்பே நூலின் அத்தனை விஷயங்களையும் ஒற்றைப் புள்ளியில் தாங்கி நிற்கிறது. தனது எழுத்தை எங்கட ஊரடி, எங்கட தலைவாசலடி, எங்கட அடுப்படி, எங்கட கிணத்தடி, எங்கட மாட்டடி, எங்கட ஆட்டடி, எங்கட கோழிக்கூட்டடி, எங்கட நாயடி என எட்டுப் பகுதிகளாகப் பிரித்திருக்கிறார். கிராமத்து மனிதர்களின் வாழ்க்கை இத்தனை பகுதிகளுக்குள்ளும்தான் இயங்கிக் கொண்டிருந்தது. காரைநகர் என்னும் ஒரு ஊர் அப்புமார், ஆச்சிமார் வாழ்ந்த காலத்தில் எப்படி இருந்தது என ஒரு வரலாற்றுப் பார்வையில் எழுதப்பட்ட நூல் இது. காரைநகர் எனும் ஊருக்கு ஒரு வரலாறு இருக்கிறது. அதன் ஆணிவேரைத்தேடி எடுத்து காலங்களின் சாட்சியங்களோடு ஒவ்வொரு விடயங்களையும் ஆய்வுத்தரவுகளோடு பதிவு செய்திருக்கிறார். இத்தனை ஆதாரங்களையும் தேடி எடுக்க எவ்வளவு உழைப்புத் தேவைப்பட்டிருக்கும். எத்தனை ஆர்வம் இருந்திருக்க வேண்டும். ஊரைப்பற்றியும் ஊரவரின் வாழ்வு பற்றியும் எத்தனையோ விடயங்கள் நூலின் பக்கங்களில் கொட்டிக் கிடக்கின்றன. இத்தனையையும் பதிவு செய்வதற்காக அவர் எத்தனை விடயங்களைத் தேடி உள்வாங்கியிருப்பார். அவரின் நினைவாற்றல் ஆச்சரியம் தருகிறது. ஊரின் அன்றாட வாழ்வைத்தாண்டி ஏற்பட்ட கல்வி, சமய அனுட்டானங்கள், ஆன்மீக செயற்பாடுகள் என்பவற்றின் படிப்படியான வளர்ச்சி பற்றியும் குறிப்புகள் இருக்கின்றன. ஊரில் உள்ள பாடசாலைகள், கோவில்கள், ஊரின் அபிவிருத்திச் சங்கங்கள், எல்லாம் எப்போது யாரால் எங்கு தோற்றுவிக்கப்பட்டன என்பதைப் போன்ற பல விபரங்கள் பொருத்தமான இடங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஊர் சார்ந்த மனிதர்கள், அவர்கள் ஊருக்காகச் செய்த பங்களிப்புகள், எழுதிய புத்தகங்கள் பற்றிய விபரங்களும் இதில் இடம்பெற்றுள்ளன.

ஊராட்கள் ஊரில் மட்டுமல்ல வேறு எந்த இடம் சென்றாலும் தங்கள் பண்பாட்டு அம்சங்களை, பழக்கவழக்கங்களை, ஆன்மீக சமய சடங்கு முறைகளைத் தொடர்ந்தும் கடைப்பிடிப்பார்கள். அதில் சமரசம் செய்து கொள்ளமாட்டார்கள் என்று குறிப்பிட்டிருப்பதும் கவனிக்கத்தக்கது. ஊரை அடுத்து ஊருக்குள் இருக்கும் வீடும் அதன் வாழ்க்கை முறையும் அடுத்தடுத்த அத்தியாயங்களில் விரிந்து கொள்கிறது. என்ர ஆச்சி, என்ர அப்பு, எங்கட வீடு எனும் போது அதில் தேங்கி நிற்கும் பெருமிதத்தையும் உரிமையையும் எம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது. மனிதர்களை மட்டுமின்றி தான் நேசித்த ஆடு, மாடு, கோழி, நாய் என்று வாய் பேசா உயிரினங்களையும் இங்கு உலவ விட்டிருக்கிறார். என்ர என்பதில் உள்ள உரிமை அந்த உயிரினங்களுக்கும் கிடைக்கிறது. என்ர என்பது ஒரு வாஞ்சை மிகுந்த சொல்லாக மனதை வருடுகிறது. எம் முன்னோர்கள் அன்றாடம் பாவித்த வசீகரச் சொல் அது.

இவரது எழுத்தில் குறிப்பிடக்கூடிய ஒரு சிறப்பம்சமாக நாம் காணக்கூடியவை, எமது அன்றாட வாழ்வின் நடைமுறைகளைச் சங்க காலத்து வாழ்வின் தொடர்ச்சி எனப் பதிவு செய்திருப்பது, பொருத்தமான இடங்களில் சங்க காலப் பாடல்களைப் போட்டு அன்றைய காலத்து வாழ்வுக்கும் எமது காலத்து வாழ்வுக்குமான ஒற்றுமையைச் சுட்டியிருப்பது, மூதாதையர்களின் பழக்கவழக்கங்கள் தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வருகின்றமையை ஆதாரத்துடன் நிறுவுவது போன்றவற்றினைக் குறிப்பிடலாம். இதில் பல புதுமைகளையும் அவதானிக்க முடிகிறது. நாம் அறியாத பல விடயங்களை அறிந்து கொள்ள முடிகிறது. கிராமத்து மக்களின் வாழ்வில் அன்றாடம் நடக்கின்ற பல விடயங்களைத் தனக்கேயுரிய எழுத்து நடையில் சுவாரசியமாகச் சொல்லிப் போகிறார். மாடு, ஆடு, கோழி, நாய் வளர்ப்பதில் பல நுட்பங்கள்

உள்ளதென்றும் அவற்றைக் கிராம மக்கள் எப்படி கையாண் டார்கள் என்பதையும் இவர் எழுதியதை ஒரு புன்னகையுடன் வாசிக்க முடிகிறது. இவரிடம் இயல்பாக இருக்கும் நகைச் சுவை உணர்வு அவரின் எழுத்துக்களிலும் பிரதிபலிக்கிறது. அது சலிப்பற்ற வாசிப்புக்கு எம்மை அழைத்துச் செல்கிறது. ஆச்சி, அப்புவின் காலத்தோடு எம்மை இணைய வைக்கிறது.

நூலாசிரியரின் சிறு வயதுக் காலம்தான் அவரது அனுபவமாக இங்கே பகிரப்படுகிறது. சைக்கிள் ஓடப்பழகிய நாட்கள் உட் பட தான் சிறுவயதில் பார்த்த கிராமத்து வாழ்க்கையையும் சிறு பெருமிதத்துடன் பகிர்ந்து கொள்கிறார். சிறு வயது நண பர்களைப் பற்றி எழுதும் போது மலரோடு உள்ள நட்புப் பற் றியும் அவ்வப்போது தொட்டுச் செல்கிறார். வேலிப் பொட்டுக் குள்ளால் அன்பை வளர்த்த காலத்தையும் பதிவு செய்கிறார். வெள்ளந்தி மனிதர்களின் சுவாரசியமான பக்கங்கள் அவை. ஒரு காலத்தில் கிராமங்களில் நடக்கும் திருவிழாக்கள், சின் னமேளம் எனும் ஆடல் நிகழ்வு, பற்றியெல்லாம் இன்றைய தலைமுறையினர் அறியமாட்டார்கள். அந்தத் திருவிழாக்கள் பல சோடிகளையும் சேர்த்து வைத்திருக்கிறது. பல கை கலப்புகளையும் நடத்தி வைத்திருக்கிறது.

அப்பு, ஆச்சி காலத்தில் அன்றாடம் பாவித்த பல சொற்கள் இப்போது வழக்கொழிந்து போயிற்று. திருகைக்கல்லு, ஆட் டுக்கல்லு, அம்மிக்கல்லு, கல்லுரல் என்று இவையெல்லாம் பாவனையில் இல்லாத பொருட்களாகி விட்டன. அப்பு, ஆச்சி, குஞ்சியையா, குஞ்சியம்மா, சின்னம்மா, அம்மான் என்ற உறவுமுறைச் சொற்களும் மறைந்துபோயிற்று. பல பழக்கவழக்கங்களிலும் மாற்றங்கள் வந்துவிட்டன. அதனால் ஏற்பட்ட ஆதங்கம்தான் இப்படி ஒரு நூலை எழுதவேண்டும் என்ற நினைப்பை இவருக்குள் ஏற்படுத்தியிருக்க வேண்டும். அவருடைய எண்ணமும் தேடலும் சேர்ந்து நமக்கு ஒரு அரு மையான வாசிப்பனுபவத்தைத் தந்திருக்கிறது.

சங்ககாலப் பாடல்களில் சிலவற்றையே நான் படித்திருக்கி றேன். எமது வாழ்வின் அழகுகளை அவை எத்தனை அற்புத மாகச் சொல்லியிருக்கின்றன. சங்ககாலத்து வாழ்வின் தொடர்ச்சியாகவே எமது வாழ்வும் இருக்கிறது. அந்த ஒப்பீடு களை வாசித்தபோது சங்ககாலப் பாடல்களைத் தேடிப் படிக் கவேண்டும் என்ற ஆர்வம் எழுகிறது. நூலாசிரியர் முன்னுரை யில் குறிப்பிட்டுள்ள மிக முக்கியமான ஒரு கருத்து.

‘இலக்கியம் தெரியாட்டில் காலப்போக்கில மொழி தெரியா மல் போகும். மொழி தெரியாமல் போனால் கடைசிக் கந்தா யத்தில தமிழ் எண்ட ஒண்டே இல்லாமல் போயிடும். எண்டப டியால எங்கட சங்க இலக்கியங்கள், பிராந்திய மொழிச் சொல்லாடல்கள் எல்லாம் எங்கட அடுத்த சந்ததியினருக்குக் கடத்தப் படவேணும் கண்டியளோ’ அனைவரும் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒரு விடயம் இது. எமது பாரம்பரியத்தின தும் எமது மொழியினதும் அருமை பெருமைகளை அற்றுப் போக விடாமல் காப்பது என்பது எதிர்காலச் சந்ததியின ருக்கு நாம் செய்யும் பெரும்பணியாகும்.

காரைநகர் மண்ணின் ஒரு காலத்து வரலாற்றை இந்நூல் சொல்வதாக இருந்தாலும் இன்றைக்கு ஐம்பது வருடங்க ளுக்கு முன் உள்ள பல யாழ்ப்பாணக் கிராமங்களின் வரலா றாகவும் இதைக் கொள்ள முடிகிறது. துலைஞ்சு போன எங் கட கிராமத்து வாழ்க்கையை ஆவணப்படுத்த முன்வந்த மைக்காக நூலாசிரியருக்கு எமது பாராட்டுக்கள். சிறுக தையோ, கவிதையோ, கட்டுரையோ, சொல்ல வந்தது எந்த வடிவம் என்றால் என்ன, சொன்னவைகள் எமது மனதோடு பேசவேண்டும். அதுதான் எழுத்தின் வெற்றி. வாசித்துவிட்டுக் கடந்து போக முடியாதபடி நம் மனதோடு நெருக்கமாக உரையாடிக் கொண்டே இருக்கிறது இந்த சீத்துவக்கேடு.

நேர்த்தியான வடிவத்துடனும் தெளிவான அச்சமைப்புடனும் வெளிவந்திருக்கும் இந்நூல் ஒரு எழுத்துப்பிழையுமின்றி இருப்பது பாராட்டுக்குரியது. இலங்கையில் மிகத் தரமான வகையில் புத்தகங்கள் அச்சிடப்பட்டு வெளிவருவதைச் சமீப காலமாகப் பார்க்க முடிகிறது. மகிழ்வுக்குரிய விடயம் இது. தனது தனித்துவமான எழுத்தாற்றலுடன் இவர் தொடர்ந்தும் எழுத்துத் துறையில் பயணிக்க வேண்டும். வாசிக்கச் சொல் லியும் எழுதச்சொல்லியும் ஊக்குவித்து உசார் படுத்தும் வீட் டம்மா இருக்கும் போது இவரால் இன்னும் நிறைய எழுதமுடி யும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது.
எழுதுங்கள். வாழ்த்துகள்.



thamaraichelvi@thaiveedu.com



# ஒரு நூலின் உருவாக்கம்:

## ஆசிரிய - வெளியீட்டாளருக்கான கைந்நூல்

– என். செல்வராஜா

13

கடந்த மாத இதழில் ஒரு நூலுக்கு சர்வதேச தராதர நூல் எண் வழங்கும் முறை பற்றி மிக விரிவாக அறிந்துகொண்டோம். இதைப் பற்றிய புரிதல்கள் எம்மவர்களிடையே எவ்வாறு இருந்துவந்துள்ளது என்பது பற்றியும் சஞ்சிகைகளுக்கு வழங்கும் சர்வதேச தராதர பருவவெளியீட்டு எண் வழங்கும் முறை பற்றியும் இவ்விதழில் நோக்குவோம்.

சர்வதேச தராதர பருவவெளியீட்டு எண் என்பது 'சஞ்சிகைகள்' எனப்படும் பருவ வெளியீடுகளுக்கு வழங்கப்படும் எண்ணாகும். தனி நூல்களுக்கு வழங்கப்படுவதிலிருந்து இது வேறுபடுகின்றது. பருவ வெளியீடுகளுக்கும், புதினப் பத்திரிகைகளுக்கும், நிறுவனங்களுக்கான ஆண்டு மலர்களுக்கும், ஆய்வேடுகளுக்கும் (Journals) வழங்கப்படும் எண்கள் ISSN (International Standard Serial Number) எண்களாகும். இவை ஓர் ஏட்டுக்கு ஒரு தடவை மாத்திரமே வழங்கப்படும். உதாரணமாக ஞானம் சஞ்சிகையின் ISSN எண் 2478-0340 என்பதாகும். ஞானம் சஞ்சிகையின் ஒவ்வொரு மாத இதழிலும் இதே இலக்கம் மாற்றமேதுமின்றிக் குறிப்பிடப்பட்டிருக்கும். இவ்வெண் மேலட்டையின் வலது பக்க மேல் மூலையில் அல்லது சஞ்சிகையின் நூலியல் விபரம் தரப்பட்டுள்ள பக்கத்தில் குறிப்பிடப்படவேண்டும் என்பது விதியாகும். அதிக தாள்களுடன் வெளியாகும் தடிப்பான சஞ்சிகைகளில் இவ்விலக்கம் பின்னட்டையின் வலதுபுறத்துக்கீழ் மூலையில் கோட்டுரு அடையாளத்துடன் (Bar Code) இடம்பெறுவது வழக்கம்.

ஒரு நாட்டில், சர்வதேச தராதர நூல் வெளியீட்டு எண்ணை வழங்குவதற்கான அதிகாரத்தைப் பெற்றிருக்கும் நிறுவனமே ISSN எண்ணையும் வழங்கும் கடப்பாட்டையும் கொண்டுள்ளது.

தமிழ் நூல்களுக்கு சர்வதேச தராதர நூல் எண் பெறுவதில் எம்மவர்கள் அதிக அக்கறை கொண்டிருப்பதில்லை என்பது பரவலானதொரு குற்றச்சாட்டாகும். இதனை அறியாமை என்று மேலெழுந்தவாரியாகக் குற்றம் சாட்டுவது தவறு. அறியாமைக்கும் மேலாக, பயன்பாட்டுத் தேவை என்றும் ஒன்றுள்ளது. சர்வதேச தராதர நூல் எண் சட்டபூர்வமான ஒன்றல்ல. சர்வதேச தராதர நூல் எண்ணை ஒரு பதிப்பாளர் பெற்றுப் பிரசுரிக்கவில்லை என்பதற்காக மாத்திரம் அவரை சட்டத்தின் முன் நிறுத்தமுடியாது. அதன் பயன்பாட்டின் முக்கியத்துவத்தை அவராக உணர்ந்து பயன்படுத்தத் தொடங்கவேண்டும். இலங்கையில் மின்வருடல் (Scanning) முறையில் நூல் விற்பனையாளர்கள் தமது பண்டங்களைப் பதிவுசெய்யத் தொடங்கிவிட்டார்கள். அதன் பயன்பாடு வர்த்தகச் சந்தையில் அதிகரிக்கும்போது, நூல்களுக்குச் சர்வதேச தராதர நூல் எண்கள் கோட்டுரு அடையாளத்துடன் (BarCode) இடம்பெறுவதும் தேவையின் நிமித்தம் எதிர்காலத்தில் அதிகரித்துச் செல்லும். அந்த வசதி இல்லாத நூல்களை நூல் விற்பனை நிறுவனங்கள் எதிர்காலத்தில் தமது நேரவிரயமாதல் காரணமாகத் தவிர்க்கவே முனையும். காரணம் கோட்டுரு அடையாளத்தைக் கொண்டிராத நூல்களின் இலக்கத்தை காசாளர் ஒவ்வொரு இலக்கமாகப் பொறித்தே அந்த நூலை ஒவ்வொரு தடவையும் விற்பனை செய்யவேண்டியிருக்கும். விற்பனை நிலையத்தின் முகவர் இதனால் சிரமத்தை எதிர்நோக்கவேண்டி வரலாம்.

ஐரோப்பிய நாடுகளின் பட்டி தொட்டியெங்கும் உள்ள கடைகளில் கணினிமயப்படுத்த வர்த்தகப் பதிவுகள் இடம்பெறுவதால் எல்லாவிடத்திலும் மின் வருடல் (Scanning) பாவனையில் உள்ளது. நூலகங்களில்க்கூட இந்த மின்வருடல் முறையே நூல் விநியோகத்திட்டத்தில், நூல் கொள்வனவில் என்றெல்லாம் பயன்படுத்தப்படுகின்றன. அதனால் கோட்டுரு அடையாளத்துடன் (Bar Code) இல்லாத எந்தவொரு நூலும் நூலகப் பாவனைக்குக் கிட்ட வாய்ப்பிழந்து போகும். இந்நிலையில் வெளியீட்டு விழாக்களில் மாத்திரமே புத்தக விற்பனையை நம்பியிருக்கத் தயாராகவில்லாத பதிப்பாளர் எவரும் தமது நூலுக்கு கோட்டுரு அடையாளத்துடன் தராதர எண்ணைப் பெறத் தயங்கமாட்டார்கள் என்பதை நாம் எதிர்பார்க்கலாம்.

இனி தமிழ்ச் சூழலில் சர்வதேச தராதர நூல் எண் பற்றி என்னுடன் பரிமாறப்பட்ட சில கருத்துகளைக் கேள்வி பதில்களாகப் பதிவு செய்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகின்றேன்.

▶ **அண்மைக்காலத்தில் மின்நூல்கள் தமிழில் வெளிவரத் தொடங்கிவிட்டன. அவற்றிற்கும் சர்வதேச தராதர நூல் எண் தேவையா?**

ஆம். மின்னூடகத்தில் வெளியிடப்படும் நூல்களும் சர்வதேச ரீதியில் தனித்துவ அடையாளத்தைக் கொண்டிருக்கவேண்டிய தேவை உள்ளது. அவையும் விற்பனைச் சந்தை வாய்ப்பை எதிர்நோக்கியிருப்பவையே. சர்வதேச தராதர நூல் எண் ஒரு நூலின் அடையாளத்தை எண்களின் உருவில் வெளிப்படுத்துகின்றது. தமிழ் மொழி அறிவு அற்றவர்களாலும் இலக்கத்தைக் கொண்டு நூலை அடையாளம்காண இவ்வெண் உதவுகின்றது.

▶ **நான் இலங்கையில் ஒரு நூலை வெளியிடும் அதேவேளையில் அந்நூலின் தமிழகப் பதிப்பொன்றையும் வெளியிட உத்தேசித்திருக்கிறேன். தமிழகப் பதிப்பில் இலங்கைப் பதிப்பிற்கான கோட்டுரு அடையாளத்துடன் கூடிய தராதர எண்ணைப் பயன்படுத்த அனுமதிக்கலாமா?**

இல்லை. தமிழகப் பதிப்பிற்கான சர்வதேச தராதர நூல் எண்ணை தமிழகத்தின் பதிப்பகத்தினர் அங்கு பெற்றுக்கொள்ளவேண்டும். சர்வதேச தராதர நூல் எண் வழங்கும்போது அதில் குறிப்பிடப்படும் ஐந்து பிரிவுகளிலும் இரண்டாவதாக உள்ள நாட்டுக்குரிய இலக்கமும், மூன்றாவதாக உள்ள வெளியீட்டாளருக்குரிய இலக்கமும் இலங்கைப் பதிப்பிற்கான சர்வதேச தராதர நூல் எண்ணிலிருந்து வேறுபடும் அல்லவா? எனவே, இரு பதிப்புகளுக்கும் இருவேறு ISBN இலக்கங்களே வழங்கப்படவேண்டும்.

▶ **இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் ஒரு நூலைத் தேசிய நூலகத்திடமிருந்து ISBN இலக்கம் பெற்று வெளியிட்டிருந்தேன். தற்போது மீண்டும் அதனை இலங்கையிலேயே மறுபதிப்புச் செய்ய விரும்புகின்றேன். மீண்டும் புதிதாக சர்வதேச தராதர நூல் எண்ணைப் பெற்றுக்கொள்ள வேண்டுமா?**

இரண்டாண்டுகளுக்கு முன்னர் நீங்கள் வெளியிட்ட நூல், அதே பதிப்பகத்தின் மூலம் மறுபதிப்பாக வெளியிடப்படுமாக இருந்தால் முன்னைய சர்வதேச தராதர நூல் எண்ணையே பயன்படுத்தலாம். இரண்டாவது பதிப்பை புதிய பதிப்பகத்தின் மூலம் (அச்சகமல்ல) வெளியிட உத்தேசித்திருந்தால், அந்தப் புதிய பதிப்பகத்தினால் (வெளியீட்டாளரினால்) வேறொரு சர்வதேச தராதர நூல் எண் பெற்றுக் கொள்ளப்படவேண்டும். புதிய பதிப்பின் பதிப்பாளர், முன்னைய பதிப்பாளருக்குரிய ISBN இலக்கத்தைப் பயன்படுத்துவது தவறானதாகும். முன்னரும் தற்போதும் நீங்களே ஆசிரிய வெளியீட்டாளராக இருந்து, புதிய பதிப்பினை முன்னைய அச்சகத்தில் இல்லாமல் பதிய அச்சகத்தில் அச்சிட்டுப்பெறத் திட்டமிட்டிருந்தால் பழைய ISBN இலக்கத்தையே பயன்படுத்தலாம்.

▶ **இலங்கையில் வெளிவந்த சில நூல்களுக்கு ஒரே சர்வதேச தராதர நூல் எண் வழங்கப்பட்டுள்ளதே. இது எவ்வாறு சாத்தியமாயிற்று? இதன் சாதக பாதகங்கள் என்ன?**

நூல்தேட்டப் பதிவுகளின்போது இதனை நானும் அவதானித்து வந்துள்ளேன். முடிந்தவரை நூல்தேட்டப் பதிவுகளில் இதனைச் சுட்டிக்காட்டியும் வந்திருக்கிறேன். இது உண்மையில் பதிப்பாளரின் அறியாமை அல்லது கவனயீனப் பிழை என்றே கருதவேண்டும். இதற்கு ஓர் உதாரணத்தைக் காட்டலாம். ஷாமிலா ஷெரீப் அவர்களின் 'நிலவின் கீறல்கள்' என்ற கவிதைத் தொகுதிக்கு வழங்கப்பட்ட 978-955-1447-01-4 என்ற இலக்கம், முஸ்டீன் எழுதிய 'மௌனப் போரும் புன்னகை ஆயுதமும்' என்ற நூலுக்கும் வழங்கப்பட்டுள்ளதை வாசகர்கள் அவதானித்திருக்கலாம். இவ்விரு நூல்களும் வாகனேரி செய்ஹ் இஸ்மாயீல் ஞாபகார்த்த பதிப்பகம் வெளியிட்ட நூல்கள். இரண்டையும் தெகிவளை, ஏ.ஜே. பிரின்ட்ஸ் என்ற அச்சகம்தான் அச்சிட்டுள்ளது. 2012-ல் சமகாலத்தில் இவை வெளியிடப்பட்டுமுள்ளன. இத்தகைய சந்தர்ப்பங்களில் பொதுவாக நூலாசிரியரின் சம்பந்தமில்லாமல் நிகழும் ஒரு கவனயீனத் தவறு இதுவாகும். இதன் மூலம் நிகழப்போகும் குழப்பநிலை என்னவாக இருக்குமெனில், ஓர் ஆசிரியரின் நூலை ISBN இலக்கங்களை அடிப்படையாகக்கொண்டு கொள்வனவு செய்ய முனையும் ஒரு நிறுவனத்திற்கு மற்றைய ஆசிரியரின் நூல் போய்ச் சேரும்.

▶ **ஒரு நூலின் மேலட்டையில் ஒரு சர்வதேச தராதர நூல் எண்ணும், உள்ளே வேர்சோ பக்கத்தில் வேறொரு சர்வதேச தராதர நூல் எண்ணும் காணப்படுகின்றதே. இதன் காரணமென்ன?**

இதுவும் கவனயீனப்பிழை தான். இரண்டாவது பதிப்பில் பாரிய மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு இருந்தாலேயன்றி, ஒரு நூலுக்கு இரண்டு இலக்கங்கள் இருப்பதென்பது சாத்தியமேயில்லை. இங்கு நூல் வெளியீட்டு நிறுவனங்கள் கைக்கொள்ளும் ஒரு முறைமையும் இத்தகைய தவறுகளுக்கு வழிகோலுவதுண்டு. ஒரு பதிப்பகம் நூலின் அட்டையொன்றை வடிவமைக்கும்போது, அந்தப் பதிப்பகத்தின் முன்னைய வெளியீடொன்றின் மேலட்டையின் அளவுப் பிரமாணங்களைப் பயன்படுத்துவதன் மூலம் தமது வேலையை எளிதாக்கிக் கொள்வதுண்டு. இத்தகைய சந்தர்ப்பங்களில் மேலட்டை வடிவமைப்பாளர் முன்னைய நூலின் சர்வதேச தராதர நூல் எண்ணையோ அதன் கோட்டுரு அடையாளத்தையோ மாற்ற மறந்துவிடுவதுண்டு. இதனால் வேர்சோ பக்கத்தில் நூலுக்கான இலக்கமும், பின்னட்டையில் முன்னர் வெளிவந்த வேறொரு நூலுக்கான இலக்கமும் பதிவுசெய்யப்படுவது சாத்தியமாகின்றது. இத்தகைய தவறுகளைச் சரவைபார்க்கும்போது பதிப்பாளர் அவதானமாக இருப்பதன்மூலம் தவிர்த்துக் கொள்ளலாம். இத்தவறைப் பிரபல்யமான பல வெளியீட்டு நிறுவனங்களின் நூல்களிலேயே அதிகமாக அவதானிக்க முடிகின்றது.

▸ **வெளிநாடுகளில், குறிப்பாக புகலிட தேசங்களில் ஒரு பதிப்பாளர் தனக்கென ஒதுக்கப்பட்ட சர்வதேச தராதர நூல் எண் தொகுதியிலிருந்து சில இலக்கங்களைத் தனது நண்பர்களின் நூல்களுக்கு இலவசமாகவோ சிறிய அன்பளிப்பினைப் பெற்றுக்கொண்டோ வழங்கி வருகிறார். இது எவ்வாறு சாத்தியம்?**

லண்டனில் நீங்கள் சர்வதேச தராதர நூல் எண் பெற விண்ணப்பிக்கும்போது, ஒரு நூலுக்கான இலக்கம் என்று பெற முடியாது. 10 எண்கள் அல்லது 100 எண்கள் அல்லது 200 எண்கள் என, ஒரு தொகுதி எண்களையே பெற்றுக்கொள்ளலாம். இவற்றை வழங்க முறையே 150, 400, 600 பவுண்கள் வரை நீல்சன் நிறுவனத்தால் அறவிடப்படுவதுண்டு. தொடர்ச்சியாக நூல்களை எழுதும் ஆசிரிய வெளியீட்டாளர்கள் 10 சர்வதேச தராதர நூல் எண்களை வாங்கி வைத்திருப்பது வசதியாக விருக்கும். ஓரிரு நூல்களை மாத்திரம் வெளியிட விரும்பும் ஒருவர் வீணாக அதிக பணத்தைச் செலவுசெய்ய வேண்டியிருக்கின்றது. இத்தகைய சூழலுக்கு முகம்கொடுக்கும் ஒரு ஆசிரிய வெளியீட்டாளர், அன்பளிப்பாகவோ, சொற்ப பணத்தொகையை வழங்கியோ இலக்கத்தை முன்னையவரிடமிருந்து பெற்றுத் தனது நூலுக்குப் பயன்படுத்திக்கொள்கிறார். இத்தகைய சந்தர்ப்பங்களில் இவர்கள் கவனிக்கவேண்டிய முக்கிய விடயம் என்னவென்றால், தனது நூலுக்கு மற்றொருவர் வாங்கி வைத்திருக்கும் ISBN இலக்கத்தை பயன்படுத்துவ தன்மூலம், தனது நூலை முன்னையவரின் வெளியீடாகவே ஏற்கவேண்டியிருக்கும். அதாவது, குறித்த நூலின் வெளியிட்டாளர் என்ற உரிமம் ISBN இலக்கத்தின் மூல உரிமையாளரிடமே போய்விடுகின்றது. பிரதிகள் தேவைப்படுமிடத்து, அல்லது அந்த நூலுக்கான விருது வழங்கப்பட்டால் அல்லது அந்நூல் பற்றிய தகவல் கோருமிடத்து, நூலகங்களின் கொள்வனவாளர்கள் முன்னையவரையே அணுகுவார்கள். காரணம் பின்னையவர் ஒரு ஆசிரிய-வெளியீட்டாளராக இருப்பினும், நூலின் வெளியீட்டாளருக்கென ஒதுக்கப்பட்ட இலக்கம், மூல உரித்தாளருடையதாகவே இருக்கும். எனவே சிறிதளவு காசை மீதப்படுத்தும் நோக்கோடு காக்கையின் கூட்டில் குயில் முட்டையிடக்கூடாது.

மேற்கண்ட கேள்விகள் என்னிடம் தனிப்பட்ட படைப்பாளிகளினால் அவ்வப்போது பரவலாகக் கேட்கப்பட்டவை. அதற்கான பதில்கள் சர்வதேச தராதர நூல் எண் பற்றிய விரிவான அறிதலை வாசகர்களுக்கு வழங்கியிருந்தால் எனது பணி வெற்றியடைந்துள்ளதாகக் கருதுவேன்.

இத்தொடரின் பத்தியை எழுதிக்கொண்டிருந்த வேளையில் நூல்தேட்டம் பதிவுக்காக எனக்குக் கிடைத்த 'கிழித்துப் போடுங்கள்' என்ற நூல் பற்றிய குறிப்பொன்றினை இக்கட்டுரைத் தொடரின் தேவை கருதி பதிவுசெய்ய விரும்புகின்றேன். மேற்குறிப்பிட்ட நூலின் வேர்சோ பக்கத்தை உள்ளபடியே உங்களுடன் பகிர்ந்துகொள்கின்றேன். (படம் 1-ஐ பார்க்கவும்)



பதிவுத் தரவுகள்

தலைப்பு : கிழித்துப்போடுங்கள்
வகை : தெரியாது
எழுதிக் கிழித்தவர் : சித்தன் (எஸ்.ஜே.பிரசாத்)
உரிமை : சித்தனுக்கு
இரண்டாம் பதிப்பிற்கு
முந்தைய பதிப்பு : நவம்பர் 2010
வடிவமைத்து கிழித்தவர் : [illegible]
பக்கங்கள் : எண்ணிப்பாருங்கள்
அச்சிட்டோர் : [illegible], கொழும்பு 13.
077 53 83 13 9
வெளியீடு : [illegible]
ஜோர்ஜ் ஆர்.டி. சில்வா மாவத்தை,
கொட்டாஞ்சேனை, கொழும்பு 13.
014 575 777.
விலை : ரூபா. 400.00

படம் 1

வீரகேசரி வார வெளியீட்டில் வெளிவந்த 'நான் சித்தன்' என்ற கேள்வி பதில் பகுதி தனியானதொரு நூலாக 'கிழித்துப் போடுங்கள்' என்ற தலைப்பில் தனி நூலாகத் தொகுக்கப்பட்டுள்ளது. மனிதரில் தோன்றும் அறியாமையை, மூடநம்பிக்கைகளை, சந்தேகங்களை, அவநம்பிக்கையைக் கிழித்துப் போடும்படியும் புதுப்பித்துக் கொள்ளும்படியும் (நம்பிக்கைகளைக் கட்டியெழுப்பும்படியும்) மானிட மேம்பாட்டுக்கான இந்நூல் வாசகர்களிடம் விண்ணப்பிக்கின்றது. இந்நூலின் ஆசிரியர் எஸ்.ஜே. பிரசாத் வீரகேசரி வார வெளியீட்டில் ஊடகவியலாளராகப் பணியாற்றுவதாக அந்நூலில் ஒரு குறிப்புள்ளது. அவர் தனது நூலின் வேர்சோ பக்கத்தை நகைச்சுவை உணர்வுடன் தொகுத்திருக்கிறார் என்றே நம்புகின்றேன்.

இந்நூலைப் பார்த்த வேளை பட் மூன் மற்றும் சாரா நெய்லர் ஆகியோர் இணைந்து எழுதிய Do not read this book என்ற நூலும், டோனால்ட் ரூஸ் எழுதிய அதே தலைப்பிலான நேர முகாமைத்துவம் சார்ந்த அங்கத உணர்வுடன் கூடிய சீரிய சான நூலும் என் நினைவில் வந்து சென்றன.







அடுத்த இதழில் ஈழத்துத் தமிழ் நூல்களின் அட்டைப்பட வடிவமைப்பு பற்றிய சில கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

*(இன்னும் வரும்...)*



selvarajah.n@thaiveedu.com

# ஈழ இலக்கியவெளியில்
# எழுத்து - வாசிப்பு - பதிப்பு
## புதிய சாத்தியங்களை நோக்கி

– ஜெஃப்ரி ஹாசன்

புத்தகங்களை வெளியிடுவதும், வாங்குவதும் இலங்கை தமிழ் எழுத்தாளர்களுக்கு மிகப் பெரிய சவாலாக இன்று மாறியுள்ளது. புத்தகத்தைப் பதிப்பிப்பதிலுள்ள அதிக பொருளாதாரச் செலவு, அதேநேரம் புத்தகங்களுக்கான அச்சுச் செலவின் அதிகரிப்பு, மற்றும் புத்தங்கள் மீதான வரி அதிகரிப்பும்



– எழுத்தாளர் காஞ்சனா

ஈழ எழுத்தாளர்களைப் புத்தகங்களை வாங்கி வாசிக்க முடியாத சூழலுக்குள் தள்ளி விட்டிருக்கின்றன. இந்தச் சூழல் தொடர்ந்தால் ஈழத் தமிழ் அறிவியக்கம் பெரும் நெருக்கடிகளைச் சந்திக்கும் ஆபத்து உள்ளது. இதனால் ஈழ எழுத்தாளர்கள் இந்தச் சூழலை வெற்றிகொண்டு அறிவியக்கப் பணியை அடுத்த தளத்துக்கு கொண்டு செல்ல வேண்டிய தேவை வலுத்துள்ளது.

இன்று பதிப்புச் சந்தையில் ஓடியோ மற்றும் மின் நூல்களின் வருகையும் எழுத்தாளர்களின் பணியைப் பாதுகாப்பதில் பங்களிக்கின்றன. இந்த டிஜிட்டல் மயமாக்கலை நாம் பயன்படுத்திக் கொள்வது தொடர்பில் சிந்திக்க வேண்டிய தருணம் இது. இலக்கியத்தின் தொடர்ச்சியான வளர்ச்சிப் போக்கில், தொழில்நுட்பத்தை நோக்கிய உலகளாவிய மாற்றத்தை இலங்கையும் அடைய வேண்டியது அவசியமானதாகும். உயர்மட்ட டெவலப்பர்களைக் கொண்டிருந்தாலும், இந்த முன்னேற்றங்களை முழுவதுமாக ஏற்றுக்கொள்வதில் ஈழத்தமிழ்ச் சூழலில் சற்றுத் தயக்கம் இருப்பது போல் தெரிகிறது. மின் நூல்களும், ஓடியோ புத்தகங்களும் இன்று உலகளாவிய வெளியீட்டுக் காட்சியில் பிரதானமாகிவிட்டன. வளர்ந்த நாடுகளில், ஒரு புத்தகம் சந்தைக்கு வரும்போது, அது ஒரு மும்மடங்கு உபசரிப்பு போன்றது - அதாவது அச்சு, ஓடியோ மற்றும் டிஜிட்டல் ஆகியவற்றில் கிடைக்கும். வாசகர்கள் தங்களின் விருப்பங்களுக்கேற்ப அவற்றைப் பெறுகிறார்கள். சிலர் புத்தகத்தை தொட்டுணரக்கூடிய அனுபவத்தை விரும்புகிறார்கள், மற்றவர்கள் ஒலிக்க விட்டு (play) கேட்க விரும்புகிறார்கள். இது சுவாரஸ்யமாக இருக்கிறது. இங்கு இலங்கையில், மின் நூல்கள் பாரம்பரிய அச்சுச் சந்தையைப் பாதிக்கலாம் என்பது பற்றிய கவலை உள்ளது. ஆனால் பாருங்கள், பதிப்பகம் ஒரு பெரிய தொழிலாக இருக்கும் நாடுகளில், அவை அனைத்து வடிவங்களையும் தடையின்றி இணைக்கின்றன.

இப்போது டிஜிட்டல் புத்தகங்களும் நம் கவனத்தைப் பெரிதளவில் ஈர்த்து வருகின்றன. அவை இலக்கியத்தின் சூப்பர் ஹீரோக்களைப் போன்றவை - மலிவு விலை, எடுத்துச் செல்லக்கூடியது, மேலதிக பொதிகள் இல்லை, செயலி (app) இருக்கும் வரை கூடவே ஒட்டிக்கொண்டிருக்கும். சிலவேளைகளில், அச்சுப் பிரதிகள் அலுமாரிகளில் இருந்து விற்றுப் பறக்கவில்லை என்றால், பதிப்பாளருக்கும், எழுத்தாளருக்கும் திண்டாட்டம். ஆனால் மின் நூல்கள் இந்த நெருக்கடியை ஓரளவு சமாளிக்கின்றன. எழுத்தாளர்கள் மற்றும் வாசகர்கள் இருவருக்கும் பயனளிக்கின்றன. இது இரு சாராருக்கும் வெற்றியை அளிக்கின்றன.

இந்தப் பதிப்புத் துறையில் இத்தகைய டிஜிட்டல் தொழில்நுட்பத்தை நமக்கு அருகிலுள்ள சிங்கள இலக்கிய உலகு நன்றாகப் பயன்படுத்தி வருகிறது. உதாரணமாக K-Books பதிப்பகத்தைக் குறிப்பிடலாம். இவர்கள் இலங்கையில் புத்தகங்களுக்கான டிஜிட்டல் சந்தையாக செயற்படுகின்றனர். இப்போது அவர்கள் Nook, Kindle போன்ற மின்-வாசிப்பு செயலியாக KReader ஐ அறிமுகப்படுத்தியுள்ளனர். இவை இலங்கையில் புத்தகம், வாசகர், எழுத்தாளர் மற்றும் பதிப்பகம் போன்றவற்றில் பாரியளவிலான மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன. இதன் நிறுவுநரான எழுத்தாளர் காஞ்சனா ப்ரியகாந்த இதைப் பற்றி இப்படிச் சொல்கிறார் - 'நிச்சயமாக, இது எங்களுக்கு ஒரு உற்சாகமான பரிணாமம். KBOOKS இன் அடித்தளத்தில் கட்டமைக்கப்பட்ட KReader, இலங்கையின் இலக்கியப் பரப்பை மறுவரையறை செய்யும் அமைப்பாக உள்ளது. நாங்கள் அச்சிலிருந்து விலகிச் செல்லவில்லை; மாறாக, இலக்கியத்தை அனைவருக்கும் அணுகக்கூடியதாக மாற்றுவதற்கான ஒரு விரிவான அணுகுமுறையை நாங்கள் தழுவி இருக்கிறோம்'

சிங்கள இலக்கிய உலகு வாசிப்புப் பண்பாட்டில் இன்னொரு தளத்துக்கு காலடி எடுத்து வைத்திருப்பதையே இந்தக் கூற்று எடுத்துக்காட்டுகிறது. KReader டிஜிட்டல் புத்தகங்களின் உலகத்தை உண்மையில் நம் விரல் நுனிக்கு கொண்டு வருகிறது. நேரம், ஆற்றல் மற்றும் செலவுக்கேற்ற செயல்திறனுக்கு முன்னுரிமை அளித்து வாசகர்களுக்கு இணையற்ற வசதியை வழங்குகிறது. வாசகர்களுக்கு வரம்பற்ற அணுகலை வழங்கும் சந்தா அடிப்படையிலான வாசிப்பை இந்த செயலி முதன்முறையாக இலங்கையில் அறிமுகப்படுத்தியுள்ளது. அது ஒரு தனிநபர், குடும்பம் அல்லது கூட்டுச் சந்தாவாக எப்படி இருந்தாலும், பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தங்களது சலுகைகளை அவர்கள் வடிவமைத்துள்ளனர். புக்மார்க்கிங், ஹைலைட் செய்தல், குறிப்பு எடுத்துக்கொள்வது மற்றும் எழுத்துருவை தனிப்பயனாக்குதல் (customize) போன்ற செயற்பாடுகளை இந்த செயலி கொண்டுள்ளது. இதனால் தனிப்பட்ட வாசிப்பு அனுபவத்தை அது மிக சிறப்பாக உறுதி செய்கிறது.

அதேநேரம் இலங்கையில், சிங்கள எழுத்தாளர்களைப் பொறுத்தவரை, KReader ஒரு புதிய தொடர் வருமான வழியாகவும் உள்ளது. டிஜிட்டல், ஓடியோ மற்றும் அச்சு வடிவங்களில் அது தன் பார்வையாளர்களை விரிவுபடுத்துகிறது. 10 அல்லது 1000 புத்தகங்களாக இருந்தாலும், ஒருவரின் மொத்த சேகரிப்பும் ஒரே இடத்தில் தடையின்றி கிடைக்கக்கூடியதாக இருப்பது மிகவும் பயனுடையதாகும். இது எழுத்தாளர்கள் மற்றும் வாசகர்கள் இருசாராருக்கும் பயனளிக்கிறது. மறைமுக விளம்பரம் மற்றும் நேரடி ஒப்பந்தங்களுக்கான சாத்தியக்கூறுகளுடன், வெளியீட்டாளர்களும், குறிப்பாக அவர்கள் தனி உரிமையை தக்க வைத்துக் கொண்டால், ஆதாயமடைகிறார்கள்.

சுருங்கக்கூறின், KReader ஓர் இலத்திரனியல்-வாசிப்புத் தளம் மட்டுமல்ல; இது வாசிப்பு அனுபவத்தை வளப்படுத்தும், எழுத்தாளர்களுக்கான வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்கும், வெளியீட்டாளர்களுக்கான விளம்பர வழிகளைத் திறக்கும் ஓர் இயங்கியல் தளமாகவும் இது விளங்குகிறது. இந்த உருமாற்ற அணுகுமுறை (transformative approach) இலங்கையில் ஒரு துடிப்பான இலக்கிய கலாசாரத்தை வளர்ச்சியடையச் செய்வதில் பங்காற்றுகிறது. ஈழத் தமிழ்ப் படைப்பாளிகளாகிய நாம் இந்த விடயத்தில் கவனம் எடுப்பதன் மூலம் நாம் எதிர்கொள்ளும் சவாலை வெற்றி கொள்ள முடியும்.

ஈழத்தமிழ்ச் சூழலில் இலக்கியத்தை டிஜிட்டல் மயமாக்கல் செயன்முறை புதிதல்ல. ஏற்கனவே நூலகம் இணையத்தளம் ஏராளம் புத்தகங்களை டிஜிட்டல் மயப்படுத்தி பரவலாக்கத்தை இலகுபடுத்தியுள்ளது. அதேநேரம், பல ஈழத்தமிழ்ச் சூழலிலிருந்தும், புலம்பெயர் சூழலிலிருந்தும் பல மின்னிதழ்கள் காத்திரமாக வெளிவரத் தொடங்கியுள்ளன. தாய்வீடு இதழ் கூட அச்சு-மின்-ஒலி எனும் மூன்று வடிவங்களிலும் வெளிவந்து கொண்டிருக்கிறது. இது ஈழத்தமிழ் அறிவியக்கத்தை இன்னொரு தளத்துக்கு எடுத்துச் செல்லும் ஒரு பாரிய உழைப்பின் விளைவாகும்.

அச்சுப் பண்பாட்டிலிருந்து திடீரென டிஜிட்டல் யுகத்துக்குள் பிரவேசிப்பதும் சாதாரணமானதல்ல என்பதையும் நாம் மனங்கொள்ள வேண்டும். பழைய தலைமுறையினர் இதனை அத்தனை எளிதில் அங்கீகரித்து விடமாட்டார்கள். எனினும் அது தவிர்க்க முடியாதது என்பதை உணரும்போது அதற்கான அங்கீகாரமும் எல்லா மட்டங்களிலிருந்தும் கிடைத்துவிடும். KReader நிறுவுநர் எழுத்தாளர் காஞ்சனா ப்ரியகாந்த தொடக்கத்தில் அவர்கள் எதிர்கொண்ட சவால்களை சொல்லும்போது இந்த உண்மையை நாம் புரிந்துகொள்கிறோம். எனினும் அவர்கள் தொடர்ந்தும் இயங்கி அதனை பதிப்புத்துறையின் மிகப்பெரிய மீட்சியாக முன்னிறுத்துவதில் வெற்றி பெற்றனர். அதன் அடுத்த கட்டத்தை நோக்கியும் நகர்ந்துள்ளனர். கடந்த செப்டம்பரின் பிற்பகுதியில், அவர்கள் பெருமையுடன் MVP யையும் அறிமுகப்படுத்தியுள்ளனர். அதற்கு அமோக வரவேற்பு கிடைத்ததாக அதன் நிறுவுநர் பேட்டி ஒன்றில் குறிப்பிடுகிறார். பேட்டியில் அவர் தொடர்ந்து முன்வைத்த கருத்துகள் மிக முக்கியமானவை - 'இவ்வளவு குறுகிய காலத்தில் நியாயமாக பணம் செலுத்தும் வாடிக்கையாளர்களைக் கொண்ட ஒரு வலுவான தளத்தை அடைவது உண்மையிலேயே ஒரு சாதனையாகும். வாசகர்களுக்கு சௌகரியத்தை வழங்கி, குறிப்பிடத்தக்க கவனத்தைப் பெற்றிருக்கிறது என்பது KReader செயலி குறித்த நேர்மறையான கருத்தாகும். வாசகர்கள், எழுத்தாளர்கள், பதிப்பாளர்களிடமிருந்து கிடைக்கும் ஊக்கமும், ஆதரவும் மேம்பட்ட பயன்பாட்டிற்கும், தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கான எங்கள் உறுதிப்பாட்டிற்கும் தூண்டுதலாக அமைகிறது. எங்களின் நெகிழ்வுத்தன்மை, சந்தாக்களை எப்போது வேண்டுமானாலும் இரத்துச்செய்ய பயனர்களை அனுமதிப்பது போன்ற செயற்பாடுகள் பயனர் திருப்திக்கான எங்கள் உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. இருப்பினும், இந்த வெற்றிக்கு மத்தியில், சமூக ஊடகங்களில் ஒட்டிக்கொண்டிருக்கும் சில நபர்களிடமிருந்து ஓரளவு எதிர்ப்பு உள்ளது. டிஜிட்டல் உலகில் மூழ்கியிருந்தாலும் டிஜிட்டல் வாசிப்பின் மீதான வெறுப்பை அவர்கள் அறிவிப்பது வேடிக்கையாக உள்ளது. இருப்பினும், டிஜிட்டல் வெளியீட்டின் மதிப்பை அவர்கள் அங்கீகரிப்பார்கள். அதன் தடைகளை உடைப்பதற்கான பயணத்துக்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்'

டிஜிட்டல் மயமாக்கத்துக்கு எதிரான சவால்கள் குறித்த எழுத்தாளர் காஞ்சனாவிடம் ஏசியன் ரிவியூ எழுப்பிய கேள்விக்கு அவர் அளிக்கும் பதில் நமது கவனத்துக்குரியது.

▸ **புள்ளிவிபரங்களின்படி, இலங்கையில் தொழில்நுட்பத்தை அணுகுவதில் சமத்துவம் இல்லை என்று தெரிகிறது. 2022-ல் நாட்டின் கிராமப்புற மக்கள் 80.97% ஆக உள்ளனர். சில கிராமப்புறங்களில் இன்னும் அச்சுப் புத்தகங்களே அதிகளவில் உள்ளன. எனவே, இத்தகைய சூழலில் மின் நூல்கள் எவ்வளவு தூரம் மக்களைச் சென்றடைய முடியும்? மின் நூல்களை அனைவரும் அணுக எவ்வளவு காலம் ஆகும்?**

அச்சுப் புத்தகப் பயன்பாடு செலவானதாகக் கருதப்படும் உலகில், மின் நூல்கள் இலகுவான பண்டமாக வெளிப்படுகின்றன. குறிப்பாக இலங்கைச் சூழலில் இந்த தளமாற்றம் தெளிவாகத் தெரிகிறது. நான் பிரதிநிதித்துவப்படுத்தும் தளமான KReader, உள்ளூர் மொழி வாசகர்களுக்கு மலிவு விலையில் வாசிப்புத் தெரிவுகளை வழங்குவதன் மூலம் பயன்பாட்டு சவால்களை எதிர்கொள்கிறது. பொருளாதாரக் கட்டுப்பாடுகள் காரணமாக யாரும் வாசிப்பின் மகிழ்ச்சியை இழக்கக்கூடாது என்பதை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் KReader இன் உள்ளடக்கத்திற்காக நாங்கள் மிகப் பெரும் அர்ப்பணிப்பைச் செலுத்தி வருகிறோம்.

இன்று, ஸ்மார்ட்போன்கள் எங்கும் பரந்துபட்ட பாவனையில் இருக்கின்றன. பொருளாதார ரீதியாக சவாலான குடும்பங்களில் கூட ஸ்மார்ட் ஃபோன்கள் இருக்கின்றன. நிதி நெருக்கடிகள் இருந்தபோதிலும், தனிநபர்கள் ஸ்மார்ட்ஃபோன் மற்றும் டேட்டா கார்டு வைத்திருப்பதற்கு முன்னுரிமை அளிக்கிறார்கள். இது டிஜிட்டல் உள்ளடக்கத்தை அணுகுவதற்கு இயலுமை உள்ளதாக ஆக்குகிறது. குறிப்பிடத்தக்க வகையில், தொற்றுநோய் இந்தப் போக்கை துரிதப்படுத்தியது, பல அத்தியாவசிய தேவைகளுக்காக ஸ்மார்ட்போன்களை வாங்குவதற்கு அந்த சூழல் பலரை கட்டாயப்படுத்தியது.

KReader இன் மாதாந்திர சந்தா வெறும் LKR 750 மட்டுமே. இது KReader இன் மலிவுத் திறனை சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது. அச்சுப் புத்தகங்களைப் பொறுத்தவரை அந்தத் தொகைக்கு இரண்டு அல்லது மூன்று புத்தகங்களை மட்டுமே வாங்க முடியும் என்பதை கருத்தில் கொள்ளும்போது, இந்த செலவு ஒப்பீடு கவனத்துக்குரியதாகிறது. முக்கியமாக, எங்களின் நெகிழ்வான சந்தா மாதிரியானது, எந்த நேரத்திலும் இரத்து செய்தல் மற்றும் புதுப்பித்தல் ஆகியவற்றை அனுமதிக்கிறது. பயனர்களின் நிதி நிலைமைகளுக்கு ஏற்ப மாற்றத்தை உறுதி செய்கிறது.

KReader இன் பெறுமானம் மலிவு விலைக்காக மட்டும் ஆனது அல்ல என்று நான் உறுதியாக நம்புகிறேன். பயணச் செலவுகளை நீக்கி, நேரத்தைச் சேமிப்பதன் மூலம், உழைப்பைக் குறைப்பதன் மூலம், KReader பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிய நபர்களுக்கும் கூட வாசிப்பை அணுகக் கூடியதாக ஆக்குகிறது. சுருக்கமாகச் சொன்னால், இலக்கியத்தின் மாறும் சக்தியைத் தழுவிக் கொள்வதற்கு எங்கள் தளம் வறியவர்களையும் இயலுமை உடையவர்களாக்குகிறது.

இலங்கையின் இன்றைய நெருக்கடியான பொருளாதார சூழலால் மிகவும் பாதிக்கப்பட்ட தரப்பில் எழுத்தாளர்களும் உள்ளனர். அச்சுச் செலவு அதிகரிப்பும், புத்தகங்கள் மீதான வரி அதிகரிப்பும் எழுத்தாளர்கள், பதிப்பாளர்களை மேலும் திண்டாட்டத்தில் திணித்துள்ளது.

பெரும்பாலான நாடுகளில், வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளில், பெரும்பாலான கல்விப் பொருட்கள் மற்றும் புத்தகங்கள் வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றன. ஆனால் இலங்கையின் பொருளாதார நெருக்கடியைச் சுட்டிக் காட்டி கடந்த காலங்களில் இலங்கை புத்தகங்களுக்கு வரி விதித்தது. அச்சு வெளியீடுகளுக்கு, குறிப்பாக புத்தகங்களுக்கு வரி விதிக்கும் இலங்கை அரசின் முடிவு உண்மையில் எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள், வாசகர்கள் என எல்லாத் தரப்பாருக்கும் பெரும் சுமையானது. கொள்கை வகுப்பாளர்கள் இது விடயத்தில் ஆழமாக சிந்திக்க வேண்டியது அவசியமானதாகும். புத்தகங்கள் வெறும் பண்டங்கள் அல்ல, அறிவு மற்றும் கல்வியின் முக்கிய மூலங்கள் என்பதை உணர்ந்து, தங்கள் தேர்வுகளைச் செய்ய வேண்டும். அவை விமர்சன சிந்தனையை வளர்ப்பதில் முக்கியமானவை. தவிர, அறிவை தலைமுறை தலைமுறையாக கடத்துவதிலும் இன்றியமையாதவை.

உணவு, தங்குமிடம், பாதுகாப்பு மற்றும் கல்வி போன்ற அடிப்படை அம்சங்களைப் போன்றே புத்தகங்களையும் கருத வேண்டும். அச்சு ஆவணங்களுக்கு, குறிப்பாக புத்தகங்களுக்கு வரி விதிப்பது பதிப்புத் தொழில்துறைக்கு குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது. அறிவைப் பரப்புவதில் முக்கியப் பங்காற்றுபவர்களான வெளியீட்டாளர்கள் பாதகமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும். இந்த வரிவிதிப்புக் கொள்கையானது புதிய புத்தகங்களில் முதலீடு செய்வதைத் தடுக்கிறது. இது ஒரு வெற்றிடத்தை உருவாக்கி வாசகர்களையும் எழுத்தாளர்களையும் மோசமாகப் பாதிக்கும்.

இத்தகைய முடிவுகளை அரசாங்கம் மறுபரிசீலனை செய்ய வேண்டும். இதுவிடயத்தில் மாற்றுச் சிந்தனையோடு மிகவும் விவேகமான வரிவிதிப்பு மாற்றுகளில் கவனம் செலுத்த வேண்டும். அத்தியாவசிய கல்விப் பொருட்கள் மீது வரி சுமத்தாமல், பெரிய நிறுவனங்களின் வரி ஏய்ப்பைத் தடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். வரி விதிப்புக்கு அத்தியாவசியமற்ற பொருட்களை இலக்கு வைப்பது மிகவும் நியாயமான அணுகுமுறையாக இருக்கும். புத்தகங்களுக்கு வரி விதிப்பது என்பது இலக்கியச் சூழலை சீர்குலைத்து, சமூக முன்னேற்றத்தைத் தடுக்கும் ஒரு பிற்போக்கு நடவடிக்கையாகும். நிலையான முதலீடுகள் அவசியமான ஒரு காலகட்டத்தில், கொள்கை வகுப்பாளர்கள் கல்வி, அறிவு மற்றும் ஒட்டுமொத்த தேசத்தின் நல்வாழ்வை வளர்க்கும் முடிவுகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

ஈழ எழுத்தாளர்கள் இது போன்ற அரசியல், பொருளாதார நெருக்கடிகளைக் கையாள தங்களுக்குள் ஒரு பொறிமுறையை வளர்த்துக்கொள்வது தொடர்பிலும் சிந்திப்பது பயனுள்ளது.



jiffry.hassan@thaiveedu.com




இலங்கையின் வடபகுதியில் யாழ்ப்பாணக் குடாநாடும் மன்னாரில் இருந்து பரந்தன் ஊடாக முல்லைத்தீவு வரையான பகுதிகளும் சுண்ணாம்புக்கல் எனப்படும் படிவுப்பாறைகளால் ஆனது. இவை மயோசீன் என்றழைக்கப்படும் புவிச்சரிதவியல் காலத்தில் உருவானவை என புவிச்சரிதவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். கடல்வாழ் உயிரினங்களின் சுவடுகள் தரையில் படிந்து நீண்டகால இரசாயனமாற்றத்துக்கு உட்பட்டு சுண்ணாம்புக் கற்பாறைகள் உருவாகின. இப்பாறைப் படைக்கு மேலாகபாறைகள் சிதைவடைந்து உருவான மண்படை காணப்படுகிறது. இப்படை ஓரிரு அடிகளில் இருந்து 30 அடி ஆழம் வரை காணப்படுகிறது.

சுண்ணாம்புக் கற்பாறைகள் நுண்துளைகளைக் கொண்டவை. நீரைக் கசியவிடும் தன்மையுடையன. அத்துடன் வெடிப்பு களையும், மூட்டுகளையும் கொண்டிருக்கின்றன. மழைபெய்யும்போது அந்தநீரானது இவற்றினூடாக கீழிறங்கித் தரைக்கீழ் நீராகத் தேங்கிப் பரவலடைகின்றது. சுண்ணாம்புக் கல் என்பது கல்சியம் காபனேற்று என்ற இரசாயனப் பெயரால் அழைக்கப்படுகிறது.

மழை பெய்யும்போது மழைநீரில் உருவாகும் மென் காபோனிக் அமிலம் உள்ளிட்ட அமிலங்கள் காரத்தன்மையுடைய பதார்த்தங்களில் தாக்கம் செலுத்தும்போது பாறைப் படைகளில் அரித்தல் அல்லது தின்னல் செயன்முறை நடைபெறுகிறது. இத்தின்னல் மற்றும் அரித்தல் செயன்முறை காரணமாக படைபடையாகவுள்ள மேற்பகுதி இடிந்துவிழ புனற்பள்ளங்கள் என்றநிலவுருவங்கள் உருவாகின்றன. அவ்வாறு உருவான நிலவுருவங்களில் தேங்கியுள்ள நீரானது வற்றாத தன்மையுடையதாக இருக்கின்றது. இவ்வாறான நிலவுருவங்கள் வடக்கில் சில இடங்களில் உள்ளன. இவற்றை வற்றாக்கிணறுகள் என அழைக்கிறோம்.

## நிலாவரை:

வற்றாத கிணறுகளில் முதன்மையானது நிலாவரைக் கேணியாகும். இது யாழ்ப்பாணத்தில் இருந்து 16 கிலோமீற்றர் தூரத்தில் இராசபாதை வீதி முடிவடையும் இடத்தில் நவக்கிரி என்னும் கிராமத்தில் அமைந்துள்ளது. சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடமாக இது விளங்குகிறது.

இது எவ்வாறு உருவானது என்பது தொடர்பில் கர்ணபரம்பரைக் கதையொன்றுள்ளது. இராமாயணகாலத்தில் இராவணேஸ்வரன் சீதையைக் கவர்ந்துவந்து இலங்கையில் சிறைவைத்திருந்தான். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில்



வானரப்படை இராமர் அணையெனப்படும் சேதுபாலத்தை அமைத்தது. அதன்வழியாகத் தனது பரிவாரங்களுடன் இராமன் இலங்கைக்கு வந்தார். அவ்வப்போது வானரப் படைக்கு தாகம் எடுத்தபோது இராமன் தனது தோளில் தொங்கிய அம்பை எடுத்து வழி வழியே குத்திச் சென்றார். குத்திய இடத்தில் நீர் பீறிட்டு எழுந்தது. அவ்வாறு இராமர் குத்திய ஓர் இடமே நிலாவரையாகும். அதுபோலவே பொக்கணை, வில்லூன்றி என்பனவும் உருவாகின என்கிறது இச்செவிவழிக் கதை.

நிலாவரை கடல் மட்டத்தில் இருந்து 0.25 அடி ஆழத்தில் அமைந்துள்ளது. 52 அடி நீளமும் 37அடி அகலமும் கொண்ட நீள்சதுர வடிவில் அமைந்த இந்தக் கேணி போன்ற நீர்நிலை

ஆரம்பத்தில் எவ்வளவு ஆழம் கொண்டது என்று அறியப்பட வில்லை. அதனால் வானத்தில் உதிக்கும் நிலாவரையான தூரமளவுக்கு ஆழம் இருக்கும் என்று கருதியதால் நிலாவரை என அழைக்கப்பட்டதாகக் கூறுவர்.

இது 164½ அடி ஆழமுடையது என முன்னர் சங்கிலிகளைப் பயன்படுத்தி ஆய்வு செய்து கண்டறிந்துள்ளனர். மேற்பரப் பில் இருந்து 50 அடிவரை நன்னீரைக் கொண்டது. 50 முதல் 80 அடிவரை சவர் நீரையும், 80 முதல் 130 அடிவரை கடல்நீ ரையொத்த உப்பு நீரையும், 130 அடியின் கீழே கடல் நீரைவி டக் காரமான உப்பு நீரையும் கொண்டுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டது. 1824-ம் ஆண்டில் அப்போதய அரசாங்க அதிபரா யிருந்த பேர்சிவல் ஒக்லன்ட்டயிக்கின் (Percival Ackland-dyke) காலத்தில் நிலாவரைக் கேணியின் ஆழம், நீர் வற்றும் வேகம் என்பவற்றைக் கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டது. நீராவியால் இயங்கும் நீரிறைக்கும் இயந்திரத்தைப் பயன்படுத்தி நீர் இறைக்கப்பட்டது. 8 நாள்களாக நீரிறைத் தும் நீர் வற்றவில்லை. 1946-ம் ஆண்டில் அதிக வலுக் கொண்ட நீரிறைக்கும் இயந்திரம் மூலம் நாளொன்றுக்கு ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் கலன் வீதம் ஒரு வாரத்துக்கு நீரி றைக்கப்பட்டது. ஆயினும் நீர் வற்றவில்லை. ஆனால் நீரின் தடிப்பில் மாற்றம் காணப்பட்டமை கண்டறியப்பட்டது.

2016-ம் ஆண்டு கடற்படை சுழியோடிகள் மற்றும் ரோபோ வின் உதவியுடன் ஆழம், நீரின் தன்மை தொடர்பில் ஆய்வு செய்யப்பட்டது. இந்த ஆய்வில் 55.5 மீற்றர் அல்லது 182 அடி ஆழமானது எனக் கண்டறியப்பட்டது. அத்துடன் நீண்டகாலத் துக்குமுன்னர் விழுந்திருந்த மூன்று மாட்டு வண்டில்கள் அடி யில் கண்டுபிடிக்கப்பட்டன. அத்துடன் நிலத்தடி நீரோட்டங்க ளுடனானதொடர்பும் கண்டறியப்பட்டது. நாலாதிசைகளிலும் வேகமானதும், மிதமானதுமான நீரோட்டங்கள் கண்டறியப்பட் டன. முன்னைய காலத்தில் நிலாவரையில் தேசிக்காய் போட் டால் கீரிமலையில் அதை எடுக்கலாம் எனக் கூறக் கேட்டிருக் கிறோம். அதனை மெய்ப்பிப்பது போல இந்த நீரோட்டங்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

நிலாவரைக் கிணற்றில் இருந்து அயற் பிரதேசங்களின் விவ சாய நடவடிக்கைக்கு நீர் வழங்கப்பட்டு வந்தது. யுத்தத்தின் பின்னர் அதனைத் தொல்பொருள் திணைக்களம் கையேற்ற தைத் தொடர்ந்து அது நின்றுபோனது. குறைந்தளவு பிரதே சத்துக்கு நிலாவரை மூலம் குடிநீர் விநியோகத்தை மேற் கொள்ளலாம். வல்லைவெளியின் தென்பகுதியை மண்ணிட்டு நிரப்பி மாகாண அரச நிறுவனங்களையும் குடியிருப்புத் தொகுதிகளையும் அமைக்கலாம். அந்த இடத்துக்கான நீரா தாரத்தை நிலாவரையில் இருந்து குழாய் வழியாகப் பெற்றுக் கொள்ளலாம்.

## பொக்கணை:

சுன்னாகத்தில் இருந்து ஊரெழு நோக்கிச் செல்லும் திலீபன் வீதியில் உள்ளது பொக்கணை என்னும் வற்றாத நீரூற்றா கும். இது யாமா எனவும் அழைக்கப்படுகிறது. சிறிய பள்ள மாக பொந்துபோலக் காணப்படும் இதற்குள் இருக்கும் நீர் வற்றுவதில்லை. தற்போது தேசிய நீர்வழங்கல் வடிகால மைப்பு சபையினரால் பராமரிக்கப்பட்டுவருகிறது. அருகில் குழாய்க்கிணறு தோண்டப்பட்டு அதிலிருந்து பெறப்படும் நீர்



குழாய் வழியாக மானிப்பாய், கந்தரோடை, கட்டுடை, நவாலி முதலிய இடங்களுக்கு விநியோகிக்கப்படுகிறது.

முன்னர் காற்றாடி மூலமான நீரிறைக்கும் செயற்பாடும், நீர்த் தொட்டி அமைக்கப்பட்டு அதன் மூலம் அருகிலுள்ள விவ சாய நிலங்களுக்கு நீர்பாய்ச்சும் செயற்பாடும் இடம்பெற்று வந்ததாகவும், யுத்தகாலத்தில் இச்செயற்பாடு நின்றுபோன தாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். மழைகாலத்தில் வெளியில் உள்ள மழைநீர் இதற்குள் புகுந்து மறைந்துவிடும். புயல் காரணமாக கடல் நீர்மட்டம் உயரும்போதும் வெள்ளப் பெருக்கின்போதும் இதற்குள் இருந்து நீர் பொங்கிப் பிரவகிப் பதையும் காணமுடியும்.

## இடிகுண்டு:

நவாலியில் உள்ள கிராய் என்ற பகுதியில் வயல் நிலங்க ளுக்கு அருகே ஒரு குட்டைபோலுள்ள வற்றாத நீரூற்று இடி குண்டாகும். ‘இது 1905-ம் ஆண்டு சித்திரை மாதம் 20-ஆந் திகதி விடிகாலையில் உருவானது. திடீரென்று இடி இடிப்பது போல பெருஞ் சத்தம் கேட்டது. நிலம் இடிந்துவிழ ஒரு அடி உயரத்துக்கு உப்புநீர் கொந்தளித்து எழுந்தது. மாலையில் அந்நீர் வற்றிவிட அந்த இடத்தில் 10 அடி அகலமும், 30 அடி நீளமும் 30 அடி ஆழமும் கொண்டகேணி உருவானது’ என பொன்னையா மாணிக்கவாசகர் தனது நூலில் குறிப்பிட்டுள் ளார். வீதியோரமாக அதனை இன்றும் காணலாம்.

அல்வாய் மாயக்கைகுளம், குரும்பசிட்டி பேய்க்கிணறு, புன் னாலைக்கட்டுவன் குளக்கிணறு என்பனவும் வற்றாத நீர்நி லைகளாகும்.



iyalvaanan@thaiveedu.com

# காமன் கூத்து

## வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த கலை - 03

– அருணாசலம் லெட்சுமணன்



காமன் ஊன்றிய பின்னர் இரண்டு வாரங்களுக்கு மேற்பட்ட கால அவகாசத்தில், ஊர்வலம் வரும் செயற்பாடுகள் ஆரம்பமாகும். காமன் தகனத்துடன் தொடர்புபட்ட செயற்பாடுகள், ஓர் இரவு அரங்கேற்றம் காணவுள்ள நிலையில் அதற்கு முன்பதாக இக்கதையோடு தொடர்புபட்ட அம்சங்களும் இக்காலகட்டத்தில் பாடலாக இசைக்கப்படும். ரதி, மதன், கோமாளி ஆகிய பாத்திரங்கள் முன்நிலைப்படுத்தும் நிலையில் கதையின் தொடர்ச்சியைப் பாடல்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன. காமன் கதையை முன்வைக்கும்போது, மதன், ரதி பாத்திரங்களின் ஆட்டங்களோடு ஊருக்கு கதை சொல்லப்படும் முனைப்பே பிரதானமாகிறது. மதன், ரதி பாத்திரங்களுக்கு காப்பு கட்டியவர்கள் இவ் ஊர்வல நிகழ்வுகளில் பங்கேற்பது கிடையாது. ஏலவே குறிப்பிட்டது போல மாத்துக்கட்டுக்குரியவர்களை வைத்தே வலம் வரும் செயற்பாடுகளை நிகழ்த்துவதுண்டு. அவ்வாறான சந்தர்ப்பங்களில் பிள்ளையாரைப் போல ஊரில் சிறுதெய்வங்களாக வழிபடும் தெய்வங்களுக்கான துதிப்பாடல்களும் இடம்பெறுவதுண்டு. ஊரினை வலம் வருகின்றபோது, சிறுதெய்வ ஆலய வளாகத்தைக் கடந்து செல்கின்ற நிலையில் அத்தெய்வத்துக்குரிய பாடல்களும் இசைக்கப்படுவதுண்டு. அவ்வாறான பாடல்களுள் சுப்ரமணியரை வேண்டும் பாடல் முக்கியத்துவம் பெறுகிறது. ‘சுக்குக்கு மிஞ்சிய மருந்தில்லை, சுப்ரமணியத்துக்கு மிஞ்சிய தெய்வம் இல்லை’ என்ற பழமொழியோடு தொடர்புபட்டவர்கள், என்ற வகையில் மலையக மக்களும் முருகன் மீதான வழிபாட்டில் ஆர்வத்தை செலுத்துகிறார்கள்.

***‘திருத்தணிகை வேல் முருகா தெய்வானை***
***வள்ளி நாயகனே***
***ஆலமுண்ட ஈஸ்வரனுக்கு அருள்புரிந்த கந்தவேலே***
***சீலர்கலை ஆதரிப்பாய் திருச்செந்தூர் தேவகோனே***
***மாரன் கதைபாட மனது வைத்து காருமையா…’***

என்றவாறு தொடர்கிறது. காமன் கூத்தில் முருகனும் ஓர் பாத்திரம் என்ற வகையில் முருகனின் பங்கேற்பும் வகிபங்கும் தனித்து நோக்கத்தக்கதாகும்.

காமன்கூத்தை நிகழ்த்துபவர்களும், காமன்கூத்து வாத்தியாரும், காமன்கூத்துப் பாடல்களை இசைப்பவர்களும் அகவயம் சார்ந்த அணுகுமுறைகளைப் பிரயோகிப்பதை அறியலாம். குலதெய்வங்களை ஆராதிப்பதும், தங்களது குருவானவர்களை ஆராதிப்பதும் தொடர்பில், தங்களது இஸ்டத்திற்குரிய பாடல்களையும் வழிபாட்டு முறைகளையும் பயன்படுத்திக்கொள்கிறார்கள். அவ்வகையில் ஊர்வலம் வரும்போது, அவ்வூரின் எல்லைகளில் அமைந்துள்ள காவல் தெய்வங்கள் உட்பட்ட குலதெய்வங்களை வழிபடும் மரபும், அத்தெய்வங்களுக்கு வாழ்த்துப் பாக்களைச் சமர்ப்பிக்கின்ற நிலையும் அவதானிக்கத்தக்கது. அப்புகழ்மொழி பாடல்களும் உத்தரவு வேண்டுகிற கோரிக்கைப் பாடல்களும் இக்கூத்தோடு அணுகப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. மலையக மக்களால் நேசிக்கப்படுகின்ற இதிகாசமாக மகாபாரதம் திகழ்கின்ற நிலையில் மகாபாரதத்தில் வருகின்ற பாத்திரங்களும் ஆங்காங்கே ஆராதிக்கப்படுகின்ற நிலையும் காணப்படுகின்றது. மகாபாரதத்தில் பங்கேற்கும் பாத்திரங்கள் காமன் கூத்துடன் தொடர்புபடுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. அவ்வாறு மகாபாரதத்தின் முக்கிய பாத்திரங்களில் ஒன்றாக விளங்கும் பாஞ்சாலியிடம் ஆசி வேண்டும் பாடலொன்று பின்வருமாறு அமைகிறது.

***‘தோரா வடிவழகி திரௌபதியே பாஞ்சாலி***
***நெருப்பில் பிறந்தவளே நீலவர்ணன் தங்கையரே***
***மந்தார குந்தியர்க்கு முந்திவந்த மருமகளே***
***சந்தன வடிவழகன் தருமராசன் தேவியரே***
***பாடத் தொடங்கினேன் பாஞ்சாலன் சீர்மகளே***
***அக்கினியில் நீ பிறந்தாய் ஐவர்க்கும் தேவியானாய்***
***பாராலும் வேந்தர் முன்னே அந்த பேரான பாரதத்தை***
***நேராக நீயிருந்து அந்தபாவி துரியன்சேலை***
***நிந்தித்து உயிர் வதைத்தாய், சுந்தரியே***
***போற்றிசெய்தோம்…’***

மலையகத் தமிழர்களும் பெண் தெய்வ வழிபாட்டிற்கு முக்கியத்துவம் வழங்கி வந்துள்ளார்கள். அவ்வகையில் திரௌபதை போன்ற பெண் தெய்வங்களின் வரிசையில் அம்மன் வழிபாட்டு மரபு தனித்துவமாகிறது. பெண்களின் கற்பின் பாதுகாப்புக்கான உற்பத்தியாகவும் அம்மன் வழிபாடு காணப்படுகிறது. அம்மன் வழிபாடு தொன்றுதொட்டு நிலவி வரும் நிலையில், அங்காளம்மன் பற்றிய நேசிப்பும் மலையக மக்களால் கைக்கொள்ளப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அங்காளம்மனையும் துதிபாடும் வழக்கம் காமன்

கூத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

*'அந்தரி கௌரி நீலி ஆங்காரி மலையனூரா*
*அம்பிகா போற்றி நின்றோம் மைந்தர்களைக் காருமம்மா*
*வஞ்சனை வைப்பு சூன்யம் தந்திரி மாயாஜாலம்*
*வைத்திடும் பாவிதனைச் சித்திரவதை செய்யும் தாயே...'*

ஆசி வேண்டுவது ஓர் அணுகுமுறையாக இருந்தபோதிலும் காரியம் ஒன்றைச் செய்கின்றபோது எதிரிகளால் பாதிப்பு நிலை ஏற்படுவதுமுண்டு. காமன் கூத்தை நிகழ்த்துகின்ற போது அவ்விடயத்திற்கு எதிரான செயற்பாடுகள் சூழ்ச்சிகளை ஏற்படுத்தும் சாராரும் சமூகத்தில் உள்ளார்கள், அல்லது அவ்வாறு இருப்பார்கள் என்ற நம்பிக்கையும் வளர்த்தெடுக்கப்பட்டுள்ளதை மேற்குறித்த பாடல் வரிகள் தெளிவுறுத்துவதை அறியலாம். அவ்வாறான செயற்பாடுகளுக்குப் பாதுகாப்பு வேண்டியும் பிரார்த்தனைகள் குறித்த அவதானமும் கவனத்திற்குரியதாகும்.

*'அமுதத்திரு விதிதன்னில் அங்குசனைக் கொலு நிறுத்தி*
*மாரன் பிறந்ததுவும் மணமாலை சூடினதும்*
*அவனியில் கீர்த்தி பெற்று புவனத்தை ஆண்டதுவும்*
*மாண்டு மடிந்ததுவும் மண்ணில் பிறந்த கதை*
*மைந்தர்கள் பாடுகிறோம் மகாதேவா பாடுகிறோம்*
*மகாதேவா துணையிருப்பாய்...'*

துர்க்கையைக் காவல் தெய்வங்களில் ஒன்றாகப் பார்க்கின்ற வழமையும் காணப்படுகிறது. மலையகத்தில் பெண் தெய்வ வழிபாட்டு மரபில் துர்க்கை பற்றிய அவதானம் கவனத்திற்குரியது. துர்க்கை என்பதை விட காளி மீதான அவதானமே விஞ்சி நிற்கின்றமை குறிப்பிடத்தக்கது. இக்காளியும் காமன் கூத்தில் ஓர் பாத்திரமாக அமைகிறது. காமன் கூத்தில் காளியின் பல்வேறு பரிமாணங்களும் நோக்கப்படுகின்றது. கூத்தின் தொடக்கத்தில் துர்க்கை போற்றப்படுகின்றாள். காமன் கூத்து நடைபெறும் காலங்களில், வலம் வருகின்ற இடங்களில் ஆங்காங்கே காளி வழிபாடுகளும் அமைவதுண்டு. அவ்வாறான இடங்களைக் காளி பதிவு இருக்குமிடம் எனவும் அழைப்பார்கள். இவ்வாறான இடங்களில் பின்வரும் விடயங்களை வழியுறுத்தும் வகையில்துர்க்கை பாடல்களும் இடம் பெறுவதுண்டு.

*'ஓம் என்று உச்சரித்து ஆமென்று நிச்சயித்து*
*ஓதுவேன் மதன் கதையை மாது ரனதுர்க்கி*
*ஓரிமாயன் சுந்தரியே வாரி காட்டேரி - கலி*
*ஓங்காளி சாமுண்டி செக செண்டி நீலகண்டி*
*ஓட்டி தரப்பி காண பைரவி குட்டி சாத்தான் பைரவி*
*உதிர காட்டேரி சூலி பிதுரு தேவதை பிடாரி*
*உத்தண்டி குரலுபேசி பத்திரகாளியாக மாரி*
*உத்தரவாகி தேவதைசூலி இதோ வராகி துர்கி*
*ஒளிதரும் சமக்காதேவி பலிகொள்ளும் காத்தவராயி*
*ஒய்யாத இனுசாகரப்பா ஓடிவா நீங்கலெல்லாம்*
*இச் சிறியவன் பாடலுக்கு ஒத்தாசையாய் இருந்து*
*ஒரு சத்துக்கள் இல்லாமல் குறை ஒண்ணும் வாராமல்*
*உதவி செய்து காத்திரானால் மிதமான உங்களுக்கு...'*

பலம் பொருந்திய நிலையிலுள்ள காளியிடம் தனக்கான வேண்டுதலை முன் வைத்து அதற்குரிய சக்தியை வேண்டுவதுமாக அமைந்த பாடலுடன் அதற்குரிய சன்மானமாக தன் தரப்பில் இருந்து ஆற்றக் கூடிய பணிகளைப் பட்டியற்படுத்துவதாக காமன் கூத்துப் பாடல் வரிகள் காணப்படுகின்றன.

*'ஒன்பது ஈரல் பிரட்டி அந்த ஐம்பது ஆட்டுக்கறியை*
*ஒருவித குழம்பாக்கி அறுபது கோழி உரித்து*
*திரண்டரொட்டி மாவிளக்கு உப்புகறி வறுபொறியல்*
*அப்பளம் கஞ்சா சுருட்டு சாராயம் அத்தனையும்*
*நான் படைப்போம் உறுதியுடன் நாங்கலெல்லாம்'*
*எனப் பாடல் தொடர்கிறது...'*

பொதுவாகக் காமன் கூத்தில் மதன் - ரதி திருமண நிகழ்வில் இருந்து கதையை நகர்த்துகின்ற பிரதான போக்கு காணப்படுகிறது. காமன் ஊன்றியது தொடக்கம் ஊர்வலம் நிகழ்த்தும் காலங்களிலும் ஜனரஞ்சகமான பாடல்களை மாத்திரம் பாடுவதுண்டு. அப்பாடல்களுக்கு ஏற்ற ஆட்டங்களை மாத்திரம் வரையறுத்துக் கொள்கிறார்கள். கதை மரபோடு வளர்ந்த கலை என்பதனால் முழுமையையும் தரிசிக்க வேண்டிய தேவை உணரப்படுகிறது. இக்கலை தொடர்பாக ஆராய்ச்சி செய்யும் ஆய்வாளர்களும், ஆவணப்படுத்துநர்களும் கூத்தின் முழுமையையும் கருத்தில் கொள்ளாது குறித்த விடயங்கள் குறித்தே கவனத்தைச் செலுத்துகின்றனர். காமன் கூத்து ஆடப்படும்போது கூத்தின் மீது முழுமையான கவனத்தை ஆய்வாளர்கள் செலுத்தாமையால் இக்கூத்தின் முழுமையை அறிய முடியாதுள்ளது.

காமன் கூத்தில் மதன், ரதியின் பிறப்பு முக்கியமானது. இருவரின் பிறப்பு, குழந்தைப் பருவம், பருவ வயது, திருமணத்திற்கான ஆரம்ப நடைமுறைகள் தொடர்பான கவனமும் முக்கியம் பெறுகிறது. விஷ்ணு, மகாலட்சுமியின் இணைவும் மதனின் உருவாக்கம் தொடர்பில் எடுத்துரைக்கும் பாடல்களும் கூத்தில் முக்கியத்துவம் பெறுகிறது. விஷ்ணு இங்கே மாயன் என அழைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

*'மாயன் மனமகிழ்ந்து மங்கையரை தானழைத்து*
*மானிலத்தில் உள்ளவர்க்கு மாய்கைகளை உண்டுபண்ணி*
*மனதிலே தான் நினைத்து மாது மகாலக்ஸ்மியும்*
*மாயவரும் தான்கூடி மங்கையரும் தான் இருக்க*
*மாயனும் தானிருக்க மாது கர்ப்பம் தானாகி*
*மாதம் பத்தும் சென்றவுடன் மன்மதனும் தான் பிறந்தார்...'*

மதனின் பிறப்பின் பின்னர் விஷ்ணு, லக்ஸ்மி தம்பதியினரின் பூரிப்பினை எடுத்துரைக்கும் பாடல்களும் காணப்படுகிறது. தன் பிள்ளையின் சிறப்பை தந்தை என்ற ஸ்தானத்தில் இருந்து எடுத்துரைத்து அகமகிழும் உள்ளடக்கத்தை இப்பாடல்கள் கொண்டுள்ளன. கதை சொல்லும் மரபை வளர்க்கும் கைங்கரியத்தையும் இக்கலைமரபு வளர்த்து வந்துள்ளது.

*'மைந்தன் பிறந்திடவே மாயவரும் லக்ஸ்மியும்*
*வாரி எடுத்தார்கள் வர்ணமுத்தம் இட்டார்கள்*
*உச்சி முகத்துமாயன் லெட்சுமியைத் தான் பார்த்து*
*அடிகண்ணே இளங்கொடியே கற்பகமே செந்தேனே!*

*மகாதேவர் புண்ணியத்தால் மைந்தன் பிறந்தானடி
பாலனைப் பார்க்கவென்றால் சீலனாய் இவன் நமக்கு
கொலமாம் இவன் வடிவம் கொம்பனையே
காணனடி...'*

மதனின் பிறப்பின் பின்னர் தந்தையின் அகமகிழ்வை எடுத்துரைக்கும் வரிகளை செவிமடுத்த நிலையில் பிள்ளையின் எதிர்காலம் குறித்த அக்கறையில் தாயான லக்ஸ்மி சாதகம் பார்க்கவேண்டும் என்ற கோரிக்கையை மாயனிடம் முன்வைக்கிறாள். இதனை,

*'மாயவரே என் கணவா நான் மாளா மகிழ்ச்சிக்
கொண்டேன்
மைந்தனை பார்க்கவென்றால் மாளாது தேவராலே
சுந்தரி மைந்தனுக்கு சோதிடம் பார்க்க வேண்டும் ....'*

என்னும் அடிகள் உணர்த்தி நிற்கின்றன. மாயன் லக்மியின் எண்ணத்தையும் கோரிக்கையையும் ஆமோதிக்கிறார். இதனைத் தொடர்ந்து மாயனின் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் துரிதமாக நடந்தேறுகின்றன. இதில் மாயன் அந்தணர்களை அழைத்து குறிப்பு பார்க்கும் நிகழ்வு சுவாரசியமானது.

*'பாலன் பிறந்த திங்கள் ஜாலந் தன்னிலே மாசி
பஞ்சமி திதியும் யோகம் அஞ்சாத கேட்டையாகும்
பத்தினில் குருவும் நின்று பார்க்கிறான் ராகு கேது
தப்பாது ஆறுஐந்தில் அப்பொழுது கண்டமுண்டு
அக்கினியால் கண்டம் அந்த அழகுள்ள பாலனுக்கு
அது குறை ஒன்றும் வாராது அவனியில் கீர்த்தியுண்டு
அரண்மேல் பகையுமாகி அநேக வரங்கள் பெற்று
ஆளுவான்...'*

சாத்திர நம்பிக்கைகள் பன்நெடுங்காலமாகவே கடைப்பிடிக்கப்பட்டுள்ளமைக்கு மேற்குறித்த பாடல் வரிகள் தக்க சான்றாக அமைகிறது. மன்மதனின் எதிர்காலம் குறித்த ஓர் அவதானத்தை ஏற்படுத்துவதாகவே இப்பாடல் வரிகளின் உள்ளடக்கம் அமைகின்றது. அத்துடன் நம்பிக்கையை வளர்த்தெடுக்கும் நுட்பத்தையும் இப்பாடல் வரிகள் உட்சுமந்திருப்பதை அறிய முடிகிறது. தொடர்ந்து பெயர் சூட்டும் படலம் தொடக்கம் விருந்தினரை உபசரிக்கும் விதங்கள் தொடர்பிலான விடயங்களையும் பாடல்கள் உட்கொண்டுள்ளன. பிள்ளைக்கு ஆடை, ஆபரணங்களை அணிவித்து மகிழும் சம்பவங்களையும் பாடல்கள் எடுத்துரைக்கின்றன. குழந்தைப் பருவம் மதனுக்கு மிகுந்த திருப்தியைத் தரவல்லதாக அமைகின்றது.

காமன் கூத்தில் மன்மதனுக்கு இணையான பாத்திரமாக ரதிதேவி விளங்குகிறாள். ரதியை முன்னிறுத்தி அவதானிக்கும்போது காமன் கூத்தில் பால்நிலைச் சமத்துவம் பேணப்படுவதையும் காணலாம். வைணவ சிந்தனைக்கு எதிர்வாதம் புரியும் பிரதிநிதியாகவும் ரதி சித்தரிக்கப்படுகிறாள். இக்கூத்தின் முதன்மை பாத்திரங்களின் ஒருவரான ரதியின் பிறப்பு பற்றிய பாடல் பதிவுகள் இதனை விளக்கி நிற்கின்றன.

## மதனின் தனித்துவமும் ஆளுமையும்:

தனது இளைமைப் பருவத்தில் உடல் உள வளர்சியை உறுதிசெய்த ஆளுமையாக மதன் விளங்குகிறான். தனித்துவமிக்க சிந்தனையினை உடையவனாகவும் மதன் காணப்படுகின்றான். பெற்றோரிடம் முத்து ரதத்தையும் அண்டத்தை தாக்கி அழிக்கத்தக்க அம்பு, வில்லைக் கேட்டு வாங்குபவனாகவும் மதன் காமன் கூத்தில் சித்திரிக்கப்படுகின்றான்.

*'திக்கு விஜயம் செய்து நான் தேவரைக் காக்க வேணும்
ஆயனே என் தகப்பா எனக்கழகான தேசம் ஒன்று
அமர்திதட வேண்டுமையா நான் ஆரோக்கியமாக
இருக்க
மாதொன்று தேடவேண்டும் (எனக்கு) பங்கமாக இருக்க
வேண்டும்'*

என்று மதன் வேண்ட அவற்றினைத் தம் மைந்தனுக்கு அருள்பவராக மாறன் காணப்படுகின்றார். இதனைக் காமன் கூத்தில் இடம்பெறும்

*'ஆலமுண்ட ஆதிமாயன்
மண்டபங்கள் ராஜமாளிகை மாடவீதிகளும்
சோலைகளும்
பத்துலக்ஸம் தெருவை பரந்தாமன் அருளிச்
செய்தார்'*

என்னும் அடிகள் உறுதிப்படுத்தி நிற்கின்றன. இதுமாத்திரமன்றி மாயவர் மாறனுக்கு செங்கரும்பு வில்லினையும் ஐங்கணைகளையும் வழங்கினார். தந்தையின் ஏற்பாட்டில் ஆரோக்கியபுரம் பட்டினம் உருவாக்கிய நிலையில் அதன் ஆட்சி பீடத்தையும் மகனான மதன் எற்கிறான். அதனைப் பெற்றுக் கொண்ட நிலையில் வாழ்வியலின் அடுத்த முக்கிய தேவையான வாழ்க்கை துணை பற்றிய சிந்தனையில் ஆழ்கிறான் மதன். அவ்விடயத்தை பொருத்தமானவர்களின் செவிகளுக்கு எடுத்துரைக்கும் பொருத்தமான பாத்திரமாக நாரதர் விளங்குகிறார்.

## பெண்தேடும் படலம்:

அழகியான ரதி குறித்த வர்ணனைகளையும் செயற்பாடுகளையும் காமன் கூத்து கூறிநிற்கிறது. பருவத்துக்கு வருகின்ற ரதி ஆனவள் அக்காலத்தில் அம்மானை பாடுபவளாகவும் அருமலரைச் சூடுபவளாகவும் காணப்படுகின்றாள். அந்நிலையில், மதனின் ஏக்கத்தையும் உணர்வினையும் புரிந்து கொண்ட நாரதர் ரதியையும் அறிந்து கொள்கிறார். இவ்விரு பாத்திரங்களுக்கு இடையிலான உறவுப் பாலத்தை ஏற்படுத்தும் ஒருவராகவும் நாரதர் காணப்படுகின்றார். மதனின் ஏக்கத்தை திருமாலுக்குணர்த்தும் நாரதர் மாறன் தக்க துணையைத் தேடவேண்டும் என்பதிலும் ஆர்வமாக இருக்கிறார். மதனின் ஏக்கத்தை அறிந்து கொண்ட மாயன், நாரதர் ஊடாகப் பெண்தேடும் படலத்தையும் ஆரம்பிக்கிறார். பெண்தேடும் படலத்தில் ஒவ்வொரு குடும்பமும் சந்திக்கும் அனுபவங்களையும் வலிகளையும் மன அவஸ்தைகளையும் காமன் கூத்து விளக்கி நிற்கிறது.

(தொடரும்...)



letsumanan.a@thaiveedu.com



# பெண்நிலைவாதக் கவிதைகளில் போரும் போரியல் வாழ்வும்

– சி. ரமேஷ்

பெண்கள் அரசியல் சமூகப் பொருளாதார விழிப்புணர்வுகளைப் பெற்று ஆணுக்கு நிகரான உரிமைகளுடன் சமத்துவமாக நல்வாழ்வு வாழ்வதற்கான விடுதலையை பெண்நிலைவாதம் கோரிநிற்கிறது. ஒடுக்கப்பட்ட பெண்ணானவள் தான் வாழ்வாங்கு வாழ்வதற்குரிய கல்வி, வேலைவாய்ப்பு, ஆணுக்குநிகரான சமத்துவம், குடும்பம், சமூக மரியாதை, பொது வாழ்வின் அங்கீகாரம் முதலானவற்றைப் பெற்று சமூகத்தில் உயர்ந்த வாழ்வுக்குத் தன்னைத் தயார் படுத்திய நிலையில் ஆண் நோக்கிலான பார்வைகள் விரிவுபடத் தொடங்கின. இப்பின்னணியில் பெண்நிலை சார்ந்து இயங்கும் பெண்மயப் படைப்புக்கள் ஆண்வழிச் சமூக அமைப்பின் பொதுப் புத்தியில் இருந்து விலகித் தீவிரம் பெறத் தொடங்கின. பாரம்பரியப் பண்பாட்டுத்தளத்தில் இருந்து விலகி புதிய வெளியீட்டு உத்திகளை உள்வாங்கி அதீத மொழித் தளத்தில் இயங்கும் பெண்நிலை சார் எழுத்துருக்கள் பட்டறிவு சார்ந்தும் சாரமலும் பெண்ணின் தனித்துவக் குரலாக ஒலிக்கினறன. பெண்ணின் மனக்கிடக்கைகளை உளப்பூர்வமாகவும் உணர்வுபூர்வமாகவும் வெளிப்படுத்தி நிற்கும் புனைவுகளில் பெண்ணுக்குச் சரிவரக் கைவரப்பெற்றதும் நெருக்கமானதும் இலகுவானதுமான புனைவு கவிதையாகும். பெண்ணின் கருத்துருவாக்கத்தைச் செழுமைப்படுத்தும் இப்புனைவுமொழி ஆணாதிக்கக் கற்பிதங்களை உடைத்துப் பாலினச் சமத்துவத்தை வலியுறுத்துவதுடன் பெண்ணின் சுயம்சார்ந்த அடையாளத்தையும் அவளின் இருப்பையும் வெளிப்படுத்துவதாகவும் அமைகின்றது.

பேரினவாதச்சக்திகளால் 1815-ம் ஆண்டு முஸ்லிம்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட தாக்குதலுடன் தோற்றம் பெறும் இனமுரண்பாடு 1958-ல் தமிழருக்கு எதிரான இனக்கலவரமாக உருமாறுகிறது. இதனைத் தொடர்ந்து இன வன்முறையின் தொடக்கத்துக்கு 1977-ம் ஆண்டு வழிசமைத்துக் கொடுத்தது. இதனை அடுத்து தமிழ்ப் பிரதேசமெங்கும் பாதுகாப்பு கெடுபிடிகள் அதிகமாக தமிழ், சிங்கள் உறவுகள் விரிசலடையத் தொடங்கின. அதுவே 1983-ல் பாரிய இனக்கலவரத்தைத் தோற்றுவித்தது. இதனைத் தொடர்ந்து ஈழத்தில் 1983-ற்குப் பின் ஆயுதப் போராட்டம் பரந்துபட்டரீதியில் வளர்ச்சி அடைந்ததைத் தொடர்ந்து தமிழ் மக்கள் கடுமையான யுத்தத்துக்கு முகம் கொடுக்கலாயினர். அரசியல் பொருளாதார, சமூக முன்னேற்றம் கருதி மேற்கொள்ளப்பட்ட ஆயுதப் போராட்டம் மக்களின் இயல்பு வாழ்வினைச் சிதைத்து அவர்களின் வாழ்வினை நிர்மூலமாக்கியது. ஆழமான விரிவான தளத்தில் தேசிய விடுதலைப் போராட்டக் கருத்துகள் முன்வைக்கப்பட்ட நிலையில் ஈழத்து நவீன கவிதைகள் மக்களின் வாழ்வியல் அனுபவங்களை வெளிப்படுத்தின. புதிய சிந்தனைகள் முன் வைக்கப்பட்ட நிலையில் உரமும் செழுமையும் கொண்ட பிரக்ஞைபூர்வமான கவிதைகள், நேர்த்தியான மொழிகளுக்கூடாகப் புதியபடிமங்கள், புதிய வடிவங்களைத் தாங்கி வெளிவந்தன. அதிகார அசமத்துவப் போக்குக்கெதிராக எழுந்த தமிழ்க் கவிதைகள் மக்களின் வாழ்வியலுக்கூடாகப் போரின் வடுக்களைச் சுட்டிநிற்கின்றன. இதனைத் தொடர்ந்து இலங்கை அரசுக்கு எதிரான போர் தமிழ் ஈழ விடுதலை இயக்கங்களால் தொடங்கப்பட்டன. இதனையே முதலாம் கட்டப் போர் எனக் கூறுவர். இப்போர் 1987-ஆம் ஆண்டு வரை நீடித்தது. இவ்வாண்டு தமிழர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்ற பெயரில் ஈழத்தேசத்துக்குள் நிலை கொண்ட இந்திய இராணுவம் பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் காவு கொண்டதுடன் பல அப்பாவிப் பெண்களின் வாழ்வையும் சூறையாடிச் சென்றது. இதனை அடுத்து தமிழ்ப் பிரதேசமெங்கும் பாதுகாப்பு கெடுபிடிகள் அதிகமாக தமிழ், சிங்கள் உறவுகள் விரிசலடையத் தொடங்கின. அதுவே 1983-ல் பாரிய இனக்கலவரத்தைத் தோற்றுவித்தது.

இரண்டாம் கட்ட ஈழப் போர் என்பது பிரேமதாச அரசாங்கத்துடன் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் பேச்சு வார்த்தையை முடித்துக் கொண்டதுடன் தொடங்கியது. இதையடுத்து மூன்றாவது ஈழப் போர் சந்திரிகா அரசுடன் ஆரம்பமாகி பிரபா-ரணில் ஒப்பந்தத்துடன் நிறைவுக்கு வந்தது. நாலாம் கட்ட ஈழப் போர் 2006-ம் ஆண்டு யூலைத் திங்கள் 26-ம் நாள் இலங்கை அரசின் வான்படை மாவிலாறு அணையை ஒட்டியிருந்த விடுதலைப் புலிகளின் முகாம்களைத் தாக்கியவுடன் தீவரமடைந்து முள்ளிவாய்க்காலுடன் நிறைவுக்கு வந்தது. இக்காலத்தில் எழுதப்பட்ட பெரும்பாலான ஈழத்துக் கவிதைகள் போரையும், போரின் அனர்த்தங்களையும் அதன் தாக்கங்களையும் பாடின. போரின் அழிவிருந்து பிறக்கும் இக்கவிதைகள் போரினால் காவு கொள்ளப்பட்ட மனித அவலங்களைக் காவி வருகின்றன. நெருக்கடிமிகுந்த இக்கால கட்டத்தில் மக்கள் உயிரிழப்பு, சொத்து அழிவு, இடம்பெயர்வு,

பொருளாதார நெருக்கடி என பல்வேறு துயர்களை அனுப வித்தனர். மரணத்தின் வேதனையையும் பிரிவின் கொடுமை யையும் கூறும் ஈழத்துக்கவிதைகள் உணர்வின் மையத்தில் எழுபவை

***‘போகும் வழியெங்கும்***
***இரத்தவாடையுடன்***
***பிரேதங்கள் ...***
***மனிதர்களை மனிதர்களே அழித்து விட்டார்கள் ...***
***அருகில் இருந்து /கட்டியணைக்க***
***கண்ணீர் வற்றும் வரை கதறியழ இல்லாமல்***
***என்னைச் /சுற்றி பல துப்பாக்கி முனைகள்***
***பயங்கர ஆண்களால் என் சகோதரியின்***
***உடல்***
***பலாத்காரப் படுத்தப்பட்டு பயத்துடன்***
***விறைத்துக் கிடக்கிறது***
***இரத்த கறைகளுடன்***
***கால் இழந்து கையிழந்து தரையில்***
***துவண்டு***
***அலறும் என் சகோதரர்களின் குரல் அதிகரிக்கின்றது***
***இறந்த பெற்றாரை***
***எழுப்ப தரையில் கதறும் எம் குழந்தைகள்***
***மிதித்து செல்கின்றன, வழி***
***தெரியாப் பாதங்கள்...’***

ஒலிக்காத இளவேனில் தொகுப்பில் இடம் பெறும் றெஜியின் ‘தெரியா விம்பங்கள்’ கவிதை போர் பலி கொண்ட மனித வாழ்க்கையை பெருந்துயருடன் பகிர்ந்து செல்கிறது. வன்மு றைகளால் வழிநடாத்தப்படும் போர் மக்களைக் கொன்று உடைமைகளை அழித்து நிலத்தைக் கைபற்றி வெற்றிப் பெற் றவனின் இறைமையைப் பறை சாற்றுகிறது. நாலாம் கட்ட ஈழப்போரின் அழிவில் இருந்து எழும் பிரியாந்தியின் ‘நிர்வா ணம்’ என்னும் கவிதை முள்ளிவாய்காலின் அழிவை உடல் இறப்பிற்கு பின்னர் பிறவிச் சுழற்சியிலிருந்து விடுபட்டு பிறவா நிலையை அடையும் பௌத்தரின் பரிநிர்வாணநிலையு டன் பொருத்திப் பார்க்கிறது.

***யுகமுடிவு / பிரளயம் பெயர்ந்த நாட்கள்***
***அலைச்சலுற்றோய்ந்த / இனமொன்றின்***
***குருதியில் குளித்த கூடாரவரிசை / எரித்தபடி***
***வேள்வியின் பீடத்தில் கைவிடப்பட்ட மனிதர்களின்***
***நரபலி உடல்கள்***
***பல்லாயிரம் மனிதர்கள் புதையுண்ட***
***குரலடங்கிய வெளியில் / நாதியற்றுப்***
***போனாய் தாயே / குறிகளாலானவைகளின் முன்னே***
***குளிரிலூறி / விறைத்திருந்தன உனது சொற்கள்***
***நந்திக் கடல் / நாவறண்டு கிடந்தது /***
***புத்தரரின் பேரர்கள்***
***யசோதரையின் வெள்ளை வஸ்த்திரமொன்றால்***
***போர்த்தினர் உன்னை...***
***நிர்வாணம்***
***அவர்களுக்கு மதம்***
***உனக்கு மரணம்’***

அவ்வகையில் வன்னிநில வாழ்மக்களின் வாழ்வியல் அவலங் களைப் பெண் அல்லது பெண்ணியவாதப் படைப்புக்களுக் கூடாக வெளிக்கொணர்ந்த இதழ்களில் முக்கிய இதழ்களாக வெளிச்சம், சுதந்திரப்பறவை, எரிமலை, ஈழநாதம் (வெள்ளி வாரமலர்) போன்றன காணப்படுகின்றன. அம்புலி, ஆதிலட்-சுமி சிவகுமார், கஸ்தூரி, மலைமகள், தமிழவள், தமிழ்க்கவி, சுதாமதி, நாமகள், தூயவள், செந்தணல், பிரேமினி சுந்தர லிங்கம், மன்னார் ரூபி மாக்கிரெட், சோழநிலா, அலைஇசை போன்றோர் மேற்கூறிய சிற்றிதழ்களின் ஊடாக மாத்திரம் அறியப்பட்டவர்கள் அல்ல. வெளிச்சம் கவிதைகள் (1996), காலம் எழுதிய வரிகள் (1994), ஆனையிறவு (2000), வானம் எம் வசம் (1995), செம்மணி (1998), நிமிர்வு (1993), மீண்டும் துளிர்க்கும் வசந்தம்(2004) ஆகிய கவிதைத் தொகுப்புக்களி னூடாகவும் அறியப்பட்டவர்கள். போரையும் போரியல் வாழ் வையும் பாடும் இவர்கள், போரின் பங்காளிகளாகவும் செயற் பட்டவர்கள். தேசிய விடுதலைப்போராட்டத்தின் வரலாற்று அனுபவங்கள் இவர்களின் கவிதையின் பாடுபொருளாயின. ஆயுதம் தரித்த போராளிகளாக மாறி தமிழ் ஒழுக்கவியல் கோட்பாடுகளைச் சாடுமிவர் கவிதைகள், பெண் விளிப்புணர் வுக்கூடாகப் பெண் விடுதலையை அவாவிநின்றன.

## இயல்புவாழ்க்கை சீர்குலைதல்:

போர் உடமைகளை அழித்து இடம்பெயர்வுகளை ஏற்படுத்தி மனிதனின் இயல்பு வாழ்க்கையைச் சீர்குலையச் செய்கிறது. உயிரழிவுகளும் உளச்சிதைவுகளும் மனஅவஸ்தைகளும் அவலங்களும் ஈழத்துக் கவிதைகளின் பாடுபொருளாயின. போர்க்குண்டுகளுக்கு பயன்படுத்தப்படும் மூலகங்களின் நச் சுப்புகையாலும் குண்டுகள் வெடித்துச் சிதறும்போது ஏற்ப டும் ஒலி அதிர்வுகளாலும் பலர் பாதிக்கப்பட்டனர். தமிழ்ச் செல்வன் உட்பட போராளிகள் பலர் ஒலி அதிர்வினால் மர ணத்தை எதிர்கொண்டனர். போரினால் அதிகம் பாதிக்கப்படு பவர்களாக வயோதிபர்களும் சிறுவர்களும் காணப்படுகின்ற னர். பெற்றார்களை இழந்தும் கல்வியைத் தொலைத்தும் அநாதரவாய் வாழும் சிறுவர்களின் நிலையை ஈழத்துக் கவி தைகளும் பதிவு செய்துள்ளன. நாளாந்தம் நடைபெற்ற போரி னால் உயிருக்கு உத்தரவாதமின்றி மக்கள் நெருக்கடிக ளைத் தாங்கிக் கொண்டே வாழ முற்பட்டனர். மனத்தளவிலும் பொருளாதார ரீதியாகவும் மக்கள் அதிகம் பாதிக்கப்பட் டதை இக்கால கவிதைகளும் பேசிநின்றன. இதனை தமிழ்ந தியின் ‘இருப்பற்று அலையும் துயர்’ கவிதை பதிவுசெய்கிறது.

***நேற்றிரவையும் குண்டு தின்றது***
***மதில் விளக்கு அதிர்ந்து சொரிந்தது***
***சூரியன் தனித்தலையும் இன்றைய பகலில்***
***குழந்தைக்குப் பாலுணவு தீர்ந்தது***
***பச்சைக் கவச வாகனங்களிலிருந்து நீளும்***
***முகமற்ற சுடுகலன்கள் வீதிகளை ஆள***
***வெறிச்சிடுகிறது ஊர்...***

1980-களில் தோன்றிய கவிதா ஆளுமைகளில் ஒருவரே ‘சிவர மணி’. இவர் எழுதி எமக்கு கிடைக்கப்பெற்ற கவிதைகள் மிகச் சிலதே ஆயினும் எழுதிய அத்தனை கவிதைகளும் சொல் நேர்த்தி கொண்டவை எளிமையானவை சமூகப்பி ரக்ஞை மிக்கவை. புதிய குறியீடுகளையும் காட்சிப் படிமங்க ளையும் உள்வாங்கி எழுதப்பட்டவை. யுத்த நெருக்கடிக்குள்

சிக்குண்டு போரின் வடுக்களைத் தாங்கி இயல்பாய் வாழும் சமூகத்தை 'தேர்த்திருவிழா' என்ற குறியீட்டுக்கூடாக நுட்ப மாய் பதிவு செய்கிறார் சிவரமணி.

**'மீண்டும் ஒருநாள்**
**வரலாம்**
**இரத்தத் துளிகள்**
**மண்ணில் தெளிக்கப்படலாம்**
**மீண்டும் ஒருவன் வருவான்**
**இந்தக் கொடி கிழிந்திருக்கும்**
**இதற்குப் பதில்**
**இன்னுமோர் கறுப்புக்கொடி**
**ஏற்றிவைப்பான்**
**எனினும்**
**என் ஊர்க்கோவிலில்**
**வழக்கம்போல்**
**திருவிழா நடைபெறும்'**

*- சிவரமணி கவிதைகள் -பக்.03*

எந்த இடர்களையும் தாங்கி வாழும் மக்களின் நடப்பியல் வாழ்வு இக்கவிதையில் புறக்காட்சிகளுக்கூடாக விபரணப் பாங்குடன் வெளிப்படுகிறது. இதனைப்போன்று 'காட்சிய மைத்தலுக்கூடாக விபரணப்பாங்கில் கவிதை சொல்லுதல்' என்னும் உத்தியை உள்வாங்கி படைக்கப்பட்ட பிறிதொரு கவிதை நாமகளின் 'யதார்த்தம்'. ஷெல்லினால் சடுதியில் ஏற் பட்ட மரணத்தை புறக்காட்சிப் படிமங்களுக்கூடாக விபரணப் பாணியில் காட்சிப்படுத்துவதாகவே இக்கவிதை அமைந்துள் ளது. கோர்வைப்படுத்தப்பட்ட விபரணப்பாங்கே இக்கவிதை யின் அடிநாதமாகும்.

***'வீதியில் / இப்போது எதுவுமே இல்லை***
***எல்லாமே பழையபடி***
***மண்ணெண்ணெய் வரிசை/ முன்பைவிட***
***நீண்டிருந்தது / தேநீர்க் கடையிலும்***
***புதிதாய் ஒரு பாட்டு / ஆரம்பமாகிறது /சனங்கள்***
***விரைந்து கொண்டிருக்கிறார்கள் /***
***எதுவுமே நிகழாத மாதிரி'***

இவ்விரு கவிதைகளும் நெருக்கடியான சூழ்நிலைக்குள் அல் லுற்று வாழும் மக்களின் யதார்த்த வாழ்வை மிகத் துல்லிய மாக முன் வைக்கின்றன.

சிவரமணியைப் போலவே செல்வியும் சமூகப் போராளி. செல் வியின் கவிதைகள் மரபார்ந்த கட்டுபாட்டில் இருந்து விலகிய எளிமையான கவிதைகள். 1985-களில் வெளிவந்த செல்வி யின் கவிதைகள் அக்கால சூழலையும் மக்களின் வாழ்வை யும் வெளிப்படுத்தி நிற்கும் கவிதைகள். இயற்கையையும் அதன் எழிலையும் விபரிக்கும் செல்வியின் கவிதைகளில் வன்மத்தால் சூழப்பட்ட காலவெளி நுண்மையாகச் சித்திரிக் கப்படுவதும் உண்டு. இதனை விடைபெற்ற நண்பனுக்கு... முதலான கவிதைகள் பலவற்றில் காணலாம்.

***மின்குமிழ்கள் ஒளியுமிழ***
***நிலவில்லா வெப்பம் நிறைந்த முன்னிராப்***
***பொழுதில் / விரைவில் வருவதாய்***
***உனது நண்பனுடன் விடைபெற்றாய்.***
***உன்னிடம் பகிர***
***எனக்குள்ளே நிறைய விடயங்கள் உள்ளன.***
***முகவரி***
***இல்லாது தவிக்கிறேன் நண்ப -***
***செழித்து வளர்ந்த தேமாவிலிருந்து***
***வசந்தம் பாடிய குயில்களும்***
***நீயும்***
***நானும் பார்த்து இரசித்த***
***கொண்டை கட்டிய குரக்கன்கள் தமது***
***தலையை அசைத்தும் எனது***
***செய்தியை உனக்குச் சொல்லும்.***
***பருந்தும் வல்லூறும் வானவெளியை மறைப்பதாக***
***இறக்கையை / வலிந்து விரித்தன நண்பா***
***நீயும் நானும் பார்த்து ரசித்த கோழிக்***
***குஞ்சுகள் குதறப்பட்டன / கூடவே சில கோழிகளும்***
***இந்தப் பருந்தின் இறக்கையைக் கிழிக்க***
***எஞ்சி நின்ற குஞ்சுகள் / வளர்ந்தன.***
***நடந்து நடந்து வலித்துப் போகும் / கால்களின் மீது***
***படியும் எமது / மண்ணின் புழுதியை / முகர்ந்து மகிழ***
***வீதியிலன்றி / வீட்டினுள்ளும்***
***முளைத்துக் கிடக்கும் முட்களைப் பிடுங்க /***
***குப்பையைக் கிளறும் குஞ்சுகளோடு / இரையைத் தேட,***
***இறக்கையைக் கிழிக்க...***
***வாழ்வதை இங்கு நிச்சயப்படுத்த***
***கொடுமைகட்கெதிராய்க் கோபம் மிகுந்து***
***குமுறும் உனது***
***குரலுடன்,***
***குழந்தைச் சிரிப்புடன் விரைந்து வா நண்பா!***

*- தாகம் மார்கழி – தை -1985 – பக்.27*

போர் மக்களின் வாழ்வாதாரங்களைச் சிதைத்ததோடு, வாழ் விடங்களையும் பறித்தது. பிறந்தகம் பற்றிய ஏக்கங்களையும் இடம் பெயர்வுற்றவர்களின் துன்பங்களையும் இக்காலத்தில் எழுந்த கவிதைகள் காலத்துயராய் பதிவு செய்தன. குடியி ருப்பு மனைகள் தகர்க்கப்பட்டு மக்களில்லாது வெறுமை பட ரக் கிராமங்கள் இருந்த நிலையினை யாழினியின் 'எங்கள் ஊர்' கவிதை உணர்வுத்தளத்தில் பதிவு செய்கின்றது.

***மாங்காய்க் கெறிந்து மண்ணில் விளையாடி பாங்காய்த் திரிந்த ஊர்***
***பாழ்பட்டுக் கிடக்குதையோ வரம்பில் நடந்து அழகை ரசித்த பரம்பரை***
***வயல்கள் சீரழிந்து கிடக்குதையோ தேங்காய்க்***
***குரும்பை தொங்கிப் / பறித்து நாங்கள் குடித்த தென்னை***
***தலையிழந்து நிற்குதையோ பால் / தயிர் தந்த எங்களின்***
***பசுக்கள் கால் குளம்பிழந்து / கிடக்குதையோ***

*- 31-06.சனவரி.2005, வெள்ளிநாதம், பக்.20*

சு. வில்வரெத்தினத்தின் காலத்துயர், காற்றுவழிக்கிராமம் என் பவற்றின் தொடர்ச்சியாய் இக்கவிதை சின்னபின்னமாய்ச் சித றுண்டு வாழ்விடத்தை உணர்வுபூர்வமாய் விளக்கி நிற்கிறது.

ஈழப்போர் பல்லாயிரக்கணக்கான மக்களின் வாழ்வைப் பலி கொண்டது. தொடர்ச்சியான முடிவற்ற பேரழிவால் மக்கள்

வாழ் விடங்களை இழந்தனர். மக்களின் உடைமைகள் சூறை யாடப்பட்டன. கடத்தல்கள், காணாமல் போதல்கள் வன்புணர் வுகள் என வன்முறையால் முற்றுமையிடப்பட்ட பூமியில் எங்கு பார்த்தாலும் வறுமையும் பிணியும் தலை வெறித்தா டின. ஈழம் எங்கும் பெரும் துயரமும் வலியும் நிலவிக்கொள் ளத் தொடங்கின. தொடர் முற்றுகைகள், படையெடுப்புக்க ளால் நகரம் முற்றாக சிதைக்கப்பட்டு, வீடுகள், கிணறுகள், வேலிகள், மலசலகூடங்கள் எல்லாம் அழிவடைந்து காணப் பட்ட நிலையில் மக்கள் தம் வாழ்வாதாரத்தை இழந்து தவித் தனர். அலைக்கழிந்து வாழும் மக்களின் இருப்பை விபரணப் பாங்குடன் 'விடுமுறை பயணத்தில்' என்ற கவிதையில் மாதுமை விவரித்துச் செல்கிறார்.

*'வெங்காயப்பாத்தி*
*கூரையில்லா பள்ளிக்கூடம்*
*உடைந்த கல்வீட்டுடன்*
*ஒட்டிய ஓலைக்குடிசை*
*மிதிவெடி அபாயப் பலகையுடனான*
*வயல்காணி'*

*- ஒற்றைச் சிலம்பு - பக்.24*

என நாளைய பொழுதில் மரணத்தை எதிர்கொள்ளத் தயா ராக இருக்கும் பெண் போராளியின் பதிவாய் ஒலிக்கும் இக்கு ரல் நவீன கவிதை இலக்கியத்துக்குப் புதியதே. ஈழத்தில் போரினால் பலி கொள்ளப்பட்டவர்கள் அநேகர். போர்க்கால அமைதியில் அச்சமும் பீதியும் மனித வாழ்வை வாட்டி, வதைத்த அக்கொடூர கணங்களை நிணமும் சதையுமாக ஆழியாளின் "சின்னப்பாலம்;' என்னும் கவிதை பதிவு செய்கி றது.

*'போர்க்கால அமைதி*
*எனது கிராமத்தின்*
*எஞ்சிய ஊர் மனைகளில்*
*வெட்ட வெளீரெனக் கிடந்த வயல் வெளிகளில்*
*சிற்றாறுகள் பின்னி வைத்த*
*வண்டல் மண் கரைகளில்*
*சின்னப் பாலத்தின் வெறிச்சோடலில்*
*ஐந்துவிரல் கொண்டு அறைந்து*
*கிடந்தது. சின்னப் பாலத்தடிக்கு*
*நித்தம் செட்டை அடித்து வந்தன*
*வழக்கத்திலும் கொழுத்த*
*ஒற்றைக்கால் கொக்குகளும்,*
*சுழியோடும் நீர்க் கோழிகளும்,*
*அவற்றில் அதிகமாய்*
*விளைந்து கிடந்தன*
*ஊறி அழுகிய பிணங்களின்*
*வாசனை முகர்ந்து, சுவை அறிந்த*
*ஜப்பான் குறலிகளும்,*
*குறட்டை பெட்டியான் மீன்களும்,*
*கபறக்கொய்யாக்களோ*
*எவ்வித நிர்ச்சலமின்றி*
*நீரிற் பொசிந் தூறிய மனித கபாலங்களை*
*ஆளுக்கு ஐந்து ஆறாய்ப்*
*பங்கிட்டக் கொண்டன –*
*சண்டை சச்சரவின்றி சமாதானத்துடனே'*

- ஆகஸ்ட்-செப்டம்பர்,2002-மூன்றாவது மனிதன் இதழ் 15

கற்பகம் யசோதரவின் 'நீத்தார் பாடல் பிறழ்வுக் குறிப்புகளிலி ருந்து' என்னும் தொகுதி ஊழிக்காலத்தின் அடக்குமுறைக் குட்பட்ட வதைபட்ட மனிதர்களின் கொடுந்துயர்களைக் காவிச் செல்கிறது. யுத்தநிலத்தில் பிறந்து வஞ்சிக்கப்பட்ட மனிதர்களின் வாழ்வைப்பாடும் இத்தொகுதி பெண் சுய அடையாளப் புனைவு வழி புனிதங்கள் என கற்பிக்கப்பட்ட கற்பிதங்களைத் தகர்த்தெறிகின்றது. தேசநலன்களை விடுத்து தேசத்தை ஆளும் தலைமைகள் படுகொலைகளின் வாயிலாக அதிகாரங்களைக் கைப்பற்றிக் கொண்ட வரலாற் றைச் சாடும் இக்கவிதை ரத்தம் குடித்து வளர்ந்த சுதந்திரப் போராட்டத்தை மீள் வாசிப்புச் செய்கிறது.

சிங்கள பேரினவாதிகளால் கட்டவிழ்த்த விடப்பட்ட வன் முறை, இயக்கங்களுக்கிடையிலான சகோதரப் படுகொலை, துப்பாக்கியால் எதிர்கொள்ளப்பட்ட கருத்துப்பிறழ்வாதம், புனிதங்களால் கட்டப்பட்ட மகோன்னதங்களின் உடைவு என விரியும் கற்பகம் யசோதரவின் 'நீத்தார் பாடல்கள் பிறழ்வுக்கு றிப்புகளிருந்து' பயங்கரவவாதத்தின் பெயராலும் விடுதலை யின் பெயராலும் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி களை சுயவிமர்சனம் செய்கின்றது. அதிகாரத்தின் அரசிய லைச் சாடும் இக்கவிதைகள் இறந்தவர்களுக்கான பிரார்த்த னையாக அமையாது கடந்த கால யுத்தத்தில் மக்கள் அனுப வித்த பாடுகளின் வெளிப்படுத்தலாக அமைகின்றது. யுத்தம் தமிழர்களை மாத்திரம் வதைக்கவில்லை. சிங்களவர்களை யும் அது துவம்சம் செய்தது. இத்தொகுப்பில் இடம்பெறும் 'பெண்களானால்' என்னும் கவிதை இலங்கையின் தெற்கு மற் றும் சிங்களப் பிரதேசங்களில் ஜே.வி. பியினரின் கிளர்ச்சியை ஒடுக்கும் நோக்கில் அரசு மேற்கொண்ட முயற்சியில் சிங்க ளப் பெண்கள் பாலியல் வன்முறைக்கும் சித்திரவதைகளுக் கும் உள்ளான செய்தியை பெண்களுக்குரிய சுயாதீனமான கோபத்துடன் பகர்கிறது. இவர்கள் நீதி மன்றத்தினால் மேலும் அவமானப்படுத்தபட்டதையும் இக்கவிதை உரைக்கிறது.

*'எனக்கு நடந்ததை வரி வரியாய்*
*உன்னிடம்*
*நிரூபித்தாக வேண்டுமென்றால்*
*நீதி வழங்கும் உன் மேடையில்*
*தொடையை அகட்டிக் கிடக்க,*
*என் காயங்களைப் பூந்து பாத்து*
*பதிலை அங்கே தேடி*
*நீ விரும்பிற' உண்மையை வந்தடை'*

ஓர் ஊழிக்காலத்தின் பாடல்களாய் அமையும் நீத்தார் பாடல் கள் அதிகாரத்தின் அடக்குமுறைக்கு இலக்காகி உயிர்நீத்த வர்களின் வாழ்வைப் பாடுகிறது. மூடுண்ட வெளிக்குள் முடக் கப்பட்டு வஞ்சிக்கப்பட்டவர்களின் பிரார்த்தனைகளை எந்த தேவ தூதனும் செவிசாய்த்து ஏற்றுக் கொள்வதில்லை. நடை முறை ஒழுங்கமைப்புக்களை மீறி காவுகொள்ளப்பட்டவர்க ளுக்காக ஒலிக்கும் இக்குரல் மனிதப்படுகொலைகளைக் கடந்து பிணங்கள் காட்சிப்பண்டங்களாக்கப்பட்டு ஊடகங்க ளில் விற்கப்படுவதைக்கண்டிக்கிறது. வெறிக்கூச்சல்களால் மக்களிடத்தில் குரோத மனப்பான்மையைத் தூண்டி இனத்து வேசத்தை வளர்க்கும் இச்செயல் ஆபத்தானது. சமூகப் பொறுப்பணர்வுக்கப்பால் அரசியலை நோக்காகக் கொண்டு நிகழ்த்தப்படும் இவ்வெறித்தனமான செயல்களை ஊடகங் கள் ஊதிப் பெருப்பிக்கின்றன. பலிக்கிடாக்கள் ஆக்கப்பட்ட மனித உடல்களை காட்சிப்பண்டங்களாக்கி தேசத்தலைவர்

கள் தம்மை நிலை நிறுத்துவதை நோக்காகக் கருதி மேற் கொள்ளப்படும் இந்நடவடிக்கைகள் அறவே களையப்பட வேண்டியவை. இதனை,

*'நம்பு*
*எவருமே கண்டிரா*
*எனது நிர்வாணமாக்கப்பட்ட உடல்*
*ஒரு பிரசாரக் கருவியாகி*
*பிரசுரிக்கப்பட்ட போதிலும்*
*நான் அழுதது அதற்கே...'*

என்னும் அடிகளில் உணர்வுபூர்வமாகப் பதிவு செய்யும் 'இன்னுமோர் கொலை நாள்', இராணுவத்தால். இயக்கப் பிளவுகளால், சகோதர இயக்க முரண்பாடுகளால், அவற்றுக்கிடையில் ஏற்பட்ட முறுகல்களினால் படுகொலை செய்யப்பட்டு வீதிகளில் வீசியெறியப்பட்ட பிணங்களையும் நினைவுகூருகிறது.

அன்பென்பதை அறியாது கனவுகள் அழிக்கப்பட்டு சிதைவுண்ட பூமியில், திசையறியாப் போராட்டம் மனித உயிர்களைக் காவு கொள்ளும் ஆட்கொல்லியாய் மாறி உயிர்களை அச்சுறுத்துகிறது. இராணுவத்தால். இயக்கப் பிளவுகளால், சகோதர இயக்க முரண்பாடுகளால், அவற்றுக்கிடையில் ஏற்பட்ட முறுகல்களினால் அப்பாவிப் பொது மக்கள் நாள்தோறும் படுகொலை செய்யப்பட்டு வீதிகளில் பிணங்களாய் எறியப்படுகிறார்கள். அதிகாரத்தின் வெறித்தனத்துக்கு பலியாகி மண்ணில் மரணித்த மனித உயிர்களை கற்பகம் யசோதராவின் 'நீத்தார் பாடல்கள்' உள்ளுணர்வின் தடத்தில் வெளிப்படுத்தி நிற்கிறது. ஒன்பது பகுதிகளைக் கொண்ட இந்நீத்தார் பாடல்கள் கண்ணியமற்ற யுத்தத்தால் தம் குருதியை தாமே குடித்த மனித இனத்தின் வாழ்வைப்பாடுகிறது. கடந்தகால வரலாற்றுருவாக விளங்கும் இக்கவிதை பிரளயத்தின் உத்தரிப்புக்களை சாவரங்குகளின் நிகழ் புலங்களை மனித ஓலங்களாகச் சித்திரிக்கிறது.

*வென்றவனின் வரலாற்றில்*
*நிலத்தில் எண்களே மூடிக் கொண்டிருக்கிற*
*துயிலும் இல்லங்களுள் இருந்து*
*இளங்குறிகள், யோனிகள்*
*போர் செய்ய மறுக்கின்ற*
*பெரும் ஓலம் எழுகிறது*
*கணினி யுகத்துள்*
*அதைக் கண்டிராத குக்கிராமங்களில்*
*தலைமுறைகளின் ஓலம்*
*வதைகளாகிய இறுகிய*
*இராணுவ முகாம்களுள் இருந்தோ*
*மனம் பிறழும் ஓலம்*

பிரளய வெளியில் வீரம் மனிதத்தை விழுங்கிய கதையை கற்பகம் யசோதரவின் நீத்தார் பாடல்கள் தனக்கேயுரிய மொழியில் வழி மொழிகிறது. வன்மங்களாலும் தந்திரங்களாலும் காவுகொள்ளப்பட்ட பூமியின் மனச்சிதைவுகளையும் காயங்களையும் அவலங்களையும் வெளிப்படுத்தி நிற்கின்றன. கற்பகம் யசோதரவின் கவிதைகள். ஐ.நா.சபை வாய் மூடி மௌனித்த நிலையில் அதிகாரத்தின் குரூர பசிக்கு இரையாகிப் போன மனிதர்களின் சிதைந்த வாழ்வைப் பேசுகின்றன இக்கவிதைகள். தன்னைச் சூழவுள்ள தேசம், அதன் போக்குகள் குறித்து எதுவித அக்கறையுமின்றி, ஏகாதிப்பத்திய நலன் ஒன்றையே கருத்தில் கொண்டு செயற்படும் அமெரிக்காவைக் கண்டிக்கும் கவிதையே ஐக்கிய அமெரிக்க இராணுவம் ஓ ஐ.நா. அறிக்கை. தனக்கு அச்சுறுத்தலாக உள்ள நாடுகளின் மீது பயங்கரவாதம் என்னும் பெயரில் படையெடுக்கும் அமெரிக்கா மனிதநேயமற்று செயற்படும் தன்மையை இக்கவிதை கண்டிக்கிறது. தேசநலனுக்காகப் பிறநாடுகளைக் கைப்பற்றி அதன் இறைமையைச் சிதைத்து அறமற்ற பணிகளில் ஈடுபடும் அமெரிக்காவை

*'ஏ.. அமெரிக்க இராணுவமே, நீ படையெடுத்த நாட்டின்*
*பெண்களை என்ன செய்வாய் என்றெமக்கு – உன்*
*சீ. என். என். சொல்லத் தேவையில்லை'*
(இந்திய இராணுவம் சொல்லித் தந்தது)

என்னும் அடிகளுக்கூடாக இந்தியாவை ஆதாரங்காட்டி இக்கவிதை சாடுகிறது.

தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் மக்கள் போரராட்டமாகக் கருதப்பட்டாலும் உண்மையில் அப்போராட்டம் மக்களை விட மண்ணையே நேசித்தது. மண்ணுக்காக மக்கள் விதைப்பு என்னும் பெயரில் வகை. தொகையற்று பலியிடப்பட்டார்கள். மக்களைப் பலி கொண்ட அப்போராட்டம் ஈற்றில் தானைத் தளபதிகளையும் தலைவர்களையும் பலி கொண்டது. இதனை உருத்திராவின் கவிதை துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றது.

*அஞ்சலி குறிப்புக்கள் வாசித்த முடிவதற்குள்*
*நீங்கள் கருப்பைகளிருந்து*
*எதிரிகளை அழியுங்கள்*
*நிறக் குருதிகள் ஊற்றெடுக்கும் வரை*
*நீங்கள் அழியுங்கள்*
*நாம் வேண்டுவதெல்லாம் மண்ணே*

*- ஆண்கோணி பக் - 24*

ஈழப்பிரதேசத்தின் பெரும்பகுதி யுத்தமாக விரிந்த காலப்பகுதியில் ஆட்கடத்தல்கள், மனிதப்படுகொலைகள் யதார்த்த வாழ்வைச் சிதைத்தது. பிண வாடையே இல்லாத பொழுதுகள் இல்லை என்னும் அளவுக்கு நாள்தோறும் நடுத்தெருக்களில் உத்தியோகப் பணிமனைகளில் உறங்கும் வீடுகளில் மனிதர்கள் கடத்தப்பட்டு, வேட்டையாடப்பட்டனர். பள்ளிச்சிறார்கள் கூட தங்கள் சீருடைகளில் விதிவிலக்கின்றி வேட்டையாடப்பட்டனர். ஈழத்தில் கடத்திச்செல்லப்பட்டு வதையின் பின் புதைக்கப்பட்டவருக்காக புதுக்குடியிருப்பு அந்திவானம் பதிப்பகத்தால் வெளியிடப்பட்ட தொகுப்பே 'செம்மணி' ஆகும். பிரமிளா, சோழநிலா, தயாமதி, சுதாமதி, தமிழவள், மலைமகள், தூயவள், அம்புலி முதலான பெண் கவிதாயினிகளின் கவிதைகளும் இத்தொகுப்பில் இடம் பெற்றன. இதன் தொடர்ச்சியாக வெளிவந்த அங்கவையின் கவிதை, சீரழிந்த அரசியல் சூழலால் காவு கொள்ளப்பட்ட பூர்வீகப் பூமியில் வேட்டையாடப்பட்ட பள்ளிச் சிறுமியை, மனிதவாழ்வியலுக்கூடாக வெளிப்படுத்துகிறது. ஈழத்தில் தமிழர்கள் தங்கள் உரிமையை இழந்து, உடமையை இழந்து, இயல்பை இழந்து வாழ்ந்த துன்பநிலையை இக்கவிதையினூடாக நாம் கண்டு கொள்ளலாம்.

## போருக்குள் சிறுவர்கள்:

1933-க்கும் 1945-க்கும் இடையிலான காலப்பகுதியில் ஹிட்லர் தலைமையிலான தேசிய சோஷலிஸ்டுகள் யூதமக்களுக்கும் தங்களுடைய அரசியல் எதிரிகளுக்கும் இழைத்த அநீதிகள் மனித குலவரலாற்றில் மகாபயங்கரமானவை. திட்டமிட்ட முறையில் இவர்கள் நச்சுவாயு கூடங்களில் கொல்லப்பட்டனர் இப்பின்னனியை மையப்புலமாகக் கொண்டு இயங்கும் 'டஹ்கவ்வை அறிதல்' என்னும் கவிதை ஈழத்தின் வரலாற்றுச் சுவடுகளுக்கூடாகத் தன்னை முன்மொழிகிறது. முகாம்களில் எழும் கதறல்களையும் குருதி படிந்த நாட்களின் வலிகளையும் இக்கவிதை பதிவு செய்கிறது. கனடிய குடியுரிமை பெற்ற 'ஓமர்காடர்' குழந்தை போராளியாக கைதுசெய்யப்பட்டு குவான்ரனமோ குடா சிறையில் அடைக்கப்பட்டார். தம் இருபத்தோராவது வயதிலேயே தம் சொந்த நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். குழந்தைப் போராளிகள் போரில் ஈடுபடுத்தப்படுவதைக் கண்டிக்கின்ற மேற்குலகம் ஒரு குழந்தைப் போராளியாகக் கைது செய்யப்பட்ட ஓமர்காடர் என்னும் சிறுவனைக் கருத்தில் கொள்ளவில்லை. மௌனிகள் ஆக்கப்பட்ட வெளித்தேசமோ ஓமர்காடர் போல எம் தேசத்தில் அடைக்கப்பட்ட சிறுவர்களை கண்டு கொள்ளவில்லை. சிறையில் வதையால் துன்புறும் எம் குரல்களுக்குச் செவிசாய்க்கவில்லை. கண்டும் காணாதிருக்கும் அதிகார வர்க்கத்தை நோக்கி,

***'முலையை உறிஞ்சியபடி நித்திய அமைதியில்***
***உறங்கிப் போன பிள்ளைகள்***
***இரத்த வெள்ளத்தில் எற்றுண்டு போன பின்னே***
***எங்களை அறியுங்கள்***
***எங்களுடன் பேசுங்கள்***
***நாங்கள் இருக்கிறோம் என்பதைக் காணுங்கள்'***

எழுப்பும் இக்குரல் 'குற்றங்களை காணாதிருத்தல்' கவிதையில் நெஞ்சைக் கசக்கிப் பிழியும் ஓலமாய் ஒலிக்கிறது. உயிர் குடிக்கும் எறிகணைத் தாக்குதல்களாலும் துப்பாக்கிகளின் வெடியோசைகளாலும் அதிர்ந்து கொண்டிருக்கும் ஈழதேசத்தில் தன் குழந்தைகளுக்கு நிசப்தமான இனிய காலைப் பொழுதைக்கூடக் காட்டமுடியாத ஏக்கம் அம்புலியின் 'தேடி அலைவாய்' கவிதையில் வெளிப்படுகிறது.

***'ஒரு அழகிய காலையை***
***உனக்கு காட்ட முடியாத***
***வசந்த காலத்தில்***
***விளையாட முடியாத***
***பாலைவன நாட்களையே***
***உனக்கு பரிசளிக்கிறேன்'***

*- எழுதாத உன் கவிதை பக்.23*

ஈழத்தின் நடப்பியல் வாழ்வை வெளிப்படுத்தும் இக்கவிதையைப் போன்று துயரங்களைக் கரைத்தபடி வெளிறிய குழந்தையாய் விடியும் விடியல் மைதிலி அருளையாவின் 'ஒவ்வொரு காலையிலும்' என்னும் கவிதையில் படிமங்களுக்கூடான விபரணப் பதிவாய் விரிகிறது.

***'ஒவ்வொரு இரவிலும் கவியும்***
***சோகை பிடித்துப்போன கருமையைக்***
***கரைத்த படி பிழியப்பிழிய அழுது சோர்ந்து***
***முகம் வெளிறிய குழந்தையாய்த் தோன்றும்***
***காலை'***

*- காலம் எழுதிய வரிகள்.பக்.60*

கடந்த நூற்றாண்டில் நடைபெற்ற போரில் ஏராளமான சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். முதலாம் உலகப்போரில் மட்டும் 1.6 மில்லியன் சிறுவர்கள் பாதிக்கப்பட்டதைப்போல் இரண்டாம் உலகப்போரில் 6 மல்லியன் சிறுவர்கள் பாதிக்கப்பட்டனர். காஸாவில் வகை தொகையற்று சிறுவர்கள் அழிக்கப்படும்போது உலகநாடுகள் அதனைக் கண்டு கொள்ளவில்லை. ஈழத்திலும் போர் நடைபெற்ற காலத்தில் இதேநிலையே காணப்பட்டது. குழந்தைகளுக்கு எதிரான அநீதி கண்டு பொங்கும் பெண்களின் குரல், வலிகளையும் வேதனைகளையும் தாங்கி எழும் அந்தராத்மாவின் குரல்.

## அங்கவீனம்:

இயற்கையைக்கூட பார்க்க முடியாத ரசிக்க முடியாத துர்ப்பாக்கிய சூழலில், யுத்தம் மனித உணர்வுகளைச் சிதைக்கிறது. மனித உறுப்புக்களைக் காவுகொள்கிறது. ஷெல்லுக்கு இரையாகி குண்டடிபட்டு அங்கவீனப்பட்ட கால்களைப் பாடும் உதயலட்சுமியின் குரலும் ஈழதேசத்தின் குறிப்பிட்ட கால கட்டத்தின் நிகழ்காலப்பதிவு ஆகும்.

***'எத்தனை களங்கள்***
***கண்ட என் கால்கள்***
***செத்தநிலை போல***
***சவமாகிக் கிடக்கிறதே***
***கனத்த கருவியை***
***தோளிலே சுமந்து***
***தொலைதூரம் எதிரியை***
***விரட்டிய கரங்கள்***
***துவண்டு துடிப்பின்றி***
***கனமிழந்து நிற்கின்றன...***
***ஏறு நடையாய்***
***வீறுடன் நடந்தேன்***
***விண்ணை முட்டிடும்***
***வேகங் கொண்டேன்***
***ஒரு நொடிப் பொழுதில்***
***நாடியடங்கி***
***கட்டிலே கதியென்று***
***கலங்கித் தவிக்கின்றேன்...'***

*- வெளிச்சம் கவிதைகள், பக்.26*

ஈழத்துப் போர் ஏற்படுத்திய மரணம், இழப்பு, அதன்வலி, அவ்வுணர்வால் ஏற்பட்ட தாக்கம் போன்றன பெண்கவிஞர்களால் ஆழமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. இப்பாடுபொருள் தான்வாழ்ந்த சூழலோடு முனைப்புப் பெறுவதால் இக்கவிதைகள் பெண்ணுணர்வுகளை மிகநுண்மையாக வெளிப்படுத்தி நின்றன.



ramesh.s@thaiveedu.com




மலேசிய பெண்பாற் கவிஞர்கள் என்னும் கட்டுரை மலேசியாவில் தமிழ்க் கவிதை படைக்கும் பெண்பாற் கவிஞர்களை அறிமுகம் செய்கிறது. 1985-ம் ஆண்டு முதல் இதழ்களும் 1863-ம் ஆண்டு முதல் கவிதைத் தொகுப்புகளும் வெளிவந்துள்ளன. 1863-ம் ஆண்டு வெளிவந்துள்ள தண்ணிமலை ‘முருகன் ஆசிரிய விருத்தம்’ என்ற நூல் மலாயாவில் வெளிவந்துள்ள மூத்த கவிதை நூலாகும் என ஆய்வாளர்கள் சுட்டுகின்றனர். மலேசியத் தமிழ்ப் புதுக்கவிதையின் முதல் நூலாக விளங்கும் ‘நெருப்புப் பூக்கள்’ 1979-ம் ஆண்டு வெளிவந்துள்ளது என ஆய்வாளர்கள் கருத்து உரைக்கின்றனர். இதைப் போல மலேசிய பெண்பாற் கவிஞர்களின் முதல் கவிதைத் தொகுப்பு எதுவெனச் சரியாகத் தெரியவில்லை. மலேசியப் பெண்பாற் கவிஞர்கள் 1960-ம் ஆண்டு முதல் நாளிதழ்களில் பருவ இதழ்களில் கவிதை படைத்துள்ளனர். இன்றைய நிலையில் தகவல் ஊடகங்களில் கவிதை படைக்கின்றனர். அண்மைக் காலமாக, மலேசிய பெண்பாற் கவிஞர்கள் தங்கள் கவிதைகளைத் தொகுத்து நூலாக வெளியிட்டுள்ளனர். மலேசிய பெண்பாற் கவிஞர்களைப் பற்றிய அறிமுகமாக அமையும் இக்கட்டுரை, பெண்களால் எழுதப்பட்ட மரபுக் கவிதை, புதுக்கவிதை, ஹைகூ, நவீன கவிதைகளைக் கோடிட்டுக் காட்டுகிறது.

## மலேசிய தமிழ்க்கவிதை வரலாறு:

மலேசியத் தமிழ்க்கவிதை வரலாறு 1963-ம் ஆண்டு முதல் தொடங்குவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அன்று முதல் இன்று வரை மலேசியத் தமிழ்க் கவிதை காலந்தோறும் வளர்ந்த வண்ணமுள்ளது. உஷாநாயர், அமிர்தம் சோமசன்மா, யோகி, கு. மீனாட்சி, பூங்குழலி வீரன், மணிமொழி, சரசு உலகன், விஜயலட்சுமி கோவிந், பாவை, சாந்தி, எஸ். ரேவதி ஜீவநாதன், ஜெயா, பூமகள் சந்திரன், உசாராணி சாமிநாதன், மனோன்மணி தேவி அண்ணாமலை, இராஜேஸ்வரி வெள்ளையன், சிவ. பிருந்தாதேவி, இராம சரஸ்வதி, இராக்கம்மாள், வே. இராஜேஸ்வரி, கி. சரஸ்வதி, கலைச்செல்வி, கௌரி ஆறுமுகம், கவிதா பிரியா, ஞானப்பிரகாசம் அந்தோணி, ச. சுந்தரம்பாள் போன்ற பெண்பாற் கவிஞர்கள் மரபுக்கவிதை, புதுக்கவிதை, ஹைக்கூ, நவீன கவிதை போன்ற கவிதைகளை நாளிதழ்கள், பருவ இதழ்கள், வலைத்தளங்களில் படைத்துள்ளனர். சில கவிஞர்கள் தம் கவிதைகளை நூலாக்கம் செய்துள்ளனர்.

## மலேசியப் புதுக்கவிதை வரலாறு:

1964-ம் ஆண்டு சி. கமலநாதன் தொடங்கி வைத்த மலேசியப் புதுக்கவிதையை அக்கினி, ராஜ்குமாரன், இளஞ்செல்வன், ஆதி. குமணன், கோ. முனியாண்டி, பிரசன்னா, சீ. முத்துசாமி, துரை முனியாண்டி, இளந்தமிழன், கு. கிருஷ்ணன், அருள்தாசன் போன்றோர் வளர்க்கத் தொடங்கினர். இவர்களைத் தொடர்ந்து சிரிரஜினி, கனலன், ஏ.எஸ். பிரான்சிஸ், மனஹரன், நாகராஜன், ப. ராமு, கு. கோபாலன், கோ. புண்ணியவான், த. விஜயநாதன், க. உதயகுமார், ம. சண்முகசிவா, சு. முருகையா, முகிலரசன், ஜெகவீர பாண்டியன், சி. அருண், ந. பச்சைபாலன், ஏ. தேவராஜன், கு. தேவேந்திரன், பெ.ச. சூரியமூர்த்தி, எம். சேகர், துரைராஜு முனியன், அகிலன், ப.ஆ. சிவம், ம. நவீன், சிவா, சந்துரு போன்றோர் அடுத்த நிலைக்கு எடுத்துச் சென்றனர்.

## மலேசிய பெண்பாற் கவிஞர்கள்:

மலேசியாவில் வாழ்ந்து வரும் தமிழர் தம் ஓய்வு நேரங்களில் ஆடல், பாடல் போன்ற கலைகளிலும் கவிதை போன்ற படைப்பிலக்கியங்களிலும் ஆர்வம் காட்டினர். இதன் வெளிப்பாடாகத் தோட்டப்புறங்களில் வேலை செய்த மக்கள் வாய்மொழிப் பாக்களைப் பாடியபின் கற்றறிந்த மக்கள் கவிதை படைத்தனர். தமிழ் நேசன், தமிழ் முரசு, மலேசிய நண்பன், தமிழ் மலர், மக்கள் ஓசை, தினமலர், தமிழ்க்கொடி, மலைநாடு, பொதுஜன மித்திரன், முன்னேற்றம், சீர்திருத்தம், மலாயா தூதன், மலாயா மித்திரன், யுவபாரதம், ஜனநாயகம், தமிழோசை, கலைமலர், திரையொளி, கொள்கை முழக்கம், செம்பருத்தி, வானம்பாடி, நயனம், மௌனம், வல்லினம், அநங்கம், அருவி, காதல், பறை, களம், உங்கள் குரல், இலக்கிய வட்டம் முதலிய நாளிதழ்கள், வார, மாத இதழ்கள் அவ்வக் காலங்களில் தோன்றி மக்களுக்குச் செய்திகளை மட்டுமளிக்காமல் தமிழ் இலக்கியம் வளர வாய்ப்பளித்துள்ளன. இவ்விதழ்களில் பெண்பாற் கவிஞர்களும் கவிதைகளைப் படைத்துள்ளனர்.

பார்வதி பூபாலன், உஷாநாயர், அமிர்தம் சோமசன்மா, கு. மீனாட்சி, பூங்குழலி வீரன், யோகி, மணிமொழி, சரசு உலகன், விஜயலட்சுமி கோவிந், பாவை, சாந்தி, எஸ். ரேவதி ஜீவநாதன், க. ஜெயா, பூமகள் சந்திரன், உசாராணி சாமிநாதன், மனோன்மணிதேவி அண்ணாமலை, இராஜேஸ்வரி வெள்ளையன், சிவ. பிருந்தாதேவி, இராம. சரஸ்வதி, வே. இராஜேஸ்வரி, கி. சரஸ்வதி, கலைச்செல்வி, கௌரி ஆறுமுகம், கவிதா பிரியா போன்ற கவிஞர்கள் மரபுக்கவிதை, புதுக்கவிதை

ஆகிய வடிவங்களில் 1960-ம் ஆண்டு முதல் இதழ்களில் கவிதை படைத்துள்ளனர். பின்னர் அவற்றை நூலாக்கம் செய்துள்ளனர். இவர்கள் கவிதைகளில் அறவுரைகள், ஆசிரியர் பெருமை, இயற்கை, இனப்போராட்டம், இனப்பற்று, கல்வி, குழந்தை எழில், தொழிலாளர், மகளிர், மலேசியா, மனிதநேயம், வாழ்த்து, விழா ஆகிய கவிப்பொருண்மைகளைக் காணலாம்.

## அறவுரைகள்:

தமிழ் இலக்கிய வரலாற்றில் அறவுரை பாக்களுக்குப் பஞ்சமில்லாததைப் போல மலேசியத் தமிழ் இலக்கியத்திலும் இப்பாக்களுக்குக் கணிசமான இடமுண்டு. அன்பால் எதையும் சாதிக்கலாம். ஆகவே அனைவரும் அன்பின் அடிப்படையில் வாழவேண்டும். நான் என்று வாழும் வாழ்வைவிட நாம் என்ற வாழ்க்கை வாழ்வை வளமாக்கும். எனவே இதன் அடிப்படையில் வாழ்வை அமைத்து மற்றவர்களுக்கு முன்மாதிரிகளாக வாழ்ந்து காட்ட வேண்டும். நம்முன் வாழும் சான்றோர்களையும் மூத்தோர்களையும் மதிக்கும் குணத்தைப் பெற்றோர் தம் பிள்ளைகளுக்கும் கற்றுக் கொடுக்க வேண்டும். நட்பு பாராட்டும் சமுதாயம் தலைசிறந்து விளங்கும், அங்கு சமயப் பொறைகளுக்கு இடமிருக்காது. இத்தகைய சமுதாயம் அமைய மக்கள் அனைவரும் பாடுபட வேண்டும். சினம் தன்னை மட்டும் அழிக்காமல் தன்னைச் சார்ந்தவர்களையும் அழிக்கும் குணமுடையது. ஆகவே அதை மறந்து வாழ முற்படவேண்டும். என்றும் வாய்மையுடன் வாழ்ந்து மற்றவர்களின் வாழ்வையும் பிற இன மக்கள் வாழ்வையும் வளமாக்க வேண்டும் என்ற கருத்தமைந்த பாக்களையும் கவிஞர்கள் படைத்துள்ளனர்.

*ஏழை ஏழை என்று நீயும் கேலி செய்யாதே*
*ஏழை வாழ்வின் இருளைப் போக்க மறந்து விடாதே*

*இல்லை இல்லை என்று நீயும் ஏங்கி நிற்காதே*
*இயன்ற மட்டும் உழைத்து வாழ மறந்து விடாதே*

*காதல் காதல் என்று நீயும் கருத்திழக் காதே*
*சாதல் வரினும் இணைந்து வாழ மறந்து விடாதே*

*இன்பம் துன்பம் என்று நீயும் தூங்கி விடாதே*
*துடித்தெ ழுந்தே துயரைப் போக்க மறந்து விடாதே*

*பணம் பணம் என்று நீயும் பலரை எய்க்காதே*
*பண்பைக் காத்து அன்பைச் சேர்க்க மறந்து விடாதே*

*சாதி சாதி என்று நீயும் தாழ்த்திப் பேசாதே*
*சரி சமமாய் இணைந்து வாழ மறந்து விடாதே*

*புதுமை புதுமை என்று நீயும் புரட்சி செய்யாதே*
*புதுமை யோடு பழமை நிலையை மறந்து விடாதே*

*வறுமை வறுமை என்று நீயும் வளைந்து விடாதே*
*வாழும் முறையை வகுத்துக் கொள்ள மறந்து விடாதே*

*அன்பு அன்பு என்று நீயும் ஆசை காட்டாதே*
*அறிவைப் புகட்ட இடித்துக் கூற மறந்து விடாதே*

*கல்வி கல்வி என்று நீயும் கரந்து விடாதே*
*கல்வி கற்கும் கடமையை நீ மறந்து விடாதே*

- அமிர்தம் சோமசன்மா, மலாயாவில் தமிழ்க் கவிதை, பக் 33-34

எனக் கவிஞர், வளமுடன் வாழ்வதற்கு வேண்டிய அறிவுரைகளைப் பாடியுள்ளார். பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லை. பாதியில் வந்த உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பேதம் நீங்கி மனிதர் என்ற உறவில் அனைவரும் வாழத் தலைப்பட்டால் உலகம் சிறக்கும். இதை மக்களிடம் பதியவைக்கும் நோக்கில் கவிஞர் இக்கவிதையைப் படைத்துள்ளார்.

## ஆசிரியர்:

மதா, பிதா, குரு, தெய்வம் என்ற ஆன்றோர் வாக்கு காலம் காலமாகப் போற்றப்பட்டு வருகிறது. மாதா பிதா முன்னறி தெய்வங்களாகவும் குரு தெய்வம் பின்னறி தெய்வங்களாகவும் போற்றப்படுகின்றனர். தெய்வத்தைவிடச் சிறந்த ஆசிரியரை உலகம் முழுக்க காணலாம். சமுதாயத்தின் ஆணிவேராகத் திகழும் ஆசிரியர்களை உலகம் பாராட்டிப் போற்றுகிறது. ஆசிரியர், பள்ளி ஆசிரியர், கல்வியாளர் என அழைக்கப்படுபவர். கற்பித்தல் மூலம் மாணவர்களுக்கு அறிவையும் கட்டொழுங்கையும் கற்றுக் கொடுக்கிறார். முறைசார் கல்வியில் இலக்கியம், கணிதம், அறிவியல் போன்ற பாடங்களைக் கற்பிப்பதுடன் கலை, சமயம், குடிமை, வாழும்கலை போன்றவற்றை ஆசிரியர்கள் கற்பிக்கிறார்கள் எனலாம். திருக்குர்ஆன், விவிலியம், வேதம் போன்ற சமய நூல்களை முல்லாக்கள், மேய்ப்பர், குரு, ராபி என அழைக்கப்படும் சமயக்குரவர் கற்றுக் கொடுக்கிறார்கள். கற்பித்தலில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் பாடத்திட்டப்படி பாடங்களைத் தயாரித்தல், பாடங்களைக் கற்பித்தல், மாணவர் முன்னேற்றத்தை மதிப்பிடுதல் ஆகிய பணிகளைச் செய்கின்றனர். ஆசிரியரின் கடமை என்பது வகுப்பறைக் கற்பித்தலைத் தாண்டியும் மாணவர்களுடன் களப்பயணம் செல்லலாம், பள்ளிச் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கலாம், பாடநெறிக்கு அப்பாற்பட்ட நடவடிக்கைகளுக்கு மேற்பார்வையாளர்களாக இருக்கலாம். கொடுமைப்படுத்துதல், பாலியல் துன்புறுத்தல், இனவெறி, துஷ்பிரயோகம் போன்றவற்றால் ஏற்படக்கூடிய தீங்கிலிருந்து மாணவர்களைப் பாதுகாக்கும் காவலர்களாக ஆசிரியர்கள் இருக்க வேண்டும். மாணவர்களுக்காக, நாட்டிற்காகத் தங்களை மெழுகாய் உருக்கி எதிர்காலத் தலைவர்களை உருவாக்குபவர்களாக ஆசிரியர்கள் விளங்குகின்றனர். இவர்களை இன்றைய மாணவர் உலகம் எப்படி பார்க்கிறது என்பதை உலகமறியும்.

*மெழுகாய் எரிந்து தனையுருக்கி*
*மெல்லப் பயிலும் குழந்தைக்குப்*
*பழுதில் லாத கல்வியினைப்*
*பக்குவ மாக எடுத்துரைத்தே*
*எழுந்த துயரை எதிர்கொள்வார்*
*ஏற்ற பாதை வடிவமைப்பார்*
*ஒழுக்கம் மிகுந்த பிள்ளைகளாய்*
*உயர்த்தத் துடிப்பார் ஆசிரியர்*

*வறுமைக் கோட்டில் அல்லலுறும்*
*வளரும் தளிர்கள் நிலைகண்டு*
*வருத்திக் கொண்டு கற்பித்து*
*வாழ வைப்பார் ஆசிரியர்*
*பொறுப்பைத் தமது கண்ணாகப்*
*போற்றிப் பொதுமை காத்திடுவார்*
*இருளை அகற்றிப் பகலவனாய்*
*இளையோர் நெஞ்சில் ஒளிசேர்ப்பார்*

- பூமகள் சந்திரன், மலையகத்தொகை, ப. 185

எனக் கவிஞர் மாணவர்களுக்கு அறிவொளி ஏற்றி வைக்கும் ஆசிரியர்களைப் பாராட்டி உள்ளார். தாயகத்தில் ஆண்டு தோறும் செப்டம்பர் ஐந்தாம் நாள் ஆசிரியர் தினம் கொண்டா டப்படுகிறது. ஆசிரியராகப் பணியைத் தொடங்கிய இராதாகி ருஷ்ணன் இந்திய அதிபராக உயர்ந்தார். அவரைப் பாராட் டும் முகந்தான் ஆசிரியர் தினம் இந்தியாவில் கொண்டாடப்ப டுகிறது. அன்றைய தினம் இந்திய அதிபர் நல்லாசிரியர்க ளுக்கு விருதளித்துப் பாராட்டுவார். இதைப் போலச் சிங்கப் பூரிலும் செப்டம்பர் முதல் நாள் ஆசிரியர் தினம் கொண்டா டப்படுகிறது. சிங்கப்பூரிலுள்ள ஆசிரியர் சங்கங்கள் தங்கள் துறை சார்ந்த ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து சீனம், மலாய், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு விருது வழங்குகிறது. இதைத் தவிர சிங்கப் பூர் அரசாங்கம் நல்லாசிரியர் விருது வழங்கி பாராட்டுகிறது. உலக நாடுகளிலும் இதைப் போல ஆசிரியர் தினக் கொண் டாட்டங்கள் இருக்கும் எனலாம்.

## இளையர்:

ஆசிரியர்களையோ, பெற்றோரையோ, முதியோரையோ மதிக்காத இளைய தலைமுறை உருவாகி வருகிறது. அது குறித்து அவர்களிடம் எந்தக் குற்றவுணர்வும் இல்லை என்பது தான் வேதனையாக இருக்கிறது. சுயதேவைகளை மட்டுமே சிந்தித்து தன்னல உணர்வுடன் வாழும் இவர்கள் யாருக்கும் எதையும் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. இவர்கள் உண்மையான உறவைப் பேண விரும்புவதும் இல்லை. எல்லா உறவிலும் சுயவிருப்பங்களே மேலோங்கி இருப்ப தால் அதிலிருந்து வெளிவர முடிவதில்லை, வெளிவரவும் முயல்வதில்லை. இதை எல்லாம் பார்க்கும்போது அடுத்த தலைமுறையைப் பண்படுத்துவதில் தவறிழைக்கிறோம் எனத் தோன்றுகிறது. வளரும் நாடுகளின் முக்கியமான பிரச்சி னையாக இளம் பருவத்தினரின் மனநலப் பிரச்சினை உள் ளது என உலக சுகாதார நிறுவன அறிக்கை தெரிவிக்கிறது. இளம் பருவத்தில் தற்கொலை, சாலைவிபத்து, போதைப்ப ழக்கம் போன்றன கடந்த பத்தாண்டுகளில் பெருமளவு அதிக ரித்து இருக்கின்றன. மேலும் இன்றைய மாணவர்களின் கவ னச் சிதறல், பொறுமையின்மை போன்றவை கற்றலைப் பெரி தும் பாதிக்கின்றன. கற்றலைத் தாண்டி மனித உறவு, புரிதல், சமூக அக்கறை, பொறுப்புணர்வு, பண்பாட்டு மதிப்பீடு போன் றவற்றை இன்றைய இளைஞர் பெரிதும் பின்பற்றுவதில்லை. நமது மூளை வளர்ச்சியில் முதல் பதினைந்து வருடங்கள் மிக வும் முக்கியமானவை. இக்காலத்தில் மூளை துரிதமாக வளர்ச்சி அடையும் என்பதால் குழந்தைப்பருவமும் இளமைப் பருவமும் ஒருவருடைய வளர்ச்சியில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்துகின்றன.

பிற்காலத்தில் ஒருவருக்கு உருவாகக் கூடிய சிந்தனைத் திற னையும் உணர்வுகளையும் மனிதப் பண்புகளையும் இந்தப் பருவத்தில் மூளை வளர்ச்சியே தீர்மானிக்கிறது. அதனால் இப்பருவத்தில் சத்துள்ள உணவு, சுகாதாரமான வாழிடம், ஆரோக்கியமான பழக்க வழக்கங்கள், குடும்பச் சூழ்நிலை, பெற்றோரின் வளர்ப்புமுறை, நல்ல கல்வி, மாணவர்களுட னான உறவாடல், பாரபட்சமற்ற சமூக வாழ்க்கை போன்றவை ஆரோக்கியமான மூளை வளர்ச்சியைத் தீர்மானிக்கின்றன. ஒரு குழந்தை எதிர் காலத்தில் உடல்ரீதியாகவும் உளவியல்ரீ தியாகவும் ஆரோக்கியத்துடன் இருப்பதற்கு இவையெல்லாம் காரணிகளாகின்றன. பெற்றோர்களும் சமூகமும் முதலில் பொறுப்புடன் செயற்பட வேண்டும். இளம் பருவத்தினர் பெரும்பாலான விஷயங்களைத் தங்களைச் சுற்றி உள்ளவர் களிடம் இருந்தே கற்றுக்கொள்கிறார்கள். அதனால் மானுடப் பண்புகளில், பிறரை மதிப்பதில், அறத்தோடு வாழ்வதில், சிக் கனமான வாழ்க்கை நடத்துவதில் நாம் இளையருக்கு உதார ணமாக இருக்க வேண்டும். மனித உறவின் மேன்மையையும் பரஸ்பர மரியாதையையும் நம்மிடமிருந்து குழந்தைகள் கற் றுக்கொள்ளும் வகையில் முன்மாதிரியாக நடந்து கொள்ள வேண்டும். அறத்தையும் அறிவியலையும் வாழ்க்கை முறைக ளையும் கற்றுக் கொடுப்பதாக கல்வி இருக்க வேண்டும். மாணவர்களிடமிருந்து வெளிப்படும் தவறான நடவடிக்கை களை வைத்து அவர்களை எடைபோடாமல் அதற்கான கார ணங்களைக் கண்டறிந்து இதற்குரிய தீர்வைத் தேடவேண் டும். இத்தகு மாணவர்களை உருவாக்க வேண்டிய கடப்பாடு உடையவர்களாக இன்றைய பெற்றோர் இருக்கின்றனர். இவர் களை நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் வார்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு இவர்களைச் சாரும் என்பதில் ஐய மில்லை.

*சான்றோர் வாக்கு வகையறிந்து*
*சாலச் சிறந்து மாணவர்கள்*
*ஆன்றோர் வழியில் வாழ்ந்திடவே*
*அருமை உணர்ந்து செயலாற்றித்*
*தோன்றும் புகழும் தமிழோடு*
*தொண்டு புரிவீர் சேமமுடன்*
*ஊன்றும் எண்ணம் உயர்த்திடுமே*
*உணர்ந்து தெளிக இலக்கியத்தை*

*ஒருநல் ஆற்றல் சிந்தனையால்*
*உயர்ந்தே நிற்கும் சமுதாயம்*
*ஒருநாள் தெளியக் கண்டிடுவாய்*
*ஒன்றாய் வாழச் சேர்ந்திடுவாய்*
*வருநாள் வலுவாய் மலர்ந்தாட*
*வளர்ந்தே காணும் பாரினிலே*
*திருநாள் போலக் கொண்டாடத்*
*திகழும் உலகில் அற்புதமாய்*

*நன்மை வாழ்வில் சூழ்ந்திடவே*
*நாளும் அன்பை விதைத்திடுவாய்*
*புன்மை விட்டு வாழ்ந்திடவே புரிவீர் நித்தம் சாதனைகள்*
*வன்மை கொண்டு வேதியனாய்*
*வலுவாய் ஆற்றல் பெருக்கிடுவாய்*
*அன்பை எல்லாம் அகத்தினிலே*
*அழகாய்க் கூட்டிச் சேர்த்திடுவாய்*

*கூடிவாழ்ந்தால் கோடிநன்மை*
*கூட்டுச் சேர்வீர் ஓரினமாய்*
*நாடிச் சென்று நயமாக நன்மை செய்வீர் பல்லோர்க்கு*
*வாடி நிற்கும் வறியோர்க்கு வறுமை நீக்கி உதவிடுவாய்*
*தேடிவந்து நிற்போர்க்குச் செருக்கை*
*ஒடித்தே உதவிடுவாய்*

*அற்றை நாளும் ஓடிடவே அடியார் கூட்டம் ஒழிந்திடுமே*
*இற்றை நாளும் கிளைத்திடவே*
*இன்றே புரிவீர் சுணங்காது*
*பற்றை விதைப்பீர் பாரினிலே*
*பண்பை நாளும் வளர்த்திடவே*
*தொற்றை நாளும் முறியடித்தே*
*துன்பம் துயரம் போக்கிடுவாய்*

- எஸ். ரேவதி ஜீவநாதன், மலையகத்தொகை, ப. 245

என மலேசியக் கவிஞர் ரேவதி ஜீவநாதன் பாடியுள்ளார். இவர் பாடியுள்ள கருத்து உலக இளையர்களுக்குப் பொருந்தும் விதமாகவும் உள்ளது. தகவல் சாதனங்களின் பிடியில் இருந்து இளையர்களை, மாணவர்களைக் காப்பது சிரமம் என்றாலும் அதைச் செய்ய வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம்.

## இலங்கை இனப்போராட்டம்:

தனி மனித தவிப்பு, மனப்போராட்டம், சிறகொடிந்த பறவையின் ஏக்கம் என்பனவற்றை நுட்பமாகப் பதிவு செய்வதில் நவீன கவிதைகள் பெரும் வெற்றி பெற்றுள்ளன. மனம் சுமந்த வலிகளை மெல்லிய இழையில் நின்றுகொண்டு அதிகபட்ச சொல்லாடலோ அலங்கார சொற்பிரயோகமோ இன்றி கொஞ்சமும் அலட்டிக் கொள்ளாமல் இயல்பான போக்கில் வாசக மனதில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. தனக்கு வெளியே நடக்கும் அட்டூழியங்களையும் பின்தொடரும் அழிவுகளையும் தார்மீகக் கண்கொண்டு கண்டு கவிதைகளைப் படைக்கின்றனர். இலங்கையின் உள்நாட்டுப் போரைப் பற்றிப் பாடினாலும் உலகளாவிய நிலையில் மண், மொழி, மதம், இனம் கடந்தும் பாடுகின்றனர். இயற்கை வளத்தோடும் செழிப்போடும் திகழ்ந்த மண் போர் காரணமாக அத்தனை சிறப்புகளையும் காவு கொடுத்து ஆறாப் புண்களோடு வெறிச்சோடிக் கிடப்பதைப் பாடியுள்ளனர். எஞ்சியிருக்கும் உயிர்களுக்கு வாழ்வா சாவா என்ற உயிர்ப் போராட்டத்தில் வாழும் இலங்கை மக்களின் வாழ்க்கை நம்மையும் ஒரு கணம் உருக வைக்கிறது.

***முன்பொரு காலத்தில்***
***அந்த நிலம் அமைதியின் வடிவாய்***
***வாய்த்திருந்தது***
***தனக்கே உரிய ஈரத்துடன்***
***மறுதலிக்க முடியாத அடையாளத்துடன்***
***அந்த நிலம் கனிந்திருந்தது***
***கொஞ்சக் காலமாக உடைந்து கொண்டிருந்தது***
***அந்த நிலம்***
***அந்த நாட்டில் வாழ்ந்த***
***அத்தனை அமைதியும் புலம்பெயர்ந்துவிட***
***வெற்றிடமாய் அந்த நிலம்***
***இன்றுவரை காயங்கள் காயங்களாகக்***
***குருதியை மட்டும் சுமந்தபடி***
***எதையும் விட்டுச் செல்ல முடியாமல்***
***கொஞ்ச உயிர்கள்***
***இன்னும் எஞ்சி இருக்கின்றன***
***அந்த நாட்டில்***
***தன் உயிரை விதைத்தபடி***

- பூங்குழலி வீரன், மௌனம் இரண்டாம் இதழ்

எனப் பாடியுள்ள கவிதை இலங்கைத் தமிழர்களுக்கு மட்டுமல்லாமல் இதைப் போன்ற கொடுமை எங்கெல்லாம் நடக்கிறதோ அங்கு வாழும் மக்களுக்கும் பொருந்துவதாக உள்ளது. மலேசியாவில் வாழ்ந்தாலும் தம்மினம் வேதனையடைகிறது எனப் பாடும் திறன் போற்றத்தக்கதாகும். இதனால் கவிஞனின் உலகந் தழுவிய பார்வை தெரிகிறது.

இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தால் உள்நாட்டுப் போரால் பல்லாயிரக்கணக்கான தமிழர் பாதிப்பு அடைந்துள்ளனர். இதனால் தமிழ்ப் பெண்களும் தங்கள் வாழ்வின் எல்லைக்குச் செல்லும் அளவிற்குத் துன்பமடைந்துள்ளனர். இவர்களின் துயரங்களைப் பாடும் கவிஞர்களும் மலேசியாவில் இருந்திருக்கிறார்கள். மனிதநேயம் எங்கிருந்தும் துளிர்த்து தழைக்குமல்லவா? தானும் அந்த மனநிலையில் இருந்தால்தான் இத்தகைய பாக்களைப் புனைய முடியும். இந்த நிலையில் இலங்கையில் பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணின் குரலாக வந்துள்ள இக்கவிதை மனதை வாட்டமுறச் செய்கிறது.

***கள்ளிப்பால் / கொடுத்துக் / கொன்றிருப்பேன்***
***கண்ணே / நீ பெண்ணாய் / பிறந்திருந்தால்***

***கடன் கொடுத்தவனும் / தாறுமாறா பேசுறான்***
***கையைப் பிடிச்சு இழுக்குறான்***

***ஊரை விட்டுப்போன / உங்கப்பன்***
***இருக்கும் / திசையும் தெரியலை***
***உள்நாட்டுப் போரில் / உறவெல்லாம்***
***தூரமாய் போச்சு***
***நீயாவது பிழைச்சுப் போடா***
***முள்வேலி தாண்டிப் போடா***

***முடிஞ்சால் சந்திப்போம்***
***அடுத்த ஜென்மத்தில்***

- இராம. சரஸ்வதி, மலாக்கா கருத்தரங்க கவிதைகள், ப. 93

எனக் கூறித் தாய் தன் குழந்தையை வேலிக்கு வெளியே வீசுகிறாள். நாட்டு நடப்பைக் காட்டும் இக்கவிதை அத்தாயின் மனதையும் வருத்தத்தையும் உணர்த்துகிறது. இந்த ஜென்மத்தில் தாயும் மகனுமாய் வாழவேண்டியவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது. இந்தப் பிறவியிலேயே சேர்ந்து வாழமுடியாத நிலையில் அடுத்தப் பிறவியில் சந்திப்போம் என்பது துன்பத்தின் உச்சமல்லவா.

## இயற்கை:

விண்ணில் தோன்றி தண்ணொளி வீசும் வெண்மதியைக் கவிஞர்கள் மனித வாழ்வுடன் இணைத்தும் பிணைத்தும் பாடியுள்ளனர். நிலவே நீ நவரத்தினங்களில் ஒன்றான வெள்ளியால் செய்த கிண்ணம் போல் வட்ட வடிவமாய்க் காட்சி அளிக்கின்றாய். வெம்மை போக்கி குளிர்ச்சி தரும் வெண்ணிலா, வானில் அன்னநடை பயிலும்போது மாந்தரடையும் மகிழ்ச்சியைக் கூறவும் வேண்டுமோ. அழுகின்ற குழந்தையும் உன்னைக் கண்டு சிரிப்பில் திளைக்கிறது. உன்னைக் கண்ட மகிழ்ச்சியில் தாத்தாவும் பாட்டியும் தம் கடந்த கால வாழ்வில் மூழ்கித் திளைப்பர். அலை கடலும் உன்னைத் தொடவேண்டும் என ஆவலுடன் துள்ளிக் குதிக்கும். காந்தமெனக் காதலர் உள்ளத்தை ஈர்த்திடுவாய். மாந்தளிர் மேனி கொண்ட மகளிர்க்கு உவமையாகிறாய். கவிஞர்களின் கவிக்கு வித்தாகிறாய். மாந்தர்க்கு மட்டுமின்றி பிற உயிர்க்கும் தெவிட்டாத தேனாய் இனிக்கிறாய் என நிலவின் சிறப்பைக் கவிஞர்கள் பாடியுள்ளனர்.

விண்ணகத்தே தவந்திடும் முழுநிலவே உன்
வண்ணப் பெருமை நாவினால் ஆற்றவு மாளுமோ
வண்ண வெள்ளிக் கிண்ணமொத்த வண்வடிவாய்
வெம்மைப் போக்கும் தன்மையை சுமந்துகொண்டு
அன்னப்புள் நடையையொத்த நடையைக் கொண்டு
அந்தரத்தே நீ பவனி வந்திட்டபோது
மண்ணகத்தே பரப்பிநின்ற மையிருள் மங்கி
மண்ணுயிர் சொக்கிடும் மாயந் தானென்னே

வீர்த்தழுங் குழவிக்கூட்டம் உனைக்கண்ட போது
விம்மலை நீக்கி நகையாடி விளிக்கு முன்னைப்
பார்த்திட்ட சிறுவருமே களிதுள்ளிடப்
பாட்டிசைத்து ஆட்டமாடிக் குதித்திடுவார்
போர்த்திட்ட முதுமையை மறந்து தாத்தா
பாட்டியார் தேடிக் கதைகள் பகர்ந்திடுவார்
ஆர்த்திடும் கடலுமுன்னை வாரித் தழுவிட
அந்தரத்தே எழும்பிக் குதியோ குதிக்கும்

காந்தத்தைப் போலின்பம் காதல ருள்ளத்தே
கனத்திட ஏற்றிடச் செய்திடு வாய்
ஏந்தெழில் படைத்திட்ட வஞ்சியர் தம்
எழில் தரும் வதனத்துக் குவமை யானாய்
தேன்கவிஞர் தன்னகத்தே தாவி யோடித்
தேனாற்றாய்க் கவிதை தன்னைப் பொழியச் செய்வாய்
மாந்தர்க்கு மட்டுமென்ன வந்திருக்கு
மெவ்வுயிர்க்கும் தெவிட்டாத தேனாகும் நீ

- கு.நா. மீனாட்சி, தமிழ் முரசு 10-01-1954

எனக் கவிஞர் வானில் உலாவரும் வெண்ணிலவின் தன்மைகளைப் பாடியுள்ளார். இயற்கை பற்றி எழுதியவர்களின் கற்பனையும் உவமைகளும் காலத்தைக் கடந்தும் நிலைத்து நிற்கின்றன. இதைப் படிக்குந்தோறும் மனமகிழ்ச்சி அடைகிறோம். அந்த அளவிற்கு இயற்கை வனப்பு மிக்கதாய் இருந்து வருகிறது. அத்தகு இயற்கை இன்று மெல்ல மெல்ல மறைந்து வருகிறது. இயற்கையை இழப்பது பற்றிக் கவலைப்படாமல் வாளாவிருந்தால் விரைவில் நம் வாழ்வையும் இழப்போம். புற உலகையும் அக உலகையும் வாழவைக்கும் இயற்கையைப் பேணி காக்க நம் தலைமுறைக்குக் கற்றுத்தர வேண்டும். அதன் மூலம் அதைக் காப்பதற்கான உணர்வை மேம்படுத்தலாம். இழந்த இயற்கையை மட்டுமல்ல, இருக்கும் இயற்கை வளத்தைக் காத்திடலாம்.

(தொடரும்...)



kotti.thirumuruganadam@thaiveedu.com






‘ஆபிரிக்காவின் நுரையீரல்’ என வர்ணிக்கப்படுகின்ற கொங்கோ வடிநிலம் (Congo Basin) அமேசன் வனாந்திரத்தை விட அதிகளவான கார்பனை உறிஞ்சும் மழைக்காடாகும். பெறுமதிமிக்க இந்தக் கொங்கோ வடிநிலம் ஆறு நாடுகளில் வியாபித் திருக்கிறது. அதில் இரண்டாவது பெரிய வனப்பகுதியை கமரூன் தன்னகத்தே கொண்டிருக்கிறது. அதுபோலவே, பழமையான மற்றும் பிரசித்தமான கோருப் தேசிய பூங்கா, உலக பாரம்பரிய தளமாக யுனெஸ்கோ அறிவித்துள்ள ட்ஜா சரணாலயம், பகாசி தீபகற்ப அலையாத்திக் காடுகள் உள்ளிட்ட பத்திற்கும் மேற்பட்ட பயனளிக்கும் காடுகள் இங்கிருக்கின்றன. இந்நாட்டின் புவியியல் மற்றும் கலாசார பல்வகைத் தன்மை காரணமாக கமரூன் ‘Africa In Miniature’ என்ற செல்லப் பெயரையும் கொண்டுள்ளது. ஆபிரிக்க நாடுகளுள் ஆச்சரியமான புவியியல் அமைப்பைக் கொண்ட கமரூன் அதன் வடக்குப் பகுதியில் பாலைவன சமவெளிகள், மத்திய பகுதிகளில் மலைகள் மற்றும் தெற்கில் வெப்பமண்டல மலைக்காடுகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் மிக அதிக மழைப்பொழிவைப் பெறும் கமரூன் பூமியின் ஈரமான ஓர் இடமாகவும் கருதப்படுகின்றது. மேலும் நாடு முழுவதும் பல்வேறு பகுதிகளில் அனல் நீரூற்றுகளும் காணப்படுகின்றன. மொத்தத்தில் பெரும் வனப்போர்வையால் மூடப்பட்ட நாடு கமரூன் ஆகும். ஆனால், இந்நாட்டு வனாந்திரங்கள் மனித செயற்பாடுகளால் தீவிரமாக அச்சுறுத்தப்பட்டு வருகின்றன.

கமரூன் குடியரசு மத்திய ஆபிரிக்காவில் உள்ளது. இதன் எல்லைகளாக மேற்கு மற்றும் வடக்கே நைஜீரியா, வடகிழக்கே சாட், கிழக்கே மத்திய ஆபிரிக்கக் குடியரசு, தெற்கே எக்குவடோரியல் கினி, காபோன், கொங்கோ குடியரசு ஆகிய நாடுகள் உள்ளன. கமரூனின் கரையோரப் பகுதிகள் பயாபிரா பெருங்குடா, கினி வளைகுடா, அத்திலாந்திக்குப் பெருங்கடல் ஆகியவற்றில் அமைந்துள்ளன.

முதலாம் உலகப் போருக்கு முன்பாக கமரூன் ஒரு ஜெர்மானிய காலனியாக இருந்தது. ஜேர்மனி வீழ்ந்த பிறகு கமரூனின் ஒரு பகுதி பிரான்ஸிடமும் மற்றொரு பகுதி பிரித்தானியாவிடமும் சென்றது. பிரிட்டிஸ் கமரூன் 1961-ம் ஆண்டு ஒக்டோபர் 1-ல் சுதந்திரம் பெற்று பிரெஞ்சு கமரூன் உடன் இணைந்தது. ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளைத் தவிர்ந்த மேலும் 250 மொழிகள் பல இனக்குழுக்களால் பேசப்படுகின்றன.

கமரூன் பகுதிக்குள் முதலில் புகுந்த ஐரோப்பியர் போர்த்துக்கேயர் ஆவர். இவர்கள் 1472-ம் ஆண்டு Wouri River ஆற்றைக் கண்டடைந்தனர். அந்த ஆற்றில் அதிகளவில் காணப்பட்ட கூனி இறால்களைக் (Shrimps) கண்டு, அந்த ஆற்றுக்கு Rio dos Camarões என்று பெயரிட்டனர். போர்த்துகேய மொழியில் அதற்கு கூனி இறால் ஆறு (Shrimps’ River) என்று அர்த்தம். பின்னர், காலத்திற்கேற்ப, ‘Camarões’ என்ற பெயர் Cameroon என மாற்றமடைந்தது. ஐரோப்பியரின் வருகையோடு அந்த நிலத்தின் பெயர் மாத்திரமல்ல, அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்க்கையும் கூட மாறிப்போனது. கமரூனில் போர்த்துக் கேயரால் அடிமை வர்த்தகம் தொடங்கப்பட்டது. அவர்களை தொடர்ந்து ஒல்லாந்தரும் பிரான்ஸியரும் அடிமை வர்த்தகத்தில் கொடி நாட்டினர். கமரூனின் கடற்கரையில் இருந்து தென்னமெரிக்காவுக்கும் கரீபியன் தீவுகளுக்கும் அடிமைகளாக ஆபிரிக்க சுதேசிகள் கடத்தப்பட்டனர். இது வேதனைமிகுந்த அத்தியாயமாகும். அதுப்போலத்தான், இன்று காட்டு மரங்கள் எல்லையின்றித் தறிக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அதாவது, கச்சா எண்ணெய்க்கு அடுத்தப்படியாக அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுவது கமரூன் நாட்டு வெட்டு மரங்களாகும்.

ஐரோப்பிய ஒன்றியத்துக்கு வெப்பமண்டல மரங்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் முதன்மைத் தானத்தில் கமரூன் இருக்கிறது. கடந்த தசாப்தங்களில் அங்கு வெட்டு மரத்தொழில் அதிகரித்திருக்கிறது. இந்த வியாபாரம் சீனா, லெபனான், பிரான்ஸ் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களையும் ஈர்த்திருக்கிறது. சீனா மற்றும் இந்தோனேசிய நாடுகளைச் சேர்ந்த திறமையாக மரம் வெட்டும் பலர் ஆயுதங்களுடன் கமரூன் காடுகளில் நடமாடத் தொடங்கிவிட்டனர். அந்தளவிற்கு வெட்டுமரத் தொழில் எழுச்சி பெற்றிருக்கிறது. மரங்களை கொலை செய்வதற்கு கமரூன் வனாந்திரங்களுக்குள் சட்டவிரோதிகள் புகுந்துள்ள தாகவும், இந்த வனச் சுரண்டல் நாளுக்கு நாள் மோசமடைந்து வருவதாகவும் சுற்றுச்சூழல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். சட்டவிரோத வெட்டுமரத் தொழிலானது பயனற்றதும் பாரபட்சமானதுமான சட்ட அமுலாக்கலால் அதிகரித்துள்ளதாகவும் சுட்டுகின்றது. கமரூனின் கிழக்கு மற்றும் தென்பகுதிகளில் பரந்து விரிந்திருந்த வனாந்திரங்கள் இப்போது வெறுமையாக கிடப்பதாகவும்,

இதற்கு காரணம் கட்டுக்கடங்காத சட்டவிரோதமான வெட்டு மரத் தொழில் என்றும் குறிப்பிடுகின்றனர். 2001 முதல் 2014-இற்கு இடையில் மாத்திரம் 657,000 ஹெக்டேர் காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. 2014-ல் 141,000 ஹெக்டேர் காடுகள் அழிக்கப்பட்டன. 2013-ம் ஆண்டு தொடக்கம் 2019-ம் ஆண்டு வரை காடழிப்பு இரட்டிப்பாகியுள்ளது. காடுகளில் இருந்து துறைமுக நகரமான டுவாலாவிற்கு வருவதற்கு இடைப்பட்ட வழியில் காவல் நிலையங்கள் பல போடப்பட் டுள்ள போதிலும், மலிந்துபோயுள்ள ஊழல் மோசடிகள் கார ணமாக அவை செயலிழந்துள்ளன. அதனால், சட்டவிரோத வெட்டு மரங்கள் கமரூனில் இருந்து ஐரோப்பா மற்றும் ஆசிய சந்தைகளுக்கு வந்து குறைவின்றிக் குவிகின்றன.

இவ்வாறு காடுகளின் இரத்தக் கசிவு அதிகரிக்கும்போது வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பணப்பயிர்களைக் கொண்டு வந்து வெட்டவெளியாக்கப்படுகின்ற இடங்களில் விதைக்க முனைகின்றனர். பணப்பயிர் பட்டியலில் முதலிடத்தில் செம் பனை இருக்கிறது. ஆபிரிக்காவில் செம்பனை விரிவாக்கம் குறித்து முதனியியலாளர் (Primatologist) ஜோசுவா லிண்டர் 'செம்பனை பெரும் சக்தியுடன் படையைத் திரட்டி வரப்போகி றது' என்கிறார். இவ்வாறான நிலைமைகள் கொங்கோ வடிநி லத்தின் வடமேற்கு மூலையில் ஓய்வெடுக்கும் கமரூனில் ஓடித்திரியும் சிம்பன்ஸிகளுக்கு ஆபத்தாகியிருக்கின்றன.

1980-களின் பிற்பகுதியில் கமரூன் தலைவர்கள் காடுகளை அடகு வைத்து அதிக பணம் தேடத்தொடங்கினர். உலக வங் கியும் சர்வதேச நாணய நிதியமும் இதற்கான யோசனையைத் தந்திருந்தன. இவ்விவகாரத்தைச் சுற்றுச்சூழல் வழக்கறிஞர் சாமுவேல் நுயிஃபோ 'தொழில்துறை இல்லாத, உற்பத்திப் பொருளாதாரம் இல்லாத கமரூன் போன்ற ஒரு நாட்டில் அதிகப் பணம் தேடமுனைவதென்பது, இயற்கை வளங்க ளைச் சுரண்டுவதற்கு முக்கியத்துவம் கொடுப்பதாகும்.' என் றார். இதன்படி, செழிப்பான காடுகளை வேகமாக வளர்ந்துவ ரும் செம்பனைத் தோட்டங்களாக மாற்ற கமரூன் தலைவர் கள் வனத்துறை சட்டங்களை மாற்றியமைத்தனர். இதனால், தொடக்கத்தில் 25 ஹெக்டேரில் இருந்த மரங்கள் மறைந்தி ருக்கலாம் என்று கருதுகின்றனர். அதாவது, வளமான காட்டு வளங்கள் சீரழிக்கப்பட்டன. உலகின் மிகவும் சர்ச்சைக்குரிய செம்பனை நிறுவனங்களில் ஒன்றான ஹெராக்கிள்ஸ் ஃபார்ம்ஸ், சட்டவிரோதமாக பதிவு செய்யப்பட்ட மரங்களை சீனாவுக்கு விற்க உயர் அரசாங்க அதிகாரிகளுடன் கூட்டு சேர்ந்து திட்டம் தீட்டியதாக வெளியான செய்திகள் மூலம் கமரூன் வனச்சீரழிவை பற்றி புரிந்துகொள்ள முடிகிறது. இந்த நிறுவனம் அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங் குகிறது. பல்லுயிர் மழைக்காடுகள் ஒன்றில் 70,000 ஹெக்டேர் செம்பனைத் தோட்டத்தை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்ட ஹெராக்கிள்ஸ் ஃபார்ம்ஸ் நிறுவனத்தை வனப்பாதுகாவலர் கள் எதிர்த்து குரல்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. இப்பகு தியில் 23 வகையான பெரிய பாலூட்டி இனங்கள் கண்டறியப் பட்டுள்ளன. இதில் சிம்பன்சி கிளையினங்களான நைஜீரியா-கமரூன் சிம்பன்சி (Pan troglodytes ellioti - பான் ட்ரோக்ளோ டைட்ஸ் எலியோட்டி) அடங்கும். அதுமட்டுமன்றி பசிக்கா கவும், வருமானத்திற்காகவும் வேட்டையாடுதல் அதிகரித்தி ருப்பதால் அங்கு வாழும் பல உயிரினங்கள் அச்சுறுத்தலில் இருக்கின்றன.

சமீபத்திய ஆண்டுகளில் காடழிப்பு மற்றும் சீரழிவில் கேம-ரூன் ஒரு மேல்நோக்கிய போக்கைக் கண்டுள்ளது. 1900-2000 காலகட்டத்தில் 0.94 சதவீதமாக இருந்த காடழிப்பு விகிதம் அடுத்த தசாப்தத்தில் 1.04 சதவீதமாக உயர்ந்தது. 2021-ம் ஆண்டில் உலகில் சிறந்த காடுகளை அழிக்கும் நாடுகளின் பட்டியலில் கமரூன் ஏழாவது இடத்தைப் பிடித்துள்ளது. அதாவது, 89,000 ஹெக்டேர் காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. வேகமான இந்தக் காடழிப்பு பரந்த காடுகளின் இருப்பை அச் சுறுத்துகிறது. இது கிராமப்புறப் பொருளாதாரத்தையும் வீழ்த் துகிறது.

கமரூனிய பொருளாதாரத்தின் முக்கியத் துறைகளில் கிராமப் புறத் துறையும் ஒன்றாகும். நாட்டின் ஏற்றுமதி வருவாயில் 55 சதவீதப் பங்களிப்பை கிராமப்புறத் துறை வழங்குகிறது. இருப்பினும், விவசாய மற்றும் உணவுப் பொருட்கள் அதிகள வில் இறக்குமதி செய்யப்படுவதால் வர்த்தகச் சமநிலை கேம ரூனில் எதிர்மறையாகப் பாதித்துள்ளது. 2046-ம் ஆண்டாகும் போது கமரூனின் மக்கள் தொகை இரட்டிப்பாகும் என்று எதிர்



பார்க்கப்படுகிறது. நகரப் புறங்களில் 20 மில்லியனாக வும், கிராமப்புறங்களில் 17 மில்லியனாகவும் சனத்தொகை அதிக ரிக்கும் எனக் கூறப்படுகிறது. இது உணவு உற்பத்திக் கான தேவையை மேலும் தூண்டும். கமரூனின் உள்நாட்டு விவசாய உற்பத்தியை அதிகரிப்பது 2035-ம் ஆண்டளவில் வளர்ந்து வரும் மற்றும் தொழில்மயமான பொருளாதாரமாக மாறுவதற்கான தேசிய பார்வையின் ஒரு பகுதியாகும். அர சாங்க உத்தியானது செம்பனை மற்றும் அதன் தொழில்மய மான வழித்தோன்றல்களுக்கான வளர்ந்து வரும் தேசிய மற் றும் பிராந்திய சந்தையை திருப்திப்படுத்துவதை நோக்கமா கக் கொண்டுள்ளது, இதன் மூலம் பெரிய, நடுத்தர மற்றும் சிறிய அளவிலான செம்பனை தோட்டங்கள். கோகோ உற்பத் தியை இரட்டிப்பாக்குவது என்ற அரசாங்கத்தின் இலக்கு காடுகளின் அழிவை அதிகரிக்கும்.

அத்துடன், இறப்பர் பயிர்ச்செய்கையும் காடழிப்பைத் துரிதப் படுத்தியுள்ளன. யுனெஸ்கோ தளத்திற்கு அருகிலும் இதனை அவதானிக்க முடிகிறது. க்ரீன்பீஸ் ஆபிரிக்காவின் அறிக்கை யின்படி, 2017-ம் ஆண்டு ஏப்ரல் முதற்கொண்டு 2018-ம் ஆண்டு ஏப்ரல் வரையான காலப்பகுதிக்குள் 2,300 ஹெக்டேர்

இறப்பர் தோட்டம் வளர்ந்துள்ளது. 2011-ல் துப்புரவு வேலைகள் தொடங்கப்பட்டதில் இருந்து ஏறக்குறைய 10,050 ஹெக்டேர் காடுகள் அழிக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் 20,000 ஹெக்டேர் மழைக்காடுகள் அழிக்கப்படலாம் எனவும் கிரீன்பீஸ் ஆபிரிக்கா எச்சரிக்கிறது.

தவிர, கனிமங்களைத் தேடியும் கமரூனில் கிழக்குப் பகுதியில் காடுகள் அழிக்கப்படுகின்றன. மண்ணைக் காக்கும் தாவரங்கள் காணாமல் போகின்றன. அதனால் ஏற்படுகின்ற கனமழையால் விவசாயிகளின் வயல்களில் வெள்ளம் புகுந்தது, பயிர்கள் மற்றும் உள்ளூர் மக்களின் வாழ்வாதாரம் அழிக்கப்படுகிறது. கமரூனில் ஒட்டுமொத்தமாக 2017-க்கும் 2018-க்கும் இடையில் ஏறக்குறைய 308,000 ஹெக்டேர் காடுகள் மறைந்துள்ளதாகக் குளோபல் ஃபொரஸ்ட் வொட்ச் தெரிவிக்கிறது. அதாவது, அதற்கு முந்தைய இரு ஆண்டுகளை விட 57 சதவீதம் அதிகமாகும்.

அதேவேளை, கமரூனில் பல சர்ச்சைக்குரிய தோட்டங்களுக்கு அருகில் வசிக்கும் பெண்கள் தோட்டங்களின் விரிவாக்கத்தால் சமூக நிலங்கள் மற்றும் உரிமைகள் இழப்பதையும், பூர்வீக காடுகள் அழிக்கப்படுவதையும் எதிர்த்து நின்றமையை தொடரந்து எதிர்ப்புப் பிரசாரம் வலுப்பெற்றது. கேமரூனில் உள்ள கிராமப்புறச் சமூகங்களைப் பாதுகாக்கும் பனை விவசாயிகளின் தேசியக் கூட்டான Synaparcam இன் தலைவரான மேரி நோயெல் எடோண்டே உள்ளூர் மக்களுடன் இணைந்து பணியாற்றினார். ‘கிராமப்புற மக்களாகிய எமக்கு மிக முக்கியமானது நிலம்’ என்று அவர் கூறினார். ‘நாம் எந்த அளவிற்கு உணவுப் பொருட்களை அதிகமாக பயிரிடுகிறோமோ, அந்த அளவிற்குப் பிற குடும்பங்களுக்கு உணவளிக்கலாம் என்ற எமது நம்பிக்கையும் அதிகரிக்கிறது. எனவே, முதலில் எங்கள் நிலத்தை எங்களுக்கு ஒப்படையுங்கள்.’ என்றும் வலியுறுத்தினார். Socapalm க்கு எதிரான இவர்களது போராட்டம் பிரதானமானது.

கமரூனைப் போலவே, கொங்கோ வடிநில பிராந்தியத்தில் உள்ள பல நாடுகளில் வன வளங்களின் நிலையான மேலாண்மை ஆபத்தானது. அதிகரித்து வரும் காடழிப்பு சுற்றுச்சூழலில் பேரழிவு தரும் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. கொங்கோ வடிநில காடழிப்பு ஒட்டுமொத்த உலகத்தை அச்சுறுத்தும் புவி வெப்பமடைதலுக்கு பெரும் பங்களிக்கின்றன. எனவே, நிலையான வன நிர்வாகத்தை மேம்படுத்துவது வேலைகளை உருவாக்குவதற்கும், பாதுகாப்பதற்கும், கிராமப்புற வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும், பருவநிலை மாற்றத்தைத் தணிப்பதற்கும், பல்லுயிர் பெருக்கத்தைப் பாதுகாப்பதற்கும் மற்றும் எல்லாவற்றிற்கும் மேலாக வறுமையைக் குறைப்பதற்கும் பங்களிக்க வேண்டியது அவசியம் என்று சுற்றுச்சூழல் நிபுணர்கள் கூறுகின்றனர். உலக வங்கியின் அறிக்கையின்படி, கேமரூன் நாட்டுக்கு ஏறக்குறைய 5,500 மில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டு படுகடன் இருக்கிறது. அதாவது, கடன் புள்ளிவிபர ஆய்வுகளின்படி, 42 ஆபிரிக்க நாடுகளில் 10-வது இடத்தில் கமரூன் இருக்கிறது. வளங்கள் குவிந்திருந்தும் ஏழையாகவுள்ள நாட்டுக்கு கமரூன் சிறந்த உதாரணமாகும்.

சுதந்திரத்திற்குப் பிறகு கால் நூற்றாண்டு வரை கமரூனின் பொருளாதாரம் ஆபிரிக்காவில் மிகவும் பலமான ஒன்றாக இருந்தது. ஆனால், 1980-களின் நடுப்பகுதியில் முக்கிய ஏற்றுமதிகளான பெற்றோலியம், கோக்கோ, கோப்பி மற்றும் பருத்தி ஆகியவற்றிற்கான விலைகளின் வீழ்ச்சி, மற்றும் அதிக மதிப்புள்ள நாணயம், தவறான பொருளாதார மேலாண்மை ஆகியவற்றால் கமரூனின் பொருளாதாரம் ஒரு தசாப்தகால மந்தநிலைக்கு சென்றது. கூடுதலாக அரசியல்வாதிகளின் ஊழலும் சேர்ந்துகொள்ள இன்று கமரூன் கணிசமான அளவு எண்ணெய் இருப்பு, சாதகமான விவசாய நிலைமைகள் போன்ற வளங்களைக் கொண்டிருந்தாலும் கூட பொருளாதார பலம் குறைந்த நாடாகவே உள்ளது.

கமரூனின் வன வளங்கள், அதன் சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதாரத்தின் முக்கிய ஆதாரமாக விளங்கினாலும், கட்டுப்பாடற்ற வனச்சுரண்டல், சட்டவிரோத வெட்டுமரம், மற் றும் தொழில்துறையின் விரிவாக்கம் ஆகியவை நாட்டின் பசுமைப் போர்வையைத் தீவிரமாக அழித்து வருகின்றன. இந்த பின்னணியில், அரசின் குறுகியநோக்கு பொருளாதார முன்னெடுப்புகள் காரணமாக, வன அழிவை கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகள் போதுமான அளவில் மேற்கொள்ளப்படவில்லை.

உலகளாவிய சூழலில், கொங்கோ வடிநிலம் போன்ற முக்கிய மழைக்காடுகள் கார்பன் உறிஞ்சுதலில் முக்கிய பங்கு வகிக்கின்றன. எனவே, இவை பாதுகாக்கப்படுதல் என்பது நிலையான வள மேலாண்மைக்காக மட்டுமல்ல, புவி வெப்பமாதலின் தீவிரத்தன்மையைக் குறைக்கும் தீர்வாகவும் கருதப்பட வேண்டும். கமரூனின் சுற்றுச்சூழல் துறைக்கு அதிக முதலீடுகள், வன அழிப்பை கட்டுப்படுத்தும் கடுமையான சட்டங்கள் மற்றும் ஊழல் ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதபட்சத்தில், நாடு மட்டுமின்றி, உலகளாவிய சுற்றுச்சூழலுக்கும் பேரழிவு ஏற்படும் அபாயம் உள்ளது.

கமரூனின் கிராமப்புற சமூகங்கள், மழைக்காடுகள் மற்றும் இயற்கை வளங்கள் ஒன்றுக்கொன்று பின்னிப் பிணைந்த உறவினைக் கொண்டுள்ளன. ஆனால், கடந்த சில தசாப்தங்களில் விவசாயம், செம்பனைத் தோட்டங்கள் கிராமப்புற நிலங்களைப் பெரிய அளவில் பறிக்கும் அளவுக்கு விரிவடைந்து வருகின்றன. இது சுற்றுச்சூழல் பாதிப்புகளை மட்டுமல்லாது, உள்ளூர் மக்களின் வாழ்க்கை முறையையும் பெரிதும் பாதிக்கிறது. வன அழிவும், பருவநிலை மாற்றமும் இணைந்து செயல் படுவதால், உணவு பாதுகாப்பு சிக்கல்கள் மற்றும் வாழ்வாதார இழப்பு போன்ற பிரச்சினைகள் அதிகரிக்கின்றன. இந்த சூழ் நிலையில், அரசு வனப் பாதுகாப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்துவதோடு, கிராமப்புறச் சமூகங்களுக்கு நில உரிமையை உறுதி செய்வதும் மிக அவசியம். இதன் மூலம் செம்பனை எண்ணெய் நிறுவனம், கனிம வள சுரண்டல் மற்றும் வெட்டுமர தொழில் போன்ற காரணிகளால் மக்களின் வாழ்வியல் இடம் அழியாமல் பாதுகாக்க முடியும். சுற்றுச்சூழல் மேலாண்மை, சமூகநீதி, மற்றும் பொருளாதார முன்னேற்றம் ஆகியவை ஒரே நேரத்தில் வளர்வதற்கான சம நிலையான தீர்வுகள் அமுல்படுத்தப்பட வேண்டிய அவசியம் மிகுந்துள்ளது.



sathees.selvarajah@thaiveedu.com



# திருச்சூகர வேட்டை

– த. ஜீவராஜ்

அறிவாட்டிப் பாட்டியுடன் இருந்த இறுதிக் கணங்களை ஆதினி அசைபோடாத நாட்களே இல்லையெனலாம். நீண்ட நேரம் கண்ணீர்விட்டு அழுது புலம்பித் தீர்ப்பதற்கு நேரம் கொடுக்காதபடி காலம் மிகவும் வேகமாகச் சுழன்றுகொண்டிருந்தது. ஆலயத்திற்குரிய நடைமுறைகளையும், நடனப் பயிற்சிகளையும் ஆலயத்தால் நியமிக்கப்பட்ட ஆசிரியரிடமிருந்து ஆதினி கடந்து போன இரண்டு வருடங்களில் முறையாகக் கற்றுக்கொண்டிருந்தாள்.

திருக்கோணேச்சரத்தில் பங்குனி உத்தரத்தில் கொடியேறித் திருவிழாக்கள் ஆரம்பித்துவிட்டதால் ஆலயத்தின் பிரதானமான தேவரடியார்களில் ஒருவரான தம்பிரான் மாணிக்கத்திற்கு உதவியாளராகச் செயற்படும் பணி ஆதினிக்கு வழங்கப்பட்டிருந் தது. ஏற்கனவே தம்பிரான் மாணிக்கத்திடம் அறிவாட்டிப் பாட்டி அறிமுகப்படுத்தியிருந்ததால் தனது சொந்த மகளைப்போல அவர் ஆதினியைப் பார்த்துக் கொண்டார். திருவிழா வேலைகள் அவள் வயதிற்கு மிகவும் சிரமம் தருவதாக இருந்தபோதும் ஆதினி மிகுந்த உற்சாகத்துடன் அதில் ஈடுபட தம்பிரான் மாணிக்கத்தின் அன்பும், அரவணைப்பும் காரணமாக அமைந்திருந்தன.

திருக்கோணேச்சரத்தின் முதன்மைத் தேவரடியாரான தம்பிரான் மாணிக்கத்திற்கு உதவியாளராகச் செயற்படுவது என்பது அத்தனை சுலபமான விடயமாக இருக்கவில்லை. ஆலயத்தின் மூலவருக்குப் பட்டாடை அணிவித்தல், சிவபெருமானின் திரு மேனிக்கு முன்பாக ஆலத்தி எடுத்தல், பூசை வேளைகளிலும், திருவிழா ஆரம்பிக்கும் சமயத்திலும் இறைவனுக்கு முன்னால் நடனம் ஆடுதல், திருச்சூகர வேட்டைத் திருவிழாவில் பன்றி குற்றல் என்பன அவருக்குரிய பணிகளாக இருந்தன. திருவிழாக் காலங்களில் ஆலயப் பணியாளர்கள், அடியவர்கள், அரச பிரதிநிதிகள், பன்னாட்டு யாத்திரிகர்கள் முன்னிலையில் தம்பிரான் மாணிக்கம் மேற்கூறிய பணிகளைச் செய்யும்போது மிக அவதானமாக எந்தக் குறையும் நேர்ந்துவிடாது அவருக்கு உதவ வேண்டியது ஆதினியின் கடமையாக இருந்தது.

அதிர்ஷ்டவசமாக ஆலத்திப் பெண்களான அன்னம்மை, மருதாத்தை, கோணாத்தை, கயிலம்மை, கதிராசி, செம்பரத்தை, புவன பிள்ளை, உமையாத்தை, பாலாத்தை, வேதம்மை, வள்ளியம்மை, திருவுடையாள், சுந்தரியார் என்று ஏழு குலங்களைச் சேர்ந்த ஆலத்திப் பெண்கள் பலர் தம்பிரான் மாணிக்கத்துடன் இருந்தது ஆதினிக்கு ஆறுதலாக இருந்தது. அவர்களில் அதிகமானோர் வயதில் முதியவர்களாகவும், அனுபவம் மிக்கவர்களாகவும் இருந்ததனால் புதிதாக இணைந்து கொண்ட ஆதினிக்கு மிகவும் உதவியாகவும் இருந்தது.

'இண்டைக்குத் திருவிழாவில் என்ன செய்வாங்க' என்று ஆவலோடு கேட்டாள் ஆலாத்திப் பெண்களில் புதிதாக இணைந்து கொண்ட சுந்தரியார்.

'ஏன் நீ போன வருசம் பாக்கலையா' என்றாள் கோணாத்தை.

'இல்ல நான் உடம்புக்கு முடியாததால ஒன்பதாம் திருவிழாக்குப் பிறகு வரல்ல' என்றாள் கவலையுடன் சுந்தரியார்.

'இன்றைக்கு தம்பிரான் மாணிக்கம் அம்மாதான் பன்றி குற்றல் செய்வாங்க' என்றாள் மருதாத்தை.

'பன்றி குற்றல் எண்டா என்ன' என்று வியப்போடு கேட்டாள் சுந்தரியார்.

'மகாபாரதக் கதை கேட்டதில்லையா நீ' என்று அதுவரை அமைதியாக இருந்த கயிலம்மை கேட்டாள்.

'ம்... ம்... பலமுறை கேட்டிருக்கிறேன்...' என்று தலையாட்டினாள் சுந்தரியார்.

'அடர்ந்த வனத்தில் அர்ஜுன மகாராசா தவம் இருக்கும் போது அதைக் குழப்ப வந்த பன்றியைக் கொல்லுவார் இல்லையா, அதைத்தான் நாடகமாக நடிச்சுக் காட்டுவாங்க. திருச்சூகர வேட்டை தம்பிரான் மாணிக்கம் அம்மாதான் செய்வாங்க, நீ ஆதினியோட பக்கத்துல இருந்து வடிவாகப் பார்க்கலாம்' என்றாள் சிரித்தவாறே கயிலம்மை.



‘எனக்கு இதுல ஒரு சந்தேகம் இருக்கு’ என்றாள் செம்பரத்தை.

‘உனக்கு சந்தேகம் வந்தாலே அது பெரிய சிக்கலான விசயமாகத்தான் இருக்கும், ஒண்டும் கேட்காத, பிறகு என்ற வாய் வேற சும்மா இருக்காது’ என்றாள் கொடுப்புக்குள் சிரித்தவாறே உமையாத்தை.

‘கேட்காட்டி எனக்கு மண்டை வெடிச்சிருமே’ என்று சிணுங்கினாள் செம்பரத்தை.

‘அப்படி என்னதான் கேட்கிறாள் என்று பார்ப்போமே. நீ சும்மா இரு’ என்றாள் வேதம்மை.

‘இல்ல யாரைக் கேட்டாலும் திருச்சூகர வேட்டை என்றால் இந்தக் கதையைத்தான் சொல்றாங்க. ஆனா எங்கட ஊர்ல பாட்டி ஒரு கதை சொல்லுவாங்க. முன்னொரு காலத்தில வயல் நிலங்களை அழிச்சுக் கொண்டிருந்த பன்றிக் கூட்டத்தை எங்கட ஊர் இளைஞன் ஒருவன் தனியாக நின்று போராடி அந்தக் கூட்டத்தையே கொன்றொழித்துப் பயிர்களைக் காப்பாற்றி இருக்கிறான். பிறகு அந்தச் சண்டையில ஏற்பட்ட காயத்தால அவன் இறந்து போனானாம். அவனுக்கு ஊரவர் எல்லாம் சேர்ந்து நடுகல் கூட வைச்சாங்களாம்’ என்று செம்பரத்தை சொல்லிக் கொண்டு வரும்போது, திருவுடையாள் இடைமறித்து, அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்டாள்.

‘இல்ல... ஒருவேளை இது மாதிரி ஒரு தியாகத்தை ஞாபகப்படுத்தத்தான் இந்தத் திருச்சூகர வேட்டைத் திருவிழா கொண்டாடுறாங்களோ என்ற சந்தேகம் எனக்கு நெடுநாளாக இருக்கிறது’ என்றாள் செம்பரத்தை.

பலபேர் கூடியிருந்த ஆலய மண்டபம் திடீரென்று அமைதியாகிப் போனது. யாருமே அவள் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை. அமைதியைக் குலைத்து மீண்டும் அவள்தான் பேசினாள்.

‘நம்மட திருகோணமலைப் பிரதேசம் ஒரு விவசாய பூமி. இங்க விளையிர பயிர்களை அழிக்கிற பன்றிக் கூட்டத்தை கொன்று பயிர்களைக் காத்த வீரனிண்ட தியாகத்தை ஞாபகப்படுத்த தொடங்கின திருவிழாதான், பிறகு மகாபாரதக் கதைக்குள்ள மறைஞ்சு போயிற்றோ என்று நினைச்சேன்’ என்றாள் செம்பரத்தை.

கூடியிருந்தவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பதில் தெரியாமல் இருக்கிறார்களா அல்லது பதில் சொல்லத் தயங்குகிறார்களா என்பதை ஆதினியால் அனுமானிக்க முடியாமல் இருந்தது. உமையாத்தை எதிர்வு கூறியது சரிதான் என்று ஆதினி மனதிற்குள் நினைத்துக் கொண்டாள்.

‘அங்கு அத்தனை வேலையை வச்சுக்கொண்டு இங்கு குந்தி இருந்து என்ன செய்கிறீர்கள்’ என்ற ஆலயப் பரிபாலகர் ஒருவரின் அதட்டலான குரல் கேட்டதும் அங்கிருந்த அனைவரும் கலைந்து அவரவருக்குரிய வேலைகளில் பரபரப்பாக இணைந்து கொண்டார்கள்.

திருக்கோணேச்சரத்தின் உற்சவ மூர்த்தியை வேட்டைத் திருவிழா இடம்பெறும் இடத்தை நோக்கி அடியவர்கள் தோள்களில் சுமந்து சென்றார்கள். அலங்கரிக்கப்பட்ட பூப்பந்தலின் கீழே நின்றுகொண்டிருந்த தம்பிரான் மாணிக்கத்திற்கு ஆலாத்திப் பெண்களும், ஆதினியும் பீதாம்பரத்தை அணிவித்து, தலைப்பாகையும் கட்டி விட்டார்கள். அதிக அளவிலான பக்தர்கள் கூடியிருக்க, வெளிநாட்டிலிருந்து வந்த அடியவர்களும், பயணிகளும் ஆர்வத்துடன் பார்த்திருக்க வேட்டைத் திருவிழா ஆரம்பமானது.

வழமைப் பிரகாரம் ஆலயப் பூசகர் உற்சவ மூர்த்திக்குரிய பூசைகளை நிறைவேற்றிய பின்னர் திருச்சூகர வேட்டைச் சடங்கை நிகழ்த்துவதற்காகத் தம்பிரான் மாணிக்கத்தை அழைத்தார். பன்றியின் வடிவமாக உருவகித்துச் செய்யப்பட்டிருந்த சூகரத்திற்கு முன்பாக தம்பிரான் மாணிக்கம் அம்மையார் வந்து நின்றார். ஆலயத்தின் இருபாகை முதன்மைக் குருக்கள் உச்சவ மூர்த்திக்கு முன்னால் வைத்து வழிபடப்பட்ட தங்கத்திலாலான ஈட்டியை மந்திரித்து, பட்டாடை சுற்றி எடுத்தார். பயபக்தியுடன் முன்னால் வந்து அதனைத் தொட்டு வணங்கிய கனகசபைப் பண்டாரத்தார் ஈட்டியை தம்பிரான் மாணிக்கத்திடம் கையளித்தார்.

ஈட்டியைப் பெற்றுக் கொண்ட தம்பிரான் மாணிக்கம் அம்மையார் காட்டில் பன்றியை வேட்டையாடும் நிகழ்ச்சியை கூடியிருந்த சிறு பிள்ளைகளும் புரிந்து கொள்ளும் வண்ணம் மிக நேர்த்தியாகத் தன் அபிநயங்கள் மூலம் கண் முன்னே கொண்டு வந்தார். நேரம் செல்லச் செல்ல அவர் உடலில் யாரோ ஒரு வேட்டைக்காரன் ஊடுருவியது போல் ஈட்டியைப் பிடித்திருக்கும் அவரது கைகள் முறுக்கேறி வருவதையும், அன்பும் சாந்தமும் நிறைந்த அவரது முகம் ஒரு வேட்டைக்காரனுக்குரிய கடினத் தன்மைக்கு மாறிச் செல்வதையும் அருகில் இருந்த ஆதினியால் உணரக்கூடியதாக இருந்தது.

தம்பிரான் மாணிக்கம் அம்மையாரின் அபிநயங்களும், அதற்கேற்றவாறு வாசிக்கப்பட்டுக் கொண்டிருந்த பக்க வாத்திய இசைகளும் கூடியிருந்த அனைவரையும் உணர்ச்சிவசப்பட வைத்திருந்த சமயத்தில் திடீரென மிக ஆவேசமாக தன் கையில் இருந்த ஈட்டியால் சூகரத்தை வேட்டையாடினார் தம்பிரான் மாணிக்கம் அம்மையார். கூட்டத்திலிருந்தோர் மகிழ்ச்சி ஆரவாரம் எழுப்பினர். உதவிப் பூசகர் ஒருவர் ஓடி வந்து கையில் இருந்த ஏதோ ஒரு பொருளை வெட்டப்பட்டிருந்த சூகர உருவத்தில் பூசினார். அது இரத்த சிவப்பாக காட்சியளிப்பதை வியப்புடன் ஆதினி பார்த்தாள். பன்றிக் கூட்டத்திடமிருந்து பயிர்களைக் காப்பாற்றிய முகம் தெரியாத வீரன் குற்றிய பன்றியின் உடலில் இருந்து வழிந்த உதிரத்தைப் போலிருந்தது ஆதினிக்கு அந்தச் சிகப்பு நிறம்.

தொடரும்...



jeevarajah@thaiveedu.com



# அடக்குமுறை உலகத்திலிருந்து தப்பிக்கும் அவசியத்தினால் பிறந்த எழுத்து

– ச. சத்தியதேவன்

1960-களில் ஒரு நாள், கிராமப்புற சீன ரயில் நிலையம் ஒன்றில் ஒரு வயதான பெண்மணி மயக்கமடைந்தார். போலீசார் அவரை அடையாளம் காணும் முயற்சியில் அவரது உடைமைகளைச் சோதனையிட்டபோது, இரகசியக்குறியீடு எழுதப்பட்டதாகத் தோன்றும் பொருட்களைக் கண்டனர். அக்காலம் கலாசாரப் புரட்சியின் உச்சம் என்பதால், அந்தப் பெண் ஒரு உளவாளி என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டார். அவர் பொருட்களில் இருந்த குறியீட்டைப் புரிந்துகொள்ள முயன்ற துறைசார் வல்லுனர்கள், இது சூழ்ச்சியுடன் தொடர்புடைய ஒன்



றல்ல என்பதை அறிந்தனர். இவ்வாறாக சீனாவின் தொலைதூர ஹுனான் மாகாணத்தின் தெற்கில் உள்ள ஒதுங்கிய மலைப்பகுதியான ஜியாங்யோங் கவுண்டியில் இரகசியமாக இருந்த ஒரு எழுத்து வெளியாட்களால் தற்செயலாக அறியப்பட்டது. ஆயினும் அது வெளியுலகிற்கு தெரியப்படுத்தப் படவில்லை.

பின்னர் 1980-களில் ஜியாங்யோங் கவுண்டியில் சில ஆராய்ச்சிகளை மேற்கொண்டபோது சீன அறிஞர் காங் ஜெபிங், ஆச்சரியப்படுத்தும் இந்த எழுத்து முறையின் புதிரை அவிழ்த்தார். சீன பெண்களாற் பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்ட பழங்கால, இந்த அசாதாரண தொடர்பாடல் முறை, வரலாற்றின் ஒரு மறைக்கப்பட்ட அத்தியாயத்தைப் பிரதிபலித்தது.

ஏனெனில் சீனப் புரட்சிக்கு முந்தைய கன்பூசிய ஆணாதிக்க மதிப்புகள் சீனப் பெண்களுடைய அன்றாட வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் அடக்குமுறைக்குள்ளாக்கியது. சிறுமிகளுக்கு அவர்களுடைய ஏழு வயதுக்கு முன்னராகவே கால் கட்டும் (Foot Binding) நடைமுறை பின்பற்றப்பட்டது. வதை மற்றும் வலி மிகுந்த இந்தக் கால் கட்டுதல் (Foot Binding) என்னும் வழக்கம் மிகவும் அழகான பாதத்தை உருவாக்குவதுடன் கீழ்ப்படிதலையும் ஊக்குவிக்கும் என்று நம்பப்பட்டது. அத்துடன் சமூக அந்தஸ்தாகவும் அக்கால சமூகத்தில் நடைமுறையில் இருந்தது.

பெருவிரல் தவிர ஏனைய நான்கு விரல்களும் மடக்கப்பட்டு கால்கள் மிகவும் இறுக்கமாகப் பிணைக்கப்பட்டதால், குறுகிய எல்லைகளைத் தாண்டி நடமாட முடியாது, இப்பெண்கள் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டனர். இது அவர்களின் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்தது. இதன் விளைவாகப் பெண்கள் சமூக ரீதியாகவும் உடல் ரீதியாகவும் பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

ஒவ்வொரு நாளும் எழுந்து, தங்கள் குடும்பங்களைக் கவனித்துக் கொள்ள கடினமாக உழைத்தே ஆகவேண்டிய கட்டாயத்துக்குள்ளான கோடிக்கணக்கான சீனப் பெண்கள், அனைவரும் கட்டப்பட்ட காலில் நின்றார்கள். ஆயினும் எல்லா கலாசாரங்களிலும் உள்ள பெண்களைப் போலவே அவர்களும் சமைத்தனர்; சலவை செய்தனர்; குழந்தைகளை வளர்த்தார்கள்; பொருட்களை வாங்கி விற்றனர்; பொருட்களை உருவாக்கினர்; சில சமயங்களில் வயல்களில் வேலை செய்தனர். அவர்களின் கட்டப்பட்ட கால்கள் அந்த விடயங்களில் அவர்களுக்குச் சலுகையை வழங்கவில்லை.

பல நூற்றாண்டுகளாக, சீனப் பெண்களுக்கு, குறிப்பாக கிராமப்புறங்களில், முறையான கல்வி மற்றும் எழுத்தறிவு மறுக்கப்பட்டது. வீட்டு வேலைகளுக்குள் மட்டுமே முடங்கி கிடந்ததால், சீன எழுத்து முறையைக் கற்றுக்கொள்ள

அவர்களுக்கு மிகக் குறைந்த வாய்ப்புகளே இருந்தன. எழுத்தறிவு இல்லாமல், பெண்கள் தங்கள் அனுபவங்களை ஆவணப்படுத்தவோ, தனிப்பட்ட முறையில் தொடர்புகொள்ளவோ அல்லது எழுத்து வடிவத்தில் தங்கள் எண்ணங்களைப் பாதுகாக்கவோ எந்த வழியும் இல்லாமல் இருந்தனர்.

சீனாவின் ஆணாதிக்க சமூகம், பெண்களை மௌனமாக இருக்க நிர்ப்பந்தித்தது. ஆயினும் இவ்வடக்குமுறைக்குப் பதிலளிக்கும் விதமாக, ஜியாங் யோங் மாவட்டத்தின் பெண்கள் நூஷு (Nüshu) என அழைக்கப்படும் தங்கள் சொந்த எழுத்துமுறையை உருவாக்கினர். இந்த எழுத்தின் உருவாக்கம் பெண்கள் தங்கள் மீது வைக்கப்பட்டுள்ள சமூகக் கட்டுப்பாடுகளைத் தகர்த்து, அவர்களின் உள்ளார்ந்த உணர்வுகளையும் அனுபவங்களையும் பதிவுசெய்ய ஒரு இரகசிய வழியை வழங்கியது. தங்களை மௌனமாக்கிய ஒரு சமூகத்தில் தங்களை வெளிப்படுத்த ஒரு வழியைக் பெண்கள் கண்டுபிடித்தனர்.

நூஷு (Nüshu) என்றால் சீன மொழியில் 'பெண்களின் எழுத்து' என்று பொருள். இவ்வெழுத்துகள் பெரும்பாலும் பெண் உறவினர்களால் பெண் தலைமுறைக்குள் கடத்தப்பப்பட்டது. தாயிடமிருந்து மகளுக்கு அல்லது அத்தைகளால் மருமகள்களுக்கு அல்லது நெருங்கிய பெண் நண்பர்களிடையே மட்டும் பகிரப்பட்டதால் இவ் எழுத்து பற்றிய அறிவு பெண் வலையமைப்புகளுக்குள் இருப்பதை உறுதி செய்தது.

இந்த நடைமுறை அவர்களின் உணர்ச்சி மற்றும் அறிவுசார் தொடர்புகளைப் பராமரிக்க உதவியதுடன் அவர்களிடையே வலுவான பிணைப்பையும் ஒற்றுமை உணர்வையும் வளர்த்தது. அவர்கள் தனிப்பட்ட கடிதங்களை எழுதவும் தகவல்களை பகிர்ந்து கொள்ளவும் கவிதை எழுதவும் இதைப் பயன்படுத்தினர், பெரும்பாலும் தங்கள் செய்திகளை எம்பிராய்டரி செய்யப்பட்ட ஆடைகள் மற்றும் கலைப்பொருட்கள், மின்விசிறிகள் மற்றும் துணியால் கட்டப்பட்ட சிறு புத்தகங்களின் சித்திர எழுத்தலங்காரம் மற்றும் கைவினைப் பொருட்களில் பதித்தனர்.

ஜியாங்யோங் கவுண்டிப் பிரதேசத்தில் ஒரு பெண்ணுக்கு திருமணமானவுடன், நூஷு அப்பெண்ணின் வாழ்க்கையில் ஒரு பெரிய வகிபாகத்தை ஏற்கிறது. திருமணத்திற்குப் பிறகு, பெண்கள் தங்கள் கணவரின் கிராமத்திற்குச் சென்றனர். சில வேளைகளில் அது சொந்த கிராமத்திலிருந்து வெகுதொலைவில் அமைந்திருந்தது. அங்கு அவர்கள் தங்கள் கணவரின் அதிகாரத்திற்கு உட்பட்டவர்களாகவே இருந்தனர். தனிமைப்படுத்தப்பட்டு வலுவற்ற சூழலில் வேறு எந்த எழுத்து வடிவமும் தெரியாத நிலையில் புது உலகுக்குள் நுழையும் பெண்ணுக்கு வீட்டில் உள்ள குடும்பத்தினருடனும் நண்பர்களுடனும் தொடர்பு கொள்வதற்கான பெறுமதியான வழிமுறையாக நூஷு மாறியது.

பெரும்பாலும் 'மூன்றாம் நாள் கடிதங்கள்' என்று அழைக்கப்படும் ஒரு சிறப்பு வகை கடிதப் பரிமாற்றத்தில் நூஷு பயன்படுத்தப்பட்டது. ஒரு மணப்பெண்ணின் பெண் உறவினர்கள் மற்றும் நண்பர்களால் இதயபூர்வமாக எழுதப்பட்ட இக்கடிதங்கள் திருமணத்திற்குப் பின்பான மூன்றாவது நாளில் மணப்பெண்ணிடம் கொடுக்கப்பட்டன. பிறந்த வீட்டை விட்டு பிரிவதன் துக்க வெளிப்பாடுகள், புதிய வாழ்வுக்கான ஊக்கம் மற்றும் அறிவுரை நிறைந்த இந்த கடிதங்கள், திருமண வாழ்க்கையில் நுழையும் பெண்களுக்கு உணர்வுபூர்வமான ஆதரவை அளித்தன. இதனால் சுயவெளிப்பாட்டிற்கான கருவியாகவும் உயிர் வாழ்விற்கான ஒரு உந்து சக்தியாகவும் நூஷு இருந்தது. மௌனமாக இருக்க நிர்ப்பந்திக்கப்பட்டவர்களுக்கு இது ஒரு குரலைக் கொடுத்தது. ஆதரவு மற்றும் தோழமைக்காக ஒருவரையொருவர் நம்பியிருந்த தலைமுறைப் பெண்களுக்கு இடையே ஒரு



பிணைப்பு பாலமாகச் செயற்பட்டது.

ஆண்களின் பார்வையிலிருந்து மறைக்கப்பட்ட நூஷுவைப் பயன்படுத்துவதன் மூலம், நிச்சயிக்கப்பட்ட திருமணங்கள் மற்றும் கட்டாய மணமுறிவுகளின் வலி முதல் அன்றாட வாழ்க்கையின் சிறிய வெற்றிகள் வரை அவர்கள் தங்கள் மகிழ்ச்சியையும் துக்கத்தையும் ஆவணப்படுத்தினர். இதனால் பெண்கள் தங்கள் பாத்திரங்கள் மற்றும் சமூக வரம்புகள் மீதான அதிருப்தியை நுட்பமாக வெளிப்படுத்த முடிந்தது. இந்த வகையான கடிதங்கள் தற்போதுள்ள நூஷு இலக்கியங்களில் பெரும்பகுதியாக உள்ளன. இருப்பினும் இவைதவிர நூஷுவில் நாட்டுப்புறப் பாடல்களைப் பதிவு செய்தனர். அவர்களின் மகிழ்ச்சி, போராட்டங்கள் மற்றும் கனவுகள் பற்றிய கவிதைகளை இயற்றினர். இக்கவிதைகள் மற்றும் பாடல்கள் நவீன காலத்திற்கு முந்தைய சீனாவின் பெண் அனுபவத்தின் அரிதான முதல் வெளிப்பாடாக அமைந்துள்ளன.

நூஷு ஒரு மொழி அல்ல. அது அப்பிராந்திய மொழிக்கான ஒருவகை எழுத்து அல்லது சித்திர வரிவடிவம். அப்பிராந்திய மொழியின் உள்ளூர் / வட்டாரப் பேச்சு வழக்குக்கான ஒலிப்பு எழுத்துக்களாகச் செயற்பட்டது. உரக்கப் வாசிக்கப்படும் அல்லது பேசப்படும், நூஷுவை அப்பிராந்தியத்தில் வசிப்பவர்களால் (ஆண், பெண் இருபாலாராலும்) முழுமையாகப் புரிந்துகொள்ள முடியும். ஆனால் எழுதப்பட்ட நூஷுவை ஆண்களால் வாசிக்கவோ அல்லது புரிந்து கொள்ளவோ முடியாது.

பல நூற்றாண்டுகளாக, நூஷுவின் பயன்பாடு பாரம்பரியம் மற்றும் சடங்குகளுடன் பெரிதும் இணைக்கப்பட்டுள்ளது. நூஷுவை மையமாகக் கொண்டு சத்தியப்பிரமாண சகோ

தரி உறவு (sworn sisterhood) என்று அழைக்கப்பட்ட ஒரு உறவுமுறை உருவாகும். ஒரு குறிப்பிட்ட கிராமத்தில் ஏழு வயது சிறுமிகள் அனைவரும் தங்கள் கால்களைக் கட்டிக் கொண்டிருக்கும்போது, அவர்களின் தாய்மார்கள் அவர்களுக்கு சத்தியப்பிரமாண சகோதரி உறவை உருவாக்க உதவினார்கள். உறுதி மொழிகளை சத்தியம் செய்து அதன் வழி தம்மை நூஷுவைப் பயன்படுத்தும் ஏனைய பெண்களுடன் ஊடாடத் தயாரான பெண்ணாகப் பிணைத்துக்கொள்வார்கள். அதன் பிறகு அவர்களின் தாய்மார்கள் மற்றும் அத்தைகளால் இந்த புதிரான சித்திர எழுத்துக்களை எழுத அவர்களுக்கு கற்றுக் கொடுக்கப்படும். சத்தியம் செய்த சிறுமிகள் ஒன்றாக நூஷு கற்றுக்கொள்வார்கள், ஒன்றாக தங்கள் நாட்குறிப்புகளை எழுதுவார்கள்.

பின்னர் அச்சமூகங்களுக்குள் அன்பினதும் நட்பினதும் புனித அடையாளங்களாக இருந்த பரிசுகளான விசிறிகள் மற்றும் எம்பிராய்டரி ஆடைகள் போன்றவற்றை அலங்கரிக்கப் பயன்படுத்தப்படும். இதன்வழி அவர்கள் தங்கள் எழுத்து மூலம் வாழ்நாள் முழுவதும் தங்களுக்குள் தொடர்பில் இருப்பார்கள்.

திருமணமான மூன்று நாட்களுக்குப் பிறகு மணப் பெண்ணுக்கு வழங்கப்பட்ட அன்பு மற்றும் நல்ல அதிர்ஷ்டம் நிறைந்த சொற்றொடர்களால் நிரம்பிய துணியால் கட்டப்பட்ட சிறு புத்தகங்கள் நூஷுவின் முக்கியமான சடங்குப் பயன்பாடுகளில் ஒன்றாக இருந்தது.

அறியப்பட்ட பொதுவான சிக்கலான சீன எழுத்துகளைப் போலல்லாமல், நூஷு எழுத்தமைப்பானது, அழகான, நீளமான அலங்காரம் போன்ற நுட்பமான வடிவத்தில் இருந்தது. அத்துடன் பாரம்பரிய சீன சமூகப் பெண்மையின் அழகியல் கொள்கைகளைப் பிரதிபலித்தது. ஆனால் ஒரு புரட்சிகர சக்தியைக் கொண்டிருந்தது. இதன் வழி கல்வியறிவு நிராகரிக்கப்பட்ட பெண்கள், உண்மையில், தங்கள் சொந்த இலக்கிய கலாசாரத்தை வளர்த்துக் கொண்டனர்.

முதன் முதலாக பார்ப்பவர்க்கு நூஷு சாய்வாக எழுதப்பட்ட சீன எழுத்துச் சித்திர அலங்காரங்களை ஒத்திருக்கும். ஆனால் இச்சித்திரத்தை பொதுவான சீன எழுத்தினை அறிந்த வாசகர்களால் புரிந்து கொள்ள முடியாது. மெல்லிய நீண்டிருக்கும் சாய்கோடுகள் மற்றும் அமைப்புமுறை பொதுவான சீன எழுத்திலிருந்து இதனை வேறுபடுத்துகின்றன. நூஷு அதன் வடிவத்தால் உள்ளூரில் நுளம்பு எழுத்து என அழைக்கப்பட்டது. சில ஆய்வாளர்கள் நூஷுவின் நுட்பமான வடிவத்தை பறவையின் கால் தடங்களுடனும் ஒப்பிடுகிறார்கள்.

நூஷுவின் உண்மையான தோற்றம் குறித்து உறுதியாக அறிந்துகொள்ள முடியவில்லை. பேரரசரின் காமக்கிழத்தியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஹுனான் மாகாணத்தைச் சேர்ந்த ஒரு இளம் பெண், அதைக் கண்டுபிடித்ததாக நம்பப்படுகிறது. அவள் ஒரு வசதி நிறைந்த மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ்வாள் என்று எதிர்பார்த்தாள். ஆனால் தனிமையும் அரண்மனை கெடுபிடிகளும் அவள் நிம்மதியைக் குலைத்தன. அவள் தனது தனிமை நிறைந்த பலவீனமான வாழ்வு பற்றிய உண்மையை வீட்டில் உள்ள தனது தாய் மற்றும் சகோதரிகளுக்கு எழுதுவதற்காக இக்குறியீட்டைக் கண்டுபிடித்தாள் என நம்பப்படுகிறது.

1800-களில் கிங்வம்சத்தின் பிற்பகுதியில் நூஷு அதன் சிறந்த நிலையை எட்டியதாகச் சொல்லப்படுகிறது. அதன் பிறகு இருபதாம் நூற்றாண்டில் சீனாவின் அரசியல் நூஷுவைப் பாதிப்புக்குள்ளாக்கியது. சீனா மீதான ஜப்பானிய ஆக்கிரமிப்பின் கீழ் நூஷு ஒடுக்கப்பட்டது. 1949-ல் சீனப் புரட்சியின் பின்னரான நாடுதழுவிய கல்வியறிவு பிரச்சாரங்களில் பெண்களும் சிறுமிகளும் முதல் முறையாக பொதுச் சீனமொழியைப் படிக்க கற்றுக் கொண்டனர். இதனால் நூஷுவின் பயன்பாடு குறைந்தது. கலாசாரப் புரட்சியை அடுத்து நூஷு வீழ்ச்சியடைந்தது. பல தசாப்தங்களாக, நூஷுவை வயதான பெண்கள் சிலரால் மட்டுமே படிக்கவோ எழுதவோ முடிந்தது. நூஷு அறிந்த கடைசி திறமைசாலி எழுத்தாளர் யாங் ஹுவானி 2004-ல் காலமானார்.

இருப்பினும், 20-ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 21-ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் நூஷு மீது ஆர்வம் எழுந்தது. மொழியியலாளர்கள் மற்றும் கலாசாரப் பாதுகாப்பாளர்கள் இவ்வெழுத்து முறையின் வரலாற்று மற்றும் மொழியியல் முக்கியத்துவத்தை அறிந்து அங்கீகரித்து அதை ஆவணப்படுத்தவும், புதுப்பிக்கவும் முயற்சிகளை மேற்கொண்டனர். ஆராய்ச்சியாளர்கள் நூஷு குறித்து வெளிவந்த நூல்களைச் சேகரித்து ஆய்வு செய்யத் தொடங்கினர், அவர்களின் அறிவு இழக்கப்படுவதற்கு முன்பே எஞ்சியிருக்கும் கடைசி பயன்பாட்டாளர்களிடமிருந்தும் நூஷு குறித்த வாய்மொழி வரலாறுகளைப் பதிவு செய்தனர்.

சீன அரசாங்கமும் கல்வி நிறுவனங்களும் நூஷுவைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்துள்ளன. ஜியாங் யோங்கவுண்டியில் நூஷு எழுத்துமுறைக்கானஅருங்காட்சியகங்கள் நிறுவப்பட்டுள்ளன, அவை கையெழுத்துப்பிரதிகள், எம்பிராய்டரி செய்யப்பட்ட கலைப்பொருட்கள் மற்றும் நூஷு பாடல்களின் பதிவுகளைக் காட்சிப்படுத்துகின்றன. இந்த தனித்துவமான மொழியியல் பாரம்பரியத்தைப் பற்றி இளம்பெண்கள் மற்றும் அறிஞர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பட்டறைகளும் கல்வித்திட்டங்களும் இப்போது நடைபெறுகின்றன. உலகளாவிய ஆர்வலர்களுக்கு நூஷுவை அணுகக் கூடியதாக மாற்ற டிஜிட்டல் பயன்பாடுகள் மற்றும் ஆன்லைன் தரவுத் தளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

அடக்குமுறை சூழ்நிலைகளில் கூட, பெண்கள் எப்போதும் தொடர்புகொள்ளவும், தங்களை வெளிப்படுத்தவும், ஒருவருக்கொருவர் ஆதரவளிக்கவும் வழிகளைக் கண்டுபிடித்துள்ளனர் என்பதை நூஷு நினைவூட்டுகிறது. பெண்களின் புத்திசாலித்தனம், ஒற்றுமை மற்றும் தடைகளைத் தாண்டுவதற்கான உறுதிப்பாட்டிற்கு நூஷு ஒரு சான்றாக அமைந்துள்ளது. பாலின சமத்துவத்திற்காக உலகம் பாடுபடும் வேளையில், பெண்களுக்கு குரல் மறுக்கப்படும் போது, அவர்கள் எப்போதும் அதை உருவாக்குவதற்கான வழிகளைக் கண்டுபிடிப்பார்கள் என்பதை நூஷுவின் கதை நமக்கு நினைவூட்டுகிறது.



sathiyathevan.s@thaiveedu.com



# பெண்ணியவாதம்: அறிவாராய்ச்சியியலும் கோட்பாடும்

ஆங்கில மூலம்: ஜயதேவ உயன்கொட

தழுவலாக்கம்: கந்தையா சண்முகலிங்கம்

Social Research: Philosophical and Methodological Foundations(2015) என்னும் நூல் பேராசிரியர் ஐயதேவ உயன் கொட அவர்களால் எழுதி வெளியிடப்பட்டது. இன்நூலின் 16-வது அத்தியாயம் Feminist Epistemological and Theoretical Claims என்றும் தலைப்பில் அமைந்துள்ளது. 'பெண்ணிய வாதம் அறிவாராய்ச்சியலும் கோட்பாடும்' என்னும் தலைப் பில் அமையும் இத்தமிழ்க்கட்டுரை மேற்குறித்த ஆங்கில நூலின் 16-வது அத்தியாயத்தைத் தழுவி எழுதப்பட்டுள்ளது. மூலக் கட்டுரையின் கருத்துகளை எளிமைப்படுத்திய மொழி நடையில் தமிழில் சுருக்கிக் கூறுவதாக இக்கட்டுரை அமைகி றது.

1970-களில் பெண்ணியவாத சிந்தனையாளர்கள் தமது அறி வுலகத் தலையீடுகள் (Interventions) மூலம் சமூகக் கோட் பாட்டின் வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி னர். சமூகக் கோட்பாடு (Social Theory) குறித்த அறிவா ராய்ச்சியியல், ஆய்வு முறையியல் அனுமானங்கள் பல பெண்ணியவாதத்தினால் கேள்விக்கு உள்ளாக்கப்பட்டன. இதனால் இவ்வனுமானங்களை மறுபரிசிலனை செய்யும் கட் டாயம் புலமையாளர்களுக்கு ஏற்பட்டது. இக்கட்டுரையில் நாம் பெண்ணியவாதம் பற்றிய பொதுப்பட்ட ஓர் அறிமு கத்தை (Overview) வழங்கவுள்ளோம். பெண்ணியக் கோட் பாட்டின் அறிவாரய்ச்சியியல், ஆராய்ச்சிமுறையியல் என்பன வற்றின் அடிப்படைக் கருத்துக்களை விளக்கிக் கூறும் முறை யில் எமது இவ்வறிமுகம் அமையவுள்ளது.

பெண்ணியம் தோற்றம் பெற்ற தொடக்க காலத்தில் அது எதிர் கொண்ட அறிவாராய்ச்சியல் சவால் (Epistemological Challenge) யாது என்பதையும் பெண்ணியச் சிந்தனையாளர் களிடையே நடைபெற்ற அறிவாராய்ச்சியியல் விவாதங்கள் பற்றியும் பெண்ணியவாதத்தின் அடிப்படையான 'பாலினம்' (Gender) என்ற வகைமை (Category) பற்றிய பெண்ணியச் சிந்தனையாளர்களின் விளக்கங்களையும் இக்கட்டுரையில் விபரித்துக் கூறுவோம்.

1970-க்கு முற்பட்ட பல பத்தாண்டுகளுக்கு முன்பாகவே பெண்ணியவாதம் என்னும் சமூக அரசியல் இயக்கம் (Social Political Movement) தோற்றம் பெற்றிருந்தது. அச்சமூக அரசி யல் இயக்கதிற்கென ஒரு சமூகச் சிந்தனையும் (Social Thought) உருவாகியிருந்தது. ஆயினும் பெண்ணியவாதம் ஒரு புலமைத்துறையாக (Academic Discipline) 1970-களி லேயே தோற்றம் பெற்றது.

மூன்றாம் உலக நாடுகளில் பெண்ணியவாதம் ஒரு சமூக அர சியல் இயக்கமாகப் 19-ம் 20-ம் நூற்றாண்டுகளில் வளர்ச்சி பெற்ற வரலாற்றை குமாரி ஐயவர்த்தன அவர்கள் 'Feminism and Nationalism in the Third World' (1986) என்ற நூலில் விப ரித்துக் கூறியுள்ளார். அவரது நூல் மேற்கு உலகு அல்லாத நாடுகள் (Non – Western World) பற்றியது. மேற்கு நாட்டுப் பல்கலைக்கழகங்களில் பெண்ணியவாத ஆய்வுகள் ஏற்பு டமை பெறுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னர் 1940-ம் ஆண்டில் சிமோன் டி பொவார் (Simonde Bouvoir) 'Second Sex' என்னும் நூலை வெளியிட்டார். இது ஒரு முன்னோடி யான நூலாகும். நவீன பெண்ணியவாதம் தோன்றுவதற்கு முன்னர் 19ம் நூற்றாண்டின் தொடக்க காலம் முதல் பெண் கள் மீதான ஒடுக்குமுறை பற்றியும் அவர்கள் பொருளாதாரச் சுரண்டலுக்கு ஆளாவது பற்றியும் விமர்சனம் செய்யும் முறை யிலான எழுத்துக்களை தாராளவாத (Liberal) சிந்தனையா ளர்களும் மார்க்சிஸ்டுகளும் எழுதி வெளியீட்டனர்.

வரலாற்று நோக்கில்ப் பார்க்கும் போது 'பெண்களின் விடு தலை' என்பது லிபரல்களதும் சோஷலிஸ்டுகளதும் இயக் கங்களின் குறிக்கோளாக விளங்கியதைக் காணலாம். ஆயி னும் பெண்ணியவாதம் அறிவாராய்ச்சியல் பிரச்சினைகள் (Epistemological Issues) சார்ந்து 1970 களிலேயே அக்கறை கொள்ளத் தொடங்கியது. அக்காலத்திலேயே சமூக விஞ்ஞா னங்களின் நிகழ்ச்சி நிரலில் பெண்ணிய ஆராய்ச்சி (Feminist Research) இடம் பிடித்துக் கொண்டது. அதனால் பெண்ணிய வாதம் அறிவாராய்ச்சியல் பிரச்சினைகளைப் பற்றியும் கரி சனை கொள்ளும் தேவை ஏற்பட்டது.

பெண்ணியவாதம் சமூக விஞ்ஞானங்களுள் ஒரு துறையாக அங்கீகாரம் பெற்று முன்னிலைக்கு வந்தபோது, அது மைய நீரோட்ட நேர்க்காட்சிவாத சமூக விஞ்ஞானத்தின் அடிப்ப டைகளை விமர்சனத்திற்கு உட்படுத்தியது. இந்த எதிர்வினை யின் பயனாக சமூக விஞ்ஞானம் குறித்த பெண்ணியவாத விமர்சனம் (Feminist Critique of Social Science) தோற்றம் பெற்றது. 'கண்களால் காணமுடியாத பெண்கள்' (Invisibility of Women) என்ற கருத்தைப் பெண்ணியவாதிகள் விமர்சன மாகவும், ஓர் ஆய்வு முறையாகவும் முன்வைத்தனர். கண்க ளால் காணமுடியாத பெண்கள்' என்ற கருத்து மக்கள் தொகையின் அரைபங்கினராக உள்ள பெண்கள் சமூக

வாழ்க்கையிலும் அரசியலிலும் ஏன் காணாமல் போயினர்? என்ற வினாவாக அமைந்தது. ஆய்வாளர்களின் ஆய்வுகளில் ஏன் பெண்களைக் காண முடியவில்லை? (Invisitbility of Women) என்பன போன்ற வினாக்களைப் பெண்ணியவாதிகள் எழுப்பினர். 'Invisibility of Women' என்ற கருத்து ஆய்வுக்குரிய இலக்காகவும், ஆய்வுமுறை பற்றிய விமர்சனமாகவும் (A Critique of Method) விளங்கியது. இவ்விமர்சனம் பின்னர் சமூக விஞ்ஞானத்தின் நோக்கம் பற்றியதும் அதன் ஆய்வுமுறை பற்றியதுமான விமர்சனமாகப் பெண்ணியவாதிகளால் முன்வைக்கப்பட்டது. இவ்விமர்சனம் தத்துவம், அறம், நடைமுறை (Philosophy, Morality and Practice) என்னும் ஒன்றோடொன்று தொடர்புடைய மூன்று நிலைகளில் முன்வைக்கப்பட்டது. தத்துவார்த்த விமர்சனம் குறிப்பாக நேர்க்காட்சிவாதத்திற்கு எதிரானதாக அமைந்தது. சமூக விஞ்ஞானத்தில் மேலாண்மை பெற்றிருந்த மாதிரியாக (Dominant Social Science Paradigm) அன்று விளங்கிய நேர்க்காட்சிவாதத்தின் மதிப்பீடுகள் சாரா விஞ்ஞானம் (Value Free Science) என்ற போலிப் பாசாங்கினை அம்பலப்படுத்துவதாகவும் பெண்ணியவாத விமர்சனம் அமைந்தது. நேர்க்காட்சிவாதம் மனிதர்களை ஆய்வுக்குரிய விடயப்பொருளாக (Objects of Inquiry) பார்த்தது, இது அகநிலையின் புறநிலையாக்கம் (Objectification of Subject) ஆகும். இவ்விதம் மனித அகநிலையையும் செயலி என்ற அதன் வகிபாகத்தையும் (Subjectivity and Agency) நிராகரித்து மனிதர்களை ஆய்வுக்குரிய சடப்பொருள் போன்று நோக்குவது அறமற்றது என்பதாக பெண்ணியத்தின் அறம் சார்ந்த விமர்சனம் அமைந்தது. ஆய்வாளர்களால் இவ்விதம் மனிதர்கள் ஆய்வுப் பொருளாக நடத்தப்படுவதை பெண்ணியவாதிகள் கண்டனம் செய்தனர்.

அறம் - நடைமுறை என்ற நிலையில் ஆய்வாளர்கள் ஆய்வு உதவியாளர்கள், ஆய்வில் பங்கேற்பார் (Research Participants) ஆகியோரிடையே படித்தரமற்ற சமத்துவமான உறவை பெண்ணியவாதம் வலியுறுத்தியது. இவ்விதமாகப் பெண்ணியவாதம் மேற்கொண்ட முறையியல் விமர்சனம் (Methodological Critique) பெண்ணியம் சார் புலமைத்துவ ஆய்வுகள் தோன்றுவதற்கு வழிவகுத்தது. சமகாலத்தின் விஞ்ஞான மெய்யியலில் பெண்ணிய ஆய்வுகள் இவ்வகையில் முக்கியம் பெற்றுள்ளன.

## ஆண்மைய விஞ்ஞானம்:

பெண்களின் குரல்கள் இயற்கை விஞ்ஞானங்களிலும் சமூக விஞ்ஞானங்களிலும் ஒலிக்காதவாறு தடைசெய்யும் கருத்தியலான ஆண்மைய விஞ்ஞானத்தை (Androcentric Science) பெண்ணியவாதிகள் எதிர் கொண்டனர். 1970 கள் முதல் பெண்ணியவாத புலமைத்துறையினர் எதிர்கொண்ட பிரதான சவால் (Key Challenge) உள்ளதன் இயல் (Ontology) அறிவாராய்ச்சியியல் (Epistemology), ஆய்வு முறைகள் (Research Methods) என்பனவற்றில் பெண்ணியவாதத்தின் நிலைப்பாடுகளை விளக்கி பெண்ணியவாதத்தின் மெய்யியல், முறையியல் அடிப்படைகளை நியாயப்படுத்துவதாக அமைந்தது. அறிவின் உற்பத்திக்கான பெண்ணிய நோக்கு முறையினை (Feminist Approach to Knowledge Production) உருவாக்கியதோடு, மையநீரோட்ட விஞ்ஞான முறையியலுக்கு எதிரான வாதங்களைப் பெண்ணியவாதப் புலமையாளர்கள் முன்வைத்தனர். இயற்கை விஞ்ஞானங்களிலும் சமூக விஞ்ஞானங்களிலும் மேலோங்கியிருந்த உள்ளதன் இயல், அறிவாராய்ச்சியியல் அனுமானங்கள் பெண்களின் குரல் வெளிப்படுத்தப்படுவதற்குத் தடையாக அமைந்ததைப் புலமையாளர்கள் எடுத்துக் காட்டினர். இவ்வாறாக விஞ்ஞான அறிவு உற்பத்தியில் ஆண்மையவாதம் மேலாண்மை பெற்றிருந்தது. இதன் மூலவேர்கள் அறிவொளியுகத்தின் மரபில் அமைந்த அனுபவவாதமும் (Empiricism), நேர்க்காட்சிவாதமும் (Positivism) ஆகும் என்பதையும் பெண்ணியவாதிகள் எடுத்துக்காட்டினர். விஞ்ஞான அறிவின் மையநீரோட்ட மரபுகள் பெண்களை அலட்சியம் செய்தன, அவர்களை விலக்கி வைத்தன. இப்படியான அலட்சியப்படுத்தலினதும் விலக்குதலினதும் விளைவுகள் யாவை என்பதை பார்பரா டுபொய்ஸ் (Barbara Dubois) என்னும் பெண்ணிய அறிஞரின் கருத்தை எடுத்துகாட்டி ஐயதேவ உயன்கொட அவர்கள் பின்வருமாறு விளக்கிக் கூறுகிறார்.

'மரபுவழி விஞ்ஞானம்', 'ஒரு நபர்' (A Person) என்பதைச் சாராம்சத்தில் 'ஆண்' என்றே வரையறை செய்கிறது. பெண் பற்றிக் கூறவருகையில் பெண் எப்படி உள்ளாள் (What she is) என்பதைக் கூறுவதில்லை, அவள் 'ஆண்' ஆக இல்லை, ஆணின் தன்மைகள் இல்லாதவளே 'அவள்' என எதிர்மறையில் பெண் வரையறை செய்யப்படுகிறார். இதனால் மையநீரோட்ட விஞ்ஞானத்தால் பெண் அறியப்படுவதும் இல்லை. அவள் அறியப்பட முடியாதவள் ஆகவும் (Unknowable) ஆக்கப்பட்டுள்ளாள் (பக் 325) ஆங்கிலத்தில் அவர் கூற்று வருமாறு.

According to Dubois' critique, the traditional social sciences considered 'a person' essentially as male, and defined a woman not in terms of what she is, but what she is not in terms of male. Thus mainstream perspective in social science had rendered women not only unknown, but virtually unknowable' (Dubois 1983: 107).

1970களில் பெண்ணியவாதச் சிந்தனையாளர்களின் ஆய்வுகள் வெளிவந்தன. அறியப்படாதவர்களாகவும், அறியப்பட முடியாதவர்களாகவும் ஆக்கப்பட்டிருந்த பெண்கள் பற்றிய பெண்ணியவாத நோக்கிலான ஆய்வுகள் பெண்களை உள்ளது உள்ளபடி எடுத்துக்காட்டின. ஆனால் மையநீரோட்ட விஞ்ஞானம் அவற்றை அதிகாரபூர்வமான விஞ்ஞான அறிவு (Authentic Scientific Knowledge) என ஏற்கவில்லை; அவை நிராகரிக்கப்பட்டன. இந்நிராகரிப்பின் பின்னணியில் அமைந்த அறிவாராய்ச்சியியல் அடிப்படைகள் (Epistemological Foundations) எவையென பெண்ணியவாத புலமையாளர்கள் ஆராயத்தொடங்கினர். இந்தப் பெண்ணிய ஆய்வுகள் மையநீரோட்ட சமூக விஞ்ஞானத்தின் மெய்யியலையும் அதன் விஞ்ஞான முறைகளையும் (Scientific Methods) பரிசீலனை செய்து, அவை சாராம்சத்தில் பாலியல் (Sexist) திரிபுடையவை என்பதையும் ஆண்மைய (Androcentric) வெளிப்பாடு என்பதையும் எடுத்துக்காட்டின. ஆண்மையவாதம் என்பது ஆண்களை மையப்படுத்திய உலகநோக்கு (Worldview) ஆகும். அதன் அரசியல் அறிவுசார் நிகழ்ச்சி நிரல்கள் (Political and Intellectual Agendas) ஆண்மைய நோக்கில் அமைந்தவை. அதன் உள்ளதன் இயலையும் (Ontology) அறிவாராய்ச்சியலையும் (Epistemology) விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என பெண்ணிய ஆய்வாளர்கள் குறிப்பிட்ட

னர். அக்காலத்தின் விஞ்ஞான ஆய்வுகளில் செல்வாக்குச் செலுத்திய அனுபவவாதம் (Empiricism), நேர்க்காட்சிவாதம் (Positivism) என்பனவற்றிற்கு எதிரான அறிவாராய்ச்சியல் முறையியல் கோட்பாட்டு அடிப்படைகளை தமக்கென வகுத்துக்கொண்டு செயற்படவேண்டும் என பெண்ணியச் சிந்தனை யாளர்கள் திட்டமிட்டனர்.

## பெண்ணிய அறிவாராய்ச்சியல்:

பெண்ணியவாதச் சிந்தனையாளர்களால் பெண்ணிய அறிவா ராய்ச்சியியல் (Feminist Epistemology) கட்டமைக்கப்பட்டது. பெண்ணியத்தின் விஞ்ஞான மெய்யியலை (Feminist Philosophy) கட்டமைப்பதில் பெரும் பங்காற்றியவர் சன்ட்றா ஹார் டிங் (Sandra Harding) என்னும் பெண்ணிய சிந்தனையாளரா வர். அறிவின் உற்பத்தி தொடர்பாக பெண்ணியவாதிகள் எதிர் நோக்கிய பிரதான பிரச்சினையை இவர் அறிவாராய்ச்சி யியல் குறித்த பிரச்சினை என வரையறை செய்தார். பெண் ணியவாதிகளின் ஆய்வுகள் உலகினை விளக்கியுரைத்தல் (Explaining The World) என்னும் நோக்குடன் செய்யப்படுவன அல்ல, பெண்ணிய அறிவு (Feminist knowledge) சமூக மாற் றத்தை (Social Transformation) இலக்காகக் கொண்டது, அது விடுதலை (Emanicipation) என்ற நிகழ்ச்சிநிரலின் படி சமூகம் பற்றிய ஆய்வைச் செய்கிறது. பெண்ணியம் சமூக அரசியல் இயக்கங்களுடன் (Social and Political Movements) நெருங்கிய பிணைப்புகளைக் கொண்டுள்ளது. ஆகையால் பெண்ணியவாத அறிவு உற்பத்தி (Knowledge Production) அரசியல் மயப்படுத்தப்பட்ட அறிவு உற்பத்தியா கும். அத்தகைய அறிவு உற்பத்திச் செயற்பாடு நேர்க்காட்சி வாதத்தின் அளவுகோல்களுக்கு அமைவானதாக இருக்க முடியுமா? என்ற வினாவைச் சண்ட்றா ஹார்டிங் முன்வைத் தார். நேர்க்காட்சிவாதம் விஞ்ஞானத்தின் புறநிலைத்தன் மையை (Objectivity) வலியுறுத்துவது. அது ‘விஞ்ஞான’ (Scientific) அறிவை வலியுறுத்துவது. இந்த அளவுகோல்க ளைக் கொண்டு பெண்ணியவாத ஆய்வுகளை மதிப்பிடுதல் ஏற்றதா? என்ற வினா முக்கியமானதாகும்.

பெண்ணியவாத அறிவு உற்பத்தி அரசியல் நோக்கங்களை உடையது, விடுதலை இலக்கினைக் கொண்டது என்றால், அதன் நோக்கமாக மதிப்பீடுகள் சாராத விஞ்ஞானம் (Value free science) நடுவுநிலைமை (Neutrality) என்பன இருத்தல் முடியுமா?

மேற்படி வினாக்களை முன்வைக்கும் சண்ட்றா ஹார்டிங், பெண்ணியவாதம் ‘நடுநிலையான’ விஞ்ஞான அறிவின் உற் பத்தியை நோக்காகக் கொண்டதல்ல என்பதை அழுத்திக் கூறுகிறார். நேர்க்காட்சிவாதத்திற்கு எதிரான, 20ம் நூற் றாண்டு மார்க்சியம், பிராங்கோர்ட் பள்ளியினரின் விமர்சனக் கோட்பாடு (Critical Theory of The Frankfurt School) என் பனவற்றுடன் பெண்ணியவாதம் நெருக்கமான தொடர்புகளை கொண்டது என்பதை அவர் எடுத்துக்காட்டினார்.

அறிவாராய்ச்யியலின் மூன்று விதமான நோக்குமுறைகள்:

அறிவாரய்ச்சியியல் குறித்து ஆராய்ந்த பெண்ணியவாதிக ளின் ஆய்வுகளில் மூன்று விதமான நோக்குமுறைகள் வெளிப்பட்டன.

- பெண்ணிய அனுபவவாதம் (Feminist Empiricism)
- பெண்ணிய நோக்குநிலை (Feminist Standpoint)
- பெண்ணிய பின்நவீனத்துவவாதம் (Feminist Post - Modernism)

## சுருக்கம்:

இக்கட்டுரையில் கூறப்பட்ட கருத்துகளை பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

பெண்ணியவாதம் ஒரு புலமைத்துறையாக 1970-களிலேயே வளர்ச்சி பெற்றது. ஆயினும், பெண்ணியம் ஒரு அரசியல் இயக்கமாக (Political Movement) அதற்கு முன் பல்லாண்டுக ளாக இயங்கி வந்தது.

1970-களில் பெண்ணிய ஆராய்ச்சி சமூக விஞ்ஞான ஆய்வு நிகழ்ச்சிநிரலில் இடம் பிடித்துக் கொண்டது. இவ்வாறு பெண் ணிய ஆராய்ச்சி இடம் பிடித்துக் கொண்டபோது பெண்ணிய ஆய்வாளர்கள் விஞ்ஞான மெய்யியலின் பிரச்சினைகளான உள்ளதன் இயல் (Ontology) அறிவாராய்ச்சியியல் (Epistemology) என்பவற்றில் கவனம் செலுத்தினர்.

சமூக விஞ்ஞான ஆய்வுலகில் மேலாதிக்கம் பெற்றிருந்த (Dominant Social Science Paradigm) நேர்க்காட்சிவாதத் தினை பெண்ணியவாதிகள் கேள்விக்கு உட்படுத்தினர்.

பெண்ணியவாதம் மேற்கொண்ட முறையியல் விமர்சனம் (Methodological Critique) சமூக விஞ்ஞான அறிவின் உற்பத் திக்கான பெண்ணியவாத அறிவாராய்சியலின் தோற்றத்திற்கு உதவியது.

பார்பரா டுபோய்ஸ் (Barbara Dubois) மைய நீரோட்ட விஞ் ஞான ஆய்வுகளில் பெண்கள் ‘காணாமல்போதல்’ (Invisibility of Women) நிகழ்வதைச் சுட்டிக் காட்டினார். மரபுவழிச் சமூக விஞ்ஞான ஆய்வுகளால் பெண் அறியப்படுவதும் இல்லை, அவள் அறியப்படமுடியாதவளாகவும் (unknowable) ஆக்கப்பட்டுள்ளாள் என்பதை அவர் எடுத்துக் காட்டி னார்.

சண்ட்றா ஹார்டிங் (Sndra Harding) பெண்ணிய அறிவாராய்ச் சியலுக்கு பெரும் பங்களிப்பை வழங்கினார். பெண்ணிய அறிவு உற்பத்தி, உலகினை விளக்கியரைத்தல் (Explaining The World) என்ற நோக்கமுடையதல்ல; அது சமூக மாற்றம், விடுதலை (Emancipation) ஆகிய இலக்குகளையுடையது; அது சமூக அரசியல் இயக்கங்களோடு நெருங்கிய தொடர்பு களை கொண்டது என அவர் குறிப்பிட்டார்.

பெண்ணிய அறிவாராய்ச்சியியலில், பெண்ணிய அனுபவவா தம், பெண்ணிய நோக்குநிலை (Feminist Standpoint), பெண் ணிய பின்நவீனத்துவம் என மூன்று நோக்குமுறைகள் உள்ளன.



shanmugalingam@thaiveedu.com

# இனப்படுகொலையின் அரசியல் - 12

# அமெரிக்காவும் ஈழத்தமிழரும்: பெருங்குற்றவாளியிடம் நீதிகோரல்

– தெ. ஞானசீர்த்தி மீநிலங்கோ –

**அறிமுகக் குறிப்புகள்:**

இலங்கையில் இறுதிப்போரில் நிகழ்த்தப்பட்ட குற்றங்கடளுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்று. இறுதிப்போரில் குற்றங்கள் இழைக்கப்பட்டுள்ளன என்பதை இலங்கை அரசு தவிர்ந்த ஏனையோர் ஏற்றுக் கொண்டுள்ளனர். இறுதிப்போரில் நிகழ்த்தப்பட்ட குற்றங்கள் என்ன வகையின என்பதே முக்கியமானது. ஈழத்தமிழரில் ஒருபகுதியினர் இனப்படுகொலை நிகழ்த்தப்பட்டுள்ளது என்று தொடர்ந்து கூறிவருகின்றனர். ஆனால் அதை நிறுவமுடியுமா? என்ற கேள்வி மிகப் பிரதானமானது. குறிப்பாக இரண்டாம் உலகப் போர் முடிவடைந்து எண்பது ஆண்டுகள் நிறைவடைகின்ற நிலையில் 1994-ம் ஆண்டு ருவாண்டாவில் நிகழ்த்தப்பட்ட வன்முறையே 'இனப்படுகொலை' என்ற வரையறைக்குள் அடக்கப்பட்டுள்ளது. 'இனப்படுகொலை'என்ற சொல்லாடலின் அரசியல்தன்மை இங்கு முக்கியமானது. அதைத் தனியே இன்னொரு சந்தர்ப்பத்தில் பார்க்கலாம். போர் முடிந்து, கடந்த 15 ஆண்டுகளாக ஜெனீவாவில் உள்ள மனித உரிமைகள் பேரவையில் தவம் கிடப்போர் ஒருபுறமும் மேற்குலகிடம் இனப்படுகொலைக்கு நீதி கேட்போர் இன்னொரு புறமுமாக ஈழத்தமிழ் அரசியலின் ஒரு பகுதி நகர்கிறது. ஈழத்தமிழருக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு உலகின் தலைமைப் பொலிஸ்காரன் என்று தன்னை அறிவித்துக் கொண்ட 'அமெரிக்கா' நீதியைப் பெற்றுத்தரும், குற்றவாளிகளைத் தண்டிக்கும் என்பது தொடர்ச்சியாகச் சொல்லப்பட்டு வருகின்றது. இது ஈழத்தமிழரின் பொதுப்புத்தி மனநிலையில் ஆழமாகப் பதியவைக்கப்பட்டதொன்று. 'ஆண்டவன் கைவிட்டாலும் அமெரிக்கா கைவிடாது' என்று சொல்லும் பல புலம்பெயர் செயற்பாட்டாளர்களை நானறிவேன். இதை எழுதும் போது அமெரிக்க மனித உரிமைகள் பேரவையில் இருந்து வெளியேறுவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்திருக்கிறார்.

இலங்கையின் இறுதி யுத்தத்தில் அமெரிக்காவுக்கோ, ஏனைய மேற்குலக நாடுகளுக்கோ பங்கில்லையா? இவர்கள் இலங்கைக்கு இராணுவங்களை விற்கவில்லையா? தொழில்நுட்ப உதவிகளை வழங்கவில்லையா? செயற்கைக்கோள் படங்களைக் கொடுத்துதவவில்லையா? இலங்கைக்கு இராணுவ உதவிகளை வழங்கியோரில் மேற்குலக நாடுகளும் இந்தியாவுமே முன்னிலை வகிக்கின்றன. சீனாவும், பாகிஸ்தானும் பின்னால் வருபவையே. ஆனால் ஏதோ சீனாவும் பாகிஸ்தானும் செய்த இராணுவ உதவியால் தான் விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்டதாக சில 'புலனாய்வுச் செம்மல்கள்' தொடர்ந்து எழுதிவருகிறார்கள். இதன் நோக்கம் மேற்குலகினதும் இந்தியாவினதும் வகிபங்கை வெள்ளையடிப்பதன்றி வேறில்லை. இன்றும் அமெரிக்காவை நம்புவோர், உலகின் பாரிய போர்க்குற்றங்களுக்கும் இனப்படுகொலைகளுக்கும் அமெரிக்கா முக்கிய பாத்திரவாளியாக இருந்திருக்கிறது என்ற உண்மையை அறியாமல் இல்லை. பெரிய குற்றவாளியிடம், குற்றவாளிக்குத் துணைபுரிந்தோரிடம் நீதி கேட்பது அறியாமையால் அல்ல, அயோக்கியத்தனத்தால்.

இரண்டாம் உலகப் போரின் பின்னரான காலப்பகுதியில் அமெரிக்கா இழைத்துள்ள குற்றங்கள் எண்ணிலடங்காதவை. இன்று ஈழத்தமிழருக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எல்லோரும் குரல்கொடுக்க வேண்டும் என்று கோருகின்ற நாம், உலகின் ஏனைய பகுதிகளில் அநீதிகள் இழைக்கப்பட்ட போது என்ன செய்திருக்கிறோம்? 'பயங்கரவாதத்திற்கு எதிரான போர்' என்ற போர்வையில் ஆப்கான் மீது தாக்குதல் நிகழ்த்தப்பட்ட போதும், ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்தபோதும் நாம் என்ன செய்தோம். அதே 'பயங்கரவாத்திற்கு எதிரான போர்' என்ற போர்வையைத் தானே இலங்கை அரசும் பயன்படுத்தியது. அமெரிக்கா ஆப்கானிலும், ஈராக்கிலும், லிபியாவிலும் செய்தது நியாயம் என்றால் நாங்கள் செய்ததும் நியாயம் என்றுதானே இலங்கை அரசு சர்வதேச அரங்குகளில் தொடர்ந்து வாதிடுகிறது. இன்று பலஸ்தீனத்தில் நடைபெறுகின்ற குற்றங்களை நாம் கண்டித்திருக்கிறோமா? நாம் யாருடைய பக்கம் நிற்கிறோம்? ஒடுக்குமுறையாளர்களின் பக்கம் நின்று கொண்டு ஒடுக்கப்படுவோருக்கான நீதியை எவ்வாறு கோர முடியும்?

அப்படி அமெரிக்கா என்ன செய்தது என்று கேட்பவர்களுக்காக சில தகவல்களை இங்கு சுருக்கமாகத் தருவது பொருத்தம். இரண்டாம் உலகப் போரின் முடிவில் இரண்டு அணுகுண்டுகளை ஜப்பான் மீது வீசியது போர்க்குற்றம் இல்லையா? கிட்டத்தட்ட போர் முடிவுக்கு வந்திருந்த நிலையில் ஜப்பான் சரணடையத் தயாராகின்ற நிலையிலேயே அணுகுண்டுகள் வீசப்பட்டன. அவை உண்மையில் இரண்டாம் உலகப்போரில் சோவியத் படைகளின் வெற்றியை மடைமாற்றச் செய்யப்பட்ட ஒன்றேயன்றி போரியல் நோக்கில் செய்யப்பட்ட ஒன்று அல்ல என்று அமெரிக்க ஆய்வாளர்களும் ஓய்வு பெற்ற கொள்கைவகுப்பாளர்களும் நிறுவியுள்ளார்கள். தேவையற்ற நிலையில் இவ்வாறு அணுகுண்டுகளை வீசிய

தற்கு அமெரிக்க ஜனாதிபதி பொறுப்புக்கூறினாரா?

கெடுபிடிப்போர் தொடங்கிய காலப்பகுதியில், 1950-ல் கொரியப் போர் தொடங்கியது. அதில் வடகொரியா மீது பொதுமக்களின் உயிரிழப்புகளைப் பற்றிக் கவலைப்படாமல், மூன்று ஆண்டுகளாக அமெரிக்கா தரைவிரிப்பு குண்டுகளை வீசியது. இதில் மூன்று மில்லியனுக்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இதை அப்போதைய விமானக் கட்டளைத் தளபதியான கர்டிஸ் லெமே பின்வருமாறு நினைவு கூர்ந்தார்: 'மூன்று ஆண்டுகளில் கொரியாவின் மக்கள் தொகையில் 20 சதவீதத்தை நாங்கள் கொன்றோம். இவை போரினால் ஏற்பட்ட நேரடி உயிரிழப்புகள். இதைவிட மறைமுக இழப்புகளும் இருந்தன'.

1960-கள் மற்றும் 1970-களில் வியட்நாம் மக்களுக்கு எதிராக அமெரிக்கா ஆக்கிரமிப்புப் போரில் ஈடுபட்டது. 1965 முதல் 1975 வரை, அமெரிக்கா தெற்கு மற்றும் வடக்கு வியட்நாம் மீது எட்டு மில்லியன் டன்களுக்கும் அதிகமான குண்டுகள் மற்றும் பிற வெடிமருந்துகளை வீசியது, இது ஹிரோஷிமாவில் பயன்படுத்தப்பட்டதைப் போன்ற சுமார் 640 அணுகுண்டுகளின் வெடிக்கும் சக்திக்குச் சமமானதாகும். குறிப்பாகத் தடைசெய்யப்பட்ட 400,000 டன் நாபாம், தீக்குளிக்கும் குண்டுகளைப் பயன்படுத்தியது. இந்த ஆக்கிரமிப்புப் போரின்



காலம் முழுவதும், மூன்று மில்லியன் மக்கள் கொல்லப்பட்டனர். ஒரு சட்டவிரோதப் போரில் ஆக்கிரமிப்பாளராக, அமெரிக்கா வியட்நாம் மக்களைக் கொன்றமைக்கு இன்றுவரை நீதி இல்லை.

இதேபோல கம்போடியாவின் மீது அமெரிக்கா 2,756,941 டன் வெடிமருந்துகளைக் குண்டுகளாக வீசியது. சில ஆய்வாளர்கள், நவீன வரலாற்றில் கம்போடியா அதிக குண்டுவீச்சுக்கு உள்ளான நாடாக இருக்கலாம் என்று குறிப்பிடுகிறார்கள். பல சந்தர்ப்பங்களில், கம்போடியக் கிராமங்கள் மீது இரக்கமின்றி டஜன் கணக்கான பீ-52 குண்டுகள் வீசப்பட்டு முழுமையாக அழிக்கப்பட்டன. ஆவணப்படுத்தப்பட்ட தகவல்களின் அடிப்படையில், அமெரிக்கா 100,000-க்கும் அதிகமான கம்போடிய மக்களைக் கொன்றுள்ளது. இவ்வெண்ணிக்கை இன்னும் அதிகமாக இருக்கலாம் என்று சிலர் வாதிடுகிறார்கள்.

1965-ம் ஆண்டில், இந்தோனேசியாவில் கம்யூனிஸ்டுகளைக் கொல்ல இந்தோனேசிய இராணுவ அதிகாரிகளுடன் அமெரிக்கா சதி செய்தது. ஒரு ஆட்சிக்கவிழ்ப்பு மூலம் ஜெனரல் சுஹார்டோவை ஆட்சிக்குக் கொண்டுவந்த உடனேயே, இந்தோனேசியாவின் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் அதன் அனுதாபிகள் கொல்லப்பட்டனர். 1965-இன் பிற்பகுதியிலிருந்து 1966-ன் ஆரம்பம் வரை, ஆறு மாத காலப்பகுதியில், இந்தோனேசிய இராணுவமும் அதன் துணை இராணுவக்குழுக்களும் இரண்டு மில்லியன் கம்யூனிஸ்டுகளைக் கொன்றனர். இதில் முக்கியமானது யாதெனில் அமெரிக்கா 5,000 இந்தோனேசிய கம்யூனிஸ்ட் தலைவர்களின் பட்டியலை முறையாகத் தொகுத்து இந்தோனேசிய இராணுவ அதிகாரிகளிடம் கொடுத்தது. பின்னர் கொல்லப்பட்ட நபர்களின் பெயர்களை அமெரிக்கா சரிபார்த்ததாகக் கூறப்படுகிறது.

1971-ம் ஆண்டு மார்ச் மாதம் தொடங்கி ஒன்பது மாதங்களுக்கு பாகிஸ்தான் வங்கதேசத்தில்(அப்போது கிழக்கு பாகிஸ்தான்)இராணுவ நடவடிக்கைகளை நடத்திக் குறைந்தது ஒரு மில்லியன் மக்களைக் கொன்றது, மேலும் பத்து மில்லியன் மக்களை இந்தியாவில் தஞ்சம் அடையச் செய்தது. கிழக்குப் பாகிஸ்தானின் தலைநகரான டாக்காவின் மீது பாரிய இராணுவத் தாக்குதலான 'ஆபரேஷன் சர்ச்லைட்டை' தொடங்கியது. பாகிஸ்தான் தனது சொந்த மக்களைக் கொல்வதற்கு முன்னும் பின்னும், அமெரிக்கா பாகிஸ்தானுக்கு ஆயுத, இராஜதந்திர ஆதரவுகளை வழங்கியது.

அதேபோன்று, குவாத்தமாலா அதன் மாயன் இன மக்களுக்கு எதிராக இனப்படுகொலை செய்து கொண்டிருந்த போது அமெரிக்கா அதற்கு ஆயுத மற்றும் இராஜதந்திர ஆதரவை வழங்கியது. 1979 முதல் 1983 வரை, குவாத்தமாலா இராணுவம் குவாத்தமாலாவின் மாயன்களை இடதுசாரிக் கிளர்ச்சியாளர்களுக்கான ஆதரவுத் தளமாகப் பார்த்தது. அவர்களை அரசின் 'எதிரிகள்' என்று முத்திரை குத்தியது. இந்த நேரத்தில், மாயன் சமூகங்களுக்கு எதிராக 'பாரிய மற்றும் கண்மூடித்தனமான ஆக்கிரமிப்பு' நிகழ்ந்தது. மார்ச் 1982-ல் ஜெனரல் எஃப்ரைன் ரியோஸ் மாண்ட்டினின் இராணுவப் புரட்சியைத் தொடர்ந்த பதினெட்டு மாதங்களில் 80,000 மாய இனமக்கள் கொல்லப்பட்டனர். இக்கொலைகளை ரியோஸ் மாண்ட் மேற்பார்வையிட்டார். அவருக்கு அமெரிக்கா நேரடியாக ஆதரவு தெரிவித்தது.

1987-1988 காலப்பகுதியில், ஈராக், அங்குவாழும் குர்திஷ் மக்களை இனச்சுத்திகரிப்புச் செய்து கொண்டிருந்த போது அமெரிக்கா ஈராக்கிற்கு ஆயுத, இராஜதந்திர ஆதரவுகளை வழங்கியது. ஈராக், ஏழு மாத காலப்பகுதியில் 100,000 குர்திஷ் மக்களைக் கொன்றது. அப்போது ஈராக் அமெரிக்காவின் நெருங்கிய நண்பனாக இருந்தது. இதனால் இக்கொலைகளுக்கான தார்மீக ஆதரவு அமெரிக்காவால் வழங்கப்பட்டது. குவைத் மீதான ஈராக்கிய ஆக்கிரமிப்பு, ஈராக்கை அமெரிக்காவின் எதிரியாக்கியது. குவைத்தில் இருந்து ஈராக்கை வெளியேற்றும் செயல்பாட்டில், மின்சாரம் மற்றும் சுகாதார வசதிகள் உட்பட ஈராக்கின் குடிமக்களின் உட்கட்டமைப்புகளை அமெரிக்கா வேண்டுமென்றே தாக்கியது. ஈராக் படையெடுப்பு மற்றும் குவைத்தின் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து செயற்படுத்தப்பட்ட பொருளாதாரத் தடைகள் ஈராக் வெளியேற்றப்பட்ட பின்னரும் தொடர்ந்தன. தடைகள் ஐ.நாவால் நிர்வகிக்கப்பட்டாலும், பொருளாதாரத் தடைகளை உருவாக்குவதற்கும், அவை பேணப்படுவதற்கும் செயற்படுத்தப்படுவதற்கும் அமெரிக்கா முதன்மையாகப் பொறுப்பு என்று பொதுவான உடன்பாடு உள்ளது. உட்கட்டமைப்பிற்கு ஏற்பட்ட சேதத்தினாலும் மற்றும் வரலாற்றில் மிகவும் விரிவானதாக விவரிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகள் அமுலாக்கப்பட்டதாலும் ஈராக்கின் பொது சுகாதாரத்தில் விரைவான

சரிவை ஏற்படுத்தியது. 1998 அளவில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான ஈராக்கியர்கள் பொருளாதாரத் தடைகளுடன் தொடர்புடைய சூழ்நிலைகளால் இறந்தனர், இதில் 500,000 குழந்தைகளும் அடங்கும்.

இவை சில உதாரணங்கள் மட்டுமே. அமெரிக்காவின் பூர்வகுடிகள் கொலம்பஸ்ஸை ஒரு கொலைகாரனாகவும் தம் சமூகத்தின் மீதான இனப்படுகொலையைப் புரிந்தவராகவும் அடையாளப்படுத்துகிறார்கள். 1492-ல் கிறிஸ்டோபர் கொலம்பஸ் முதன்முதலில் கரீபியன் கடற்கரையின் 'புதிய உலகில்' கால் பதித்தபோது 125 மில்லியனாக மதிப்பிடப்பட்டிருந்த பூர்வகுடி மக்களின் தொகை நான்கு நூற்றாண்டுகளின் பின்னர் 1892-ல் அமெரிக்க மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணியகம் நாட்டின் உரிமைகோரப்பட்ட எல்லைகளுக்குள் கால் மில்லியனுக்கும் குறைவான பழங்குடியினர் மட்டுமே இருப்பதாக முடிவு செய்தது. ஒப்பிட்டுப் பார்த்தால், இந்த நான்கு நூற்றாண்டுகளில் பூர்வகுடி மக்களின் தொகை 90 சதவீதத்திற்கும் மேலதிகமாக இல்லாமல் போயிருந்தது. இலட்சக்கணக்கான மக்கள் கோடாரிகளாலும், வாள்களாலும் வெட்டி, உயிரோடு எரிக்கப்பட்டு, குதிரைகளுக்கு அடியில் மிதியுண்டு, நாய்களாலும் மனிதராலும் வேட்டையாடப்பட்டு, சுட்டு, அடித்து, குத்தப்பட்டு, பரிசுக்காக உச்சந்தலையில் வெட்டப்பட்டு, இறைச்சிக் கொக்கிகளில் தொங்கவிடப்பட்டு, கடலில் கப்பல்களின் ஓரங்களில் தூக்கி எறியப்பட்டு, அடிமைகளாக வேலை செய்து, வேண்டுமென்றே நரபலி கொடுக்கப்பட்டு இறந்தனர். ஏனையோர் அறியப்படாத பல நிகழ்வுகளில், வேண்டுமென்றே பரப்பப்பட்ட தொற்றுநோய்களால் பாதிக்கப்பட்டு இறந்துபோயினர். அமெரிக்க மண்ணில் உலகின் மிகப்பாரிய இனவழிப்பு நிகழ்ந்துள்ளது. ஆனால் அதை இனவழிப்பு என்றோ, இனப்படுகொலை என்றோ யாரும் கருதுவதில்லை.

இப்பின்புலத்தில் இரண்டு கேள்விகள் முதன்மையானவை. முதலாவது, ஏன் இதுவரை மேற்கொண்ட, பங்களித்த குற்றங்களுக்கு அமெரிக்கா தண்டிக்கப்படவில்லை? இரண்டாவது, தான் பங்களித்த குற்றத்திற்கு நீதி வழங்குமாறு அமெரிக்காவிடம் கோருவது எந்த வகையில் நியாயமானது? இவ்விரண்டையும் சற்று விரிவாகப் பார்க்கலாம்.

## குற்றமும் தண்டனையின்மையும்:

மேற்குறிப்பிட்ட அனைத்துக்கும் அப்பால் இனப்படுகொலை பற்றிய ஆய்வுகளில் அமெரிக்கா மீதான கவனம் குவிக்கப்படுவது தவிர்க்கப்பட்டே வந்துள்ளது. இதற்கு வரையறையின் சிக்கல்கள், பகுப்பாய்வுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வழக்குகளில் தொடர்புடைய வரம்புகள், உலகளாவிய அமெரிக்க கொள்கைகளைச் சுற்றியுள்ள தண்டனையின்மை கலாசாரம் ஆகிய ஒன்றோடொன்று தொடர்புடைய மூன்று காரணங்கள் உள்ளன. வரலாற்றின் வேறு எந்தப் பிரிவோ அல்லது வரலாற்று நிகழ்வுகளை மையமாகக் கொண்ட விசாரணைத் துறையோ இனப்படுகொலை ஆய்வுகள் அளவுக்கு அதனை வரையறை செய்வதில் பிற காரணிகளில் தங்கியிருப்பதில்லை. போர், அரசியல், செல்வம், வறுமை, சமூகம், கலாசாரம், பாலினம் உட்பட்ட பல தலைப்புகள் பற்றிய ஆய்வுகள் அனைத்தும் விதிமுறைகள் மற்றும் வரையறையின் விரிவான பகுப்பாய்வுக்கு வழிவகுத்துள்ளன. ஆனால் வேறு எந்தத் துறையும் அதன் இருப்பை ஒரு ஒற்றைச் சொல்லை அதன் வரையறையைச் சார்ந்து இல்லை. இனப்படுகொலையின் சட்ட வரையறையானது இனப்படுகொலை மாநாட்டில் குறிப்பிடப்பட்டது. ஆனால் போதுமானதாக இல்லை என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், அறிஞர்கள் சட்ட வரையறையைத் தொடர்ந்து நம்பியிருக்கிறார்கள்.

உண்மையில் இனப்படுகொலைக்கான சட்ட வரையறை அரசியல் சார்ந்ததாகும். சட்ட வரையறையைப் பயன்படுத்துவது இனப்படுகொலை பற்றிய அறிவார்ந்த ஆய்வுக்கு அரசியல் வரம்புகளை விதிக்கிறது. ஆனால் கடந்த அரைநூற்றாண்டு கால அனுபவம், கூட்டுக்கொலைகளை உருவாக்கும் நிகழ்வுகளை இனப்படுகொலையாகவோ, போர்க்குற்றமாகவோ குறிப்பதற்கு தற்போதைய சட்டவரையறைகள் போதுமானதாக இல்லை. அதேவேளை, அறிவார்ந்த வரையறைகளும் கூட, இனப்படுகொலை என்று அங்கீகரிக்கப்பட வேண்டிய அனைத்துச் செயல்களையும் போதுமான அளவில் உள்ளடக்கியதாக இருக்காது. எனவே, சட்ட வரையறையைப் போலவே, அறிவார்ந்த வரையறைகளும் யதார்த்தத்தை உள்ளடக்கியதாக மாற வேண்டும். இறுதியில், சட்ட ரீதியாகவோ அல்லது அறிவார்ந்ததாகவோ இருந்தாலும், இனப்படுகொலைக்கான குறுகிய வரையறை சிறிய எண்ணிக்கையிலான வழக்குகளுக்கு மட்டுமே பொருந்தும். உண்மையில், இந்தக் குறுகிய வரையறையில், ருவாண்டாவில் நடந்த துட்ஸி இனப்படுகொலையே யூத இனப்படுகொலைக்குப் பிந்தைய ஒரே இனப்படுகொலையாகக் கருத முடியும். ஏனெனில் இது சட்ட வரையறையால் தீர்மானிக்கப்பட்டது. இனப்படுகொலைக்கான மாற்று வரையறையின் அவசியத்தை இது எடுத்துக்காட்டுகிறது. இனப்படுகொலை ஆய்வுகளுக்கான ஆரம்பகால பங்களிப்புகள் வரலாற்றாசிரியர்கள், சட்டக் கோட்பாட்டாளர்கள், அரசியல் விஞ்ஞானிகள், தார்மீக தத்துவவாதிகள் மற்றும் சமூகவியலாளர்களிடமிருந்து வந்தன. மானுடவியல், மற்றும் பாலின ஆய்வுகள் ஆகிய துறைகளில் இருந்து புதிய பங்களிப்புகள் வந்துள்ளன. ஆனால் சர்வதேச அளவில் சட்ட வரையறையே பின்பற்றப்படுகிறது. அதற்கு இதன் பின்னால் ஒளிந்துள்ள அரசியற் காரணிகள் பிரதானமானவை.

இது இனப்படுகொலை ஆய்வுகளில் உள்ள பன்முகத்தன்மையையும் அதன் தொடர்ச்சியான அறிவார்ந்த பொருத்தத்தையும் மேலும் நிரூபிக்கிறது. இனப்படுகொலை என்றென்றும் அடிப்படையில் கேள்விக்குட்படுத்தப்படும் கருத்தாகவே இருக்கும். இனப்படுகொலை என்று ஒருவர் கருதுவதை இன்னொருவர் இனப்படுகொலை அல்ல என்று கருத முடியும். இனப்படுகொலையின் வரையறையானது, இனப்படுகொலை ஆய்வுகளுக்கு எந்தெந்த சூழல்கள் பொருத்தமானவை என்பதைத் தீர்மானிக்கிறது. எனவே, ஒரு அறிஞர் பயன்படுத்தும் இனப்படுகொலையின் வரையறைக்கும் பகுப்பாய்விற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட வழக்குகளுக்கும் இடையே நேரடித் தொடர்பு உள்ளது. வேறுவிதமாகக் கூறினால், இனப்படுகொலை என்பது ஒரு சர்ச்சைக்குரிய கருத்தாக இருந்தால், அதுவும் இனப்படுகொலையின் சந்தேகத்திற்குரிய நிகழ்வுகளில் ஒன்றாகும். எனவே, இனப்படுகொலையுடனான அமெரிக்க உறவு பற்றிய ஆய்வானது, அமெரிக்க நடவடிக்கைகள் இனப்படுகொலைக்கான ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் பொருந்தவில்லை என்றால், அமெரிக்கா அதில் தொடர்புபடவில்லை என்று இலகுவாக நியாயப்படுத்தப்படலாம்.

இனப்படுகொலை ஆய்வுகளில் இருந்து அமெரிக்கா ஏன் பெரும்பாலும் விலக்கப்பட்டுள்ளது என்பதை அறிவார்ந்த வரையறைகளால் மட்டும் விளக்குவது சாத்தியமில்லை. இனப்படுகொலை பற்றிய ஆய்வில் அமெரிக்க வழக்குகள்




பொதுவாக இல்லாதது இன்னும் சிலவற்றைக் குறிப்பதாகத் தோன்றுகிறது. இனப்படுகொலை ஆய்வுகளில் பரவலான ஆய்வுக்கு உத்தரவாதம் அளிக்காத இனப்படுகொலைக் கருத்தாக்கத்திலிருந்து அமெரிக்கா சம்பந்தப்பட்ட வழக்கு கள் வெகு தொலைவில் இருப்பதாக இனப்படுகொலை அறி ஞர்கள் மத்தியில் ஒரு நம்பிக்கை உள்ளது. அடம் ஜோன்ஸ் 'Democrisy' என்ற சொல்லை உருவாக்கினார். இது 'Democracy' (ஜனநாயகம்) மற்றும் 'Hypocricy'(கபடம்) ஆகிய இரண்டு சொற்களின் இணைவாகும். ஜோன்ஸின் இந்தப் பயன்பாடு முக்கியமானது. வெளிப்படையாக ஜனநாயக ஆட் சியாகக் காட்சி தந்தாலும் நடைமுறையில் ஜனநாயகத்தின் பெயரிலான கபடம் ஒழிந்துள்ளது. இது அமெரிக்க அரசுக்கு நாட்டுக்குள் தனது செயல்களுக்கான நியாயத்தைப் பெற்றுக் கொள்ள வழிவகுக்கிறது. உதாரணமாக 'பயங்கரவாதத்திற்கு எதிரான போர்', யார் மீதும் போர் தொடுக்கவும், கொலை செய்யவும், சித்திரவதைக்கு ஆளாக்கவும், ஆட்சிகளைக் கவிழ்க்கவுமான நியாயத்தை வழங்கியது. அமெரிக்காவின் இந்நடத்தை ஏனைய அரசுகளுக்கு அதைத் தாம் செய்வதற் கான நியாயத்தையும் துணிவையும் வழங்குகின்றன. ஒரே குற் றத்தை இருவரும் செய்த பின்னர் ஒருவரை ஒருவர் எவ்வாறு குற்றஞ் சாட்டுவது.

## கொலைகளுக்கு நியாயம் கற்பித்தல்:

இனப்படுகொலை பற்றிய ஆய்வில் அமெரிக்காவைத் தண் டனையிலிருந்து விடுவிப்பதற்குப் பலர் முயன்றுள்ளார்கள். அவர்களில் புகழ்பெற்றவர் சமந்தா பவர். இவர் ஒபாமாவின் ஆட்சிக்காலத்தில் ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவராக இருந்தவர். கடந்த பைடன் ஆட்சிக்காலத்தில் யுஎஸ்எயிட்டின் தலைவராக இருந்தவர். 2002-ல் இவர் வெளியிட்ட 'நரகத்திலி ருந்து ஒரு பிரச்சனை: அமெரிக்காவும் இனப்படுகொலையின் காலமும்' (A Problem from hell: America and the Age of Genocide) என்ற நூல் முக்கியமானது. அமெரிக்கா உலகெங் கிலும் தலையிட்டாலும் இனப்படுகொலைகளோ, கூட்டுக் கொலைகளோ, போர்க்குற்றங்களோ நிகழ்கிற போது அமெ ரிக்கா வெறும் பார்வையாளராக இருந்ததேயன்றி அது என் றும் பங்காளியாகவோ, அல்லது அதை நிகழ்த்தியதாகவோ இருக்கவில்லை என்பது அவரது வாதம். அந்தநூல் ஏராள மான விடயங்களைத் தவற விடுகிறது. பல உண்மைகளைச் சொல்லாமல் விடுகிறது. சிலவற்றுக்குத் தவறான விளக்கம் கற்பிக்கிறது. ஆனால் இந்த நூல் அமெரிக்காவில் மிகவும் பிரபலமானது, உலகளாவிய ரீதியிலும் இது புகழ்பெற்றது. அவ்வகையில் அமெரிக்காவின் குற்றங்களை மறைத்து, அதன் செயல்களுக்கு நியாயம் கற்பிக்கிறது.

பவரின் புத்தகம், இனப்படுகொலை ஆய்வுகளின் வரலாற் றில் மிகவும் பரவலாகப் படிக்கப்பட்ட, செல்வாக்குள்ள ஒன் றாகும். 2003-இது அ-புனைவு (General Nonfiction) பிரிவில் புலிட்சர் பரிசை வென்றது என்பதையும் இங்கு சொல்லியாக வேண்டும். இனப்படுகொலைக்கும் அமெரிக்காவிற்கும் உள்ள தொடர்புகளை உண்மையாக விசாரிப்பதற்குப் பதி லாக, பவர் இனப்படுகொலை மாநாட்டை உருவாக்குவதில் அமெரிக்கத் தலைமையின் பங்கை மிகைப்படுத்தி, அமெ ரிக்கா சம்பந்தப்பட்ட இனப்படுகொலை நிகழ்வுகளைத் தவிர்த்து, அவர் உள்ளடக்கிய வழக்குகளில் அமெரிக்கா வின் பங்கைக் குறைத்து மதிப்பிடுகிறார். பவரின் கூற்றுப்படி, 'இனப்படுகொலைக்கு எதிராக உடன்படிக்கைகளை வரைவ தில் அமெரிக்கா தலைமைப் பாத்திரத்தை ஏற்றுக்கொண் டது. அமெரிக்கத் தலைமை இல்லாவிட்டால், இனப்படுகொ லைக் குற்றத்தைத் தடுக்கும் உடன்படிக்கை நிறைவேறியி ருக்காது' என்கிற இந்தக் கூற்றுத் தவறானது. ஏனெனில் இந்த ஒப்பந்தத்தைச் சிதைக்கும் நாசகார வேலைகளையே அமெ ரிக்கா செய்தது என்பதை ஆவணங்களின் உதவியோடு வார்ட்டு சேர்ச்சில் (Ward Churchill) நிறுவுகிறார். சேர்ச்சிலின் அமெரிக்கா மீதான விமர்சனங்களில் முதன்மையானது, பண் பாட்டு இனப்படுகொலையை இனப்படுகொலை உடன்படிக் கையில் இருந்து விலக்கியதில் அது வகித்த பங்கு ஆகும். பண்பாட்டு இனப்படுகொலையைச் சேர்ப்பதற்கு எதிராக அமெரிக்கா ஆக்ரோஷமாக வாதிட்டது. முழு உடன்படிக்கை யையும் இது குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாக அச்சுறுத்தி யது. ஆனால் நல்வாய்ப்பாய் ஏனைய நாடுகள் குறிப்பாக

சோவியத் ஒன்றியத்தின் பங்களிப்பால், பண்பாட்டு இனப்படு கொலையை உடன்படிக்கையில் இருந்து அகற்றுவதில் அமெரிக்கா வெற்றிபெறவில்லை.

பவர் சொல்லாமல் மறைத்த இன்னொரு உண்மையுண்டு. இனப்படுகொலை உடன்படிக்கையே ஐ.நாவில் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட முதலாவது உடன்படிக்கையாகும். மனித உரிமைகள் உலகளாவிய பிரகடனத்திற்கு ஒப்புதல் அளிப்பதற்கு ஒரு நாள் முன்னதாக, டிசம்பர் 9, 1948 அன்று ஐ.நா பொதுச் சபையால் இனப்படுகொலைக் குற்றத்தைத் தடுத்தல் மற்றும் தண்டனைக்கான உடன்படிக்கை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் இது அமெரிக்காவால் அங்கீகரிக்கப்படவில்லை. 1988-ம் ஆண்டே, உடன்படிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு 40 ஆண்டுகளின் பின்னரே அமெரிக்கா அதை அங்கீகரித்தது. ஆனால் இக்காலத்தில் அமெரிக்காவின் எதிரியாகக் கருதப்பட்ட சோவியத் யூனியன் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு ஆறு வருடங்களில் அங்கீகரித்தது. இந்த உடன்படிக்கையின் உருவாக்கத்தில் சோவியத் ஒன்றியத்தின் முதன்மையான பங்கு குறிப்பிடத்தக்கது.

தனது நூலில் பல முக்கியமான நாடுகளில் நிகழ்த்தப்பட்ட படுகொலைகளை பவர் தவறிவிட்டிருக்கிறார். அதில் முக்கியமானது, குவாட்டமாலா. 2000-ம் ஆண்டளவில் குவாட்டமாலாவின் குற்றங்கள் தொடர்பில் ஆய்வுசெய்த ஆணையம், குவாட்டமாலாவின் பாதிக்கப்பட்டவர்களில் 83 சதவீதம் பேர் மாயன் இனக்குழுவைச் சேர்ந்தவர்கள் என்று கண்டறிந்தது. மாயன் மக்களின் குழுக்களுக்கு எதிராக அரசின் முகவர்கள் இனப்படுகொலைச் செயல்களைச் செய்தனர் என்று ஆணையம் முடிவு செய்தது. ஆனால் அமெரிக்காவின் செயல்களுக்கு நியாயம் கற்பிப்போர் குவாட்டமாலா இனப்படுகொலையை 'தீங்கற்றது' என்று வகைப்படுத்துகின்றனர். ஏனென்றால் இனப்படுகொலையின் குற்றவாளி ஒரு கம்யூனிச எதிர்ப்பு அமெரிக்க ஆதரவு அரசு. கம்யூனிச எதிர்ப்பின் பெயரில் செய்யப்பட்ட அனைத்துக் குற்றங்களும் நியாயமானவையாகவே பெரும்பான்மையான அமெரிக்க ஆய்வாளர்களாலும் ஊடகவியலாளர்களாலும் பார்க்கப்பட்டன. 1973-ல் சிலியில் ஏற்பட்ட இராணுவச்சதியும் அதைத் தொடர்ந்த கொலைகளும் அவ்வாறே நோக்கப்பட்டன. அமெரிக்காவின் கொல்லைப்புறம் என அறியப்பட்ட இலத்தீன் அமெரிக்கா வெங்கும் மேற்கொள்ளப்பட்ட ஆட்சிக்கவிழ்ப்புகள், கொலைகள், காணாமல் போதல்கள், சித்திரவதைகள் அனைத்தும் கம்யூனிச பூதத்தை ஒழிப்பதற்கான செயல்கள் என்று நியாயப்படுத்தப்பட்டன.

பவரின் புத்தகத்திற்குத் திரும்புவோம். அவரது மையக் கருத்து 'பிரச்சினை அமெரிக்கா என்ன செய்கிறது என்பது அல்ல. ஆனால் அது என்ன செய்யாது விட்டது என்பதே. அமெரிக்கா எவ்வகையிலாவது தலையிட்டு இனப்படுகொலையை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்'. இதுவே அவரது வாதமாகும். இதன் மூலம் அமெரிக்க மேற்கொண்ட அனைத்துக் குற்றச் செயல்களுக்கும் ஆதரவு வழங்குகின்ற அதேவேளை அமெரிக்க இழைத்த ஏனைய அனைத்துவகையான குற்றங்களும் இனப்படுகொலையை எவ்விதத்திலும் நிறுத்தவேண்டும் என்ற நோக்கில் நடந்தவையே என்ற வாத்தையும் வைத்து அதனை ஆதரிக்கிறார். இதுதான் அமெரிக்கப் பொதுப்புத்தி மனநிலையாக வளர்ச்சியடைந்துள்ளது.

பவரின் புத்தகத்தில் ஈராக் பற்றிய ஓர் அத்தியாயம் உள்ளது. அது 1990-களில் ஈராக் மீதான அமெரிக்கப் பொருளாதாரத் தடைகளை முழுவதுமாகப் புறக்கணித்து, ஈராக்கின் குர்திஷ் இனப்படுகொலையில் கவனம் செலுத்துகிறது. கூடுதலாக, குர்திஷ் இனப்படுகொலையில் அமெரிக்கா உடந்தையாக இருக்கவில்லை என்ற பொய்யைக் கட்டவிழ்க்கிறது. புவிசார் மூலோபாய நலன்கள் மற்றும் 'சரியான தகவல்' இல்லாமை காரணமாக, அமெரிக்கா தலையீடு செய்ய வேண்டாம் என்று முடிவு செய்தது என்ற தவறான எண்ணத்தை வாசகர்களுக்கு ஏற்படுத்துகிறது. அமெரிக்கா ஈராக்கிற்கு இராணுவ உளவுத் துறைத் தகவல்களை வழங்கியது என்பதை பவர் ஒப்புக் கொள்கிறார், ஆனால் இரசாயன ஆயுதங்கள் உட்பட ஆயுதங்களை அமெரிக்கா ஈராக்கிற்கு விற்றது என்பதை மறைக்கிறார். மேலும், ஈராக்கின் இரசாயன ஆயுதத் திட்டத்தில் இணைக்கப்பட்ட இரசாயனங்களை அமெரிக்கா நேரடியாக விற்றது. இந்த ஆயுதங்கள் ஈரானிற்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டன. பவரின் கூற்றுப்படி, ஈரான்-ஈராக் போரில் ஈராக்கை அமெரிக்கா ஆதரித்தது. அதனால் ஈராக் நிகழ்த்திய இனப்படுகொலைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதைத் தவிர்த்தது.

இங்கு கவனிக்க வேண்டியது யாதெனில், பவர் உட்பட்ட ஏனையோர், இனப்படுகொலையுடன் அமெரிக்க உறவை வரையறுக்கும் விதத்தில் தெளிவான முறை உள்ளது. இது இனப்படுகொலையுடன் அமெரிக்க உறவை ஒரு பார்வையாளனாக முன்வைக்கிறது, அது வெறுமனே அரசியல் விருப்பத்தைக் கண்டறிந்து, தடுப்பு நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையான தலைமையைச் செலுத்த வேண்டும், அதாவது இராணுவ ரீதியாகத் தலையிட வேண்டும் என்று கோருகிறது. இது இனப்படுகொலை செய்யப்பட்ட நிலைமைகளை எளிதாக்குவதில் அமெரிக்கா ஆற்றிய இன்றியமையாத பங்கை வெள்ளையடிக்கிறது. இதன்மூலம் இனப்படுகொலைக்கு அமெரிக்கா நேரடியாகப் பொறுப்பேற்கும் சாத்தியத்தை முற்றிலும் புறக்கணிக்கிறது. பவர் உள்ளிட்டவர்கள் இனப்படுகொலை விடயத்தில் அமெரிக்கா 'அப்பாவி' போன்றதொரு கதையை உருவாக்குகிறார்கள். இதனைக் கேள்விக்குள்ளாக்காவிட்டால் அது இனியும் தொடர்ந்து மோசமான விளைவுகளை உருவாக்கும்.

## தொடரும் குறிப்புகள்:

2009 ஜனவரியில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் ஐ.நா. தூதுவர் சூசன் ஈ. ரைஸ் இனப்படுகொலைக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் இனப்படுகொலைகள் நிகழ்வதைத் தடுக்கும் நோக்கில் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும் அமெரிக்கா தயாராக இருப்பதாகத் தெரிவித்தார். உலகின் எந்தப் பகுதியில் இனப்படுகொலை நிகழுமாயினும் அதைத் தடுத்து நிறுத்துவதும் அவ்வாறு நிகழாமல் உறுதிப்படுத்துவதும் அமெரிக்காவின் பொறுப்பாகும் என்றும் கூறினார். 'பெரும் அளவில் மரணத்தை எதிர்கொள்ளும் அப்பாவிப் பொதுமக்களை பாதுகாக்கும் பொறுப்பை அங்கீகரிக்கும் ஒரு வளர்ந்து வரும் சர்வதேச விதிமுறை இருப்பதாக அவர் தெரிவித்தார். மேலும் அரசாங்கங்களால் தங்களது மக்களைப் பாதுகாக்க முடியாது போனால், இனப்படுகொலை நிகழாமல் பாதுகாப்பது சர்வதேச பொறுப்பு' என்று அவர் மேலும் கூறினார். அவர் 2009 ஜனவரியின் பிற்பகுதியில் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் தனது தொடக்க உரையில் 'சர்வதேச மனிதாபிமான சட்டத்தை மீறும் போது, சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறுவதிலிருந்து பொதுமக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு சர்வதேச சமூகத்திற்கு உள்ளது.

காங்கோ ஜனநாயக் குடியரசில் பல்லாயிரம் இறப்புகள் நிகழ்ந்துள்ளன, டார்பூரில் இனப்படுகொலை நிகழ்கிறது. மனித உரிமைகளைப் பாதுகாப்பதிலும், சர்வதேச மனிதாபி மான சட்ட மீறல்களை முடிவுக்குக் கொண்டுவருவதிலும் அமெரிக்கா உறுதியுடன் உள்ளது' என்று கூறினார்.

அதேயாண்டு மேமாதம் இலங்கையில் 'பொதுமக்களைக் காக்கும் பொறுப்பு' என்னவானது? ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அமெரிக்காவின் மௌனத்தின் காரணமென்ன? இங்கே கவனிக்க வேண்டியது யாதெனில் காங்கோ பற்றியும் சூடான் பற்றியும் குறிப்பிட்ட ரைஸ், அமெரிக்கக் கூட்டாளிகளான யோவேரி முசெவேனி (உகாண்டா) மற்றும் போல் ககாமே (ருவாண்டா) ஆகியோர் தமது ஆட்சியில் நிகழ்த்தும் இனவழிப்புச் செயற்பாடுகள் பற்றி வாய் திறக்கவில்லை. அவை கவனமாகத் திட்டமிட்டுத் தவிர்க்கப்பட்டன.

கிரேக்க சிந்தனையாளரும் இராணுவத் தளபதியுமான, தூசிடிடீஸ் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இவ்வாறு எழுதினார்: 'நீதியின் தரம், நிர்ப்பந்திப்பதற்கான அதிகாரத்தின் சமத்துவத்தைப் பொறுத்தது, உண்மையில் வலிமையானவர்கள் தங்களுக்குச் செய்யக்கூடியதைச் செய்கிறார்கள். பலவீனமானவர்கள் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியதை ஏற்றுக்கொள்கிறார்கள்'. சர்வதேச அரசியலில் ஏராளமான நவீன கால எடுத்துக்காட்டுகள் தூசிடிடீஸின் அவதானிப்பின் பொருத்தப்பாட்டை நமக்கு நினைவூட்டுகின்றன.



meenilankco@thaiveedu.com



# வடமொழி நூல்களைத் தமிழ்ப்படுத்தற் பணியில் ஈழத்தவர் பங்களிப்பு:
# இரகுவம்சத்தின் அரசியல்

– மைதிலி தயாநிதி



இரகுவம்சத்தை ஓர் இலக்கியப் படைப்பாக மட்டும் பார்ப்பது சரியா ? என்பது முக்கியமான கேள்வி. பண்டைய இலக்கியமாயினும், நவீன இலக்கியமாயினும் அது இரசனை, அழகியல் உணர்வுக்காக மட்டுமே படைக்கப்பட்டது என்ற கருத்து ஆழ்ந்த விசாரணைக்கு உட்படுத்தப்படவேண்டியது. அரசியல், சமூக, பண்பாட்டுக் காரணிகளே இலக்கியத்தின் அடிப்படை. எனவே, சமூக விளைபொருளான இலக்கியம் அழகியல் சாராநோக்கங்களை வெளிப்படுத்தும் நுண்கருவியாகத் தொழிற்படுதலுமுண்டு. அரசியல், சமூக, பண்பாட்டுத் தளங்களில் சமகால நிலைமைகளை வலுப்படுத்தல், எதிர்த்தல், மாற்றத்தை ஏற்படுத்துதல் எனும் நோக்கங்களுடன் இலக்கியம் ஆக்கப்படலாம். இத்தகைய நோக்கங்கள் கருத்தியல் அரசியல் வகைமைப்பாற்படும். இந்நோக்கங்களை ஓரிலக்கிய நூல் வெளிப்படையாகக் கூறலாம்; அல்லது மறைமுகமாகவோ, குறியீடாகவோ வெளிப்படுத்தலாம். அவ்வகையில் இலக்கியப் புனைவு என்பது அரசியற் செயற்பாடும் ஆகிறது. வடமொழி இரகுவம்சம், அதன் தழுவலான அரசகேசரியின் இரகுவம்சம் இரண்டுமே அரசியல் பேசுவன என்பதே இக்கட்டுரை முன்வைக்கும் அடிப்படைக் கருத்தாகும்.

காளிதாசரின் இரகுவம்சம் மிகவும் புகழ்பெற்ற வடமொழி மகாகாவியங்களில் ஒன்றாகும். இது சூரிய வம்ச அரசர்களான திலீபனிலிருந்து அக்னிவர்ணன் வரையிலான அரசவம்சாவளியைக் கூறுவதுடன், அந்த வம்சத்தின் கீர்த்தி வாய்ந்த மன்னரின் சிறப்புகளையும், நற்குணங்களையும், கூடவே அக்னிவர்ணன் போன்றோரின் பலவீனங்களையும் சித்திரிக்கிறது. கவித்துவ நேர்த்தியுடன் இயற்றப்பட்ட இக்காவியம் அதன் இலக்கிய அழகைத் தாண்டி, அரசியல் செயற்பாட்டையும் மேற்கொள்வதை அவதானிக்கலாம். ஆட்சியாளர்கள் வைதிகக்கோட்பாட்டு அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட நான்கு அடுக்கு வர்ண சமூகத்தின் தார்மிக ஒழுங்கை நிலைநிறுத்துபவர்களாகக் காட்டப்படுகின்றனர். இதன்பிரகாரம் இக்காவியம் வைதிகமரபை ஆதாரமாகக் கொண்ட சூரியகுலத்தினரின் முடியாட்சியை நியாயப்படுத்துவதுடன், அத்தகைய முடியாட்சி பற்றிய ஓர் இலட்சியப் பார்வையையும் முன்வைக்கிறது. குறிப்பாக, இக்காவியத்தில் சூத்திரன் சம்புகனை இலட்சிய மன்னன் இராமன் கொல்லுதல் என்பது வர்ணப்படிநிலையை ஓம்பும் அரசனின் தவிர்க்கவியலாத கடமை என்று சித்திரிக்கப்படுகிறது. அதுபோன்று, குடிசொற்கேட்டு இராமன் சீதையை வனத்திற்கு அனுப்புதல் என்பது அரசதர்மத்தின் தவிர்க்கவியலா அம்சமாகக் காட்டப்படுகிறது. வட இந்தியாவில் ஹுணர்களின் படையெடுப்புகள், பௌத்தமதத்தின் எழுச்சி முதலான காரணிகளால் தூண்டப்பட்டு வைதிக மரபினை அடியொற்றிய அரசதர்மக் கருத்தியலை உருவாக்குதல் எனும் அரசியல் செயற்பாட்டை இக்காவியம் முன்னெடுக்கிறது.

'The Power of a Poet: Kingship, Empire and War in Kalidasa's Raghuvamsa' எனும் ஆய்வுக்கட்டுரையில் வரலாற்றுப் பேராசிரியர் உபிந்தர் சிங் இரகுவம்சத்தினை மிகச்சிறந்த அரசியற் காவியம் என்று வர்ணிக்கிறார். 'அரசாண்மை செலுத்துதலும் வம்சத் தொடர்ச்சியும் பற்றிய பிரச்சினைகளே இரகுவம்ச காவியத்தின் மையக்கருத்தாக உள்ளன. அதியுச்சமான அரசியல் கவிதையாக விளங்கும் இக்காவியத்தில் அரசியலின் செல்வாக்கு காளிதாசரின் பிற படைப்புகளைவிட அதிகமாக உள்ளதுடன், இந்தியத் துணைக்கண்டத்தைத் தாண்டியும் பரவியுள்ளது. ஏழாம் நூற்றாண்டில் இருந்து பத்தாம் நூற்றாண்டு வரையிலான கம்போடியா கல்வெட்டுகளிலும், எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜாவா கல்வெட்டொன்றிலும் இரகுவம்சம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இரகுவம்ச காவியத்தின் ஆழமான அரசியல் கதையாடல்களை ஆராய்தல் என்பது அதன் பண்பாட்டு முக்கியத்துவத்தையும் தாக்கத்தையும் விளங்கிக்கொள்வதற்கான திறவுகோலாகும். எனவே, இந்த மகாகாவியத்தின் கருப்பொருள், இதிற் குறிப்பிடப்பட்டுள்ள இடங்கள், கதாபாத்திரங்கள், நிகழ்வுகள், படிமங்களின் முக்கியத்துவம் என்பன விரிவாக ஆய்வு செய்யப்பட வேண்டும்' என்று உபிந்தர் சிங் கூறுகிறார்.

இலங்கையின் வடபகுதியில் அமைந்திருந்த யாழ்ப்பாண அரசிற்குட்பட்ட பகுதிகளில் போர்த்துக்கேய ஆதிக்கம் விரிவாக்கப்பட்ட காலத்தில் காளிதாசரின் இரகுவம்சத்தைத் தழுவி அரசகேசரி தமிழில் புனைந்த காவியம் புதிய அரசியல், பண்பாட்டு முக்கியத்துவத்தைப் பெற்றது. போர்த்துக்கேயர்களின்


THE TEMPORAL AND SPIRITUAL CONQUEST OF CEYLON

FERNAÕ DE QUEYROZ

TRANSLATED BY
S.G. PERERA

IN THREE VOLUMES

ASIAN EDUCATIONAL SERVICES
NEW DELHI ★ MADRAS ★ 1992


CHRISTIANITY IN CEYLON;

WITH AN HISTORICAL SKETCH OF THE
BRAHMANICAL AND BUDDHIST SUPERSTITIONS.

BY
SIR JAMES EMERSON TENNENT,

LONDON:
JOHN MURRAY, ALBEMARLE STREET.
1850.


THE KINGDOM OF
JAFANAPATAM
1645

ADMINISTRATIVE ORGANISATION

PORTUGUESE ARCHIVES

P. E. PIERIS, LITT. D.,

CEYLON DAILY NEWS

அரசியற்தலையீடுகள், கத்தோலிக்க மதம் எனும் புதிய சமயம் தீவிரமாகப் பரப்பப்பட்டமை என்பன உள்ளூர் ஆட்சியை, மத வழிபாட்டு முறைமைகளை நிலைகுலைய வைத்தன. அனைத்திந்திய வைதிகமரபுடன் யாழ்ப்பாண மன்னர் பரம்பரையைத் தொடர்புபடுத்தி, வைதிக இலட்சியங்களுக்கு ஏற்ப தமிழ்-இந்து முடியாட்சியின் நியாயத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையிலும், உள்ளூர் சமூக, சமய பண்பாட்டுக் கூறுகளை மீளுருவாக்கம் செய்யும் வகையிலும் தமிழில் இரகுவம்சம் அமைந்தது. இவ்வாறாக, ஒரு கொந்தளிப்பான காலகட்டத்தில் உள்நாட்டு அதிகாரத்தையும், சமய, பண்பாட்டு அடையாளத்தையும் கருத்தியல்ரீதியாக வலுப்படுத்தும் நோக்குடன் தமிழ்க் காவிய பாரம்பரியம் மூலமாக போர்த்துக்கேய ஆதிக்கத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கருத்தியற் போரின் அடையாளமாகத் தமிழ் இரகுவம்சத்தைக் கொள்ள முடியும்.

நவீனகாலத்திற்கு முற்பட்ட காவியங்களை இவ்வாறு வாசிக்க முடியுமா? என்ற கேள்வி எழலாம். உண்மையில் காவியங்களை வரலாற்றுக் கண்ணோட்டத்தில் பலவழிகளிலும் வாசிக்க முடியும். ஒரு குறிப்பிட்ட வகையான வரலாற்றுச் சூழலுக்கான எதிர்வினையாகக் காவியங்களை வாசித்தல் என்பது காவியவாசிப்பில் இன்னோர் அணுகுமுறை. உதாரணமாக, வடமொழி மகாபாரதப் புலமையாளர்கள் சிலர் மகாபாரத இதிகாசம் என்பது குறிப்பிட்ட சில வரலாற்று வளர்ச்சிகளுக்கான பிராமணிய எதிர்வினை என்று வாதிட்டமையை இங்கு நினைவுகூரலாம். அவைதிக மதங்களின், குறிப்பாக பௌத்தத்தின் அபரிமித வளர்ச்சி, செல்வாக்கு, அவற்றுக்கு ஆதரவளித்த நந்தர்கள், மௌரியர்கள் போன்ற வம்சங்களின் ஆட்சி என்பன வைதிக ஒழுங்கை அச்சுறுத்துவனவாகப் பிராமணர்களின் ஒரு பிரிவினர் கருதினர். இத்தகைய நெருக்கடியான சூழலுக்கு அவர்கள் அளித்த பதிலாகவே மகாபாரதம் அமைந்தது என்று புலமையாளர்கள் சிலர் வாதிடுகின்றனர்.

சூரியகுல அரசர் பற்றிய தொன்மங்களை அடிப்படையாகக் கொண்டு எழுந்த காளிதாசரின் இரகுவம்ச காவியத்தைத் தழுவி அரசகேசரி தமிழிற் காப்பியம் இயற்றிய காலகட்டத்தில் இலங்கையின் தென்பகுதியில் வேறுவகையான இலக்கியம் உருவானது. போர்ப்பாடல்கள் (war poems) என்று அழைக்கப்படும் இவை 16-ம், 17-ம் நூற்றாண்டுகளில் போர்த்துக்கேயர்களுக்கும் சிங்களத் தலைவர்களுக்கும் இடையிலான போர்களை அடிப்படையாகக் கொண்டவை. ரோஹிணி பரணவிதான எழுதிய ‘Sinhalese War Poems and the Portuguese’ எனும் கட்டுரை போர்த்துக்கேயர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையிலான போர்களை விவரிக்கும் Sitavaka Hatana (சீதாவாக்கைப் போர்), Kustantinu Hatana (குஸ்தாந்தினு போர்), Parangi Hatana (பறங்கியர் போர்), Maha Hatana (பெரும் போர்), Rajasiha Hatana (ராஜசிங்க போர்) என ஐந்து போர்ப்பாடல்களை அறிமுகப்படுத்துகிறது. கட்டுரையின் முடிவில் ரோகிணி பரணவிதான கூறுவதாவது:

‘இந்தப் போர்ப்பாடல்களை இயற்றிய கவிஞர்கள் ஆழமான பாடல் மரபுகளையும் கவித்திறனையும் கொண்டவர்கள் அல்லர். அவர்கள் எழுதியது வாசகருக்கு களியூட்டுவதற்காக அல்ல; மாறாக, போர்களில் நிகழ்ந்த சம்பவங்களையும் வீரர்களின் தாக்குதல்களையும் பதிவு செய்தலே அவர்கள் நோக்கம்... மேலும், இவை வீரர்களைப் புகழ்ந்து கூறும் பாடல்களாக இருப்பதால், இவற்றில் அதிக புதுமை இல்லை. ஆனால், இந்தப் பாடல்கள் மிகவும் முக்கியமான தகவல்களை அளிக்கின்றன. பெரும்பாலும், கவிஞர்களே நேரடியாகக் கண்ட அனுபவங்களை அல்லது போரில் கலந்து கொண்டவர்களிடமிருந்து பெற்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டே இவை இயற்றப்பட்டுள்ளன. குறிப்பாக, இப்பாடல்கள் இடப்

பெயர்கள், தளபதிகளின் மற்றும் தலைவர்களின் பெயர்கள், படை நகர்வுப் பாதைகள், போர்த் தந்திரங்கள் ஆகியவற்றை விவரிக்கின்றன. போர்த்துக்கேயருக்கும் சிங்களவருக்குமான தொடர்பாடல்களைச் சில சமயங்களில் உண்மையாகவும் சில சமயங்களில் கற்பனையாகவும் கூறுகின்றன. அது எவ்வாறாயினும் இலங்கை வரலாற்றில் போர்த்துக்கேயர் குறித்த ஆராய்ச்சிக்கு இவை மிக முக்கியமான தகவல்களை வழங்குகின்றன, அத்துடன் இவை இலங்கையர் பார்வையைப் பிரதிபலிப்பதோடு, போர்த்துக்கேய ஆதிக்க எதிர்ப்புப் பதிவாகவும் திகழ்கின்றன.’







அரசகேசரியின் இரகுவம்சமும் சிங்களப் போர்ப்பாடல்களும் ஒரே காலகட்டத்தைச் சேர்ந்த இலக்கியங்கள் எனினும், இலக்கிய வகை, கூறுபொருள் முதலானவற்றில் தம்முள் வேறுபடுகின்றன. எனினும் இரண்டுமே போர்த்துக்கேய ஆதிக்க எதிர்ப்புணர்வாற் தூண்டப்பட்டவை. சிங்களப் போர்ப்பாடல்களில் இந்த எதிர்ப்புணர்வு வெளிப்படையாகவும், தமிழ்க்காவியத்தில் மறைமுகமாகவும் காணப்படுகிறது .

எத்தகைய வரலாற்றுக் காலகட்டத்தில் தமிழ்க்காவியம் இரகுவம்சம் எழுந்தது என்பதைச் சுருக்கமாகவேனும் நோக்குவது அதனுடைய அரசியலைப் புரிந்து கொள்ள உதவும். 1505-ஆம் ஆண்டு இலங்கைக்குப் போர்த்துக்கேயர் வந்திருப்பினும், தம்மை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்காக அவர்கள் கவனம் முழுவதும் ஆரம்பத்தில் கோட்டை இராச்சியம் மீதே இருந்தது. தென்னிந்தியக் கரையோரப்பகுதிகளில் மதமாற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த யேசு சபையைச் சேர்ந்த Francis Xavier எனும் கத்தோலிக்க மதகுருவின் செல்வாக்கினால், தூத்துக்குடிக்கும் மன்னாருக்கும் இடையே முத்துக்குளிப்பில் ஈடுபட்டிருந்த மன்னார் வாசியர் கத்தோலிக்க மதத்தைத் தழுவினார்கள். அவ்வாறு மதம் மாறிய தனது பிரஜைகள் போர்த்துக்கேய மன்னனுக்கே விசுவாசமாக இருப்பர் என அஞ்சிய யாழ்ப்பாண மன்னன் முதலாம் சங்கிலி 600-700 கத்தோலிக்கர்களை 1544-ஆம் ஆண்டு மரணதண்டனைக்கு உட்படுத்தினான். இந்நிகழ்வு தமது மதம் சார்ந்தோரின் நலன் கருதி போர்த்துக்கேயர் மன்னாரைப் போர்த்துக்கேய முடியரசுக்குரிய பகுதியாக்குதற்கு வழி சமைத்தது. அத்துடன் முத்துக்குளித்தல் வாணிபத்தையும் போர்த்துக்கேயர் கைப்பற்றியமை யாழ்ப்பாண அரசுக்கு பெருநட்டமானது. யேசுசபையைச் சேர்ந்த குருமார் மன்னாரில் எருக்கலம்பிட்டி போன்ற இடங்களில் மூன்று தேவாலயங்கள் அமைத்தனர். 1572-ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்ட எருக்கலம்பிட்டித் தேவாலயம் கல்லாலும் சுண்ணாம்பாலும் புனரமைக்கப்பட்ட இலங்கையின் முதற் தேவாலயம் எனும் பெருமை பெற்றது. மன்னாருக்கு வெளியே கத்தோலிக்கக் குருமார் தமது மதமாற்ற நடவடிக்கைகளைச் செய்ய விடாது யாழ்ப்பாணமன்னர் பார்த்துக் கொண்டனரேனும் 1591-இல் யாழ்ப்பாண அரசு போர்த்துக்கேயரின் செல்வாக்கிற்கு உட்பட்ட பின்னர் அது சாத்தியமற்றுப் போனது. போர்த்துக்கேயர் யாழ்ப்பாண மன்னன் புவிராசபண்டாரத்தை அகற்றி அவன் மகன் எதிர்மன்னசிங்கனை (1591–1617) அரசனாக்கினார்கள். செகராசசேகரன் எனும் பட்டப்பெயருடன் ஆண்ட அவன் போர்த்துகேயருக்கும் கத்தோலிக்கக் குருமாருக்கும் மறைமுகமாகத் தொல்லை கொடுத்து வந்தான். இதுகுறித்து வரலாற்றாசிரியர் சந்திர ஆர்.டி. சில்வா கூறுவதை நோக்கலாம்:

‘எதிர்மன்னசிங்கன் ஒருபோதும் போர்த்துக்கேயர்களுக்கு எதிராகவோ அல்லது கிறிஸ்தவத்திற்கு எதிராகவோ வெளிப்படையாக எதிர்ப்புத் தெரிவிக்கத் துணியவில்லை. அவன் ஒழுங்காகக் கப்பம் செலுத்தினான். யாழ்ப்பாணத்துக்கு அண்மித்ததான தீவுகளில் பல தேவாலயங்களைக் கட்ட அனுமதிக்குமாறு அவன் நிர்ப்பந்திக்கப்பட்டான். இத்தேவாலயங்கள், அவற்றைச் சூழவுள்ள மதம் மாற்றப்பட்ட தமிழர்கள் கூடும் பாதுகாப்புக் கோட்டையாகவும் விளங்கின. ஊர்காவற்துறையில் தேவாலயம் கட்ட அனுமதி வழங்கப்பட்டதனால் அந்தத் தீவின் அரசியல் கட்டுப்பாட்டை அரசன் இழக்க நேர்ந்தது. அதேபோல், நெடுந்தீவின் வருவாயைத் தேவாலயத்திற்காக அவன் ஒதுக்கியமையும் இதே விளைவையே ஏற்படுத்தியது. இவை யாழ்ப்பாணம் இந்து அரச சமூகத்தினரிடையே போர்த்துக்கேயர்பால் பகையுணர்ச்சியைத் தூண்டிற்று.’

இந்த எதிர்மன்ன சிங்கன் காலத்திலேயே அரசகேசரி வாழ்ந் தார் என்று பேராசிரியர் வேலுப்பிள்ளை கருதுகிறார். எனவே, 1619-ல் யாழ்ப்பாண அரசினைப் போர்த்துக்கேயர் தம்வசப்ப டுத்தியமைக்கு முன்னதாக, எதிர்மன்னசிங்கன் எனும் செகரா சசேகரன் ஆணைப்படி அரசகேசரி தமிழில் இரகுவம்சத்தை ஆக்கினர் என்று கூறலாம்.

இக்காவியத்தில், யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேய ஆதிக் கமோ அல்லது புதிய மேலைத் தேய மதம் பற்றியோ நேரடி யாகக் குறிப்புகள் இல்லையாயினும், மாறிவரும் சமூக-அரசி யல் சூழலுக்குப் பதிலளிக்கும் விதமாக இது இயற்றப்பட்டது என்று கொள்வதிற் தவறில்லை. போர்த்துக்கேயரை நேருக்கு நேர் எதிர்கொள்வதற்குப் பதிலாக, தமிழ்-வடமொழிக் கூட்டி ணைப்பின் விளைபொருளான இக்காவியம் ஆரியச்சக்கர வர்த்திகளின் முன்னோர்களான சூரியவம்ச அரசர்கள் பற்றிய வரலாறுகள் மூலமாக யாழ்ப்பாண அரசின் சட்டபூர்வத்தன் மையை (legitimacy) வலுப்படுத்துவதிலும், சுதேச சமயப் பண்பாடுகளை மீளுருவாக்கம் செய்வதிலும், பேணுவதிலும் கவனம் செலுத்துகிறது.

வைதிகமரபிலான அரசாட்சியினையும், பண்பாட்டையும் அர சகேசரியின் இரகுவம்சம் எவ்வாறு வெளிப்படுத்துகிறது என் பதை மிகச் சுருக்கமாக நோக்கலாம். காளிதாசர் வெறுமனே ஒரு சுலோகத்தில் பார்வதிபரமேஸ்வரர்களுக்கு வணக்கம் செலுத்தித் தன் காவியத்தினைப் பாடத் தொடங்குகிறார். ஆனால் தமிழ் இரகுவம்சத்தில் சிவமைந்தனான விநாயக வணக்கத்துடன் தொடங்கும் பாயிரத்தில் தொடர்ச்சியாக மூன்று பாடல்கள் சைவத்தின் முழுமுதற்பொருளைத் தத் துவ நோக்கில் துதிப்பனவாக அமைந்துள்ளன. வடமொழி இரகுவம்சம் 19 சர்க்கங்களையும் 1564 சுலோகங்களையும் கொண்டிருக்க, தமிழ் இரகுவம்சம் பாயிரம் உட்பட 27 படலங் களையும் 2444 செய்யுட்களையும் கொண்டது. வடமொழியில் 19 சர்க்கங்கள் மட்டுமிருக்க, தமிழில் எவ்வாறு 27 படலங்கள் வந்தன என்ற வினா எழலாம். பாயிரம் என்ற பகுதி வடமொழி இரகுவம்சத்தில் முதலாம் சர்க்கத்தில் உள்ளடக்கப்பட்டுள் ளது. அத்துடன் வடமொழி இரகுவம்சத்தில் காணப்படாத ஆறு, நாடு, நகர வர்ணனைகளைத் தமிழ்க் காவிய மரபிற் கேற்ப அரசகேசரி தனது நூலில் புகுத்தியுள்ளார். இதைவிட இரகுவம்ச சர்க்கங்கள் சிலவற்றைப் பிரித்துத் தனிப்படலங்க ளும் ஆக்கியுள்ளார். எடுத்துக்காட்டாக, வடமொழி இரகுவம் சத்தில் குழந்தைப் பேற்றை நாடி மன்னன் திலீபன் வசிட்ட முனிவரின் ஆசிரமத்திற்குச் செல்வது, முனி சொற்படி காம தேனு எனும் பசுவைப் பூசித்தல் தொடர்பான விடயங்களைப் பேசும் முதலிரு சர்க்கங்களையும் அரசகேசரி அரசியற்பட லம், குறைகூறுபடலம், தேனுவந்தனப் படலம் என மூன்று பட லங்கள் ஆக்கியுள்ளார். அரசியல் படலத்தில் திலீபமன் னனை இலட்சிய மன்னருள் ஒருவராகச் சித்திரித்துள்ளார். யாழ்ப்பாணத்து ஞானப்பிரகாச சுவாமிகள் போர்த்துக்கேய ஆட்சியாளருக்கு உணவுக்காகப் பசு கொடுக்கவேண்டும் என்ற ஆணையை நிறைவேற்றச் சம்மதமின்றி இந்தியா சென் றார் என்று வழங்கிவரும் கதையுடன் தேனுவந்தனப்படலம் என்ற தலைப்பைத் தொடர்புபடுத்திப் பார்க்கலாம். பசுவைத் தெய்வமாக உயர்த்தும் பாங்கினை இப்படலத்திற் காண்கி றோம். திலீபமன்னன் எவ்வாறு பசுவை வணங்கினான் என்ப தைக் கூறும் 20-ம் பாடல் வருமாறு:

***உத்தமமறைச் சுருபம் ஒத்த சுரையைத் தான்***
***சித்த மகிழ்வில் திரிவலம் செய்து அதனின் சீர்***
***மத்தகமிசைப் பணைமருப்பின் நடுவட்டே***
***மத்தமலர் இட்டுற அருச்சனை புரிந்தான்.***

வேதத்தின் வடிவம் போன்று விளங்கும் பசுவை மனமகிழ்வு டன் மும்முறை வலம் செய்து அதனின் நெற்றியிலே கொம்புக ளின் நடுவிலே வாசனை மலரிட்டு வழிபட்டான் என்பது இப்பா டலின் பொருள். போர்த்துகேயர் தமது அதிகாரத்தை யாழ்ப் பாணத்தில் நிலைநாட்ட முயன்ற காலத்தில் எழுந்தமையால், அரசகேசரி தேனுவந்தனப்படலத்தினைத் தனிப்படலமாக்கி அளித்துள்ளார் என்றும் கருதலாம்.

சூரிய குலத்தைச் சேர்ந்த இராமரைத் தங்கள் முன்னோனா கக் கருதிக் கொண்ட ஆரியச்சக்கரவர்த்திகள் இராமராஜ்யம் என்பதை ஓர் இலட்சிய ஆட்சி முறையாகக் கருதினர். இரா மன் குடிகளின் அவச்சொல் பொறுக்காத மன்னனாகவும், நால்வகை வர்ண அமைப்பினை மீறிய சம்புகனை வதைத்த வனாகவும் தமிழ் இரகுவம்சத்திலும் காட்டப்படுகிறான். பார்ப் பான் ஒருவனின் பாலகன் இறந்தமைக்குத் தவம் செய்வதற்கு உரிமையில்லாதவனும், பிராமணர், சத்திரியர், வைசியர் எனும் முதன்மூன்று வர்ணத்தோருக்கு ஏவல் பூண்டவனும், சூத்திர வருணத்தைச் சேர்ந்தவனுமான சம்புகன் தவமியற்றி யமையே காரணம் என்று இராமன் அவனைக் கொன்று வர்ண தர்மத்தை நிலைநாட்டுகிறான். இக்கதையை அரசகேசரி தனது நூலிற் கூறியுள்ளமை, தொழில்முறையிலான சாதிப் பிரிவுகள் நிலவிய யாழ்ப்பாண நிலப்பரப்பில் வைதிக வர்ண அமைப்பைத் திணிப்பதற்கான முயற்சி என்றும் கருதலாம். இருநூல்களின் விடயப்பரப்பினை நோக்கும்போது, வட மொழி இரகுவம்சத்தைப் பின்பற்றியே அரசகேசரி தனது நூலை அமைத்துள்ளார் என்பது தெளிவாகிறது.

நிறைவாக, காளிதாசரின் இரகுவம்சம் அதன் இலக்கியச் சிறப்பிற்காகப் பாராட்டப்படினும், அதன் அரசியல் பரிமா ணங்களைப் புறக்கணிக்க முடியாது. இலக்கியம்-பழமையா னதோ, புதியதோ-அது தோன்றிய சமூக, பண்பாட்டு, அரசி யல் சூழல்களால் ஆழமாகப் பாதிக்கப்படுகிறது. அவ்வகை யில் காளிதாசரின் இந்தக் காவியம், அதன் கவித்துவச் சிறப் புகளைத் தாண்டி, வைதிக மரபினை அடிப்படையாகக் கொண்ட அரசாட்சியினை வலியுறுத்தும் ஓர் அரசியல் பிரதி யாகச் செயற்படுகிறது. தமிழ்ச் சூழலில், போர்த்துக்கேய காலனிய விரிவாக்கத்தின் போது, வடமொழி இரகுவம்சத் தைத் தழுவி அரசகேசரியின் இரகுவம்சம் எழுந்தது. யாழ்ப் பாண அரசுக்குட்பட்ட பகுதிகளில் காலனித்துவ மற்றும் மத அழுத்தங்களுக்கு எதிரான கருத்தியலை இது முன்வைக்கி றது. போர்த்துக்கேயர் ஆதிக்கத்திற்கு எதிரான சிங்களப் போர்ப்பாடல்களைப் போலன்றி, அரசகேசரியின் இரகுவம்சம் தொன்மக்கதையாடல் வழியாக உள்ளூர் அதிகாரத்தை மறை முகமாக வலியுறுத்துகிறது. இதனால் இரகுவம்சம் வெறும் இலக்கிய படைப்பு மட்டுமன்று. இது ஒரு பன்முகத்தன்மை கொண்ட அரசியல் பிரதி என்றே கருத வேண்டியுள்ளது.



maithilithayanithy@thaiveedu.com




இராமநாதபுரம் (Ramanathapuram), என்பது தமிழ்நாடு மாநிலத்தின் கடைக்கோடியில் அமைந்த கடலோடு அண்டிய மாவட்டம். இது இராம்நாடு என்றும், வைகை ஆறு கடலில் சேரும் முகத்துவாரம் என்பதால் முகவை என்றும் அழைக்கப் பட்டு வந்த பண்டைப் பெருநிலம்.

இலங்கையிலிருந்து சீதையைச் சிறைமீட்டுத் திரும்பி வரும் வழியில் இராமர் சிவனை பிரதிஷ்டை செய்து வழிபட்ட இட மென்றும், இதனையண்டிய இடங்கள் இராமாயணத்தோடும், சிவனோடும் சம்பந்தப்பட்டவையென்றும் வரலாற்றுக் குறிப் புகள் உண்டு. சூழவுள்ள தீவுகளான சிங்கிலி தீவு, குருசடை தீவு, முயல்தீவு, மனோலிதீவு, பூமரிச்சான் தீவு, நல்லதண்ணி தீவு உள்ளிட்ட இருபதிற்கு மேற்பட்ட தீவுகளுக்கும் ஒவ் வொரு தனித்த வரலாறு உண்டு. இராமாயணகாலத்தில் இவையனைத்தும் ஒன்றித்தும், பின் ஓயாத கடற்கோள்களால் உருவான தீவுகளாய் இத்தீவுகள் தொலைந்து போயின என்ப வர்கள் உண்டு.

சீதை மீட்புப் போரில் போராடிய தங்களின் மகன்களை இலங் கைக்களம் தின்று தீர்த்து விட்டதா? அல்லது வெற்றிக் களிப் பில் அவர்களும், இராமருடன் உயிருடன் மீண்டார்களா? அவர்கள் மார்பில் விழுப்புண் அடைந்து மரித்தார்களா? என் பதையெல்லாம் கேட்டறிய மக்கள் முண்டியடித்து முற்றுகை யிட்டு நின்ற மண் அது.

'மார்பிலன்றி முதுகில் வேல்குத்தி இறந்தவரெனில், அந்தக் கோழைக்குப் பாலூட்டிய மார்பா இது?' எனத் தன் மார் பையே அறுத்தெறியத் தயாரான 'வீரத் தாய்'களால் நிறைந் தது அன்றைய முகவை.

***'மண்டமர்க் குடைந்தன னாயின் உண்டஎன்***
***முலையறுத் திடுவென் யான்எனச் சினைஇக்***
***கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்***
***செங்களந் துழவுவோள் சிதைந்து வேறாகிய***
***படுமகன் கிடக்கை காணூஉ***
***ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே'***

என்று புறநானூறு பாடிய போர்க்களம் புகுந்து வீரத் தளும்பு தேடி மார்பரிந்து எறியத் துணிந்த வீர அன்னைகளின் பூமி யது. சிவன் கழுத்தென நீண்ட பாம்பன் பாலத்தால் இணைக் கப்பட்ட இராமேஸ்வரத்தின் இறுதி எல்லை தனுஸ்கோடி. அங்கிருந்து தலைமன்னார் வரை நீண்டது ஆதாம் பாலம் எனப்படும் மனிதரும், அணில்களும், குரங்குகளும் போட்ட இராமர் சேது பாலம். அது இன்று கடலுள் அழிழ்ந்து கிடக்கிறது.

இராமரின் மனைவி சீதையைச் சிறைமீட்கச் சென்று போரில் உயிரிழந்த பல லட்சக்கணக்கானோர் நினைவாக எந்த நினைவுத் தூபிகளும் அங்கு இன்றில்லை. மார்பரிந்தெறிந்த தாய்களின் வீர உருவங்களும், காணாமலாக்கப்பட்டு கொன் றழிக்கப்பட்டோர் வரலாறும் இங்கில்லை. அறுத்த மார்போ டும், வழிந்தோடியகண்ணீரோடும் கண்ணகி இந்த வழியாகத் தான் இலங்கைக்கு ஓடினாள் என்கின்ற எந்தத் தரவுகளும் எம்மிடமில்லை. பாண்டியன் பேரவையில் நீதி கேட்ட கண்ண கியின் மார்பு அறுக்கப்பட்டதா, அல்லது தானே திருகியெறிந் தாளா என்கின்ற கேள்விகளுக்கு எங்கும் விடையில்லை.

இராமன் என்னும் ஆண்மை தன்னை நிலை நிறுத்த இரா மேஸ்வரத்தில் ஸ்தாபித்த இரண்டு இலிங்கங்களும் இற்றை வரை சரித்திரப் பிரசித்தமானவை. இராமேஸ்வரத்தில் எஞ்சி நிற்கும் புகழ் இராமன் புகழ் மட்டுமே. அவனிற்காய் இறந்தவர் கள் புகழல்ல.

இத்தகு இராமேஸ்வரம் 10-ம் நூற்றாண்டுகளில் சோழ மன் னர்கள் ஆண்ட மண். பின் அது யாழ்ப்பாண இராட்சியக் கட் டுப் பாட்டினுள் வந்தது.

யாழ்ப்பாண அரசர் சேதுகாவலன் என அழைக்கப்பட்டார். அவர்களது ஆட்சியில் அக்கோவிலை வளப்படுத்தினர். இலங்கையரசன் பராக்கிரமபாகு குடிசையாயிருந்த அக்கோ விலை கோபுரமாக்கப் பெரிதும் படாதபாடு பட்டவர் என வர லாறுண்டு. அவர்களது நாணயங்களிலும், இலச்சினைகளி லும் சேது என்ற அடையாளம் பயன்படுத்தப்பட்டுவந்தது.

பதினான்காம் நூற்றாண்டில் தில்லி சுல்தானின் படைத்தள பதி மாலிக் கபூர் இராமேஸ்வரத்தைக் கைப்பற்றி தம் வர லாறு எழுதும் அலியா அல்-தின் கல்ட்ஜி மசூதியை அங்கு நிறுவினார். அதன் பின்னால் பாண்டியர் உட்பட மாறிமாறிப் பலரது ஆட்சிகளும் இப்பூமியைப் பந்தாடியது.

இந்நிலம் இன்று பல சிற்றூர்களாய் தீவுகளாய்ப் பிரிபட்டுக் கிடக்கிறது. அதிலொன்றுதான் குருசடை. குருசடை என்பது சிவனின் சடாமுடி. கடலுக்கு அடியில் பாதி அதிசயமும், மீந் திருக்கிற மீதி அதிசயமுமாய் இருக்கிற ஞானபீடமது.

முன்னர் ஒரு காலம் இந்தக் குருசடை, பாண்டியப் பேரரசின் ஒரு துறைமுக நகரமாக இருந்தது. மன்னராட்சி நடைபெற்ற இப்பகுதிகள் மங்காத சரித்திரம் படைத்தவை. காலப்போக்கில் அப்பெயர்களும், ஊர்களும் கடற்கோள்களால் சிறுத்து மருவின. பல்வேறு மன்னர்கள் ஆண்ட மக்கள் அங்கு வாழ்ந்ததற்குச் சான்றாக மன்னர்களது பெருங்கோட்டை சிதிலமடைந்து, மண்ணில் புதைந்துள்ளது. வல்ல கவிஞர்கள் வாழ்ந்த ஊரது. வரலாற்றுச் சாட்சிகளாகப் புதையுண்ட பகுதிகளில் இருந்து பல ஆதிக் குடிகளின் புதை பொருள் தடயங்கள் காணப்பட்டுள்ளன. பல இன்றும் தோண்டப்படாத மண் மேடுகளாகக் காட்சியளிக்கின்றன. அவற்றுள் மன்னரின் வாள், கேடயம், பொற்காசுகள், சிம்மாசனம், பொற்குவியல், ஆளுயர ஆட்டுக்கல், அம்மி என மண்ணுள் புதைந்தவை இன்று தோண்டத் தோண்ட தமிழர் தொன்மையைத் தந்த வண்ணம் வெளிவந்து கொண்டு தான் இருக்கின்றன.

பவளப்பாறைகள், வண்ண வண்ண மீன்கள், அறிவுநிறை டொல்பின்கள், ஆமைகள், கடல் பசுக்கள், கடல் குதிரைகள் கடற்பாசிகள், சதுப்புநிலங்கள், கடல் புற்கள், விளிம்புப் பாறைகள், பேட்ச் ரீஃப்ஸ், ஷிங்கிள்ஸ், என உலகின் மறைக்கப்பட்ட இரத்தினமாகக் குருசடை இன்றும் இருக்கிறது. அதனால் தான் 18-ம் நூற்றாண்டில் கப்பலில் வந்திறங்கிய அன்னியர்கள் அந்த நகரத்தை உலகின் அதிசயிக்கத்தக்க கடற்தேசியப்பூங்காவெனப் புகழ்ந்தார்கள். கடல்வளமறிகிற மிகப் பெரு நூலகத்தை, ஆராட்சிக் கூடத்தை வெள்ளையர்கள் இங்கு நிறுவினார்கள். அதன் ஆதார எச்ச சொச்சங்கள் இன்றைக்கும் உள்ளன.

விவசாயம், மந்தை வளர்ப்பு என அந்த ஊர், வெள்ளையர் காலத்திற்கு முன் சிறப்பாகத்தான் இருந்தது. இந்திய மண்ணைச் சூறையாட வந்த கிழக்கிந்தியக் கம்பனி எப்போது இந்நிலத்தில் கால் வைத்ததோ, அதன் பின் அத்தனையும் தலைகீழாகியது. அதற்குப் பின் மகாராணியின் முடியாட்சி இந்தியா முழுவதையும் ஆளத் தலைப்பட்டவேளை இந்தியா தன் ஒளியை இழந்தது. இதற்கு மேலாக 1876-ம் ஆண்டு மிகப்பெரிய பஞ்சம் ஏற்பட்டது. வேண்டுமென்றே மக்களை அடிமையாக்க வெள்ளையர்கள் ஏற்படுத்திய பஞ்சம் அது வென்போர் இன்றளவும் உள்ளனர். பருவமழை பொய்த்து, வயல்கள் காய்ந்துபோய், மந்தைகள் மேய்வதற்கான மேய்ச்சல் பசுந்தரைகள் வெடித்துப் பாளமாய்பிளந்திருந்தது. எங்கும் படர்ந்த நாகதாளிகள் வெண் நோயால் பட்டழிந்து காடாகியது. மாடுகள் பசியால் வயிறுமெலிந்து மரித்தன. ஆட்டுப் பட்டிகள் அழிந்தன. எங்கும் வரட்சி, மக்கள் முகங்கள் சுருங்கிச் சிறுத்தன. பட்டினி அனைவரையும் ஆட்டிப் படைத்தது. உயிரினங்கள் யாவும் பசியால் துடித்தன. பறக்கும் பறவைகள் கடல்தாண்டி அடுத்த கரையிலுள்ள நெடுந்தீவிற்குச் சென்றன. நெடுந்தீவு என்பது இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் இராமேஸ்வரத்தை அண்டிய இலங்கையின் தீவு. இந்தத் தீவில் இருந்து இராமேஸ்வர ஆலயத்திற்குப் பாலும் தயிரும் பூக்களும் பூசைக்காக வந்து சேர்ந்ததாக இராமேஸ்வர மக்கள் இன்றும் பேசிக்கொள்கிறார்கள்.

இத்தீவு கால்நடை வளர்ப்பிலும், பால் உற்பத்தியிலும், கடல் பெரு வளத்திலும், விவசாயத்திலும் சிறந்து விளங்கியுள்ளதை தொல்லியல் வரலாற்றுச் செப்பேடுகள் சொல்கின்றன.

இந்தியக் கடலோடிகளும் அன்னிய வணிக மாலுமிகளும் கண்டடைந்து மகிழ்ந்த மாபெரும் சொர்க்கம் இது என்று வரலாற்றுக் குறிப்புகள் இன்றும் உண்டு. இராமாயணத்தில் அனுமன் மூலிகைமலையைச் சுமந்து சென்ற போது தவறி வீழ்ந்த மூலிகை வனம் இது என்பார்கள் இராமாயண நம்பிக்கையாளர்கள். அதன் சாட்சியாய் மூலிகைமரங்களும், அனுமனின் காலடியும் அந்த மண்ணில் இன்றும் உண்டு. மகாபாரத வீமனடியும், வில்லூன்றியும் கூட அங்குண்டு.

இங்கே நெல் சிறுதானியங்கள், கோதுமை வயல்கள், சணல், பெருக்கு, பாலை, தென்னை, பனை போன்றபெரு வளமும் மூலிகைச் செடிகளும் கடல் வளமும், பாலும் மோரும் பாய்ந்தோடிய வரலாறுகள் உண்டு. இந்த நெடுந்தீவு எனும் நெய்தல் தீவிற்கு அண்மித்திருக்கிறது மணிமேகலா தெய்வம் குடிகொண்டுள்ள மணிபல்லவம் எனும் நயினை தீவு.

*‘தீவதிலகை தன்னடி வணங்கி*
*மாபெரும் பாத்திரம் மலர்க்கையின் ஏந்திக்*
*கோமகன் பீடிகை தொழுது வலங்கொண்டு*
*வானூடு எழுந்த மணிமேகலை வந்திறங்கி நின்ற*
*அழகாம் தீவென கூலவணிகன்*
*சீத்தலைச் சாத்தன் பாடிய*
*மணிமேகலையின் தீவு அது.’*

*‘தாயில் தூவாக் குழவியர் கேட்டோர்*
*ஆவந்து அணைத்தாங்கு அதன் துயர் தீர*
*நாவால் நக்கி நன்பால் ஊட்டிப்*
*போகாது எழுநாட் புறங்காத்து ஓம்ப’*

என, தாயற்றுப் பசியினால் அழுத குழந்தைகட்கு பசுக்கள் பாலூட்டிப் பணிந்து நின்ற தீவுகள் அவை என இப்பாடல் வரிகள் எடுத்துக் காட்டுகின்றன. இராமாயணத்தில் இராமரணைப்பாலம் இலங்கையை இணைத்ததாக சொல்லப்படாலும் நாம் அறிய இராமேஸ்வர மக்கள் இலங்கையை அறிந்திருந்தது நெடுந்தீவு, நயினைதீவு எனும் இரு தீவுகள் ஊடாக மட்டுந்தான். தமிழகம் என்றென்றுமில்லாத பஞ்சத்தை உணரத் தொடங்கிய வருடத்தில், மனிதர்களும், கால்நடைகளும் சுட்டெரிக்கும் வெயிலினுள் துவண்டு போனார்கள்... எங்கும் வெண்மைப் புழுதி... பூமி புழுதி மண்டலமாயிற்று.

இராமேஸ்வரம் மட்டுமல்ல சுற்றியிருந்த அனைத்து இடங்களிலும் இதே நிலைதான் யாரிட்ட சாபமோ! சுடலையாயிற்று தமிழகம்... ஓடைகள் வறண்டு கிணறுகள் வற்றிப் போயின. கண்டதையும் தின்று கால் நடைகள் காலராவால் நோயினால் தவித்தன. மனிதரும் கொடுநோய் கண்டு மருந்தின்றிச் செத்துத் தொலைந்தார்கள். செத்துப்போன ஆடுகளாலும் மாடுகளாலும் கிராமம் நாறியது. பிணங்கண்ட இடமெல்லாம் எலிகள் பெருகின. மரங்களில் இலையுமில்லை. அதில் குருவிகளுமில்லை.

விவசாயிகள் தம் கண்ணெனப் போற்றிய எருதுகளை விற்றார்கள். பாடசாலைகள் மூடப்பட்டன. வயிற்றுப்பசிக்கு ஏதும் இருந்தால் தானே படிப்பு எல்லோரும் அங்கிருந்து வேறிடம் போகத் துடித்தார்கள்.

*(தொடரும் ...)*



sithivinayagam@thaiveedu.com




## சென்ற இதழ்களில்...

பொ.ஆ.முன், 6-ஆம் நூற்றாண்டளவில் வட இந்தியாவில், உயிரினங்களைப் பலியிடுதல், வைதீகச் சடங்குகள், சாதீயம் முதலிய வைதீகச் சடங்குகளுக்கும் கொள்கைகளுக்கும் எதிராக அவைதீகர்கள் என்னும் மக்கள் பிரிவுகளும் கொள்கைகளும் உருவாயின. இப்பிரிவுகள், தத்துவ சிந்தனை மரபாகவும், மதங்களாகவும் உருமாறின. இந்த வகையில் தோன்றிய மதங்கள் :

- உலகாயதம்
- ஆசீவகம்
- பௌத்தம்
- ஜைனம்

ஆகும்.

பொ.ஆ.மு. 3-ம் நூற்றாண்டளவில் ஆசீவகம், பௌத்தம், சமணம் முதலிய சமயங்கள் வடக்கே இருந்து தெற்கே பரவத் தொடங்கின. இது, அசோகர் காலத்தில் பௌத்தம் தென்னகத்திற்கும் ஈழம் முதலிய நாடுகளுக்கும் எடுத்துச் செல்லப் பட்டதாக கூறும் அசோகச் சக்கரவர்த்தியின் இரண்டாம் பாறைக் கல்வெட்டுத் தகவலுடன் ஒத்துப்போகின்றது.

தொல்காப்பியம், (பொ.ஆ.முன்: 711) திணைக் குழு நிலையிலிருந்து அரசுகள் படிப்படியாக வளர்ந்த வரலாற்றின் தொடக்கநிலையைத் தெளிவாகக் காட்டுகின்றது.

நாகர் என்னும் இனத்தவர் தென் இந்தியத் தீபகற்பகத்தில் நெடுங்காலமாக அதிகாரம் செலுத்திய குலத்தவராக அறியப்படுகிறார்கள். விஜயன் இலங்கையை ஆள்வதற்கு முன்னதாகவே முடிநாகர் என்னும் தமிழ் இனத்தவர் இலங்கையை ஆண்டதாக ஆய்வாளர் கருதுவர்.

சரித்திர காலத்திற்கு முற்பட்ட, பெரும்பாலும் தமிழர்களாகவே இருந்திருக்கக் கூடிய காலத்தில், தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் பரந்து வாழ்ந்த இனத்தவரின் ஒரு கிளையினரே நாகர் என்று சேர். பொன். அருணாசலம் அவர்கள், 'Sketches of Ceylon History' என்னும் தமது நூலில் கூறுகிறார்.

பன்மொழிப் புலவர் திரு. கா. அப்பாத்துரை அவர்கள், 'நாகர்கள் தமிழராகவே தமிழகத்தில் வாழ்ந்தனர். அவர்கள் எங்கும் வேறு இன மொழிக்கு உரியரென்ற பேச்சும் ஏற்படவில்லை. தனி இனமாகவே வாழ்ந்தனர். ஆகவே, அவர்கள் கடல் கொண்ட தமிழகத்திலோ, தமிழகம் சூழ்ந்த நிலத்திலோ இருந்த தமிழினப் பிரிவினர் என்றும், கடல்கோளின் பயனாகவோ, வேறு காரணங்களாலோ எங்கும் பரந்தனர் என்றும் கருத இடமுண்டு.' என்று குறிப்பிட்டுள்ளார்.

புராதன நாகரின் வழிபாட்டு அம்சங்கள் பௌத்தம், சமணம், சைவம், வைணவம் ஆகிய சமயங்களில் கலப்படைந்து விட்டன. இது இந்திய, ஈழப் பண்பாட்டு வரலாற்றில் குறிப்பிடத் தக்க அம்சமாகும்.

## தொடர்கிறது...

ஈழத் தமிழரின் ஆதிக் குடியேற்றம் பற்றிய ஆய்வுக்கு மூலாதாரங்களின் பற்றாக்குறையை எதிர் நோக்கவேண்டியுள்ளது.

பாளி, சிங்கள இலக்கியங்கள் பெருமளவுக்கு அரசியலையும் ஓரளவுக்குச் சமயம் தொடர்பான செய்திகளையும் வரலாற்றுத் தொடர்புடன் கூறியுள்ளபோதிலும் அவை எமது ஆய்வுக்கு மிகவும் சொற்பமான தரவுகளையே தருகின்றன.

ஆனால், ஈழத்தமிழர் வரலாற்றைப் பொறுத்தவரை, தமிழ் இலக்கியங்களை விடப் பாளி மொழியில் எழுதப்பட்ட பண்டைய வரலாற்று நூல்களாகக் கொள்ளப்படும் தீபவம்சம், மகாவம்சம் ஆகியவை தமிழர் பற்றிய தகவல்களை ஓரளவுக்குத் தாங்கி வருகின்றன என்றே கூறவேண்டும்.

தமிழர் நடவடிக்கைகள், அரசியல் அல்லது சமயம் சார்ந்த தாக்கத்தைக் கொடுக்கும்போது மட்டுமே பேசப்படுகிறது.

## மகாவம்சம்:

மகாவம்சம், ஒரு 'வரலாற்று நூல்' என்று சிங்கள அரசியல்வாதிகளாலும் வரலாற்று ஆசிரியர்களாலும் மீண்டும் மீண்டும்

கூறப்பட்டு, இன்று உலகமே அதனை உண்மை என்று நம்புமளவுக்கு வளர்ந்திருக்கிறது. வரலாறு, பன்னெடும் காலமாகத் திரித்துப் பேசப்பட்டும் எழுதப்பட்டும் வந்திருக்கிறது. மதச் சார்புள்ள வரலாறு என்னும் பொழுது நம்பமுடியாத பல செய்திகள், அறிவுக்குப் புலப்படாத, பொருந்தாத கதைகள் இணைக்கப்படுவது இயல்பாகிறது. மிக அண்மைக்காலம் வரை அதன் உண்மைத்தன்மையை ஆராய்ச்சி நோக்கில் பார்ப்பதற்கும் பேசுவதற்கும் அரசியல் காரணங்கள் தடையாக இருந்து வந்திருக்கின்றன.

மகாவம்சத்தில், அறிவியலுக்குப் பொருந்தாதவற்றை விலக்கி, அது கூறும் இன, மத, பண்பாட்டு இயல்புகளின் அடிப்படையில் ஆராய முற்படும் நிலை இன்று உருவாகியிருக்கிறது.

இலங்கையில் பௌத்தம் பொ.ஆ.முன் 3-ம் நூற்றாண்டளவில், அசோக மன்னனால் பௌத்தம் உலகு எங்கணும் எடுத்துச் செல்லப்பட்டபோது அது இலங்கைக்கும் எடுத்து வரப்பட்டது என்பதற்கு அசோகச் சக்கரவர்த்தியின் கிர்னார் கல்வெட்டே மிகப் பெரிய சான்றாகும்.

பொ.ஆ.பின் 6-ம் நூற்றாண்டளவில் மகாநாம தேரர் என்ற பிக்குவால் பாளி மொழியில் தொகுக்கப்பட்ட மகாவம்சத்தை, கீழை நாடுகளின் மொழி அறிஞரான திரு. வில்ஹெலம் லுட்விக் கெய்கர் (Wilhelm Ludwig Geiger) (1856-1943) என்ற ஜெர்மானியர் 1908-ம் ஆண்டில் ஜெர்மானிய மொழியில் 'மொழி பெயர்ப்பு' செய்தார். 1912-ம் ஆண்டில் மாபெல் ஹெய்னஸ் போட் என்பவரின் உதவியுடன் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். இது, இலங்கை அரசினால் அதிகார பூர்வமாக வெளியிடப்பட்டது. பழைமையான பண்பாடுகளை ஆய்வு நோக்கில் கற்ற இவர் பாளி, சிங்களம், மாலைதீவு மொழி முதலிய மொழிகளிலும் சிறப்பாற்றல் கொண்டவர். இம் மொழிபெயர்ப்பு கெய்கர் மகாவம்சம் என்றும் அழைக்கப்படுகிறது.

மகாவம்சம் பொ.ஆ.பின் 3-ம் நூற்றாண்டளவில், பௌத்தம் இலங்கையில் நிலைபெற்றதன் பின், தேவநம்பியதீசனால் கட்டப்பட்ட மகாவிகாரையில், இந்தியாவிலிருந்து வந்திருந்த பௌத்த பிக்குகள், ஏனைய விகாரைகளில் இருந்த பௌத்த பிக்குகள் அனைவரும் இணைந்து,

- பௌத்தம் இந்தியாவில் தோன்றிப் பரவிய வரலாறு
- பௌத்தம் இலங்கைக்கு அறிமுகமானதும் நிலைபெற்றதுமான வரலாறு
- புத்தர், பௌத்தம், பௌத்தம் தோன்றி வளர்ந்த வரலாறு
- பௌத்தம் தோன்றி வளர்ந்த வடஇந்தியாவுடன் இலங்கையைத் தொடர்புபடுத்தி நோக்குதல்
- பௌத்தம் மக்களிடையே பரவிய அல்லது பரப்பப்பட்ட செவிவழிக் கதைகள்
- இச்செவிவழிக் கதைகள், அட்டகதா என்னும் பெயரில் வட இந்திய மொழியான பாளி மொழியில் செய்யுள் வடிவில் பாடப்பட்டமை
- அவை ஒரு காலகட்டத்தில், கால வரிசையாக ஒருங்கிணைக்கப்பட்டு 'அட்டகதா-மகாவம்ச' என்ற பெயரில் தொகுக்கப்பட்டமை
- அட்டகதா-மகாவம்ச செய்யுட்களை அடிப்படையாகக் கொண்டு பொ.ஆ.பின் 4-ம் நூற்றாண்டில் தீபவம்சமும் பொ.ஆ. பின் 6-ம் நூற்றாண்டில் மகாவம்சமும் இயற்றப்பட்டன.
- மகாவம்சத்தைப் பாளி மொழியில் தொகுத்தவர் மகாநாம தேரர்.
- மகாவம்சம், பொ.ஆ.முன் 543-ம் ஆண்டு இந்தியாவிலிருந்து விஜயன் என்னும் இளவரசன் வந்தது முதல் பொ.ஆ.பி. 361-ம் ஆண்டு மகாசேன் என்னும் மன்னன் ஆண்டது வரையிலான இலங்கை வரலாறு தொடர்பான குறிப்புக்களைக் கால வரிசையாக மகாவம்சம் விபரிக்கின்றது.



- மகாவம்சம் என்ற இந்த இலக்கியம் சிங்கள அரசியலைப் போதுமான அளவுக்குக் கூறினாலும் ஈழத் தமிழர் பற்றிய தகவல்களை, குறிப்பாக, ஈழத் தமிழரது ஆதிக் குடியேற்றம் பற்றிய எமது ஆய்வுக்கு மிகக் குறைந்த அளவிலேயே உதவுகின்றது.
- சிங்களவரின் முதலாம் மன்னனாக விஜயன் என்னும் வட இந்திய இளவரசன் ஒருவன் சித்தரிக்கப்படுகிறான். அவன் வரவு பற்றிப் பல்வேறுபட்ட கதைகள் உலவுகின்றன.

எது எப்படியாயினும் வடநாட்டு இளவரசனான விஜயனுக்கும் தென்னிந்திய இளவரசிக்கும் ஏற்பட்ட திருமண பந்தத்தில் உருவானதே சிங்கள வமிசம் என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது.

## விஜயன் பற்றிய கதைகள்
## மகாவம்சம் கூறும் கதை:

இலங்கையின் முதல் சிங்கள மன்னன் விஜயன்.

இந்தியாவிலுள்ள வங்காளம், ஒரிசா ஆகிய பகுதிகள் ஒரு காலத்தில் லாலாதேசம் என்று அழைக்கப்பட்டன. இதன் மன்

னர் சிங்கபாகு. இவர் சிங்கத்திற்கும் ஒரு இராஜகுமாரிக்கும் பிறந்தவர். இந்த உண்மை தெரிந்த சிங்கபாகு, தன் தந்தை யான சிங்கத்தைக் கண்டறிந்து தலையை வெட்டித் துண்டித் தார். சிங்கபாகு சியாசிவாலி என்னும் பெண்ணை மணந்து அவர்களுக்கு 16 தடவை இரட்டைக் குழந்தைகளாக 32 பிள் ளைகள் பிறந்தார்கள். இவர்களில் மூத்தவன் விஜயன், இவன் பட்டத்து இளவரசனாக நியமிக்கப்பட்டான். விஜயன் கொரடூர மானவன்.

விஜயனின் கொடுமைகள், மக்களால், மன்னன் கவனத்திற் குக் கொண்டுவரப்பட்டன. இதனால் மன்னன் அவனையும் அவனது நண்பர்கள் 700 பேரையும் கப்பல்களில் ஏற்றி நாடு கடத்தினான். மூன்று கப்பல்களும் இலங்கைத் தீவை அடைந் தன.

இலங்கைத் தீவில், விஜயன், குவேனி என்னும் பெண்ணிடம் அடைக்கலம் கோருகிறான். இவள் ஒரு இராட்சசப் பெண் என்று மகாவம்சம் கூறுகிறது. விஜயனும் குவேனியும் காத லித்து அவர்களுக்கு ஒரு ஆணும் ஒரு பெண்ணுமாக இரு குழந்தைகள் பிறந்தனர்.

‘குவேனி’ என்பது ‘கவினி’ என்னும் தமிழ் சொல்லின் திரிபு. கவின் என்றால் அழகு. கவினி என்றால் அழகி.

சிங்கள இனத்தின் முதலாம் மன்னனாகக் கொள்ளப்படும் விஜயன் பற்றி வேறுபட்ட பல கதைகள் உள.

இக் கதையில் குறிப்பிடப்படும் சிங்கபுர நாடு எது என்பது பற் றிக் கருத்து வேறுபாடுகள் உள. வங்காளம், அஸ்ஸம், ஒரிசா என்று இப்படி இந்தியாவின் பகுதிகள் பல ஆய்வுக்கு உட்ப டுத்தப்பட்டன. ஒரிஸ்ஸாவின் மகாநதி ஆற்றுப் பகுதிதான் சிங்கபுரம் என்று கருத்துப் பரவலாக ஏற்றுக் கொள்ளபடுகி றது. இந்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பகுதிகள் யாவும் இந் தியத் துணைக் கண்டத்தின் கிழக்குக் கரையோரப் பகுதிக ளாக இருப்பது கண்கூடு.

இலங்கைக்கும் ஒரிஸ்ஸாவுக்கும் இடையில் ஏறக்குறைய 200 கிலோ மீற்றர் தூர இடைவெளி உள்ளது. இக் கரையோரம் பண்டைக்காலம் முதல் வணிக வழியாக அறியப்படுகின்றது. இவ்வழி மூலம் விஜயனும் நண்பர்களும் இலங்கைத் தீவை அடைந்தார்கள் என்பதை வரலாற்றுச் செய்தியாக அறிய லாம்.

ஒரிஸ்ஸா மக்கள் 2500 ஆண்டுகளுக்கு முன்பே கடல்வழித் தொடர்புகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்தக் கடற் பயணத்தை நினைவு கூரும் விதமாக லொரிற்றா பங்கானா என்னும் ஒரு பண்டிகை நடைபெறுகிறது. இத்த கைய தகவல்கள், அவர்களது கடற் பயணங்களை உறுதி செய்வனவாக உள்ளன.

எனவே, இந்த வர்த்தகத் தொடர்பு காரணமாக விஜயன் இலங்கையை அறிந்திருந்தான் என்றும் தந்தையால் நாடு கடத்தப்பட்டபோது விஜயன், நண்பர்களுடன் இலங்கைக்கு வந்திருக்கலாமோ என்ற கருத்தும் உண்டு. இரு நாடுகளுக்கி டையேயுள்ள மொழி ஒற்றுமையையும் இதற்குக் காரணமாகக் கூறலாம்.

விஜயனுக்கும் குவேனிக்கும் பிறந்தவர்களே சிங்களவர் என்று அறியப்படுகிறது.

விஜயனின் நண்பர்கள் இலங்கையில் பல நகரங்களை உரு வாக்கி அவற்றிற்கு விஜயனை மன்னன் ஆகும்படி கேட்டனர். ‘இராஜ குடும்பத்தைச் சேர்ந்த ஒரு இளவரசியை நான் மணந் தால்தான் நான் சிம்மாசனம் ஏறமுடியும்’ என்று மறுத்துவிட் டான். நண்பர்கள், மதுரை மன்னன் மகளை விஜயனுக்கு மணம் பேசி முடித்தார்கள். அவ்வாறே விஜயனின் 700 நண்பர்களுக் கும் திருமணமாகியது.

இத்தகைய தென்னிந்தியத் திருமண பந்தம் கடைசிச் சிங்கள மன்னனான ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கன் வரை நீடித்தது. ஸ்ரீவிக்கி ரமராஜசிங்கன் தாயார் சுப்பம்மா, ஸ்ரீவிக்கிரமராஜசிங்கனது நான்கு மனைவியர், ஸ்ரீவெங்கட ரங்கம்மாள் தேவி, ஸ்ரீவெங்கட ரங்கம்மாள் (இருவரும் சகோதரிகள்), முத்துக் கண்ணம்மாள் தேவி, வெங்கட அம்மாள் (இவர்கள் இருவரும் சகோதரிகள்). சிங்கள மன்னர்களது திருமண உறவு தென்னிந்திய மன்னர் பரம்பரையுடன் தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது. கண்டி ஆங்கிலக் கம்பனியார் வசப்பட்டது. கண்டி ஒப்பந்தத் தில் 12 பேர் கைச்சாத்திட்டனர். அவர்களில் நால்வர் தமிழி லும், நால்வர் சிங்களத்திலும், பயந்தவர்கள் இரு மொழிகளி லும் கைச்சாத்திட்டார்கள்.

இதுவரை... மகாவம்சம் கூறும் தகவல்கள், அவற்றின் உண் மைத்தன்மை, சிங்களவர் யார் முதலிய விடயங்கள் மேலெ முந்தவாரியாகப் பார்க்கப்பட்டன. அடுத்து, மகாவம்சம் கூறும் தகவல்களின் சாரம் பார்க்கலாம்.

**மகாவம்சம்:**

- மூலச் செய்யுட்களில் சுருங்கக் கூறியவை இங்கு விரிக்கப் பட்டிருக்கிறது. (நாடோடிப் பாடல்களின் தொகுப்பான ‘அட் டகதா’ வில் கூறப்பட்டவை மேலும் விரிவாக்கம் பெறுகின் றன.)
- புத்தருடைய பிறப்புப் பற்றிப் பலவிதமான கதைகள் உல வுகின்றன. குறிப்பாக அவர் (கௌதமன்) ஒரு அரசகுமா- ரன் என்றும், அவர் துறவியாகச் செல்வார் என்று சோதிடர் கூறியதனால், தந்தை அவரை உலகத் துன்பங்களை அறி யாதவாறு வளர்த்ததாகவும், ஒருநாள் உலக நிலையா மையை அறிந்த கௌதமன் உலகை வெறுத்து உண் மையை அறியச் சென்றதாகவும் சொல்லப்படுகின்ற கதையே எல்லார் மனத்திலும் நிலைத்திருக்கிறது.

ஆனால், இதற்குமாறான கதையும் உண்டு.

*(தொடரும்...)*



selvanayaki.s@thaiveedu.com

# குருவாகி உயர்ந்த சீடன்

**- கிருங்கை சேதுபதி**

உலகியல் நடப்பிலிருந்து புனைவியல் தளத்திற்குத் தன் அனுபவங்களைக் கடத்திச் சென்று, புனைவியல் களத்திலிருந்து உலகியல்சார் அறம் புகட்டுவதில் தமிழ் இலக்கியங்கள் சளைத்தவை அல்ல. அதிலும் தொன்மங்கள் படிமங்களாகி, வாசக உள்ளங்களைக் கிளர்ந்தெழச் செய்கிறபோது ஏற்படும் உணர்வுகள் கட்புலனாகாத நுண் அதிர்வுகளை அகத்தில் எழுப்பி விடுகின்றன. அந்த நிலையில் எளிய அனுபவங்கள், அரிய ஆன்மிக அனுபவங்களாகிவிடுகின்றன. மனிதம் கலந்த புனித நிலைப்பாட்டில், மானுடம் தெய்வாம்சம் பொதிந்ததாகிவிடுகிறது.

அத்தகு சிலிர்ப்பைத் தவறாமல் ஏற்படுத்தக்கூடியவை, பக்தி இலக்கியங்கள். அதிலும் குறிப்பாக, வைணவத் தமிழ்ப் பாசுரங்கள். ஆழ்வார் அமுதத்தை மீளப் புகுத்தி, வாழ்வார்அனுபவங்களைக் கூடக் குழைத்து, பழகுதமிழில் பாடலாக்கித் தந்தவர் பாரதியார்.

அவருக்கு, திவ்ய பிரபந்தத்தில் பரிச்சயம் ஏற்படக் காரணமான கிருஷ்ணனே, பாட்டுடைத் தலைவன் கண்ணனாய்ப் பரிணமித்த இடம், கண்ணன் பாட்டில் உள்ள ‘கண்ணன் என் சீடன்.’

•

புல்லாங்குழல் ஊதி, மயிலிறகு சூடி, மாயக்கண்ணனாய் மனத்திரையில் தோன்றும் கார்முகில் வண்ணனைப் புறத்தே நிறுத்தி, தன் வாழ்வியலில் புகுந்த குவளைக் கண்ணனை - அகத்தில் நிறைத்து, பாரதி புனைந்த கண்ணன் பாட்டில், நடப்பியல் அனுபவம் எத்தனை விழுக்காடு பொதிந்திருக்கிறது என்பதை உடனிருந்து அனுபவித்த, பாரதியின் மூத்த புதல்வி - தங்கம்மா பாரதி எழுதுகிறார்.

‘பாரதியாருக்கு எத்தனையோ நண்பர்கள் உண்டு. அவர்களில் ஒரு சாரார் அவருக்கு இனியதையே செய்வார்கள்; மற்றொரு சாரார், பாரதியாருக்குக் கோபமூட்டி, அவர் திருக்கரத்தால் அடிபடுவதை பாக்கியமாகக் கருதுவார்கள். இரண்டாவது கோஷ்டியில் சிறந்துநின்றவர் குவளை.

இந்தத் தொடக்கமே அமர்க்களப்படுகிறது. சுற்றி வளைக்காமல், நேர்படச் சொல்லிவிடுகிறார், தங்கம்மா பாரதி.

‘பாரதி பாட்டுக்கள் எல்லாம் அவருக்குத் தலைகீழாய்ப் பாட வரும். அவரது தொந்தரவு பாரதியாரை ஓர் அருமையான இலக்கியத்தை ஆக்கும்படி செய்தது. ‘கண்ணன் என் சீடன்’ என்ற பாட்டு, குவளைக் கிருஷ்ணனை மனத்தில் வைத்துப் பாரதியார் பாடியது.

•

எப்போதுமே, கதையைவிட, கதைக்குக் காரணமான கதைதான் நம் மனத்தைப் பெரிதும் ஈர்க்கும் அல்லவா? தான் அறிந்த, அனுபவித்த உண்மையை, ஒரு கதைபோல் விரிக்கிறார் அவர்.

•

‘தந்தை ஒரு நாள் மிகவும் ஆழ்ந்து யோசனை செய்துகொண்டு இருந்தார். தந்தையார் வேத ஆராய்ச்சி செய்து வந்த சமயம் அது. ஸ்ரீ குவளைக் கிருஷ்ணன் ரொம்பத் தொந்தரவு செய்தார். கையில் திருவாய்மொழி புஸ்தகத்தை வைத்துக்கொண்டு, உரத்த குரலில் பாடிக்கொண்டும், குதித்துக்கொண்டும், அநாவசியக் கேள்விகள் கேட்டும் தொல்லைப் படுத்தினார். தந்தை, முதலில் விநயமாய் அவ்விதம் செய்ய வேண்டாமென்று கேட்டுக்கொண்டார்.

குவளை கேட்கவில்லை. பின்பு சிறிது சினத்தோடு கடிந்துகொண்டார். குவளை அதையும் பொருட்படுத்தவில்லை. தந்தையின் பொறுமை விலகிற்று. குவளை கையிலிருந்த புஸ்தகத்தைப் பிடித்து இழுத்தார். குவளையும் விடாமல் பிடித்துக்கொண்டார். இரண்டு பேரும் பிடித்து இழுத்ததால், புஸ்தகம் ஏடு ஏடாகக் கிழிந்து போயிற்று.’

•

கிழிந்துபோனது புத்தகம் மட்டுமா? பாரதியின் மனமும்தான். ஏடு ஏடாக எழுதிக் குவித்த மனதுக்குத்தானே கிழிபடு நூலின் வலி தெரியும்.

சேர்த்து அடுக்கினாலும், மீள அது வருமா? போனது போனதுதானே. ஆத்திரமும் கோபமும் அடுக்கி வர, பாரதியின் வார்த்தைகளில் கனல் தெறிக்கிறது. பார்த்தவர் சொல்கிறார்.

•



‘அதைக் கண்டு, தந்தை கோபம் மிஞ்சி ‘கிருஷ்ணா! புத்தி கெட்டவனே! உன்னைத் திருத்த அரும்பாடுபட்டும், திருந்தும் வழி காணேனே’ என்றார்.

•

இது எல்லாரது இல்லங்களிலும் நடக்கிற நிகழ்வுதான். எதிர் விளைவு என்னவாக இருக்கும் ?

குற்றம் இழைத்தவர் குனிந்து நிற்க, ஆத்திரம் கொண்டவர், வார்த்தைகளைச் சவுக்காக்கி, விளாசுவார். முடிந்த வரை ஏற்கும் குற்றவாளியின் மூடிகள் இல்லாத காதுகள் மரத்துப் போகும். ஆத்திரம் அடங்கிய பிறகு, காத்திரமாகத் தன்னையே நொந்து கொள்வார். அதுதான் பரிதாபமான காட்சி. பின்னர் எரிகிற கோபக் கொள்ளி, தானே தணிந்து பின் சாம்பலாய் மாறும். மௌனமாய் உறையும் கோபத்தின் சூடு தகிக்கும். இதுதான் பல வீடுகளில் நடக்கும். பாரதியின் வீட்டில் நடந்ததே, வேறு. காட்சிப்படுத்தும் தங்கம்மா, ஒரு நாடகமாய்த் தருகிறார்.

•

தந்தை கோபம் மிஞ்சி ‘கிருஷ்ணா! புத்தி கெட்டவனே! உன்னைத் திருத்த அரும்பாடுபட்டும், திருந்தும் வழி காணேனே’ என்றார்.

குவளை:- ஸ்வாமி! தங்களைத் தாங்கள் திருத்திக் கொண்டீர்களோ ?

•

ஏவிய கணையை எதிர்வாங்கி மீள ஏவிய குவளைக்கண்ணன், இப்போது இல்லை. தான் குரு என நினைத்து உபதேசம் மொழிந்த வாயை, இந்தப் பதில் மூட வைத்துவிடுகிறது.

மூடிய மனதைத் திறந்துவிடுகிறது. 'உபதேசிப்பதல்ல, குருவின் வேலை. முதலில் கடைப்பிடிப்பது' என்பதை உணர்த்திவிட்ட கணத்தில், கோகுலக் கண்ணன் தரிசனம் காட்டுகிறான். திவ்ய பிரபந்தத்தை எத்தனை முறை படித்தாலும் கிட்டாத தரிசனம். நெருப்புப் பட்ட கணத்தில் வெடித்துப் பெருஞ் சோதி தோன்றியது போல், ஒரு ஒளிப்பிரவாகம். கேட்ட குவளையின் தோற்றம் மறைய, விசுவரூபம் கொண்டு கண்ணன் நிற்கிறான். தங்கம்மா பார்வையில் தந்தை தெரிகிறார். பாவனை காட்டாமல், வசனத்தைத் தொடர்கிறார்.

●

தந்தை:- கிருஷ்ணா! தோற்றேன். நீயே ஜெயித்தாய்!

●

திரும்பி வந்த கணையை, அனுபவ அறிவு, லாகவமாகப் பற்றி, மீள எறிகிறது. இப்போது, சீடனின் முறை. ஆனால், இந்தத் தர்க்க யுத்தக் களத்தில், எதிரில் நிற்பவன் கண்ணனே அல்லவா? கீதை உபதேசித்த கண்ணன், சாரதியாய் நின்றான். இவனோ, சீடனாய் நிற்கிறான். பதிலும் உரைக்கிறான்.

●

குவளை:- ஸ்வாமி! நீங்கள் தோற்றேனென்று உணர்ந்த போதே, உண்மையில் வெற்றியடைந்தீர்கள்!

●

ஹா! எப்பேர்ப்பட்ட உபதேசம். உபதேசமா, இது? உண்மையில் குருவுக்குச் சீடன் வைத்த தேர்வில் குரு பெற்ற வெற்றியை அவருக்கே அறிவிப்பது. இப்போது குருவின் எதிரில் நிற்பது, சற்குரு. ஒளிவு மறைவு இல்லாமல் இந்த உண்மையை உணர்ந்து கொண்ட மாத்திரத்தில் பாரதி, அறிவிக்கிறார். அவர்தானே இந்தக் கதையின் மூலகுரு.

●

தந்தை:- கிருஷ்ணா! எம்பெருமான் கண்ணன்தான் உன்னைப்போல் உருவெய்தி என்னைச் சோதித்தான்.

●

சூனியம் கப்பிய படைப்பு மனத்தில் ஒரு ஒளிக்கீற்றல். மின்னல் வலது கரத்தில் வசப்பட்ட தருணம். இன்னும் முடியவில்லை, கண்ண தரிசனம். மேலும் நிலைக்கிறது, உபதேசம். தங்கம்மாவின் எழுதுகோலில், மின்னல் இடம் மாறி, கதையை வளர்க்கிறது. காட்சியை விரிக்கிறது.

●

குவளை:- ஸ்வாமி! ஒன்றையாக்குதல், அழித்தல், செயல்புரிவித்தல் இவையெல்லாம் நம் செயலன்று; கண்ணன் செயல். தாம் என்னைத் திருத்த ஆவல் கொண்டீர். உலகத்தில் நாம் ஆசைப்பட்டு விரும்பும் பொருள் யாதாயினும், அது விரைவில் கிட்டாது. நாம் ஆத்திரப்பட, அது தொலைவில் மறையும். எல்லாமுணர்ந்த தங்களுக்கு. நான் சொல்லியுணர்த்த வேண்டும் என்பது அவசியமில்லை.

●

அதுவரையில் தான் கற்ற பிரபந்த சாரத்தை, பிரபஞ்ச உண்மையாய், குருவுக்கு உபதேசிக்கிறான் சீடன். சீடனே குருவாக, குருவே சீடனாக இருந்து பெறுவது எத்தனை பெரும் பேறு? எல்லா உயிர்களிலும் இருப்பவன் கண்ணனே அல்லவா?

அனுபவத்தை யாரிடமிருந்து பெற்றால் என்ன? உண்மையை எவரிடமிருந்து கற்றால் என்ன? உண்மையில் கற்றல் என்பது தான் என்ன? தன்னை அறிதல் அல்லவா? 'தான்' 'தனது' என்னும் அகந்தைக் கிழங்கை அகழ்ந்து எடுத்து அகற்றுவது அல்லவா?

யான் எனது என்னும் செருக்கறுந்து போயிற்று, பாரதிக்கு.

யான் எனது என்னும் செருக்கு அறுப்பானாகிக் குவளைக் கண்ணன் எதிரில் இருக்க, வானோர்க்கு உயர்ந்த உலகின் வாசல் திறந்துவிடுகிறது. இல்லையில்லை. வானகம் இங்கு தென்படுகிறது.

***யான்எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்***

- துறவு-345

என்ற குறள் புதுவிளக்கம் காட்டுகிறது. பாரதியின் இல்லத்தில் நடந்த இந்த நிகழ்வு, அவர்தம் இல்லறத்திலேயே துறவறத்தை நிலைநிறுத்திவிடுகிறது. துறவு என்பது துறக்கவேண்டியவற்றைத் துறப்பதுதானே.

'தான் அல்லாத உடம்பை 'யான்' என்றும், தன்னோடு இயைபு இல்லாத பொருளை 'எனது' என்றும் கருதி, அவற்றின்கண் பற்றுச் செய்தற்கு ஏதுவாகிய மயக்கத்தைக் கெடுப்பான், வானோர்க்கும் எய்தற்கு அரிய வீட்டுலகத்தை எய்தும்' என்ற பரிமே லழகர் விளக்கம், பயன்நிறை அனுபவமாய் வாய்க்கிறது. அது ஆன்மிகமாய் மிளிர்கிறது. ஆன்மா தன்னை அறிந்து இன்ப முறல்தானே ஆன்மிகம். அது பாரதியின் வாக்கில் பரிணமிக்கிறது. தங்கம்மா எழுதுகிறார்.

●

தந்தை:- கண்ணா! மற்றவனைத் தன்னிலும் அறிவில் குறைந்தவனாய் நினைப்பது அறிவீனம்; பாவம். நீ என்னுடன் பழகுவதால், என் உபதேசங்கள் கேட்பதால் உயர்வு பெறவேண்டும், அதனால் பெருமையடைய வேண்டும் என்று நான் நினைத்தேன். என் மனத்தை வெல்லாதவன், உலகத்தை வெல்ல யோசிக்கிறான்! தன்னைத் திருத்த முடியாதவன் உன்னைத் தானெனும் அகந்தையினின்றும் அகற்றிப் பாதுகாக்கவும் முற்பட்டேன். நான் ஒரு அற்ப விஷயத்துக்கெல்லாம் புழுவைப்போல் துடிக்கிறேன். ஆனால் உலகத்தாருக்குற்ற துயர்களை மாற்றி, இன்பம் திளைக்க ஏற்பாடு செய்ய நினைக்கிறேன். என்னால், பொழுது விடிந்தால் செய்யும் தினசரி வேலைகூடச் செய்ய முடியவில்லை. ஆனால், 'இப்படிச் செய்யாதே! இவரோடு சேராதே! இந்தவிதம் பேசாதே! இதை விரும்பாதே! இந்த விஷயம் கற்றுக்கொள்! இதைக் கற்காதே! இன்னாரோடு உறவாடு! இன்ன விஷயம் விரும்பு' என்று உனக்கு உபதேசிக்கிறேன். உபதேசம் மட்டுமன்று; உனக்காக உயிரையே விடுகிறேன்.

●

உதடுகளால் உபதேசிப்பதா, உபதேசம்? உளம் ஒன்றிச் செயல்பட்டு உண்மை கண்டபின்னர் உரைப்பதுதானே உப தேசம்.

அதற்கு, முதலில் தன்னையறிந்து, தான் செய்த பிழைகள் களைந்து, முன்னை வினையின் முதலைக் களைவதுதானே, ஆன்மிகத்தின் அடுக்கு நிலைப்பாடு.

அந்த அகத்தாய்வை, உடனே மேற்கொண்டுவிடுகிறது, பார தியின் பக்தி மனம்.

பக்தி என்பதுகூட என்ன? பற்றறுக்கப் பழகுவதுதானே. மழை யில் ஊறி, நெகிழ்ந்த மண்ணில், கலப்பை இறங்குவதுபோல, உபதேச மொழி பற்றி, உள்ளாழ்ந்துவிடுவது. ஆழ்ந்து ஆழ்ந்து அறிந்து உணர்ந்து தெளியத் தெளியத் தெவிட்டாத பேரின்பம். அதை எதிர்நின்று உணர்த்திவிடுகிற குவளைக் கண்ணனை, எதிரான நிலையில் வைத்துப் புரிந்துகொண்ட தன் பழைய போக்கை, மீள நினைத்த மனம், இப்போது சொல்லிப் பார்க்கிறது. தங்கம்மா எழுதிக் காட்டுகிறார்.

•

நான் இவ்விதம் நினைக்க, நீயோ எனக்கு நேர் எதிரிடையாக நடக்கத் தலைப்பட்டாய்! உன்னைப் பார்த்தோர் பரிகசிக்கும் படி யாகிவிட்டாய்.

நீ பிறவிப் பயனை எய்துவதற்காக, உன்னை உய்விப்பதற் காக, நயமாகவும், பயமுறுத்தியும், 'சள்' ளென விழுந்தும், சிரித்தும், கேலிசெய்தும் எத்தனையோ விதத்தில் நல்லுரை கூறிப் பார்த்தேன். பயனில்லை. ஜீவன் முக்தனாக்க நினைத்த நீ, பித்த னானதைக் கண்டு என் நெஞ்சு உடைந்து விட்டது. உன்னை யாரேனும் இகழ்ச்சிக் குறியோடு நோக்கி னால், என் உயிர் துடிக்கிறது. நீயோ ஒரு தொழிலிலும் நாட்ட மின்றி, நாகரிக வாசனையேயில்லாமல், மிருகங்களைவிடக் கீழாயினை. கிருஷ்ணா! இதுவரை உன்னைப் பற்றிய எனது எண்ணங்கள் இவை.

•

முன்னின்ற குவளைக் கிருஷ்ணனை நோக்கிச் சொன்னவை இவை. உண்மையில், இவை தன்னைப் பற்றிய எண்ணங்க ளாக இப்போது தரிசனப்படுகிற தருணத்தில், இந்த உணர் வும் உண்மையும் படைப்பாக்கத் தகுதி பெற்றுவிடுகின்ற னவே. இந்த உபதேசம் சீடனுக்கு மட்டுமல்ல, தன் மனத்திற் கும் தக்கதே என்பதும் புரிகிறது. பாரதி குவளைக் கண்ண னைக் கோகுலக் கண்ணனாகத் தரிசித்த இடம் இது. ஒளிவும றைவின்றி, இந்த உண்மையை அவரிடமே பின்வருமாறு எடுத்துரைக்கிறார்.

•

'இன்றுவரை நீ அறிவற்றவன் என எண்ணி மயங்கினேன். நீ என்னைப் பண்படுத்தி ஆட்கொள்ள வந்த பரந்தாமன் என்று அறிந்து கொள்ள முடியவில்லை. என் அகந்தையினால், அரு மையான திருமொழி கிழிந்து விட்டதே! இந்த அபராதத்திற்கு இன்று உபவாஸம் இருக்க வேண்டும்' என்றார்.

•

இது நாடகத்தின் உச்சம். க்ளைமாக்ஸ். ஆனால், இன்னும் முடிந்துவிடவில்லை. பாரதி தன் செயலுக்குப் பரிகாரம் கண் டுவிட்டார். உபவாசம், பாரதி கண்ட உன்னத நெறி. பட்டினி நோன்பு. உள்ள வருத்தம் போக்க, உடலை வருத்திக் கொள் வது. பசிக்கப் புசிப்பது, உடலுக்கு நல்லது. பசியைப் புசிப் பது உளத்திற்கு நல்லது. உடலுக்கு உணவும், உளத்திற்கு உணர்வும் இன்றியமையாதவை. உணவைச் சமைக்க எடுக் கும் முயற்சியில் குறையாதபடிக்கு உணர்வைச் சமைக்கவும் பழகிக் கொள்ள வேண்டும். இது சமயம் கலந்த நெறி, கடந்த நெறியும் கூட.

தங்கம்மா எழுதிய நாடகம் இன்னும் முடிவுக்கு வரவில்லை. இனி, குவளைக்கண்ணன் வசனம் பேச வேண்டிய தருணம்.

•

குவளை, வெகுவணக்கத்தோடு. 'குருவே! என் புன் செயலி னால் தங்களை வருத்திவிட்டேன். அதற்காக நான் ஒருவாரம் உண்ணாவிரதம் இருப்பேன்' என்றார்.

•

கதை சமநிலைக்கு வந்துவிட்டது. இந்தக் காட்சியில் தோற்ற வர் யார்? வென்றவர் யார்?

குருவே சீடனாக, சீடனே குருவாக, உபதேசம் செய்துகொள் கிற உருக்கமான காட்சியில், இருவரையும் வெல்ல வைத்து, மறைமுகமாக இந்தத் தர்க்கக் களத்தில் தோன்றிய தயாநிதி யாகிய கார்முகில் வண்ணன், குவளைக் கிருஷ்ணனைத் தன் னிடத்தில் நிறுத்திவிட்டுத் தான் மட்டும், வைகுந்தம் ஏகிவிட் டான்.

'மங்களம் பாடி' முடிக்க, பாரதியின் மனைவி வருகிறார். தங் கம்மா எழுதுகிறார்.

•

'என் தாயார், அவர்கள் இருவரையும் உபவாசம் இருக்க வேண்டாமென்று மிகவும் வேண்டிக் கொண்டார். பின்பு, மறுப டியும் குவளை திருவாய்மொழி பாடவும், தந்தை ஆராய்ச்சி செய்யவும் தொடங்கினர்.

•

இந்த முடிவுதான், பாரதியை, 'கண்ணன் என் சீடன்' என்ற பாடலை எழுதவைக்கிறது.

கதையிலே கணவன் சொல்லினுக் கெல்லாம்
எதிர்செயும் மனைவிபோல்,

என்று அப்பாடலில், கண்ணனைக் காட்டுகிற இடத்தில், குவ ளைக் கண்ணனுக்கு மட்டுமன்றி, செல்லம்மா பாரதிக்கும் சிறிய இடம் கிடைத்துவிடுகிறதே. அது எப்படி? ஏன்?

கண்ணனின் சீடன் இன்னும் சிந்திக்க வைக்கிறான். மேலும் ஆராய்வோம்.



sethupathi@thaiveedu.com




தாய் வீடு மாத இதழில் இதுவரை வெளிவந்த 34 கட்டுரைகளில் கம்பராமாயணக் காப்பியத்தின் பெரும்பிரிவுகளான 7 காண்டங்களுள் முதல் இரண்டு காண்டங்களான பால காண்டம், அயோத்தியா காண்டம் ஆகியவற்றிலிருந்து தேர்ந்தெடுத்த செய்யுள்களில் ஆய்ந்து கண்ட கம்பரின் கவிநயங்களைச் சுவைக்கத் தந்திருந்தேன். இவ்விதழிலிருந்து கம்பராமாயணத்தின் மூன்றாவது காண்டமாகிய ஆரணிய காண்டத்திலுள்ள கம்பரின் கவிச்சிறப்புகளை எடுத்து வருகின்றேன். காடு என்பதைக் குறிக்கும் ஆரண்யம் என்னும் வடசொல்லைத் தமிழாக்கி ஆரணிய காண்டம் என்னும் பெயர்பட இப்படலத்தைக் கம்பர் படைத்துள்ளார்.

அயோத்தியா காண்டத்தின் இறுதிப் படலமாகிய திருவடி சூட்டுப் படலத்தில் பரதன், இராமனின் காலடியில் விழுந்து வணங்கி அவன் அணிந்திருந்த காலணிகள் இரண்டையும் இரந்து பெற்றுத் தனக்குரிய மணிமுடி இவைதான் என்று தலையில் வைத்தபடி அயோத்திக்கு மீண்டு சென்றதையும், இராமன், இலக்குமணன், சீதை மூவரும் சித்திரகூட மலைப்பகுதியில் இருந்தால் அயோத்தியிலுள்ளவர்கள் மீண்டும் வந்து தங்களை நாடு திரும்ப வற்புறுத்துவார்கள் என எண்ணிச் சித்திரகூட மலைப்பகுதியை விட்டுத் தண்டக வனம் நோக்கிப் புறப்பட்டதையும் அறிந்து கொண்டோம். ஆரணிய காண்டம் விராதன் வதைப்படலம் முதலாக, சவரி பிறப்பு நீங்கு படலம் ஈறாகப் பதினொரு படலங்களைக் கொண்டுள்ளது. இவ்விதழில் முதற் படலமாகிய விராதன் வதைப்படலத்திலிருந்து தேர்ந்தெடுத்த சில செய்யுள்களின் நயத்தை உங்களுக்காக எடுத்து வருகின்றேன். தும்புரு என்னும் காந்தரூபன் குபேரனது சாபம் பெற்றதால் இராக்கதனாக மாறி விராதன் என்னும் பெயருடன் காட்டில் திரிந்து கொண்டிருந்தான். அந்த விராதனை இராமனும் இலக்குமணனும் கொன்றதையும் அதனால் அவன் சாபம் நீங்கப்பெற்றதையும் இப்படலம் சொல்கிறது. மூவரும் தண்டக வனம் நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் விராதன் இவர்களை நோக்கி வருவதை 13 செய்யுள்களிலே கம்பர் வருணித்துக் கூறியுள்ளார். அவனது கொடிய உருவத் தோற்றத்தை பலவாறு வருணிக்கும் கம்பர் ஈற்றிலே இவ்வாறு கூறுவார்.

***சார வந்தெதிர் விலங்கினன் மரங்கள் தரையில்***
***பேர வன்கிரி பிளந்துக வளர்ந்து இகல்பெறா***
***வீர வெஞ்சிலையின் ஓரெதிர் விராதன் எனுமக்***
***கோர வெங்கண் உரும்ஏறன கொடுந்தொழிலினான்***

*- கம்ப. ஆரணிய. 19*

விராதன் எனுமக் கோர வெங்கண் - விராதன் என்னும் அகோரமான அச்சத்தை உண்டாக்குகின்ற வெம்மையான கண்களையும், உரும்ஏறன கொடுந்தொழிலினான் - பேரிடிபோன்ற கொடிய தொழிலினையும் உடையவன், மரங்கள் தரையில் பேர - வருகின்ற வேகத்தில் மரங்கள் தரையிலிருந்து பெயர்ந்து வீழவும், வன்கிரி பிளந்துக - வலிமையான மலைகள் பிளந்து சிதறவும், வளர்ந்து இகல்பெறா வீர வெஞ்சிலையின் - போரைப் பெறாத வீரத்தன்மையையுடைய வெவ்விய வில்லினையுடைய இராமஇலக்குமணர்களின், சார வந்தெதிர் விலங்கினன் - அருகே வந்து அவர்களது வழியிலே குறுக்கே நின்றான் என்பதாக விராதனின் கொடிய தோற்றத்தைக் கம்பர் வருணிக்கின்றார். விளக்கில் விட்டில் பூச்சி வந்து விழுவது போல் வீர வில்லினையுடைய இராமஇலக்குமணர்களின் எதிர் வந்து விராதன் நின்றான் என உள்ளுறையாகக் கம்பர் கூறியுள்ளதைக் கருத்தில் கொள்க.

***நில்லு நில்லுமென வந்து நிணமுண்ட நெடுவெண்***
***பல்லும் வல்லெயிறும் மின்னு பகுவாய் முழைதிறந்து***
***அல்லி புல்லுமல ரன்ன மனையாளை யொருகைச்***
***சொல்லும் எல்லையின் முகந்துயர் விசும்பு தொடர.***

*- கம்ப. ஆரணிய. 20*

நிணமுண்ட நெடுவெண் பல்லும் - இறைச்சியை உண்ட நீண்ட வெண்மையான பற்களும், வல்லெயிறும் - வலிமையான கோரைப் பற்களும், மின்னு பகுவாய் முழைதிறந்து - மலைக்குகை போன்று வாயைத் திறந்து கொண்டு, நில்லு நில்லுமென வந்து - இராமஇலக்குமணர்களை நோக்கி நில்லுங்கள் நில்லுங்கள் என்று சொல்லிக்கொண்டு வந்து, அல்லி புல்லுமல ரன்னமனையாளை - இதழ்கள் நெருங்கிய தாமரை மலரைப் போன்ற இராமனின் மனையாளான சீதையை, சொல்லும் எல்லையின் - ஒரு வார்த்தை செல்லுகின்ற நொடிப் பொழுதில், ஒருகை முகந்துயர் விசும்பு தொடர - ஒருகையால் எடுத்துக்கொண்டு வான வெளிக்குச் செல்கின்றான். அல்லி புல்லுமல ரன்ன மனையாளை - என்ற தொடரை வைத்து மலர் அன்னம் அனையாளை எனத் தாமரைக்குளத்திலுள்ள அன்னம் போன்றவள் என்றும் - மலரன்ன மனையாளை என்று மலரைப்போன்ற இராமனின் மனையாளை என்றும் இருவகையாகவும் பொருள் கொள்ளும் வகையில் சிலேடை அணியில் இச்செய்யுள் தொடரைக் கம்பர் படைத்துள்ளார்.

விராதன் சீதையை தூக்கிச் செல்ல இராமஇலக்குமணர்கள் சினம்கொண்டு அவனுடன் போரிட ஆயத்தமாகின்றார்கள்.

***இலைகொள் வேலடல் இராமன் எழுமேக வுருவன்***
***சிலைகொள் நாணெடிய கோதை யொலியேறு திரைநீர்***
***மலைகள் நீடுதல நாகர்பிலம் வான முதலாம்***
***உலகம் ஏழும் உருமே றெனவொலித்து உறறவே.***

*- கம்ப. ஆரணிய. 24*

எழுமேக உருவன் - நீருண்டு எழுகின்ற கார்மேகம் போன்ற நிறத்தையுடையவனும், இலைகொள் வேல் அடல் இராமன் - ஆலிலை போன்ற வேலின் ஆற்றலைக் கொண்டவனுமாகிய இராமனது, சிலைகொள் நாண் நெடிய கோதை- கோதண்டம்



என்னும் வில்லிலேறிய நீண்ட நாண்கயிற்றின், ஒலியேறு - மிக்க ஒலியானது, திரைநீர் மலைகள் நீடுதலம் - கடல்நீர் சூழப்பட்ட உயர்ந்த மலைகளையுடைய பூவுலகம், நாகர்பிலம் வான முதலாம் - பாதாள உலகமும் விண்ணுலகமும் உள்ளிட்ட, உலகம் ஏழும் உரும்ஏறென ஒலித்து உறவே - இடியேறுபோல ஏழு உலகத்திலும் பேரொலி செய்தது என்பது பொருள். இராமனின் வில்லிலிருந்து எழுந்த நாணொலி ஏழுலகும் கேட்குமாறு ஒலித்த இடியேறு போன்ற பேரொலியைக் கேட்டதும் விராதன் திடுக்கிட்டுச் சீதையை விட்டுவிட்டு இராமனை நோக்கித் தன்னிடமிருந்த சூலாயுதத்தை எறிய இராமன் தனது வில்லிலிருந்த அம்பைத் தொடுத்து அதனை வீழ்த்துகிறான்.

விராதன் இராம இலக்குமணர்கள் மீது மராமரங்களைப் பெயர்த்து எறிந்தும், இன்னும் பலவாறாகவும் தொடர்ந்து சண்டையிடுகின்றான். விராதன் பிறரின் போர்க்கருவிகளால் வீழ்த்தப்படாதவாறு பிரம்மனிடம் வரம் பெற்றவன் என்பதால் அவனின் இரு கைகளையும் வெட்டுவதற்காக அவனது தோளின்மீது இராம இலக்குமணர் இருவரும் ஏற, முன்னர் அவர்கள் எய்த அம்புகள் துளைத்ததால் உடலெங்கும் குருதி சொட்டிக்கொண்டிருக்க, அவர்கள் இருவரையும் விராதன் தூக்கிக்கொண்டு செல்கிறான். அப்போது அவனை இராமன் தனது காலினால் தள்ளித் தரையில் விழுத்தத் தரையில் விழுந்தவனின் வலது தோளை இராமனும், இடது தோளை இலக்குமணனும் வாளால் வெட்டுகிறார்கள்.

***தோளி ரண்டும் வடிவாள்கொடு துணித்து விசையான்***
***மீளி மொய்ம்பினர் குதித்தலும் வெகுண்டு புருவத்***
***தேளி ரண்டு நெரியச் சினவுசெங்க ணரவக்***
***கோளி ரண்டு சுடருந் தொடர்வ திற்குறுகலும்.***

*- கம்ப. ஆரணிய. 43*

மீளி மொய்ம்பினர் விசையான் வெகுண்டு - தோள்வலிமையுடைய இராம இலக்குமணர்கள் வேகத்தோடு சீற்றம் கொண்டு, வடிவாள்கொடு தோளி ரண்டும் துணித்து - கூர்மையான வாளால் விராதனது இரண்டு தோள்களையும் துண்டித்து விட்டு,குதித்தலும் - துள்ளிச் செல்லவும், புருவத் தேளி ரண்டும் நெரிய - விராதன் தனது தேள் போன்ற புருவங்கள் இரண்டையும் நெரித்துக்கொண்டு, சினவுசெங்கண் அரவக் கோள் - சினம்கொண்ட சிவந்த கண்களையுடைய இராகு என்னும் கோள், இரண்டு சுடருந் தொடர்வ திற்குறுகலும் - சூரிய சந்திரர் இருவரையும் ஒரே நேரத்தில் பிடிப்பதற்காகத் தொடர்வது போல இராம இலக்குமணர் இருவரையும் தொடரலானான். கிரகண காலங்களில் இராகு கேது என்னும் கோள்களைப் பாம்புகளாகக் கொண்டு அவை சூரியனையும் சந்திரனையும் விழுங்கி உமிழ்வதாகக் கூறப்படும் புராண வழக்கைக் கம்பர் இந்த நிகழ்ச்சிக்கு உவமை கூறியுள்ளது இல்பொருளுவமைத் தற்குறிப்பேற்ற அணிநயமாகும்.

தொடர்ந்து வந்த விராதன் இராம இலக்குமணர்களை நோக்கி அறியாமையால் உங்களை முன்னம் உணர்ந்தேனில்லை. இப்போது உங்களை யாரென அறிந்து விட்டேன். எனக்கூறித் தனது சாபவரலாற்றையும் கூறித்தனது உடலைக் குழி வெட்டிப் புதைக்குமாறும் செல்லும் வழியில் சரபங்க முனிவரை அடைந்து அவரால் நன்மை பெறுமாறும் கூற அவர்கள் அவ்வாறே செய்ய அவன் சாபம் நீங்கி மீண்டும் தன்சுய உருவம் கொண்டுவானகம் செல்கிறான். சென்றவன் இராமனைப் பலவாறு புகழ்ந்து துதிக்கின்றான்.

***தாய்தன்னை யறியாத கன்றில்லைத் தன்கன்றை***
***ஆயு மறியும் உலகின்தாய் ஆகின்ஐய***
***நீயறிதி எப்பொருளும் அவையுன்னை நிலையறியா***
***மாயையிது வென்கொலோ வாராதே வரவல்லாய்***

*- கம்ப. ஆரணிய. 56*

வாராதே வரவல்லாய் - அடியவர்க்கு கிடைப்பதற்கு அரியவனாக இருந்து அருள் செய்யும் வல்லமையுடையவனே! தாய் தன்னை யறியாத கன்றில்லை - தாயை அறிந்து கொள்ள முடியாத கன்றுகளில்லை, தன்கன்றை ஆயு மறியும்- அவ்வாறே தனது கன்றுகளைத் தாயும் அறிந்துகொள்ளும், உலகின்தாய் ஆகின்ஐய எப்பொருளும் நீயறிதி - அவ்வாறிருக்க ஐயனே நீ எவ்வுலகத்திற்கும் தாயாக இருந்து எல்லாப்

பொருள்களையும் நீ அறிந்து கொண்டுள்ளாய், அவை யுன்னை நிலையறியாமாயையிது வென்கொலோ - ஆனால் அப்பொருள்களெல்லாம் உன்னை இத்தன்மையனென்று அறியாதிருக்கின்ற மாயை என்ன? என்று வினவுகிறான். தாயாகிய நீ மட்டும் எல்லாவுலகத்து உயிர்களையும் அறிந்திருக்க, கன்றாகிய உலகத்துயிர்கள் உன்னை அறியாமலிருப்பது என்ன வியப்போ? என்று கடவுளின் தன்மையை உயிர்கள் அறியாதிருக்கின்றன என்பதாகப் பொருள்படக் கம்பரின் இச்செய்யுள் அமைந்துள்ளது.

இவ்வாறு இராமனைப் போற்றித் துதித்துக் கொண்டிருந்த விராதனாக இருந்த தும்புரு என்னும் காந்தருவன் இராமன் கேட்கத் தான் சாபம் பெற்ற வரலாற்றைக் கூறுவதைக் கம்பர் சந்தம் கொண்ட பல தாழிசைக் கண்ணிகளாக வடித்துள்ளார்.

**ஆட ரம்பை நீடரங்கு ஊடுநின்று பாடலால்**
**ஊடல் வந்து கூடவிக் கூடு வந்து கூடினேன்.**

*- கம்ப. ஆரணிய. 64*

ஆட ரம்பை நீடரங்கு ஊடுநின்று பாடலால் - நீண்ட நடன அரங்கிலே நடனமாடிக்கொண்டிருந்த அரம்பை என்னும் தெய்வப் பெண் வந்து பாடிக்கொண்டிருக்கையில், ஊடல் வந்து கூடவிக் கூடு வந்து கூடினேன் - அவள் மீது வேட்கையுற்று அவளுடன் புணர்ந்ததனால் சாபம் பெற்று இந்த இராக்கத உடலையடைந்தேன் என்கிறான்.

**சுரக்க வந்த காம நோய் துரக்க வந்த தோமினால்**
**இரக்க மின்றி யேயினார் அரக்கன் மைந்த னாயினேன்.**

*- கம்ப. ஆரணிய. 66*

சுரக்க வந்த காம நோய் துரக்க வந்த தோமினால் - அறிவை மறைக்கும்படி மிகுதியாய் உண்டாகிய காம நோய் தொடர்ந்ததால் வந்த குற்றத்தினால், இரக்க மின்றி யேயினார் அரக்கன் மைந்த னாயினேன் - இரக்கம் சிறிதும் இல்லாமல் குபேரன் போன்ற வானகத்தோர் என்னை அரக்க குலத்தில் பிறக்கும்படி சாபமிட்டார்கள் என்றான்.

**அன்று மூல மாதியாய் இன்று காறு மேமையேன்**
**நன்று தீது நாடலேன் தின்று தீய தேடினேன்.**

*- கம்ப. ஆரணிய. 69*

அன்று மூல மாதியாய் இன்று காறு மேமையேன் - ஆதியான முதல்வனே! அறிவில்லாதவனாகிய நான் அன்றைய நாள் முதலாக இன்றுவரை, நன்று தீது நாடலேன் தின்று தீய தேடினேன் - நல்லது இது, தீயது இது என்று ஆராய்ந்தறிய முடியாதவனாக அகப்பட்ட உயிர்களையெல்லாம் கொன்று தின்று தீவினையைச் சேர்த்துக் கொண்டேன். என்று கூறியவன் உனது திருவடிகள் என்மேற்பட்டதால் எனது தீவினையும் நீங்கி சாபமும் தீரப்பெற்றேன் என்கிறான். இந்தச் செய்திகளைச் சொல்லும் அழகிய சந்தம் நிறைந்த இக்கண்ணிகளில் கம்பரின் சொல்லாட்சிச் சிறப்பைச் சுவைக்க முடிகிறது. தும்புரு என்னும் தனது இயற்கையான உருவைப் பெற்ற விராதன் இவ்வாறு இராம இலக்குமணர்களை வாழ்த்தித் துதித்துத் தன்னுலகம் சேர்கிறான். இராமன் முதலியோர் பின்னர் அவ்விடத்தைக் கடந்து சென்று ஒரு தபோவனத்தை அடைந்து அங்கே தங்குகிறார்கள். இத்துடன் விராதன் வதைப் படலம் முற்றுப் பெறுகிறது. ஆரணிய காண்டத்தின் இரண்டாவது படலமாகிய சரபங்கன் பிறப்பு நீங்கு படலத்தை அடுத்த இதழில் எடுத்து வருகிறேன்.

*(வளரும்...)*



shanmugarajah@thaiveedu.com



# தமிழ்வலை - 113

‘தாய்வீடு’ சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் ‘தமிழ்வலை’யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**



## தமிழ்வலை-113 வினா

### இடமிருந்து வலம்

1 இலங்கை கடற்றொழில் அமைச்சர்
4 தமிழ்த்தாத்தா (1-1-1)
6 ஒருவகைப் புளித்தோடை
7 சங்கீதம்
10 அடிப்படுத்து
11 பேர்போன தமிழக சந்தனக் கடத்தல் பேர்வழி
13 ஓலை அல்லது பிரம்பினாலான பெட்டி
14 இலங்கையில் மிக நீளமான ஆறு
16 உதவி
17 பர்மாவின் புதிய பெயர்

### மேலிருந்து கீழ்

2 சீவக சிந்தாமணி ஆசிரியர்
3 பணிவிடை புரியும் பெண்
5 உளவு
8 கையளி
9 துன்பம்
10 ஒருவகை மரம்
12 கோட்டை முதலியவற்றைச் சூழ்ந்து தண்ணிர் தேங்கும் கிடங்கு
13 கோட்டான்
14 ஒருவகை மூலிகை மரம்
15 அமெரிக்காவின் முதலாவது கருப்பின அதிபர்

விடைகளை அனுப்பவேண்டிய முகவரி
மினன்னஞ்சல் முகவரி:
thamilvalai@thaiveedu.com
தொலைநகல்: 416 849 0594

Thaiveedu
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

## தமிழ்வலை-112-க்கான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ■ | 1 ச | ■ | 2 கே | கா | லை | ■ | 3 ச | ■ | 4 சி |
| ■ | ம் | ■ | ட் | ■ | ■ | ■ | ப் | ■ | ண |
| ■ | 5 பா | ட் | டு | க் | 6 கு | ப் | பா | ட் | டு |
| ■ | ■ | ■ | க் | ■ | ளி | ■ | த் | ■ | மு |
| 7 வி | டை | ■ | கே | ளி | ர் | ■ | 9 து | ண் | டி |
| ளா | ■ | 10 தே | ன் | ■ | மை | ■ | ■ | ■ | ■ |
| ■ | ■ | ■ | வி | ■ | ■ | 11 நா | 12 ம | க | ன் |
| 13 ஆ | ■ | 14 பா | யி | ர | ம் | ■ | றை | ■ | ■ |
| ண் | ■ | ■ | ன் | ■ | ■ | 15 சி | ■ | 16 தொ | 17 தி |
| டு | ■ | 18 க | றி | வே | ப் | பி | லை | ■ | ணை |

## தமிழ்வலை-112 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

ஏ.எஸ். மகாலிங்கம், ரொறன்ரோ.
சிவகுமார் கம்சிகா, சுன்னாகம்.
கனகராஜா சிவகுரு, வவுனியா.
மேரி கெலன் தேவதாஸ், நோத்யோர்க்
சின்னத்தம்பி பார்வதி, வவுனியா

### பரிசுபெறும் போட்டியாளர்

## தேவாம்பிகை அரவிந்தன்,

### இங்கிலாந்து

thamilvalai@thaiveedu.com

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும். அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும். பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.



## சிறுகதை

# 'இடிச்ச புளி'

- உஷாதீபன்

உம்மணாம் மூஞ்சி... - அடுப்படியில் தன் வேலைகளைப் பார்த்துக் கொண்டே கோபத்தோடு இந்த வார்த்தைகளை உதிர்த்தாள் யாமினி. உரிமையோடு எப்படி வேண்டுமானாலும் திட்டுவாள். வெளிப்படையாக அப்படித் திட்டுவதில் எனக்கும் ஒரு திருப்திதான். பரஸ்பர அந்நியோன்யத்தின் அடையாளம் அது!

சற்று நேரத்திற்கு முன் நடந்த உரையாடலின் தொடர்ச்சியாக அவள் சிந்தனையை ஆக்கிரமித்திருந்த எண்ணங்களின் இறுதி வெளிப்பாடுதான் அந்த ஒற்றை வார்த்தை என்று தோன்றியது மந்திரமூர்த்திக்கு. மனதுக்குள் இன்னும் என்னெல்லாம் முனகிக் கொள்கிறாளோ? அதுவும் தெரிந்தால் பரவாயில்லைத்தான். இதைப்போய்க் கேட்கவா முடியும்? திட்டினவரைக்கும் லாபம்!.

காதில் விழாததுபோல் இருந்து விடலாம் என்றுதான் முதலில் தோன்றியது. அன்றாட நடவடிக்கைகளில் எத்தனை எத்தனையோ பேச்சுகள், கோபதாபங்கள், வார்த்தை விளையாட்டுகள்... இப்படி எல்லாவற்றையும் கரிசனையாகக் கட்டிக் கொள்ள முடியுமா என்ன? இதுவும் கடந்துபோகும் என்பது போல் பலவும் வந்து வந்து போகின்றனதான். பொருட்படுத்தினால் வீடு ரணகளம்தான். பிறகு சந்தோஷம் என்பதையே மறந்துவிட வேண்டியதுதான். சதா கர்ர்... புர்ர்ர்... தான்.

வெவ்வேறுவிதமான குண விசேடங்கள் கொண்ட மனிதர்களின் தொகுப்புதான் குடும்பம். கதம்ப மணிமாலை. தொடுக்கப்பட்ட மலர்கள் யாவும் ஒன்றுகூடி அதனதன் சொந்த குணமான மணங்களைத் தவிர்த்து ஒரு பொது, புது மணத்தை நல்கும் நயம். அந்த மணம் சகிக்கக் கூடியதாயும்... சமயங்களில் இயலாததாயும்...!

ஆனா அப்படியேவா கழிகிறது அன்றாடங்களின் பொழுதுகள்? ஒன்று ஆட்டுக்கு இழுக்கிறது. ஒன்று மாட்டுக்கு இழுக்கிறது. எதுவும் ஒத்துவராது என்று எண்ணம் கொள்ளும் பொழுது ஒதுங்கிக் கிடக்கத்தான் வேண்டியிருக்கிறது. வயது அதைச் செய் என்கிறதே! அதுவே ஒதுக்கிக்கொண்டுபோய் உட்கார்த்தி விடுகிறதே!

உங்களுக்கு யாரோடயும் ஒட்டாது. எதோடயும் மிங்கிள் ஆக மாட்டீங்க நீங்க...! எப்படித்தான் உங்களை உங்க வீட்டுல சமாளிச்சு வளர்த்தாங்களோ... நீங்களும் வளர்ந்து ஆளாகி இன்னிக்கு ஒரு குடும்பஸ்தனாவும் ஆயிட்டீங்க... உங்க கிட்டே வந்து வசம்மா மாட்டிட்டு முழி முழின்னு முழிக்கிறேன் நான்... இதுதான் இன்றைய யதார்த்தம்...! சொல்லி முடித்து விட்டதுபோல் சூழல் இறுகிப்போய்க் கிடக்க, அந்த இறுக்கத்தைத் தளர்த்தினார் மந்திரம்.

எந்தப் பேச்சு வந்தாலும், என்ன டிஸ்கஷன் ஆனாலும் அதுக்குக் கடைசிப்பலி நான்தானா? கட்டக் கடைசியா என் தலைல கொண்டு வந்து தேங்காயை உடைக்கிறே நீ...? இது சுத்த அபாண்டம்... நான் நான்பாட்டுக்கு இருக்கேன்... கிருஷ்ணா... ராமான்னு... என்னைப் பலிகிடா ஆக்காதே...!

ஆமா... உங்களப் பலியாக்கி கோட்டை கட்டிக் கொழிக்கப் போறேன்... அதுக்குத்தான் இத்தனை பேச்சு...! - என்னவோ நினைச்சிட்டுப் போங்க... இன்னிக்கு நேத்திக்கா இப்டி? வருஷாந்திரமா இப்படித்தானே கழிஞ்சிட்டிருக்கு... நீங்க இருக்கிறபடி இருங்க... யாரு யாரை மாத்த முடியும்?

மாத்த முடியுமோ இல்லியோ... மாத்திக்க முடியுமே... எதுக்கு என்னை உம்மணாம் மூஞ்சின்னு சொன்னே...? அதச் சொல்லு இப்போ...!

பதில் பேசி ஒத்தைக்கு நின்றார் மந்திரமூர்த்தி. என் மூஞ்சியே எப்பயும் அப்படித்தானே... இதுல ஸ்பெஷலாச் சொல்ல என்னயிருக்கு?அதான் கேட்கிறேன்? - எப்போதும் தன்னைத் தாழ்த்திக் கொள்வதில் ஒரு அபார திருப்தி.

யம்மாடீ... நான் ஒண்ணும் சொல்லல சாமி... உங்க மலர்ந்த வதனத்த யாராச்சும் அப்படிச் சொல்வாங்களா? என்ன நானே சொல்லிட்டேன்... அதான்...

பார்த்தியா... பார்த்தியா... மாத்துறியே... உன் மதி வதனத்தைத்தான் யாராலும் அப்படிப் பேர் வச்சுச் சொல்ல முடியாதே... ஒரு கோபத்துக்காகக் கூட ஒருத்தர் உன்னை அப்படி விளிக்க முடியாதாக்கும்... என்னைச் சொன்ன பார்... அது பொருத்தம்தான்... ஏன்னா... நான் சாதாரணமாவே அப்படித்தான் இருப்பேன்... திடீர்னு என்னைப் பார்க்கிறவங்களுக்கு ஒரு மாதிரித்தான் தோணும். இந்தாளோட என்ன பேச்சுன்னு விலகிப் போயிடுவாங்க... அதுதான் இயற்கை. என் மூஞ்சியே அவ்வளவுதான்... ஆனா ஒண்ணு இந்த மூஞ்சியை வச்சித்தான் முப்பத்து நாலு வருஷ சர்வீசை ஓட்டியிருக்கேன். இத வச்சுதான் சுத்தியிருக்கிற எல்லாரையும் பயமுறுத்தி வேலை வாங்கியிருக்கேன். விரட்டி ராஜ்யம் பண்ணியிருக்கேன். இந்தக் கோபக் கனலை முன்னிறுத்தித்தான் எங்கிட்டே அநாவசியமா எவனும் வந்து நிக்காம என்னைக் காப்பாத்திட்டிருக்கேன்... மதிப்பு மிக்கதா ஆக்கி, எந்தச் சிக்கல்லையும் மாட்

டாம சாமர்த்தியமா வெளில வந்திருக்கேன்... இன்னை வரைக்கும் அதுதான் என்னைக் காப்பாத்திட்டிருக்கு... அதுவே சத்தியம்.! என்னோட கிரடிட்டே அது ஒண்ணுதான்!

மேற்கொண்டு பதில் சொல்ல விருப்பமில்லையோ என்னவோ? எதுக்கு பேச்சை வளர்த்திட்டு? வெட்டிக்கு... சொந்தப் பிராபல்யம் வெடிக்க ஆரம்பிச்சிடும்...! மடில கட்டி வச்சிருக்கிறதை அவிழ்த்து விட்டார்னா தாங்க முடியாது யாராலேயும்...!

யப்பாஆஆஆ... போதும்ப்பா... கேட்டுக் கேட்டு அலுத்து சலிச்சுப் போச்சு... காது அடைக்குது...! கல்யாணத்திற்கு முன்பே பையன் எடுத்த ஓட்டம்.

திடீரென்று வீடு அமைதியானது. என்னாச்சு? பேசலையா, பேச விருப்பம் இல்லையா? திடீர்னு சைலன்ட் ஆயிட்டா எப்டி?

எனக்கு நிறைய வேலையிருக்கு... இன்னும் துவையலுக்கு அரைக்கணும். அப்புறம் மாவுக்குப் போடணும்... துணிமணி உலர்த்தணும்... வேலைக்காரி வந்திருவா... பற்றுப் பாத்திரம் ஒழிச்சிப் போடணும்...

அதுக்கு அச்சாரம்தான் இந்த ‘உம்மணாம் மூஞ்சியா...’? விட்டு விலக விரும்பாதவர்போல் கேட்டார் மந்திரமூர்த்தி.

ஆமாம்... எப்பப் பார்த்தாலும் ரூமே கதின்னு கிடக்கீங்க... உறாலுக்கு வந்து எல்லாரோடையும் நாலு வார்த்தை பேசினாத்தான் என்னவாம்? - இப்பொழுதுதான் விஷயத்திற்கு வருகிறாள் போலும். கலகலப்பே கிடையாது...

நான் அப்படியிருப்பதில் இவளுக்கென்ன இடைஞ்சல்? வயசானவர்களை இளசுகளுக்குப் பார்க்கப் பிடிப்பதில்லை. அப்பனானால் என்ன, ஆத்தாவானால் என்ன? கிழடு கிழடுதானே? ஒதுங்கிக் கிடந்துட்டுப் போறோம்... எதுக்கு வம்பு? என்ன பேசி என்னவாகப் போகுது? - நான் அலுத்துக் கொண்டேன்.

எனக்கு மனசு ஒதுங்கியேதான் கிடக்கிறது. நம் காலம் முடிந்தது என்கிற எண்ணம் எப்போதோ வந்துவிட்டது. துள்ளல் பேச்சு நின்று போனது. எள்ளல் பேச்சு அவ்வப்போது தலை காட்டுகிறதுதான். அந்தச் சனியனையும் விட்டொழிக்க வேண்டும். ராம... ராம... ராம...

எதாச்சும் பேசினாத்தானே அவுங்களுக்கும் ஒரு தெளிவு கிடைக்கும்? உங்க கிட்டே கேட்கணும்னு நினைக்கிறதையும் வேண்டாம்... அப்புறம் பார்த்துக்கலாம்னு விட்டுட்டு ஒதுங்குறாங்க... இப்படி மயான அமைதி காத்தா? உங்க ரூமுக்கு வர்றதுக்கே தயங்குறாங்க... பயப்படுறாங்களோன்னே ஒரு சந்தேகம் வருது...! இவளாக எதற்குக் கண்டதையும் நினைத்து மருகுகிறாள்?

நானென்ன புலியா, சிங்கமா? எதுக்கு ஒதுங்கணும். நான் இங்கதான குத்துக்கல் மாதிரி உட்கார்ந்திருக்கேன்... வந்து கேட்க வேண்டிதானே? பெத்த அப்பன்ட்ட என்ன பேசத் தயக்கம்? அதெல்லாம் சும்மா... நீயா என்னவாவது நினைச்சிக்கிறே...!

எப்பயும் பிஸியா இருக்கிற மாதிரியே படிச்சிட்டேயிருந்தா? எதாச்சும் எழுதிட்டேயிருந்தா? எதுக்கு டிஸ்டர்ப் பண்ணிட்டுன்னு நினைக்க மாட்டாங்களா? இல்லன்னா கண்ணை மூடிட்டு சங்கீதத்துல மூழ்கிடுறீங்க... எதுவானும் யோசனை கேட்போம்னு நினைச்சாக் கூட உங்ககிட்டே வரமுடிலைன்னா... என்ன பண்ணுவாங்க... சின்னஞ் சிறுசுங்க...?

அடேங்கப்பா... கரிசனத்தப் பார்யா? அதுக சின்னஞ் சிறிசுகளா...? என்னவோ நாம யோசனை சொன்னா அது பிரகாரம் செய்துடறாப்ல...? நீ ஒரு கிறுக்கு... அப்டி நம்பிக்கிட்டிருக்கே... நம்மளக் கேட்டுத்தான் செய்யணும்ங்கிற நிலைமைல அவுங்க இல்லை... ஏதாச்சும் தப்பா செஞ்சா அதையும் பொருட்படுத்த மாட்டாங்க. உன்னையும் என்னையும் மாதிரி உட்கார்ந்து அழமாட்டாங்க... போனாப் போகுதுன்னு விட்ருவாங்க... படட்டுமே... அனுபவப்பட்டு வெளில வரட்டுமே... அனுபவம் எய்தணும்னா கொஞ்சம் கொஞ்சம் நஷ்டம் ஏற்படத்தான் செய்யும்... உடல் நோவு, மன நோவு, செயல் நஷ்டம், பண நஷ்டம்... போயிட்டுப் போகுது... அப்புறம் எப்படி அனுபவம் சேகரமாகுறது? தனிச்சி இயங்கினாத்தான் அது சாத்தியம்...! படட்டும்...படட்டும்... ஒண்ணும் பங்கமில்லே...!

சொல்லிவிட்டு உறாலிலிருந்து அறைக்குள் புகுந்து கொண்டார் மந்திரமூர்த்தி. தனக்கெல்லாம் யார் துணை இருந்தார்கள் என்று நினைத்துக் கொண்டார். கல்யாணம் ஆன கையோடு தனிக்குடித்தனம் வந்தாயிற்று. ஒரு ஆள் திரும்பிப் பார்க்கவில்லையே! எல்லாமும் ஓடி ஓடிச் செய்தது நான்தானே! எவன் தலையைக் காட்டினான்? யாரை எதிர்பார்த்தோம்? யார்ட்டப் போய் நின்னோம்?

அவருக்கு எல்லாவிதமான நம்பிக்கையும் போயிற்று. வெகு நாளாயிற்று அப்படியாகி. என்னவோ இருக்கணும், சாப்பிடணும், தூங்கணும், எழுந்திரிக்கணும்... இவ்வளவுதான். கடவுள் கூப்பிடுறபோது போய்ச் சேரணும்... படுக்கைல மட்டும் விழுந்திடக் கூடாது... அதுக்குத்தான் வேண்டிக்கணும்... வாய் மூடி மௌனியாகிப் பல நாள் ஆகிறது.

பலரும் வெளியே வந்துவிடுகிறார்கள்தானே? பூங்கா ஏன் நிரம்பி வழிகிறது? சீனியர் சிட்டிசன்ஸ் தங்கள் வயதொத்தவர்களைப் பார்த்து, பேசி... மனச் சமாதானம் கொள்ளவா?

அவருக்கு நான் பெட்டர்...

என்னை விட அவர் நல்லாயிருக்கார்... நான்தான் தளர்ந்து போயிட்டேன்...

பிள்ளையும், மருமகளும் தாங்குறாங்கப்பா... நடையைப் பாருங்க... என்னா வீச்சும் விறைப்புமா?

யோகாப் பண்றான்யா அந்தாளு... வயசு எழுபத்தஞ்சு... விட்டானா பார்... மகாத்மா யோகா மையமாம்... பனியன்ல தெரியுது பார்... பெருமைதான்...

வாசல்ல பார்.. அந்த வண்டிகிட்டக் கூட்டத்த? பருப்பு போளி, தேங்கா போளின்னு வாங்கி அமுக்கிறதப் பார்... நாக்க அடக்க முடிலயே எவனுக்கும்? அதென்னய்யா அப்படி ஒரு நப்பாசை? இவங்களுக்காகத்தான்யா அந்தாளு சாயங்காலம் ஏழுக்கே வண்டியக் கொண்டாந்து நிப்பாட்ர்றான். எட்டரைக்கு எல்லாம் காலி... அட... அதுக்காக தெனமுமா திங்கிறது...? என்னைக்கோ ஒரு நாளைக்கு ஆசைக்கு ஒண்ணு சாப்பிடலாம்... வச்சு வளைச்சு அடிச்சா? இந்த நாக்கு இருக்கே...



ஒரு வகைல பார்த்தா பாவம்தான்யா எல்லாரும்... வீடுகள்ல எதையும் வாய்விட்டுக் கேட்க முடியறதில்ல... கேட்டாலும் பொண்டாட்டி அடக்கிப்புடுறா... அதென்ன பக்கித்தனமா? வாய அடக்கிட்டு இருக்க முடியாதா? பெரிசுக்கு இன்னம் நாக்கு அடங்கல்லே... வீட்டுலல்லாம் ஒண்ணும் செய்ய முடியாது. வேணும்னா கடைல வாங்கிக் கொடுங்க... தின்னுட்டுக் கிடக்கட்டும்...

எப்டி எங்கப்பாவ மரியாதையில்லாம நீ பேசப் போச்சு? கேட்கலையே பாவி! காமம் கண்ணை மறைக்குதோ? வச்ச கண்ணை எடுக்காம அவளையே பார்த்திட்டிருக்கானே? மோகித்திருத்தல் என்பது சாட்சாத் இந்த சௌஜன்யம்தான். விலக்க ஏலாமல், ஒரே வீச்சாக, அமைதியாக, கதியாக நோக்கித் தன்னை இழத்தல்...!

எல்லாமும் பார்த்தும், கேட்டும் பொங்கி, அடங்கி, அமிழ்ந்து கிடக்கிறார் மந்திரமூர்த்தி. இப்படியும் தன் உயிர் ஜீவித்திருக்க வேண்டுமா என்ன?

எது சொல்லி என்னவாகப் போகிறது? யாரை யார் சொல்லி எது திருந்தணும்? எல்லாமும் அது அது அனுபவப்பட்டுத்தான் திருந்தும். யார் சொல்லியும் எதுவும் இந்த உலகத்தில் மாறிவிடப் போவதில்லை. ஒருத்தர் சொல்வதால் எந்த மாற்றமும் வந்துவிடவும் போவதில்லை. எல்லாமும் அனுபவப்பட்டுத் திருந்தினால்தான் பக்குவமாகும். சொல்லிச் சொல்லிச் செய்து பக்குவமாகப் போவதில்லை. ஒரு முறை நஷ்டமடைந்தால்தான் மறுமுறை லாபம் ஆகும். நஷ்டமடையாமல் இந்த உலகத்தில் எந்த லாபமும் வந்துவிடப் போவதில்லை. எதுவும் கைகூடவும் போவதில்லை. ஆயிரம் புஸ்தகத்தைப் படித்தவனைவிட ஆயிரம் நிலத்தை உழுதவன்தான் அனுபவப்பட்டவன் என்பது முதுமொழி. அதுதான் பரி பக்குவம்.

அதனால் யாருக்கும் எதுவும் சொல்லியும் பயனில்லை. புண்ணியமுமில்லை. ஒதுங்கியே இருந்தார் மந்திரமூர்த்தி. எதையும் கண்ணிலும் போட்டுக்கொள்வதில்லை. காதிலும் கேட்டுக் கொள்வதில்லை. தீரவும் விசாரித்துக் கொள்வதுமில்லை. ஆர்வமிருந்தால்தானே?

விசாரித்து என்ன செய்யப் போகிறோம் என்கிற வெறுப்பு அல்லது விரக்தி வந்து விட்டது அவருக்கு. விசாரித்தால் அதை அப்படிச் செய்ய வேண்டும் இப்படித்தான் செய்ய வேண்டும் என்று சொல்லத் தோன்றும். தோன்றிவிட்டால் பிறகு சொல்லாமல் இருக்க முடியாது. மனசு கேட்காது. பிறகு அதன்படி அவர்கள் நடக்காவிட்டால் மனசு வருந்தும். எதுக்கு எங்கிட்டக் கேட்கணும். அப்புறம் எதுக்கு இஷ்டம்போல் செய்யணும்? என்று கோபம் வரும். இதென்ன புதுவிதமான அலட்சியம்? என்ன நடிப்பு? இந்தப் பொய் நடிப்பெல்லாம் யாருக்கு வேணும்? இந்த வாதையெல்லாம் எதற்கு? என்னவோ பண்ணிக் கொள்ளட்டும். அவரவர் வாழ்வு. அவரவர் வழி...!

எதுவும் என்னிடம் சொல்லவும் வேண்டாம். நானும் எதுவும் கேட்கவும் வேண்டாம். ஒதுங்கியிருந்தார் மந்திரமூர்த்தி. என்ன தவறு? வெளியில் எட்டிப் பார்த்தார். யாமினி தலை தெரிகிறதா என்று. விடமாட்டாளே மனஸ்வினி!

வீட்டுல இருக்கிற பெரியவங்கள மதிச்சு நடந்தது அந்தக் காலம். அவங்க சொன்னதுக்கு மேலே ஒரு துரும்பு அசையாது. இப்போ அப்டியா இருக்கு? வேறே வழியில்லாமே பெரியவங்க... அதாவது பெற்றோர்ங்க கூட இருக்க வேண்டியி

ருக்கு. அதுவும் ஒருவகை தண்டனைதான் சொல்லப்போனா! தனியாப் பொங்கித்தின்னுட்டு அக்கடான்னு கிடக்க முடில... மனசு வரல... எங்ககூட இருக்கலாமேங்கிற கரிசனம். கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை. குழந்தைகளைப் பார்த்துக்கத் துப்பில்ல. ஆளைப் போட வேண்டிர்க்கு. அவுங்களால ஆபத்தும் இருக்கு... நம்பிக்கையா ஆளுக கிடைக்கிறதில்ல... சரியா வளரணுமேங்கிற பயம்...! என்னென்னமோ நடக்குது அங்கங்க... தினமும் பேப்பர்ல, டி.வி.ல... செய்தி பார்க்கத் தானே செய்றோம்? அதுக்காகவாச்சும் பெத்தவங்க வேண்டிர்க்கு... பொம்மைகள் மாதிரி...! அங்கங்க நகர்த்தி நகர்த்தி வச்சிக்கலாமே! வேண்டாம்னா மூலைல போட்ரலாமே?

வெறும் ஓட்டைக் கரிசனம். பொய்ம்முகம். எதுக்காக வீட்டுல மூத்தவங்க இருக்காங்க... வழிகாட்டத்தானே? வெறுமே காவல் காக்கவா? பேசாமத் தின்னுட்டுக் கிடக்க வேண்டிதானேன்னா என்னத்துக்குக் கூட இருக்கணுமாம்? அடிமைங்களா? வெறும் சோற்றுக்கோ வந்ததிந்தப் பங்கம்?

நல்லது சொன்னாக் கேட்டுக்கத் தெரியணும். அதன்படி நடக்கத் தெரியணும். அப்பத்தான் எல்லாமும் வகை தொகையா அமையும்... நடக்கும்... அதுக்குத்தானே அனுபவப்பட்ட பெரியவங்க உடன் இருக்கிறது? வெறுமே ஆட்டுக்கல் மாதிரி நிறுத்தி வைக்கவா? அதனாலதான நான் உம்மணாம் மூஞ்சி...! சொன்னாச் சொல்லிக்கோ...! இனிமே எந்தத் திட்டு வாங்கி என்ன கேவலம் வரப்போறது எனக்கு...! என்னைக்காவது ஒரு நாள் உனக்குத்தான் மனசு சஞ்சலப்படப் போகுது... இந்த மனுஷன அநியாயமாப் பலமுறை திட்டியிருக்கமே..! எல்லாத்தையும் வாங்கிட்டுப் போய்ச் சேர்ந்துட்டானே... பாவி...! தோணும் பாரு...கடைசில உணராத மனுஷன், மனுஷி எவரும் இல்லை இந்த உலகத்துல...! சொல்லி முடித்தார் மந்திரமூர்த்தி.

அதுக்காக அந்தக் குழந்தை என்ன பாவம் பண்ணித்து? அதைக் கூடவா தூக்கிக் கொஞ்சக் கூடாது? கிட்டவே வர விடுறதில்லையே! எட்டிப் பார்த்துத் தட்டி விட்டாள் வார்த்தைகளை யாமினி.

நானா வர வேண்டாம்னேன். அவங்க பிடிச்சி நிறுத்தினா? நா என்ன பண்றதாம்? போய்க் குழந்தையப் பிடுங்க முடியுமா? கிட்ட வந்தா ஏதேனும் வியாதி ஒட்டிக்கும்னு நினைக்கிறாளோ என்னவோ? யாரு கண்டா? மனசுக்குத் தோணத் தானே செய்யுது?... குழந்தையும் தெய்வமும் ஒண்ணு... கொஞ்சர்துலெல்லாம் ஒண்ணும் குறைச்சல் இல்லதான்... பாசம் விட்டுப் போகுமா? வெளில கூட்டிட்டுப் போன்னுது... பயமாயிருக்கு... கையை உதறிட்டு ஓடிடுது... பிடிக்க முடியல்லை... எம்புட்டு வண்டிகள் வருது... நாய்கள் திரியுது... மாடுகள் வருது... குலை நடுங்குதே... தாத்தா கூடப் பேரன் போறாம்பாருன்னு ஊருக்குக் காட்டவா? பாதுகாப்புதான் முக்கியம். நாம சின்னப் பிள்ளைகளா இருந்த காலத்தப் போல இப்ப எதுவும் இல்லயாக்கும்...! அப்போ மூணாமத்தவன் கூட நீ இன்னார் பிள்ளைதானேன்னு வீட்ல கொண்டு வந்து விட்ருவான்... இப்போ எல்லாப் பயலுகளுமே களவாணியால்ல போயிட்டானுங்க.. எவனை நம்பறதுன்னே தெரிலயே? காசுக்காக எதுவும் பண்ற உலகமால்ல போச்சு? இதையெல்லாம் உணர்ந்து எதுக்கு வம்புன்னு ஒதுங்கினா நீ என்னை உம்மணாம் மூஞ்சிங்கிறே...! கல்லுளிமங்கன்கிறே...! உலகத்துல என்னெல்லாம் திட்டு இருக்குங்கிறதை உன் மூலமாத் தான் ரீவைன்ட் பண்ணிக்கணும் போல...! நம்மால ஒரு சங்கடம் வந்துடக்கூடாதுன்னு மனசு பயப்படுது... பதறுது... அதனால ஒதுங்கி ஒடுங்கிக் கிடக்கேனாக்கும்...

நானாவது ஒரு வாட்டிதான் சொன்னேன். உங்க நாட்டுப் பொண் தினமும் சொல்றா? எப்பப்பாரு கடுகடுன்னுட்டுங்கிறா...!

கடுவம் பூனைன்னு சொல்லியிருப்பாளே...? எதிர்க்கேள்வி போட்டார் மந்திரமூர்த்தி. அதுவும் ஒரு நாள் அவர் காதில் விழுந்திருந்ததுதான். கடுவம் பூனை எப்படி உறுமும் என்று அவரே தனியே செய்து பார்த்துக் கொண்டு சிரித்தார்.

இன்னும் அதுக்கு பேர் வேறே வச்சு சொல்லணுமா? கடுகடுன்னாப் போறாதா? அந்தக் குழந்தையைப் பராமரிக்கிறதுக்குத்தானே... அவுங்களுக்கு உதவியாத்தானே நாம இங்க இருக்கோம்...? சும்மா தின்னுட்டுத் தின்னுட்டுத் தூங்கறதுக்கா?

என்னாடீ... நீயே இப்டிச் சொல்றே? ஓசிச் சோத்துக்கா உட்கார்ந்திருக்கோம். நம்ம பென்சன் பணம் பூராவும் அவுங்களுக்குத்தானே? உபகாரம் இல்லாட்டாலும் உபத்திரவம் இருக்கக் கூடாதுடீ...! வயசானவங்க கூடியானவரைக்கும் தங்களை ஒதுக்கிக்கிறது உத்தமம்! என் பாலிசி அதுதான்...!

அதுக்காக? கூட வச்சுக் கொண்டாடணும்கிற அவசியமொண்ணுமில்லையே? நாம இல்லாட்டா தாராளமா, இன்னும் கொண்டாட்டமாத்தானே இருப்பாங்க...?

நல்லா இருக்கட்டும்... யார் வேண்டாம்னாங்க...? அப்ப விட்டுடச் சொல்லு. ஆளப் போட்டுக்கட்டும், பார்த்துக்கட்டும், சந்தோஷமா விலகிக்குவோம்? இந்த வயசுல எதையும் நினைச்சு வருத்தப்படக் கூட உடம்பல தெம்பில்லையாக்கும்... எல்லாமும் ஒரு வயசுதான். அப்புறம் அவுங்கவுங்க ஃபேமிலியை அவுங்கவுங்கதான் பார்த்துக்கணும்... பறவைக்கு றெக்கை முளைச்சிடுச்சின்னா அதுகளாத்தானே இரை தேடிக்குது... தாய்ப்பறவையா கொண்டாந்து கொடுக்குது...? அது கூட்டுல இருக்கிறவரைக்கும்தான்... அதான் கைநிறையச் சம்பாதிக்கிறாங்கல்ல... எதையும் பணத்தைக்கொண்டு சாதிக்கலாம், விலை பேசலாம்ங்கிற திமிரு இருக்குல்ல? அப்போ இதையும் சேர்த்துச் செய்துக்கட்டும்... எதுக்கு ஒட்டிட்டுக் கிடக்கணும்... விலகியே இருப்போம்...! கண்ணால் கண்டு, காதால் கேட்டு, வாயால் பேசி... எதுவுமில்லை... பரப்பிரம்மம்... ஜெகந்நாதம்...!!

ஆனாலும் இப்படி விட்டுப் பேசி ஒருத்தரை நான் பார்த்ததில்லே... கொஞ்சம் கூடப் பாசமேயில்லையா உங்களுக்கு? ஈரமெல்லாம் வத்திப் போச்சா? வறண்டுடுத்தா?

ஆமாம்... அப்டித்தான் வச்சிக்கயேன்... என்று ஒரு போடு போட்டார் மந்திரமூர்த்தி. யாமினியின் வாய் அடைத்துப் போனது அத்தோடு. அவள் மனசு அநியாயத்துக்கு அலை பாய்ந்து கிடக்கிறது என்று உணர்ந்தார் இவர். தினமும் விழுந்து விழுந்து சாமி கும்பிடுகிறாள். மணிக்கணக்காக ஸ்லோகம் சொல்கிறாள். மனம் பக்குவப்படவில்லையா? சாமி கும்பிடக் கும்பிட பயம் அதிகமாகிறதோ?

மந்திரமூர்த்தி தன் அறையில் முடங்கிக் கிடந்தார். இருபத்தி நாலு மணி நேரமும் அந்த ஃபேன் ஓடிக்கொண்டுதான் இருக்கிறது இவருக்காக. அதுவே இவருக்குப் பெருத்த உறுத்தலா

யிருந்தது. கரன்ட் சார்ஜ் தன்னால்தான் அதிகமாகிறதோ? என்று. பில் வந்ததும் முந்திக்கொண்டு இவரே மின் கட்டணம் கட்டிவிடுகிறார். மொபைலில் டான்ஜெட்கோ ஆப்...பை இதற்காகவே வைத்திருக்கிறார். டெபிட் கார்டு போட்டு இறக்கி விடுகிறார். ரசீதை அவனுக்கு வாட்சப் பண்ணி விடுகிறார். இன்றுவரை ஒரு தாங்க்ஸ் கூடச் சொல்லவில்லை படுபாவி! அட... ஓ..கே.ப்பா...என்றாவது சொல்லலாமே? கெத்து...! அப்பன்ட்டத்தான் இதெல்லாம் காண்பிக்க முடியும்... வெளில செல்லுபடியாகாது!

எதற்கு வம்பு? ஏன் இவ்வளவு பில் வருது? என்று என்றேனும் ஒரு நாள் பையன் கேட்டால்? அட... அந்தப் பெண்தான் கேட்டு வைத்தால்? தன்னால்தான் என்று இவர் மனசு உறுத்தியது.

ராத்திரி பூராவும் ஏ.சி. ஓடுது... நானும் உங்கம்மாவும் அப்டியா போட்டுக்கிறோம்? ஒரு மணி நேரம் போட்டுட்டு அணைச்சிடுவோம். பிறகு ஃபேன்தான். முழு ராத்திரியும் தினமும் ஓடினா ஏன் இ.பி. பில் இவ்வளவு எகிறாது? பன்னெண்டாயிரம், பதினஞ்சாயிரம்னு வரத்தான் செய்யும்... இதுக்குன்னு ஒராள் தனியா வேலை பார்க்கணும் போல்ருக்கு...!

இப்போ ரெண்டாவது தடவையா கட்டணத்தை அதிகப்படுத்தியிருக்காங்க... அதனால வருது... பையனின் பதிலுக்கு எதிர்க்கேள்வி போட்டார் இவர்.

அப்டியானாலும் இவ்வளவு வராதே... ஏ.சி.தான் ஒரே காரணம் இதுக்கு. அதை சுருக்கமா பயன்படுத்தணும். உடம்புக்கும் கெடுதல்தானே? தாறுமாறாக் கரன்ட் இழுக்கத்தானே செய்யும்..? நாம என்ன ஏ.சிலயே பிறந்து வளர்ந்தவங்களா? ஃபேன் கூட இல்லாமத்தானே கெடந்தோம்... சொன்னார் மந்திரமூர்த்தி.

அது அவர் வளர்ந்த விதம். பையன் அப்படியா வளர்ந்தான். வசதியாய்த்தானே வளர்த்தோம். வறுமையையும், சிக்கனத்தையும், காட்டி, சொல்லி வளர்த்திருக்க வேண்டும். செய்யலையே? பிறகு இப்போ வருத்தப்பட்டு என்ன புண்ணியம்? இருந்தாலும் அப்பனுக்கு இருக்கிற புத்தி கொஞ்சங்கூடவா பிள்ளைக்கு இருக்காது? இல்லையா அல்லது பொண்டாட்டிக்கு பயந்து சாகிறானா? எவன் கண்டது? இவங்கள்லாம் ஆம்பளைங்கதானா? ஒரு குடும்ப அளவுல கூட இதுதான் சரின்னு நியாயங்களை நிலை நிறுத்த முடிலன்னா இவனுங்கள்லாம் என்ன ஆம்பிளைங்க?

வாயில்லை அவனுக்கு. பெண்டாட்டிதாசன். எப்படி வாய் திறக்கும்?முன்னயும் பின்னயும் பொத்திட்டுக் கிடக்கான் தடியன்...! இனிமே நானே கட்டிக்கிறேன் என்கிற பேச்சு மட்டும் வரமாட்டேனென்கிறது? அந்த ரோஷம் வேண்டாமோ? மனசில்லயே...! இதுல என்னைச் சொல்ல வந்துட்டானுங்க...

வெளில பேரனக் கூட்டிட்டுப் போனா அதை வாங்கிக் குடு... இத வாங்கிக் குடுன்னுது... ஆசைக்கு வாங்கிக் கொடுத்து வயித்தால போச்சின்னா? எவன் பொறுப்பாறது? பாலு மகேந்திரா படத்துல ரோட்டுக்கடை வடையை வாங்கிக்கொடுத்து அந்தத் தாத்தா திட்டுவாங்குவாரே! அந்த நிலமைதான் எனக்கு... அப்புறம்...! இவிங்ஞகிட்ட வார்த்தை கேட்கணும்னு எனக்கென்ன தலவிதியா?

மாடில விளையாடக் கூட்டிட்டுப் போனா ஓட்டமான ஓட்டம். துள்ளிக் குதிக்கிறதுல பெர்பெட். வாசலைத் தாண்டி வெளில குதிச்சிடும்போல்ருக்கு. அடி வயிறு கலங்குது... பதிலுக்குத் துணையா கூடவேயா ஓட முடியுது...? அங்க போகாதே... எட்டிப் பார்க்காதே... விழுந்துடுவன்னா கேட்கவா செய்துங்க...? பதறியடிக்குது மனசு...! கூட இருந்து குழி பறிக்கவா வந்திருக்கோம். சந்தோஷமா தனியா இருந்திட்டுப் போகட்டுமே... யார் வேண்டான்னுது?

என்னதவோ பண்ணிட்டுப் போகட்டும். எப்டியோ வாழட்டும். இதெல்லாம் நினைச்சு வருத்தப்பட்டிருக்க முடியுமா? அவுங்க வாழ்க்கை.. அவுங்க வாழட்டும். நாம எதுக்குக் குறுக்க...?

பேரன் பேத்தி பாசத்தைக் கூடத் தள்ளி வைத்துவிட்டார் மந்திரமூர்த்தி. கீழ மேல விழுந்து காயம் பட்டிச்சின்னாக் கூட நம்மளத்தான் சொல்வாங்க... பயந்து போய்க் கொஞ்சுவதைக் கூட விட்டு விட்டார். தாத்தா... தாத்தா.. என்று வந்து நின்றால் என்னடி தங்கம்... என்று அருகே நிறுத்தி அகமகிழ்வதோடு சரி.... இருக்கையைவிட்டு நகர்ந்தாரில்லை.

சொல்லிச் சொல்லிப் பார்த்துவிட்டாள் யாமினி. பலித்தபாடில்லை.

உனக்குத் தெரியாதுடி... அவுங்க எதுவும் சொன்னாலும் உனக்கு உறைக்காது. நான் என்ன உன்னை மாதிரி மொண்ணையா? அதான் இப்டி இறுகிப் போய்க் கிடக்கேன். அது உனக்கு உம்மணாமூஞ்சியாத் தெரியுது... அதுக்கு நான் என்ன பண்ணட்டும்...? எப்டி வேணாலும் நினைச்சிக்கோ... கவலையில்லை... என் மீதிக் காலம் இப்டித்தான். என் இருப்பு இதுதான்... இவ்வளவுதான்... இஷ்டம்னா சொல்லு... இல்லையா ஆளவிடு... ஊர்ல போய் நான் தனியா இருந்துக்கிறேன்... நான் என்னைக்குமே தனிக்காட்டு ராஜாதான்... நீதான் பிசினா அவனோட ஒட்டிண்டிருக்கியே? எனக்கு நீ கூட இல்லையேங்கிற கவலையும் இல்ல... என்பாடு எனக்கு... உன்பாடு உனக்கு... அவ்வளவுதான்... நீ முந்திண்டா நோக்கு... நா முந்திண்டா நேக்கு...! என் மனசு என்னிக்கோ விலகிப் போச்சு...! வாரணாசியோட மணிகர்ணிகாதான் அடிக்கடி நினைவுல வருது இப்போ... அதுக்கெல்லாம் கொடுத்து வச்சிருக்கணும்... நான் இப்போ லௌகீக வளையத்துலர்ந்து விலகி நிற்கிற சுத்த சந்நியாசி...

போதும்... போதும்... உங்க திருவாயை மூடுங்க... அவுங்க வர்ற சத்தம் கேட்குது... சுத்த சந்நியாசி... பெத்த சந்நியாசினிட்டு... சரியான ‘இடிச்ச புளி’... அந்தப் பேர்தான் சாலப் பொருத்தம்..... சாபமிடுவதுபோல் சொல்லியவாறே வாசலை நோக்கி ஓடினாள் யாமினி. எதுக்கு இந்த ஓட்டம்? ஐயோ பாவம்...! நினைத்துக் கொண்டே உறாலை விட்டு நகர்ந்தார் நம் நாயகர்.

இடிச்ச புளி... இடிச்ச புளி...! நல்லாயிருக்கே...!! தனக்குத் தானே அழுந்தச் சொல்லி சிரித்துக் கொண்டார்.

நண்டு மீண்டும் வளைக்குள்
புகுந்து கொண்டது.



ushadeepan@thaiveedu.com

# ஓடி ஒளிந்தாலும் நானே உன் காதலி

– அ. கந்தசாமி



என்ரை பெயர் நச்சினார்க்கு இனியன். பெயரை கேக்கிறவை ஏதோ ‘ஏலியன’ப் பாக்கிற மாதிரிப் பாத்திட்டுக் கொஞ்சம் தள்ளிப்போய் வடிவேலின்ரை பகிடியைக் கேட்டமாதிரி வாயைப் பொத்திச் சிரிச்சுக்கொண்டு போக்கினம். ஏன் வீண் சோலி எண்டு பெற்றார் வைச்ச பேரைக் கவ்வாத்துப் பண்ணி ‘இனியன்’ என்றாக்கிப்போட்டன். இதனால் சகலரும் அறிய வேண்டியது இனிமேல் என் பெயர் இனியன். இப்ப கதைக்குள்ளை வருவம்.

இப்போ, இனியன் ஒரு நல்லாசிரியன். ஆசிரியன் என்று தன்னடக்கத்தோடு குறிப்பிட்டிருக்கலாம்தான்.

தன்னைத்தானே தாங்கிப் பிடிக்காத எந்த உசிரும் கால வெள்ளத்தில் காணாமல் போய்விடும் என்று எங்கள் முன்னோடி ஒருத்தர் எழுதிவைச்சிட்டுப் போயிருக்கிறார். ஆளின்ரை பெயர் நினைவில இருந்து வழுக்கீற்ருது. அநேகமா வள்ளுவனாத்தான் இருக்கும். இளங்கோவடிகளா இருக்கேலாது. சமணனா இருப்பதற்கான சாத்தியக் கூறுகளே என சரித்திரத்தைக் கிண்டினவை சத்தியம் பண்ணுகினம்.

நம்பேலாது. சைவனாத்தான் இருக்கவேணும் எண்டு ரொறன்ரோ சர்வகலாசாலையிலை ஒன்றில் தமிழிலை டொக்ரேட் செய்யும் தம்பி ஒருத்தர் திருக்குறளிலையே அடிச்சுச் சொல்லுறார். இருக்காது, வீர சைவராத்தான் இருக்கவேணும் எண்டு இன்னொருத்தர்.

அய்யன்மாரே சென்னியில் கைகூபிக் கேக்கிறன், என்னை விட்டிருங்கோ. எனக்குத் தலை போற சோலியள் இருக்கு. ஒவ்வொரு சொல்லுக்கும் விளக்கம் கேட்டியள் எண்டா மனிசி கழுவாமல் ஸிங்கிலை போட்டிட்டுப்போன பாத்திரங்கள் அம்பாரமா குவிஞ்சு கிடக்கு அதை விளக்கிறதுக்கு போயிருவன்.

நான் ஆசிரியனாக அவதாரமெடுக்க நேர்ந்தது இப்படித்தான். இலங்கைப் பல்கலைக்கழகமொன்றில் கிடைத்த பட்டத்தை வைத்து கிளறிக்கல் வேலையும் தேடேலாது என்ற நிலை. ஒரு நாலு மூலை, எட்டு மூலை பட்டத்தையாவது ஒட்டலாம் எண்டால் அதற்கும் உதவாது. வீட்டுக்குள்ளையே அடைக்கோழியா அடைஞ்சு கிடக்கிற சீவனை தோளுக்கு மேலை நிமிர்ந்த, கன்னக்கதுப்புகள் வாலிபப் பருக்களால் நிறைந்த ஒருவனை வீடுக்குள்ளை வைச்சுக்கொண்டு என்ன செய்யலாம்.

அம்மா கை எடுக்காத தெய்வங்கள் இல்லை. கிறிஸ்தவ ஆலயங்களுக்கும் போவா. அவர்கள் மதமாற்றம் பற்றிச் சாடைமாடையா அருக்கூட்ட, அதுவும் தடைப்பட்டுப் பேச்சு. நான் உழைச்சுத்தான் குடும்பப் பட்டத்தைக் கூரையில் ஏற்ற வேண்டும் என்ற அந்தரத்தில் வீடு இல்லை. ஒரு குமர்ப் பொடியன் வீட்டுக்குள்ளையே குமைஞ்சு கொண்டு கிடப்பது பெற்றோர் என சபிக்கப்பட்டவர்களுக்கு ஒத்துவராது. தவிரவும் அண்டை அயலார் தரும் அலுப்புகள் வேறு.

‘என்ன தம்பிக்கு இன்னும் வேலை ஒன்றும் சரி வரேல்லைப் போலை.’

‘ஓம்... ஓம்... ட்ரை பண்ணிக்கொண்டுதான் இருக்கிறார். இப்ப என்ன அவசரம்... எல்லாம் பையப்பைய நேரகாலம் வரேக்கை நடக்கும்தானே.’

‘இனி வர்ர போன் கோல்களைப் பாத்துத்தான் எடுக்க வேணும். உவளுகளுக்கு ஊர்த்தொழவாரங்களை தோண்டுறதுதான் தொழில். வீட்டிலை உள்ளவன் சரியாய் இருந்தா அவளுகளும் பொத்திக் கொண்டு கிடப்பாளுகள்’. நயத்தகு நாகரீகம் கருதி அம்மாவின் புறுபுறுப்புகளை பல இடங்களில் சென்ஸர் செய்துள்ளேன்.

ஏதோ ஒரு நாட்டார் தெய்வத்திற்கு இவவின் குரல் கேட்டிருக்க வேணும். இல்லாவிட்டால் ‘கூல்’ என்ற அற்புதமான மனிதன் நைஜீரியாவில் ஆசிரியர் வேலைக்கு விண்ணப்பிக்கச் சொல்லி படிவங்களோடு வந்திருக்கமாட்டார். ஒண்டோ, ஓயோ மாவட்டங்களின் கல்லூரி உயர் மட்டங்களில் அவருக்கிருந்த அபரிதமான செல்வாக்கால் இது சாத்தியமாயிற்று.

ஒருசத செலவுமில்லாமல் அந்தப் புண்ணியவானால் நான் நைஜீரிய மண்ணில் வந்திறங்கினேன். அப்ப ஒரு நாராவும் பவுண்டும் நீயா ? நானா ? என்று கைமுஸ்டி போட்டுக் கொண்டிருந்த காலம். பணக்கார கறுவல்களும் போகும் இடங்களில் நிழல் கண்டால் தோள்த் துண்டை விரித்து தொழுகை செய்யும் அல்காஸிகளும் ஸுட்கேஸுகள் தளும்பி வழிய ‘நாரா’ கத்தைகளை திணித்துக்கொண்டு லண்டன். அமெரிக்கா எனப் பறந்து கொண்டிருந்தனர். தலைநகரமான ‘லேகோசில்’ வந்து சேரும் விமானங்களில் வாய்ப்புகளை நாடிவரும் நாதியற்றோர் தொகை எக்கச்சக்கம்.

வெள்ளையளுக்கு எங்களை விட மோப்ப சக்தி அதிகம்.

நைஜீரியா என்றொரு தேசத்தை உலகவரைபடத்தில் யாழ்ப்பாணி கிண்டிக்கிளற வெளிக்கிட்ட காலத்திற்கு சில தசாப்தங்களுக்கு முன்னரே அவர்கள் நைஜீரியாவை ஒரு வழி பண்ணி வைத்திருந்தனர். உற்பத்தியிலேயே நைஜீரியர் கள் கையூட்டு வாங்கும் குறைபாடு கொண்டவர்கள்.

பிரபல்யமான பகிடி ஒன்றுண்டு. 'சுவரில் தொங்கும் அவர்க ளின் அதிபரின் புகைப்படத்தின் முன் ஒரு பத்து 'நாரா' தாளைக் காட்டினால் மனிசன் இறங்கி வந்து நன்றி சொல்லி வாங்கிப் போவார்' என்று. மிகைப்படுத்தப்பட்ட நக்கல் தான். நைஜீரிய வாழ்க்கையைச் சுகித்தவர்களைச் சந்திக்கும் பேறு பெற்றவர்களோடு சம்பாசனை செய்து பாருங்கள். நெருப் பின்றிப் புகை இல்லை என்பது நிரூபணமாகும். அவர்களின் மனையாட்டிகளின் எண்ணிக்கையை இரு கை விரல்களுக் குள் அடக்குவீர்களாயின் உங்களுக்குச் சுடச்சுட தட்டு நிரம்ப வெங்காயத் தாளிப்போடு 'ஸூயாவும்', கலப்படத்தில் சல்லிசாகக் கிடைக்கும் விஸ்கியும் தரப்படும்.

நான் பிரமச்சாரி என்பதால் கைச்செலவு கம்மி. ஊரில் என் கையை நம்பி யாருமே இல்லை. ஸூட்கேஸிற்குள் உடைக ளைத் திணித்துக்கொண்டு வெளிக்கிடும் வேகத்தில் இருந்த போது அம்மா சொன்ன வார்த்தைகள் 'தம்பி இங்கை எங்க ளுக்கு ஒரு சத்தக் காசும் அனுப்பத்தேவை இல்லை. உன்னை அனுப்பிறதுக்கு ஈடுவச்ச காணித்துண்டை இந்த வரிசத்துக்குள்ளை நாங்கள் மீட்டுப் போடுவம். நீ உழைக்கிற காசை வீணாக்காமல் சேத்து வைச்சுக்கொள்.'

கெட்டபழக்கங்கள் என எங்கடை ஆக்களால் விலத்தி வைக் கப்பட்ட ஸூதகக் கரிக்கோடுகளுக்குள் அடியேன் சயனித் தது இல்லை. படு அப்பிராணி. இயல்பிலேயே கூச்ச சுபாவம். நங்கையரைக் கண்டால் நான் நத்தையாகி நகர்பவன். தெரு வில் போகும் போது சேலைகளிலோ, தாவணிகளிலோ தடுக் குப்பட நேர்ந்தால் மங்கையரை அல்ல என்னைத் தாங்கி நிற் கும் மண் தரையைத்தான் நயனங்கள் துளாவும்.

தவிரவும் எங்களின் ரசனைக்குகந்த உடல்வாகு நைஜீரியப் பெண்களிடம் துளியும் இல்லை. தொய்ந்துபோன முலைக ளும், பின்னால் பிரிந்து சரிந்திருக்கும் பிருஷ்டமும் எங்களின் கரிசனைக்கு அப்பாற்பட்டவை. என்ரை எடுபட்ட தலைவிதி யைப் பாருங்கோ என்னை எந்தப் பாடசாலைக்கு ஆசிரிய னாக அனுப்பலாம் என்பதைத் தீர்மானிக்கவேண்டிய கல்வி இலாகா மேலதிகாரி முகட்டைப் பார்த்து, முன் வழுக்கை யைத் தடவி, பின் சொறிந்து என் மூஞ்சையை ஊடுருவி எடுத்த அபுத்திசாலித்தனமான முடிவு, இவனை ஒரு பெண்க ளின் பாடசாலைக்குத் தள்ளி விடுவம் என்பதே. எதிர் காலம் கைகொட்டிச் சிரித்து குதூகலித்த ஓசை அப்போது என்செவி களை எட்டவில்லை.

கற்பித்தல் எனக்கு மிகவும் பிடித்த பணி. வகுப்பிலுள்ள நாப் பது பெட்டையளில் ஒரு கை விரல்களால் எண்ண முயன்றால், சிலவிரல்கள் எஞ்சும் எண்ணிக்கையினரே கரும்பலகையில் கவனம் பதிப்பர். மற்றவர்கள் அவரவர் பாடு. 'கற்பித்ததில் வீட்டுப் பயிற்சிகள் கொடுப்பதில்லையா?' நல்லாக் கேட்டி யள். ஏன் இல்லை. எல்லாமே உண்டு ஐயன்மாரே. படிப்பிக்கி றேனோ இல்லையோ ஒவொரு வகுப்பிலும் படிப்பிக்க வேண் டிய பாடக்குறிப்புகள் திகதிவாரியா கட்டுக் கட்டாக வீட்டுப் பர ணில் தூசு மண்டிக் கிடக்கு. எப்பவாவது வாத்தி ஒழுங்கா படிப்பிக்கிறானா? என்று கிண்டிக்கிளற ஒருத்தர் வருவார். எல்லாத்துக்கும் ஒரு சூட்ஸ்சுமம் கைவசம் இருக்கு. 'எக் காரோ' என்று 'ஜோரூபா' மொழியில் வரவேற்றால் மனிசன் உள்ளங்கால்வரை சில்லிட்டுப் போவார்.

மத்தியானம் ரெண்டு மணியோடு பாடசாலை முடிந்து போகும். சாப்பாட்டுக்குப் பின் ஒரு மணி நேரத்தூக்கம் போது மானது. பகலில் கூடுதல் நித்திரை இரவின் இயல்பான இளைப்பாறலைக் கெடுக்கும். பின்விளைவுகளும் பல. எல் லாவற்றையும் நாகரீகம் கருதி எழுத்தில் எதிர்பாக்கக் கூடாது. எப்பவாவது ஒரு குளிர் பியர், துணைக்குச் சுவை யான ஸூயாத்துண்டுகள்.

என்னுடைய ஜாதகத்தில் சனிபகவான் எந்த வீட்டுக்குள் இருந்தாரோ எனக்குத் தெரியாது. அவர் என்னைப் பார்க்க வில்லை. என் வாழ்வின் வசந்த காலம் அது. குளித்து 'பிரஸ்' ஆகி வீட்டுக்கு ஒரு காகிதமெழுதிப் போட்டுவிட்டு மேல் மாடி யில் ஏதாவது வகுப்புக்குள் புகுந்து விட்டுவீதியாகக் கால் களை நீட்டி ஒரு புத்தகத்தைத் திறந்தால் நிம்மதியான வாசிப்பு. வெளியே வெப்பமாக இருந்தாலும் யன்னலைக் கடந்தபின் காற்று வேகரம் குறைந்து தென்றலாகவே வீசும். பலசமயங்களில் காதில் உள்நுழையாக் குறையாக ரீங்கரிக் கும் நுளம்போ, தலையைச் சுற்றி அரியண்டம் தரும் இலை யானோ பெரிய ஆக்கினையளா நான் கருதியதே இல்லை.

நான் கணிதம் கற்பிக்கும் பதினோராம் வகுப்பு மாணவி ஒருத் தியால்தான் சனிபகவானின் இருப்பை உணர நேர்ந்தது. அந்த சோகம் சொட்டும் கதையைத்தான் உங்களோடு பகி ரப் போகிறேன்.

மதிய இடைவேளைக்குப் பின் பதினோராம் வகுப்பில் கணி தம் கற்பிக்கும் ஆசிரியனாக அரிதாரம் பூசி நுழைந்தபோது வெளியே புல் பூண்டுகள் யாவும் வெய்யில் காந்திக்கொண்டி ருந்தன. போறணைக்குள் நுழைந்தது போன்ற புழுக்கம். வகுப்பினுள் மயானத்திலும் கிடைக்கா மரண அமைதி. 'குட் ஆப்ரனூண் சேர்' துல்லிய ஆங்கில உச்சரிப்போடு எழுந்த ஒரு பெட்டையின் குரல் முழு வகுப்பையுமே தூக்கம் கலைந்து நிமிரவைத்தது. அந்தக்குரலின் சொந்தக்காரிதான் என் ப்ரிய மாணவி ஆகப்போகும் மொனிக்கா டேவிட்.

மொனிக்கா மற்றப் பெட்டையளைப்போல் நிறம் சுண்டியவள் அல்ல. அவர்களைப்போல தடிச்சியும் இல்லை. எண்பது வீத வெண்மை எஞ்சிய பல நிறங்களோடு கலந்தால் வருமே அப் படித் தொட்டுப் போட்டுவைக்கத் தூதுவிடும் மாநிறம். கட்டா யமாக இது ஒரு கலவன்தான். தலை மயிரை வைத்தே இம்மு டிவுக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம். ஒரு வெள்ளைப் பெட்டை யின் தலையில் அட்டைக் கறுப்பில் சுருண்டு, கலைந்து தலையெங்கும் தெட்டம் தெட்டமாய் பரந்திருப்பது ஒரு தனி அழகுதான்.

நைஜீரியர்களின் இயல்பு வாழ்வை ஆராய வந்த 'டேவிட்' என்ற வெள்ளையன் மொனிக்கேயின் தாயார் மிஸ்சுபாவிடம் செவ்வி எடுக்க வந்த போது, அவளிடம் என்னத்தைக் கண் டானோ... தடக்கி விழுந்தவன் ஊர் திரும்பவேண்டிய நிர்ப்பந் தத்தில் நிமிர்ந்த போது மொனிக்கே என்ற தன் எட்டு வயது மகளைத் தன்னோடு கூட்டிச்செல்ல முயன்றான்.

சட்டதிட்டங்களைக் கையூட்டுகளால் எளிதில் களைந்திருக்க முடியும். எந்தச் செடியும் தாய் மண்ணில்த்தான் அதனதன் பூரண அழகோடு ஜொலிக்கமுடியும். அன்னிய மண்ணில் பதி



யமிட்டால் அது அநாதையாய்ப் போகும். அல்லது அழிந்து போகும். அவன் படித்தவன். மனித நேயன். நிதானித்தான். தன் மகள் தலையெடுக்கும்வரை தகப்பன் என்கிற கடமை யில் தன் குவிந்த கைகளுக்குள் பொத்திப் பாதுகாக்க நினைத்தான்.

திருமணத்திற்கு முந்திய நைஜீரியர் வாழ்க்கை முறையே தாறுமாறானது. வள்ளுவர் இங்கு காலடி வைக்கக் காலம் அனுமதித்திருந்தால் 'ஒழுக்கம் விழுப்பம் தரலான்...' என்ற குறள் குறைப்பிரசவமாய் கருவிலேயே குலைந்திருக்கும். அல்லது வள்ளுவனாரே மழித்தலும் நீட்டலும் தவிர்த்து ஐந்

தாறு குடிசைகளுள் நுழுந்தி வரவு செலவு வைத்திருக்கவும் வாய்ப்புண்டு. 'பாம்பு தின்னிற ஊருக்குப்போனா நடுமுறி நமக்கே' என்ற சொல்லாடல் சொற்கூட்டி எழுதும் எங்களுக்கே தெரியும்போது வள்ளுவனுக்குத் தெரிந்திருக்காதா என்ன?.

வெள்ளையனால் வளர்க்கப்பட்ட மொனிக்காவுக்குத் தாய் மொழியும் ஆங்கிலமும், வானமும் அதில் கலைந்தலையும் நீல வண்ணமும் போல.

குடிசைகள் மலிந்த பிரதேசத்தில் அழகான செங்கல்லால் கட்டிய வீடு. பூட்டும் திறப்பும் கொண்ட முதிரை மரத்தாலான வெளிக்கதவு. சாக்குப் படிவங்கள் தொங்கும் நுழைவு வாசல்களைப் பார்த்துப் பழகிப்போன கண்களுக்கு இது பெரிய பூராயம். முதலில் ஆச்சரியம். 'எப்படி... எப்படி இது நடந்தது?' இந்தத் தோல் இல்லாத இங்கிலீஸ்காரனை இந்த மிஸ்சுபா எதைக் காட்டி மயக்கினாள்.

அடுத்து ஆராய்ச்சி. 'எங்களிட்டை இல்லாத என்னத்தை இவள் பொத்தி வச்சிருக்கிறாள்?' பெருமூச்சுகளே இதற்குப் பதிலாச்சு. அதற்குள் மொனிக்கா தகப்பனின் நிறக்கலப்போடும், அந்நியப்பட்ட கண்களோடும் பிறந்து தவளத் தொடங்கினாள். விடுப்புப் பார்த்தல் எல்லா இனங்களுக்கும் ஜனத்தோடு பிறந்ததுதான். 'ஈவில் அய்' என்று ஆங்கிலத்தில் அச்சத்தோடு சொல்லப்படும் தீய பார்வை மொனிக்காமீது விளாதது அவள் அதிஷ்டம். குமரியாகி பெண்கள் படிக்கும் ஒரு பேர் பெற்ற கல்லூரியில் சேர்ந்தபோது கல்லூரியே விடுப்புப் பார்த்தது. ஒரு வெள்ளைக்காரனே காரில் கொண்டு வந்து இறக்கி, காத்திருந்து கூட்டிப் போகிறான் என்பதைப் பார்த்து வியந்த கல்லூரி வளாகம், அவன்தான் அவளது தகப்பன் என்பதை அறிந்ததும் கொஞ்சம் அதிர்ந்துதான் போயிற்று.

நைஜீரியாவில் சாலை போடும் வேலைகளின் பிரதான பொறியியளாளர்கள், தண்ணீர் வினியோகப் பணியின் தலைமையாளர்கள் என சகல 'கோப்பரேசன்'ஸிலும் முகாமையாளர்களாக இருப்பது பத்திற்கு எட்டுப் பேர் வெளிநாட்டவரே. குறிப்பாக இலங்கையர், இந்திய மலையாளிகள், அருப்புத் துருப்பாக சில வெள்ளையர்கள். நைஜீரியாவின் 'நாரா' அதிவேக எதிர் ஆர்முடுகலோடு சறுக்குவதை மோப்பம் பிடித்த வெள்ளையர்கள் அற்ற குளத்து அறுநீர்ப் பறவையாயினர். இப்போது எண்ணிப்பார்க்க வெளிகிட்டால் ஒரு கை விரல்கள் கூடுதல். டேவிட் முகாமையாளனாகப் பணிபுரியும் கொம்பனியில் அவனைத் தவிர அனைவருக்கும் சம்பளம் 'நாரா'விலேயே வழங்கப்படுவதாலும், அவன் இல்லாவிடில் கொம்பனியின் வெளிக் கேற்றில் திண்டுக்கல் பூட்டு தொங்கும் என்பதாலும் பல்லைக் கடித்துக்கொண்டு அவனது சம்பளம் குறைக்கப்படாமல் டொலரிலேயே மிஸ்சுபாவின் பெயரில் வங்கியில் விழுந்து கொண்டிருந்தது.

இனியன் குளித்து முடித்து யன்னலுக்கு அருகில் வந்து வெளியே பார்த்தபோது வானம் மப்பாகி மழை வருவதற்கான அறிகுறிகளைக் காட்டியது. பெரிதாகப் பசியில்லை. என்றாலும் பழக்க தோசத்தில் நாலு பருக்கைகளை கோழிக்குளம்போடு பிசைந்து வேண்டாவெறுப்பாக மென்றுவிட்டு படுக்கையில் சாய்ந்தான். இடப்பக்கமாகச் சரிந்து தலகணியோடு அணைந்தான். நித்திரை வருவதுபோல் இல்லை. மனதுக்குள் ஏனென்று பிடிபடா குமைச்சல்கள். ஊருக்கு போய் அம்மாவின் மடியில் முகம் புதைத்து அழவேண்டும் போல் மனம் விம்மியது. இடைக்கிடை இப்படி நேர்வதுதான். தூக்கத்தின் தொடைகளில் தலைசாய்த்தபின் கனவுகள் வரும். முன்னர் கண்டு பழக்கமே இல்லாத பல பெண்கள் வந்து போவார்கள். விழிப்பு வந்ததும் சாரத்தை கழட்டி தோய்க்கப் போட்டுவிட்டு மீண்டும் ஒருமுறை தோய்ந்து தலை துவட்டுவான்.

இந்தமுறை லீவில் ஊருக்குப்போனால் அம்மா பாத்து வைச்சிருப்பதாச் சொல்லி இவன் பறவாய்ப்படுத்தாத அந்தப் பெட்டையை ஒருகா பாப்பம். உடனை ஓமெண்டு ஒத்துக்கொள்ளக் கூடாது. அருக்காணி பண்ணி, வேண்டா வெறுப்பா பேசிப்பழகி கைபோட்டு...

நாயே நாயே நீ திருந்தப் போறதில்லை. உனக்குக் கலியாணம் கனவிலைதான்.

வருவது போல் அசுமாத்தமா ஆட்டம் காட்டிய தூக்கத்தையும் துரத்தியாச்சு. மேலும் படுக்கையில் இருக்க இயலாது. எழுந்து முகம் திருத்தி, உடை மாற்றி, வாசித்து முடிக்காமல் குறையாக வைத்திருந்த 'சேக்ஸ்பியர் இன் லவ்'வைத் தூக்கிக்கொண்டு வெளியே வந்தான். மழை மிகச் சாதுவாகத் தூறிக் கொண்டிருந்தது. நாலெட்டில் மண்டபத்தைக் கடந்து மேல் மாடியை அடைந்தான். ஒதுக்கமான வகுப்பறை ஒன்றைத் தேடும்போது 'சேர் நான் இங்கை இருக்கிறன்' என்று மொனிக்காவின் குரல் கேட்டது. ஒரு வகுப்பறை வாசலில் நின்று அவள் கையசைத்துக் கொண்டிருந்தாள். ஹாவ்ஸ் கேட்டின் கீழ் இரண்டு கால்களும் பளீறிட்டன. 'சேர் இண்டைக்கு மத்ஸ் வேணாம். ஒரு சேஞ்சுக்கு உங்கடை தமிழைப் படிப்பிப்பீங்களா?' குரலில் செல்லமான கெஞ்சல் தொனித்தது.

'தமிழ் உனக்கு எதுக்கு? தமிழைப் படிச்சு நீ என்ன செய்யப் போறாய்?'

'ஆருக்குத் தெரியும். உலகம் சுருங்கி வர்றதா சொல்லுகினம். சிலவேளை ஒரு தமிழனை நான் கலியாணம் செய்யவேண்டி வந்திட்டா...' அவள் முகத்தில் நேற்றுவரை தோன்றி இராத நாணம் தலை நீட்டியது.

'தமிழர்கள் நீ நினைக்கிற மாதிரி ஆக்களில்லை. சரியான ஓதோடொக்ஸ். சாதி, சாத்திரம், சம்பிர்தாயம், கோத்திரம், சீர்சினத்தி எண்டு பல...'

'எனக்கு ஒண்டுமே விளங்குதில்லையே...' இடைமறித்தாள்.

நல்லது, விளங்காமல் இருக்கிறதே உனக்கும் நல்லது. ஊருக்கும் நல்லது.

சேர் நீங்களும் உதுகளை நம்பிறனீங்களோ?

'இல்லை. ஆனா, என்ரை அப்பா அம்மா உதுகளில ஊறி உழுத்துப் போனவை.' மொனிக்கா தலையைக் குனிந்து மௌனித்தாள்.

சேர் ஒண்டு கேக்கப் போறன் மறைக்காமை உண்மையை சொல்லவேணும். குனிந்த தலை சற்றே நிமிர்ந்து இவன் முக பாவனையை ஆராய்ந்தது. 'நான் சாதாரணமாகப் பொய் பேசுவதில்லை' புன்சிரிப்போடு அவள் கண்களைப் பார்த்தான். இனம் காணமுடியா ஏக்கம் தேங்கித் தழும்பி அவள் முகமெங்கும் வழிந்தது.

'நீங்கள் யாரையாவது காதலிக்கிறியளா...?' இவள் ஏன் இப்பி

டிக்கதைக்கிறாள். என்னட்டை நல்லா இடம் கண்டுட்டாள் போலை. இப்பிடியே போகவிட்டா ஆரோடையாவது உடலுறவு வச்சீங்களா என்று கூட விசாரிக்கலாம்... யார் கண்டினம். கடிவாளத்தை இறுக்கிப் பிடிக்காவிட்டால் கதை கந்தல். சொற்களைச் சேகரித்து முகத்தை வேறுபக்கம் திருப்பி 'அது என்னுடைய தனிப்பட்ட விவகாரம். மாணவி ஒருத்தியோடு இது பற்றிப் பேசுவதே பிழை.' என்றான்.

மொனிக்கா சிவந்து நின்றாள். முகத்தில் ரவுத்திர ரேகைகள் வலை பரப்பின.

ஓகோ... சரி சேர். இப்ப சொல்லுங்கோ, நான் உங்களைக் காதலிக்கிறன் எண்டு வச்சுக்கொள்ளுவம், அப்ப என்ன செய்வியள்...

'மொனிக்கா... என்ன விளையாடுறீரா' நானும்மடை டீச்சர், எல்லா விசர்தனத்துக்கும் ஒரு எல்லை இருக்கு.

சேர், உந்த உதவாக்கரை எல்லையளை நான் மனசாலை கடந்து கன நாளாச்சு. உங்களைக் கண்ட நாளிலை இருந்து...

அவள் சொல்லி முடிக்கவில்லை. இனியன், தலைமை ஆசிரியரின் அறை வாசலில் நின்றான். உள்ளே தலைமை ஆசிரியர் சிலரோடு கதைத்துக் கொண்டிருந்தார். இவன் கதவுக்கு வெளியே ஓரமாகத் தள்ளி நின்றான்.

பின்னால் சரசரப்புக் கேட்கவே தலையைத் திருப்ப... அங்கே, மொனிக்கா உதட்டைக் கடித்தபடி, தலையை ஒருச்சரித்து 'எப்பிடி சேர் வசதி' என்று கேட்காமல் கேட்டு நின்றாள்.

இவளை வெருட்டி வைக்க மட்டுமல்ல அதிபர் பார்த்துவிட்டு அழைத்து என்ன வேணும் என்று கேட்டால் இலங்கை போக ஒரு மாதவிடுப்புக் கேட்டுச் சமாளிக்கலாம் என்ற மனக்கணக்கோடு நின்றவனின் உள்ளங்கால்கள் சில்லிட்டன.

எடியேய் நீ ஏன்ரி எனக்குப் பிறத்தாலையே திரியிறாய் ?

சேர், எனக்கும் அதிபரிட்டை சொல்ல ஒரு முறைப்பாடு இருக்கு.

சொல்லு நல்லாச் சொல்லு அதுக்கேன் எனக்குப் பின்னலை நிக்கிறாய்.

என்ரை முறைபாடே உங்களைப் பற்றித்தானே சேர்.

என்னைப் பற்றி என்னடி முறைப்பாடு. நான் என்ன செய்தனான் உனக்கு.

என்னதான் செய்யேல்லை எனக்கு. உங்கடை அறைக்குத் தனியாக் கூப்பிட்டு... போங்கோ, எனக்குச் சொல்லவே வெக்கமா இருக்கு.

இனியன் நின்ற தரையில் பள்ளமொன்று பறிந்து பாதாளம் வரை போவதுபோல் உணர்ந்தான்.

'எடி பாவி... படுபாவி. நாக்கு அழுகிப்போமேடி. இப்பிடி ஒரு பச்சைப் பொய்யை மனச்சாட்சி இல்லாமக் கதைக்கிறியேடி... நல்லா இருப்பியா ? நாசமப்போயிருவாய்.'

'எப்பிடியோ போறன் சேர். நீங்கள் தலைகீழா நிண்டு தண்ணி குடிச்சாலும் இங்கை நான் சொல்லுறதுதான் எடுபடும். பொதுப்புத்தியிலை ஊறிப்போன ஒரு வேதவாக்கு என்ன தெரியுமோ ? 'வெள்ளையன் பொய் சொல்ல மாட்டான்.' இப்ப நீங்கள் எத்தினை வட்டங்களைப் போட்டுக்கொண்டு போனாலும் ஒவ்வொன்றுக்கும் மையப்புள்ளி மொனிக்காவாத்தான் இருப்பாள். உங்களால தப்பிக்க முடியாது சேர். நீங்கள் இலங்கைக்குப் புறப்பட பெட்டி படுக்கையள் கட்டுறியள் என்றதும், அங்கைபோய் ஆரோ ஒருத்தியைக் கட்டத் திட்டம் போடுறதும் நல்லாவே தெரியும். மிஸ்ரர் நச்சினார்க் இனியன், நான்தான் உங்கடை திருமதி என்றது எப்பவோ முடிஞ்சு போன காரியம். தாலி கட்டுறதுதான் பாக்கி. அதையும் பெரியவர்களின் ஆசீர்வாதத்தோடை செய்யத்தான் காத்திருக்கிறன்.

இனி இவளோட கதைச்சு ஒரு சல்லிக்கும் பிரயோசனமில்லை. புரி கழண்டு போச்சு. பாவம், புலம்புறாள். கோயிலுக்குப் போய் திருநீறு பூசேக்கை இவளையும் நினைச்சுக் கொள்ளுவம். நான் என்ரை பாட்டைப் பாத்துக்கொண்டு நகருவம். பார்வை எல்லைக்குட்பட்ட தொலைவில் போகும்போது எதேச்சையாகத் திரும்பிப் பார்த்தான். அவளைக் காணவில்லை. அவள் நின்ற இடத்தில் இரு அக்கினிக் கங்குகள் கனன்று கொண்டிருந்தன.

பழகிய எவரோடும் எந்தச் செய்தியையும் பகிரவில்லை. சொல்லாமல் கொள்ளாமல் எங்கே போனான். தேடுவார்கள். மிக நெருக்கமானவர்கள் கவலைப்படலாம் பின் கோபப்படலாம். இடியப்பச் சிக்கலில் இருப்பவன் நிலை எவருக்கும் புரியாது. பிளேன் ஏறும்வரை எதிர்பார்க்காத எதுவும் நடக்கலாம். பயணமே தடைப்படலாம். அதிபருக்கு மட்டுமே புறப்படும் திகதி தெரியும். இலங்கைக்குப் போறவன் திரும்பி வரப்போவதில்லை என்பதையும் உணர்த்திருப்பார். அவர்களுக்கு இதெல்லாம் பெரிய விசயமில்லை. ஆயிரத்தில் ஒன்று.

பிளேனில் ஏறிச் சுற்றிவரப் பார்த்தான். முகமறிந்த சுவடுகள் இல்லை. யன்னல்ப் பக்க இருக்கையில் கால்களை நீட்டி ஆசுவாசமாக உட்கார்ந்தான். இந்த நிமிடம்வரை தறிகெட்டுத் துடித்த இதயம் இயல்பு நிலைக்குத் திரும்பிக் கொண்டிருந்தது.

'சேர்' என்ற குரல் கேட்க இனியன் இருக்கையின்மேல் சில அங்குலங்கள் அந்தரத்தில் மிதந்தான்.

நானும் உங்கடை ஊருக்குத்தான் போறன் என்ர கல்யாணத்துக்கு முதல் மாமா, மாமியைப் பாத்து ஆசீர்வாதம் பெற வேணுமெல்லே. பக்கத்து இருக்கையில் அமர்ந்து சீர் பெல்ற்றை சிக்காராக அணிந்து கொண்டு, இரண்டு ஷோட்ஸ் விஸ்கி ஒன் ரொக்ஸ் என்றாள்.

(இந்தக் கதையை படிப்பதற்கு முதல், அரை நூற்றாண்டுக்கு முற்பட்ட நைஜீரியா எனும் பொன் கொளித்த பூமியின் அக்கால நிலையைக் கூகிள் பண்ணிப் பார்த்தல் உங்களுக்கு பாதுகாப்பு. என்ன இழவு ஒரு மண்ணாங்கட்டியுமே பிடிபடுகுதில்லையே என்று எம்மீது குறைபட்டால் அதற்கு ஆண்ட வனே காப்பு.)



kandasamy.a@thaiveedu.com



# வளர்ந்தவர்களிலும் பார்க்க சிறுமிகள் அறிவாளிகள்

– லியோ ரோல்ஸ்ரோய்

தமிழில் : என்.கே. மகாலிங்கம்

அது ஈஸ்ரர் காலத்தின் ஆரம்ப நாட்கள். உறைபனியில் சறுக்கி விளையாடும் விளையாட்டு சற்று முன்பு தான் நடந்து முடிந்தது. உறைபனி இன்னும் நிலத்தில் கிடந்தது. கிராமத்தின் வீதிகளில் தண்ணீர் சிற்றோடையாக ஓடிக் கொண்டிருந்தது. வெவ்வேறான வீட்டைச் சேர்ந்த இரண்டு சிறுமிகள் வீடுகளுக்கிடையே இருந்த ஓர் ஒழுங்கையில் சந்தித்துக் கொண்டார்கள். அந்த ஒழுங்கையில் பண்ணை முற்றங்களின் ஊடாக அழுக்கு நீர் ஓடி ஓர் இடத்தில் பெரிய குட்டையாக உருவாகி இருந்தது. அந்த இரண்டு சிறுமிகளில் ஒருத்தி மிகவும் சிறியவள். மற்றவள் சற்றுப் பெரியவள். அவர்களுடைய தாய்மார் அவர்களுக்குப் புதுச் சட்டைகளைப் போட்டு விட்டிருந்தார்கள். சிறியவள் நீல நிறச் சட்டை அணிந்திருந்தாள். மற்றவள் பூப்போட்ட மஞ்சள் சட்டை போட்டிருந்தாள். அத்துடன் இருவரும் தலையில் சிகப்பு நிற தலைக்குட்டைகளும் அணிந்திருந்தார்கள். அவர்கள் இப்போதுதான் தேவாலயத்திலிருந்து வந்திருந்தார்கள். அவர்கள் இருவரும் சந்தித்த போது முதலில் தாங்கள் அணிந்திருந்த அணிகலன்களையும் உடைகளையும் ஒருவருக்கொருவர் காட்டினார்கள். அதன்பின் விளையாட ஆரம்பித்தார்கள். பிறகு தண்ணீரை எற்றி விளையாடலாம் என்ற எண்ணம் அவர்களுக்கு வந்தது. முதலில் சிறியவள், தான் அணிந்திருந்த காலணி களுடனும் சட்டையுடனும் குட்டைக்குள் இறங்கப் போனாள். பெரியவள் அவளைத் தடுத்தாள்.

‘இறங்காதே. உன்னுடைய அம்மா உன்னை ஏசுவார். நான் என்னுடைய காலணியையும் காலுறைகளையும் கழற்றப் போகிறேன். நீ உன்னுடையவற்றைக் கழற்றி வை.’ அப்படியே அவர்கள் இருவரும் செய்தார்கள். பின் தங்கள் பாவாடைகளை உயர்த்திப் பிடித்துக் கொண்டு இருவரும் குட்டைக்கூடாக நடந்து வரத் துவங்கினார்கள். தண்ணீர் மலாஸ்காவின் கணுக்கால்கள்வரை வந்தது. அவள் சொன்னாள்.

‘இங்கே ஆழம். எனக்குப் பயமாக இருக்கிறது!’

‘பயப்படாதே,’ என்றாள் மற்றவள். இதைவிட அது ஆழமாக இருக்காது.’

இருவரும் ஒருவரை ஒருவர் அண்மித்தவுடன் அகோலியா சொன்னாள்.

‘மலாஷா, தண்ணியை எற்றாதே. கவனமாக நட!’

அவள் சொன்னதற்கிடையில் மலாஷ்கா ஒரு பாதத்தை திடீரெனக் கீழே வைத்து விட்டாள். அதனால் தண்ணீர் அகோல்யாவின் சட்டையில் தெறித்து சிதறியது. அகோல்யாவின் கண்களிலும் மூக்கிலும் கூட தெறித்தது. தன் சட்டையில் அழுக்கு நீர் பட்டதைக் கண்டு அவளுக்கு கோபம் வந்து மலாஷ்காவை அடிப்பதற்காகத் துரத்திக் கொண்டு சென்றாள். மலாஷா பயந்து போய் விட்டாள். தான் சிக்கலில் மாட்டிக் கொண்டதாக நினைத்து, குட்டைக்குள் இருந்து விரைவாக வெளியேறி வீட்டுக்கு ஓடத் தயாரானாள். அந்நேரம் அகோல்யாவின் தாய் அந்தப் பக்கத்தால் போய்க் கொண்டிருந்தாள். தன் மகளின் சட்டையில் தண்ணீர் விழுந்துள்ளதையும் சட்டைக் கைகளில் அழுக்கையும் கண்டு அவள் சொன்னாள்.

‘குறும்புக்கார அழுக்கான சிறுமியே, என்ன செய்து கொண்டி

ருக்கிறாய்?'

'மலாஷா வேண்டுமென்றே இதைச் செய்தாள்,' என்று பதில ளித்தாள் சிறுமி.

அப்போது அகௌல்யாவின் தாயார் மலாஷாவைப் பிடித்து அவளின் பிடரியில் ஓரடி அடித்தாள். மலாஷா பெருங்குரலில் கத்தினாள். அது வீதியிலுள்ள அனைவருக்கும் கேட்டது. அவளுடைய தாய் வெளியே வந்தாள்.

'என்னுடைய குழந்தையை ஏன் அடிக்கிறாய்?' என்று தன் பக் கத்து வீட்டுக்காரியை பேசச் தொடங்கினாள். அப்படியாக வார்த்தைகள் தடித்தன. வாய்ச்சண்டையாக மாறியது. ஆண் களும் வெளியே வந்தார்கள். வீதியில் ஒரு கூட்டமே கூடியது. ஒவ்வொருவரும் சத்தம் போட்டார்கள். எவரும் எவருடைய வார்த்தையையும் கேட்கவில்லை. எல்லோரும் அப்படியே வாய்ச்சண்டை போட்டார்கள். அப்படி இருக்கையில் ஒருத் தன் இன்னொருத்தனைத் தள்ளி விட்டான். அது ஏறக்குறைய பெரிய சண்டையாக முன்னேறியது. அப்போது அகௌல்யா வின் வயது முதிர்ந்த பாட்டி அவர்களிடையே நுழைந்து அவர் களைச் சமாதானப்படுத்த முயன்றாள்.

'நீங்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? இப்படி நடந்து கொள்வது சரியா? அதுவும் இப்படியானதொரு நல்ல நாளில்? இந்த நாளில் எல்லோரும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டிய நாளல்லவா? இப்படி முட்டாள்த்தனமாக நடக்க வேண்டிய நாளா?'

அவர்கள் அந்த முதியவளின் சொற்களைக் கேட்கவில்லை. அத்துடன் அவளைத் தள்ளி விடுமளவுக்கும் சென்றார்கள். அவளால் அந்தக் கூட்டத்தை அமைதிப்படுத்த முடிய வில்லை. ஆனால் அகௌல்யாவாலும் மலாஷாவாலும் மட் டுமே அது முடிந்தது. பெண்கள் ஒருவரை ஒருவர் ஏசிக் கொண்டிருக்கையில் அகௌல்யா தன் சட்டையில் இருந்த களி மண்ணைத் துடைத்து விட்டு, திரும்பவும் குட்டைக்குள் இறங்கினாள். ஒரு கல்லை எடுத்து குட்டைக்கு முன்னுள்ள மண்ணைத் தோண்டி தேங்கி இருந்த நீர் வீதிக்கு வழிந்தோ டக்கூடியதாக ஒரு வாய்க்காலை உருவாக்கினாள். மலாஷா வும் அவளுக்கு உதவினாள். ஒரு மரத் துண்டை எடுத்து வாய்க்காலைக் கிண்டினார்கள். ஆண்கள் சண்டை பிடிக்க ஆயத்தமானபொழுது இந்தச் சிறுமிகள் வெட்டிய கால்வாயி லிருந்து தண்ணீர் ஓடி வீதிக்குச் சென்றது. அங்கே தான் அந்த முதியவள் ஆண்களைச் சமாதானப்படுத்த முயன்று கொண்டிருந்தாள். சிறுமிகள் அந்த நீரோடைக்கு இரண்டு பக் கமும் ஓடினார்கள்.

'அதைப் பிடி, அதைப் பிடி மலாஷா,' என்று அகௌல்யா கத் தினாள். அப்போது வேகமாக ஓடிய மலாஷா கதைப்பதற்கு முடியாமல் சிரித்துக் கொண்டிருந்தாள்.

மரத்துண்டு ஓடையில் மிதந்துபோவதைக் கண்டு அவர்கள் மிகவும் மகிழ்ந்து போய் ஆண்கள் கூட்டமாக நிற்கும் இடத் திற்கு நேராக ஓடினார்கள். அவர்களைக் கண்ட முதிய பாட்டி அந்த ஆண்களைப் பார்த்துச் சொன்னாள்.

'உங்களுக்கு வெட்கமில்லையா? இந்தச் சிறுமிகள் செய்த விஷமத்தனத்துக்காகப் போய்ச் சண்டை பிடிக்கிறீர்களே. அவர்களே எல்லாவற்றையும் மறந்து போய் மகிழ்ச்சியாக ஒன்றாக விளையாடுகிறார்கள். சின்னஞ்சிறிய ஆன்மாக் களே! உங்களிலும் பார்க்க அவர்கள் அறிவாளிகள்தான்.'

ஆண்கள் அந்தச் சிறுமிகளைப் பார்த்து வெட்கப்பட்டுப் போனார்கள். தங்களைப் பார்த்து வெட்கப்பட்டுக் கொண்டு தங்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்றார்கள்.

'நீங்கள் சின்னஞ்சிறிய குழந்தைகள் ஆகாமல் உங்களால் பரலோக சாம்ராச்சியத்துக்குள் நுழைய முடியாது.'



mahalingam.k@thaiveedu.com



லியோ ரோல்ஸ்ரோய் (1828-1910) ரஷிய எழுத்தாளர், ஆன்மீக சிந்தனையாளர். உலக இலக்கியத்தின் மாபெரும் எழுத் தாளர்களில் ஒருவராகவும் செல்வாக் குள்ளவராகவும் கணிக்கப்படுபவர். இலக்கியத்திற்கான நோபல் பரிசுக்கு ஆறு முறையும் இரண்டு முறை சமா தானத்துக்கான நோபல் பரிசுக்கும் அவரது பெயர் பரிந்துரைக்கப்பட்டது. ஆனால் கிடைக்கவில்லை. இவர் ரஷிய நிலப்பிரபுத்துவக் குடும்பத்தில் பிறந்தவர். War and Peace, Anna Karenina, Crime and Punishment, Idiot, Brothers Karamazov போன்ற மாபெரும் நாவல்களையும்,The Death of Ivan Ilyich, Family Happiness, Hadji Murad போன்ற குறு நாவல்களையும் நூற்றுக் கணக்கான சிறுக தைகளையும் எழுதியுள்ளார். The Kingdom of God is within You என்ற நூல் காந்தியையும் மாட்டின் லூதர் கிங் யூனியர் போன்றவர்களையும் வெகுவாகப் பாதித்தது. அதில் வன்முறையற்ற எதிர்ப்பு தொடர்பான பல்வேறு கருத்தைக்களை எடுத்துக் கூறுகின்றார். பல கட்டுரை நூல்க ளையும் எழுதியிருக்கின்றார். ஆழ்ந்த ஆன்மீக விழிப்புணர்ச்சியை அடைந்த பின் அவர் எழுதியது Confesssion என்ற அபுனைவு நூல். யேசுநாதரின் மலைப்பிரசங்கம் அவரை ஓர் தனியாப்பற்றுள்ள கிறிஸ்தவ அராஜகவாதியாகவும் அமைதிவாதியாகவும் ஆக்கியது. ஜேர்மன் மொழியில் அவர் வாசித்த திருக்குறள் அவரை அகிம்சாவாதியாக ஆக்கியது. காந்தி அவரிடம் வினவிய அறிவுரைகளுக்கு காந்திக்கு அவர் எழுதிய A Letter to a Hindu கடிதங்கள் தொகுப்பாக்கப் பெற்றுள்ளன. அதில் அகிம்சை கருத்துக்களை காந்திக்கு அவர் எடுத்துக் கூறியுள்ளார். இறுதி காலத்தில் அவர் புலால் உணவைத் தவிர்த்து மரக்கறி உணவையே உண்டிருக்கிறார். அவரின் இறுதி நாட்கள் பற்றிய அருமை யான திரைப்படம் 'The Last Station.'

பலர் அவரின் படைப்புக்கள் பற்றிப் புகழ்ந்து எழுதியுள்ளார்கள். வேர்ஜினியா வுல்ஃப் இவரை,'நாவலாசிரியர்கள் அனைவரிலுமே மிக உயர்ந்தவர்,' என்று சொல்லியிருக்கிறார். டோஸ்ரோயெவிஸ்கி இவருடைய நாவல்களை விரும்பி வாசித்து புகழ்ந்துள்ளார். அன்ரன் செக்கோவ் இவருடன் நேரடித் தொடர்பு வைத்திருந்தவர். குஸ்;ராவ் ஃப் ளோபியர் இவரின் போரும் சமாதானமும் நாவலை வாசித்த பின், 'எத் தகைய உயர்தரமான கலைஞர், எத்தகைய உளவியலாளர் இவர்,' என்று புகழ்ந்துள்ளார். பிரித்தானியாவைச் சேர்ந்த விமர்சகரும் கவிஞ ருமான மத்தியு ஆர்னால்ட், 'ரோல்ஸ்ரோயின் நாவல் ஒரு கலைப்படைப் பல்ல, வாழ்க்கையின் ஒரு பகுதி' என்கிறார். 'எல்லோரும் உலகத்தை மாற்றுவோம் என்று நினைக்கிறார்கள். ஆனால் எவரும் தன்னை மாற்ற நினைப்பதில்லை,' என்பது அவருடைய சிறந்தவொரு மேற்கோள்.




# தாய்வீட்டார் சந்திப்பு

## கிளிநொச்சி

– நயனன்













இலங்கையின் தாய்வீடு உறவுகள் ஒன்றுகூடிய 'தாய் வீட்டார் சந்திப்பு - 2025' கடந்த பெப்பிரவரி 22-ஆம் நாள் சனிக்கிழமை பெரிய பரந்தன் வீதியில் அமைந்திருக்கும் ஆர்.எஸ். கிறீன் பாரதி றிசோர்ட்டில் (RS Green Barathi Resort) மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது.

இலங்கையின் சகல பாகங்களில் இருந்தும் புலம் பெயர் தேசங்களிலிருந்தும் தாய்வீட்டின் உறவுகள் கலந்து சிறப்பித்தனர்.

தம்முள் கலந்துரையாடிய தாய்வீட்டார், தாய்வீட்டின் கடந்த ஓராண்டு கால அறுவடைகள் குறித்தான மதிப்பீடுகளைச் சீர்தூக்கிப் பார்த்ததுடன், எதிர்காலச் செயற்பாடுகளைச் சிறப்பாக்குவது குறித்த கருத்துகளையும் பகிர்ந்து கொண்டனர்.









தாய்வீட்டின் ஆரம்பகால ஆசிரியர் குழுவில் ஒருவரும் நிறுவன வரைகலைஞருமான ஓவியர் இயூஜின் வின்சென்ற் கருணாவின் நினைவுநாளில் அவரை நினைவு கூர்ந்து ஒன்றுகூடல் ஆரம்பமாகியது.

நினைவுச் சுடரினை ஏற்றி, ஓவியர் கருணா குறித்த நினைவுப் பகிர்வை சமூக, அரசியல் செயற்பாட்டாளர் கோணேஸ்வரன் பகிர்ந்துகொண்டார். மாற்கு மாஸ்டரின் மாணவனாகவும் மனிதநேயப் பண்பாளனாகவும் ஓவியனாகவும் ஒளிப்படக் கலைஞனாகவும் செயற்பட்ட கருணாவின் ஆளுமையையும் அவரின் கலை, இலக்கியச் செயற்பாட்டினையும் கோணேஸ்வரன் தனது உரையில் வெளிப்படுத்தி இருந்தார்.

தாய்வீட்டின் வடிவமைப்பிலும் உள்ளடக்கத்திலும் மட்டுமல்லாது, தாய்வீடு கனடாவில் நடத்திய அரங்கியல் விழாவிலும் கருணாவின் பங்களிப்பு எவ்வளவு காத்திரமானது என்பதை அந்த உரை உணர்த்தியது.

நிகழ்வின் ஒருங்கிணைப்பாளராகச் செயற்பட்ட ச. சத்யதேவன், நிகழ்வின் தொடக்க உரையினையும் வரவேற்பினையும் நிகழ்த்தினார். உலகளாவிய அளவில் நடக்கும் சமூக, அரசியல் நிகழ்வுகளையும் வரலாறு, பண்பாடு, வாழ்வியல், இலக்கியம், ஆவணப்படுத்தல் சார்ந்த பல்வேறு விடயங்களையும் தமிழ்ச்சமூகத்தின் உரையாடற் பரப்பினுட் கொண்டுவரும் கரிசனையோடு செயற்படுகின்ற தாய்வீடு இதழ், ஒரு பொறுப்புள்ள ஊடகம் என்ற வகையில் வாகசர்களதும் அறிவு ஜீவிகளதும் விமர்சனங்களையும் கருத்துகளையும் உள்வாங்கிப் பயணிக்க வேண்டியது கடமை என்பதை நன்றாகப் புரிந்துகொண்டுள்ளதற்கமைய, 'கிளிநொச்சி தாய்வீட்டார் சந்திப்பு - 2025' நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டி, அதற்கமைய நிகழ்வை நடத்துவதற்குத் தாய்வீட்டாரின் பங்கேற்பையும் வேண்டினார்.

அதனைத் தொடர்ந்து, மட்டக்களப்பில் இருந்து வருகை தந்திருந்த வரலாற்று ஆய்வாளர் விவேகானந்தராஜா துலாஞ்சனன் அவர்கள், 'வரலாறும் நாட்டாரியலும்' என்ற தலைப்பில் உரையாற்றினார். குறிப்பாக, மைதிலி தயாநிதி அவர்களால் எழுதப்பட்ட 'வடமொழி நூல்களைத் தமிழ்ப்படுத்தற் பணியில் ஈழத்தவர் பங்களிப்பு' என்ற கட்டுரையை முன்வைத்துப் பேசினார். ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் ஈழத்தவர்களால் தொடங்கப்பட்ட இம்முயற்சியை மைதிலி அவர்கள் எவ்வாறு பார்க்கிறார் என்பதைச் சுட்டிக்காட்டி உரையாற்றிய துலாஞ்சனன், மட்டக்களப்பிலும் இம்முயற்சிகள் தொடர்பாகத் தொடரப்பட்ட விடயங்களையும் எடுத்துக்காட்டினார். புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையின் பகவத்கீதை வெண்பா இவ்வகையில் பார்க்கப்படவேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தினார்.

அவரின் பேச்சைத் தொடர்ந்து கலந்துரையாடலும் இடம்பெற்றது. பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள், துலாஞ்சனன் பேச்சைச் சிலாகித்துப்

















பேசினார். வடமொழி நூல்களைத் தமிழ்ப்படுத்தற் பணியில் ஈழத்தவர் தமிழுக்காற்றிய பங்களிப்பு குறித்தும் விளக்கினார். பேராசிரியரின் கருத்துரை ஆழமானதாக அமைந்திருந்தது.

'தாய்வீடு இதழின் பரிணாம வளர்ச்சியும் அதன் பரிமா ணங்களும்' என்ற தலைப்பில் கனடாவிலிருந்து ஆசிரியர் குழுவின் சார்பில் வருகை தந்திருந்த பொன்னையா விவேகானந்தனின் உரை அமைந்தி ருந்தது. தாய்வீட்டின் தோற்றம், அதன் இயங்கு தல்கள் பற்றிய தகவல்களை அவர் பகிர்ந்து கொண் டதுடன், தாய்வீடு இதழினுடைய வெளியீட்டுக் கொள்கைகள், அதன் தாற்பரியங்கள், அறங்கள் தொடர்பிலும் விளக்கமளித்தார்.

தாய்வீடு இதழுக்குத் தம் பங்களிப்பை வழங்கி வந்தோர் குறித்தும் அதிலும் தாய்வீடு ஆசிரியரின் கடின உழைப்புக் குறித்தும் விரிவாகப் பேசினார். மத, பிரதேச வாதங்களை சமரசமற்றுத் தவிர்த்து, மிகக் கவனத்துடன் சமூகத்தின் முன்னேற்றம் நோக்கிய பொது மாற்றத்துக்குரிய செயற்பாடுகளுக்கான வெளியைத் தாய்வீடு இதழ் முன்னெடுப்பதை வலியு றுத்தியும், புதிய எழுத்தாளர்களை இனங்கண்டு அவர் களுக்கான களத்தை அமைத்துக் கொடுப்பதில் தாய் வீட்டின் விருப்புக் குறித்தும் உரையாற்றினார். தாய் வீட்டில் வெளியாகும் தரமான படைப்புகளைத் தாய்வீடு நூலாக்கம் செய்து வெளியிட்டு வருகின்ற தகவலைத் தாய்வீட்டாரிடம் மகிழ்வுடன் அவர் தெரி வித்தார்.

தொடர்ந்து கலாநிதி சு. குணேஸ்வரன், தாய்வீடு சஞ் சிகையில் வெளிவந்த மலையக இலக்கியம் குறித்துப் பேசினார். தாய்வீடு இதழில் வெளிவந்த மல்லியப்பு சந்தி திலகர், மு.நித்தியானந்தன், எம்.எம். ஜெயசீலன், செல்வராஜா, அருணாசலம் லெட்சுமணன் முதலான வர்களின் கட்டுரைகளில் பேசப்படும் விடயங்கள் குறித்த விரிவான உரையாக அது அமைந்திருந்தது. அத்துடன் மலையக ஆளுமைகளுக்குத் தாய்வீடு எவ்வாறான பங்களிப்பினை வழங்கியது என்பது குறித்தும் பேசிய குணேஸ்வரன் தாய்வீடு சஞ்சி கையில் வெளிவந்த கணேஸின் ஆக்கங்கள் குறித்தும் குறிப்பான பார்வையைச் செலுத்தி இருந்தார்.

உரைகளைத் தொடர்ந்து, தாய்வீடு குறித்த தாய்வீட் டாரின் எண்ண வெளிப்பாடுகளை உறவுகள் பகிர்ந்து கொண்டார்கள். இதழின் வடிவமைப்பு, அதில் வெளிவரும் கட்டுரைகளின் பன்முகத் தன்மை, அதன் உலகளாவிய உள்ளடக்கம் தொடர்பாக கருத் துகள் பலவற்றைப் பரிமாறினார்கள். சதீஸ் செல்வராஜா, மல்லியப்புசந்தி திலகர், அகமட் பிஸ்தாமி, அருள் கார்க்கி, சி. குருபரன், செ. மகேஷ், டி. சிவாஜினி, அ. லெட்சுமணன், வே. தபேந்திரன், விதுஷா கமலேஸ் வரன், மேரி றெசோதா, தீபச்செல்வன்,காயத்ரி ஸ்ரீதரன் உள்ளிட்ட பலர் தமது எணணங்களையும் கருத்துக ளையும் பகிர்ந்து கொண்டார்கள். தாய்வீடு ஆக் கங்கள் தொடர்பாக Zoom-இல் மாதத்துக்கு ஒரு உரையாடல் நடத்தப்படவேண்டும் என்ற கோரிக் கையும் முன்வைக்கப்பட்டது.






















மதிய உணவைத் தொடர்ந்து, தாய்வீடு பத்திரிகையில் வெளிவந்த அரசியல் கட்டுரைகள் தொடர்பான ஒரு கண்ணோட்டத்தை இயல்வாணன் நிகழ்த்தி இருந்தார். ரூபன் சிவராஜா, ரதன், தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ, என். சரவணன், நெல்லை ஜெயசிங் முதலானவர்களின் கட்டுரைகள் தொடர்பாகப் பேசிய இவர், அரசியல் கட்டுரைகளை மொழிபெயர்ப்புச் செய்வோர் குறித்தும் ஆழமான பார்வைச் செலுத்தினார். குறிப்பாக மணி வேலுப்பிள்ளை, கந்தையா சண்முகலிங்கம் ஆகியோரின் மொழி பெயர்ப்புக் கட்டுரைகள் குறித்தும் தனது அவதானங்களை முன்வைத்தார்.

இயல்வாணனின் உரையைத் தொடர்ந்து, மணி வேலுப்பிள்ளை அவர்களின் கருத்துரை இடம் பெற்றது. படைப்புகளை நல்ல தமிழில் எழுதுவதன் அவசியத்தை வலியுறுத்தி, ஆழமாகவும் நகைச்சுவையுடனும் அவரது கருத்துரை அமைந்திருந்தது. ந. மயூரரூபன், சித்தாந்தன் ஆகியோரும் கருத்துரைகளை வழங்கினர்.

ஜிப்ரி ஹாசன் தாய்வீடு இதழில் வெளிவந்த இலக்கியங்கள் குறித்து தனது பார்வைகளையும் கருத்துகளையும் பகிர்ந்து கொண்டார். தாய்வீடு இதழில் வெளிவந்த சிறுகதைகள் குறித்தும் இலக்கியக் கட்டுரைகள் குறித்தும் தனக்கு வழங்கப்பட்ட நேரத்துக்குள் பயனுள்ள தகவல்கள் பலவற்றையும் பேசினார்.

பிற்பகல் நிகழ்வின் தாய்வீட்டாரின் எண்ண வெளிப்பாடுகளில் அ. யேசுராசா, தேவஅதிரன், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், சி. கருணாகரன் உள்ளிட்ட பலர் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர். ஈற்றில் சி. ரமேஷ் தொகுப்புரையையும் நன்றியுரையையும் ஆற்றியதுடன் தாய்வீட்டார் சந்திப்பு இனிதே நிறைவுக்கு வந்தது.

70-க்கு மேற்பட்ட தாய்வீட்டார் கலந்து கொண்ட இந்நிகழ்வை யாத்திரிகன் சிறப்பாகத் தொகுத்து வழங்கியிருந்தார். ஒழுங்கமைப்புக் குழு உறுப்பினர்கள் சி. ரமேஸ், தனா விஷ்ணு ஆகியோர் ஆலோசனைகளை வழங்கினார்கள்.

நிழற்படங்கள், காணொலிப் பதிவுகளை ஜெ. ஹேமநாத், ஜெ. அனிருத் ஆகியோர் எடுத்து உதவினர்.

பிரசாத் சொக்கலிங்கம். ச. சத்யதேவன் ஆகிய இருவரும் நிகழ்வின் ஒருங்கிணைப்பாளர்களாகவும் நெறியாளர்களாகவும் சிறப்பாகச் செயற்பட்டு கிளிநொச்சி தாய்வீட்டார் சந்திப்பைச் செவ்வனே நடத்த உதவினார்கள்.










தாய்வீட்டார்
சந்திப்பு
கிளிநொச்சி



தாய்வீட்டார்
சந்திப்பு
கிளிநொச்சி














உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
• Mortgages
• Refinance
• Second Mortgages
• Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com




# Lower rates.
# Exceptional service.

Connect with an insurance company that puts clients first. Discover why The Co-operators is the right choice for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour Emergency Claims Service, free Identity Theft coverage with our Home policies, and Accident Forgiveness Endorsement option. All backed by our Claims Guarantee.

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

We've Moved
Our New Address

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

## குறைந்த கட்டணங்கள்
## பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators
A Better Place For You


33 Years Canadian Experience
AUGUSTINE & ASSOCIATES
INCOME TAX
OUR SERVICES
Personal, Business and Corporate Tax Services
GST, HST & QST
Accounting & Bookkeeping
Payroll
T4, T4A, T5, Rental Releve 31 (QC)
Business Registration
E-filing
Ontario, Quebec & Other Provinces
EFILE
Canada
CONTACT US TODAY
416-617-6735 or 514-279-7138
wimalendran.augustine@gmail.com
Helping you find your dream home, one key at a time.
JW PROPERTY REALTORS
REAL ESTATE
Residential, Commercial, Investment, and New Development Properties.
Jesmine Wimal
647-871-1921
Wimal Augustine
416-617-6735
www.propertyrealtors.ca
HOMELIFE / FUTURE REALTY INC., BROKERAGE
Independantly Owned And Operated
Office: 905-201-9977


HOMELIFE
HIGHER STANDARDS
Buy or Sell
Your Home
call me 24-7
Cell: 416 856 6900
Kathir
Subramaniam Kathirgamanathan P.Eng.
Sales Representative
www.kathirsubramaniam.com
HOMELIFE/CHAMPIONS REALTY INC. 416 281 8090
kathirhomes@gmail.com


With best compliments from
ஞானம்ஸ் ஸ்ரூடியோஸ்
GNANAMS STUDIOS
Since 1987
Digital Prints from 16"x20" to 40"x60"
Family Portraits
Children Portraits
Business Portraits
Passport & Citizenship Photos
Classic Weddings
Arangetram
Puberty Ceremony
New Location
Bus: 416.750.8118
www.gnanamsstudios.com
2687 EGLINTON AVE. E. SCARBOROUGH ON M1K 2S2
( BRIMLEY & EGLINTON
ERA PLAZA NEAR CIBC BANK)
Digitally Redefined


BAYVIEW HOMES
DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email: kathirhomes@gmail.coml

## வசந்தம் தமிழ் உளவளத்துணை நிலையம்
## VASANTHAM TAMIL WELLNESS CENTRE
## PRESENTS...

**சமூக உளவளம் பேணும் தொடர் - 91**

**Psychosocial Educational Series - 91**

VASANTHAM
HEALTH & WELLNESS CENTRE

# சர்வதேச மகளிர் தின நிகழ்வு
# International Women's Day Event

**03 March 2025 (Monday)**
**Canada EST: 7:00 - 9:00 pm U.K: 12:00 am - 2:00 am**
**Sri Lanka: 5:30a.m - 7:30am (Tuesday)**

**Zoom ID: 918 584 6813**
**No Password**
**Dial by Phone: 647 374 4685**
**647 558 0588**



**Dr. Paul Joseph**
**(Bachelor of Homeopathic Medicine and Surgery)**
**Former Prof. Tamil Nadu Dr. M.G.R. Medical University**
**– Homeopathic Medical Colleges**

## மகளிர் நலம் - மகப்பேறின்மை
## Women's Health - Infertility

**Join us via zoom: CLICK HERE or go to link below in the email**

**Join our Zoom Series every 1st & 3rd Monday of the month!**



**Hosted by**
**Dr. Parvathy Kanthasamy**
**CONTACT US: 416-847-4172**

VASANTHAM
VASANTHAM-TAMIL WELLNESS
VASANTHAMW
647-374-4685
VASANTHAM.CA


BUYERS
If Yathavann Doesn't Negotiate at Least
$10,000 Off The List Price,
He'll Give You $2000
Cash on Closing.
FREE Home Inspection When You Buy With Us.
Sellers
Your Home SOLD in 60 Days
Guaranteed!
OR I'LL SELL IT FOR FREE**
**SOME CONDITIONS MAY APPLY
For More Information On My
Exclusive Guaranteed Sales Program
ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA
Free Home Evaluation.
No Cost. No Obligations
RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Off:416.491.4002
YATHAVANN
SELVARAJAH
Sales Representative
416-992-4474

# கடன் தொல்லையா?




பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போன்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

**Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்**

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

**CSC Credit Solution Centre**

309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com




BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE
Visit your one stop solution center for all your super visa insurance needs...
SuperVisa.Today
www.supervisa.today
#416 321 6000



BUY OR SELL
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com
POWER BROTHERS REAL ESTATE
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ SIVARAJAH 416.843.3333
KUMAR SIVARAJAH 416.453.7777
@uthayansivarajah @uthayansivarajah
ROYAL LEPAGE ignite
Realty, Brokerage
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INDEPENDENTLY OWNED AND OPERATED
INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK



MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
SUBRA
MORTGAGE SOLUTIONS
புதிய, முதல் கரம் வீடு
வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge,
Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான
மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by
MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS
Brokerage # 10330
Canada Trust
Scotiabank
FIRST NATIONAL
radius financial
RFA
EQUITABLE BANK
HOME TRUST
MCAP
O: 1-844-878-2721| F: 647-351-3099 | 1585 Markham Rd, Unit # 406, ON, M1B 2W1.



வீடு வாங்க விற்க...
18 வருடங்களுக்கு மேலான வீட்டுப்பரிசோதனை அனுபவத்துடன்
ஒரு வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...
வாங்கப் போகிறீர்களா?
☒ தரமான வீடு தவறிப்போகாது
☒ பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
☒ வாங்கியபின் ஏமாற்றம் இல்லை
☒ பெருவருவாய் தரும் முதலீடு
விற்கப் போகிறீர்களா?
☐ இலவச பரிசோதனையும் ஆலோசனைகளும்
☐ விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
☐ சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
☐ உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்
SOLD
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
HOMELIFE
GRAND MASTER CLUB
Chairman's Club Award Winner 2015
Chairman's Club Award Winner 2017
Platinum Club Winner 2022
Chairman's Club Award Winner 2016
Vela Subramaniam
Experienced Home Inspector
Sales Representative
Dir: 416-786-0760
info@vela4homes.com
www.vela4homes.com
Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8


STAY ONE STEP AHEAD OF CRA
X-CRA Officers are on staff.
SARVAA CPA
PROFESSIONAL CORPORATION
Our passion is to solve your tax problems:
Unfiled Tax Returns - Last ten years (2011 - 2025)
Appeals, Audits and Adjustments
GST/HST Owner-Built & Rental Rebates
Negotiate Collection, Garnishment and Payment Plan
Voluntary Disclosure Program (VDP)
Estate, Trust & Non-Residents
US Tax (PTIN) - IRS 1040 & State Returns
CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS
Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca
TECHNICAL EXCELLENCE
INTEGRITY
PROFESSIONALISM
VANCOUVER
604 398 7272
TORONTO
647 219 3110
CALGARY
403 879 7272


- முடி உதிர்வை தடுப்பதுடன் புதிய முடி வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கிறது.
- கபாளத்தின் பொடுகைப் நீக்குகின்றது.
- Ervamatin முடியை செழிப்பாக வைத்திருக்க உதவுகிறது
Ervamatin
Hair Lotion
Lotion Capilar
200ml
Amazon HEALTHCARE.COM
416-264-8787
www.4162648787.com
2466 Eglinton Ave. East Unit 12A, Toronto ON M1K 5J8


உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது
உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும்
இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்
Chapel Ridge
FUNERAL HOME INC.
Providing Peaceful Final Arrangements
8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1
Call :
Vilosan Sivatharman B.Eng
Funeral Director
416 993 0826
Call :
Christeen Seevaratnam
Funeral Counsellor
416 258 6759
எங்களுடைய சேவைகள் மார்க்கம் / மிஸிஸாகா (Dundas & Cawthra) பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது


NO MEDICAL
UP TO $500,000
$0 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INUSRANCE FOR SUPER VISA
100% REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
416.918.9771
416.321.2500
MDRT
Life100
Are you getting Million Dollar advice


Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
KAPITAL CARE MORTGAGE INC.
Rambo Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5
647-290-3416 / 416-543-1111


Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
OUR AGENTS ACROSS CANADA
www.ceycantranship.com
Kumar (905) 673-9855
SRI LANKA'S BEST CLEARING FACILITIES
COLOMBO
KANDY
BATTICALOA
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com


நியூ ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
MARKHAM & STEELES YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6


Daniels FirstHome at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HomeLife/Champions
RAVEEN VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE


"Serving With Dignity, Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
LOTUS
Patricia Peter BBM
Direct: 416-834 5753


Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE MORTGAGE INC.
Kethes Sivasubramaniyam
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000 | www.vdlaw.ca
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"

